
லட்சியவாதி
லக்ஷ்மி

35849

# லட்சியவாதி

## 1

"கீதா! கீதா!" என்று எட்டாம் நம்பர் வீட்டுக் கூடத்தினின்று எழுந்த ஸ்திரீயின் குரல் பூந்திடல் லேடி சுப்பராமன் தெரு முழுவதும் கேட்கும்படி கணீர் என்று ஒலித்தது. எட்டாம் நம்பர் வீட்டு மாடியறையில் நிலைக் கண்ணாடி முன் நின்றுகொண்டிருந்த கீதா தனது அழகிய முகத்தை லேசாக ஒரு தடவை சுளுக்கிக் கொண்டாள்.

"ஆமாம்! இந்த அம்மாவுக்கு எப்பவும் அவசரந்தான்! எதற்காக இப்படி இரைந்து கூப்பிடுகிறாளோ தெரியலை" என்று தனக்குள்ளே முணமுணத்த கீதா கண்ணாடியை உற்றுப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

மென்மையாக மேலே துவண்டு சரிந்து விழும் ரோஜா நிற நைலான் புடைவை. அதன் அழகைப் பன்மடங்காக எடுத்துக்காட்டும் அரக்கு நிறப் பட்டு ரவிக்கை கழுத்தை ஒட்டினாற் போல் ரவிக்கையின் மீது படர்ந்தவாறு அணிந்திருந்த தங்க மாங்காய் மாலை, இத்தகைய அலங்காரத்தில் கண்ணாடியில் பிரதிபலித்த தனது மோகன உருவிலே மயங்கிப் போன கீதாவிற்கு அவ்விடத்தை விட்டுப் போக மனம் இல்லை.

"கீதா! உன்னை அம்மா கீழே வரச் சொல்லிக் கூப்பிடுகிறாரே! காது கேட்கவில்லையா?" என்று கூறிக் கொண்டு அறையின் வாயிற்படியில் வந்து நின்றாள் ஒரு இளநங்கை. அவளைத் திரும்பிப் பார்த்த கீதா, "என்ன

கௌரி இது? நான் சொன்னபடி கேட்காமல்?'' என ஏமாற்றத்துடன் வினவினாள்.

''ரோஜா நிற நைலான் புடைவையைக் கட்டிக் கொண்டு நீ சொன்னபடி ஜோடியாக உன்னுடன் வெளியில் போக எனக்குந்தான் ஆசையாக இருந்தது. ஆனால் உங்கண்ணாவுக்கு அந்தப் புடைவையைக் கண்டாலே பிடிக்கவில்லையாம் நைலான் மாதிரி மெல்லிய புடைவைகளைக் கட்டிக் கொண்டு நான் வெளியில் போகக் கூடாது என்று கோபித்துக் கொள்கிறார்'' புன்முறுவலித்தாள் கௌரி.

''இந்த அண்ணா இப்படி ஒரு கட்டுப்பெட்டியாகப் போவார் என்று நான் நினைக்கவேயில்லை. அது கிடக்கட்டும் மன்னி! இந்த மயில் கழுத்துப்புடைவை ஒன்றுதான் உனக்கு மிக்க பிடித்தமானதோ? நானும் பார்க்கிறேன். நீ இங்கே வந்து ஒரு வாரத்தில் மூன்று தடவைகள் இதைக் கட்டிக் கொண்டு விட்டாய்?'' என்று சொல்லி விட்டுச் சிரித்தாள் கிதா.

''இந்த நிறப்புடைவை உங்கண்ணாவுக்கு ரொம்பப் பிடித்திருக்கிறதாம்!'' என்று கௌரி கூறிவிட்டு வெட்கத்துடன் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

''நான் சொல்லுகிறேன், கேள் மன்னி! இந்தப் புருஷர்களை நம் புடவை நகை நாகரிகத்தில் தலையிட விடக் கூடாது. நம் இஷ்டத்திற்கு நாம் அலங்காரம் செய்து கொள்வதா? அல்லது...'' என்று கிதா முடிப்பதற்குள் குறுக்கிட்ட கௌரி, ''உனக்குக் கல்யாணம் ஆகட்டும். பின்னால் இது விஷயமாக உன் அபிப்பிராயம் எப்படி மாறுகிறது என்று பார்க்கலாம்!'' என்று கேலியாகக் கூறினாள்.

''என்ன இருந்தாலும் உன்னைப் போல் சிறு விஷயங்களுக்கெல்லாம் என் சுதந்திரத்தைக் கணவனிடம் பறி கொடுத்து விடமாட்டேன். நான் இந்த ஒரு வாரமாக



உன்னை லேடீஸ் கிளப்பிற்கு எத்தனை தடவை கூப்பிட்டிருக்கிறேன்? அண்ணா உத்தரவின்றி வீட்டை விட்டு அசைய மறுத்து விட்டாயே? உன்னைப் பார்த்தால் ஒரு படித்த பெண் என்று யாராவது சொல்வார்களா?'' என்று கிதா பரிகாசமாகக் கேட்டாள்.

அவள் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் கௌரியின் மனத்தில் சுருக்கென்று வேதனையுடன் பாய்ந்தன. தன் மனத்தாங்கலை வெளிக்காட்டாமல், ''லேடீஸ் கிளப்பில் நான் மெம்பராகச் சேர்வது உன் அண்ணாவுக்குப் பிடிக்கவில்லை, அவருக்கு இஷ்டமில்லாத காரியத்தை ஏன் செய்ய வேண்டும் என்று நான் பேசாமல் இருக்கிறேன்'' என்று பதில் அளித்தாள்.

''நைலான் புடைவை கூடாது; லேடீஸ் கிளப்பிற்குப் போகக்கூடாது; இந்த அண்ணாவுக்கு எதுதான் பிடிக்கும்? தன்னுடன் சதா நாள் முழுவதும் பேசிக் கொண்டிருந்தால் பிடிக்கும் இல்லையா? ஏன் மன்னி உன் முகம் சிவந்து போகிறது? நான் உண்மையைத்தானே சொல்கிறேன்? கல்யாணம் செய்து கொண்டபின் அண்ணா மிகவும் கர்நாடகமாக மாறி விடுவார் என்று ஒருவரும் நினைக்கவேயில்லை. அப்பா! அவர் பேசின பேச்சுக்கு, 'ஏது ஒரு துரைசானிதான் மனைவியாக வரவேண்டும்' என்று நாங்கள் நினைத்துக் கொண்டிருந்தோம்'' என்று கிதா கூறி விட்டுச் சிரித்தாள்.

''புருஷர்கள் மனப்பான்மையே மிக்க விசித்திரமானதுதான், மேடையிலேறி செய்யும் பிரசங்கத்திற்கும் வீட்டில் மனைவியை நடத்தும் முறைக்கும் ஒரு சம்பந்தமுமிருக்காது. படித்தவள் என்று நம்மை இன்னொரு பெண் பார்த்த அளவிலே சொல்லாவிடில் நமது படித்த மனம் ஏமாற்றமடைகிறது. ஆனால் புருஷர் என்ன நினைக்கிறார்? படித்த பெண் என்று பார்த்தால் தெரியவில்லை என்றும் பிறர் புகழ வேண்டும் என்று நினைக்கிறார். கணவன் மனம் சந்தோஷப்படும்படி நடத்துவிட்டால்

நமக்கென்ன குறைந்துவிடப் போகிறது! அதுதான் என் வாழ்வின் லக்ஷ்யம்'' என்று பிரசங்கம் செய்தாள் கௌரி.

''மன்னி! உன் மனம் இவ்வளவு தூரம் அடிமை மனப்பான்மையில் ஊறிக் கிடக்கிறது என்ற விஷயம் எனக்கு இன்றுதான் தெரிகிறது! அன்பையும் அடிமை மனப்பான்மையும் நீ ஒன்று என நினைத்து மனதைக் குழப்பிக் கொள்கிறாய். என் அண்ணா தன் இஷ்டப்படி உன்னை ஆட்டி வைக்கிறார் என்ற விஷயம் எனக்குப் பளிச்சென்று விளங்குகிறது. இவர் இஷ்டத்திற்கெல்லாம் வளைந்து கொடுக்க உனக்குப் பிடிக்கிறதென்றால் நான் என்ன சொல்ல இருக்கிறது?'' என்று விரக்தியாக முடித்தாள் கீதா.

கௌரியின் மந்தஹாஸவதனம் அதைக்கேட்டுச் சிறிது வாட்டமடைந்தது. ஏதோ சொல்ல வாயைத் திறந்த அவள், வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டு, ''அவர் வந்து விட்டார் போலிருக்கிறது!'' என்று கூறிய படி வேகமாக மாடிப்படிகளில் இறங்கினாள்.

கௌரியின் உற்சாகத்தைக் கவனித்த கீதா சிரித்துக் கொண்டு, ''மன்னி! மெதுவாகப் போ, படி தடுக்கி விழுந்து விடப் போகிறாய்'' என்றாள் குறும்பாக.

கௌரி போனபிறகு மறுபடியும் ஒரு தடவை தன் அலங்காரத்தைப் பார்த்து மகிழ்ந்து விட்டு மெதுவாகக் கீழே இறங்கி வந்தாள் கீதா.

''ஏண்டி கீதா உன்னை எத்தனை தடவை கூப்பிடறது. மாடிக்குப் போனா உன் காது அடைச்சிப் போயிடறதே! அந்தப் பூவை ஆளுக்குத் துளியா எடுத்து வச்சுக்கோங்க!'' எனக் கடிந்து கொண்டே தாயார் செல்லம்மாள், மேஜை ஒன்றின்மேல் வைத்திருந்த புஷ்ப சரத்தைக் சுட்டிக் காட்டினாள்.

கூடத்து ஊஞ்சலில் மெல்ல ஆடியபடியே மனைவி கொண்டு வந்து கொடுத்த காப்பியை ருசி பார்த்துக்



கொண்டிருந்த துரைசாமி தன் தாயாரைப் பார்த்துப் புன்னகையுடன், ''அவசரப்பட்டா முடியுமா? லேடிஸ் கிளப்பிற்குப் போக என்ன டிரஸ் செய்து கொள்றதுன்னு கொஞ்சம் யோசிக்க வேண்டாமா? பூந்திடல் நாகரிக வளர்ச்சிக்கே நம்ம கீதாதானே வழிகாட்டி?'' என்று குத்தலாகக் கூறினான்.

''வழி காட்டியாகவோ, கை காட்டியாகவோ நான் இருந்து விட்டுப் போகிறேன்! எங்கள் லேடீஸ் கிளப்பைப் பற்றித் தினம் ஒரு தடவை ஏதாவது சொல்லா விட்டால் உங்களுக்குப் பொழுதே போகாது'' என்று கீதா சிறிது கோபத்துடன் கூறி, தனது புருவங்களை நெரித்தாள்.

''உங்க லேடீஸ் கிளப்பைப் பற்றி நினைக்காமல் நாங்கள் எப்படி இருக்க முடியும். புடைவை, நகை இவைகளின் நாகரிகம் கிளப்பில் முன்னேறிக் கொண்டு போகும் வேகத்தைக் கண்டு கலங்காத புருஷர்கள் இந்தப் பூந்திடலில் இருக்கிறார்களா?'' என்று பரிகாசமாகப் பேசிய துரைசாமி தன் மனைவியின் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

''நீங்கள் ஒருவர் இருப்பதை மறந்து பேசுகிறீர்களோ? எங்கள் கிளப்பு பயந்தான் உங்களுக்கு இல்லையே!'' என்று கொஞ்சம் காரமாகப் பேசிய கீதா மேஜை மீதிருந்த மல்லிகைப் பூச்சரத்தை எடுத்து கௌரியின் தலையில் சூட்டினாள்.

''நான் ஒருவனாவது பூந்திடல் புருஷர்கள் கோஷ்டியில் சேராதிருக்க வேண்டும் என்ற எண்ணத்திற்காகத்தான் கௌரியை உங்கள் கிளப்பு மெம்பராகக் கூடாது என்று தடுத்துவிட்டேன்'' என்று சொல்லிய துரைசாமியை விறைத்துப் பார்த்தாள் கீதா. ''எங்கள் லேடீஸ் கிளப், நகை புடைவை விஷயத்தில்தான் முன்னேறிக் கொண்டிருப்பதாக நீங்கள் அபிப்பிராயப்பட்டால் அது உங்கள் குற்றமில்லை. மாதாந்திரக் கூட்டத்தில் நாங்கள் செய்யும் சர்ச்சைகளைப் பற்றியும் திட்டங்களைப் பற்றியும்

உங்களுக்கு என்ன தெரியும்? ஆனால் ஒன்று; புருஷர்களைப் போல் பெண்களுக்குத் தாங்கள் செய்யும் காரியங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளத் தெரியாது!'' உக்கிரமாகச் சொன்னாள்.

கீதாவின் முகம் சிவந்து, கண்களில் நீர் ததும்புவதைக் கவனித்த துரைசாமி, ''சரி, உன்னோடு ஏன் வீண் வாதம்? உங்கள் லேடீஸ்கிளப்பிலே நடக்கிற ஒவ்வொரு சர்ச்சையும் பற்றி நாங்கள் அறிவோம். ஏனென்றால், வீட்டில் முதல் நாள் கணவர்கள் எழுதிக் கொடுத்த விஷயங்களைத் தான் மனைவிமார்கள் மறுநாள் கிளப்பில் பேசுகிறார்கள்!'' என்று கேலியாகக் கூறினான்.

''பெண்களுக்குச் சுய கற்பனை ஒன்றும் கிடையாது என்பது உங்கள் அபிப்பிராயம். அப்படியே இருக்கட்டுமே! எங்கள் மாதர் சங்கத்தை மறைமுகமாகப் பூந்திடல் புருஷர்கள் ஆட்சி புரிவதாக நினைத்துத் திருப்தியடையுங்கள்! அதனால் எங்கள் கௌரவம் ஒன்றும் குறைந்துவிடாது'' என்று படபடப்பாகப் பேசிய கீதா, மேஜைமீது இருந்தரோஜாப்பூக்கள் இரண்டை மட்டும் எடுத்துத் தன் தன் தலையில் நாசூக்காகச் செருகிக் கொண்டாள்.

அண்ணன்—தங்கை வாக்குவாதத்தை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த தாயார் செல்லம்மாள் பெண் பக்கம் திரும்பி, ''என்னடி கீதா! மல்லிகைப் பூவை அப்படியே வச்சுட்டியே?'' என்று கேட்டாள்.

''வைக்கோல் மாதிரி எனக்குப் பூ வைச்சுக்கப் பிடிக்காது. நீ சும்மா இரு, அம்மா. உனக்கென்ன இதெல்லாம் பத்தி?''என்று சலிப்புடன் கூறி,சுவர் ஓரமாக வைத்திருந்த செருப்புகளைக் காலில் மாட்டிக் கொண்டு, ''அண்ணா! புறப்படலாமா?'' என்று கேட்டாள்.

''காப்பிப் பாத்திரத்தை ஊஞ்சலின் மீது வைத்துவிட்டு துரைசாமி தங்கையை ஒரு தடவை ஆச்சரியத்துடன் பார்த்தான். ''என்னை ஏன் கேட்கிறாய்?



இரண்டு பேரும் ரெடியாயிருந்தால் போக வேண்டியது தானே?'' என்று கேட்ட துரைசாமியிடம், ''கார்லே இவா ரெண்டுபேரையும் கொண்டு விட்டுடு. உனக்காகத் தான் இத்தனை நாழியா காத்திண்டு இருக்கா'' என்றார் தாயார் செல்லம்மாள்.

''அப்படிச் சொல்லு; என்னடாப்பான்னு பார்த்தேன்! கீதா கிளப்புக்கு மூணு மணிக்கே போய்விடுவாளே ஏது ஐந்து மணிவரைக்கும் நாழி பண்ணிக்கொண்டிருக்காளேன்னு நினைச்சேன். பத்தடி தூரத்திலிருக்கும் கிளப்பிற்கு காரில் போய்த்தான் ஆகணுமா!'' என்று கேலியாகக் கேட்டவண்ணம் ஊஞ்சலைவிட்டு எழுந்தான் துரைசாமி.

அடக்கி வைத்திருந்த சினம் தாங்க முடியாது பிறிட்டெழுந்தது கீதாவுக்கு 'இஷ்டமில்லா விட்டால் வேண்டாம், அண்ணா கௌரியை முதல் முதலாகக் கிளப்பிற்கு அழைத்துக் கொண்டு போகிறோமே, காரில் போகலாம் என்று நினைத்தேன்'' என மனத்தாங்கலுடன் பதிலளித்தாள். அவள் முகத்தில் ததும்பிய வருத்தத்தைக் கண்ட துரைசாமி, ''விளையாட்டுக்குச் சொன்னால் கூட உனக்குப் பொறுக்கவே மாட்டேங்கிறது. கீதா, சரி கிளம்புங்கள்! உங்களைக் கொண்டு கிளப்பில் விட்டு வருகிறேன். எனக்கும் அதற்குப் பிறகு கொஞ்சம் வேலை இருக்கிறது'' என்று கூறியபடி வெளியே சென்றான்.

பூந்திடல் நாகரிகத்திற்கு உயிர் நாடியாக இருந்தது பூந்திடல் லேடீஸ் கிளப். அது ஆரம்பித்து ஒரு வருஷந்தான் ஆகிறது என்றாலும் அவ்வூர்ப் பெண்கள் அதைத் தீவிரமாக ஆதரித்தனர் ஆகவே கூட்டத்திற்குக் கேட்க வேண்டுமா?

கிளப் முன் ஹாலில் மேஜையைச் சுற்றிப் போட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்திருந்த பெண்கள் யாவரும் ஒரே சமயத்தில் பல விஷயங்களைப்பற்றி அவரவர்கள் இஷ்டப்படி பேசிக் கொண்டிருந்தனர். ''சத்தம் இங்கே சகிக்கல்லை! தலையை வலிக்கிறது.

ஹேமா! வருகிறாயா? வேப்பமரத்தடியில் போய் உட்கார்ந்து கொண்டு பேசலாமா?'' என்றாள் மெல்லிய குரலில் ஒரு நாகரிக நங்கை தன் பக்கத்திலிருந்த இன்னொரு பெண்ணிடம்.

''சரி'' என்று அவள் தலையை ஆட்டவே இருவரும் மெதுவாக அங்கிருந்து வெளிப்பட்டனர்.

''என்ன விமலா! தலைக்குத் தலை ஏதோ பேசுகிறார்களே ஒழிய பிறத்தியார் பேசுவதைக் காது கொடுத்து ஒருவரும் கேட்பதில்லை. எனக்கு இந்த கிளப் விஷயங்கள் ஏதாவது பிடித்தால் தானே'' என்றாள் வெறுப்புடன் ஹேமா.

பதில் சொல்ல வாயைத் திறந்த விமலாவின் கவனம் லேடீஸ் கிளப்பின் முன்புற வாயில் வழியாக நடைபாதை மீது வேகமாக வந்து நின்ற காரின் மீது சென்றது.

''அடாடா! கீதா வீட்டுக் கார் போல இருக்கே!'' என்று ஆச்சரியத்துடன் அவள் கூவியதைக்கேட்ட ஹேமா திரும்பிப் பார்த்தாள். காரிலிருந்து இறங்கிய இரண்டு பெண்களையும் கவனித்த அவள் ''கீதா பக்கத்தில் நடந்து வருகிறது யார்? கீதா வீட்டில் கார் வாங்கினார்களா என்ன?'' என்று பல கேள்விகளை ஏக காலத்தில் கேட்டாள்.

''அந்தப் பெண் கீதாவின் மன்னி போல இருக்கிறது. கீதா அண்ணா இரண்டு வாரங்களுக்கு முன்புதான் கார் வாங்கினாராம்! பத்தடி தூரத்தில் இருக்கும் கிளப்புக்கு காரில் வந்திறங்காவிட்டால் அவர்கள் வீட்டில் கார் வாங்கியிருக்கும் ரகசியம் நமக்கு எப்படித் தெரியும்?'' என்று குறும்புத்தனமாகப் பேசிய விமலா தன் சிநேகிதியைப் பார்த்து கண் சிமிட்டினாள்.

மரத்தடியில் வீற்றிருக்கும் சிநேகிதிகளைக் கண்டதும் உற்சாகத்துடன் வேகமாக அவர்கள் பக்கமாக வந்த கீதா, ''விமலா! நீ என் மன்னியைச் சந்தித்ததில்லை அல்லவா? இவள்தான் துரைசாமியின் மனைவி கௌரி''



என்று தனது மன்னியை அவர்களுக்கு அறிமுகப்படுத்திவிட்டு கௌரியின் பக்கம் திரும்பி, ''மன்னி! இவள் என் சிநேகிதி விமலா, இவள் ஹேமா!'' என்றாள்.

உள்ளங்காலிலிருந்து உச்சிவரை தன்னை ஆராய்ந்து பார்க்கும் விமலாவின் கூரிய கண்ணோட்டத்தில் கௌரி சிறிது சங்கோஜம் அடைந்தாள் அதைக் குறிப்பாகக் கவனித்த கீதா, ''விமலா! இரு வருகிறேன், கௌரியை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்தி விட்டு இங்கே மறுபடியும் வருகிறேன்'' என்று கிளப்பின் ஹாலை நோக்கிச் சென்றாள்.

அவர்கள் தலை மறைந்ததும் விமலா தன் சிநேகிதியைத் திரும்பிப் பார்த்துவிட்டு, ''எப்படியிருக்கிறாள் பெண்?'' என்று கேட்டாள்.

''பரவாயில்லை!'' என்று ஹேமா அபிப்பிராயப்பட்டாள்.

''ஆயிரம் குற்றம் குறை பார்த்த செல்லம் மாமி கடைசியில் பல்லும் பவிஷுமாக ஒரு நாட்டுப் பெண்ணைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கிறாள். மேல் பக்கத்துப் பல் சற்றுத் தூக்கலாயிருக்கிறதை நீ கவனிக்கவில்லையா?'' என்று விமலா கவலையுடன் வினவினாள்.

''அப்படி ரொம்பத் தெரியலையே! அவள் சிரிக்கும் பொழுதுதான் கொஞ்சம் தூக்கலாகத் தெரிகிறது. பெரிய இடத்துப் பெண் போல் இருக்கிறது. அதனால் மற்ற குணங்கள் எப்படி இருந்தால் என்ன?' என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள் ஹேமா.

'வரதக்ஷணை, சீர் இதெல்லாம் வாங்குவது அநாகரிகம் அப்படி இப்படி என்று கீதா வீட்டில் எல்லோரும் பேசுவார்கள். செல்லம் மாமி லேசுப்பட்டவர் அல்ல. பேச்சு சர்க்கரை; கை கருணைக்கிழங்கு. பேசாத பேச்செல்லாம் பேசிவிட்டுக் கடைசியில் வரதக்ஷணையும் சீரும் ஏகமாக வாங்கித்தான் பிள்ளைக்குக் கல்யாணம்

செய்தார். கீதா அண்ணா துரைசாமி ஏறி வந்த கார் புதிதாக மாமனார் வாங்கிக் கொடுத்த பரிசு'' என்று முடித்தாள் பொறாமை ததும்பும் குரலில் விமலா.

''அப்படிச் சொல்லு! கீதா அண்ணாதான் கார் வாங்கி விட்டாராக்கும் என்று நினைத்தேன்!'' என்று ஹேமா சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்டாள்.

''கார் வாங்கும் அளவுக்குப் பணக்காரர்களா என்ன அவர்கள்? துரைசாமிக்கு வேலை கிடைத்த பிறகுதான் அவர்கள் வீட்டு நிலைமை கொஞ்சம் அபிவிருத்தியடைந்தது. ஆனால் கீதா இருக்கிறாளே, ரொம்ப கர்வி அவர்கள் பழைய நிலைமை நமக்குத் தெரியாதது போல் ஒரேயடியாகப் பணக்கார வேஷம் போடுவாள். அவர்கள் வீட்டில் கார் வாங்குவதற்குள் கீதா தினமும் ஒரு மணி நேரம் என்னிடம் காரைப் பற்றிய பல விவரங்களையும் பிரசங்கம் செய்து காதைத் துளைத்து விட்டாள்'' என்று விமலா முடித்தாள்.

''நீங்கள் இரண்டு குடும்பமும் நெருங்கிப் பழகிய திறுசைப் பார்த்ததில் துரைசாமிக்கு உன்னைத்தான் கல்யாணம் செய்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தோம்'' என ஜாடையாக ஆரம்பித்தாள் ஹேமா.

தன் வரிசையான பற்கள் தெரிய வாய்விட்டுச்சிரிக்கும் துரைசாமியின் பிரகாசமான வதனம் விமலாவின் மனக்கண்முன் ஒரு கணம் தோன்றி மறைந்தது.

''ஹும்! அப்படி ஒன்றுமில்லை. பணம், சிநேகிதம் இவைகளிரண்டும் தனித்தனி அம்சங்கள் என்ற அபிப்பிராயமுடையவர் செல்லம்மாள், எங்கப்பாவினால் துரைசாமிக்குக் கார் வாங்கிக் கொடுக்க முடியுமா? அப்படிக் கொடுக்கத் துணிந்தாலும் நான் துரைசாமியை மணந்து கொள்ள முன் வருவேனோ? என்னை எனக்காக மதிக்கும் கணவன் கிடைக்கும் வரை எனக்குக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற அவா கிடையாது. அது கிடக்கட்டும். கீதா இருக்கிறாளே, அவளையாவது என்



அண்ணா சிவராமனுக்குக் கொடுக்கக் கூடாதா? எத்தனை தாரம் குறிப்பாக எடுத்துச் சொல்லியும் செல்லம் மாமி மௌனமாக இருக்கிறார்!'' என்று மனக்குறையுடன் பேசினாள் விமலா.

''ஆமாம்? அப்படி பேஷாகச் செய்யலாமே! ஒரே ஊரில் சம்பந்தம் செய்ய செல்லம் மாமிக்கு இஷ்டமில்லை போலிருக்கிறது'' என்று ஹேமா சொன்னாள்.

''கீதாவை என் அண்ணாவுக்குக் கொடுக்கும் பக்ஷத்தில் நாங்கள் சீர், வரதக்ஷிணை ஒன்றும் கேட்கமாட்டோம். ஆனால், அவர்கள் இஷ்டம் எப்படியோ?'' என்று விமலா சொல்லிப் பெருமூச்சு விட்டாள்.

இதற்குள் கீதா கௌரியுடன் கிளப்பின் ஹாலிலிருந்து வெளிப்படுவதைக் கண்ணுற்ற சிநேகிதிகள் பேச்சை மாற்றினார்கள். அருகில் வந்த கீதாவைப் பார்த்த விமலா புன்னகையுடன், ''உன் மன்னியை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி விட்டாய் அல்லவா? இனி சாவகாசமாக வீட்டுக்கும் போகலாம். உட்காருங்கள்'' என்று உபசரித்தாள்.

''நான் இன்றைக்குக் கிளப்பிற்கு நேரம் கழித்து வந்தேன். மாதாந்திரக் கூட்டம் மூன்று மணிக்கே துவங்கிவிட்டார்களாம். அதில் என்ன நடந்தது?'' என்று விசாரித்தாள் கீதா.

''பல முக்கிய சம்பங்களை ரசிக்கும் சந்தர்ப்பத்தை நீ இன்று இழந்துவிட்டாய். 'கிளப்பின் எலெக்ஷன்' தினமல்லவா இன்று? காரியதரிசினி பதவிக்கு மிஸஸ் பொன்னரங்கமும், மிஸஸ் ஜானகியும் நின்றார்கள். மிஸஸ் பொன்னரங்கம் எலெக்ஷன் சமயத்தில் என்பக்கம்தான் உட்கார்ந்திருந்தது. மிஸஸ் ஜானகிக்குத்தான் அவ்வளவு ஓட்டுகளும் கிடைத்தன. நான் அவளுக்கு என் இரண்டு கைகளையும் தூக்கி இரண்டு ஓட்டுகள் கொடுத்தேன் என்றால் பார்த்துக் கொள்ளேன்! மிஸஸ் பொன்னரங்கத்தின் பெயர் வாசிக்கப்பட்ட பொழுது ஒரே ஒரு அம்மாமியைத் தவிர யாரும் கையைத் தூக்கவில்லை.

கொஞ்ச நேரம் கழித்து, 'ரேஷனும் நாமும்' என்ற தலைப்பில் பிரசங்கம் செய்யவிருந்த மிஸஸ் பொன்னரங்கத்தைக் கூப்பிட்டார்கள். ஆளையே காணோம்! தன்னைக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கவில்லை என்ற கோபத்தில் சொல்லிக்கொள்ளாமல் வெளியேறி விட்டது அது! இது தெரிந்ததும் சபையில் ஒரே சிரிப்பு'' என்று விமலா கூறி முடிப்பதற்குள் கீதாவும் மற்ற பெண்களும் குபீர் என்று சிரித்தார்கள்.

''மிஸஸ் பொன்னரங்கம் காரியதரிசியானால் நம் கிளப் உருப்பட்டாற்போல்தான்!'' என்று கீதா மறுபடியும் சிரித்தாள்.

மிஸஸ் பொன்னரங்கத்தைச் சொல்வதில் குற்றமில்லை. தனக்குத் தெரியாத பொறுப்பை வகிக்க ஆசைப்படாத பூந்திடல் பெண்மணிகள் யார் இருக்கிறார்கள் சொல்? நம் கிளப் நிர்வாகச் சபையில் உள்ள அங்கத்தினர்கள் எல்லோரும் விஷயம் தெரியாத அம்மாமிகள். பாட்டிகள், மஞ்சளின் மகிமை, ஏகாதசி விரதம் என்று வாரத்திற்கு ஒரு பிரசங்கம். வீட்டில் அகத்துக்காரர்களுக்குப் பிரசங்கிப்பது போதாதென்று இந்தப்பாட்டிகள் பூந்திடல் இளமங்கைகளின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடுகிறார்கள். கிளப் நிர்வாக அங்கத்தினர் அத்தனை பேருக்கும் கல்தா கொடுத்து விட்டு மிஸ் ஜானகிபோல் இளம்பெண்களைக் கொண்ட சபைகள் அமைக்க வேண்டும். என் அபிப்பிராயம் இதுதான்!.. என ஆத்திரத்துடன் பேசினாள் விமலா.

''உன் அபிப்பிராயத்தை நானும் ஆதரிக்கிறேன்.'' என்று கீதா சொன்னாள். அது சமயம் தங்களை நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு ஸ்திரீயைக் கண்டு, ''ஹேமா, மங்களம் மாமி வருகிறார்'' என்று மெல்லிய குரலில் எச்சரிக்கை செய்யவே பேச்சு திடீரென்று நின்றுவிட்டது.

''என்னம்மா குழந்தைகளா? உங்களை காணமேன்னு நான் தேடிக் கொண்டு வந்தேன். இந்த வருஷம் நவராத்திரி அழைப்புக்கடிதாசி உங்களுக்கெல்லாம் நேத்தியே அனுப்பியிருந்தேன். மறந்து போகாமல் நீங்கள் எல்லோரும் வரணும்னு நேரே பார்த்துச் சொல்லிட்டுப் போக வந்தேன். கீதா! விமலா! போன வருஷம் போல வராம இருந்துடாதீர்கள்!'' என்று கூறிவிட்டுப் புன்னகை செய்தாள் மங்களம்.

''ஆகட்டும் மாமி! கட்டாயம் வருகிறோம்'' என்று எல்லோரும் கூறவே மங்களம் அங்கிருந்து சென்றாள்.

''நான் போன வருஷம் கொலுவுக்குப் போகாததைப் பற்றி மங்களம் மாமி ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாரே!'' என்று கீதா ஆச்சரியப்பட்டாள்.

''அந்த மாமிக்கு வேறே என்ன வேலை? குழந்தையா குட்டியா? கவனிக்கணுமே என்ற கவலை ஒன்றுமில்லை. கிளப், கொலு, நாலு பேர் வீட்டுக்குப் போய் வரும் வேலை இதைத் தவிர வேறு என்ன இருக்கிறது?'' என்று துடுக்காகப் பதிலளித்தாள் விமலா.

''மாமியின் கையில் வைத்திருந்த 'ஹாண்ட்பாக்'கை கவனித்தாயா? முறம் போல எத்தனை பெரியது? நமக்கு கையில் சிறு அழகுப் பை எடுத்துக்கொண்டு போக வெட்கமாக இருக்கிறது. ஆனால், இந்தப் பூந்திடலில் வயதான அம்மாமிகள் நம்மை மிஞ்சுகிறார்கள் நாகரிகத்தில் கிளப்புக்கு வருகின்ற எல்லோரையும் பாரேன். சுதவு அளவில் கையில் அழகுப் பை இல்லாத அம்மாமியே கிடையாது. அத்தனை பெரிய பையில் என்னதான் எடுத்துக்கொண்டு வருவார்களோ?'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள் ஹேமா.

''வீட்டிலே அகத்துக்காரர்களை விட்டுவர மனமில்லாத அம்மாமிகள் கைப் பையில் அவர்களைப் போட்டுக் கொண்டு வருகிறார்கள் போலிருக்கிறது!'' என்று விமலா கூறியபோது பெண்கள் கலகலவென்று சிரித்தார்கள்.

"விமலா! நீ சுத்த வாயாடி, போ!" என்று கீதா கூறியதைக் கேட்டுப் பெருமையடைந்த விமலா மேலே வேறு பல விஷயங்களைப்பற்றி ரஸமாகப் பேச ஆரம்பித்தாள்.

## 2

கூடத்துத் தரையின் மீது உட்கார்ந்து இரவு சமையலுக்காகக் காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்தாள் செல்லம்மாள். கிளப்பிலிருந்து திரும்பி வந்த துரைசாமி கூடத்து ஊஞ்சலில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

"எங்கேயோ வெளியிலே போகணும்னு சொன்னியே, அப்பா" என்று தாயார் ஞாபகமூட்டினாள்.

"முதலில் போகணும்னு நினைச்சேன். இப்ப வேண்டான்னு அந்த வேலையை ஒத்திப் போட்டுட்டேன். ஏன் அம்மா, பெண்ணையும் நாட்டுப் பெண்ணையும் கிளப்பிற்கு அனுப்பி விட்டு, பாவம், நீ தனியே வீட்டு வேலைகளைச் செய்கிறாயே?" என்று பச்சாதாபத்துடன் கேட்டான் பிள்ளை.

"என்னவோ போகிறது, குழந்தைகள், கீதா சதா இங்கேயேவா இருக்கப்போகிறாள்? ஆச்சு, அவளுக்கு ஒரு கல்யாணம் ஆனால், ஒரு நாள்கூட நம்பளோடு இருக்கப் போகிறதில்லை. அவளுக்கு வரப் போகிறவன் எப்படி இருக்கப் போகிறானோ! இங்கே இருக்கிறவரைதானே குழந்தை அவள் இஷ்டப்படி இருக்க முடியும்? என்னவோ அவ சந்தோஷமா இருந்தா சரின்னுட்டு நான் ஒண்ணும் தடுத்துச் சொல்றதில்லையப்பா" எனப் பெருமூச்செறிந்தாள் தாயார்.

"அதுக்குச் சொல்லலை, அம்மா. இந்தக் காலத்திலே படித்த பெண்களைக் கல்யாணம் செய்து கொள்றதுன்னா பசங்கள் எல்லாம் கொஞ்சம் யோசனை செய்கிறார்கள். படித்த பெண்களுக்குச் சமைக்கத் தெரியாதுன்னா யாருக்குத்தான் பிடிக்கும்? கீதாவின் நாகரிகத்திற்கும் அவள் விளையாட்டுத் தனத்திற்கும், கபடமற்ற சுபாவத்திற்கும் நல்ல புருஷன் கிடைக்க வேண்டுமே என்றுதான் எனக்குக் கவலை. நம்ப கீதா சாதாரணமா என்னைப் போல் சம்பாதிக்கிற ஒரு புருஷனைக் கல்யாணம் செய்து கொண்டால் சந்தோஷமா இருக்க முடியாதம்மா! அவளுக்குத் தகுந்த வரன் எப்படிக் கிடைக்கப் போகிறது என்று ராவும் பகலுமாக சதா கவலைப்படுகிறேன் நான்" என்றான் துரைசாமி.



பிள்ளையின் வார்த்தைகளைக் கேட்ட தாயார் மிக்க கவலையுடன் கை வேலையை நிறுத்திவிட்டு அவன் முகத்தைப் பார்த்தாள்.

"ஒரே முட்டாக ஏழையாக இல்லாமலும், ஒரேயடியாகப் பணக்காரர்களாக இல்லாமலும் நடுவில் கிடந்து பல வழிகளிலும் கஷ்டப்படும் நம்மைப் போன்ற நடுத்தர குடும்பத்தவர்கள் பெண்களைப் படிக்க வைக்கக் கூடாதம்மா! படித்தவுடன் அந்தப் பெண்களுக்குத் தங்கள் உண்மை நிலை மறந்து விடுகிறது. தங்களுக்கும் மீறி உள்ள அந்தஸ்தவர்களைப் போல வாழ்க்கை நடத்த ஆசை வந்து விடுகிறது. அந்த ஆசையில் வெற்றி பெறாவிட்டால் தீராத மனக்குறைக்கு அடிமையாகின்றனர். நாம் பணக்காரர்கள் இல்லை. நமக்கு இவ்வளவுதான் செய்யக் கட்டிவரும் என்ற எண்ணம் நடுத்தரக் குடும்பத்துப் பெண்களுக்கு ஏற்பட வேண்டுமானால், அதிகம் படிக்க வைக்காது சிறு வயதிலேயே கல்யாணம் செய்து கொடுத்துவிட வேண்டும். எல்லோரும் 'மாடம்குயூரி'யாக வாழப் போகிறார்கள் என்று ஊன்மூடித்தனமாகப் பெண்களைப் பட்டதாரிகளாக ஆக்குவதிலே யாருக்குப் பிரயோஜனம்? 'படித்த பெண்ணா!' என்று இந்த காலத்துப் பையன்கள் அலறுகிறார்கள்" என்று பிரசங்கித்தான் துரைசாமி.

"என்னவோ, குழந்தை ஆசைப்பட்டாளேன்னு படிக்க வச்சது. இந்த காலத்திலே படிக்காத பெண்கள்

யார் இருக்கா? தடுக்கி விழுந்த இடத்தில் எல்லாம் பி.ஏயும். எம்.ஏயுமாக இருக்கு. ஒரு பத்து வருஷத்துக்கு முந்தியெல்லாம் படிச்ச பெண்ணுக்கு மவுசு ஜாஸ்தியா இருந்தது. இப்போ தலை கீழா மாறியிருக்காப்பலே இருக்கு. இந்த உலகமே விசித்திரந்தான். "கீதா அழகு ஒண்ணுக்கே யாராவது நல்ல வரனா வந்து அமைஞ்சுடும்னு எனக்கென்னவோ ஒரு நம்பிக்கையப்பா" என்று தாயார் பதில் சொன்னாள்.

"காலேஜ் படிப்பு முடிந்த ஒரு வருஷமா கீதா வீட்டில் தானே இருக்கிறாள்? நாவல்கள் படிப்பது ரேடியோ கேட்பது, கிளப்புக்குப் போவது, இல்லா விட்டால் தோட்டத்து மண்ணைக் கிண்டி விட்டு மல்லிகைச் செடிக்குப் பாத்தி கட்டுதல், இதைத் தவிர அவள் சமைத்து ஒரு நாள் கூட நான் பார்த்ததில்லை. ரேடியோ, கிளப் இத்துடன் நம் வாழ்க்கையில் சகலமும் முடிந்து விடுகிறதா? என் சிநேகிதன் ஒருவனுக்கு கீதாவின் ஜாதகத்தைக் கொடுத்தேன். 'பட்டதாரியா!' என்று எடுத்த எடுப்பிலே கேட்டு மூர்ச்சை போட்டான் அவன், சமையல் வேலையில் அதிகப் பழக்கமில்லை என்ற உண்மை தெரிந்ததும் 'ஜாதகம் பொருந்தவில்லை' என்று சொல்லிவிட்டான். பொண்டாட்டி அழகாயிருந்தால் சிறிது நேரம் பார்த்து மகிழலாம். ஆனால் வயிறு பசிக்கும் பொழுது அழகைச் சாப்பிட முடியுமா?" என்றான் துரைசாமி சலிப்புடன்.

"சமைக்கத் தெரியாது. அது இதுன்னு நீ ஒண்ணு? அரிச்சந்திரன் போல எல்லாத்தையும் சொல்லணுமா? தானே எல்லாம் புக்ககத்திற்குப் போனா கத்துக் கொண்டு விடறாள். எது எப்படியானாலும் இந்தத் தைக்குள்ள கீதாவுக்குக் கல்யாணம் ஆகணும். அதுக்கு முதல்லே வழி பார்!" என்று தாயார் தன் மகனை விட்டுக் கொடுக்காமல் சிறிது கோபத்துடன் பேசினாள்.

நறுக்கிய காய்கறிகளை எடுத்துக் கொண்டு செல்லம்மாள் சமையலறைக்குள் நுழைந்ததும், தாயாருடன்



விவாதம் செய்வதில் பயனில்லை என்று புரிந்து கொண்ட துரைசாமி மாடியில் உள்ள தனது அறைக்கு சென்றான்.

"செல்லம்மா!" என யாரோ தன்னைக் கூப்பிடுவதை உணர்ந்த செல்லம்மாள் சமையலறையிலிருந்து வெளியே கூடத்தின் பக்கம் வந்தாள். "யாரு. சுப்பிப் பாட்டியா? வாங்கோ! உட்காருங்கோ!" என உபசரித்து விட்டு, தானும் எதிரே தரையில் வந்து உட்கார்ந்து கொண் டாள்

"என்ன? நாட்டுப் பெண் வந்திருக்காளாமே! பாாத்துட்டுப் போகலாம்னு வந்தேன்" என்று ஆரம்பித்தாள் சுப்பிப் பாட்டி.

"ஆமாம், வந்திருக்கா" என்று செல்லம்மாள் பதிலளித்ததைக் கேட்டுத் திருப்தியடைந்தவள் போலச் சுப்பிப் பாட்டி, "இனிமேலாவது பொண்ணுக்குக் கல்யாணம் ஆகணும். இல்லியா? ஏதாவது வரன், கிரன் பார்த்துண்டு இருக்காயோன்னோ?" என்றாள் மெதுவாக.

"பெண்ணுக்குக் கல்யாணம் ஆன பின்பு நாட்டுப் பெண்ணைப் புக்ககத்துக்கு அழைக்கலாம் அப்படின்னு இருந்தேன் அப்புறம் எனக்குத் தன்னல்லை. அவ வந்தால் கூடமாட ஒத்தாசையா இருக்குமேன்னு அழைச்சுட்டேன். இந்தக் காலத்திலே யாரம்மா கல்யாணத்துக்கப்புறம் பிறந்தாத்திலே விட்டு வைக்கிறா?" என்றாள் செல்லம்மாள்.

"நேத்திக்கு அவயத்தாத்திற்குப் போயிருந்தேன். இந்த வருஷமாவது என் பொண்ணுக்கு கல்யாணமாகணுமே பாட்டி, ரொம்பக் கவலையா இருக்கேன்னு எங்கிட்ட சொல்லி வருத்தப்பட்டா என்ன பண்றது? இதெல்லாம் நம்ப கையிலேயா இருக்கு? எப்ப பிராப்தமோ அப்பத்தானே நடக்கும்னு நான் சமாதானம் சொல்லிட்டு வந்தேன். ஏண்டி செல்லம்மா, அவ பெண் விமலா உன் பெண் கீதா உடத்தவள் தானே? அவயத்தின் பிள்ளை சிவராமனுக்கு இன்னும் கல்யாணம் ஆகலை போலிருக்கு.

ஏன், நான் கேட்கிறேன். உன் பெண் கீதாவைச் சிவராமனுக்குக் கொடுக்கப்படாதோ! பையன் சித்தக் கறுப்புத்தான். இருந்தாலும் ராஜா வாட்டமா மூக்கும் முழியுமா இருக்கான். மாசம் இருநூறு சம்பாதிக்கிறானாமே" என்றாள் சுப்பிப் பாட்டி.

''நாலா பக்கமும் பார்த்துண்டு இருக்கு பிராப்தப்படி தானே நடக்கும்?'' என்று செல்லம்மாள் சொல்லி அவயத்தின் வீட்டுப் பேச்சை மேலே வளர்த்த இஷ்டப்படாது சம்பாஷணையை வேறு திக்கில் செல்ல விட்டாள். ஊரில் உள்ள சகல விஷயங்களைப் பற்றியும் பாட்டி சொல்ல சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்த செல்லம்மாளுக்கு உள்ளே அடுப்பில் பால் பொங்கி வழியும் சத்தம் கேட்டது.

''அடாடா!'' எனக் கூவிக் கொண்டு அவள் எழுந்திருந்து உள்ளே விரைந்து சென்றாள் அவள் திரும்பக் கூடத்திற்கு வந்ததும் பாட்டி எழுந்திருந்து, ''சரி, நான் போய்விட்டு வரேன். ஏண்டி செல்லம்மா! கொஞ்சம் காப்பிப் பொடி இருந்தா கொடுப்பியா? நாளன்னிக்கு பேரன் டவுனிலிருந்து வரான். காப்பிப் பொடி வாங்கிண்டு வருவான், உடனே திருப்பிக் கொடுத்துடறேன்'' என்றாள்.

செல்லம்மாளுக்குச் சட்டென்று என்ன சொல்வதென்று தெரியவில்லை. ''இருக்கான்னு பார்க்கிறேன்'' என மழுப்பி விட்டுச் சமையல் கட்டு உள்ளே சென்றாள்.

காப்பிப் பொடியுடன் சுப்பிப் பாட்டி வீட்டை விட்டு வெளியேறுவதற்கும், கௌரியும் கீதாவும் கிளப்பிலிருந்து உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

முற்றத்துத் தொட்டியிலிருந்த நீரைச் செம்பால் எடுத்துக் காலைக் கழுவிக் கொண்ட கீதா ''ஏன் அம்மா சுப்பிப் பாட்டி இங்கே வந்ததா இப்போ? அது என்ன எடுத்துக் கொண்டு போகிறது?'' என்று தாயாரைக் கேட்டாள்.



''கொஞ்சம் காப்பிப் பொடி கடன் வாங்கிண்டு போறாள்'' என்றாள் செல்லம்மாள்.

''இரு நூறாவது தடவையாகக் காப்பிப் பொடி கடன் வாங்க வந்து விட்டதோ பாட்டி! இதை ஏன் உள்ளே விட்டாய்? சுத்த வம்புக்காரியாச்சே அது!'' என்று நெற்றியைச் சுளுக்கினாள் கீதா.

''சரிதான், போ! பெரியவாளைப் பத்தியெல்லாம் அவமரியாதையா பேசக்கூடாது?'' என்றாள் செல்லம்மாள் சிறிது கோபத்துடன்.

'இந்தம்மாவுக்கு நல்லது சொன்னால் ஒன்றுமே புரியாது'' என்று முனகிய கீதா கௌரியுடன் மாடிக்குச் சென்றாள்.

வேறு உடை உடுத்திக்கொண்ட இரண்டு பெண்களும் மாடியின் திறந்த வெளியில் காற்று வாங்கும் நிமித்தம் உட்கார்ந்து கொண்டார்கள் ''என்ன கௌரி! எங்கள் லேடீஸ் கிளப் எப்படி?'' என்று பேச்சைத் துவக்கினாள் கீதா.

''சுத்த வம்பு மடம்! எனக்குப் பிடிக்கவே இல்லை. அந்த விமலா யார் அவள்? அவள் பலே பொல்லாதவளா இருக்கிறாளே!'' என்று சிரித்தாள் கௌரி.

''அவள் என் சிநேகிதி. கொஞ்சம் வம்பி. மற்றபடி நல்ல பெண்தான். அண்ணாவுக்கு அவளைக் கொடுக்க வேண்டுமென்று அவள் வீட்டில் ஆசைப்பட்டார்கள்...'' என்று முடிக்காமல் நிறுத்தினாள் கீதா.

''அதனால்தானோ என்னவோ பேச்சுக்குப் பேச்சு அந்தப்பெண் உங்கண்ணாவைப்பற்றி ஏதாவது சொல்லிக் கொண்டிருந்தாள்!'' என்று பொறாமை கலந்த குரலில் கௌரி கேட்டாள்.

கௌரியின் முகம் பிரகாசம் குன்றி வாடி விட்டதைக் கவனித்த கீதா மெல்லச் சிரித்துக் கொண்டு. ''பயப்

படாதே மன்னி! அவர்கள் வீட்டில் ஆசைப்பட்டார்கள் என்றேனே ஒழிய இங்கே நம் வீட்டில் ஆசைப்பட்டார்கள் என்று சொல்லவில்லையே!'' என்று கேலியாகச் சொன்னாள்.

''அது கிடக்கட்டும், உங்கள் கிளப்பில் ஒரு விஷயத்தை நான் கவனித்தேன். நீங்கள் பேசுகிற பாஷையில் சிலரை அவர் என்றும், சிலரை அது என்றும் குறிப்பிட்டுப் பேசுகிறீர்கள். எனக்கு கேட்க வேடிக்கையாக இருக்கிறது'' என்றாள் கௌரி.

''எங்கள் மரியாதைக்கு உகந்த பெண்களை ''அவர், இவர்' என்று சொல்வோம். எங்களுக்குப் பிடிக்காத பெண்களை 'அது இது' என்றுதான் குறிப்பிடுவோம். இது எங்கள் ஊர் லேடீஸ் கிளப்பின் பாஷை. தெரிந்து கொள் உனக்கு உபயோகமாக இருக்கும்'' என்று கீதா சொல்வதைக் கேட்டுத் தாங்க முடியாமல் கௌரி சிரித்தாள்.

''இங்கே வந்து விட்டுப் போனாளே ஒரு பாட்டி, அந்தம்மாள் கூட உங்களுக்குப் பிடிக்காத கோஷ்டியைச் சேர்ந்தவள் தானோ?'' என்று கேட்டாள்.

''சுப்பிப் பாட்டியா! ஐயோ, அது பெரிய எமன். ஊரிலுள்ள சகல விஷயமும் அதற்குத் தெரிந்துதான் ஆகும், நாரதமுனிவர் பெண் வேஷத்தில் பூந்திடலில் திரிகிறார் என்று ஞாபகத்தில் வைத்துக்கொள். ஏதாவது தவறி அதனிடம் கொஞ்சம் வாய் கொடுத்துவிட்டாயோ தீர்ந்தது! நீ சொல்லாததைச் சொன்னதாகக் கயிறு திரித்துப் பக்கத்து வீட்டுக்காரர்களைச் சண்டைக்கு இழுத்து வைக்கும். நாங்கள் இதற்கு ''இன்பர்மேஷன் பீரோன்னு பேர் வைத்திருக்கிறோம். என்று பாட்டியைப் பற்றி கீதா விவரிப்பதைக்கேட்டு கௌரி கலகலவென்று நகைத்தாள்.

''கௌரி! போறும்! பல் சுளுக்கிக் கொள்ளப் போகிறது. கிளப்பிலிருந்து திரும்பி வந்ததும், இங்கே உட்கார்ந்து கொண்டு பேசிப் பொழுதைக் கழிக்கணுமா?



கீழே போய் அம்மாவுக்குச் சமையல் வேலையில் ஒத்தாசை செய்யக் கூடாது?'' என்று கடுமையான குரலில் கேட்டுக் கொண்டு துரைசாமி அங்கே வந்து நின்றான், கௌரி சட்டென்று எழுந்தாள். பதில் சொல்லாமல் 'விர்' என்று அவள் கீழே இறங்கிச் சென்றாள்.

''இருந்தாலும் அண்ணாவுக்குப் பொறுமையே கிடையாது. காரணமின்றி எதற்காகக் கௌரி மீது அப்படி எரிந்து விழுந்தார்? பாவம் அவள் முகம் எப்படிச் சுண்டி விட்டது?'' என்று தனக்குள்ளே மன்னியைக் குறித்துப் பச்சாதாபமடைந்த கீதாவும் அங்கிருந்து சென்றாள், அவளுக்கு அன்று சாப்பிடவே பிடிக்கவில்லை.

இரவு தன் அறைக்குள் நுழைந்த கீதா விளக்கை ஏற்ற மனமின்றி இருட்டில் தனது கட்டிலின் மீது படுத்துக் கொண்டு திறந்திருந்த கதவு வழியே மாடி வராந்தாவை வெறித்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

புடவை சலசலக்கும் சத்தம் கேட்டதும் கௌரி மாடிக்கு வருகிறாள் என்று உணர்ந்த கீதா அவளைக் கூப்பிட வாயைத் திறந்தாள். அதற்குள் பின்னால் சப்தித்த காலடியைக் கேட்டதும் அண்ணாவும் கூட வருகிறார் என்றறிந்து வாயை மூடிக் கொண்டாள்

''கோபமா கௌரி உனக்கு?'' என்றான் துரைசாமி.

''அதெல்லாம் ஒன்றுமில்லை'' என்று பதில் அளித்தாள் கௌரி கொஞ்சும் குரலில்.

''சாயங்கலாம் நான் அதட்டினதைக் கேட்டு உனக்கு கோபம் வந்து விட்டதென்று நான் பயந்து போய் விட்டேன்'' என்றான் ஸரஸமாக அவன்.

''ஐயோ அப்பா. ரொம்ப பயந்த ஆசாமிதான் நீங்கள்! ஒன்று மட்டும் சொல்வேன்; உங்களுக்குக் கொஞ்சங்கூட சமயா சமயம் தெரியறதில்லை. அம்மாவும் கீதாவும் இருக்கிற இடத்திலே உங்களைப் பார்த்து நான்

மகிழ்ந்து கொண்டு இருந்தா நன்றாயிருக்குமா?'' என்று கேட்டாள் கௌரி.

''ரொம்ப கெட்டிக்காரி தான் நீ; அது சரி கௌரி! நாம் இருவரும் ஒன்பது மணி 'ஆட்டத்திற்கு சினிமாவுக்குப் போகலாம், வா! உன்னைக் காரில் தனியா அழைத்துக் கொண்டு போகணும்னு ஒரு வாரமா என் மனது ஆசையிலே துடிக்கிறது'' என்றான் துரைசாமி.

''அம்மா என்ன சொல்வாரோ?''

''அம்மா ஒண்ணும் சொல்லமாட்டா. நீ போய் டிரஸ் பண்ணிக் கொண்டு சீக்கிரம் வா.''

''சரிதான்னா! இரைந்து பேச வேண்டாம். கீதா வருகிற சமயம். இங்கே நிற்பானேன்!'' என்று எச்சரித்த கௌரி தன் அறையை நோக்கிச் சென்றாள.

ஒட்டுக் கேட்கும் வழக்கம் கீதாவிடம் கிடையாது. இருந்த போதிலும் அண்ணாவும் மன்னியும் பேசிய விஷயங்கள் யாவும் அவள் இஷ்டப்படாதிருக்கையிலேயே தெளிவாக கீதாவின் காதுகளுக்குக் கேட்டன. வேறு இடத்தில் போய் நின்று கொண்டு பேசக் கூடாதா என்று தனக்குள்ளே அவர்களைக் கடிந்து கொண்ட கீதா சரியாகக் கூட மூச்சுவிட பயந்து கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள். அண்ணாவும் மன்னியும் அவ்விடத்தை விட்டு நகர்ந்ததும் தான் அறைக் குள்ளிருந்தது அவர்களுக்குத் தெரியக் கூடாதென்ற எண்ணத்துடன் அறையைவிட்டு மெல்ல வெளியே இறங்கி வந்தாள்.

இரவு போஜனத்திற்குப் பிறகு சமையலறையைக் கழுவி விட்டுக் கொண்டிருந்த செல்லம்மாள் உள்ளே வந்து நின்ற புதல்வியை, ''மாடிக்குப் போயேன், இங்கே என்னத்துக்கு வந்து சதிர் ஆடறே?'' என்று கேட்டாள்.

''நீ மட்டும் தனியா இருக்கியேன்னு உனக்காக நானும் காத்துண்டு இருக்கேன்'' என்றாள் பெண் பிடிவாதமாக.



''எனக்குக் கொள்ளை வேலை கிடக்கு. உடனே உன்னோட மாடிக்கு நான் வந்துட முடியாது. அலம்பின தரையை மிதிச்சுண்டு நிக்காதே. போன்னா ஒருவார்த்தையிலே போயேன்! கைக்குழந்தையைப்போல கொஞ்சறியே!'' என்று செல்லம்மாள் அன்புடன் மகளைக் கடிந்து கொண்டாள்.

அது சமயம் அங்கே வந்த துரைசாமி, ''அம்மா நாங்க சினிமாவுக்குப் போய்விட்டு வரோம்'' என்று கூறியதைக் கேட்ட தாயார், ''ஏண்டாப்பா, இத்தனை நாழி கழிச்சா?'' என்று கேட்டுவிட்டு பிள்ளையைத் திரும்பிப் பார்த்தாள்.

''ஆமாம்மா!'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டு, துரைசாமி வாசல் பக்கம் வேகமாகச் சென்றான். வெளியே புறப்படச் சித்தமாக அலங்கரித்துக் கொண்டு அவன் பின்னால் நின்று கொண்டிருந்த கௌரி சங்கோஜத்துடன் மாமியாரைப் பார்த்துவிட்டு ''நான் போய் விட்டு வரேன், அம்மா'' என்று சொல்லிக்கொண்டாள். கீதாவின் பக்கம் திரும்பி, ''நீயும் வாயேன், கீதா!'' என்று அழைத்தாள்.

''நானா? எனக்கு ஒரே களைப்பாக இருக்கிறது. தூக்கம் வருகிறது. 'நான் வரவில்லை. நீங்கள் போய்விட்டு வாருங்கள் என்று புன்னகையுடன் வாயில்வரை வழி கொண்டுவிட்டுக் கதவைத் தாழிட்டுக் கொண்டு திரும்பினாள் கீதா. ''ஏண்டி நீயும் போய்விட்டு வரதுதானே?'' என்று தாயார் சொன்னதைக் கேட்ட அவளுக்குச் சிரிப்புத் தான் வந்தது. ''அம்மாவுக்கு வயதாகியும் விஷயம் தெரியாதா என்ன?'' என்று மனத்திற்குள்ளே நினைத்துக் கொண்டு, ''நான் மாடிக்குப் போறேன், அம்மா!'' என்றாள் கீதா,

படுக்கையைத் தட்டிச் சரிப்படுத்தி விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்ட அவள் ஜன்னல் வழியாக ஆகாய வெளியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் கருநீலப்பட்டில் வைத்துத் தைத்த வைரமணிகள் போல் காட்சியளித்த நக்ஷத்திரக் கூட்டங்கள் கொண்ட வானம் அவளது சிந்தனைக் குதிரையைத் தட்டி எழுப்பியது.

பூந்திடல் லேடீஸ் கிளப், விமலா, அவள் குடும்பம், சுப்பிப்பாட்டி என்று ஒவ்வொருவராக அவளது மனக் கண்முன் தோன்றி மறைந்தனர். இத்தனை காலமாகத் தோன்றாத ஓர் அலுப்பு அவள் மனத்தில் கொஞ்ச நாட்களாக இருந்து வந்ததை அவள் அறிந்தாள். படிக்க வேண்டும். வகுப்பில் முன்னணியில் நிற்க வேண்டும் என்று பள்ளித்தோழி விமலாவுடன் போட்டியிட்டுப் பரீக்ஷைகள் தேறி பி. ஏ. பட்டம் பெற்ற காலம் வரை அவளுக்கு வாழ்க்கை மிக்க உற்சாகமாகத்தான் கழிந்தது. விஞ்ஞானமும் கவிதையும் படிப்பதில் இருபது வருஷங்கள் எவ்வளவு வேகமாக உருண்டோடி விட்டன! ஆனால் படிப்பு முடிந்து வீட்டில் இருக்க நேர்ந்த அந்த ஒரு வருஷம் மட்டும் மிகவும் மெல்லச் சென்றுகொண்டிருந்ததைப்போல் கீதாவுக்குத் தோன்றியது. முதலில் மிகவும் ஆர்வம் காட்டிய கிளப்கூட அவளுக்கு நாளாவட்டத்தில் சலித்துப் போய்விட்டது. என்ன வாழ்க்கை! பார்த்து அலுத்துப்போன மனிதர்களையும், ஊரையும் விட்டு எங்கேயாவது கொஞ்ச நாட்கள் போய் இருக்கும் பாக்யம் கிடைக்காதா?

அண்ணா இருக்கிறாரே! அவர் கூட எப்படி மாறி விட்டார்! மனைவி வந்ததும், தங்கையைக் கவனிப்பதில் முன்னிருந்த சிரத்தை குறைந்துவிட்டது. 'லேடீஸ் கிளப்' பிற்குக் காரில் தங்கையை அழைத்துச் செல்லக் கஷ்டமாக இருந்த துரைசாமிக்கு அர்த்த ராத்திரியில் மனைவியை அழைத்துக் கொண்டு வெளியே செல்லக் கஷ்டமாக இல்லை. கௌரி மட்டும் என்ன? பார்ப்பதற்குத் தோன்றுவதுபோல் அத்தனை பேதையல்ல. சாயங்காலம் துரைசாமி கோபித்துக் கொண்டதும் அவள் முகம் வாடினதைப் பார்த்துகீதாமனம் துடித்தாளே அவ்வளவும் வெறும் நடிப்பு!...சே! இருக்காது. ஒரு சமயம் தான் வருத்தப் பட்டதைக் கணவனுக்குச் சொல்லி ஏன் மனக் கஷ்டம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன்கௌரி பொய் சொன்னாளா? துரைசாமி தான் நிஜமாகவே மனைவி மீது எரிந்து விழுந்தானா? மனைவியை அதிகாரம் செய்வதாக நடத்திய ஸரஸ நாடகமா? வேடிக்கை! தாம்பத்ய வாழ்க்கையே புரியாத பல முடக்குகள் கொண்ட பெரும் புதிர் போல இருக்கிறது! இவ்வாறு பல எண்ணிக் குழம்பியவாறு படுத்திருந்தாள்.



உள்ளே வந்து விளக்கைப் போட்ட தாயார் திடுக்கிட்டு. 'ஏண்டி இன்னும் தூங்கலையா கீதா?'' என்று கேட்டாள்.

''தூக்கம் வரவில்லை'' என்று பெண் கூறியதைக் கேட்ட அவள், ''மணி பதினொண்ணு ஆகப் போகிறது. தூக்கம் வராமல் என்ன! ஜன்னல் கீழ்க் கதவைச் சாத்தி விட்டுப் படுத்துண்டு தூங்கு!'' என உத்தரவிட்டு விட்டு, விளக்கையும் அணைத்து விட்டுத் தரையில் படுத்துக் கொண்டாள்.

''கல்யாணம் பண்ணாத பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு நாட்டுப் பெண்ணைப் புக்ககம் அழைத்தது மிகவும் தவறு'' என்று தனக்குள்ளே எண்ணிய செல்லம்மாளுக்கு மன வேதனையினால் தூக்கம் வரவேயில்லை. சிறிது பொழுதில் கீழே கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டு, ''சினிமாவிலிருந்து திரும்பி வந்துட்டான் போலிருக்கு'' என்று தனக்குள்ளே கூறிக் கொண்டு செல்லம்மாள் கதவைத் திறக்கக் கீழே சென்றாள்.

## 3

**கௌ**ரியை அழைத்துக் கொண்டு நவராத்திரி கொலுவிற்குக் கிளம்பிய கீதா இரண்டு மூன்று வீடுகளுக்கு விஜயம் செய்து முடித்தாள். பூந்திடலில் உள்ள எல்லா வீடுகளுக்கும் கொலுவிற்குப் போய் வருவதென்றால் ஒரே நாளில் செய்து முடிக்கின்ற காரியமில்லை. ஆகவே ''கௌரி! போதும் இன்றைக்கு! இனி வீட்டுக்குப் போக வேண்டியது தான்'' என்றாள் கீதா.

''எனக்கும் மிகவும் களைப்பாக இருக்கிறது. போவோம். நாளைக்கு மிச்சத்தைப் பார்த்துக் கொள்ளலாம்'' என்று கௌரி ஆமோதிக்கவே, இரண்டு பெண்களும் வீட்டை நோக்கித் திரும்பி நடந்து வந்து கொண்டிருந்தார்கள். வழியில் பூந்திடலில் 'லேடீஸ் கிளப்' பின் பக்கம் வந்த கீதா மேலே நடக்காமல் நின்றாள், ''மன்னி! சித்த கிளப்பிற்குப் போய்விட்டு வரலாமே வருகிறாயா?'' என்று கெஞ்சினாள்.

''வேண்டாம் ஒரு நாள் போனதற்கே உன் அண்ணாவுக்குப் பிடிக்கவில்லை'' என்று கௌரி கூறியதைக் கேட்ட கீதாவிற்குக் கொஞ்சம் மனவருத்தமாக இருந்தது. ''அப்படியானால் மன்னி! நீ தனியா வீட்டுக்குப் போ! நான் இன்றைக்குக் கட்டாயம் கிளப்பிற்கு வருவதாக என் சிநேகிதிகளிடம் சொல்லியிருப்பதால் போக வேண்டும்'' என்று பிடிவாதமாகக் கீதா கூறினாள் அதைக் கேட்ட கௌரி, ''சரி! உன் இஷ்டம்! அம்மா உன்னைத் தனியாக விட்டு வந்ததைப் பற்றிக் கோபித்துக் கொண்டால் என்ன செய்கிறதென்று தான் யோசிக்கிறேன்'' என்று தயங்கினாள். ''தனியாக இதற்கு முன் நான் போய் வந்ததில்லையா? அம்மா ஒன்றும் சொல்ல மாட்டாள்'' என்று பதிலளித்த கீதா, திரும்பிக் கூட பார்க்காமல் வேகமாகக் கிளப்பை நோக்கி நடந்தாள்.

கிளப்பின் ஹாலுக்குள் நுழைந்த கீதாவிற்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. சிநேகிதி விமலாவைத் தவிர கிளப்பில் அன்று ஒரு பெண்கூட இல்லை.

''என்ன விமலா! நாம் இரண்டே பேர் தானா இன்றைக்குக் கிளப்புக்கு வருகிறவர்கள்? மற்றவர்கள் எங்கே?'' என்று வியப்புடன் கேட்ட கீதா நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டாள்.

''நவராத்திரி ஸீஸனல்லவா! இந்த அம்மாமிப் பட்டாளங்கள் முழுவதும் நவராத்திரி 'விஸிட்'டில் மூழ்கிக்



கிடக்கிறார்கள்; கிளப்பில் நடக்க வேண்டிய சர்ச்சைகள் இந்தப் பத்து நாட்களுக்கு மட்டும் கொலு வைத்திருக்கும் வீடுகளில் நடத்தப்படும். இவர்கள் கூட்டம் அதிகம் இருக்காது என்றுதான் இரண்டு வீட்டுக் கொலுவுக்குப் போய் விட்டு வழியில் அப்படியே இங்கு வந்தேன்!' என்றாள் விமலா.

''என்னவோ விமலா!'' ஒரு நாள் கிளப்புக்கு வரா விட்டால் எனக்கு அன்று பொழுது போனது போலவே இருக்காது. காப்பி சாப்பிடும் வழக்கம் எப்படி மனிதர்களை அடிமைகளாக்கிக் கொண்டு விட்டதோ அதுபோல் கிளப்பிற்குப் போகும் வழக்கம் என்னைச் சரியாகப் பிடித்துக் கொண்டு விட்டது'' என வெகுளியாகக் கீதா சொன்னாள்.

''கிளப்பு இல்லாத இடத்தில் நீ வாழ்க்கைப் பட்டாயானால் என்ன செய்வாய்?'' என்று விமலா பரிகாசமாகக் கேட்டாள். ''அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்!'' என்று கீதா பதிலளித்துவிட்டு மௌனமானாள்.

திடீரென விமலா தன் நாற்காலியைச் சிறிது நகர்த்தி கீதாவின் அருகில் போட்டுக் கொண்டு உட்கார்ந்தாள். மிகவும் மெல்லிய குரலில், ''ஆமாம், கீதா! நான் கேட்க வேண்டுமென்று இருந்தேன் உனக்கு இந்த வருஷம் வரன் ஏதாவது பார்த்துக் கொண்டிருக்கிறார்களா?'' என்று கேட்டாள்.

என்ன பதில் சொல்வதென்று தத்தளித்த கீதா. 'எனக்கொன்றும் தெரியாது'' என்று மென்று விழுங்கினாள்.

''நமக்குத் தெரியாமல் நம் வீட்டில் நமக்கு வரன் பார்ப்பார்களா? படித்த பெண் தன் கல்யாணத்தில்தானே அபிப்பிராயம் சொல்ல வேண்டாமா! அவளுக்குத் தெரியாமல் காரியங்கள் நடக்குமா! தெரியாது என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டால் நான் நம்பி விடுவேனா? என்னிடம் சொல்ல இஷ்டமில்லை என்று ஒரு வார்த்தையில் பளிச்சென்று சொல்லிவிடேன்!'' என்று குரோதமாகப் பேசினாள் விமலா.

சிநேகிதியின் அநாவசியமான மனத்தாங்கல் நிறைந்த வார்த்தைகள் கீதாவின் மனத்தைக் கஷ்டப்படுத்தின. ''என்ன விமலா! வீணாக நீ கோபித்துக் கொள்கிறாய்! எனக்குத் தெரிந்தவரை வரன் தேடுவதாகத் தோன்ற வில்லை. அவ்வளவுதானே!'' என்றாள்.

''விஷயங்களை மறைத்து வைப்பது உங்கள் வீட்டவர் களுக்கே ஒரு தனி வழக்கம். ஒரு புடவை வாங்கினால்கூட அதை எப்பொழுது வாங்கினது என்று எங்களுக்குத் தெரியக் கூடாது என்று உன் அம்மா மறைப்பார்! சரக்கு மலிந்தால் தானே கடைக்கு வருகிறது! கல்யாணம் நடந்தால் எங்களுக்கு எல்லாமே தெரியாமல் போய்விடப் போகிறதில்லை'' என்றாள் விமலா.

சுருக்கென்று மனத்தைப் புண்படுத்தும் வகையில் சினேகிதி பேசுவதைத் தடுக்கும் நோக்கத்துடன், ''விமலா ஏன் வீணாகப் படபடப்பாகப் பேசுகிறாய்? அது கிடக் கட்டும். உனக்கு வரன் ஏதாவது கிடைத்திருக்கிறதா?' என்று கீதா கேட்டாள்.

''நாங்கள் என்னம்மா, ஏழைகள் தானே? உங்கள் வீட் டைப் போல் செல்வாக்கு உடையவர்களா? என்னவோ பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்று மிக்க மனக் குறையுடன் கூறிய விமலா, ''ஏன் கீதா' நான் ஒன்று கேட்கிறேன்; நீ கோபித்துக் கொள்ளக் கூடாது'' என்று தொடர்ந்தாற்போல் ஆரம்பித்தாள்.

அவள் என்ன கேட்கப் போகிறாளோ என்று திகிலு டன் கீதா சினேகிதியின்முகத்தை ஆவலுடன் பார்த்தாள்.

''என் அண்ணா சிவராமன் இருக்கிறானே! அவனைக் கல்யாணம் செய்து கொள்வதில் உனக்கு ஆட்சேபணை ஒன்றும் இல்லையே? சினேகிதியான என்னிடம் உன் மனத்தை ஒளிக்காமல் சொல்லேன்! சிவராமனைப் பொறுத்தவரை உன்னை மணந்து கொள்வதை ஒரு பாக்கியம்என்று அவன் கருதுவான் என்று நினைக்கிறேன்



ஏனென்றால் ஓரளவு அவன் மனநிலை எனக்குத் தெரியும். நெருங்கிப் பழகிய நம்மிரு குடும்பங்களும் சம்பந்தம் செய்து கொண்டால் எவ்வளவோ நன்றாக இருக்கும்'' என்று கொஞ்சமும் சங்கோஜமின்றி வெளிப்படையாகக் கேட்டாள் விமலா.

கீதாவிற்கு மனக் குழப்பம் அதிகமாயிற்று. பதிலே சொல்லாமல் அவள் தன் புடவைக் கரையிலிருந்த சரிகைக் கோடுகளை ஆராய்ந்து கொண்டிருந்தாள்.

''என்ன! நான் கேட்கிறேனே! பதில் சொல்லா விட் டால் என்ன அர்த்தம்? மௌனமாயிருப்பதைப் பார்த் தால் சிவராமனை உனக்குப் பிடிக்கிறதென்று தானே நான் நினைக்க வேண்டியிருக்கிறது?'' என விமலா மேலே பேசியதைக் கேட்ட கீதா திடுக்கிட்டாள். ''அப்படி யொன்றுமில்லை. விமலா! என் கல்யாண விஷயத்தை நான் எங்கள் வீட்டுப் பெரியவர்கள் இஷ்டப்படி விட்டு விட்டேன். கல்யாணம் செய்துகொள்வதில் 'சுயம்வரம்' நடத்தும் எண்ணம் எனக்கில்லை!'' என்றாள் கீதா முடிவாக.

சிநேகிதியின் பதிலால் மிக்க அதிருப்தி அடைந்த விமலா, ''உம்! உன் மனம் எனக்குப் புரியவில்லை என்று நினைக்காதே! சிவராமனை உனக்குப் பிடிக்கவில்லை. அதை ஒரு வார்த்தையில் ஒத்துக்கொண்டு விடலாம். அவ்வளவு தூரம் மனம்விட்டு என்னிடம் பேச உனக்கு இஷ்டமில்லை. பரவாயில்லை. அதனால் என்ன? கல்யா ணம் என்பதில் ஒருவித நிர்ப்பந்தமும் இருக்கக் கூடாது பரஸ்பரம் அன்பு இல்லாத இரண்டு ஆத்மாக்களை மற்ற வர்கள் ஒன்றுபடுத்த முயற்சிப்பது மதியீனம்'' என்று கூறிவிட்டு, வீட்டுக்குப் போக எழுந்தாள்.

ரஸமற்ற சம்பாஷணையினால் மனக் கசப்படைந்த சிநேகிதியை உற்சாகப்படுத்தும் எண்ணத்துடன், ''விமலா! பங்களம் மாபியாத்துக் கொலுவிற்கு நீ போனாயோ?'' என்று கீதா கேட்டு வைத்தாள்.

''இல்லை, போகவில்லை மாமி குறித்த இரண்டு நாட்களில் ஒருநாள் கூட போகப் போவதில்லை.

இப்பொழுது போனால் ஒரே கூட்டமாக இருக்கும். வேறு ஏதாவது ஒரு நாள் போய் எட்டிப் பார்த்துவிட்டு வந்தால் போச்சு. என்ன பிரமாதமான கொலு மங்களம் மாமி வைத்திருக்கப் போகிறார்!'' என்று அலட்சியமாகச் சொன்னாள் விமலா.

''நான் கூட வரும் வெள்ளிக்கிழமை போய்விட்டு வரலாம் என்று தீர்மானித்திருக்கிறேன்'' என்றாள் கீதா.

''சரி, நீ போகும்போது என்னையும் கூட்டிக் கொண்டு போயேன். இரண்டு பேராகப் போய் அந்தக் கடமையை செய்து தொலைத்து விட்டு வருவோம்'' என்று விமலா சொல்லியதை ஆமோதித்தாள் கீதா.

அன்றிருந்த மனக்குழப்பத்தில் சரி என்று கீதா ஒத்துக் கொண்டாலும் வீட்டிற்கு வந்து ஏன் அப்படி ஒப்புக் கொண்டோம் என்று மனவருத்த மடைந்தாள். விமலா வீடு லேடி சுப்பராமன் தெருவுக்கு அடுத்த தெருவிலிருந்தது. அவள் வீட்டுக்குப் போய் அவளை அழைத்துக் கொண்டு அங்கிருந்து மங்களம் வீட்டுக்குப் போவதென்றால் சுற்று வழியாகும். அம்மாவுக்குத் தெரிந்தால் கோபித்துக் கொள்வாள் என்று தனக்குள்ளேயே கவலைப் பட்டாள் கீதா.

வெள்ளிக்கிழமை சாயங்காலம் கீதா மங்களம் வீட்டுக் கொலுவிற்குப் போகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு மாடியிலிருந்து கீழேவந்த பொழுது கூடத்தில் கௌரிக்குத் தலைவாரிப் பின்னிக் கொண்டிருந்தாள் செல்லம்மாள்.

''அம்மா, நான் மங்களம் மாமியாத்து கொலுவுக்குப் போய் விட்டு அப்படியே கிளப்பிற்குப் போய்விட்டு வருகிறேன்'' என்றாள் கீதா.

''கௌரியையும் கூட்டிண்டு போறதுதானே! என்று தாயார் கேட்டாள்...

''கௌரி வரலைன்னு சொல்லிட்டாள். நானும் விமலாவுமாகப் போகப் போகிறோம்'' என்று கீதா முடிப்பதற்குள் செல்லம்மாள், ''விமலா இங்கு வருவாளா?'' என்று குறுக்குக் கேள்வி கேட்டாள்.

''இல்லையம்மா நான் அவள் வீட்டுக்குப் போய் அவளைக் கூட்டிக் கொண்டு போவதாகச் சொல்லியிருக்கிறேன்'' என்று கீதா மென்று விழுங்கினாள்.

''அந்த விமலா இங்கே வந்து உன்னை அழைச்சிண்டு போகக் கூடாதோ! அவள் பெரிய ராணி. நீ போய் அவளுக்குக் காத்திருந்து அழைச்சிண்டு போகணும்'' என்று எரிச்சலுடன் தாயார் பேசியதும், ''என்னவோம்மா, நான் வரேன்னு ஒப்புக்கொண்டு விட்டேன். அதனாலே போய்தான் ஆகணும்'' என்று கீதா பதிலுக்கு எரிந்து விழுந்தாள்.

''அவள் உன்னாட்டமா யோசனை பண்ணாமல் ஏதாவது ஒப்புக் கொள்றாளா! என்ன இருந்தாலும் உன்னைவிட அவள் சாமர்த்தியக்காரிதான். நானும் பார்க்கிறேன். எங்கேயாவது நீங்க ரெண்டுபேரும் கிளம்பினா, அந்த ராணியை நீதான் போய்க்கூட்டிக் கொண்டு போகணும். ரொம்ப திரிசமன். எனக்கு உன் சிநேகிதியைப் பிடிச்சால்தானே?'' என்று கோபத்துடன் தாயார் பேசினாள்.

''உனக்குப் பிடிக்காட்டா விட்டுத் தள்ளும்மா? ஒன்றாக வளர்ந்து ஒன்றாகப் படித்த சிநேகிதியைச் சட்டென்று ஒரேயடியாக வெறுத்து ஒதுக்க எனக்குத் தெரியாது.'' என்று கோபத்துடன் பொழிந்தாள் கீதா.

''உங்க இரண்டு பேர் சிநேகிதத்தையும் எங்கிட்டத் தான் சொல்லணும். போ! ஒரு புடவை நீ கட்டிண்டா அவளுக்குப் பொறாமை; ஒரு நகை போட்டுண்டா பொறாமை. நம்ம வீட்டைப்பத்தி நினைச்சு ஏன் அவள் குடும்பமே ஆத்திரப்படணும்? நீ அங்கே போகிறது அண்ணாவுக்குத் தெரிஞ்சா என்னைத்தான் கோவிச்சுப் பான்'' என்று குறிப்பாகத் தாயார் சொல்வதன் கருத்

தைப் புரிந்து கொண்ட கீதா, ''சரிம்மா! நான் சின்னக் குழந்தையில்லை. எனக்குத் தெரியும்'' என்று வெடுக்கென்று பதிலளித்துவிட்டுக் கிளம்பினாள்.

விமலாவையும், அவள் குடும்பத்தவர்களையும் செல்லம்மாளும் துரைசாமியும் உள்ளூர வெறுத்தார்கள் என்ற ரகசியம் கீதாவிற்கு நன்கு தெரியும் ''இந்த அம்மா ஆனாலும் இவ்வளவு குறுகிய மனப்பான்மையுடன் இருக்கக்கூடாது பிறர் கொஞ்சம் அற்பமாக நடந்து கொண்டால் நாமும் அற்பமாக இருக்க வேண்டுமா? விமலாதான் சில சமயங்களில் சுயநலமாக இருந்தால் அதற்காக நாமும் சுயநலமாக இருக்கவேண்டுமா?'' என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு கீதா விமலாவின் வீட்டிற்குள் நுழைந்தாள்.

''வா, உட்கார் கீதா! இதோ ஒரு நிமிஷத்திலே வருகிறேன் டிரஸ் பண்ணிக்கொண்டு!'' என்று விமலா தன் சிநேகிதியை வரவேற்று உட்கார வைத்துவிட்டு அவசரமாக குழாயடிக்கு சோப்புப் பெட்டியுடன் ஓடினாள்.

''எப்பவும் இந்த விமலா இப்படித்தான். வருவேன் என்று தெரியுமே, சிறிது முன்னதாகவே தயாராக இருக்கக் கூடாதா!'' என்று மனதிற்குள் சிநேகிதியைச் சபித்துக் கொண்டு காத்திருந்தாள் கீதா.

சுற்றிலும் சிறுதோட்டத்தைக் கொண்ட மங்களத்தின் வீட்டை அடைந்த சிநேகிதிகள் இருவரும் முன்புற வேலிக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றார்கள். கைப் பையை அசைத்தவண்ணம் வீட்டு வாசற்படியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்த மங்களம் அவர்களைக் கண்டதும் ஆச்சரியத்துடன் ''ஏம்மா குழந்தைகளா! நேத்திக்கு வராமல் ஏமாத்திட்டேளே; நான் கிளப்பிற்குப் போகக் கிளம்பினேன். அதற்குள்வந்து விட்டேன். இல்லாவிட்டால் உங்களுக்கு ஒரு குங்குமம் எடுத்துக் கொடுக்கக் கூட எங்க சமையல்காரிக்குத் தெரிந்திருக்காது. பாவம்



குழந்தைகள்! ஏமாந்து போயிருப்பேள்!'' என்று புன்னகையுடன் அவர்களை வரவேற்றாள்.

மூவரும் வீட்டுக்குள்ளே சென்றதும், ''மாடியிலே நான் கொலு வச்சிருக்கேன். மேலே போங்கோ. இதோ ஒரே நிமிஷத்தில் வந்துடறேன்'' என்று கூறிய மங்களம் கைப் பையை அங்கிருந்த மேஜைமீது வைத்து விட்டு வெற்றிலைப் பாக்குத் தட்டை எடுத்துப் பக்கத்து அறைக்குள் சென்றாள். ''நல்லவேளை! இப்போது அம்மாமி வெளியில் போயிருந்தால் நாம் வந்தது வீணாகி இருக்கும்!'' என்று மெல்லிய குரலில் கூறிய கீதா மாடிப்படிகள் மீது வேகமாக முன்னால் ஏறினாள்.

''நான் ஒன்றும் ஏமாற்றமடைந்திருக்க மாட்டேன். என்னவோ வரவேண்டுமே என்ற கடமைக்காக வந்திருக்கிறேன் அவ்வளவுதான்'' என அலட்சியமாகப் பதிலளித்த விமலா பின்னால் சென்றாள்.

மாடி அறைக்குள் வேகமாக கீதா நுழைவதற்கும் அதே சமயத்தில் அங்கிருந்து வேகமாக ஒரு யௌவன புருஷன் வெளிப்படுவதற்கும், சரியாக இருந்தது சற்றுத் தப்பினால் ஒருவர் மீது ஒருவர் முட்டிக் கொள்ள இருந்த நிலைமையை இருவரும் சமாளித்துக் கொண்டு திகைப்புடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். தன் கூரிய பார்வையில் முகம் சிவந்து போன கீதாவைப் பார்த்து புன்னகையுடன், ''மன்னிக்க வேண்டும்'' என்று அவள் போவதற்கு வழி விடுபவன் போல் ஒருபுறமாக ஒதுங்கி நின்றான் அவன், சங்கோஜம் மிக்க அடைந்த அவள் அவனை ஏறெடுத்தும் பாராமல், ''பரவாயில்லை'' என்று கூறி விட்டு, தலையைக் குனிந்து கொண்டாள்.

பின்னாலே வந்த விமலா மாடிப்படியில் தனக்காகத் தயங்கி வழிவிட்டு நிற்கும் அந்த யௌவன புருஷனை ஒரு தடவை கடைக்கண்ணால் நன்றாகப் பார்த்து விட்டுப் பாராதவள் போல் மேலே சென்றாள். தனக்கேற்பட்ட

சங்கோஜத்தினின்றும் சரியாக விடுபடாதிருந்த கீதா
அங்கே வைத்திருந்த கொலு பொம்மைகளை ஆராய்ந்து
பார்த்துக் கொண்டிருப்பவள் போல் அபிநயித்தாள்.

''ஆமாம்! அந்த மனிதர் யார்' உனக்கு அவரைத்
தெரியுமா? என்னவோ அவர் உன்னிடம் பேசினார்போல்
கேட்டதே?'' என்று விமலா கேட்டாள். ''அவர் யாரோ?
எனக்கொன்றும் தெரியாது. நல்லவேளை, நான் வந்த
வேகத்தில் அவர்மேல் மோதிக் கொள்ள இருந்தேன்.
'மன்னிக்க வேண்டும் என்றார். அதுதான் அவர் பேசியது'
என்று கீதா முடிப்பதற்குள் வெற்றிலைத் தட்டுடன் வந்த
மங்களம், ''உட்காருங்கள், குழந்தைகளா! ஆளுக்கு ஒரு
பாட்டு பாடிவிட்டுப் போகலாம்'' என உபசரித்தாள்.

''ஐயோ மாமி! எங்களுக்கு ஒன்றும் பாடத் தெரி
யாது'' என ஏக காலத்தில் பெண்கள் இருவரும் கத்தி
னார்கள்.

''தெரிந்தவரை பாடுங்கள், போதும்'' என்று
மங்களம் அவர்களுடன் விவாதித்துக் கொண்டிருக்கையில்
"சித்தி'' என்ற குரல் கேட்டு மூவரும் திரும்பிப் பார்த்தார்
கள்.

''ஏண்டா நாகராஜா! என்ன வேணும்? மணிபர்ஸை
எடுத்துண்டு போகணுமா? வாயேன் உள்ளே! என்ன
சங்கோஜம். உனக்கு இந்தப் பெண்கள் எல்லாம் படிச்ச
பெண்கள்தான். உன்னை ஒன்றும் விக்கிரமசமாக நினைச்
சுக்க மாட்டா, நீ உள்ளே வந்து எது வேணுமோ எடுத்
துண்டு போ' என்று புன்முறுவலித்த மங்களம் பெண்கள்
பக்கம் திரும்பி,'' என் அக்காவின் பிள்ளை இவன் 'பிஸி
னஸ்' விஷயமாக வந்திருக்கான் வந்து ரெண்டு நாளாச்சு.
பாவம், இந்தக் கொலு சமயத்திலே நாலு பேர் வரு
வாரும் போவாருமா இருக்கிறது அவனுக்குக் கொஞ்சம்
கஷ்டமாயிருக்காப் போல இருக்கு'' என்று விவரித்தாள்.

''அதெல்லாம் எனக்கொன்றும் கஷ்டமில்லை'' என்று
கூறிய அவன் அறைக்குள் வந்தான், மேஜையின்



சிறு அறையைத் திறந்து ஒரு மணி பர்ஸை எடுத்துத் தன்
சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான். ''சித்தி,
வெளியில் போய்விட்டு வருகிறேன்'' என்று அவசர
மாகக் கிளம்பிய அவனிடம், ''ஏண்டாப்பா? நேத்தியாட்
டம் பண்ணிவிடமாட்டாயோன்னோ! வெளியிலே
சிநேகிதாவீட்டிலே சாப்பிட்டுட்டுடாதே! அவர் உனக்காக
காத்திண்டு இருப்பார்!'' என்று அன்புடன் மங்களம்
கூறினாள்.

''இல்லை! நிச்சயமாக சாப்பாட்டுக்கு வீட்டுக்கு வந்
திடுவேன்'' என்று பதிலளித்த அவன் பக்கம் தலை நிமிர்ந்
தாள் கீதா. தன்னையே அதே சமயம் அவனும் பார்த்துக்
கொண்டிருந்ததைக் கண்ட அவள் முகம் குப்பென்று
சிவந்தது.

''நாகராஜன் என் அக்காவின் இரண்டாவது பிள்ளை
ரொம்பக் கெட்டிக்காரன். இன்னும் கல்யாணம் ஆகலை''
என்று மங்களம் விளக்கினாள்.

''உங்களுக்குத் தைக்க தெரியுமா, மாமி!'' என ஆச்சரி
யத்துடன் கீதா மூலையிலிருந்த தையல் மிஷினைச் சுட்டிக்
காட்டிக் கேட்டாள்.

''ஏதோ தைப்பேன்! ஆனால் ஒன்றும் சரியாகவே
அமையறதில்லை வேண்டுமானால் நீங்கள் இரண்டு
பேரும் வந்து எது வேணுமானாலும் தைச்சுக் கொள்
ளுங்கோ, மிஷின் உபயோகிக்காமல் வீணா துருப்பிடிச்
சுத்தான் போறது' என்றாள் மங்களம்.

''ஆகட்டும் மாமி!'' என்று கூறிய இரண்டு பெண்
களும் வீட்டுக்குப் போக விடை பெற்றுக் கொண்டு
கிளம்பினார்கள்.

தோட்டத்து முன்பக்கத்து வேலியருகில் வந்து
சிநேகிதிகள் இருவரும் சேர்ந்தாற்போல் ஒரே சமயத்தில்
பேச ஆரம்பித்தார்கள்.

''அப்பாடி! என் கண்கள் இன்று பிழைத்தன! எங்கே
பார், யாரைப்பார்! தாத்தாவிலிருந்து நம் வீட்டு அம்பிப்

பல்வரை, பொருந்துமோ பொருந்தாதோ, எல்லோருக்கும் ஒரு 'புஷ்கோட்' பூந்திடலில் முதல் முதலாக புஷ்-கோட்டில்லாமல் கதர் ஷர்ட்டில் பார்க்கும் நாகரிக புருஷன் இவன் ஒருவன்தான்!'' என்று விமலா கூறி விட்டுச் சிரித்தாள்.

''நீ ரொம்பக் கெட்டிக்காரிதான், ஒரு பார்வையிலே அந்த மனிதரைப் படம் பிடித்துக்கொண்டு வந்து விட்டாயே'' என்று கீதா வியந்தாள்.

''உன்னிடம் பேசிய பொழுது நீ அவனைக் கவனிக்கவில்லையென்றா கூறுகிறாய்!'' என்ற விமலாவின் குரலில் கோபம் தொனித்தது.

''இல்லை! முகத்தைப் பார்க்கவே இல்லை'' என்று கீதா கூறியதைக் கேட்ட விமலா, ''வேடிக்கைதான். முகத்தைக்கூடப் பார்க்காமல் பதில் பேசியிருக்கிறாயே! நீயல்லவோ சாமர்த்தியக்காரி.'' என்று குரோதமாகச் சொன்னாள்.

நெஞ்கிதியின் பதில் கீதாவின் மனத்தைச் சுருக்கென்று தைத்தது. மேலே ஏதாவது பேசினால் வார்த்தைகள் மீறிச் சண்டையாகி விடும்போல் தோன்றவே, ''அவன் கிடக்கிறான். அவனுக்காக நமக்குள் ஏன் வீண் வாதம்?'' என்று தர்க்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாள்

அன்று இரவு போஜனத்திற்குப் பிறகு கூடத்தில் எல்லோரும் வழக்கம்போல் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள் ''மங்களத்தாத்துக் கொலு எப்படியிருந்தது, கீதா?'' என்று கௌரி கேட்டாள்.

''சுமாராக இருந்தது!'' என்று அசட்டையாகப் பெண் பதிலளித்ததைக் கேட்ட செல்லம்மாள். ''இந்த வருஷம் என்னமோ தஞ்சாவூர் பொம்மை ஸெட் ஒண்ணு மங்களம் வாங்கிக் கொலு வச்சிருக்கா, ரொம்பப் பிரமாதமா இருக்குன்னு சொல்லிண்டாளே?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டாள்.



மங்களம் மாமி வீட்டுக் கொலுவில் என்ன பொம்மைகள் வைக்கப்பட்டிருந்தன என்று கீதா யோசித்துப் பார்த்தாள். யானை, புலி, நாய், கோழிகள் வைத்திருந்த முதற்படிதான் அவள் நினைவுக்கு வந்தது.

''ஏதோ புதுசா சில பொம்மைகள் வைத்திருந்தது அம்மா!'' என்று அலட்சியமாகப் பதிலளித்தாள் பெண்.

''தஞ்சாவூர் பொம்மைகள் ரொம்ப அழகாயிருக்குமே! எத்தனை பெரிசு? இரண்டடி உயரமாவது இருக்குமா?'' என்று தாயார் மேலே விடாது கேட்டாள்.

''நான் போய் 'இன்ச் டேப்' வைத்து நாளைக்கு அளந்து பார்த்துட்டு வர்றேன். போம்மா, நீ ஒண்ணு. யார் இதையெல்லாம கூர்ந்து பார்க்க முடியும்? கூப்பிட்டதற்காக மரியாதைக்குக் கொலுவுக்குப் போய்விட்டு வந்தேன், அவ்வளவுதான்'' என்று எரிந்து விழுந்தாள் கீதா.

அதிருப்தியடைந்த செல்லம்மாள், ''நீயே எப்பவும் இப்படித்தான். ஒரு இடத்துக்குப் போனால் உனக்கு லோகஸ்மரணையே இல்லாமல் போயிடும். உடனுடத்த விமலாவை இப்ப கேள். என்ன எங்கே எப்படி இருந்ததுன்னு சரியா சொல்லுவா. ஒரே பார்வையிலே ஒருத்தி கழுத்திலே என்ன நகை இடுப்பிலே என்ன புடவை கட்டிண்டிருந்தான்னு அவள் கண்டுபிடிச்சிடுவா!'' என்று சப்புக் கொட்டினாள்.

''விமலா மட்டும் என்ன? அவளுடைய அண்ணாவைச் சொல்! ஒரு பெண் தலையிலே எத்தனை சவுரி வைத்துக் கொண்டிருக்கிறாள் என்று பார்க்காமலே சொல்லி விடுவான் அவன். அவ்வளவு கெட்டிக்காரன்!'' என்று துரைசாமி கூறிச் சிரித்தான். கூடவே கௌரியும் செல்லம்மாளும் சேர்ந்து சிரித்தார்கள்.

அண்ணாவின் பரிகாச மொழிகளைக் கேட்ட கீதா கோபத்துடன் ''உங்களுக்கு தினம் அவர்களை பற்றி

ஏதாவது சொல்லா விட்டால் தூக்கம் வராது'' என்று எழுந்திருந்து மாடிக்குப் போகப் புறப்பட்டாள்.

''சிநேகிதியைப் பத்திச் சொன்னால் உனக்கு எத்தனை கோபம் வருகிறது? ஆகா? சினேகிதம் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்?'' என்று விடாமல் பரிகாசமாகப் பேசினான் துரைசாமி.

''ஆமாம்! விமலா என் சினேகிதி! அவளைப் பற்றி நீங்கள் பேசுவதை நான் விரும்பவில்லை!'' என்று ஆத்திரமாகச் சொன்னாள் தங்கை.

''சினேகிதிகளாம்! பெண்களுடைய சினேகிதம் எவ்வளவு ஆழ்ந்தது என்பது யாருக்குத் தெரியாது! உயிருக்குயிரான இரண்டு சினேகிதிகளின் கவனமும் ஒரே புருஷன் மேல் விழட்டும்! அப்பொழுது தெரியும் உண்மை சிநேகிதத்தின் ஆழம். ஜன்ம விரோதிகளாகி விடமாட்டார்களா அவ்விரு சினேகிதிகளும்!'' என்று துரைசாமி ஏளனமாகச் சொன்ன வார்த்தைகள் மாடியறைக்குள் நுழைந்த சீதாவின் காதுக்கும் எட்டின.

''முகத்தைக் கூடப் பார்க்காமல் பதில் பேசியிருக்கிறாயே, நீயல்லவோ சாமர்த்தியக்காரி!'' என்று விமலா சாயங்காலம் தன்னிடம் கூறிய வார்த்தைகள் சீதாவின் ஞாபகத்திற்கு வந்தன. விமலா அதைச் சொல்லுகையில் எத்தனை ஆத்திரப்பட்டாள்! முன்பின் தெரியாத அந்த வாலிபன் தன்னிடம் பேசியதைப் பற்றி அவள் ஏன் ஆத்திரப்பட வேண்டும். அந்த நாகராஜன் கடைசியில் வெளியில் போகக் கிளம்பிய பொழுது என்னை ஏன் அப்படி விழுங்கி விடுபவன் போல் பார்த்தான்! விமலா ஒருசமயம் அவன் பார்த்ததைக் கவனித்து விட்டாளோ?... சே! சே! இதெல்லாம் என்ன யோசனை! அந்த நாகராஜன் யார்? நமக்கென்ன அவனைப் பற்றி சிந்தனை? அம்மாதிரி பலவாறு எண்ணி முடிவில் தன்னையே கடிந்து கொண்ட அவள் கண்களை இறுக மூடிக் கொண்டு தூங்க முயற்சித்தாள்.



# 4

**தா**னே உதவியின்றி எல்லா வேலைகளையும் செய்ய வேண்டியிருந்ததனால் அலமு அன்று மிகவும் களைத்துப் போயிருந்தாள். போதாதற்குச் சின்ன பையன் கோபுவும் கடைக்குட்டி ஜெயமும் ஒரு பென்சிலை முன்னிட்டுப் போட்ட சண்டையைத் தீர்த்து வைப்பதற்குள் அவளுக்குத் தலைவலியே வந்துவிட்டது. தேகச் சோர்வும், மனக் கஷ்டமும் சேர்ந்து கொள்ளவே அலமு அந்த நிமிஷத்தில் யார் மேலேயும் எரிந்து விழத்தயாராக இருந்தாள்.

மங்களம் வீட்டுக்கொலு. லேடீஸ்கிளப் சர்ச்சைகள் முதலிய பல விவகாரங்களையும் கவனித்துவிட்டு அன்று விமலா வீடு திரும்புவதற்குள் நன்றாக இருட்டி விட்டது.

விமலாவின் செருப்புக்காலடி ஓசையைக் கேட்டதும் அலமு, ''ஏண்டி விமலா, ஒரு நாளைப் போல் இப்படி நேரங்கழிச்சு வரதுன்னா நாளையிலேயிருந்து நீ கிளப்புக்குப் போக வேண்டாம். கல்யாணமாகாத பொண்ணு நீ பாட்டிலே வரதும் போறதும் நன்றாகவேயில்லை, ஆமாம், நான் சொல்லிட்டேன்'' என்று கோபத்துடன் உச்சஸ்தாயியில் அதட்டினாள்.

விமலாவுக்குத் தாயாரிடம் அப்படி ஒன்றும் பிரமாதமான கிலி இல்லை. தாயார் இருந்த மன நிலையில் அப்பொழுது எதிர்த்துப் பேசினால் வீண் சண்டைதான் மிச்சமாகும் என்று அனுபவத்தில் அறிந்திருந்தாள் அவள் ஆகவே, ,'சரி அம்மா! இனிமேலே நான் சீக்கிரமே திரும்பி வந்துடறேன் இன்னிக்கு மட்டும் தவறிப் போய் நாழி ஆச்சு?'' என்று சமாதானம் சொல்லிவிட்டு உட்புறம் நழுவி விட்டாள்.

மறுநாள் காலை விமலாவுக்கு என்ன வேலை செய்வதென்று விளங்கவில்லை. ஊசி நூல் போட்டிருந்த சிறு பெட்டியைத் திறந்து சாமான்களை ஆராய்ந்ததில் ஒரு மாதத்திற்கு முன் துவக்கி விட்டிருந்த கம்பளி ஸ்வெட்டர்

கண்களில் தென்பட்டது. அதை எடுத்து வைத்துக் கொண்டு சமையலறைக்கு முன் உள்ள வராந்தாவில் உட்கார்ந்து கொண்டு பின்னால் வேலையை ஆரம்பித்தாள்.

வராந்தாவின் எதிர்ப் பக்கச் சுவரில் மாட்டிருந்த பெரிய கண்ணாடி முன்பு தலைவாரிக் கொண்டிருந்தான் சிவராமன். கண்ணாடி வழியாகத்தங்கை செய்யும் வேலையைக் கவனித்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது.

''விமலா, ஏதாவது ஒருகாரியத்தை முழுவதும் செய்து முடித்திருக்கிறாளா?'' என்று தனக்குள்ளே வியந்து கொண்ட சிவராமன், ''விமலா? நீ பின்னுகிற வேகத்தில் அந்த ஸ்வெட்டர் என்னுடைய பேரன் காலத்திலாவது முடியுமா?'' என்று கேட்டு விட்டுச் சிரித்தான்.

''போ அண்ணா! இதே வேலையாக இருந்தா எத்தனை நாழியாகும் ஸ்வெட்டர் முடிய? இதைக் கையில் எடுக்கும் போதெல்லாம் வேறு வேலை குறுக்கிட்டு விடுவதனால் தான் தாமதம்!'' என்று தாயாரை அருமையாகக் கூப்பிட்டாள்.

''இப்ப அம்மாவுக்கு என்ன வச்சிருக்கே? ஏன் கூப்பிடறே? எனக்குக் கைவேலை கிடக்கு!'' என உள்ளிருந்தபடியே இரைந்தாள் அவயம்.

''நேத்திக்குக் கீதா கட்டிக் கொண்டு வந்தாளே அம்மா! அந்தப் புடவையைப் போல கிளப்பிலே ஹேமா கூட ஒன்று கட்டிக் கொண்டு இருந்தாம்மா. நம்ம நாராயணன் கடையிலே புதுசா அந்த தினுசு வந்திருக்காம்'' என்று கூறிவிட்டு ஆவலுடன் சமையலறைப்பக்கம் பார்த்தாள் விமலா.

''கீதாவுக்கும் ஹேமாவுக்கும் என்ன கொள்ளை? நினைத்த புடவையை வாங்கிக் கட்டிக் கொள்வார்கள், மகராஜிகள்! அவளோட நீ போட்டி போட முடியுமோடி!'' என்று அதட்டிய தாயார் இன்னும் ஏதோ



தன்னைப் பற்றி மெதுவாக முணுமுணுப்பதைக் கேட்ட விமலாவின் முகம் வாட்டமடைந்து, ''ஒன்று நன்றாயிருக்கென்று வாயால் கூடச் சொல்லக் கூடாதா இந்த வீட்டில்!'' என்று மெதுவாகச் சொன்ன அவள், கையிலிருந்த கம்பளிச் சட்டையை மனக் கசப்புடன் தரைமீது எறிந்தாள்.

''ஆமாம்; நேற்று கீதா இங்கே வந்தாளா என்ன?' என்று ஆவலுடன் கேட்ட சிவராமன் சட்டென்று தங்கையின் பக்கம் திரும்பினான். கீதா என்ற பெயரைக் கேட்டதும் அவன் முகத்தில் ஏற்பட்ட பிரகாசத்தைப்பாராதவள் போல் சகோதரி இடத்தைவிட்டு எழுந்திருந்தாள். ''ஆமாம், வந்திருந்தாள். அவளைக் கண்டாலே எனக்கு வர வரத் துளிக்கூடப் பிடிக்கவில்லை. ரொம்பக் கர்வியாகி விட்டாள்!' என்று சிறிது கோபத்துடன் கூறினாள்.

''ஏன் திடீரென்று உன் சிநேகிதி மேலே இவ்வளவு வெறுப்பு?'' என்று ஹாஸ்யமாகக் கேட்ட சிவராமன் தங்கையின் பதிலுக்காக ஆவலுடன் அவளைப் பார்த்தான்.

''வெறுப்பு ஒண்ணுமில்லை அண்ணா! அவளைக் கண்டால் பிடிக்கவில்லை. அவ்வளவுதான்!' என்று மழுப்பி விட்டு, அவ்விடத்தை விட்டுப் போகத் திரும்பினாள். விமலா.

''நேத்திக்கு இவா ரெண்டு பேரும் சேர்ந்து மங்களத்தாத்துக் கொலுவுக்குப் போனா பேச்சு வாக்கிலே ஏதாவது மனஸ்தாபம் போலிருக்கு ரெண்டு பேருக்கும். இன்னிக்குச் சிநேகிதியைப் பிடிக்காது. நாளைக்குப் பிடிக்கும் இவா சமாசாரந்தான் தெரிஞ்சு கிடக்கே! அவளோட என்ன விவாதம்? இலை போட்டிருக்கேன்? உன் ஆபிசுக்கு நாழியாயிடப் போறது'' என்று பிள்ளையை எச்சரித்துக் கொண்டே தாயார் சமையலறையிலிருந்து வெளியில் வந்தாள்.

''கீதாவுக்கும் உனக்கும் 'டு' வாக்கும்!'' என்று கேட்டு விட்டுக் கேலியாகச் சிவராமன் சிரித்தான்.

''உன் விஷயமாக அவள் என்னை அவமதித்துப் பேசினாள். அதிலிருந்து எனக்கு அவளைப் பிடிக்கவில்லை'' என்று பட்டென்று பதிலளித்தாள் தங்கை.

''என் விஷயமாகவா?'' என்று வியப்புத் தாங்காத சிவராமன் உரத்த குரலில் கேட்டான்.

''ஆமாம். என் அண்ணா சிவராமனைக் கலியாணம் செய்து கொள்வதைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன? என்று நான் அவளைச் சில நாட்களுக்கு முன்பு கேட்டேன் தனக்குப்பிடிக்கவில்லை என்று ஒருவார்த்தையில் சொல்லி விட்டுப் போகாமல் என் மனதைப்புண் பண்ணும்படி பேசி விட்டாள்'' என்று தங்கை கூறினாள்.

அதைக் கேட்ட சிவராமன் கீழ் உதட்டைப் பற்களினால் ஒரு தடவை கடித்துக் கொண்டான்.

''ஏண்டி விமலா! நீதான் ஆகட்டும் அப்படிப் பச்சையா ஒரு பெண்ணைப்போய் 'எங்கண்ணாவைக் கல்யாணம் பண்ணிக்கோ'ன்னு சொல்லலாமோ? இதெல்லாம் பெரியவாள் செய்கிற காரியமில்லையா?'' என்று தாயார் முடிப்பதற்குள். 'போதும், அம்மா, நீங்கள் பெரியவர்களா? எத்தனையோ தடவை ஜாடையாக செல்லம் மாமியைக் கேட்டதற்கு, என்ன பதில் கிடைத்தது? வழ வழா கொழா என்று எழுப்பி விட்டார் செல்லம் மாமி. துணிந்துதான் நான் கீதாவைக் கேட்டேன். கீதா பச்சைக் குழந்தையா என்ன? காதல் கீதல் என்று கிளப்பில் ஆயிரம் சர்ச்சைகள் செய்கிறாளே! அவளைக் கேட்டத்தில் குற்றமென்ன? இந்தக்காலத்துப்பெண்கள் விஷயம்உனக்கு ஒன்றும் தெரியாது'' என்று இரைந்து பேசினாள் விமலா.

''நான் ஒன்றும் ஒரு மாலையை, வைத்துக்கொண்டு கீதாவுக்காகக் காத்திருக்கவில்லை. ஏன் வீண் சண்டை?'' என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டுச் சிவராமன் உள்ளே சென்றான்.



அது சமயம் மாடியிலிருந்து சிங்க கர்ஜனை போன்ற ஓர் துவனி கேட்டது. ''வெந்நீர் ரெடியா இருக்கா? கீழே வரலாமா குளிக்க?'' என்று கர்ஜித்தது அந்தப் புருஷக் குரல்.

''உங்கப்பாவுக்கு வெந்நீர் எடுத்து வை, போ! மறந்தே போயிட்டேன். அவருக்கு வெளியிலே போகணுமே?'' என்று விமலாவைப் பார்த்து அவயம் மெல்லிய குரலில் ஜாடை செய்தாள்.

தரையில் கிடந்த கம்பளிச் சட்டையை எடுத்து மேஜை மீது எறிந்தாள். விமலா, ''வரலாம், அப்பா!'' என்று தகப்பனாருக்கு ஒரு குரல் கொடுத்து விட்டுக் குளிக்கும் அறைக்கு ஓடினாள். அப்பா வருவதற்குள் ஆயிரம் பேருக்குக் குளிக்க வெந்நீர் எடுத்து வைத்துவிடலாம் என்ற தைரியம் அவளுக்கு!

வக்கீல் வேதராமய்யர் வீட்டை விட்டுக் கிளம்பும் வரை அந்த வீட்டில் நிசப்தம் நிலவியிருக்கும். அவருடைய சிடு மூஞ்சியைக் கண்டுதானோ என்னவோ சதா சண்டையிட்டு ரகளை செய்யும் கோபுவும் ஜெயாவும்கூட சிறிது நேரம் சமர்த்தாக இருப்பார்கள்.

ஆடு திருடிய கள்ளனைப் போல அப்பாவின் முன் விழித்துக் கொண்டு இருக்க சிவராமனுக்கு ஒரு நாளும் பிடிக்காது அப்பா கீழே வந்தால் அவன் மாடிக்குப் போய் விடுவான். அப்பா மாடியிலிருந்தால் அவன் கீழே வந்து விடுவான், இருவரும் கீழே இருக்க நேரிட்டால் சட்டென்று தன் ஆபீசுக்குக் கிளம்பி விடுவான். குளிக்கும் அறையிலிருந்து தகப்பனார் தொண்டையைக் கனைக்கும் சப்தம் கேட்டதும் அவசரமாகக் காலில் பாதரக்ஷைகளைத் திணித்துக் கொண்டு ஆபீசுக்குப் புறப்பட்டான் சிவராமன்.

சிறிது நேரம் நிசப்தம் நிலவிய அந்த வீட்டிலிருந்து வேதராமய்யரும் அடுத்தபடியாக ஆபீஸிற்குப் புறப்

பட்டுப் போனார். அவர் வாயில்படி தாண்டியதும் ''அப்பாடா! இந்த பிராமணன் ஒரு வழியா சிறிது நேரம் வெளியில் போய் இருக்க மாட்டாரா?'' என்று எதிர்பார்ப்பவள் போல் மூச்சைப் பிடித்துக் கொண்டிருந்த அலயம் தாராளமாக சுவாசிக்க ஆரம்பித்தாள்.

வீட்டிலே ஒரே ஒரு ஆத்மாவிற்கு மட்டும் வேதராமய்யரிடம் பயம் கிடையாது என்றால், அதுதான் விமலா. அப்பாவின் முன் அவள் சினிமாப் பாட்டுக்களை முணுமுணுத்துக் கொண்டு இங்குமங்கும் போய் வருவாள். ஏதாவது அப்பா கோபமாகச் சொன்னால் சில சமயம் எதிர்த்துக்கூட பேசி விடுவாள். சொல்லப் போனால் அவள் அப்பாவின் செல்லப் பெண். சலுகைகள் அதிகம் அவளுக்கு உண்டு, இல்லாவிடில் பிள்ளைக்குச் சமதையாக வேதராமய்யர் பெண்ணையும் காலேஜ் படிப்புப் படிக்க அனுமதித்திருப்பாரா?

குழந்தைகள் இருவரும் பள்ளிக்கூடம் சென்றுவிட்டனர். புருஷனும் பிள்ளையும் ஆபீஸிற்குப் போய்விட்டார்கள். காலையிலிருந்து விடாது செய்த வேலைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்ததுபோல் பத்து மணிக்கு மேல் அலயத்திற்கு ஓய்வு ஏற்பட்டது. சிரமப் பரிகாரம் செய்து கொள்ளும் நிமித்தம் வராந்தாவில் வந்து உட்கார்ந்தாள்.

''அலயம் இருக்காளா!'' என்ற குரலைக் கேட்டுத் தாயும் மகளும் ஒரு கணம் திடுக்கிட்டனர். ''அம்மா, 'இன்பர்மேஷன் பீரோ' வரதம்மா!'' என்று காதைக் கடிந்தான் விமலா.

''பேசாம இரு! பாட்டி காதில் படப் போகிறது'' என்று தாயார் ஜாடை செய்துவிட்டு, ''வாங்கோ பாட்டி'' என்று சுப்பிப் பாட்டியை வரவேற்றாள்.

'ஒன்னுமில்லை, உனக்கு ஒரு விஷயம் சொல்லிவிட்டுப் போகணும்னுதான் ஓடி வந்தேன்'' என்று ஆரம்பித்த பாட்டி எதிரே வந்து உட்கார்ந்து கொணடாள்.



''நேத்திக்கு இப்படிப் போயிண்டு இருந்தேன் இந்த மங்களம் இருக்காளே இவள் என்னைக் கண்டு 'பாட்டி உள்ளே வந்துட்டுப் போங்கோ'ன்னு கூப்பிட்டாள். போனேன் அவள் சமையல்காரிக்கு வடுமாங்கா ஊறுகா போடத் தெரியாதாம். மாவடுவை வைச்சிண்டு முழிச்சிண்டு இருந்தா. அதை நான் ஊறுகாய் போட்டுக் கொடுத்துட்டு வந்தேன்!'' என்றாள் சுப்பிப் பாட்டி.

''வடுமாங்காயா? இப்பக் கிடைக்கிறதா என்ன?'' ஆச்சர்யப்பட்டுக் கேட்டாள் அலயம்.

''இல்லே! அதுதான் சொல்ல வரேன். அவ தங்கை பிள்ளை ஊரிலிருந்து வந்திருக்கானாம் அவா வீட்டுத் தோட்டத்திலே காச்சுதாம். அந்தப் பிள்ளையாண்டானும் இருந்தான். பார்த்தேன்! பையன் ராஜாவாட்டம் இருக்கான். சொத்து ஏகப்பட்டதாம். ஒரே பிள்ளையாம். அம்மா அப்பா கிடையாதாம். அக்கா மட்டும் பாவம் சிறுசிலே விதவையாய்ப் போயிட்டா. அவள் ஒருத்திதான் வீட்டோட இருக்காளாம். பையனுக்குக் கல்யாணம் ஆகல்லை. இதெல்லாம் மங்களம் என்கிட்டே சொன்னதும் எனக்கு உன்னைப் பத்திதான் ஞாபகம் வந்தது'' என்று முடித்தாள் பாட்டி.

பாட்டியின் வர்ணனை முதல் நாள் சாயங்காலம் தான் பார்த்த வாலிபன் முகத்தை விமலாவின் கவனத்திற்கு மறுபடியும் கொண்டு வந்தது.

''அப்படியா!'' என்று தாயார் அவனைப் பற்றிய விவரங்களைச் சுப்பிப்பாட்டியிடம் கேட்டுக் கொண்டிருக்கையில், தான் ஒன்றும் கவனிக்காதவள் போல் விமலா அவ்விடத்தை விட்டகன்றாள்.

விமலா குளித்து வேறு உடை உடுத்திக் கொண்டு திரும்ப அங்கு வந்தபொழுது பாட்டி வீட்டிற்குப் போவதற்காக எழுந்தாள்.

"பிராப்தப்படி நடக்கும். கவலைப்படாதே நான் மங்களத்து கிட்ட எதற்கும் ஒரு வார்த்தை சொல்லி வைக்கிறேன்" என்று கூறிவிட்டு, "ஏண்டி, அவயம், கொஞ்சம் காப்பிப் பொடி இருக்குமோடி! இருந்தா ஒரு சிமிழ் கடனாகக் கொடு. என் பேரன் டவுனிலிருந்து வந்ததும் திரும்பக் கொடுத்துடறேன்!" என்று கேட்டாள் கப்பிப் பாட்டி.

இவ்வளவு நேரம் பல விஷயங்களைப் பாட்டி மூலம் தெரிந்து கொண்டு அகமகிழ்ந்து போயிருந்த அவயத்தைக் காப்பிப் பொடி என்ற வார்த்தை ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. கறுப்பு மார்க்கெட்டிலும், வெள்ளை மார்க்கெட்டிலும் சிவராமன் தேடிக் கஷ்டப்பட்டு வீட்டுக்கு வாங்கிக் கொண்டு வரும் காப்பிப் பொடியைப் பாட்டிக்குக் கடன் கொடுக்க அவள் சில நிமிஷங்கள் யோசித்தாள். "இருக்கோ இல்லையோ பார்த்துச் சொல்கிறேன், இருங்கோ" என்று உள்ளே சென்றாள் முடிவில்.

பாட்டி அவ்விடத்தை விட்டுச் சென்றதும், "ஏன் அம்மா அதுக்குக் காப்பிப் பொடி கொடுத்தே? திருப்பியா தரப் போறது அது?" என்று விமலா கேட்டாள்.

"கொடுக்காட்டா போகட்டும். வயசான கிழவி. வாய்விட்டுக் கேட்டாள் கொடுத்தேன். அது கிடக்கட்டும். நேத்து நீங்க மங்களாத்துக் கொலுவுக்குப் போனேளே..." என்று தாயார் கேட்பதற்குள், "ஆமாம், பாட்டி சொன்னது நிஜந்தான் மங்களம் மாமியின் அக்கா பிள்ளையாம், ஒருத்தர் வந்திருக்கிறார்" என்றாள் விமலா.

"நீ கூடப் பாத்தியா?" என்று தாயார் ஆவலுடன் கேட்டாள்.

"ஆமாம் நாங்கள் அவரைப் பார்த்தோம். பார்க்க அழகாயிருக்கிறாரே என்று மாய்ந்து போனாள் கீதா" என்று ஒரு போடு போட்டாள் விமலா.

# 5

அன்று காலை கீதா படுக்கையை விட்டு எழுந்த போது மிகவும் நேரமாகி விட்டது. படுக்கையைச் சுருட்டி விட்டு, கோபித்துக் கொள்வாளே எனத் தனக்குள்யே கவலையடைந்த கீதா சட்டென மாடியி லின்று கீழே இறங்கி வந்தாள். அவசரமாகப் பல்லைத் தேய்த்து முகத்தைக் கழுவிக் கொண்டு சமையறைக்குள் நுழைந்தாள் நல்ல வேளை, அங்கு கௌரி மட்டும் தான் இருந்தாள். அவள்கூட வேலை மும்முரத்தில் கீதா அவ்வளவு நேரங்கழித்து எழுந்து வந்திருக்கிறாள் என்பதை கவனிக்கவேயில்லை. சமையல் வேலைக் கற்றுக் கொள்வதில் சிரத்தையாக ஈடுபட்டிருக்கும் மன்னியுடன் பேச்சுக் கொடுக்காமல் கீதா தனக்காக வைத்திருந்த காப்பியை அது ஆறிப்போனதையும் கவனிக்காது அவசரமாகக் குடித்துவிட்டு வெளியேறினாள்.

காலையில் அவள் செய்யவேண்டிய வேலைகள் ஒன்றும் கிடையாது இருந்தாலும் கொஞ்சம் அதிக நாழி பெண் தூங்கி விட்டால் செல்லம்மாள் பிரமாதமாகக் கோபித்துக் கொள்வாள். "அம்மா எங்கே, காணோம்? குழாயில் ஜலம் பிடிக்க பின்பக்கம் சென்றிருக்கிறாள் போலிருக்கிறது" என்று ஊகித்த கீதா, தாயாரின் கண்களுக்குத் தென் படாமல் வாயில் பக்கம் போனாள்.

அவர்கள் வீட்டு வாயிலுக்கும் அதைச் சுற்றியுள்ள வேலிக்கும் இடையே பத்தடி தூரம் இருந்த பூமியில் கீதா பலவித செடிகளைப் பயிராக்கி வைத்திருந்தாள். அவற்றைத் தினம் காலை ஒரு தடவை சுற்றிப் பார்வையிடா விட்டால் அவளுக்குப் பொழுது விடிந்ததுபோலவே யிருக்காது.

தான் புதிதாகக் கொண்டு வந்து வைத்த கனகாம்பரம் செடிகள் தளிர்விட்டுத் தழைத்து வளர்ந்திருப்பதைக் கண்டு குதூகலத்துடன் அவற்றைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். செடிகளின் அடியில் அவற்றின்

35849

வளர்ச்சியைத் தடை செய்து கொண்டு காடுபோல் புல்
வளர்ந்திருந்ததைக் கண்ட கீதா அங்கே உட்கார்ந்து
விட்டாள்.

களை எடுத்து மண்ணை நன்கு கிளறி விட்டு எருப்
போட்டுப் பின்பு திருப்தியடைந்த அவள் பின்கட்டிற்கு
ஓடி ஒரு குடம் ஜலம் எடுத்து வந்தாள் இரண்டு மாதத்
தில் அந்தச் செடிகள் அவளுக்குத் தரபோகும் காணிக்கை
யான புஷ்பங்களின் நானாவித வர்ணத்தைக் கற்பனை
செய்து கொண்டே அவற்றிற்கு மிக்க சிரத்தையுடன் நீர்
வார்த்துக் கொண்டிருந்தவள் எதிர்வீட்டு சிமெண்ட்
கம்பெனி ராமாமிருதத்தின் வீட்டு நாய் குரைப்பதைக்
கேட்டுத் தலை நிமிர்ந்து அந்தப் பக்கம் பார்த்தாள்.
என்ன ஆச்சாயம்! அவள் எதிர்பார்க்கவேயில்லை! மங்
களத்தின் சகோதரி பிள்ளையென்று ஊருக்குப் புதிதாக
வந்திருந்த அந்த வாலிபன் குரைக்கும் நாயைத் தாண்டிக்
கொண்டு உள்ளே செல்லத்தயங்கியவனாக ராமாமிருதத்
தின் வீட்டு 'கேட்'டருகில் நின்று கொண்டிருந்தான்.
அகஸ்மாத்தாக வேறு புறம் திரும்பிய அவன், கையில் நீர்க்
குடத்துடன் காட்சியளித்த சகுந்தலையைக் கண்டு மயங்கி
நின்ற துஷ்யந்தனைப் போல் சில நிமிஷங்கள் குடத்
தோடு நின்றிருந்த கீதாவையே பார்த்துக் கொண்டிருந்
தான்.

தன்னை அவன் ஆர்வத்துடன் கவனிப்பதைக் கண்ட
கீதாவின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது,
குப்பென்று முகம் சிவந்தது. கால்கள் தரையினின்று
பெயர மறுத்து அப்படியே சிலை போன்று நின்றுவிட்
டாள்.

"வாங்கோ ஸார் உள்ளே! நாய் குரைக்குமே தவிர
ஒன்றும் பயமில்லே ஹி...ஹி...என்று சிரித்த வண்ணம்
சிமெண்ட் கம்பெனியின் முதலாளி ராமாமிருதம் நாக
ராஜனைவரவேற்க அவன் உள்ளே சென்று விட்டான்.

கனவிலிருந்து திடுக்கிட்டு விழித்துக் கொண்டவள்
போல கீதா தன் உணர்வு பெற்றாள் குடத்திலிருந்த மீதி
ஜலத்தை அப்படியே ஒரே மூச்சில் செடிகள் மீது



கொட்டிவிட்டு, குடத்தைப் பின் கட்டில் கொண்டு வைத்
தாள். இரண்டே எட்டில் தன் அறையை அடைந்து கத
வைத் தாழிட்டுக் கொண்டாள். நிலைக் கண்ணாடி முன்
சென்று தன்னை ஒரு தடவை பார்த்துக் கொண்டாள்.

வாராது அள்ளி முடிந்து கொண்டிருந்த கூந்தல்
காற்றில் பறந்து நெற்றி முழுவதும் தவழ்ந்து கொண்
டிருந்தது, அதுவரை தோட்டத்தில் வேலை செய்து
கொண்டிருந்ததை அறிவிப்பது போல் புடவையில் பல
இடங்களிலும் சேறு தெறித்திருந்தது. இத்தனை கோலத்
துடன் இருக்கையில் நாகராஜன் தன்னைப் பார்க்க
நேரிட்டதே என்று கீதா அவமானத்தினால் குன்றிப்
போனாள். தலைகூட வாரிக்கொள்ளாமல் வாயில்
பக்கம் போனதே பிசகு என்று தன்னையே கடிந்து
கொண்டு கட்டிலின் மீது உட்கார்ந்து கொண்டாள்.

மறுபடியும் எதிர் வீட்டு நாய் குரைக்கும் சப்தம்
கேட்டது. கீதா துள்ளி எழுந்தாள். ஜன்னல் கதவை
வேகமாக திறந்து கொண்டு எதிர் வீட்டின் பக்கம் பார்த்
தாள்

'கேட்'வரை பேசிக் கொண்டு வந்து நாகராஜனை
வழியனுப்பிவிட்டு ராமாமிருதம் 'கேட்'டைச் சாத்திக்
கொண்டு போனார். அவர் உள்ளே திரும்பியதும் நாக
ராஜன் தங்கள் வீட்டின் பக்கம் பார்த்து விட்டுத் தயங்கி
நிற்பதைக் கண்டாள். "பாவம்! அவர் தேடும் ஆசாமி
அவருக்குத் தெரியாமல் மாடி ஜன்னலிலிருந்து அவரைப்
பார்ப்பது அவருக்கு எங்கே தெரியப் போகிறது?" என்று
நினைத்த கீதா 'களுக்' என்று சிரித்து விட்டாள்.

"ஜன்னல் வழியாக எதைப் பார்த்துவிட்டுச் சிரிக்
கிறாய்?" என்று கௌரி கேட்டுக் கொண்டு உள்ளே
நுழைந்ததும் கீதா, மிக்க கலவரமடைந்து விட்டாள்.
கௌரியிடம் நாகராஜனைப் பற்றிச் சொன்னால் அவள்
என்ன நினைத்துக் கொள்வாளோ? சொல்லாவிட்டால்

பின்னால் தெரிந்த பிறகு கோபித்துக் கொள்வானோ? கௌரியிடம் அந்த வாலிபனைப் பற்றிச் சொல்ல விஷயங்கள் அப்படி என்ன நடந்திருக்கின்றன? மங்களத்தின் வீட்டுக் கொலுவின் போது அவளுடைய சகோதரியின் பிள்ளையென்ற ஒரு புருஷனை ஒரு நிமிஷம் அவள் சந்திக்க நேர்ந்தது அதுவும் அவசரமாக மாடி அறைக்குள் ஓடின பொழுது எதிரே வந்த அவன் முட்டிக் கொள்ள இருந்ததனால் அந்தச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. மறுநாள் ஏதோ காரியமாக அவன் எதிர் வீட்டுக்கு வந்தபோது அகஸ்மாத்தாக ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்துக் கொண்டார்கள். அதைப் போய் கௌரியிடம் சொன்னால் அவன் நாத்தனாரைப்பற்றி என்ன நினைப்பான்? அண்ணாவின் காதில் பட்டால் மிக்க விகாரமாகி விடாதோ!— ஒரே நிமிஷத்தில் தன் மனதிற்குள்ளே எண்ணி முடிவுக்கு வந்த கீதா, "ஒன்றுமில்லை எதிர் வீட்டு நாய் ஒரு கம்பைக் கடித்துக் கொண்டு விளையாடுவதைப் பார்த்தேன் சிரிப்பு வந்தது!" என்று ஒரு பொய்யைச் சொன்னாள்.

"கௌரி!" என்று துரைசாமி கீழிருந்து அழைக்கும் குரல் கேட்டதும் அவள், "உங்கண்ணா இன்னும் ஆபீசுக்குப் போகலை. என்ன வேண்டுமோ, போய் விசாரிக்கிறேன்" என்று கீழே இறங்கிப் போனாள்.

மறுபடியும் ஒரு தடவை ஜன்னல் வழியே வாயிலைப் பார்த்தாள் கீதா, தெருக் கோடியில் போய்க் கொண்டிருந்த நாகராஜன் தெருவின் முனையைத் தாண்டி விட்டான். அவன் தலைமறையும் வரை நின்று கொண்டிருந்த கீதா, தன் வீட்டு வாயிலிருந்த கார் கிளம்பும் சப்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள்.

கார் புறப்படுவதற்குள் கௌரி உள்ளேயிருந்து ஓடி வந்தாள் "இதை வைச்சுட்டுப் போறேளே!" என்று கூறிய வண்ணம் ஒரு காகிதக் கத்தையைக் கணவனிடம் நீட்டினாள். "அடாடா' இதைப்பத்தி மறந்தே போய் விட்டேன். நல்ல வேளை ஞாபகப் படுத்தினாயே!"



என்று கூறிய துரைசாமி காரிலிருந்த வண்ணம் அதை வாங்கிக் கொண்டான். காரின் முன் கதவின் மீது ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டு கௌரி கணவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள் சரி, நகரு, நான் போகணும். என்ன விளையாட்டு இது!" என்று மெல்லச் சிரித்த துரைசாமி கதவின் மீது இருந்த அவளது கரத்தை மெதுவாக எடுத்து விட்டான்.

"நீங்க சீக்கிரமா இன்னிக்கு வந்திடணும்" என்று கௌரி உத்தரவிட்டாள்.

"அப்படிச் சீக்கிரமா வரத்துக்கு இன்னிக்கு என்ன விசேஷம்?" என்று பரிகாசமாகக் கேட்ட துரைசாமி காரை மெதுவாகச் செலுத்தினான்.

"அம்மா எங்கேயோ வெளியில் போகப் போகிறாராம். கீதாவும் கிளப்பிற்குப் போய் விடுவா நான் தனியா ஆத்திலே இருக்க வேண்டும். எனக்குப் பயமா இருக்காதா?" என்று கொஞ்சினாள் அவள்.

"ஆகட்டும், ஆபீஸிலிருந்து நேரே பறந்து ஓடி வந்துடறேன். சரிதானே?" என்று அன்புடன் கூறிய துரைசாமி மனைவியை உல்லாசமாகப் பார்த்தான். கார் வெகு தூரம் சென்று மறையும் வரை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நின்ற கௌரி எங்கே தன்னை நிமிர்ந்து பார்த்து விடுவாளோ, என்று கீதா பயந்து ஜன்னல் கதவை மெதுவாகச் சாத்தினாள்.

மங்களத்து வீட்டுக் கொலுவிலிருந்து கீதாவிற்கு என்னவோ லேடீஸ் கிளப்பின் மீது ஸ்வாரஸ்யம் குன்றியிருந்தது நாலைந்து நாட்கள் கழித்து மறுபடியும் கிளப்பிற்குப் போனால் போதும் என அவள் மனதிற்குள் தீர்மானித்திருந்தாள். ஆனால் அண்ணாவும் மன்னியும் பேசிக் கொண்ட சம்பாஷணையைக் கேட்டதிலிருந்து அவள் மனம் கவலையில் மூழ்கிவிட்டது.

தான் அன்று வீட்டில் தனியாக இருக்கப் போவதாகவல்லவோ கௌரி நினைத்துக் கொண்டிருக்கிறாள்?

அன்று பார்த்து கீதா வீட்டில் உட்கார்ந்து கொண்டால் கௌரிக்குக் கட்டாயமாக நாத்தனார் மீது வருத்தமும் கோபமும் ஏற்படும். ''கஷ்ட காலமே! ஒரு நாள் தானாகவே கிளப்பிற்குப் போக வேண்டாம் என்று ஒத்திப் போட்டால் கூட வீட்டிலிருக்க முடியாது போலிருக்கிறதே என்று யோசனையில் ஆழ்ந்த கீதா கிளப்பைத் தவிர வேறு எங்கே போகலாம் என்று சிந்திக்க ஆரம்பித்தாள் மங்களம் வீட்டு மாடியறைகள் ஒன்றில் இருந்த ஒரு பெரிய புத்தக அலமாரி சட்டென கீதாவின் ஞாபகத்திற்கு வந்தது. ''ஏதாவது படிப்பதற்குக் கதைப் புத்தகங்கள் இரவலாக வாங்கிக் கொண்டுவர மங்களம் வீட்டுக்குச் சென்றால் போச்சு'' என்று தன் மனத்துக்குள் தீர்மானம் செய்து கொண்டாள்,

அன்று சாயங்காலம் செல்லம்மாள் பக்கத்துத் தெருவில் உள்ள தன் ஒன்றுவிட்ட ஓரகத்தியின் நாட்டுப் பெண்ணுக்குக் குழந்தைப் பிறந்திருப்பதை விசாரித்து வரக் கிளப்பினாள். இரவு செய்ய வேண்டிய சமையலைப் பற்றி விவரமாகக் கௌரிக்குச் செல்லம்மாள் சொல்லிவிட்டுக் கிளம்பியதைக் கண்ட கீதா தாயார் திரும்ப அதிக நேரமாகும் என்பதைப் புரிந்து கொண்டாள்.

அன்று கீதா அப்படிப் பிரமாதமாக அலங்காரம் ஒன்றும் செய்து கொள்ளவில்லை, சலவை செய்து வைத்திருந்த இளம் பச்சை வாயில் புடவையும் அதற்கு ஏற்ற கறுப்பு ரவிக்கையும் தான் அணிந்திருந்தாள். அந்தச் சாதாரண அலங்காரத்தில் அவள் மிக்க எழிலுடன் விளங்குவதைக் கௌரி கவனித்துத் தனக்குள்ளேயே வியப்படைந்தாள்.

''நான் கிளப்பிற்குப் போய்விட்டு வருகிறேன். வீட்டில் தனியாக இருப்பது உனக்கு ஆக்ஷேபணை இல்லையே!'' என்று கேட்டு முடிப்பதற்குள் துரைசாமியின் கார் வரும் சப்தம் கேட்டது.

''சரி, அண்ணாவே வந்துவிட்டார்! எனக்குக் கவலை விட்டது. நான் போய் வருகிறேன்'' என்று கீதா கூறி



விட்டு, கௌரியின் பதிலை எதிர்பாராமல் ''விர்'' என மங்களத்தின் வீட்டை நோக்கி நடந்தாள்.

மல்லிகைப் பூவைத் தொடுத்துக் கொண்டிருந்த மங்களம் கீதாவைக்கண்டதும் ஆச்சர்யத்துடன், ''வாம்மா வா!'' என்று அன்பாக வரவேற்றாள்.

''மாமி! எனக்குச் சில புத்தகங்கள் வேணும்!'' என்று கீதா சங்கோஜத்துடன் சொல்லி நிறுத்தினாள்.

''என்ன புஸ்தகம் வேணுமோ, எதுவானாலும் எடுத்துக் கொள். இதுதானா பிரமாதம் என்று பதிலளித்த மங்களம் பூச்சரத்தைக் கீழே வைத்து விட்டு, ''வா'' நீயே மாடிக்கு வந்து வேணுங்கறதை எடுத்துக்கொள், என்றாள்.

''மாமாவுக்கு புஸ்தகம்னா உயிர். அவர் காலேஜ் புரபஸராக வேலையில் இருந்த காலத்திலே சதா ஏதாவது புஸ்தகம் படிச்சிண்டு இருப்பார். இப்போ 'ரிடயர்ட்' ஆன பிறகு கேட்கணுமா? அவர் பாட்டிலே என்னென்னவோ புஸ்தகங்களை வாங்கிக் குவிச்சுண்டு இருக்கார். கதைப் புஸ்தகங்களோ, அவை வேறு என்னவோ? எனக்கு ஒண்ணும் தெரியாது. எது வேண்டுமானாலும் எடுத்துண்டு போ. பத்திரமா திருப்பிக் கொண்டு வந்து விட்டால் சரி'' என்று சொன்ன மங்களம் மாடிப்பக்கம் சென்றாள்.

சேஷகிரியின் அறை என்று அங்கே ஒதுக்கிவிடப்பட்டிருந்த ஒரு விஸ்தாரமான அறைக்குள் நுழைந்த கீதா அங்கிருந்த பெரிய புஸ்தக அலமாரியின் ஒவ்வொரு தட்டுகளையும் ஊன்றிச் கவனித்தாள். உலகத்துப் பல நாடுகளின் எழுச்சி, வீழ்ச்சியைப் பற்றிய பல ஆசிரியர்களின் சரித்திரப் புத்தகங்கள் தான் தட்டுகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கதைப் புத்தகங்களைக் காணவில்லை.

''என்ன மாமி! ஒரே சரித்திர மயமாக இருக்கிறதே! கதைப் புஸ்தகம் ஒன்றும் கிடையாது போலிருக்கு!'' என்று ஏமாற்றத்துடன் கீதா கேட்டாள்.

''நான் என்ன கண்டேன், அம்மா! இவைகள் கிட்டக் கூட நான் போகிறதில்லை. கதைப் புஸ்தகத்தைப் படிக்க எனக்குப் பொறுமை கிடையாது'' யாராவது படிச்சுக் கதையை எடுத்துச்சொன்னா நான கேட்டுக் கொள்வேன். அதைக் கூடக் கேட்க எனக்குச் சில சமயம் பிடிக்காது என்று மங்களம் சொன்னாள். கீதாவிற்கு அடக்கமுடியாத சிரிப்பு வந்தது. ''அதைப் படிக்கக் கூடப் பொறுமையற்ற சோம்பேறியா நீங்கள்?' என்று கேட்க அவள் சிரித்துக் கொண்டு பக்கத்திலிருந்த நாற்காலியை இழுத்துப்போட்டுக் கொண்டாள். அதன் மீது ஏறி நின்று கொண்டு மேல் தட்டுகளை ஆராய்ந்தாள். அதற்குமேல் உள்ள சில தட்டுகள் அவளுக்கு எட்டாத உயரத்தில் இருப்பதைக் கவனித்த மங்களம், ''நீ கஷ்டப்பட வேண்டாம், அம்மா, இரு! என் பிள்ளையைக் கூப்பிடுகிறேன்'' என்று கூறிவிட்டு''ராஜா! ராஜா!'' என்றாள் உரத்த குரலில்.

''என்ன சித்தி!'' என்று பக்கத்து அறையிலிருந்து பதிலளித்த புருஷனின் குரல் கீதாவின் நெஞ்சைப் 'பக்பக்' என்று அடித்துக் கொள்ளச் செய்தது.

உள்ளே வந்த நாகராஜனைப் பார்த்து மங்களம் ''என்னமோ கதைப் புஸ்தகம் வேணுமாம். கொஞ்சம் எடுத்துக் கொடேன். உனக்குத்தான் இதெல்லாம் பத்தித் தெரியும்!'' எனறு கூறிவிட்டு, அங்கிருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டாள்.

புஸ்தக அலமாரி அருகில் நின்று கொண்டிருந்த அந்தப் பெண்ணைப் பார்த்து நாகராஜன் ஒரு க்ஷணம் திடுக்கிட்டான். சட்டென்று சமாளித்துக் கொண்ட அவன் தன்னைக் கண்டு சங்கோஜத்துடன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்ளும் கீதாவின் அருகில் வந்து, ''என்ன புத்தகம் வேண்டும்'' என்று கேட்டான்.

''ஏதாவது நல்ல கதைப் புத்தகம் வேண்டும்''' என்று கீதா சுருக்கமாகப் பதிலளித்தாள்.



''நல்ல கதைப்புத்தகம் என்றால் புரியவில்லையே! துப்பறியும் நவீனமா? புரட்சிக் கதைகளா? ஹாஸ்யக் கதைகளா? உங்களுக்குப் பிடித்தது எது என்று சொன்னால் எடுத்துக் கொடுக்க சௌகர்யமாக இருக்கும். இங்கே வந்த சில நாள்களில் இங்குள்ள புத்தகங்களைப் பற்றி எனக்கு ஓரளவு தெரியும். அதனால்தான் கேட்கிறேன்.'' என்று விளக்கமாகச் சொன்ன நாகராஜன் புன்முறுவல் பூத்தான்.

இரண்டொரு வார்த்தைகளைப் பேசியதனால் கீதாவுக்கு சங்கோஜம் மெல்ல மறைந்தது. ''ஹாஸ்யக் கதைகளாக இருந்தால் பரவாயில்லை'' என்று சொன்னாள் அவள்.

நாற்காலிமீது ஏறிமேல்தட்டில் வைத்திருந்த புத்தகங்களில் ஒன்றைக் கையில் எடுத்துத் தூசியைத் தட்டிவிட்டு, ''இந்தாருங்கள் பி.ஜி.வோட் ஹவுஸ் எழுதியது இது. உங்களுக்குப் பிடிக்கும் என்று நினைக்கிறேன்'' என்று அதை அவள் கையில் கொடுத்தான்.

''இதை நான் படித்திருக்கிறேனே!'' என்று கீதா தன் புருவங்களை உயர்த்தினாள்.

உடனே இன்னொரு புத்தகம் எடுத்து, ''இந்தாருங்கள்'' என்று அவனிடம் கொடுத்தான்.

''இதையும் நான் படித்திருக்கிறேன்!'' என்று கீதா புன்முறுவலித்தாள். நாகராஜன் மனம் சோரவில்லை. அடுத்த தட்டில் இருந்த வேறு ஒரு புத்தகத்தை எடுத்தான். ''இந்தக் கதை மிகவும் நன்றாக இருக்கும்'' என்று அதை அவளிடம் கொடுக்கப் போனான்.

''இந்த ஆசிரியருடைய அவ்வளவு கதைகளையும் நான் படித்திருக்கிறேன்'' என்று புன்னகையுடன் கீதா புத்தகத்தை அவனிடமே திருப்பிக் கொடுத்தாள்.

''ஏது! இங்கே இருக்கும் கதைப் புத்தகங்கள் எல்லாம் நீங்கள் படித்த புத்தகங்களாகவே இருக்கும் போலி

ருக்கிறது...? நீங்கள் ஒரு புத்தகப் புழுவோ?'' என்று நாகராஜன் அவளைப் பார்த்து பரிகாசமாகக் கேட்டான்

''ஏதோ சில கதைகளைப் படித்திருக்கிறேன். அதைத் தவிர நான் ஒரு புழுவுமல்ல, பூச்சியுமல்ல?'' என்று கூறிய கீதா தன் முத்துப் போன்ற பற்கள் தெரிய மெல்லச் சிரித்தாள்.

உச்சியிலிருந்த ஒரே ஒரு புத்தகத்தை மிகவும் சிரமப்பட்டு எட்டி எடுத்த நாகராஜன் தூசி போக நன்றாக அதைத் துடைத்தான். ''இந்தப் புத்தகம் மிகவும் நன்றாக இருக்கும். நான் இதை மூன்று தடவைகள் படித்திருக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுக் கொடுத்தான்.

ஆவலுடன் கையில் வாங்கிய கீதா அதை உற்றுப் பார்த்துவிட்டு. இதை நான் ஐந்து தடவை வாசித்திருக்கிறேன்! என்றாள்

''இங்கேயிருக்கும் கதைப் புத்தகங்கள் இவ்வளவு தான். புதிதாக ஏதாவது வேண்டுமென்றால் இனிமேல் நான்தான் எழுதித் தர வேண்டும்!'' என்று பரிகாசமாக அவன் கூறினான்.

அதைக் கேட்டு 'க்ளுக்' என்று சிரித்த கீதா, ''நீங்கள் ஒரு கதாசிரியரா?'' என்று வியப்புடன் வினவினாள்.

மனம் விட்டு அவள் சிரிக்கையில் வலது கன்னத்தில் லேசாகத் தோன்றி மறையும் குழி அவளது முகத்திற்கே ஒரு தனி சோபையை அளிப்பதைப் போன்று நாகராஜனுக்குத் தோன்றியது.

''நான் ஆசிரியருமல்லை, ஒன்றுமில்லை. ரஸிகன். அவ்வளவேதான்! என் தொழில் கட்டை வெட்டப் பிழைக்கும் தொழில்'' என்று சொல்லிவிட்டு, அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.



''கட்டை வெட்டிப் பிழைப்பதா?'' என்று கீதா ஆச்சரியப்பட்டதைக் கேட்ட மங்களம், ''அவன் கிடக்கான். அவன் பேச்சை நீ நம்பாதே! 'பொன்மேடு டிம்பர் ஒர்க்ஸ்'ன்னு கேள்விப்பட்டிருப்பியே! அதனுடைய முதலாளி இவன்தான். டிம்பர் பிஸினெஸ் பண்றதைக் கட்டை வெட்டிப் பிழைப்பதாகச் சொல்றான்?'' என்று வியாக்யானம் செய்தாள்.

''சரி, இந்தப் புத்தகம் உங்களுக்குக் கட்டாயம் பிடிக்கும் என்று நினைக்கிறேன்!'' என்று கடைசியாக ஒரு புத்தகத்தை எடுத்து அவள் கையில் கொடுத்த நாகராஜன் நாற்காலி விட்டுக் கீழே இறங்கினான்.

''பூச் செடிகள் வளர்க்கும் விதம்'' என்று புத்தகத்தின் பெயரைத் தனக்குள் வாசித்த கீதா விளங்காமல் அவனைப் பார்த்து விழித்தாள்.

''பூச்செடிகள் வளர்ப்பது பற்றி இந்த மேனாட்டு ஆசிரியர் என்ன சொல்லியிருக்கிறார் என்று படித்துப் பாருங்கள். உங்களுக்குத் தோட்டக் கலையில் அபிமானம் அதிகம் என்று நினைகிறேன்'' என்றான் அவன் குறும்புத்தனம் மிளிர்ந்த அவனது கண்களை அர்த்த பாவத்துடன் நோக்கிய கீதா மௌனமானாள்.

மங்களத்தின் வீட்டில் அதிக நேரம் செலவழித்து விட்டதை உணர்ந்த அவன், ''புத்தகத்தைச் சீக்கிரம் படித்துவிட்டுப் பத்திரமாகத் திருப்பிக்கொண்டு வருகிறேன்'' என்று இருவரிடமும் சொல்லிக்கொண்டு கிளம்பினான். வாசலை விட்டு அவன் வெளிப்படுகையில் விமலா கையில் ஒரு சிறு காகிதப் பொட்டலத்துடன் எதிரே வந்து கொண்டிருந்தாள்.

சிநேகிதிகள் இருவரும் ஆச்சரியத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

'எங்கே இப்படி?' என்று விமலா கேட்டாள்.

'ஒரு புத்தகம் இரவல் வாங்க வந்தேன். நீ எதற்காக வந்தாய்?'' என்று கீதா கேட்டாள்.

''மங்களம் மாமியாத்து மிஷினில் தைக்கலாமென்று சில துணிகளை எடுத்துக் கொண்டு வந்தேன்'' என்று சொன்ன விமலா சிநேகிதியைப் பொறாமையுடன் உற்றுப் பார்த்தாள்!

## 6

**கி**ளப்பிலிருந்து திரும்பி வந்த மங்களம் உள்ளே நுழைந்ததும் கையிலிருந்த அழகுப் பையை மேஜை மீது வைத்து விட்டுத் திரும்பிப் பார்த்தாள், ஹால் சோபா ஒன்றில் சாய்ந்து கொண்டிருந்த நாகராஜன் அன்றையப் பத்திரிகையை மிகவும் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தான். ''என்ன ராஜா! நீ எங்கேயும் இன்னிக்கு வெளியிலே போகல்லையா?'' என்று கேட்ட மங்களம் சாய்வு நாற்காலியில் அலுப்புத் தாங்காமல் சாய்ந்து கொண்டாள்.

''இல்லை. சித்தி?' என்று சுருக்கமாகப் பதிலளித்த அவன் மீண்டும் பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தான்.

''இன்னும் உங்க சித்தப்பா வெளியிலேயிருந்து வரலையா? அவர் பாட்டிலே டாக்டர் சொன்னார்னு தினம் எட்டு மைல் 'வாக்' பண்ணிட்டு வந்து அப்புறம் காலை வலிக்கிறது கையை வலிக்கிறது என்று மனுஷாளைப் பிடுங்குவார். தனக்கா இதெல்லாம் தெரிஞ்சாத்தானே?'' என்று கணவனைப் பற்றிச் சலிப்பாக பேசினாள் மங்களம்.

அது சமயம். ''என்னைப் பத்தி என்ன உன் பிள்ளையிடம் வைது கொண்டிருக்கே?'' என்று கேட்ட வண்ணம் சேஷகிரி வந்தார். கால் செருப்பை வாசலிலேயே கழற்றி வைத்துவிட்டு உள்ளே நுழைந்த கணவனைக் கண்ட மங்களம் இடத்தை விட்டு எழுந்தாள்.

''தினம் நீங்க பாட்டிலே மைல் கணக்கா 'வாக்கிங்' போகிறதைப் பத்திதான் பிள்ளைகிட்டே சொல்லிக் கொண்டுருந்தேன்'' என்று மங்களம் அன்புடன் கணவனைக் கடிந்து கொண்டாள்



கையிலிருந்த வெள்ளிப்பிடி போட்ட தடியை மூலையில் சார்த்தி விட்டு ''உஸ்... அப்பா!'' என்று கூறிய சேஷகிரி சோபா ஒன்றின்மீது உட்கார்ந்து கொண்டார்.

ஹால் உட்புறக் கதவைப் பிடித்துக்கொண்டு நின்ற மங்களம், ''தீர்த்தம் கொண்டு வரட்டுமா?'' என்று கணவனின் களைப்பைக் குறிப்பாக உணர்ந்தவள் போல் கேட்டாள்.

''ஒண்ணும் வேண்டாம். இன்னிக்கு ராத்திரி சாப்பாடு கூட வேண்டிராது போலிருக்கு!'' என்று பதில் அளித்த சேஷகிரி தமது காலை நீட்டிக்கொண்டு ஆசனத்தில் சௌகர்யமாகச் சாய்ந்து கொண்டார்.

மங்களம் பதில் பேசவில்லை. நாகராஜன் பத்திரிகையை மடித்து மேஜைமீது வைத்துவிட்டுச் சித்தப்பாவின் பக்கம் திரும்பினான். அவர் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்ட அவன் வியப்புடன் ''என்ன சித்தப்பா!'' என்று கேட்டான். ''ராஜா! நீ என்னிக்கு ஊருக்குப் போகப் போகிறாய்?'' என்று சித்தப்பா கேட்டது அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

''நன்னாத்தானிருக்கு நீங்க கேட்கிற லக்ஷணம்! வந்து நாலு நாளாகல்லே; அதுக்குள்ளே அவனை ஏன் ஊருக்குப் போகச் சொல்றேள்?'' என்று மங்களம் கணவனைப் பார்த்து ஓர் அதட்டல் போட்டாள்.

''ராஜாவை யாரு இப்போ ஊருக்குப் போகச் சொன்னா! இன்னும் எத்தனை நாள் இருப்பான்னு ஒரு கணக்கு மட்டும் தெரிஞ்சா நான் டாக்டரிடம் கேட்டு ஜீரணத்தை அதிகப்படுத்துகிற மருந்து ஏதாவது ஒரு 'பாட்டில் வாங்கிக் கையிருப்பாக வைத்துக்கொள்வேன்'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் சேஷகிரி.

ஒன்றும் புரியாமல் விழித்த மங்களம், ''புதிர் போட்டா யாருக்குப் புரியும்? நன்னாத்தான் சொல்லுங்களேன் புரியறாப்பலே!'' என்றாள்.

''ராஜா நம்பாத்துக்கு வந்தாலும் வந்தான். நான் திடீர்னு பெரிய பிரமுகனாகிவிட்டேன். எங்கே பார்த்தாலும் 'சேஷகிரியா? வாங்கோ! உட்காருங்கோ! சோடா சாப்பிட்டுட்டுப் போகலாமே' அப்படீன்னு இந்த ஊரிலே உபசாரம் எனக்குத் தினப்படி நடக்கிறது. இரண்டு நாட்களா. நான் பத்து மைல் வாக்கிங்போய் வருவதாகத் தானே நீ நினைத்துக் கொண்டிருக்கே! அதுதான் இல்லை!'' என்றார் சேஷகிரி.

''என்னன்னா! அப்படித் திடீர்னு உங்களுக்கு ராஜ யோகம் வந்துடுத்து?'' என்று கேட்டுக்கொண்டே மங்களம் சிரித்தாள்.

''இந்த ஊரிலே நான் தங்கி வருஷம் ஆறு ஆகப் போகிறதல்லவா? இதுவரை என்னை எட்டிப் பார்க்காத மனுஷான் எல்லாம் என்னை க்ஷேம லாபங்கள் விசாரிக்க ஆரம்பிச்சுட்டாங்க. ராஜா இன்னும் எத்தனை மாசங்கள் இங்கே இருந்தாலும் எனக்கு சந்தோஷமே, தினம் வெளியிலே நான்கு வீட்டில் காப்பியும் டிபனும் சாப்பிட்டால் வயிறு கெட்டுவிடுமேன்னுதான் என் யோசனை'' என்று கூறிவிட்டு நாகராஜனைப் பார்த்துச் சிரித்தார் சேஷகிரி.

சித்தப்பா தன்னைப் பற்றி என்ன சொல்ல இப்படியெல்லாம் சுற்றி வளைக்கிறார் என்று ஊகிக்க முடியாது நாகராஜன் புன்னகையுடன் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்

''அதோடு மனுஷனை விட்டாத் தானே! காப்பியும் டிபனையும் கொடுத்துட்டு, 'உங்க ஷட்டகர் பிள்ளை ஒரு பையன் வந்திருக்கானாமே... ஹி... ஹி... அவனுக்குக் கல்யாணம் ஆகலையாமே... ஹி... ஹி... என் பெண் ஜாதகம், இதைப் பாருங்கோ, பேஷான ஜாதகம் என்று ஆளுக்கொரு ஜாதகத்தை என் தலையிலே கட்டி அனுப்புகிறார்கள்'' என்று கூறிவிட்டுத் தமது வழுக்கைத் தலையை அன்புடன் தடவிக் கொடுத்தார் சேஷகிரி.



மங்களமும் நாகராஜனும் இதைக் கேட்டுச் சிரித்தார்கள்.

''நாகராஜன் வந்த விஷயம் ஊராருக்கெல்லாம் இவ்வளவு சீக்கிரம் எப்படித் தெரிந்தது!'' என்று ஆச்சரியத்துடன் மங்களம் கேட்டாள்.

''அதாண்டி! உன் சிநேகிதி ஒரு பாட்டி இருக்காளே, அதான் அந்த சுப்பிப் பாட்டி, இரண்டு நாளைக்கு முன்னால் இங்கே வந்து விட்டு போனாளோ இல்லையோ! ஊருக்குள்ளே சங்கதி தீபோலப்பரவி விட்டது'' என்று சொல்லி விட்டு சேஷகிரி, ''ராஜா! நீ சுப்பிப் பாட்டியைப் பார்த்ததில்லையோ? ரொம்ப சுவாரஸ்யமான ஒரு பிரகிருதி'' என்று ஆரம்பித்தார.

''போங்கோன்னா நீங்க ஒருத்தர்! தேமேனு பாவம், பாட்டி!'' என்று கணவனைக் கடிந்து கொண்ட மங்களம் பிறகு நாகராஜன் பக்கம் திரும்பி, ''ராஜா! நீ கூடப் பார்த்திருக்கிறாய் அந்தப்பாட்டியை, அன்னிக்கு உன்னை பார்த்துவிட்டு, யாரு இந்தப் பிள்ளைன்னு விசாரிச்சாளே, அந்தப் பாட்டியைத்தான் இவர் சொல்றார்!'' என்று மங்களம் விவரித்தாள்.

நாகராஜன் யோசனை செய்தான், அவனுக்கு அவள் யார் என்று ஞாபகபடுத்திக் கொள்ள முடியவில்லை. என்னவோ எனக்கு ஞாபகமில்லை, ''சித்தி!'' என்று கூறினான் அவன்.

''மங்களம்! இதென்ன அசட்டுக் கேள்வி? கல்யாணமாகாத ஒரு வாலிபனிடம் போய் சுப்பிப் பாட்டியையும்

சேஷிப் பாட்டியையும் பற்றிக் கேட்டால் ஞாபகமிருக்குமா? இதே சுப்பிப் பாட்டி ஒரு யௌவன சுப்புலக்ஷ்மியாக ஹாண்ட்பாக்'கைத் தூக்கிக் கொண்டு 'லேடீஸ் கிளப்' பக்கம் ஒய்யாரமாக நடந்து போய்க் கொண்டு இருந்தால் ஒரு சமயம் அவன் ஞாபகத்தில் நன்றாகப் பதிந்திருக்கலாம்'' என்று முடித்த அவர், ''நாகராஜா! என்ன? நான் சொல்றதிலே ஒண்ணும் தப்பில்லையே!'' என்று பரிகாசமாகக் கேட்டார்.

சித்தி முன்னால் சித்தப்பா செய்த பரிகாசம் நாகராஜனுக்குக் கொஞ்சம் சங்கோஜமாக இருந்தது. வெளிப்பட அதைக் காட்டாமல், ''சித்தப்பா இன்று ரொம்ப குஷியாக இருக்கிறார் போலிருக்கு! அதனால் என்னைக் கேலி செய்து வேடிக்கை பார்க்கிறார்'' என்றான்.

''நான் சொல்ல மறந்து விட்டேனே! இன்னிக்கி நான் பாட்டிலே போய்க்கொண்டிருந்தேன். அந்தக் குப்புசாமி இருக்கானே. அவன் எனக்கு முகங் கொடுத்துப் பேசாத மனுசன். என்னைக் கைதட்டித தானே கூப்பிட்டு...'' என்று சேஷகிரி முடிப்பதற்குள் குறுக்கிட்டு மங்களம் ''எந்தக் குப்புசாமி?'' என்று கேட்டாள்.

''அதாண்டி! அந்தச் சிடுமூஞ்சி குப்புசாமி. கொஞ்சம் குண்டா ஒரு பெண் ஹேமாவோ உப்புமாவோ ஒண்ணு இங்கே வருமே!'' என்று அவர் விவரிக்க ஆரம்பிக்கையில் குழப்பம் அதிகம் அடைந்த மங்களம், ''நீங்க எந்த ஹேமாவைச் சொல்றேள்?'' என்று கேட்டாள்.

''அட கண்றாவியே! ஹேமான்னு ஐம்பத்தெட்டு ஹேமாக்கள் இந்த ஊரிலே இருக்கிறார்களா? யார் கண்டா இந்தப்பெண்கள் பெயரையெல்லாம்! கிளப்புக்குப் போறதினாலே உனக்குந் தெரிந்திருக்கும். போன மாசம் நம்ப சங்கீத சபையிலே ஒரு கைக்குழந்தைக்கு நடன அரங்கேத்துபடியாச்சே ஞாபகமிருக்கா, அந்தக் குழந்தையின் அக்கா ஹேமான்னு ஒரு பெண் இருக்காளோன்னோ, அவளைத்தான் சொல்றேன்!'' என்று சேஷகிரி விளக்கினார்.



மங்களத்திற்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை 'ஆமான்னா! கோகிலத்தின் பெண் ஹேமாவை சொல்றேன் நீங்கள்!'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள் அவள்.

''கோகிலத்தின் பெண்ணோ, கிளியின் பெண்ணோ! இதெல்லாம் எனக்குத் தெரியாது. இல்லாத உபசாரமெல்லாம் பண்ணிவிட்டு இந்தக் குப்புசாமி தன் பெண்ணின் பிரதாபங்களைப் பற்றி ஆரம்பிச்சுட்டான். அவள் பாடுவாளாம், ஆடுவாளாம், அவள் டான்ஸ் பண்ணி யார் பார்க்கறதுன்னு எனக்கு அங்கேயே யோசனையாய்ப் போய் விட்டது'' என்று அவர் முடிப்பதற்குள் நாகராஜன் அடக்க முடியாமல் சிரித்து விட்டான்.

''கொஞ்சம் பருமனோ அவள்?'' என்று கேட்டான் அவன்.

''கொஞ்சமா! அழித்தால் என்போல்இரண்டு ஆட்கள் பண்ணலாம்'' என்று சேஷகிரி சொல்வதற்குள், மங்களம் ''சித்தப்பா சொல்கிறதையெல்லாம் அப்படியே நம்பி விடாதே! ராஜா! கடுகுன்னா மலையின்னு கொஞ்சம் கூடவே சொல்கிறது அவர் வழக்கம்'' என்று ஹேமாவுக்குப் பரிந்து பேசிய அவள் சிரித்துக்கொண்டு நிற்க முடியாமல் ஒரு நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''ஒரு வழியா அந்தப் பெண் ஜாதகத்தை வாங்கிக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டேன். பாதி வழியில் நம்ப விளக்கெண்ணெய் மூஞ்சி வேதராமன், வலுவிலே பேச வந்து விட்டான். அத்தி பூத்தது போல மனுசன் என்னைக் கண்டு பல்லைக்காட்டிக் கொண்டு பேச வந்த ரகசியத்தை அவன் ஆரம்பிக்கு முன்னே புரிந்து கொண்டு விட்ட நான் வேணுமென்றே அசோகச் சக்கரவர்த்தியைப் பற்றிப்

பேசிக் கொண்டிருந்தேன். ஆனால் பேர்வழி விடாக் கண்டனாக இருந்தான். முடிவுவரை என் தொணதொணப்பை சகித்துக் கொண்டு எனக்குக் காப்பி டிபன் உபசாரங்கள் எல்லாம் செய்து கடைசியாகத் தன் பெண் விமலாவின் ஜாதகத்தையும் கொடுத்தான்'' என்று கூறிய சேஷகிரி தமது சட்டைப் பையினின்று ஒரு கத்தை ஜாதகங்களை எடுத்தார்.

''அன்னிக்கு வந்தார்களே இரண்டு பெண்கள், அதிலே மாநிறமாயிருந்தாளே விமலான்னு ஒருத்தி. அவளைத்தான் சித்தப்பா சொல்கிறார்'' என்று நாகராஜனிடம் மங்களம் விவரிப்பதைக்கேட்ட சேஷகிரி ஆச்சரியத்துடன், ''அப்படிச் சொல்லு! விமலாவே இங்கே நேரே வந்துட்டாளா? அவளோட கூடவே எப்பவும் ஜோடியா இருப்பாளே இன்னொரு பெண்... அவள் தான் கீதா! அவளும் வந்தாளா! தேவலையே? பெரியவா வரன் பார்க்கிறது ஒருபக்கமிருக்கட்டும், நாமும் முயற்சிப்போம் என்று பெண்களாகவே வரன் தேடிக்கொண்டு இங்கே வந்து விட்டார்களா?'' என்று கேலியாகக் கேட்டார் சேஷகிரி.

''போங்கோன்னா! உங்கள் பரிகாசத்திற்குத்தான் ஒரு எல்லை கிடையாதா? நான் கொலுவுக்குக் கூப்பிட்டிருந்தேன். துரைசாமி தங்கை கீதாவும், வேதராமய்யர் பெண் விமலாவும் வந்திருந்தார்கள். நான் சொல்ல மறந்தே போயிட்டேன்! உங்கள் புஸ்தகமொன்றை அந்த கீதா இரவல் வாங்கிண்டு போயிருக்கா!'' என்றாள் மங்களம்.

சேஷகிரி ஆசனத்தினின்றும் துள்ளிக் குதித்தார். ''புஸ்தகமா? எந்தப் புஸ்தகத்தை நீ பாட்டிலே தூக்கிக் கொடுத்துட்டே? நல்ல புஸ்தகத்தை இரவல் வாங்கிக் கொண்டு போய்த்தொலைச்சுடப் போறது அந்தப்பெண்'' என்று அலறினார்.

''உங்க பிள்ளை தான் எடுத்துக் கொடுத்தான்' ஏன் ஒரு புஸ்தகத்துக்கு இப்படிப் பதறிப் போறேள்?'' என்று மங்களம் அலட்சியமாகக் கேட்டாள்.



''பூஞ்செடிகள் வளர்க்கும் முறை என்று அமெரிக்க ஆசிரியர் ஒருவர் எழுதிய புத்தகத்தை இரவலாக வாங்கிக் கொண்டு போனாள்!'' என்றான் நாகராஜன்.

''அதுதானே, பரவாயில்லை! வேறு நல்ல புத்தகத்தைத்தான் எடுத்துக் கொண்டு போய் விட்டாளோன்னு கவலைப்பட்டேன். அது கிடக்கட்டும்! திடீரென்று அவளுக்குத் தோட்டக் கலையில் எப்படி ஆசை வந்தது? அதுவும் அமெரிக்காவில் செடிகளை வளர்க்கிறதைப் பற்றி இவளுக்குத் தெரிந்து கொள்வதில் ஏன் ஆர்வம் ஏற்பட்டது? ஆச்சர்யமாயிருக்கே!'' என்று சேஷகிரி கேட்டுவிட்டு நாகராஜனைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டினார்.

''கீதாவுக்குத்தான் தோட்டக்கலை மேலே மோகம் வந்ததுன்னு வச்சுக்கோங்களேன்! அந்தப் பெண் விமலா இருக்கே, அதுக்கு இப்ப தைக்கிறதிலே மோகம் ஏற்பட்டிருக்கு'' என்று கேலியாகச் சொல்லிவிட்டு மங்களம் சிரித்தாள்.

''பேஷ்! அப்படிச் சொல்லு. நாகராஜன் மேலே ரெண்டு பேரும் சேர்ந்தாற்ப் போல வலையை வீசி விட்டார்களா? தைக்க வருவதாகச் சொல்லிக் கொண்டு ஒருத்தி இங்கே வருகிறாள். புத்தகம் வேணும் என்று இன்னொருத்தி விஜயம் பண்ணுகிறாள். தேவலை! விஷயங்கள் இவ்வளவு தூரம் முன்னேறிக் கொண்டிருக்கிறச்சே நான் பாட்டிலே பித்துக்குளி போலே ஜாதகக் கட்டைச் சுமந்து கொண்டு வருகிறேன்'' என்று சேஷகிரி சொல்லிவிட்டுக் கடகடவென்று சிரித்தார்.

''என்ன சித்தப்பா! ஒரே முட்டாகப் பரிகாசம் செய்கிறீர்களே!'' என்று கேட்டுவிட்டு நாகராஜன் எழுந்திருந்தான்.

''எங்கே போறே உட்காரு! இப்படிக் கல்யாணம் பண்ணிக் கொள்வதென்றால் சுலபம் என்று நினைக்காதே எல்லோருடைய பரிகாசத்தையும் கேட்டுச்சகித்துக்

கொண்டுதான் ஆகவேண்டும். அது கிடக்கட்டும்! நீ அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை செய்தான்னு ஒரு கதை படிச்சிருக்கியா?'' என்று ஆரம்பித்தார்.

''படித்திருக்கிறேன், சித்தப்பா அர்ஜுனன் தீர்த்த யாத்திரை என்று கிளம்பிவிட்டு ஊருக்கு ஒரு பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டு போகிறான். அதுதானே?'' என்று கேட்டான் நாகராஜன்.

''நீ கிளம்பியிருக்கிற இந்த பிஸினஸ் யாத்திரை கூட எனக்கு அர்ச்சுனன் யாத்திரையைப் போலத்தான் தோன்றுகிறது'' என்று மங்களம் தொடர்ந்து கூறினாள்.

''அர்ச்சுனன் ஊருக்கு ஒரு பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் செய்துகொண்டு போனான். ஆனால் நாகராஜனுக்கு ஒரே ஒரு ஊரில் ஹேமா விமலா, கீதா என்று மூன்று பெண்கள் மாலையிடத் தயாராயிருக்கிறார்கள். அடே ராஜா! பேசாமல் கண்ணை மூடிக் கொண்டு மூன்று பேரையும் கல்யாணம் செய்துகொண்டு ஊருக்குப் போய்ச் சேர்!'' என்று தமாஷ் பண்ணிவிட்டு சேஷகிரி, தமது மனைவி பக்கம் திரும்பிப் பார்த்தார்.

''ரொம்ப நன்னாயிருக்கு உங்க உபதேசம்! இன்னிக்குத்தான் எங்க கிளப்பிலே நாங்கள் 'பலதார விவாக எதிர்ப்'பைப் பத்திப் பேசினோம். பலதார விவாக எதிர்ப்பு மசோதாவை ஏக மனதாக ஆதரித்தார்கள் அத்தனை பேரும்!'' என்றாள் மங்களம்.

உண்மையிலேயே கோபத்துடன் மங்களம் தன்னிடம் சண்டைக்கு வருவதைக் கண்ட சேஷகிரி, ''பார்த்துக் கோப்பா, நான் உனக்கு நன்மை செய்யப் போய் மங்களம் என்கிட்ட சண்டைக்கு வந்துட்டா! நான் போறேன் உள்ளே!'' எனப் பயந்தவர் போல் கண்களை மூடித் திறந்து அபிநயம் செய்து விட்டு எழுந்து அப்பால் சென்றார்.



அவர் அங்கிருந்து சென்றதும் மங்களம் நாகராஜனைப் பார்த்து, ''ஆமாம், ராஜா! நான் கூட உனக்குச் சொல்லணும்னு இருந்தேன். கல்யாணம் பண்ணிக்காம எத்தனை நாள் இப்படியே காலம் கழிக்குறதுன்னு நினைச்சிண்டு இருக்கே? வீட்டுக்கு இருக்கிறது நீ ஒருத்தன் தான். நீயாவது குடியும் குடித்தனமுமாய் இருக்க வேண்டாமா அப்பா? அவ பாகீரதி பாவம் எத்தனை நாள் தன்னந்தனியா அத்தனை பெரிய வீட்டிலே குடித்தனம் பண்ணுவா? உங்கம்மா போனதிலிருந்து அவள் உடம்பு பாதியா இளைச்சுப் போச்சு. பாகீரதியை நினைச்சுண்டா எனக்கு மனவேதனை சகிக்கவில்லை'' என்று தழதழத்தக் குரலில் பேசினாள்

நாகராஜனுக்கு வீட்டைப் பற்றிய துக்க நினைவுகள் வரவே அதுவரை சிரித்துக் கொண்டிருந்த அவன் முகம் வருத்தத்தினால் மாறுபட்டது. பதிலே பேசாது அவன் சிந்தனையில் ஆழ்ந்தான்.

சிறுவயதிலேயே விதவையான அக்கா பாகீரதி, அகால மரணமடைந்த அண்ணன் சங்கரன், அவனது பிரிவைச் சகிக்காது சீக்கிரம் பிள்ளையைப் பின்பற்றிய தாயார்— எல்லோரையும் நினைத்துக் கொண்ட நாகராஜன் மனம் துயரத்தில் மூழ்கி விட்டது.

''அவாளையெல்லாம் பத்தி நீ வருத்தப்படறதிலே இனிமேல் நடக்கப் போறது ஒன்றுமில்லை. நீயாவது கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு சந்தோஷமாக இருந்தா பாகீரதியின் மனசு கொஞ்சம் சாந்தியடையும். என்னவோப்பா, நேத்திக்கு அந்தப் பெண் கீதா வந்து உன்னோட சித்த பேசிட்டு நிக்கறச்சே என் மனசிலே ஒண்ணு தோணித்து தந்த பொம்மையைப் போல அந்தப் பெண் அழகாக இருக்கிறாள். அவள் குடும்பமும், பாவம், சிரமப்பட்டு முன்னுக்கு வர முயற்சிக்கும் குடும்பம். எனக்குத் தெரிந்தவரை பெண் படித்தவளானாலும் ரொம்ப அடக்கமானவள். நான் நாளைக்குத் துரைசாமி யாத்துக்குப் போய் அந்தப்பெண் ஜாதகத்தை வாங்கிண்டு

வரலாம்னு நினைச்சுண்டு இருக்கேன். நாமாகப் போய் ஜாதகம் கேட்டா தப்பென்ன? இயற்கையா பார்த்தா பிள்ளை வீட்டார்தான் போய்ப் பெண் தேடணும்? தலை கீழா நமது சமுதாயத்திலே நடக்கிறது'' என்றாள் மங்களம்.

அவள் பேசியது ஒன்றும் நாகராஜன் காதுகளிலே கேட்கவில்லை. 'கீதா' என்ற அந்தப் பெயர் யார் வாயினின்றும் வந்தாலும், என்னவோ அவனுக்கு இரண்டு நாட்களாக அழகிய கீதம் போல் கேட்டது. 'கீதா! கீதா அழகான பெயர்... பெயர் மட்டும் அழகா?'—என்று தனக்குள்ளேயே எண்ணிய அவன் மனக்கண் முன் கீதாவின் மோகன உருவம் வந்து நின்றது.

# 7

முதல் நாள் இரவில் வாங்கி வந்த அந்தப் புத்தகம் அப்படியே மேஜைமீது கிடந்தது. அவளால் திறந்துகூடப் பார்க்கப் படாமல் அப்படியே திருப்பிக் கொடுக்கப்படப் போகிற அந்தப் புத்தகத்தின் மீது அவளுக்குக் கொஞ்சம் அனுதாபம் பிறந்தது. இந்தப் புத்தகத்தை முகாந்திரமாக வைத்துக் கொண்டு நாகராஜனும் கீதாவும் சம்பாஷிக்க நேர்ந்தது அல்லவா?

முதல் நாள் சந்தித்தபொழுது சங்கோஜம் உள்ளவனைப் போல் தென்பட்ட அதே நாகராஜன் மறுநாள் கூச்சமேயின்றி எத்தனை தைரியமாக வாயாடினான்? அவளிடம் சம்பாஷிப்பதில் ஒரு திருப்தி வேறு அவன் முகத்தில் குடி கொண்டிருந்ததே!

இப்படிப் பல எண்ணிக் கொண்ட கீதா குளிப்பிற்குப் போகக் கிளம்பினாள். கையில் சோப்புப் பெட்டியுடன் கூடத்திற்கு வந்த அவள் வாசல் ஹாலில் துரைசாமியுடன் பேசும் புருஷக் குரலைக் கேட்டு ஸ்தம்பித்துப் போய் விட்டாள்.



''யார், நாகராஜனா! என்ன ஆச்சரியம்! அவருக்கு அண்ணாவை எப்படித் தெரியும்?'' என்று விநாடியில் பலவும் சிந்தித்த அவள் இருதயம் படபடவென்று துடிக்க ஆரம்பித்தது.

பின் கட்டிற்குச் சென்ற அவள் முகத்தைக் கழுவிக் கொண்டு உள்ளே வரத் திரும்பினாள். துரைசாமி பேச்சை முடித்துக் கொண்டு கூடத்து ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தான்.

''யாரோடஅப்படி வழவழன்னு பேசிண்டு இருந்தே?'' என்று செல்லம்மாள் பிள்ளையைக் கேட்டாள்.

''என்னோடு கூடக் காலேஜில் படிச்சவன் அவன்! நாகராஜன்னு பேர். சேஷகிரி மாமாவின் ஷட்டகர் பிள்ளை. இங்கே ஒரு 'பிஸினஸ்' விஷயமா வந்திருக்கிறானாம்! வந்து நான்கு நாள் ஆயிற்றாம். இன்னிக்கு ஆபீஸிலேயிருந்து வரச்சே வழியிலே அவனைச் சந்தித்தேன். 'துரைசாமியா!' அப்படின்னு என்னைக் கண்டு மலைச்சுப் போயிட்டான். 'சரி, காரிலே ஏறிக்கோ. வீட்டுக்கு வா' அப்படின்னு அழைச்சுண்டு வந்தேன்'' என்று ஆரம்பித்தான்.

''அப்படின்னா கொஞ்சம் டிபன் கிபன் சாப்பிட்டு விட்டுப் போகச் சொல்லக் கூடாதாப்பா!'' என்று அங்கலாய்த்துக் கொண்டாள் செல்லம்மாள்.

''நான் சொன்னேன். ஆனால் அவன் மறுத்துவிட்டான். நீ பார்க்கும் முன்னே அவன் போய் விட்டானே, பையன் லக்ஷணமாக இருப்பான், வயது இருபத்தெட்டாகிறது. எங்கள் காலேஜில் இரண்டு வருஷம்தான் படிச்சான் ரொம்பக் கெட்டிக்காரன் அதற்குப் பிறகு இன்ஜினீயரிங் படிக்கப் பட்டணம் போய்விட்டான். இத்தனை வருஷம் கழிச்சு இப்பத்தான் அவனை மறுபடியும் சந்திச்சேன், இன்ஜினீயரிங் பட்டம் வாங்கினானே ஒழிய, 'டிம்பர் பிஸினஸி'ல் இறங்கி விட்டானாம். பேச-

சோடு பேச்சாக நான் கீதாவின் ஜாதகத்தைப் பற்றி இரண்டு வார்த்தை கூறினேன், பாவம், அவன் மூஞ்சியிலே அசடு தட்டிப் போச்சு, இதெல்லாம் மூஞ்சிக்கு நேரா பேசுறதுன்னா சிரமம், 'முதன் முதலாக சிநேகிதனைப் பத்தி பேச ஆரம்பிச்சுட்டானே, இவன் என்ன மனுஷன்' என்று என்னைப் பத்தி அவன் கொஞ்சம் குறைவாகக்கூட நினைத்துக் கொண்டிருப்பானோ, என்னவோ! அதனால் பரவாயில்லை ஏகப்பட்ட சொத்துள்ள பிரம்மசாரி ஊருக்கு வந்திருக்கிற விஷயம் தெரிஞ்சுதுன்னா, அவ்வளவு தான்! எல்லார் வீட்டிலேயும் ஒரே போட்டி ஏற்பட்டு விடாதா? அதனாலே நான் காதும் காதும் வச்சாப்பல இன்னிக்குச் சாயங்காலம் போய் அந்த சேஷகிரிமாமாவை இது விஷயமா பார்த்துட்டு வரேன்'' என்று முடித்தான்.

''சரி! கீதாவுக்கு இந்த வருஷம் எப்படியாவது ஒரு வழி பண்ணியாகணும்; எனக்கு இதே கவலைதான். பையனை நான் பார்க்கலையே!'' என்று கவலைப் பட்டாள் செல்லம்மாள்.

''ஏன் அம்மா, நாளைக் கார்த்தாலே மங்களம் மாமியைப் போய்ப் பார்த்துட்டு ஜாடையா அவனையும் பார்த்துட்டு வாயேன்! அது கிடக்கட்டும் எங்கே கீதா?'' என்றான் துரைசாமி.

அதுவரை சம்பாஷணை முழுவதையும் கேட்டுக் கொண்டு பின்கட்டிலேயே நின்று கொண்டிருந்த கீதா ஒன்றுமே அறியாதவள் போல் கூடத்திற்கு வந்தாள்.

''ஏன் அண்ணா கூப்பிட்டீர்கள்'' என்று கேட்டாள் அவள்.

''ஒண்ணுமில்லை, கிளப்பிற்குப் போகலையா நீன்னு கேட்கத்தான் கூப்பிட்டேன்'' என்று மழுப்பினான் துரைசாமி.



''அங்கே போகத்தான் கிளம்பிக் கொண்டு இருக்கிறேன்'' என்று பதிலளித்த கீதா மாடிப் பக்கம் சென்றாள்.

தன்னை அலங்கரித்துக் கொண்டு கிளப்பிற்குச் செல்லப் புறப்பட்ட அவள், கூடத்தில் யாரோ தன் தாயாருடன் இரைந்து பேசுவதைக் கண்டு திடுக்கிட்டு மாடிப்படியிலேயே நின்று விட்டாள்.

''பிராப்தம் எப்படி இருக்கிறதோ! இருந்தாலும் நாமும் முயற்சிக்க வேண்டாமா? நாகராஜனும் உங்க பிள்ளையும் ஒரே காலேஜிலே படிச்சவர்களாம், தேவலையே, ரொம்ப கிட்டக்க வந்து விட்டோமே' என்று அவர் கூட நாகராஜனைக் கேலி பண்ணிக் கொண்டிருந்தார். குப்புசாமி தன் பெண் ஜாதகத்தையும், வேதராமய்யர் தன் பெண் ஜாதகத்தையும், இன்னும் யார் யாரோ தங்கள் பெண்கள் ஜாதங்களையும் இவரிடம் நேத்திக்குக் கொடுத்தார்களாம், ஹேமா, விமலா இவாளையெல்லாம் எனக்குப் பிடிக்கல்லை; நம்ம கீதாவோட ஜாதகத்தை நான் வாங்கிண்டு போய் இந்தப் பிள்ளையாண்டானுக்குக் கல்யாணம் பண்ணி வச்சுடறதுன்னு தீர்மானிச்சுட்டேன், பையன் கூட உங்கள் பெண்ணைக் கொலுவின்போது பார்த்திருக்கிறான். அவனுக்கும் ஒரு கண் இருக்குன்னு நான் புரிஞ்சிண்டேன், கரைப்பார் கரைச்சால் கல்லும் கரையும். எதுக்கும் உங்க பிள்ளையை வந்து இவரைப் பார்த்துட்டுப் போகச் சொல்லுங்கோ நான் போயிட்டு வரேன்'' என மூச்சு விடாது பேசி விட்டு மங்களம் எழுந்து நின்றாள்.

''கௌரி! மாமிக்குக் குங்குமம் வெத்திலை எடுத்துக் கொடு'' என்று செல்லம்மாளின் குரல் குதூகலத்தின் மிகுதியால் உச்சஸ்தாயியில் ஒலித்தது.

'போய் விட்டு வரேன் நீங்க கூடக் காத்தாலே ஒழிஞ்சிருந்தா அப்படி நம்மாத்துப் பக்கம் வந்துட்டுப் போங்கோ' என்று மங்களம் புன்னகையுடன் தலையை ஆட்டினாள்.

"என்னவோ அம்மா. நீங்கள் எல்லோரும் பார்த்துத் தான் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கணும் துரைசாமி. அவன் குழந்தை அவனுக்கு என்ன தெரியும்?" என்று செல்லம்மாள் கொஞ்சம் முகஸ்துதி செய்தாள்.

"நாலா பக்கத்திலும் முயற்சிக்கணும். அவ்வளவு தான்" என்று புன் முறுவலித்த மங்களம் விடை பெற்றுக் கொண்டு சென்றாள்.

மங்களம் வெளியே சென்ற பின்பு கீழே இறங்கி வந்த கீதாவைப் பார்த்துத் தாயார், "ஏண்டி மங்களத்தாததுக் கொலுவுக்குப் போயிருந்தியே? அவ அக்கா பிள்ளை ஒருத்தன் வந்திருக்கானாமே? பார்த்தியா? என் கிட்ட ஒண்ணுமே சொல்லலையே?" என்று கேட்டாள்.

"ஆமாம்மா இதையெல்லாம் பத்தி என்ன பேச்சுன்னு பேசாமலிருந்தேன்!" என்று குள் கொட்டினாள் பெண்.

"நல்ல விஷயங்களைப் பத்தி ஒண்ணும் சொல்ல மாட்டாள் இந்தப் பெண்...வயசாகியும், படிச்சும் ஒண்ணும் தெரியாத மக்கு!" என்று தாயார் கடிந்து கொண்டு உள்ளே சென்றாள்.

தாயாரின் கோப வார்த்தைகளைக் கேட்ட கீதாவுக்கு வருத்தம் ஏற்படவில்லை. அதற்குபபதில் அவளது பவள உதடுகளில் ஒரு மோகனப்புன்னகை தோன்றி மறைந்தது.

"என்ன கீதா! நீ அவரைப் பார்த்ததைப்பற்றி இது வரை என் கிட்டக் கூடச் சொல்லவில்லையே!" என்று மனத்தாங்கலாகக் கேட்டாள் அங்கு நின்று கொண்டிருந்த கௌரி.

"முந்தா நாள் கொலுவுக்குப் போன இடத்தில் அவரை முதல் தடவையாகச் சந்தித்தேன். இரண்டாவதாக நேற்று மாலை புத்தகம் இரவல் வாங்க மங்களத்தின் வீட்டுக்குப் போயிருந்தேன்; அவரே எனக்குப் புத்தகத்தை எடுத்துக் கொடுத்து என்னிடம் கொஞ்சநேரம்



பேசினார்" என்று கூறிவிட்டு மன்னியின் முகத்தை வெற்றிக் குறியுடன் பார்த்தாள் கீதா.

"உன்னோடு பேசினாரா? என்னிடம் இதையெல்லாம் பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் நீ மறைத்துத் தானே வைத்தாய்?" என்று கௌரி மிகவும் ஏமாற்றத்துடன் கேட்டாள். "பேசினார் என்றால் அது அப்படி அதிசயமான சம்பவமா? எத்தனையோ பேரிடம் நாம் வாழ்க்கையில் சந்தித்துப் பேசவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்ட பொழுது பேசுவதில்லையா? அதேபோல் தான் எங்களுக்குள் சிறிய சம்பாஷணை ஒரு சந்தர்ப்பம் வாய்த்ததனால் ஏற்பட்டது. அவ்வளவுதான்!" என்று கீதா அலட்சியமாகப் பதில் அளித்தாள்.

"சந்தர்ப்பம் தானாக ஏற்பட்டதா? அல்லது உண்டாக்கப் பட்டதா?" என்று கௌரி பரிகாசமாகக் கேட்டதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவள் போல் கீதா வெளியிலே சென்று விட்டாள்.

மறுநாள் பொழுது, செல்லம்மாள் மங்களத்தின் வீட்டிற்குப் போவதும் மங்களம் செல்லம்மாள் வீட்டிற்கு வந்து ஏதோ ரகசியம் பேசுவதும் ஒரே அமர்க்களத்திலே கழிந்தது. நாகராஜனுக்கும் தனக்கும் விவாகம் செய்து வைப்பதில இரு குடும்பங்களும் மும்முரமாக முயற்சிப்பதை அறிந்த கீதா, உள்ளூர உவகை அடைந்தாள். ஆனால் விஷயங்களைப்பற்றி அறியத் தான் ஆவலுற்றிருப்பவள் போல் காட்டிக் கொள்ளவில்லை.

அன்று மாலை வழக்கம்போல் கீதா லேடீஸ் கிளப்பிற்குள் சென்றபொழுது அவளுடைய சிநேகிதி விமலாவும் ஹேமாவும் வேப்பமரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கவனித்தாள்.

"கீதா, இங்கே வா!" என்று கையைத் தட்டி விமலா தன்னை அழைப்பதைக் கண்டு வேறு வழி இல்லாமல் வேப்பமரத்தடியில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"ஆமாம்; நேற்று சாயங்காலம் உங்கள் வீட்டுக்கு நாகராஜன் வந்திருந்தாரல்லவா?" விமலா கேட்டாள்.

"ஆமாம்! வந்திருந்தார்போல் இருக்கிறது!" என்று கீதா மழுப்பிப் பேசியதைக் கண்ட விமலா, "வந்திருந்தார் போலிருக்கிறது என்று ஒளித்துப் பேசவேண்டாம். வந்திருந்தார்; நான் பார்த்தேனே உங்கள் வீட்டிலிருந்து அவர் வெளியே போவதை! அதற்குப் பிறகு மங்களம் மாமி உங்கள் வீட்டிற்குப் போனார். அதுவும்கூட எனக்குத் தெரியுமே!" என்றாள்.

அவள் குரலில் தொனித்த பொறாமையைக் கவனித்த கீதா, "உங்கப்பாவும், ஹேமாவின் அப்பாவும் முறையே உங்களுடைய ஜாதகங்களை நாகராஜனுக்காக சேஷகிரி மாமாவிடம் கொடுத்தார்களாம். அதைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள் மங்களம் மாமி எங்கள் வீட்டில்" என்று தனக்கும் சில விஷயங்கள் தெரியுமென்று காட்டும் எண்ணத்துடன் பதில் அளித்தாள்.

சிநேகிதிகள் என்று பல வருஷங்கள் பழகிய இரு பெண்களும் இப்போது ஒருவரையொருவர் சற்று நேரம் குரோதமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

"உன் ஜாதகம் சேஷகிரி மாமாவிடம் போய்ச் சேர்ந்திருக்குமே! உங்கம்மாவும் உங்கண்ணாவும் இன்று காலை மங்களம் மாமி வீட்டுக்கு நடையாக நடந்து கொண்டிருந்தார்களாமே!" என்று கிண்டலாக மொழிந்த விமலா சிநேகிதியை வெறுப்புடன் வெறித்துப் பார்த்தாள்.

"எனக்கென்னவோ, அதெல்லாம் தெரியாது" என்று கோபத்துடன் கூறிய கீதா, அதற்கு மேல் அவளுடன் பேச இஷ்டமில்லாதவளாய் அவ்விடத்தை விட்டு எழுந்து 'விர்' என்று கிளப்பிற்குள் போய்விட்டாள்.

ஹேமாவுக்கு விமலாவைப் பார்த்துப் பேசப் பிடிக்க வில்லை. தன் தகப்பனார் ஒருவருக்குத்தான் நாகராஜன்



என்ற வரனைப்பற்றித் தெரியும் என்றிருந்த அவள் மனம், நாகராஜனுக்காக விமலா வீட்டவர்களும் கீதா வீட்டவர்களும் போட்டியிடுகிறார்கள் என்பதை கீதாவின் பேச்சிலிருந்து புரிந்துகொண்டாள். கீதா மிக்க அழகி விமலா சுமாராக இருப்பாள். இவர்களுடன் போட்டியிட்டு தான் எங்கே வெற்றி பெற முடியும் என்று ஏங்கிய அவள் மனம் உற்சாகத்தை இழந்து விட்டது.

"அப்பப்பா! இந்த கீதா இருக்கிறாளே! பலே பேர் வழி! மங்களம் மாமி வீட்டிற்கு இந்த நாலு நாட்களில் நூறு தடவைகளாவது போயிருப்பாள். பச்சைபெங்கால் சில்க், நீலப் பட்டுப்புடவை, மஞ்சள் ஜார்ஜெட் என்று ஒரு தடவையில் ஒரு அலங்காரத்தில் போய் அங்கே மினுக்கிவிட்டு வந்தாளாம், இந்த வரனைப் பிடிக்க அம்மா, பிள்ளை, பெண் எல்லோருமே சேர்ந்து பெரிய வலையாகப் பார்த்து வீசுகிறார்கள். எங்கப்பாவை சேஷகிரி மாமாவே வந்து கேட்டதனால்தான் ஜாதகம் கொடுத்தார். நாங்கள் ஒன்றும் இந்த வரனுக்குப் போட்டி போட வில்லை. அவன் என்னவோ 'பிஸினெஸ்' பண்ணுகிறானாம். யார் கண்டா? 'பிஸினெஸ்' என்றாலே ஓர் அர்த்தமற்ற சொல் லக்ஷத்திற்கும் தொழில் செய்யலாம் நாலு ரூபாய்க்கும் தொழில் செய்யலாம்! அவசரப்படக் கூடாது, வரனைப்பற்றி நன்றாக விசாரித்துத்தான் ஆக வேண்டும்" என்று விடாமல் பேசினாள் விமலா.

ஹேமா என்ன பதில் சொல்வதென்று தெரியாது விழித்துக் கொண்டிருக்கையில் அங்கே வந்த மங்களம் "விமலா நேத்திக்கு நீ மிஷினிலே தைச்சப்போ சரியா அது வேலை செஞ்சுதோ?" என்று கேட்டாள்.

விமலா முகத்தில் அசடு தட்டியது "சரியா தைச்சுதே மாமி!" என்று கூறிவிட்டுச் சுற்றும் முற்றும் பார்த்து விழித்தாள். "என்னவோ இன்னிக்குத் தைக்க மாட்டேன் என்று இடக்கு பண்றது. அதுவே ஒட்டை மிஷின்தான்... கீதாவைப் பார்த்தியோ?" என்று மங்களம் பேச்சை மாற்றினாள்.

''கீதா உள்ளே போயிருக்கிறாள்'' என்று ஹேமா கூறியதும் மங்களம் கீதாவைத் தேடிக்கொண்டு போனாள்.

விமலாவே ஆரம்பித்தாள் பேசுவதற்கு, ''மங்களம் மாமிதான் என்னை அவர்கள் வீட்டுக்கு வந்து சோளி தைக்கக் கத்துக் கொடுக்கச் சொன்னார். இப்போ மிஷினை நான் கெடுத்து விட்டதாக என்மேலே பழி போடுவதைப் பார்த்தாயா!'' என்று கூசாமல் ஒரு பொய்யைச் சொன்னாள்.

ஹேமா அசட்டுப் புன்னகை செய்தாள். யார் பேசுவது நிஜம்? எது பொய்? எவ்வளவு தூரம் பொய்?—என்று ஒன்றும் விளங்காத அவள் ''நாழியாச்சு, நான் வீட்டுக்குப் போய் வருகிறேன்'' என்று கிளம்பினாள்! அன்று வீட்டையடைந்த விமலா ''அம்மா'' என்று வாயிற்படியிலே கூப்பிட்டுக் கொண்டு சென்று, ''கீதா வீட்டிலே ரொம்ப அந்த வரனைப்பத்தி முயற்சி பண்றா, அம்மா? இந்தப் 'பொந்து' ஹேமா இருக்கே, அவ வீட்டிலேகூட அந்த வரனைப்பத்தி ரொம்பக்கவலை எடுத்துக் கொண்டிருக்கா. இந்த ரெண்டு வீடும் போட்டி போடறதைப் பார்த்தா அந்தப் பையனுடைய கை, காலை, ஆளுக் கொண்ணா பிய்ச்சு எடுத்துக் கொண்டு போய் விடுவா போலிருக்கு!' என்று சொன்னாள்.

''கீதா வீட்டிலே அந்த வரனைப்பற்றிமுயற்சிக்கிறார்கள் என்று உனக்கு எப்படித் தெரியும்?'' என்று ஆத்திரம் ததும்பும் குரலில் கேட்டான் உள்ளே வந்த சிவராமன்.

''கீதாவே கொஞ்சங்கூட வெட்கமில்லாமல் என்னிடம் சொன்னாள். அவள் பேசியதைக் கேட்க எனக்கு அவமானமாகக்கூட இருந்தது.'' என்று படபடப்புடன் பொழிந்தாள் விமலா.

''நன்னாயிருக்கு! இந்தக் காலத்துப் பெண்களுக்கு மானம் வெட்கம் ஒண்ணும் கிடையாது போலிருக்கு! தானே எல்லாப் பெண்களும் கல்யாணத்தைப் பண்ணி



முடிச்சிப்பா போலிருக்கு. கேட்கச் சகிக்கலை'' என்று தலையில் அடித்துக் கொண்டாள் அவயம்.

''அந்த நாகராஜன்! அவன் எவன்? ஒரு தடவைகூட நான் பார்த்ததில்லை. அப்படி அவன் ஒரு மன்மதனா, என்ன?'' என்று ஆத்திரம் தாங்காமல் கேட்டான் சிவராமன்.

''ஊரே இமிலோகப் படறது அண்ணா! உன் காதுகளில் மட்டும் சங்கதி விழாமலிருப்பது ஆச்சரியந்தான்'' என்று இடித்துக் கூறி விட்டு விமலா உள்ளே சென்று விட்டாள்.

''ஏண்டாப்பா, உனக்கு அவனைத் தெரியாதா என்ன. உன்னோட படிச்சவனாயிருந்தாலும் இருப்பான். விசாரித்துப் பார்க்கறதுதானே!'' என்று அவயம் மெல்ல இழுத்தாற் போல் முனகினாள்.

''சரி, சரி! முன் பின் தெரியாதலவனைப் போய் என்ன விசாரிப்பது...'' என்று எரிந்து விழுந்தான் பிள்ளை.

## 8

தன் மனம் புண்ணாகும்படிப் பேசிய விமலாவின் மேல் கீதாவிற்கு எழுந்தகோபத்தை விவரிக்கவேமுடியாது! விமலாவிடம் இனி முகங் கொடுத்துக் கூடப் பேசக்கூடாது அற்ப குணம் படைத்தவள் என்று தீர்மானித்துக் கொண்டாள் கீதா. அதற்கு அடுத்தடுத்த இரண்டு நாட்களும் கிளப்பில் சிநேகிதியைச் சந்தித்தாலும் பாராதவள் போல் மற்றவர்களுடன் பேசிக் காலத்தை ஓட்டி விட்டு வீட்டிற்குள் சென்றாள்.

விமலாவும் தானே வலிய கீதாவிடம் பேசுவதில்லை என்று உறுதி கொண்டிருந்தாள் ஆதலின் அவளும் பாராதவள் போலவே இருந்து விட்டாள். சிநேகிதிகள் இரண்டு பேருக்குள்ளும் ஏதோ மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பாகக் கவனித்து உணர்ந்த

பூந்திடல் லேடீஸ் கிளப்பின் மற்ற சில பெண்கள் அதைக் கதையாகத் திரித்துப் பரவ விட்டார்கள்.

''உனக்கும் விமலாவுக்கும் மனஸ்தாபமா என்ன?'' என்று ஹேமா அன்று கேட்ட பொழுது கீதாவிற்குத் திகைப்பாக இருந்தது. 'யார் சொன்னது? அப்படி ஒன்று மில்லையே!' என்று தடுமாற்றத்துடன் பதிலளித்தாள் அவள்.

''இல்லை, வெறுமனே கேட்டேன்'' என்று ஹேமா தான் கீதாவின் வார்த்தைகளை நம்பவில்லை என்று தொனிக்கும் குரலில் பதில் அளித்தாள்.

''என்னம்மா கீதா! உனக்கும் உன் சிநேகிதி விமலா விற்கும் நடுவிலே என்ன நடந்தது? நீங்கள் இருவரும் ஜோடியாக இப்பொழுது எங்குமே காணப்படுவதில் லையே!'' என்று ஒரு அம்மாள் கேட்டபொழுது கீதா என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் விழித்தாள்.

''ஆமாம்! உண்மையிலேயே பிரமாதமாக என்ன மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டது? ஒன்றுமில்லை. அப்படி நிஜமாகவே ஏதாவது விரோதம் ஏற்பட்டால் பூந்திடல் ஸ்திரிகள் சிநேகிதிகளைச் சும்மா விட மாட்டார்கள போலிருக்கிறதே! பல வருஷங்கள் இரு குடும்பமும் நெருங்கி உறவாடிவிட்டு ஒரு சிறு விஷயத்திற்காகச் சிநேகிதிகள் இருவரும் பேசாமலிருப்பது நன்றாகத்தான் இல்லை'' என்று பல எண்ணிய கீதாவிற்கு நாகராஜன் மீது கோபம் பொங்கி எழுந்தது.

நாகராஜன்! இவன் எதற்காகப் பூந்திடலுக்கு வந் தான்? எந்த வேளையில் வந்தானோ? அவனை முன்னிட் டுத்தானே பல நாட்கள் சிநேகமாயிருந்த அந்தப் பெண் களிடையே சிறு விரோதம் முளைத்தது! சிநேகிதிகள் இருவரும் மனஸ்தாபப் பட்டுக் கொண்டது தான் மிச்சம் என்று சொல்லும்படிக் கடைசியில் நாகராஜன் வேறு ஒரு பெண்ணை மணந்து கொண்டு ஊருக்குச் சென்றாலும் செல்வான்.



பலவிதமாகச் சிந்தித்த கீதா, இரண்டு நாட்களாவது கிளப்பிற்குப் போகாமல் இருந்து பிறகு ஒரு நாள் சென்று விமலாவுடன் சமாதானம் செய்து கொள்வதென்று தன் மனத்திற்குள்ளே திட்டமிட்டுக் கொண்டாள்.

மறுநாள் பகல் மாடிக்கு வந்த கீதாவின் கண்களில் அந்த இரவல் புத்தகம் தென்பட்டது. ''இதைத் திருப்பிக் கொடுத்துவிட்டுத்தான் மறு காரியம். இதனால்தானே ஆரம்பித்தது எல்லாச் சண்டையும்?'' என்று நினைத்த அவள் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு மங்களத் தின் வீட்டிற்கு நடந்தாள்.

அப்பொழுது மங்களம் மாடியறையிலிருந்து கொலு பொம்மைகளை எடுத்து உள்ளே அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். ''வாம்மா, கீதா'' என்று உபசரித்த அவளிடம் ''இந்தப் புத்தகத்தைப் படித்தாகி விட்டது!'' என்று கூறிய கீதா அதை அங்கிருந்த மேஜை மீது வைத்து விட்டுச் சுற்றும் முற்றும் பார்த்தாள். அவளை அறியாம லேயே அவளது கண்கள் அங்கு யாரையோ தேடிக் கொண்டிருந்தன.

''வேறு ஏதாவது புஸ்தகம் வேணுமென்றாலும் எடுத்துக்கோ. எது வேண்டுமென்று எடுத்துக் கொடுக்க நாகராஜன்கூட இல்லே'' என்று மங்களம் சொன்னாள். அதைக் கேட்ட கீதா திடுக்கிட்டுப் போனாள். ''இல்லை யென்றால் என்ன அர்த்தம்'' என எண்ணிக் குழம்பிய அவள் வாயைத் திறந்து கேட்குமுன், ''அவன் நேத்திக்கு ராத்திரி ரயிலில் ஊருக்குப் போய் விட்டான்'' என்று மங்களம் முடித்தாள்.

கீதாவின் தலையில் யாரோ சம்மட்டியினால் தாக்கி யதை போன்ற ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது. நாகராஜன் ஊருக்குப் போய்விட்டான் என்ற வார்த்தைகள் அவளுக்கு அளித்த ஏமாற்றத்தை விவரிக்கவே முடியாது.

''நீயே பார்த்து ஏதாவது புஸ்தகம் எடுத்துக் கொள் ளேன்'' என்று மங்களம் அன்புடன் சொன்னாள். சஞ்ச

லம் நிறைந்த தன் கண்களை அவள் உற்றுப் பார்ப்பதைக் கண்ட கீதா" இல்லை, மாமி. இங்கே இருக்கும் புத்தகங்கள் எல்லாவற்றையும் நான் வாசித்திருக்கிறேன்" என்று கூறிவிட்டுத் தன்னைச் சுற்றி சிறிது நேரம் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள். நாகராஜன் வரவினால் ஒரு தனி சோபையுடன் விளங்கியதுபோல் தென்பட்ட மங்களத்தின் வீடு சூன்யமாகக் காட்சியளித்தது கீதாவுக்கு. அங்கு அதற்குமேல் ஒரு கணம்கூட நிற்க அவளால் முடியவில்லை. "வரேன், மாமி" என்று விடைபெற்றுக் கொண்ட கீதா ஓட்டமும் நடையுமாகத் தன் வீட்டிற்கு வந்தாள்.

நாகராஜன் ஊருக்குப் போய்விட்டான்! ஒரு வார்த்தைகூடச் சொல்லிக் கொள்ளாமல் ஊருக்குப்போய் விட்டான்! கீதாவினால் இந்த ஏமாற்றத்தைச் சகிக்கவே முடியவில்லை.

"நாகராஜன் யார்? அவனுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? உன்னிடம் அவன் எதற்காகச் சொல்லிக் கொண்டு ஊருக்குப் போகவேண்டும்" என்று அவள் அந்தராத்மா எதிரொலி செய்தது. ஆனால், மனத்திலே குமுறிய துக்கம் தாங்காது தனது அறைக்குள் சென்ற கீதா விம்மி விம்மி அழுதாள்.

"இதென்ன இது? எதற்காக அழுகிறாய்!" என்று கௌரி கேட்டதையும் பொருட்படுத்தாமல் கீதா தன் மனம் ஆறுமட்டும் அழுது தீர்த்தது.

திடீரென்று ஏற்பட்ட ஏமாற்ற உணர்ச்சியைக் கண்ணீராக வெளியிட்டதைக் குறித்துப் பின்னால் கீதாவிற்கே வெட்கமாக இருந்தது. ஒன்றுமில்லை, கௌரி! ஏதோ பழைய சம்பவங்களை நினைத்துக் கொண்டேன். அழுதேன் என்று ஒரு சிறு பொய்யைச் சொல்லி மதனியின் கேள்விகள் மேலே தொடராமல் நிறுத்தினாள்.

அன்று சாயங்காலம் நாகராஜன் ஊருக்குப் போய் விட்டானாம்! சேஷகிரியிடம் விவாக விஷயமாக



ஒன்றுமே சொல்லவில்லையாம்' என்று துரைசாமி தன் தாயாரிடம் கூறிவிட்டு இந்த அதிர்ச்சியைத் தாங்காதவன் போல் ஊஞ்சலில் உட்கார்ந்து கொண்டான்.

"அப்படியா?" என்று கேட்ட செல்லம்மாளுக்கு அழுகையே வந்துவிடும் போல் இருந்தது.

'ஒரு சமயம் ஊருக்குப் போய் நாகராஜன் விவாகத்தைப் பற்றித் தன் அபிப்பிராயத்தைக் குறித்துக் கடிதம் போடுவான் பெண் பிடித்தது இல்லை, என்று மரியாதைக்குக் கூட ஒருகடிதம் போடாமல் இருப்பானா?' என்ற ஒரு நம்பிக்கையில் அந்தக் குடும்பம் நாட்கள் ஒவ்வொன்றையும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

நாகராஜன் ஊரை விட்டுப் போனதும் ஊருக்கே நிம்மதி ஏற்பட்டது போலும்! பழையபடி சிநேகிதிகள் இருவரும் ஒன்று கூடி வேப்பமரத்தடியில் உட்கார்ந்து ஊர் வம்பை அலசிப் பேச ஆரம்பித்தார்கள் ஆனால் இருவர் மனதிலும் ஒரு சந்தேகம் சதா தோன்றிக் கொண்டுதான் இருந்தது. "ஒரு சமயம் விமலாவைப் பிடித்திருப்பதாக நாகராஜன் வேதராமய்யருக்குக் கடிதம் எழுதி விட்டானோ?" என்று சந்தேகத்துடன் கீதா அவள் முகத்தை அடிக்கொரு தடவை கவனித்தாள். கீதாவின் முகத்தில் என்றைக்காவது தனிப்பட்டதொரு குதூகலம் தென்படுகிறதா என்று ஊன்றி கவனித்துக் கொண்டிருந்தாள் விமலா. ஆனால் நாகராஜனைப் பற்றிய வரையில் கிணற்றில் கல் போட்டதைப் போல் அவன் கம்மென்று இருந்து விட்டான்.

தீபாவளி, கார்த்திகை என்று பண்டிகைகள் ஒன்றன்பின் ஒன்றாக ஓடி வந்து மறைந்தன. விடாது பெய்த மழைக்கும் ஓய்வு கொடுத்தது போன்று மெல்லத் தலை காட்டியது. தை மாதம் நாகராஜனைப் பற்றிப் பூந்திடல் வாசிகள் மறந்தே போய்விட்டார்கள். தன் கருத்தை ஒரு கடிதத்தில் கூடத் தெரிவிக்க மனமில்லாத நாகராஜனைப்

பற்றி எண்ணுவதைக் கைவிட்ட துரைசாமி தன் தங்கைக்குப் பல இடங்களில் வரன் தேட ஆரம்பித்தான்.

துரைசாமிக்கு அன்று ஆபீஸ் லீவு. பகல் போஜனத்திற்குப்பிறகு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்த அவன் வாயில் வெற்றிலையை மென்று கொண்டு மனைவியும் தங்கையும் கட்டம் விளையாடிக் கொண்டிருப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

''என்ன கூச்சல்! பச்சைக் குழந்தைகளா நீங்கள்?'' என்று அதட்டிய செல்லம்மாள் சாப்பாட்டிற்குப் பின்பு களைப்புடன் தூணில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்தாள்.

''போஸ்ட்!'' என்ற குரல் ஏனோ ஏக காலத்தில் எல்லோரையும் திடுக்கிடச் செய்தது. கடிதத்தை வாங்கித் தபால் தலையின் மீது படிந்திருந்த முத்திரையைக் கவனித்தான் துரைசாமி. 'பொன்மேடு' என்று ஆச்சர்யத்துடன் அவன் வாய் முணுமுணுத்ததைக் கேட்ட எல்லோரும் ஆவலுடன் அவன் முகத்தையே கவனித்தார்கள். நடுங்கும் கைகளுடன் கடிதத்தைப் படித்த அவன் முகம் பிரகாசமடைந்தது. ''அம்மா!'' என்று வாய்விட்டுக் கூவிய பிள்ளையைப் பார்த்து, ''என்னடாப்பா எழுதியிருக்கான் அந்தப் பையன்?'' எனக் கவலையுடன் கேட்ட செல்லம்மாள் இருப்புக் கொள்ளாமல் இடத்தைவிட்டு எழுந்து நின்றாள்.

''ஜாதகம், வரதக்ஷணை சீர் இவைகளைப் பற்றி எனக்கு நம்பிக்கையே கிடையாது. பெண்ணை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. உங்கள் தங்கைக்குச் சம்மதம் என்றால் தை மாத முதல் முகூர்த்தத்திலே கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். தங்கள் சௌகர்யத்தைச் சித்தப்பாவிடம் சொல்லவும் விவாகத்தைப் பற்றி அவருக்கு ஒரு கடிதம் போட்டிருக்கிறேன்.

இப்படிக்கு உண்மையுள்ள,
நாகராஜன்.



கடிதத்தை துரைசாமி வாய்விட்டுப் படித்து விட்டு "கீதா! உன் அபிப்ராயம் என்ன?'' என்று குதூகலத்துடன், கேட்டான்.

சந்தோஷம் தாங்காத செல்லம்மாள், ''அண்ணா கேட்கிறானே, பதில் சொல்லம்மா, கீதா!'' என்றாள்.

''என்னை ஏன் கேட்கணும்? உங்கள் சம்மதம் என் சம்மதத்தைப் போல்தான்'' என்று கீதா மலர்ந்த முகத்துடன் பதில் அளித்தாள்.

அன்று இரவு ரயிலுக்கு துரைசாமி பொன்மேட்டிற்குப் புறப்பட்டான். ''அண்ணா ஊருக்குப் போயிருக்கிற விஷயம் ஒருத்தருக்கும் தெரிய வேண்டாம். நீ பாட்டிலே விமலா கிட்டே சொல்லி வைக்காதே!'' என்று தாயார் பெண்ணை எச்சரிக்கை செய்தாள்.

## 9

இரண்டு நாட்கள் சென்றன அன்று மாலை கிளப்பிற்கு வந்திருந்த விமலாவைக் கண்ட ஹேமா, ''கேட்டியா சமாசாரத்தை?'' என்று மிகவும் பரபரப்புடன் ஆரம்பித்தாள்.

தனக்குத் தெரியாமல் கிளப்பில் என்ன சமாசாரம் நடந்திருக்கக்கூடும், இந்த ஹேமா தெரிந்த கதையையே புதிது போல் சொல்லப் போகிறாள் போலிருக்கிறது என்று அலட்சியமாக எண்ணிய விமலா, ''என்ன சமாசாரம்?'' என்று அசிரத்தையாகக் கேட்டாள்.

''கீதாவிற்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டதாம். பதினெட்டாந் தேதி முகூர்த்தம்'' என்று ஹேமா கூறிவிட்டு மரத்தடி மணல் மீது உட்கார்ந்து கொண்டாள்.

''கீதாவுக்கு கல்யாணமா?'' என்று தாங்க முடியாத வியப்பினால் கூறிய விமலாவின் விழிகள் இரண்டும் வெளி வந்து விடும் போல் கண்கள் அகல விரிந்தன.

''அப்படியானால் உனக்கு சமாசாரம் ஒன்றும் தெரியாதா?'' சுப்பிப் பாட்டி இன்றைக்குக் காலை எங்கள் வீட்டிற்கு வந்திருந்த பொழுது இந்தச் சங்கதியைச் சொன்னாள். வரன் யார் என்று நினைக்கிறாய்? பொன்மேடு நாகராஜன் தான் கீதாவின் மணாளன்'' என்று ஹேமா முடித்தாள்.

எதிர்பாராத இந்த சங்கதியைக் கேட்டு மன அதிர்ச்சி மிக்க அடைந்த விமலா, ''நாகராஜனா யார்? சேஷகிரியின் ஷெட்டகர் பிள்ளை நாகராஜனா?'' என்று கேட்டுவிட்டுக் கீழே உட்கார்ந்தாள்.

''சாக்ஷாத் அதே நாகராஜன்தான், சுப்பிப் பாட்டி நேற்று மாலை அவர்கள் வீட்டிற்குப் போயிருந்தாளாம் செல்லம்மாள் ஒரே குதூகலத்தில் மூழ்கிக் கிடக்கிறாளாம் கீதா தனக்குப் பிடித்த சாமான்கள் வாங்கும் ஸ்வாரஸ்யத்தில் பாட்டியிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையாம்! நாகராஜனுக்கு ஏகப்பட்ட சொத்து இருக்கிறதாமே 'பொன்மேடு டிம்பர் ஒர்க்ஸ்' என்பது ஐம்பது லட்சம் பெறுமாம். கீதாவின் அதிர்ஷ்டத்தைப் பார்த்தியா?'' என்று வர்ணித்துவிட்டு வாய் ஓய்ந்தாள் ஹேமா.

''கீதாவுக்குக் கல்யாணம் அதுவும் தங்கள் வீட்டில் போட்டியிட்ட வரனையே அவள் மணக்கப் போகிறாள்! ஐம்பது லக்ஷத்திற்கு அதிபதியா அவன்? என நினைத்துப் பொறாமையினால் கொந்தளித்தது விமலாவின் உள்ளம்.

''சுப்பிப் பாட்டி ஒன்று என்றால் ஒன்பதென்று புளுகும் அதன் பேச்சை நம்பாதே ஐம்பது லக்ஷத்திற்கு சொத்து இருக்குதாம். கூட ஒரு பூஜ்யத்தை சேர்த்துக் கொண்டு விட்டது பாட்டி கீதாவிற்கு கல்யாணத்தைப் பற்றி எனக்கு சந்தோஷமே ஆனால் ஒரு வார்த்தை கூட அவள் வரன் நிச்சயமாகிவிட்டதை நம்மிடம் சொல்லாமல் மறைத்து வைத்தாளே, அதை நினைத்தால்தான் வருத்தமாயிருக்கிறது'' என்று கூறிய விமலாவுக்கு அங்கு அதற்கு மேல் ஹேமாவுடன் பேசிக் கொண்டிருக்கப் பிடிக்கவில்லை.



அவள் வீட்டை அடைந்த பொழுது புதிதாக வாங்கிய சைக்கிளைத் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த சிவராமன் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவள் முகத்தில் காணப்பட்ட குழப்பம் அவனுக்கு மிக்க ஆச்சரியத்தையே உண்டாக்கியது. ''என்ன விமலா? ஏன் இப்படி அவசரமா ஓடி வரே?'' என்று கேட்டான் தமையன்.

''கீதாவிற்குக் கல்யாணம் நிச்சயமாய் விட்டதாம். அம்மாவிடம் அதை சொல்லத்தான் ஓடி வந்தேன். வேறு ஒன்றுமில்லை'' என்று தன் மனக் குமுறலை வெளிக்குக் காட்டாமல் சாமர்த்தியமாகப் பதிலளித்த விமலா விரைவில் உள்ளே சென்று விட்டாள். அதிர்ச்சியடைந்த சிவராமனும் தங்கையைப் பின் தொடர்ந்தான்.

சங்கதியைக் கேட்ட அலமு ஸ்தம்பித்துப் போனாள். ''நிஜமாகவா கல்யாணம்? நமக்கெல்லாம் தெரியாம மூடு மந்திரமா வச்சிருந்தாளே! அவாத்திலே எல்லாரும் கெட்டிக்காரரா!'' என்று ஆச்சர்யப்பட்டாள் அவள்.

''நமக்குத்தெரிந்தால் நாம் எங்கே வரனைக் கலைத்து விடுவோமோ என்று பயம் போலிருக்கிறது. அது கிடக்கட்டும். இந்த சுப்பிப் பாட்டி வேண்டாத நாள் எல்லாம் வந்து இங்கே உறவு கொண்டாடுமே! நமக்கு வந்து முதல்லே விஷயத்தை சொல்லித்தா? ஹேமா வீட்டுக்குப் போய்ச் சொல்லியிருக்கு! வரட்டும் சொல்றேன்! அந்தப் பாட்டியை இனிமேல் உள்ளே விடப்போறதில்லை'' என்று கோபத்துடன் பல்லைக் கடித்தாள் விமலா!

''கல்யாணம் என்றைக்காம்?'' என்று தன் உணர்வு பெற்ற சிவராமன் முடிவில் வினவினான்.

''பதினெட்டாம் தேதியாம். தானே விவாகப் பத்திரிகை வரும்பொழுது தெரிகிறது'' என்று விமலா கூறி முடிக்கும் சமயம், ''அலமு'' என்று குரல் கேட்டு மூவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

''உனக்குச் சங்கதி தெரியுமோடி. துரைசாமி தங்கைக்குப் பதினெட்டாம் தேதி கல்யாணம். இத்தனை நாழி அவாத்திலேதான் இருந்தேன். பாவம், செல்லம்மா தனியா, பருப்புத் தேங்காய் பிடிக்கக் கஷ்டப்பட்டுண்டு இருந்தா, அவளுக்கு ஒத்தாசை செய்துட்டு வந்தேன்'' என்று விடாது பேசிக்கொண்டு வந்த சுப்பிப் பாட்டி கீழே உட்கார்ந்து கொண்டாள்.

அவயத்திற்குத் தான் அப்பொழுதிருந்த மனநிலையில் சுப்பிப் பாட்டியுடன் பேசப் பிடிக்கவேயில்லை. அசட்டுப் புன்னகையுடன் பாட்டியைப் பார்த்துத் தலையை ஆட்டினாள் அவள்

''ஏன் பாட்டி; கீதாவுக்கு நகை கிகை எல்லாம் செய்தாகி விட்டதா?'' என்று விமலா சுப்பிப் பாட்டியின் வாயைக் கிண்டினாள்.

''அந்தப் பிள்ளையாண்டான் நகை நட்டு ஒண்ணும் போட வேண்டாம்னுட்டானாம். பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டா போறுமாம். அவனுக்கு ஏகப்பட்ட சொத்து கிடக்காம்'' என்று பாட்டி விஸ்தரிக்க ஆரம்பித்தாள்.

சுப்பிப் பாட்டிக்கு எழுதப் படிக்கத் தெரியாது ஆனால், அவளது உள்ளத்தில் கற்பனை ஊற்றுக் குமிழியிட்டுக்கொண்டு பொங்கி வழிந்தோடியது ஒரு விஷயம் அரைகுறையாகக் கேள்விப்பட்டால் போதும். பிரபல கதாசிரியன் பேனா முனையினின்று எழும் கற்பனைச் சித்திரங்களைத் தோற்கடிக்கும் அளவில் சுப்பிப் பாட்டி தனது திறமையெல்லாம் திரட்டி அரைகுறை சங்கதிக்குக் கண் மூக்கு வைத்து வர்ணம் தீட்டி, புது மெருகிட்டுப் பூந்திடல் முழுவதிலும் பரப்பி விடுவாள். ஆகவே, கேட்க வேண்டுமா? கீதாவின் விவாகத்தைப் பற்றி அளக்க ஆரம்பித்தாள்.

சிவராமனுக்கு அதற்குமேல் விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.



கீதாவின் கல்யாணம் பூந்திடலை ஒரு கலக்குக் கலக்கி விட்டு மிகவும் இனிதாக நடந்தேறியது. கீதாவின் அதிர்ஷ்டத்தையும், மாப்பிள்ளையின் அழகையும் அவனுடைய ஐசுவரியத்தையும் பற்றிக் கிளப்பில் பெண்கள் அலுக்காது பேசிக் கொண்டிருந்தார்கள்.

அன்று வழக்கம் போல ஹேமாவும் விமலாவும் கிளப்பில் சந்தித்தார்கள். மரத்தடியில் தனியாக வந்து உட்கார்ந்த அவர்கள் இருவரும் ஒரே சமயத்தில் பேசத் துடித்தார்கள். கல்யாணத்தன்று நீ போயிருந்தாயோ? நான் போகவில்லை. நேற்று நான் என் அம்மாவுடன் கல்யாணம் விசாரிக்கத் துரைசாமி வீட்டிற்குப் போயிருந்தேன். கீதா மிகவும் சந்தோஷமாகக் காணப்படுகிறாள். இன்று இரவு வண்டிக்கு அவள் புருஷனுடன் புக்ககம் போகிறாளாம்'' என்றாள் ஹேமா.

''என்ன! இன்றா போகிறாள்? கல்யாணம் ஆன ஒரு வாரத்திற்குள் ஊரை விட்டுப் போகிறாளா?'' என்று விமலா வியப்புடன் வினவினாள். இருபது வருஷங்கள் ஒரே ஊரில் காலத்தைக் கடத்திப்பார்த்த மனிதர்களையே பார்த்து அலுத்துப் போயிருந்த விமலா பூந்திடலை விட்டு வெளியேறும் சந்தர்ப்பம் கிடைக்காதா என்று மனம் ஏங்கிக் கொண்டிருந்தாள். தன் மனத்திலே பொங்கி நின்ற ஆசை தன் சிநேகிதிக்குக் கைகூடியதை நினைத்த அளவில் அவள் மனம் வருத்தத்தில் ஆழ்ந்தது. ''நாகராஜன் அப்படிப் பெரிய கோடீஸ்வரன் இல்லையாம். சுமாராகச் சொத்துள்ளவன் அவ்வளவுதான்!'' என்று மிகவும் அலட்சியமாகப் பேசினாள் விமலா.

அது சமயம் அங்கு வந்த ஒரு கார் பெண்களிருவரின் கவனத்தைக் கவர்ந்தது. ''அடடா! துரைசாமியின் கார்

போல இருக்கிறதே!'' என்று கூறிய விமலா அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்

காரிலிருந்து இறங்கிய கீதா தன் சிநேகிதிகளைக் கண்டு மகிழ்ச்சியுடன் அவர்கள் பக்கம் வேகமாக நடந்து வந்தாள்.

''என்னம்மா கீதா! எங்களை உனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறதா? என்று மனக்குறை பிரதிபலிக்கும் குரலில் வரவேற்றாள் விமலா.

அவளுடைய குத்தலான மொழிகளைப் பொருட் படுத்தாமல் பக்கத்தில் வந்து உட்கார்ந்த கீதா. உங்கள் இருவர் வீட்டிற்கும் போயிருந்தேன். நீங்கள் கிளப்பிற்குப் போயிருப்பதாகத் தகவல் கிடைத்தது. நான் இரவு வண்டிக்கு ஊருக்குப் போகிறேன். நேரே சொல்லிக் கொண்டு போகத்தான் வந்தேன்'' என்று கூறிவிட்டு மிகவும் அவசரமாக எழுந்தாள்.

''என்ன அதற்குள்? உட்கார்?'' என்று கையைப் பிடித்து இழுத்துப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டாள் விமலா.

''இல்லை; அவர் எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்'' என்று கீதா கொஞ்ச தூரத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரை ஒரு தடவை திரும்பிப் பார்த்துக்கொண்டு சொன்னாள். அவள் குரலில் தொனித்த பெருமையையும், முகத்தில் தோன்றிய மகிழ்ச்சியையும் கவனித்த விமலா, ஹேமாவைக் குறிப்பாகப் பார்த்தாள்.

''அவரா கார் ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறார்?'' என்று ஹேமா கேட்டதும் கீதாவின் முகம் வெட்கத்தினால் சிவந்தது. ''ஆமாம்! அண்ணாவுக்கு அதிக வேலை இருந்ததினால் வரமுடியவில்லை. அண்ணாவின் காரை அவர்தான் ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறார்'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் ஒரு தடவை அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தாள்.



விமலாவின் இதழ்க்கடையில் ஓர் ஏளனப் புன்னகை தவழ்ந்தது.

''ஏன் அந்தப் பக்கமே அடிக்கடி பார்க்கிறாய்? உன் கணவரை யார் தூக்கிக் கொண்டு ஓடி விடுவார்கள்? எங்கள் பக்கம் திரும்பிக் கொஞ்சம் சுவாரஸ்யமாகப் பேசு பார்க்கலாம்! இனிமேல் நாம் எப்பொழுது சந்திக்கப் போகிறோமோ!'' எனப் பாதி கேலியாகவும் பாதி குரோதமாகவும் மொழிந்தாள்.

''அப்படி ஒன்றுமில்லை. அவர் போக அவசரப்படுகிறாரோ என்னமோ என்று பார்த்தேன்'' என்று பதில் அளித்த கீதா மெல்லச் சிரித்தாள்.

''ஊருக்குப் போனதும் எங்களை மறந்து விடாதேயம்மா. கடிதம் போட்டுக் கொண்டிரு'' என்றாள் விமலா.

''கட்டாயம் கடிதம் போடுவேன். நீயும் கிளப்பில் நடக்கும் விஷயங்களைப்பற்றி எனக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்க வேண்டும். கிளப்பிற்குப் போய் வந்து பழக்கப்பட்ட எனக்கு இனிமேல் பொழுது எப்படிக் கழியுமோ என்றுதான் கவலையாயிருக்கிறது'' என வெகுளித்தனமாகப் பேசினாள் கீதா.

''அப்படியானால் பொன்மேட்டில் லேடீஸ் கிளப் ஒன்றும் கிடையாதா, என்ன?'' என்று விமலா தன் புருவத்தை உயர்த்தினாள்.

''கிடையாதாம்'' என்று கீதா கொஞ்சம் அதிருப்தியுடன் கூறியதைக் கேட்ட ஹேமா, ''பொன்மேடு என்ற பெயரைப் பார்த்தாலே எனக்கென்னவோ அது ஒரு குக்கிராமமாக இருக்கும் என்று தோன்றுகிறது!' என்று கேலியாகக் கூறினாள்.

தன் புக்ககத்தை அவள் குறைவாகப் பேசுவதைக் கேட்ட கீதாவின் மனம் சிறிது வருந்தியது. ''ஊர் சின்ன

னாக இருக்குமே யொழிய வசதிகளுக்கு ஒன்றும் குறைச்சல் இல்லையாம். எப்படியிருந்தால் என்ன? இனி அந்த ஊரில்தான் வாழக் கடமைப்பட்டிருக்கிறேன்." என்று கூறிய கீதா எழுந்திருந்து "நான் போய் வருகிறேன். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்" என்று விடை பெற்றுக் கொண்டாள்.

சிறிது தூரத்திலிருந்த காரை அவள் நெருங்கியதும் அதனின்று இறங்கிய நாகராஜன் மனைவிக்காகக் காரின் கதவைத் திறந்துவிட்டான். அதற்குள் ஏறிக் கொள்ளு முன் சிநேகிதியின் பக்கம் திரும்பிய கீதா அங்கேயிருந்தபடியே கையை உயர்த்தி, தான் போய் வருவதாக ஜாடை செய்துவிட்டு, காரில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். கூடவே நாகராஜனும் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டான். மறுகணம் தூசியை எழுப்பிக் கொண்டு குதூகலத்தில் மூழ்கியிருந்த அந்த யௌவன தம்பதிகளைச் சுமந்த வண்ணம் அந்தக் கார் வேகமாக ஓடி மறைந்தது.

"கீதாவும் அவனும் சேர்ந்தாற்போல் நிற்பதைப் பார்க்க மிகவும் அழகாக இருக்கிறது. கீதாவின் அழகிற்கேற்ற கணவன் கிடைத்துவிட்டான். கீதா அதிர்ஷ்டசாலிதான்" என்று ஹேமா வியந்து பேசினாள்.

"கல்யாணத்தைப் பொறுத்த வரையிலாவது நல்லவரன் கிடைப்பதற்கு அழகு என்பது பெண்களுக்கு அவசியம். ஆனால், அதிகமான அழகு புருஷர்களுக்கு ஒரு சாபக்கேடு போல் ஆகின்றது. புருஷன் நெறி தவறி நடப்பதற்கு அவனது அழகே ஒரு காரணமாகின்றது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அது எப்படியாகும் என்று கேட்காதே! கொஞ்சம் லட்சணமான புருஷனைப் பார்த்தாலே எனக்கென்னவோ நடத்தையைப்பற்றிச் சந்தேகந்தான்" என்றாள் விமலா.

"நன்றாயிருக்கிறது நீ சொல்வது! கல்யாணமாகாது அதிக நாட்கள் வீட்டில் பெண்கள் இருந்தால் நடத்தை தவறிவிடுவார்கள் என்று கூறுவது எத்தனை அபத்தமோ



அத்தனை அபத்தம் 'அழகான புருஷன் தவறான நடத்தை உடையவனாக இருப்பான்' என்ற விவாதம். இதில் கொஞ்சம்கூட நியாயமில்லை. இதை நான் ஒப்புக் கொள்ளவே மாட்டேன்" என்று ஹேமா மறுத்துப் பேசினாள்.

"உனக்கு உலக ஞானம் கொஞ்சம்கூடக் கிடையாது. புருஷர்களையும் பெண்களையும் ஒரே விதமாகத் தீர்மானித்து விடக் கூடாது. அழகான ஒரு புருஷன் ஐச்வர்யம் படைத்தவன், கல்யாணமாகாது பிரமச்சாரியாகப் பல வருஷங்கள் இருந்தால் அவன் தானே விரும்பி ஸத்யஸந்தனாக வாழ ஆசைப்பட்டால் கூட அவனது சூழ்நிலை அவனைச் சும்மா விடாது. புருஷர்களுடைய வெளிவாழ்க்கையில் எத்தனை ஆசாபாசங்கள் இருக்கின்றன தெரியுமா? அவற்றில் சிக்காமல் தன் மனத்தை அடக்கி ஆளும் சித்தபுருஷன் இருப்பான் என்று என்னால் ஊகிக்கக் கூட முடியவில்லை. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? பணம், அழகு இரண்டும் மட்டும் இருந்தால் போதுமா? குணம் வேண்டாமா! நாகராஜன் நடத்தையில் கசடனாக இருந்தால்?" என்று விமலா கூறினாள். அதைக்கேட்ட ஹேமா சிறிது கோபத்துடன் "அப்படியொன்றும் இருக்காது வீண் பழியை அவன்மேல் ஏன் சுமத்துகிறாய்?" என்று நாகராஜனுக்காகப் பரிந்து பேசினாள்.

## 10

வண்டி புறப்பட இன்னும் ஐந்தே நிமிஷங்கள்தான் இருந்தன. ஒருநாள்கூட விட்டுப் பிரியாது தன் கவனிப்பில் வளர்ந்த தனது ஒரே அருமைக் குமாரத்தியைப் பிரிந்து இனிமேல் இருக்க வேண்டும் என்ற பயங்கர உண்மை வண்டி புறப்படும் நேரம் நெருங்க நெருங்கச் செல்லம்மாளின் இருதயத்தை அதிகமாக வேதனை செய்யத் தொடங்கியிருந்தது. முதல் வகுப்பு வண்டி ஜன்னல் அருகில் வந்த அவள் மனத்திலே குமுறிய துக்கம் பேச முடியாது தடுத்து விடவே, அன்பு கனியும் கண்களால் பெண்ணைப் பார்த்துக் கொண்டு பித்தம் பிடித்தவள் போல் நின்று கொண்டிருந்தாள்.

''ஜாக்கிரதை! கீதா ஜன்னல் ஓரமாக உட்கார்ந்து கொள்ள வேண்டாம் கரி கண்களில் பட்டுவிடும்!'' என்று தங்கைக்குப் புத்திமதிகள் சொல்லிக் கொண்டிருந்த துரைசாமி விவரிக்க முடியாத சஞ்சலத்தில் தவித்தான். ''பாவம் கீதா, குழந்தையைப் போல் கள்ளம் கபடமின்றி வளர்ந்த பெண் புக்ககம் போகிறாள். 'அண்ணா! அண்ணா!' என்று ஒலிக்கும் அவளது கனிவு நிறைந்த குரலை இனி வீட்டில் எப்பொழுது திரும்பக் கேட்கும் பாக்யம் வருமோ?'' எனப் பலவாறு சிந்தித்த அவன் தனது குரலை அடிக்கொரு தடவை கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டான்.

புக்ககம் வந்ததிலிருந்து மிகவும் அன்புடன் தன்னைச் சகோதரிபோல் பாவித்து சிநேகமாக நடந்து கொண்ட நாத்தனார் ஊருக்குப் போவது கௌரியின் மனத்தை என்னவோ செய்தது. அதுவரைக் கேலியாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்த கௌரி வண்டி புறப்படும் நேரத்தின் அறிகுறியான மணி அடித்ததும் திடுக்கிட்டாள் ''போய் வரட்டுமா, மன்னி?'' என்று வண்டியின் உள்ளேயிருந்து கீதா கண்ணீர் பொங்க விடைப் பெற்றுக் கொண்ட பொழுது கௌரிக்குப் பேசமுடியவில்லை அவள் கண்களில் நிறைந்த நீர் கீதாவின் முகத்தை மறைத்தது.

தம்பதிகளை வழி அனுப்ப வந்தவர்களில் மிகவும் குதூகலமாகத் தென்பட்டவர்கள் இரண்டு பேர்கள் இருந்தார்கள அவர்கள்தான் சேஷகிரியும் அவர் மனைவி மங்களமும்.

பூந்திடலில் தன் வீட்டுக்கு விருந்தாளியாக வந்த சகோதரியின் பிள்ளைக்குத் தகுந்த வரனாகத் தேடிக் கல்யாணம் செய்து வைத்ததில் மிகவும் திருப்தியடைந்திருந்த மங்களம் உற்சாகத்துடன் கீதாவுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தாள். வண்டி புறப்படும் நேரம் ஆனதும் ''சமத்தா இரும்மா, கீதா, போனதும் லெட்டர் போடு'' என்று உரத்த குரலில் கத்தினாள் அவள்.



நாகராஜனிடம் ஹாஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்த சேஷகிரி வண்டி புறப்படும் நேரமாகிவிட்டதை உணர்ந்ததும், ''என்ன ராஜா! கடைசியில் அர்ஜுனன் தீர்த்த யாத்திரை செய்த கதையாகத்தான் முடிந்தது அல்லவா?'' என்று குறும்புத்தனமாகக் கேட்டபடி அன்புடன் அவன் கையைப் பிடித்துக் குலுக்கினார்.

அவருக்குப் பதில் ஒன்றும் சொல்லாத நாகராஜன் அவரைப் பார்த்துப் புன்னகை செய்து விட்டு மெல்ல நகர ஆரம்பித்த வண்டியில் ஏறிக் கொண்டான். வண்டி கொஞ்சதூரம் செல்லும்வரை ஜன்னல் வழியாக ஆகாயத்தையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நாகராஜன் உள்ளே வந்து கீதாவின் எதிர் பக்கமிருந்த ஆசனத்தில் உட்கார்ந்தான். ஜன்னல் வழியாக வெளியே பார்த்தவள் போல் காணப்பட்ட கீதா அவன் பக்கம் திரும்பினாள். கோவைப்பழம்போல் சிவந்திருந்த அவளது கண்களைக் கண்ட நாகராஜன் திடுக்கிட்டான். தாயாரையும் அண்ணாவையும் பிரிந்து வந்த துக்கத்தைத் தாங்காது அவள் அழுதிருக்கிறாள் என்று ஊகித்துக் கொண்ட அவன் தன்னிடத்தை விட்டெழுந்து அவள் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

''ஊரை விட்டு வர நேர்ந்ததேயென்று வருத்தமோ?'' என்று அன்புடன் கேட்டான்.

''அப்படி ஒன்றுமில்லை'' என்று மெல்லக் கூறிய கீதா நாணத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

''பூந்திடலை விட்டுப் பிரிய மனக் கஷ்டப்படும் நீயே ஒரு மாதம் போனால் பொன்மேட்டை விட்டுப் பிரிய மாட்டாய், அப்படி உன் மனம் மாறிவிடும் தெரியுமா?'' என்று உல்லாசமாக மொழிந்து அவளது முகவாயை நிமிர்த்தினான் அவன்.

''பொன்மேடு அப்படி ஒரு ஆகர்ஷண சக்தியுள்ள பூமியா?'' என்று ஒய்யாரமாகக் கேட்ட அவள் தன் கணவனைப் பார்த்து ஒருமோகனப் புன்னகை செய்தாள்.

''அந்த பூமியிலுள்ளவர்கள் மிகவும் காந்த சக்தி வாய்ந்தவர்களாம்'' என்று பரிகாசமாகப் பகர்ந்தான் அவன்.

''ரொம்ப பயமாக இருக்கிறதே! இந்த ஊரின் காந்த சக்திக்கு நானும் அடிமையாகி விடுவேன் போலிருக்கிறதே!'' என்று கெஞ்சலாகக் கூறிய கீதா ஆசனத்தில் சாய்ந்து கொண்டாள்.

இடத்தை விட்டு எழுந்த நாகராஜன் அதிகமாகக் குளிர் காற்று வீசும் ஜன்னலைச் சாத்திவிட்டு மனைவி அருகில் வந்தான். ''கீதா, நீ தூங்க வேண்டும். குளிர் காற்றுப் பட்டு உனக்குத் தொண்டை கட்டிக் கொண்டு விட்டால் பிறகு என்னால் அக்காவுக்குப் பதில் சொல்ல முடியாது. உன்னைப் பத்திரமாக அழைத்துக் கொண்டு வரும்படி அக்கா உத்தரவு போட்டிருக்கிறாள்'' என்றான் வேடிக்கையாக.

''ஆமாம், நான் கேட்க வேண்டுமென்றிருந்தேன். உங்களுடைய அக்கா ஏன் நமது கல்யாணத்திற்கு வராமலிருந்து விட்டார். பூந்திடலில் சிலர் அவர் வராததைப் பற்றிக் கொஞ்சம் குறைவாகவே பேசினார்கள். எனக்கும் கஷ்டமாக இருந்தது. தனது ஒரே அருமைத் தம்பியின் கல்யாணத்தைப் பார்க்க ஆசைப்படாதிருந்தது ஆச்சர்யமாக இருக்கிறது?'' என்றாள்.

மனைவியின் வார்த்தைகளைக் கேட்டதும் நாகராஜனின் மந்தகாசவதனம் சட்டென்று மாறுதலடைந்தது. ''சிறு வயதிலேயே விதவையாகி விட்டதால் அக்கா அதிகமாக வெளியே செல்லும் வழக்கம் இல்லை. அதுவும் சந்தோஷ காரியங்களில் அவள் கலந்து கொள்வதே கிடையாது. அதோடு, போன வருஷம் அடுத்தடுத்து எங்கள் குடும்பத்தில் நடந்து விட்ட இரு துக்க சம்பவங்கள் அவள் மனத்தை மிகவும் உடைத்து விட்டன. தான் அதிர்ஷ்ட



ஹீனமானவள் என்றும், தன்னைப் போன்றவர்கள் மங்களகரமான காரியங்கள் நடக்கையில் இல்லாமலிருப்பதேமேல் என்றும் விவாதித்து வர மறுத்துவிட்டாள். நான் அதற்கு மேல் வற்புறுத்தவேயில்லை, ஆனால் வீட்டுக்குப் புதிதாக ஒரு பெண் வந்து தங்கள் குலத்தை விளங்க வைக்கப் போகிறாள் என்ற 'மகிழ்ச்சியில் அக்கா நம்மை வரவேற்கப் பிரமாதமான ஏற்பாடுகள் எல்லாம் செய்யக் கல்யாணத்திற்கு முன்பே ஆரம்பித்து விட்டாள்', என்று பெருமூச்சுடன் முடித்தான்.

கணவன் முகத்தில் படிந்த சோகக் குறிகளைக் கவனித்த கீதா மெல்லிய குரலில், ''அக்கா வராததைப் பற்றி நான் விளையாட்டாகக் கேட்டேனே ஒழிய, உங்கள் மனத்தைப் புண்படுத்த அல்ல'' என்று மன்னிப்புக் கோரும் பாவனையில் பேச ஆரம்பித்தாள்.

''உன் கேள்வியை நான் தப்பாக நினைக்கவேயில்லை. பாவம் உனக்கு என் சகோதரியைப்பற்றி என்ன தெரியும்? அவளிடம் பழகினால் பிறகு உனக்கு அவளை மிகவும் பிடித்துவிடும் என்பது நிச்சயம். அக்கா எங்கள் குடும்பத்தின்மீது மட்டற்ற அபிமானம் கொண்டவள். அண்ணா சங்கரன் மீது அவளுக்குக் கொஞ்சம் அதிகமாகவே அன்பு இருந்தது. அதற்குக் காரணம் என்னவென்றால் அவனால்தான் எங்கள் குடும்பம் இன்று நாங்கள் இருக்கும் நிலைக்கு வந்தது'' என்று நாகராஜன் கூறியதைக் கேட்ட கீதா ''அப்படியா'' என்று ஆச்சரியப்பட்டாள்.

''நான் பிறந்து, எனக்குப் பதினைந்து வயது ஆகும் வரை எங்கள் குடும்பத்திற்குச் சொத்து என்று காலணா கூடக் கிடையாது. எங்கப்பா இறந்து போனதும் என் தாயார் இருந்த கொஞ்ச நிலத்தையும் விற்று அண்ணாவைப் படிக்க வைத்ததிலும் அக்காவிற்குக் கல்யாணம் செய்து வைத்ததிலும் செலவிட்டு விட்டாள். என் தமையன் சங்கரனுக்குப்படிப்பின்மேல் கொஞ்சங்கூட இஷ்டமே கிடையாது. அவன் என்னை விட ஆறு வயதுதான்

மூத்தவன். அவனுக்கு எட்டு வயது மூத்தவன் அக்கா பாகீரதி படிப்புக்குச் செலவழிக்கும் பணத்தைப்போட்டு ஏதாவது தொழில் செய்ய ஆரம்பித்தாலும் உபயோகமாக இருக்கும் என்று தைர்யமாக மரவியாபாரத்தில் புகுந்தான். பல வருஷங்கள் சோம்பலின்றி அவன் உழைத்துத் தொழிலில் காட்டிய முயற்சியினால்தான் 'பொன்மேடு டிம்பர் ஒர்க்ஸ் என்று புகழ் பெற்ற தொழிற்சாலை உண்டாகியது!' என்றான் நாகராஜன்.

வியப்புடன் கணவன் குடும்பத்துச் சரித்திரத்தைக் கேட்டுக் கொண்டிருந்த கீதா, ''இதெல்லாம் எனக்கு ஒன்றும் விவரமாகத் தெரியாது. ஏதோ நீங்கள் வியாபாரம் செய்வதாக மட்டுந்தான் நான் அறிவேன்'' என்றாள்!

''நியாயப்படி பார்த்தால் அண்ணாவின் சொத்தில் எனக்கு ஒரு துரும்புகூடச் சொந்தமில்லை. இரவும் பகலும் அவன் உழைத்தபோது நான் உல்லாசமாகப் பட்டணத்தில் என்ஜினியர் பட்டத்திற்குப் படித்துக் கொண்டிருந்தேன். தான் படிக்காத குறையை என் மூலமாக நிவர்த்தி செய்து கொள்ள விரும்பிய அண்ணா என்னைப் படிக்கும்படி மிகவும் உற்சாகப்படுத்திப் பண உதவி செய்தான்'' என்றான் உணர்ச்சியோடு.

''பாவம், குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வந்த அவர் கல்யாணம் செய்துகொண்டு சௌக்கியமாக வாழக் கொடுத்து வைக்கவில்லையே' என்று அனுதாபப்பட்டாள் கீதா.

''முதல் நாள் வாங்கி வந்த புதுக்காரில் உல்லாசமாக வெளியே சென்ற அண்ணா அன்று வீடு திரும்பவேயில்லை. வேகமாக அவன் செலுத்திய கார் ஒருமரத்தின் மேல் மோதியதில் படுகாயமடைந்ததனால் உடனே அவன் இறந்துவிட்டான்'' என்று கூறிய நாகராஜன் வருத்தந் தாங்காமல் பேச்சை'நிறுத்தினான். கம்பீரமான அவன் முகத்தில் வருத்தத்தின் சாயை படர்ந்தது.



''அதை நினைத்துக் கொண்டு இப்பொழுது வருந்தி என்ன பயன்? அவர் ஆரம்பித்து வைத்திருக்கும் தொழிலை அவருடைய வாரிசான நீங்கள் நன்றாகச் செய்து அவருடைய பெயரை என்றும் நிலைநாட்ட வேண்டும். அதுதான் உங்கள் அண்ணாவின் ஆத்மா சாந்தி பெற நீங்கள் செய்யும் காரியமாகும்.'' என்று கூறினாள் கீதா.

மனைவியின் மொழிகள் நாகராஜனுக்கு மிகவும் ஆறுதல் அளித்தன ''அண்ணாவின் மரணத்திற்குப் பின்னால் என் தாயார் அதிக நாட்கள் ஜீவித்திருக்கவில்லை. அவர்கள் இறந்து ஒரு வருஷம் ஆவதற்குள் வீட்டில் சந்தோஷ காரியங்களைப் பற்றி எதற்கு நினைக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் நமது விவாகத்தை இவ்வளவு நாட்கள் ஒத்திப் போட்டேன்'' என்றான்.

''தன்னந்தனியாக அவ்வளவு பெரிய வீட்டில் அக்காவுக்குப் பொழுது போவது கஷ்டமாகத்தானே இருக்கும்!'' என்று கேட்டாள், கீதா.

''கிராமத்தில் இருந்த எங்கள் வீடு மிகவும் சிறியது. அண்ணாவின் தொழில் கொஞ்சம் அபிவிருத்தியடைந்ததும் அவனுக்குப் பழைய வீட்டில் நாங்கள் வசிப்பது பிடிக்கவில்லை. கிராமத்திற்கு ஒதுக்குப்புறமாகவுள்ள இடத்தில் தன் தொழிற்சாலைக்கு அருகாமையில் பெரிய பங்களா ஒன்றைக் கட்டிவிட்டான். முதலில் சில நாட்களுக்குப் பக்கத்தில் மனித சஞ்சாரமற்ற இடத்தில் குடியிருக்க அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் நாளாவட்டத்தில் அமைதியும் தனிமையும் நிரம்பிய அந்த இடம் மிகவும் பிடித்துவிட்டது'' என்றான்

ஆசனத்தில் சாய்ந்து கொண்டிருந்த கீதா திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். ''நமது பங்களா மனித சஞ்சாரமற்ற இடத்திலா இருக்கிறது? பக்கத்தில் அடுத்தடுத்து வீடுகள் ஒன்றும் கிடையாதா?'' என்று மிகவும் கவலையுடன் கேட்டாள்.

அவள் முகத்தில் அலையலையாகத் தோன்றி மறைந்த பீதிக் குறிகளைக் கண்ட நாகராஜன். "ஐயோ அசடே! துப்பறியும் நாவல்களில் விவரிக்கப்படும் பயங்கர மான தனி பங்களாக்கள் ரகத்தைச் சேர்ந்தது நமது வீடு என்றுதானே நினைத்துப் பயப்படுகிறாய்? அப்படி ஒன்று மில்லை. கிராமத்துக்கும் நமது பங்களாவுக்கும் நான்கு பர்லாங் தூரம்தான் உள்ளது. அதுவுமல்லாமல் பங்களா வில் நீ தனியாகவா இருக்கப் போகிறாய்! நீ, நான், அக்கா வேலைக்காரர்கள். சமையற்காரம்மா, தோட்டக்காரன், அப்பப்பா, எவ்வளவு பேர்கள்! பயப்படாதே! உன்னை தன்னந்தனியாகக் கொண்டுபோய் ஒரு சிறையில் அடைத்துவிடப் போவதாக நீ நினைக்க வேண்டாம்" என்றான் கேலியாக.

"அப்படி நான் ஒன்றும் நினைக்கவில்லை. அக்கம் பக்கத்தில் பேச்சுத் துணைக்கு மனிதர்கள் ஒருவரும் இல்லையா என்றுதான் கேட்டேன்" என பதில் அளித்த அவள் மெல்லச் சிரித்தாள்.

"என்னைவிட உனக்குப் பேச்சுத் துணைக்கு இன்னும் யார் வேண்டும்?" என உல்லாசமாகக் கேட்ட நாகராஜன் அவள் கன்னத்தை அன்புடன் வருடினான்.

வண்டி ஒரு சிறு ஸ்டேஷனில் நின்றது. நாகராஜன் கீதா இருந்த வண்டிக்குள் தம்பதிகள் இருவர் அவசரமாக வந்து ஏறினார்கள். அதுவரை தனியாகப் பேசிச் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்த கீதாவுக்கு அவர்களின் வரவு கொஞ்சம் ஏமாற்றத்தை உண்டு பண்ணியது.

நாகராஜன் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். இரண்டாகியிருந்தது. "சரி கீதா! நீ தூங்கு. சிறிது நேரமாவது. விடிகிறவரை விழித்துக் கொண்டிருந்தால் உன் உடம்பு ஒத்துக்கொள்ளாது நீ சௌக்கியமாகப் பிர யாணம் செய்ய வேண்டும் என்ற உத்தேசத்துடனே தான் முதல் வகுப்பு டிக்கெட் வாங்கினேன்" என்றான் தாழ்ந்த குரலில்.



"நான் மட்டும் இல்லாவிட்டால், 'பொன்மேடு டிம்பர் வொர்க்ஸின்' புரொப்ரைட்டர் மூன்றாவது வகுப்பில் தான் பிரயாணம் செய்வாராக்கும்?" என்று கேலியாகக் கேட்ட கீதா படுக்கையின் மீது சாய்ந்து கொண்டாள்.

"உண்மையிலேயே நான் தனியாகப் பிரயாணம் செய் கையில் அநேகமாக மூன்றாவதுவகுப்பில்தான் போவேன். அதிகக் கூட்டமிருந்தால் இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்வேன் ஒரு பொழுதும் முதல் வகுப்பில் போவது கிடையாது" என்றான்.

"மூன்றாவது வகுப்பில் பிரயாணம் செய்வதனால் மகாத்மா காந்தியாகி விட்டதாக உங்கள் எண்ணமோ?" என்று பரிகாசமாகக் கேட்ட கீதா கணவனைப் பார்த்துச் சிரித்தாள்.

"டாம்பீகமான வாழ்க்கை எனக்கு அவ்வளவாகப் பிடிப்பதில்லை. எளிய வாழ்க்கை வாழ எல்லோருக்குமே தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்பது என் கொள்கை ஆரம்பத்திலிருந்து எளிய வாழ்க்கை வாழ்ந்து பழக்கப்பட்டிருந்தால் வாழ்க்கையில் திடீரென்று ஏதாவது ஒரு விதத்தில் சரிவு ஏற்பட்டால் அதைச் சுலபமாக மனக் கஷ்டமின்றிச் சமாளித்துக் கொள்ளலாம் அல்லவா? சதா தொழிலாளி ஒருவனைப் போன்று வாழ்க்கை நடத்திப் பார்த்தால்தான் தொழிலாளியின் கஷ்ட நஷ்டங்கள் முதலாளிக்கு நன்கு விளங்கும். அவர்கள் குறையை உணர்ந்து அவ்வப்போது நிவர்த்தி செய்து கொடுத்தால் தான் தொழிலாளிகள் நம்முடன் ஒத்துழைத்துத் தொழிலை வெற்றி பெறச் செய்வார்கள். எளிய வாழ்க்கை வாழ வேண்டும். கையிலெடுத்தத் தொழிலை மிக்க வெற்றிகரமாக நடத்தி எல்லோரும் சந்தோஷமாக வாழ வேண்டும் இதுதான் என்வாழ்க்கையின் லட்சியம்,' என்றான் நாகராஜன்.

கீதாவிற்குக் கணவனின் கொள்கை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. மண்வெட்டியைத் தன் கையாலே

பிடித்து வேலை செய்த தொழிலாளி ஒருவன் விடாமுயற்சியால் பணக்காரன். ஆனால், அவன் பெரிய காரில் பிரயாணம் செய்வது தகாதா? பங்களாவில் ஆடம்பரமாக வசிப்பது தப்பா? எல்லோருமே எளிய வாழ்க்கை வாழ ஆரம்பித்து விட்டால் மற்றத் தொழில்கள் எப்படி முன்னுக்கு வரும்? பட்டாடைகளையும் முத்தாபரணங்களையும் செய்யும் தொழிலாளிகளின் கதி என்னவாகும்? ஜனங்கள் எளிய வாழ்க்கை வாழ்வதினால் தேசத்திலே பலவிதமானத் தொழில்களும், செழிப்புற விளங்கி விடாது. ஆடம்பரமான வாழ்க்கை வாழ வேண்டும் ஆனால் அதற்குப் போதிய பணத்தைச் சம்பாதிக்க ஒவ்வொருவனும் முயற்சிக்க வேண்டும். அவ்வளவுதான்'' என்று தனக்குள்ளே பலவாறு எண்ணமிட்டாள்.

''நீ பதில் சொல்லாததைப் பார்த்தால் என் கொள்கைகள் உனக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது'' என்று கேட்டான் நாகராஜன் விடாப்பிடியாக.

கணவன் மனப்போக்கிற்கு எதிராகப் பேச இஷ்டமில்லாமல் கீதா, ''நீங்கள் ஒரு லட்சியவாதி போலிருக்கிறது. எனக்கு உங்கள் கொள்கைகள் மிகவும் பிடித்திருக்கின்றன என்று ஒரு பொய்யைச் சொல்லிவிட்டுத் தன் கண்களை மூடிக் கொண்டாள். இப்படியும் அப்படியும் ஆடிக் கொண்டு சென்ற வண்டி எழுப்பிய ஓசை, அவளுக்கு யாரோ தாலாட்டு பாடுவதைப் போன்று இனிமையாக இருந்தது. சில நிமிஷங்களில் தன்னை மறந்து ஆனந்தமயமான நித்திரை வசப்பட்டாள்.

''கீதா, எழுந்திரு! ஊர் வந்து விட்டது'' என்று நாகராஜன் அவளை எழுப்பியபொழுது திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள். பொழுது நன்றாக விடிந்து விட்டதை உணர்ந்த அவள் பரபரப்புடன் சாமான்களை எடுத்து வைப்பதில் முனைந்தாள். ''வண்டி இங்கே சில நிமிஷங்கள்தான் நிற்கும். சீக்கிரம் கீழே இறங்கு. மற்றதை நான் கவனித்துக் கொள்கிறேன் என்று''—



நாகராஜன் கூறிவிட்டு, பெட்டி படுக்கை முதலியவைகளைத் தானே எடுத்து கீழே வைத்தான்.

பொன்மேடு ரயில்வே ஸ்டேஷன் பூந்திடல் ஸ்டேஷனை விட மிகவும் சிறியது என்பதை கவனித்தாள் கீதா. ஆனால் அங்கே இறங்கிய பிரயாணிகள் கூட்டம் அதிகமாகத்தான் இருந்தது. 'என்ன கூட்டம் இந்த சின்ன ஸ்டேஷனில்!'' என்று பிரமித்தாள் அவள்.

''பொன்மேடு ஒரு பெரிய வியாபாரத் ஸ்தலமல்லவா. போக்குவரத்து அதிகம் கொஞ்ச நாளில் பார் உங்கள் பூந்திடலைவிடப் பெரிய நகரமாகிவிடப் போகிறது இது!'' என்று பெருமையுடன் கூறிய நாகராஜன் சுற்றும் முற்றும் யாருக்காகவோ பார்த்தான்.

''சாமி, வந்துட்டீங்களா? நீங்க இங்கிருக்கிறது தெரியாம அந்தக் கடைசிலே போய்த் தேடிக்கிட்டிருந்தேன்!'' என்று தனது முப்பத்திரண்டு பற்களையும் காட்டிக் கொண்டு வந்தான் வேலைக்காரன் ஒருவன்.

''சொக்கா, வண்டி தயாராக இருக்கிறதல்லவா? இந்தச் சாமான்களையெல்லாம் கொண்டு போய் முதலில் வை'' என்று நாகராஜன் உத்தரவிட்டான்.

''அடே ஆறுமுகம் வாடா இங்கே ஐயா இங்கிட்டு இருக்காரு!'' என்று உற்சாகத்துடன் கத்திய வேலைக்காரன் தனது முண்டாசை இறுகக் கட்டிக் கொண்டு சாமான்களைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டான்.

''அவர்கள் இருவரும் நமது பங்களா வேலைக்காரர்கள்'' என்று அவர்களை அறிமுகப்படுத்திக் கொண்டே நாகராஜன் ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தான்.

பின்னாலேயே நடந்த கீதா தன்னை அதிசயமாக அங்குள்ளவர்கள் திரும்பிப் பார்த்ததைக் கவனித்தாள். ''ஏன் இப்படி இவர்கள் என்னை விறைத்துப் பார்க்

கிறார்கள். இந்த ஊரார் சுத்த நாட்டுப்புறத்தவர்களாக இருக்கிறார்களே! எங்கள் ஊரில் இப்படி ஒன்றும் பார்க்க மாட்டார்கள்'' என்றாள் மெதுவாகக் கணவனிடம்.

''எனக்குக் கல்யாணம் என்பது ஊர் பூராவும் தெரியும் என் மனைவி எப்படி இருக்கிறாள் என்று பார்ப்பதில் அவர்கள் ஆவல் காட்டுவது இயற்கைதானே? அதைத் தவிர இந்த ஊர் ஜனங்கள் நீ நினைப்பது போன்ற அத்தனை நாகரிகம் தெரியாத காட்டு மிராண்டிகள் அல்ல'' என்று சிரித்த நாகராஜன், ''வண்டியில் ஏறிக் கொள்'' என்று உபசரித்தான்.

வண்டி என்றதும் கீதா பளபளவென்று மின்னும் ஒரு பெரிய காரை எதிர்ப்பார்த்துக் கொண்டு வந்தாள். மயிலைக் காளைகள் பூட்டிய இரட்டை மாட்டு வில் வண்டியைக் கண்டதும் அவளுக்கு ஏமாற்றம் தாங்க முடியவில்லை.

நாகராஜன் உதவி செய்ய வண்டிக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டாள். மிருதுவான பஞ்சு மெத்தையும், சாய்ந்து கொள்ளச் சிறு திண்டுகளும் கொண்ட மாட்டு வண்டி உட்கார செளகர்யமாகத்தான் இருந்தது. ஆனால் என்ன இருந்தாலும் பளபளவென்று புது மெருகுடன் வந்து நிற்கும் காரின் அழகிற்கு மாட்டுவண்டி ஈடாகி விடுமா?

வண்டிக்காரச் சொக்கன் கம்பீரமாக ஏறித் தன் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டான். புதிதாக வரும் எஜமானியை வீட்டுக்கு அழைத்துச் செல்லும் தனிப் பெருமை தன்னுடையது என்று கருதியவன்போல் சர்ட்டையைச் சொகுசாகச் சுழற்றினான் மயிலைக் காளைகள் சதங்கை நாதத்துடன் வேகமாகப் புறப்பட்டன.

வண்டி சென்ற பாதை மிகவும் குறுகலாக இருந்தது. இங்குமங்கும் சிறு குண்டும் குழியுமான பாதையாதலால்



அடிக்கொரு தடவை வண்டி மிகவும் வேகமாக ஆடி அசைந்தது. பாதையின் ஓரத்தில் பசுமையாக ஓங்கி வளர்ந்திருந்த புதர்கள் பார்க்க ரம்யமாக இருந்தன சீதா இருந்த மனநிலையில் அவளால் அவற்றை ரசிக்க முடியவில்லை.

''வண்டி என்றதும் நான் கார் என்று நினைத்துக் கொண்டேன்!'' என்று மெல்ல ஆரம்பித்தாள் கீதா.

''காரா? அண்ணாவின் மரணத்திற்குக் காரணமாயிருந்த காரை என் தாயாரும் அக்காவும் மிகவும் வெறுத்தார்கள். அதை உடனேயே விற்றாகி விட்டது. மேலும் எனக்குக் கார் அவசியம் இல்லை. கரடு முரடான இந்த மாதிரி பாதைக்குக் காரை விட வண்டிதான் மிகவும் நல்லது'' என்றான் நாகராஜன்.

தாரினால் மெழுக்கப்பட்ட பூந்திடலின் பல தெருக்கள் கீதாவின் மனக்கண் முன் தோன்றின. உடனே அவள் மனத்தில் ஒருவித ஏக்கம் ஏற்பட்டது 'மின்சார விளக்கொளி. அதிலே ஒன்றன் பின் ஒன்றாக ஊர்ந்து செல்லும் நாலு விதக் கார்களின் அழகியத் தோற்றம் அவை எழுப்பும் பெட்ரோலின் மணம்—இவையெல்லாம் கொண்ட நாகரிகத்தின் இருப்பிடமான பூந்திடல் நகரம் எங்கே. பொன்மேடு எங்கே? எங்கே திரும்பினாலும் காடுகளும், புதர்களுமாகக் காட்சியளிக்கின்றதே! புதர்களில் பாம்புகள் அதிகம் வசிக்கும் என்று சொல்லுவார்களே!'' என்று எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டாள் கீதா.

''இந்த ஊர்ப்பாதைகள் எல்லாம் இப்படித்தான் இருக்குமா!'' என்று மனத்தாங்கலுடன் கேட்டாள் முடிவில் அவள்.

''அநேகமாக மனிதர் பழக்கத்திற்கு உட்பட்ட சாலைகள் எல்லாம் இப்படித்தான் இருக்கும். ஆனால் நம் தொழிற்சாலையிலிருந்து நம் வீட்டிற்கு வரும் பாதை மிகவும் செப்பனிட்ட பாதை. அதைத் தவிர தொழிற்

சாலையிலிருந்து சென்னைக்குச் செல்லும் ராஜபாட்டை ஒன்று இருக்கிறது. அது மிகவும் நல்ல பாதை. எங்கள் தொழில் போக்குவரத்துகள் எல்லாம் அந்தப் பாதை மூலமாகத்தான் நடக்கும்'' என்று விவரித்தான் நாகராஜன்.

''அப்படியென்றால் நீங்கள் ஒரு கார் வைத்துக் கொள்ளலாமே!'' என்று மறுபடியும் பேச்சை ஆரம்பித்தான் அவள்.

''கார் வாங்குவதைப் பற்றிய ஆக்ஷேபணையைத்தான் சொன்னேனே? என் தொழிற்சாலைக்கும் வீட்டுக்கும் உள்ள தூரம் மூன்று பர்லாங்குதான். அங்கு நான் அநேகமா வண்டியில்தான் போவது வழக்கம். இல்லாவிடில் என மோட்டார் சைக்கிளில் போவது உண்டு. நமது வர்த்தக விஷயமான போக்குவரத்திற்கென்று நான்கு லாரிகள் இருக்கின்றன. ஆகவே உல்லாச யாத்திரைக்கென்று எனக்குக் கார் அவசியமாகத் தோன்றவில்லை'' என்று முடித்தான்.

அவன் குரலில் தொனித்த கண்டிப்பு கீதாவிற்குப் பிடிக்கவில்லை. நாகராஜன் அன்பு நிறைந்தவன் என்றாலும் கொஞ்சம் பிடிவாதக்காரனாக இருப்பான் போலிருக்கிறது என்று எண்ணிய அவள் பேச்சை மாற்றும் எண்ணத்துடன், ''நமது பங்களா இன்னும் அதிக தூரத்திலிருக்கிறதோ?'' என்று கேட்டாள்

அரைகுறையாகச் சம்பாஷணையைக் கேட்டு வந்த வண்டிக்கார சொக்கன், ''இல்லீங்கம்மா! கூப்பிடு தூரத்துலே நம்ப ஊடு இருக்குது. டேஷனுக்கும் ஊட்டுக்கும் ஐந்தே கல்லுதான்'' என்றான்.

ஐந்து மைல் தூரம் கூப்பிடு தூரமாகத் தென்படுகிறதைக் கேட்ட கீதாவிற்கு ஆச்சர்யம் தாங்கமுடியவில்லை. அரை பர்லாங்கு தூரத்திற்குக் கூட ரிக்ஷாவில் செல்ல நினைக்கும் பூந்திடலில் வளர்ந்த



பெண்ணான அவள். ஐந்து மைல் தூரத்தைக் கூப்பிடு தூரம் எனக் கணக்கிடும் கிராமவாசியின் மனப்போக்கை வியக்காமலிருக்க முடியவில்லை, ''இந்தக் கணக்குப் படிப பார்த்தால் ஊர் எப்படி இருக்கும்? ஜனங்கள் எப்படிப் பட்டவர்களாக இருப்பார்கள்? கிராம வாழ்க்கை மிகவும் கடினமாக இருக்கும் போலிருக்கிறதே!'' என்று பல சந்தேகங்கள் அவள் உள்ளத்தில் எழுந்து அவள் மனத்தைக் குழப்பிக் கொண்டிருந்தன.

## 11

மெதுவாக வந்து சேர்ந்த வண்டி முடிவில் பெரிய சுவர் எழுப்பப்பட்ட ஒரு பங்களாவின் தோட்டத்திற்குள் நுழைந்தது. கம்மென்று முகத்தின் மீது வந்து தாக்கிய மலர்களின் வாசனையை உணர்ந்த கீதாவின் கண்கள் வியப்பினால் மலர்ந்தன.

''பெரிய தோட்டம் போலிருக்கிறதே!'' என்று மகிழ்ச்சியுடன் கீதா கூறியதைக் கேட்ட நாகராஜன், ''ஆமாம், கொஞ்சம் பெரிய தோட்டந்தான். உனக்குத்தான் தோட்டக்கலை மீது மிகவும் ஆர்வமாயிற்றே! இந்தத் தோட்டத்தைக் கவனித்துச் செடிகளை வளர்ப்பதிலேயே உன் பொழுது பாதி கழிந்துவிடும்'' என்று குறும்புத் தனமாகக் கண்களைச் சிமிட்டினான். வண்டி வாசலை அடைந்ததும் இறங்கினர். நாகராஜன், கீதாவிற்குக் கை கொடுத்து அதிலிருந்து இறங்க உதவி செய்தான். நாகரிக தோரணையில் கட்டப்பட்டிருந்த அந்தப் பெரிய பங்களாவைக் கவனித்த கீதாவின் உள்ளம் குதுகலத்தினால் கூத்தாடியது. ''ஊர் எப்படியிருந்தாலும் என்ன? வீடு அழகாக இருக்கிறது. நாகரிகமாகக் கட்டப்பட்ட பங்களா'' என்று நினைத்துச் சந்தோஷப்பட்ட அவள் உள்ளே நுழைய எத்தனித்தாள்.

''நீங்க இரண்டு பேருமா அப்படியே கிழக்கு முகமா சித்த நில்லுங்கோ!'' என உத்தரவிட்ட வண்ணம் உள்ளே

விருந்து வந்த அம்மாளைப் பார்த்தாள் கீதா, சிறிது இரட்டை நாடி சரீரம் படைத்த அந்த ஸ்திரீதான் கணவனின் அக்கா என்பதை நொடிப் பொழுதில் ஊகித்துக் கொண்டு விட்டாள்.

பாகிரதிக்கு வயது நாற்பதுக்கு மேலிருக்கும் என்ற உண்மையைப் பாதி நரைத்துப் போன அவளது கூந்தல் எடுத்துக் காட்டியது. முழங்கால்வரை வந்த அவளது புடவையின் பாணியைக் கண்ட கீதா நாத்தனார் மிகவும் கர்நாடகமானவள் என்று ஊகித்துக் கொண்டாள்.

"தங்கம்! ஆரத்தியைச் சீக்கிரம் கொண்டுவா. நாழியாகிறது பார்!" என்று உரத்த குரலில் கத்திய பாகிரதி சந்தோஷமுள்ளவளாகக் காணப்பட்டாள். "தங்கம் நமது வீட்டு சமையற்காரம்மா. சுமங்கலி அதனால்தான் அவளை ஆரத்தி எடுக்க அக்கா முதலிலேயே ஏற்பாடு செய்துவிட்டாள் போலிருக்கிறது" என்று மெல்லிய குரலில் மனைவியிடம் சொன்னான் நாகராஜன்

தனது சகோதரி செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் பற்றி அவன் பெருமையாகப் பேசுவதைக் கவனித்து வந்த கீதா தன் கணவன் அக்காமீது அன்புடையவன் என்பதைப் புரிந்து கொண்டாள்.

காலணா அகலக் குங்குமப் பொட்டு நெற்றியில் மின்ன ஏறக்குறைய பாகிரதியின் வயதையே உடைய தங்கம், ஆரத்தித் தட்டுடன் வாயிற்பக்கம் வந்தாள். புன்னகையுடன் அவள் ஆரத்தியைச் சுழற்றிக் கொட்டித் தம்பதிகளை வரவேற்றாள்.

மாமியாருக்கு அடுத்தபடியாகப் புக்ககத்து உறவில் வேண்டப்படாதவர்கள் நாத்தனார்கள். அதுவும் சிறு வயதிலேயே ஒரு விதவையான ஒரு நாத்தனார் வீட்டோடு இருந்து அதிகாரம் செய்ய ஆரம்பித்து விட்டால் கேட்க வேண்டியதே இல்லை! அவளுக்கு ஏற்பட்ட ஒரு துக்க



வாழ்க்கையை வீட்டில் உள்ள எல்லோரும் பகிர்ந்து கொள்ளவேண்டும். விதவை நாத்தனார் வீட்டில் இருக்கையில் தம்பியின் மனைவி உல்லாசமாகத் தன்னைச் சிங்காரித்துக் கொண்டு வாழ்க்கையின் மகிழ்ச்சியை வெளியில் எடுத்துக் காண்பிப்பது மிகவும் ரஸக் குறைவு என்று கருதுவார்கள் கிராமங்களில்.

அத்தகைய சூழ்நிலையில் தான் வாழ நேரிடும் என்று முன்பே கவலைப்பட்டுக் கொண்டிருந்த கீதாவுக்குப் பாகிரதியம்மாளைப் பார்த்ததும் பாதிக் கவலை மறைந்து விட்டது. சாந்தம் ததும்பிய அவளது முகத்தையும் வயதையும் கண்டு அவள் தன் வாழ்வின் இன்பத்தின் குறுக்கே நின்று பாழ்படுத்த மாட்டாள் என்று கீதா தன்னையே சமாதானம் செய்து கொண்டாள்.

பங்களா மிகவும் பெரியதாகத்தான் இருந்தது. ஆனால் அது வெறிச்சென்று காணப்பட்டதன் காரணம் தகுந்த மேஜை நாற்காலிகள் இல்லாதிருந்ததனால்தான் என்பதை ஒரே பார்வையில் புரிந்து கொண்டாள் கீதா.

"ஆமாம்! இந்த ஹால் ஏன் இப்படி வெறிச்சென்றிருக்கு? இரண்டு பழைய நாற்காலிகளை மட்டும் போட்டிருக்கிறீர்களே. இது போதுமா? இங்கே அழகான சோபாக்களும் வட்ட மேஜையும் போட்டு ஜன்னல்களுக்கு நீலத் திரைகள் கட்டினால் இந்த இடம் எவ்வளவு அழகாக இருக்கும் தெரியுமா?" என்று அவள் கணவனைப் பார்த்துக் கேட்டாள்.

"இதை அழகுபடுத்த அக்காவுக்கு அவ்வளவாக விஷயங்கள் ஒன்றும் தெரியாது. பாவம், அவள் பழைய காலத்து மனுஷி. நீ இனி இது விஷயமாகத் தாராளமாக உனது கைத் திறமையைக் காட்டலாம். எனக்கு ஒரு ஆக்ஷேபணையும் இல்லை!" என்று நாகராஜன் சிரித்துக் கொண்டே உத்தரவு கொடுத்தான்.

''அம்மா கீதா! குளிக்கிறதுக்கு வெந்நீர் தயாராக இருக்கு ஸ்நானம் பண்ணிட்டுவா, காப்பி சாப்பிட்டுட்டுக் கொஞ்ச நேரம் போய் மாடியிலே தூங்கலாம். ரயில்லே வந்தது சிரமமாயிருக்கும் உனக்கு'' என்று அருமையாக பாகீரதி வந்து அழைத்தாள். கீதா அவளைப் பின் தொடர்ந்து ஸ்நான அறைக்குள் சென்றாள்.

''ஆமாம்! பச்சைத் தண்ணீர் வேண்டுமானால் எங்கே எடுத்துக் கொள்கிறது! குழாய் எந்தப் பக்கம் இருக்கிறது'' என்று அவள் கேட்ட கேள்வி பாகீரதிக்குச் சிரிப்பை உண்டாக்கியது. ''இந்த ஊரில் குழாய் கிடையாதுன்னுட்டு ராஜா உன் கிட்ட சொல்லலையா? கிணற்று ஜலம்தான் எல்லாவற்றிற்கும். அந்த அண்டாவிலே வேண்டிய பச்சைத் தண்ணீர் இருக்கிறது எடுத்துக் கொள். வெந்நீரிலேயே குளி. இந்த ஊர் பச்சைத் தண்ணீர் உன் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது'' என்று கூறிவிட்டுச் சென்றாள். ''குழாய் கூடக் கிடையாதா? கிரகசாரமே!'' என்று தனக்குள்ளே முணு முணுத்தாள் கீதா.

அன்று பகல் போஜனம் மிகவும் தடபுடலாகத் தயாரிக்கப்பட்டிருந்தது புதிதாக வீட்டிற்கு வந்து நுழையும் திருலக்ஷ்மியை வரவேற்க ஏற்பாடு செய்திருந்த விருந்தைப் பிரயாண அலுப்பினால் கீதாவினால் சாப்பிடவே முடியவில்லை: போதாததற்கு ''பாயசம் இன்னும் கொஞ்சம் சாப்பிடம்மா'' என்று சமையற்காரத் தங்கம் உபசாரம் செய்து இலையில் கொண்டு வந்து அதிகப்படியாகப் பரிமாறிவிட்டாள்.

நாத்தனார் கையில் கொண்டு வந்து கொடுத்த வெற்றிலைத் தட்டை எடுத்துக்கொண்டு மாடிக்குக் கீதா வந்த பொழுது நாகராஜன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவர்கள் உபயோகத்திற்கு என்று விடப்பட்டிருந்த மாடி அறை மிகவும் விஸ்தாரமாக இருந்தது. படுக்கை உபயோகிக்கும் கட்டில்களைத் தவிர அந்த அறையில் வேறு ஒரு பொருளும் இல்லை.



கீதாவுக்குப் பகலில் தூக்கம் வருவது அபூர்வம். வந்திருக்கும் இடமோ புதிது. ஆகவே அவளுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. கணவனின் நித்திரைக்குப்பங்கம் ஏற்படாதிருக்க வெளிச்சம் அதிகம் வீசும் ஜன்னலை சிறிது மூடினாள். பிறகு அறையை விட்டுக்கிளம்பிய அவள் பங்களாவைச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தாள்.

மாடியையும்தோட்டத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டு அவள் மறுபடியும் பங்களாவிற்குள் நுழையும் பொழுது பகல் நான்கு மணிக்கு மேலாகி விட்டதைக் கண்டு அவளுக்கே அதிசயமாக இருந்தது.

''அம்மா கீதா; நீ தூங்காமல் வெளியிலே தோட்டத்தைச் சுத்திப் பார்த்துண்டு இருந்தியா? சாயங்காலமா பார்க்கப் போயிருக்கலாம். உம், சரி இங்கே வா. தலையைப் பின்னி விடுகிறேன்'' என்று அழைத்தாள் பாகீரதி.

கீதாவின் நீண்ட கூந்தலைக் கண்ட பாகீரதிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. விதவிதமாகப் பூத்துப் பறிப்போர் இல்லாமல் வாடிவிடும் தோட்டத்து மலர்களை வைத்து அலங்கரிக்க ஏற்ற அழகான கூந்தல்தான் என்று மனதிற்குள்ளே வியந்து கொண்ட அவள் தலையை வாரிப் பின்னி விட்டாள், கம்மென்று மணங்கமழும் மலர்க் கதம்பத்தைத் தலையில் சூட்டிய பின்பு, ''முகத்தை அலம்பிப் பொட்டு இட்டுக் கொண்ட பிறகு, சமையல் கட்டிலே டிபன் காப்பி இருக்கு. நீ எடுத்துண்டுட்டு அவன் எழுந்து விட்டால் அவனுக்கும் கொண்டு போய்க் கொடு', என்று கூறிய பாகீரதி, தான் அன்று செய்த காரியங்கள் எல்லாவற்றிலும் அடைந்த வெற்றியில் மிகவும் திருப்தியடைந்தவள் போல் எழுந்து மற்றக் காரியங்களைக் கவனிக்கக் கிளம்பினாள்.

கீதா மாடியறைக்குள் நுழைந்த பொழுது தூக்கத்தினின்று முன்பே எழுந்த நாகராஜன், ''அப்பாடி! இவ்வளவு நாழியாச்சா இன்னைக்குக் காப்பி போட! எனக்கு

வெளியிலே போகணும்னு அக்காகிட்டச் சொல்லியிருந்தேன். மறந்து விட்டாள் போலிருக்கிறது'' என்றான்.

''எங்கே போகணும்!'' என்று கேட்ட கீதா காப்பி டிபனை அவன் பக்கத்தில் கொண்டு வந்து வைத்தாள்.

''கல்யாண தடபுடலில் தொழிற்சாலையைப் பதினைந்து நாட்களாக எட்டிக் கூடப்பார்க்கவில்லை. இன்று வருவதாக மானேஜருக்குக் கடிதம் போட்டிருக்கிறேன். பாவம், மணி ஐந்துக்குத் தொழிற்சாலையை மூடிவிட்டாலும் அவர் எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார். நான் போய்க் கவனிக்க வேண்டிய வேலைகள் அதிகம் இருக்கின்றன'' என்றான்.

'வந்ததும் வராததுமாக இன்றைக்கு அங்கே போய்த்தான் ஆகவேணுமா?'' என்று கீதா கொஞ்சலாகக் கேட்டுக் கொண்டே அவன் அருகில் உட்கார்ந்தாள்.

''ஆமாம்.போய்த்தான் ஆக வேண்டும்'' வேலையில் நானே அசிரத்தை காட்டுவது தொழிலாளிகளுக்குத் தெரிந்தால் தொழில் உருப்பட்டாற் போல்தான்'' என்று சிரித்த நாகராஜன், ''ஏன் அப்படிக் கேட்டாய்'' என்று வினவினான்.

''நீங்கள் திரும்பி வரும்வரை நான் தனியாக எப்படிப் பொழுதைக் கழிப்பது என்ற யோசனையினால்தான் கேட்டேன்'' என்றாள் கீதா.

''உனக்குப் பொழுது போகவில்லையென்றால் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிரு. தோட்டக்காரன் கந்தன் வீடு தோட்டத்தின் கோடியில் இருக்கிறது. உனக்கு இஷ்டமான செடிகளைப் பற்றி அவனைக் கேட்டால் விவரித்துச் சொல்வான்'' என்று கூறிவிட்டு வெளியே போக எழுந்திருந்தான்.

''தோட்டத்தையும் பங்களாவையும் முன்பே சுற்றிப் பார்த்தாகி விட்டது இனிப் பார்க்க வேண்டியது ஒன்றுமில்லை!'' என்று கொஞ்சிய அவள் கூடவே எழுந்திருந்தாள்.



''நீ நினைத்தபடி பங்களா பயங்கரமாக ஒன்றும் இல்லையல்லவா?'' என்று கேலியாகக் கேட்டான் கணவன்.

''பங்களா மிகவும் அழகாக இருக்கிறது. ஆனால் எத்தனையோ குறைகள் இருப்பதைக் கவனித்தேன்'' என்று மனைவி சொல்வதைக் கேட்ட அவன், ''என்ன குறைகள் என்று சொல்லட்டுமா? வீட்டிலே வேண்டிய மேஜை நாற்காலிகள் இல்லை. அழகு பார்த்துக்கொள்ளப் பெரிய நிலைக் கண்ணாடி கிடையாது. கேட்டு மகிழ ரேடியோ இல்லை. அவ்வளவுதானே?'' என்றான்.

''ஒரு முக்கியமான விஷயத்தை விட்டு விட்டீர்களே! மாடி ஹாலில் இருக்கும் பெரிய அலமாரியில் ஒரு கதைப் புத்தகம் கூடக் கிடையாது! அவ்வளவும்மரத் தொழிலைப் பற்றிய புத்தகங்கள். அதுவும் அமெரிக்க ஆசிரியர்கள் எழுதிய புத்தகங்கள். ஏன் உங்களுக்கு அமெரிக்கா மீது மட்டற்ற மோகம் ஏற்பட்டிருக்கிறது?'' என்று கேட்ட கீதா கலகலவென்று சிரித்தாள்.

''ஆமாம்! அந்த நாட்டின் மீது எனக்கு அபார மோகம்தான்'' என்று கூறிய நாகராஜன் ஆர்வத்துடன் அவளது கரங்களைப் பற்றினான். கீதா பதில்பேசாதிருப்பதைக் கண்ட அவன், 'ஈவிரக்கமற்ற முதலாளிகள் வர்க்கத்தைச் சேர்ந்தவன் உன் கணவன் என்று தானே நினைக்கிறாய்?'' என்று கேட்டான்.

''அப்படி நினைக்க இடமில்லை. ஏனெனில், உங்கள் புத்தக அலமாரியில் சில ருஷ்ய ஆசிரியர்களின் புஸ்தகங்களையும் பார்த்தேன் பொது உடமையையும் முதலாளித்துவத்தையும் தராசில் வைத்து நிறுத்துப் பார்த்துக் கொண்டிருக்கும் உங்கள் மனம் எந்தப் பக்கம் சாயுமோ என்றுதான் யோசனை!'' என்று சிரித்தாள்.

''இப்பொழுது என் மனம் உன் பக்கந்தான் சாய்ந்திருக்கிறது. கீதாவைத் தவிர வேறு எதன் மேலேயும்

அதற்குச் சிந்தனை கிடையாது. தெரியுமா?'' என்று உல்லாசமாகக் கேட்ட நாகராஜன் அவள் முகத்தை அன்புடன் பார்த்தான்.

மனவெழுச்சி மிக்க அடைந்த கீதா தன் சிவந்த முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டு, பார்த்து அலுக்காத இடம் இந்த வீட்டில் ஒன்று உண்டு என்றால் அது தான் பங்களாவின் பின்புறத்துத் தோட்டம் என்பேன் நான் தோட்டக்காரன் வீட்டின் அருகிலிருந்து தொட்டில் கட்டியிருக்கும் பசுக்களையும் பார்த்தேன் அவற்றில் இரண்டு சமீபத்தில் தான் கன்று போட்டனவென்று தோட்டக்காரன் எனக்குச் சொன்னான். அந்தக் கன்றுக் குட்டிகளைப் பார்த்த பொழுது எனக்கு அவற்றை விட்டு வர மனமேயில்லை'' என்று சந்தோஷத்துடன் கூறினாள்.

''அப்படியென்றால் அங்கே போய் அவற்றுடன் விளையாடிக் கொண்டிரு, நான் வரும் வரை!'' என்று பரிகாசமாகக் கூறிவிட்டுக் கீழே இறங்கிச் சென்றான் நாகராஜன்.

அஸ்தமித்து நன்றாக இருட்டி விட்டதனால் ஹால் மின்சார விளக்கைக் கீதா ஏற்றினாள். தோட்டக்காரன் கொண்டு வந்து வைத்த பூக்குடலையைக் கீதாவிடம் கொடுத்த பாகீரதி, ''இதில் இருக்கும் பூமாலையை எடுத்து அந்த உள்ளேயிருக்கிற படங்களுக்குப் போடு அம்மா!'' என்று அறை ஒன்றைச் சுட்டிக் காட்டினாள்.

பூஜை அறைபோல் தென்பட்ட அந்த அறையின் சுவரில் பக்கத்து பக்கத்தில் இரண்டு பெரிய போட்டோக்கள் மாட்டப்பட்டிருந்தன. இறந்து போன மாமனார் மாமியார் அவர்களின் படம் அவை என்று ஊகித்துக் கொண்ட கீதா ஒரு பூமாலையை எடுத்து ராமா பட்டாபிஷேகப் படத்திற்குப் போட்டு விட்டு அங்கிருந்த சிறு வெள்ளிக்குத்து விளக்கை ஏற்றி வைத்தாள். மீதியிருந்த இன்னொரு பூமாலையை அந்த இரு படங்களுக்கும் ஒன்றாகப் போட்டு விட்டுச் சிறிது நேரம் அவற்றையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.



நாத்தனார் பாகீரதி அளவுக்கு மீறிய சுறுசுறுப்பு உள்ளவளாக இருந்தாள். சமையல் கட்டிற்கு ஓடுவதும், தோட்டக்காரனிடம் ஏதோ உத்தரவு போடுவதும், பிறகு பால்காரனுக்கு வேலை சொல்வதுமாக அவள் பம்பரம் போல் சுற்றிச் சுற்றி வேலை செய்து கொண்டிருந்தாள். அவளுக்கு கீதாவிடம் ஒரு வார்த்தை கூடப் பேசப் பொழுது இல்லை.

உள்ளுக்கும் வாசலுக்குமாக செய்வதென்னவென்று அறியாது நடந்து பொழுதைக் கழிக்க முயன்ற கீதா மிகவும் சோர்வுடன் நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டாள்.

இரவு வெகுநேரமாகியும் வெளியே சென்ற கணவன் திரும்பி வராதது அவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது. பசி ஒரு புறமும், பிரயாணக் களைப்பினால் ஏற்பட்ட தூக்கம் ஒரு புறமும், அவளை வாட்டிக் கொண்டிருந்தன பிறந்த வீடாக இருந்தால் இவ்வளவு நேரம் அவள் சாப்பிட்டு இரண்டு தூக்கம் தூங்கியிருப்பாள். அண்ணா வந்தால்தான் என்று அவள் ஒரு நாள் கூடத் தன் பசியைத் தாங்கிக் கொண்டு காத்திருந்தது கிடையாது.

''அப்படி நடக்குமா புக்ககத்தில்? கணவன் வருவதற்குள் சாப்பிட்டுத் தூங்க முடியுமா? நாகரிக மனப்பான்மை மிகுந்த நாகராஜன், கீதா அப்படிச் செய்தால் ஒன்றும் ஆக்ஷேபணை சொல்லமாட்டான். ஆனால் பாகீரதி என்ன நினைப்பாள்? வீட்டிற்கு வந்திருக்கும் தம்பி மனைவிக்குக் கொஞ்சங்கூடக் கணவனிடம் மரியாதை கிடையாது என்றுதான் எண்ணிக் கொள்வாள் கணவன் வரவிற்காக எதிர்பார்த்துத் தூங்காமல் விழித்துக் கொண்டு பட்டினியுடன் காத்திருப்பதுதான் பதிபக்தி என்று நினைக்கும் கர்நாடக மனுஷியாயிற்றே அவள்? என்று சிந்தித்த கீதாவிற்கு, நாகராஜன் மேல் சிறிது கோபம் உண்டாயிற்று.

''மனைவியைப் புதிதாக அழைத்து வந்திருக்கும் அந்த ஒரு தினம் வீட்டில் இருந்து விட்டால் என்ன குடிமுழுகி விடும்? அப்படித்தான் வெளியில் சென்றால், சீக்கிரமாவது

திரும்பி வரக்கூடாதா? என்று எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தாள் கீதா.

அதிக நேரம் கழித்து வந்த தம்பியைப் பார்த்து, ''ஏண்டா ராஜா! இன்னிக்கு ரொம்ப நாழி பண்ணிட்டியே?'' என்று கேட்டாள் பாகீரதி.

''பதினைந்து நான்கள் வேலை அப்படியே குவிந்து கிடந்தது. அதைக் கவனித்து வர நாழியாச்சு'' என்று கூறிவிட்டு, கைகால்கள் அலம்பிக் கொண்டு அவன் சமையற்கட்டிற்கு வந்தான்.

போஜனத்திற்குப் பின்பு கீதா கணவனிடம் ஒன்றுமே பேசாது மாடியறைக்குச் சென்று விட்டாள். பாகீரதி சமையற்கட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். ''என்னக்கா! எப்படி இருக்கிறாள் தம்பியின் மனைவி? உனக்கு அவளைப் பிடிக்கிறதல்லவா?'' என்று உற்சாகமாகக் கேட்டான் நாகராஜன்.

''பெண் மகாலக்ஷ்மி போல் அழகாகத்தான் இருக்கிறாள்'' என்று அவள் சொல்லியதைக் கேட்ட அவன், ''அழகு இருக்கட்டும். குணத்தைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?'' என்றான்.

''ஒரு நாளில் என்ன சொல்லிவிட முடியும்? பொதுவாகப் பார்த்தால், ரொம்ப விளையாட்டு குணமுடையவளாக இருக்கிறாள் பேசும்போது பச்சைக் குழந்தையைப் போல சிலசமயம் தோன்றுகிறது கள்ளங் கபடமற்ற பெண். நல்ல பெண்'' என்றாள்.

அதைக் கேட்டு திருப்தி அடைந்த அவன், ''படித்த பெண்ணாயிற்றே, கொஞ்சம் நாகரிகமாக இருப்பாளே, அது உனக்கு பிடிக்குமோ இல்லியோ என்று எனக்குக் கவலையாக இருந்தது'' என்றான்.

''அவளுடைய நாகரிகப் பழக்கவழக்கத்தைப் பத்தி நான் ஒண்ணும் தடுத்துச் சொல்லமாட்டேன். சிறிசுதானே அவள் இஷ்டப்படி இருக்கட்டும் என்று இருந்துடுவேன்.



என்னவோப்பா! பெரியவா பண்ணின புண்ணியத்தில் நீ ஒருத்தனாவது கல்யாணம் பண்ணிண்டு நன்னா குடியும் குடித்தனமுமாயிருக்கணும். அதுதான் எனக்கு வேண்டியது. கார்தாலே நீங்க உள்ளே நுழைஞ்சபோது சங்கரன் ஞாபகம் எனக்கு வந்தது. இரண்டு நாட்டுப் பெண்கள் ஜோடியா வந்து வீட்டிலே குடித்தனம் பண்ணிப்பார்க்கக் கொடுத்து வைக்கலையேன்னு எனக்குத் துக்கமாயிருந்தது அவன்தான் அல்பாயுசாகப் போயிட்டான். அம்மாவாவது இருக்கப் படாதா? கீதாவைப் பார்த்து அப்படியே பூரிச்சுப் போயிடுவாளே அவள்?'' என்று கூறி முடிப்பதற்குள் கண்களைத் துடைத்துக் கொண்டாள் பாகீரதி.

''நடந்து போனதையெல்லாம் பத்தி நீ வருத்தப்படக் கூடாதுன்னு எத்தனை தடவை சொல்லிருக்கேன்?'' என்று அன்புடன் கடிந்துக் கொண்டான் நாகராஜன். ''அது சரி! கீதா எங்கே!'' என்று முடிவில் கேட்டாள் பாகீரதி. ''மாடிக்குப் போனாள். ஏன் கூப்பிடணுமா?'' என்று நாகராஜன் கேட்டதற்கு, 'வேண்டாம். பால் சாப்பிடாமல் போய் விட்டாள். இதை நானே எடுத்துக் கொண்டு போய்க் கொடுக்கிறேன்'' என்று பால் சொம்பைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள்.

''வேண்டாம் அக்கா! வேலை அதிகம் செய்து உனக்கு இன்றைக்கு அதிகச் சிரமம். என் கையில் கொடு. நான் கொண்டு போய்க் கொடுக்கிறேன்'' என்று பாத்திரத்தை வாங்கிக் கொண்டு மாடிப்பக்கம் சென்றான் நாகராஜன்.

ஒரு பக்கமாகத் திரும்பிப் படுத்திருந்த கீதாவின் முகம் அவன் பக்கமாக இருந்தது. நெற்றி மீது கூந்தல் புரள, மெல்ல சுவாசம் விட்டுக் கொண்டு அவள் நித்திரை செய்யும் அந்த நிலையில் அவளது முகம் பச்சிளங் குழந்தையைப் போன்று அவனுக்குத் தென்பட்டது. விளக்கொளி சுரீர் என்று முகத்தில் பட்டதும் விழிப்படைந்த

கீதா திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டாள். ''என்னை அக்கா கூப்பிட்டாரா என்ன!'' என்று அவள் கேட்டாள்.

''பால் சாப்பிடாமல் நீ தூங்கிவிட்டது உன் நாத்தனாருக்கு மனக்கஷ்டமாக இருந்ததாம் என் கையில் பாத்திரத்தைக் தூக்கிக் கொடுத்து, கொண்டு போய்க் கொடு என்று உத்தரவிட்டாள் அக்கா. பார், நீ எத்தனை அதிர்ஷ்டசாலி! நாத்தனாருக்கு உன் மேல் எத்தனை அன்பு!'' என்று கூறிய நாகராஜன் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

''ஆமாம்! நீங்கள் தினமும் இப்படித்தான் நேரம் கழித்து வருவீர்களாக்கும்?'' என்று சிறிது கோபத்துடன் கணவனைப் பார்த்துக் கேட்டாள் கீதா.

''என் வேலை ஒருநாள் அதிக நேரமாகும். ஒருநாள் சீக்கிரத்திலேயே முடிந்துவிடும். நான் வீடு திரும்ப நேரமாகிறதென்று நீ கவலைப்படக்கூடாது, தெரிந்ததா என்றான் நாகராஜன் மிகவும் வாத்ஸல்யத்துடன்.

அதைக்கேட்ட கீதாவின் கோபம் தணிந்தது. ''கவலை ஒன்றுமில்லை. வெறுமனேதான் கேட்டேன்'' என்றாள் அவள்.

## 12

அடுத்த நாள் காலை படுக்கையை விட்டு எழுந்த கீதா முதல் வேலையாகத் தன் தமையனுக்குத் தனது சௌக்கியத்தைப் பற்றி ஒரு கடிதம் எழுதினாள். உறையில் விலாசத்தை எழுதிக் கணவன் மேஜையின் மீது வைத்தாள். கீழே இறங்கி ஸ்நானம் செய்துவிட்டு வேறு உடை உடுத்திக்கொண்டாள். இலைதெரியாது பூத்திருந்த அடுக்கு மல்லிகைச் செடிகளைப் பார்த்து அவள் ஆர்வத்துடன் பூக்குடலையை எடுத்துக் கொண்டு தோட்டத்திற்கு ஓடினாள். குடலைக்குள் மல்லிகைப் பூக்களை ஆசையுடன் கொய்து நிரப்பிக் கொண்டிருந்தாள்.



''கீதா! கீதா!'' என்று கூப்பிட்டுக் கொண்டு அங்கே வந்து நின்ற கணவனைப் பார்த்த அவள், ''என்ன வேணும்?'' என்று சாவதானமாகக் கேட்டாள்.

காலையிலே நீ பூ எடுக்கக் கிளம்பி விட்டாயாக்கும்! சமையற்கட்டிலே அக்கா தனியாக வேலை செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறாள்?...'' என்று எரிச்சலுடன் கணவன் அதட்டியது அவளுக்குத் தாங்க முடியாத வியப்பை உண்டாக்கியது.

''அக்கா தனியா வேலை செய்கிறாரா? தங்கம் எங்கேயாம்!'' என்று கேட்டுக் கொண்டு அவன் அருகில் வந்தாள்.

''தங்கம் நான்கு நாட்கள் லீவில் ஊருக்குப் போயிருக்கிறாள்'' என்று நாகராஜன் பதில் சொன்னான்.

''நான் எப்பொழுது வருவேன்'' என்று தங்கம் காத்திருந்தாளோ லீவு எடுத்துக் கொள்ள?'' என்று முனகினாள் அவள்.

''பாவம். ஒரு வருஷமாக ஒருநாள் கூட ஓய்வின்றி நம் வீட்டில் அவள் வேலை செய்திருக்கிறாள். 'நான்கு நாள் லீவு வேண்டும். ஊருக்குப் போய்ச் சொந்த மனிதரைப் பார்த்துவிட்டு வரவேண்டும்' என்று கேட்டாள், சரி என்று அனுமதித்து விட்டேன். நேற்று முழுவதும் அதிகமாக வேலை செய்ததனால் அக்கா மிகவும் களைத்துப் போயிருக்கிறாள். அத்துடன் இன்று உதவியில்லாமல் வீட்டுக் காரியங்களைக் கவனிக்க வேண்டுமென்றால் அவளால் முடியாது. மேலும் அக்காவிற்கு 'ரத்த அழுத்த' நோய்வேறு உண்டு. நீ போய், கூடமாடச் சமையல் வேலையில் ஒத்தாசை செய்'' என்று மிகவும் தணிவான குரலில் சொன்னான் அவன்.

''சமையல் வேலையில் எனக்குப் பழக்கமே கிடையாது'' என்று பிடிவாதமாக மனைவி பதிலளிப்பதைக் கேட்ட நாகராஜன், ''பி. ஏ. பட்டம் பெறப் படிப்பதைவிட, சமையல் செய்யக்கற்றுக் கொள்வது ஒரு கடினமான

காரியமல்ல. பழக்கமில்லாவிடில் அக்கா சொல்லித் தருவாள் கற்றுக் கொள். போ!'' என்று அதட்டினான்.

கணவனின் கடுமையான சொற்களைக் கேட்ட கீதாவிற்குப் பதிலே பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது கண்களில் நீர் பொங்க விர் என அவனை ஏறெடுத்துப் பாராமல் பங்களாவை நோக்கிச் சென்றாள்.

முதல் நாள் முழுவதும் அன்பின்வடிவமாகத்தோன்றிய நாகராஜன் சுள்ளென்று எரிந்துவிழக் காரணம் என்னவாயிருக்கும்? தனக்கு வேலை செய்யத் தள்ளவில்லையென்றால் உண்மையை வெளியே சொல்லி கீதாவை நேரிடையாக உதவிக்கு அழைத்தால் அவள் மறுப்பாளா? அதைவிட்டுத் தம்பியிடம் கோள் சொல்லிக் கொடுத்திருக்கிறாள் பாகிரதி! என்ன இருந்தாலும் நாத்தனார் அல்லவா? நாத்தனார்கள் சகோதரன் மனைவியை உண்மையாக நேசித்து நடத்துவது மிகவும் அபூர்வம், பாகிரதி அம்மாள் அப்படி ஒன்றும் அந்த அபூர்வக் குழாத்தைச் சேர்ந்தவள் அல்ல. தேனொழுகப் பேசுகிறாளே என்று ஏமாந்து அல்லவா போய் விட்டோம். நாத்தனார் பெரிய எமகாதகியாக இருக்கிறாளே!— என்று மனத்தில் எண்ணிய கீதாவுக்குப் பாகிரதி மீது எழுந்த வெறுப்பு கொஞ்சநஞ்சமல்ல.

குள்ளநரி போன்ற தந்திரக்கார அக்கா மீது மட்டற்ற அபிமானம் தம்பிக்கு, ஆகவே, கணவனை உத்தேசித்தாவது பாகிரதியை நேரிடையாகப் பகைத்துக் கொள்ள முடியாது சர்க்கரையைப் போலத் தானும் நயவஞ்சமாகவே அவளிடம் பழக வேண்டும் என்று முடிவு செய்து கொண்ட கீதா, கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். புஷ்பக் குடலையைப் பூஜை அறையில் வைத்து விட்டு புடவைத் தலைப்பை இழுத்துச் சொருகிக் கொண்டு பாகிரதியின் முன்வந்து நின்றாள்.

''ஏன் அக்கா, இன்னிக்குத் தங்கத்தைக் காணுமே?'' என்று ஒன்றுமே தெரியாதவள் போல் வினவினாள்.



''நாலுநாள் லீவு வேணும்னு கேட்டாள். சரின்னுட்டான் ராஜா. விடியற்காலம் புறப்பட்டு ஊருக்குப் போயிருக்கிறாள். என்னத்துக்கு அம்மா கேட்டே?'' என்று பாகிரதி மிக்க அன்புடன் கேட்டது கீதாவுக்கு வேடிக்கையாக இருந்தது. ''முடிந்து கொடுத்துவிட்டு ஒன்றும் தெரியாதவள் போல நடிப்பதைப் பாரேன்'' என தனக்குள்ளே வியந்த அவள். ''உங்களுக்கு என்னாலான உதவியைச் செய்கிறேன், அக்கா! நீங்கள் எனக்கு இந்த ஆத்துச் சமையல் தினுசைக் கொஞ்சம் சொல்லிக் கொடுக்கணும்'' என்று விநயமாகக் கேட்டாள்.

''நீ என்னத்துக்கம்மா கஷ்டப்படணும்? வேண்டாம். எனக்கு இந்த வேலை ஒன்றும் பிரமாதமில்லை'' என்று கூறிய பாகிரதி, குடத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டு பின்கட்டிற்குப் போகப் புறப்பட்டாள்.

''சமையலுக்கு நான் ஜலம் கொண்டு வரேன். அக்கா! குடத்தை இப்படிக் கொடுங்கள் எனக்கு வேலை செய்ய ரொம்ப ஆசையாயிருக்கு'' என்று பிடிவாதமாகக் கீதா வழிமறிப்பதைக் கண்ட பாகிரதி சிரித்துக்கொண்டு ''உன்னால் அந்தக் கிணற்றிலிருந்து ஒரு குடம் ஜலம் கூடக் கொண்டுவர முடியாது கிணறு ரொம்ப ஆழமானது வெகு நாழி இழுக்கணும்!'' என்று கூறிக்கொண்டே குடத்தைக் கீழே வைத்தாள்.

பங்களாவின் பின் பக்கத்து தோட்டத்தில் இருந்த கிணற்றிலிருந்து இரண்டு குடம் ஜலம் இறைப்பதற்குள் வேலை செய்து பழக்கப்படாத கீதாவின் உள்ளங்கைகள் சிவந்துவிட்டன. பல்லைக் கடித்துக்கொண்டு சமையலுக்குத் தேவையான தண்ணீரை மட்டும் கொண்டுவந்து சேர்த்தாள். சிட்டுக் குருவியைப் போன்று மிகவும் துரிதமாகத் தான் ஏவிய வேலைகளை எல்லாம் கீதா செய்து முடித்ததைக் கண்ட பாகிரதிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ''படித்த பெண்ணானாலும் எத்தனை அடக்கம்! தம்பி அதிர்ஷ்டசாலிதான்!'' என உள்ளம்

மகிழ்ந்தாள். சமையல் முடிந்த உடனே, "அக்கா, நீங்க அங்க நாழிப் பட்டினி கிடக்கக் கூடாது. உட்காருங்கள், நான் பரிமாறுகிறேன்" என்று கீதா பாகீரதியை உபசரித்துச் சாப்பிடச் செய்தாள்.

தம்பி மனைவி செய்த உபசாரத்தில் மனம் பூரித்துப் போன பாகீரதி, "நான்தான் தினமும் ராஜாவுக்குப் பரிமாறுகிற பழக்கம். என்னதான் சமையல்காரி சமைத்தாலும் அவனுக்கு என் கையாலே சாதம் எடுத்துப்போட்டால்தான் எனக்குத் திருப்தி. இனிமேலே அந்த வேலை உன்னுடையது. புரிஞ்சுதா? ராஜா வருகிற நாழியாச்சு. அவன் சாப்பிட்டதும் என்னை வந்து கூப்பிடு. உனக்கு நான் எடுத்துப் போடுகிறேன்" என்று சொல்லிவிட்டு, பக்கத்து அறை ஒன்றில் சிறிது நேரம் தூங்கச் சென்று விட்டாள்.

அன்று நாகராஜன் பகல் போஜனத்திற்கு வீட்டிற்கு வரமுடியவில்லை. இருட்டிய பின்புதான் தொழிற்சாலையினின்று திரும்பி வந்தான். "கீதா!" என்று நாகராஜன் கூப்பிடுவது சமையற் கட்டில் வேலை செய்து கொண்டிருந்த கீதாவின் காதுகளில் நன்றாகக் கேட்டது. காலையிலேயே அவன் கூறிய கடுமொழிகள் மனத்தை உறுத்திக் கொண்டேயிருந்ததால் அந்தக் கோபத்தில் கவனிக்காதவள்போல் சும்மா இருந்தாள்.

"உன்னைக் கூப்பிடுகிறேனே, காது கேட்கலையா? அக்கா எங்கே!" என்று கேட்டுக்கொண்டு வந்து நின்ற நாகராஜன் மனைவியை உற்றுப் பார்த்தான் துளிர்த்த வியர்வையினால் நெற்றிக் குங்குமம் கரைந்து நாலாபக்கமும் பரவியிருந்த அவளது முகம் மிக்க களைப்புடன் தென்பட்டது. "பாவம் வேலை சிரமம் அதிகம் போலிருக்கிறது" என அவளைக் கண்டதும் அவன் மனம் இரங்கியது.

"அக்கா சாமான் அறையில் ஏதோ காரியமாக இருக்கிறார். என்ன வேணும்?" என்று கேட்ட கீதா கணவனது



கண்களைச் சந்திக்க விரும்பாதவள் போல் மறுபக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"சாப்பிடத் தீர்த்தம் வேண்டும். அவ்வளவுதான். ஏது? நெற்றி வேர்வை நிலத்தில் விழ இன்று நீ உழைத்திருக்கிறாய் போலிருக்கிறதே!" எனப் பரிகாசமாகக் கேட்ட அவன் அருகில் வந்தான்.

சுடச் சுட பதில் சொல்ல நினைத்த கீதா, அது சமயம் பாகீரதியம்மாள் உள்ளே வருவதைக் கவனித்து பேசாது ஒரு டம்ளரில் ஜலத்தை எடுத்துக் கணவன் கையில் கொடுத்துவிட்டு, முகத்தில் வழிந்தோடிய வியர்வையைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

அன்று இரவு சாப்பாட்டின் போது நாகராஜன் ஒரு நூதன சம்பவத்தை உணர்ந்தான். குலுங்கும் வளைகள் அணிந்த தளிர்க் கரங்களால் மனைவி பரிமாறச் சாப்பிட்ட போஜனம் அவனுக்குத் தேவாமிருதம் போல் இனித்தது. ஆனால் ஹாஸ்யமாக அவன் பேசிய வார்த்தைகளை ஒன்றும் கேட்காதவள் போல் கீதா 'உம்' என்றிருந்தாள். அவள் மௌனம் அவனுக்கு ஆச்சரியத்தையே உண்டாக்கியது. அக்கா முன்னிலையில் மனைவி தன்னுடன் சந்தோஷமாக வார்த்தையாட விரும்பவில்லை போலும் என்று எண்ணிக் கொண்டு மாடியறைக்குப் போனான்.

ஒருவழியாக எல்லாக் காரியங்களையும் முடித்துக் கொண்டு கீதா மாடிப்பக்கம் வந்தபொழுது எதிர்ப்புறத்து ஹாலில் கணவன் மேஜை அருகில் உட்கார்ந்து கொண்டு ஏதோ படித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். சந்தடி செய்யாது அவள் படுக்கை அறைக்குள் சென்றாள். ஆழமான கிணற்று ஜலத்தை வைராக்யத்துடன் மூச்சைக் கட்டிக் கொண்டு இழுத்த பொழுது அலுப்பு ஒன்றும் தோன்றவில்லை நாள் முழுவதும் செய்த வேலைக்குப் பின் சோர்வுடன் வந்து படுக்கை மீது உட்கார்ந்த பொழுதுதான் வேலையின் சிரமம் ஆரம்பித்தது முதுகை இரண்டாகக் கத்தரித்து விடுவது போன்ற இடுப்பு வலி ஒரு பக்கம்; மிளகாய் அரைத்துப் பழக்கப்படாத கைகளில்

அனல் பற்றியதைப் போன்ற எரிச்சல் ஒருபுறம்; புகையும் அடுப்படியிலே கிடந்து பொழுதைக் கழித்ததனால் ஏற்பட்ட தலைவலி ஒரு பக்கம். ஆக எல்லாம் சேர்ந்து அவளைப் பாதித்துக் கொண்டிருந்தன, எல்லாவற்றையும் விட காலையில் கணவன் கடிந்து கொண்டதனால் புண் பட்டிருந்த நெஞ்சம் கொதித்துக் கொண்டிருந்தது.

எதிர்ப்புறத்து ஜன்னல் வழியாகத் தெரிந்த நீல வானத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த பிறைச் சந்திரனை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள் அவள். தாழ்ந்தோடி வரும் மேகக் கூட்டங்களுக்குப் பாய்ச்சல் காட்டுபவன் போல் சந்திரன் மெல்ல நகர்ந்து ஓடிக் கொண்டிருந்தான், உருக்குலைந்து சிதறி வானப் பரப்பில் நாலா பக்கமும்! மிதந்தோடும் வெண்முகில் கூட்டங் களைப் போன்று அவள் சிந்தனையும் பல திக்கிலும் சிதறி ஓடிக் கொண்டிருந்தது.

''என்ன யோசனை பலமாக இருக்கே?'' என்று கேட்ட நாகராஜன் அருகில் வந்து அமர்ந்தான். திடுக்கிட்டுத் திரும்பிய கீதா கணவனைக் காலை சம்பவத்திற்குப் பிறகு முதன் முதலாகப் பார்த்தாள்.

''ரொம்ப சிரமம் உனக்கு இன்றைக்கு பாவம்!'' என்று அன்புடன் கூறிய நாகராஜன் அவள் கரங்களை ஆர்வத்துடன் பற்றினான்.

''சிரமத்தை விட்டுத் தள்ளுங்கள். உங்களுக்குத் திருப்தி தானே?'' என்று எரிச்சலுடன் கேட்ட கீதா தன் கரங்களை அவனது பிடியினின்று இழுத்துக்கொண்டாள்.

''ஏன் அப்படிக் கேட்கிறாய்?'' என்று ஆச்சர்யத் துடன் வினவினான் நாகராஜன்.

அவன் கேள்வியைக் காதில் வாங்கிக் கொள்ளாதவள் போல் கீதா இடத்தை விட்டு எழுந்திருந்தாள். எதிர்ப் பக்கத்து ஜன்னல் அருகில் போய் அதன் கம்பிகளைப்



பிடித்துச் சாய்ந்து கொண்டு அங்கிருந்தவண்ணம் கணவனைத் தைர்யமாகத் திரும்பிப் பார்த்தாள்.

அவளது வார்த்தைகளும் செய்கையும் நாகராஜனுக்கு வியப்பையே உண்டாக்கின. ''உனக்கு என் மேல் கோபம் என்று தோன்றுகிறது. ஆனால், எதற்காக'' என்று புருவத்தை நெறித்தான் அவன்.

''உங்களுக்கு எங்கே விளங்கப் போகிறது?'' என்று ஏளனமாகப் பதிலளித்த கீதா மிடுக்காக மறுபக்கம் திரும்பிக் கொண்டு ஜன்னல் வழியே ஆகாயத்தைப் பார்த் துக் கொண்டிருந்தாள். நாகராஜன் மௌனம் சாதித்தான் மறுபடியும் அறையில் நிசப்தம் நிலவியது சில நிமிஷங்கள் கழித்துத் திரும்பிப் பார்த்த கணவன் அவன் தன்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள் அருகில் ஓடி வந்து தனது கடு மொழிகளுக்காக அவளிடம் கெஞ்சியும், கொஞ்சியும் மன்னிப்புக் கோராமல் கடின சித்தனாகி, இருந்த இடத்தை விட்டு அசையாமல் அவன் உட்கார்ந்திருப்பதைக் காண அவளுக்கு வியப்பும் கோப மும் தாங்க முடியவில்லை.

''இன்றைக்குச் சமையற்காரி லீவு எடுத்துக் கொண் டாள். நாளைக்கு இன்னும் யார் யார் லீவு எடுத்துக் கொள்ள போகிறார்கள்? மாட்டுக் கொட்டிலில் பெருக்கும் வேலைக்காரி என்றைக்கு லீவில் போகிறாள்? அதை முன் னாலே சொல்லி விட்டால் நலமாக இருக்கும்'' என்று எகத்தாளமாக அவள் ஆரம்பித்தாள்.

உடனே பதில் அளிக்காது நாகராஜன் அவள் மனத்தி லுள்ளதைப் பார்வையினால் அறிந்து கொள்ள முயற்சிப் பவன் போல் அவள் முகத்தை ஊடுருவிப் பார்த்தான்.

''வீட்டு வேலை செய்வதை கௌரவக் குறைவாக நீ நினைக்கிறாய் அல்லவா?'' என்று முடிவில் கேட்ட நாக ராஜன் எழுந்திருந்து அவள் அருகில் வந்தான்.

''சமையற்காரம்மா லீவில் போனாள் என்றதால் அதற்காக மனைவியைச் சமையற்காரியாக்க வேண்டுமோ இன்னொரு சமையற்காரியை அவசரத்திற்கு நியமித்து வீட்டை நடத்த உங்களுக்கு அந்தஸ்தில்லையா??' என்று கோபத்துடன் கேட்டாள்.

''நாகரிகத்தின் உச்சியில் நின்று கொண்டிருக்கும் எந்தத் தேசத்திலும் தற்காலத்தில் பெண்கள் சமையல் வேலையை அநாகரிகம் என்று கருதவில்லை. ஏனோ உனக்கு அது இழிவான செய்கையாகத் தெரிகிறது. வேலைக்காரர்களே எல்லாவேலையையும்செய்துவிட்டால் ஓர் அவசர சமயத்தில் வீட்டை நிர்வகிக்கும் பொறுப்பை எப்படிக் கற்றுக் கொள்ள முடியும்? அதனால்தான் இன்னொரு சமையற்காரியை நியமிக்கவில்லை. தங்கம் லீவு எடுத்துக் கொண்டு சென்றது மிகவும் சிறிய விஷயம். இதைச் சமாளித்து வீட்டை நிர்வாகித்துக் கொண்டு போக உனக்குப் பொறுமை இல்லாமலிருப்பது எனக்கு ஆச்சரியமாகத் தான் இருக்கிறது'' என்றான் நிதானமாக.

''உடலை அலட்டிக் கொண்டு உழைக்க வேண்டும் என்று நிர்பந்தம் இல்லாத பொழுது வீணாக ஏன் சிரமப் பட வேண்டும் என்பது என் அபிப்பிராயம்'' என்று பிடி வாதமாகப் பதிலளித்தாள் கீதா.

''என் உள்ளக் கருத்தை நீ சரியாகப் புரிந்து கொண் டால் இப்படிப்பேசமாட்டாய். ஆடம்பர வாழ்க்கையின்றி எளிய வாழ்க்கை நடத்தி இன்பமாக இருக்க வேண்டும் என்பதே என் கொள்கை அதை நீ ஆதரிப்பாய் என்று எதிர்பார்க்கிறேன் என, கோபத்தை அடக்கிக் கொண்டு சொன்னான் நாகராஜன்.

''பிறரால் உணர்ந்து அறிய முடியாத கருத்துக்களை யும், கொள்கைகளையும், ஆதரிக்கும்படி நிர்ப்பந்திப் பதை நான் பலாத்காரமென்று தான்சொல்வேன். உங்கள் விசித்திரக் கொள்கைகள் ஒன்றும் எனக்குப்பிடிக்கவில்லை



இப்படிக் கடினமாகப் பேசி நிர்ப்பந்தப்படுத்தவும், அக்கா பேச்சைக் கேட்டுக்கொண்டு துன்பப்படுத்தவுந் தான் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொண்டீர்கள் போலிருக்கிறது'' என்று கோபத்தினால் படபடவென்று பொரிந்த கீதா துக்கம் தாங்காமல் விம்மியழுதாள்.

மனைவியின் சொல்லம்புகள் வந்து பாய்ந்தவேகத்தை கண்டு ஒரு விநாடி அப்படியே அசந்து போன நாகராஜன் ''அக்கா பேச்சைக் கேட்டேனா? என்ன அது?'' என்று ஆச்சரியத்துடன் வினவினான்.

''உங்க அக்காவின் திரிசமன் எனக்குப் புரியாது என்று நினைக்க வேண்டாம். மாடுபோல இந்த வீட்டிற்கு உழைக்க வேண்டுமென்று தனக்கு ஆசை இருந்தால் செய்கிறதுதானே? தம்பி பெண்டாட்டி எங்கே சுதந்திர மாக இருந்து விடப்போகிறாளோ என்ற பொறாமையிலே உங்களிடம் வந்து என்னவெல்லாமோ சொன்னாள். அதைக் கேட்டுக் கொண்டு என்மீது நீங்கள் அப்படி எரிந்து விழுந்தீர்கள்!'' என்றாள் அழுகையுடன்,

''நீ வீணாக அக்காமேல் பழிபோடுகிறாய், அவள் ஒரு பாவமும் அறியாதவள். அவளைச் சரியாகத் தெரிந்து கொண்டால் இப்படிப் பேச மாட்டாய். தன்மீது அபாண்டம் சுமத்தப்படுவதை அவள் அறிந்தால் மிகவும் மனக்கஷ்டமடைவாள்'' என்று தணிவாகக் கூறிய நாக ராஜன் மனைவியின் பக்கம் வந்தான் கண்களில் வழிந்த அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு, அன்பு ததும்பும் குரலில், ''கீதா என்னத்திற்கு வீணாக அழுகிறாய்? நீ இவ்வளவு அசடாக இருப்பாய் என்று நான் நினைக்கவே யில்லை. கல்யாணம் ஆன மறுதினம் என்னிடம் உங்கள் வீட்டு மாடி வராந்தாவில் என்ன சொன்னாய்? என் மேல் கொண்டிருக்கும் காதலுக்காக வாழ்க்கையில் எவ்வளவு துக்கத்தையும் சகித்துக் கொள்வேன், அப்படி இப்படி யென்றாயே! அதெல்லாம் வெறும் கவிதை உணர்ச்சியில் சொல்லப்பட்ட வார்த்தைகள்தாமா?'' என்று கொஞ்ச லாகக் கேட்டான்,

உணர்ச்சி மேலீட்டால் அன்று அவள் தன் கணவனிடம் என்னென்னவோ கூறியிருந்தாள். அவற்றைத் திரும்ப நினைத்துப் பார்க்கக்கூட அவளுக்கு வெட்கமாக இருந்தது. கணவன் தன் பிசகிற்காகக் கெஞ்சிக் கொண்டு மன்னிப்புக்கோரும் பாவனையில் பேசுவதைக் கேட்டு அவள் மனம் சிறிது சமாதானமடைந்தது. என்றாலும், முழுவதும் விட்டுக் கொடுக்க மனமின்றி, ''அன்றைக்கு என்னவோ உளறினேன். நினைத்துப் பார்த்தால் எவ்வளவு தவறு என்று தோன்றுகிறது.'' என்றாள் அழுத்தந் திருத்தமாக.

''அன்று உன் மனத்தில் பொங்கிக் கொண்டிருந்த காதல் நாலைந்து நாட்களில் வற்றிப்போய் விட்டது போல் இருக்கிறது!'' என்று ஏளனமாக அவன் கேட்டதைச் சகிக்காத சீதா, ''உங்கள்மேல் மட்டற்ற காதல் என் இருதயத்தில் அன்று பொங்கி வழிந்தது வாஸ்தவமே! ஆனால் அது காதல் அல்ல என்பது என் அபிப்பிராயம். மனைவிபுருஷன் இருவரும் நெருங்கிப் பல நாட்கள் பழகிய பின் ஏற்படும் அன்பிற்குத்தான் காதல் என்று பெயர். பார்த்த அளவிலே பரஸ்பரம் ஏற்படும் விருப்பத்தைக் காதல் என்று எப்படிச் சொல்ல முடியும்? அது வெறும் கவர்ச்சி உணர்வு' என இகழ்ச்சியாகப் பேசினாள்.

''ஓகோ! அன்பு என்பதற்கு இத்தனைப் பிரிவுப் பெயர்கள் உண்டு என்பது எனக்கு இத்தனை நாளாகத் தெரியாதிருந்தது'' என்று பதிலுக்கு கிண்டலாகக் கூறிய அவன் அறையில் முன்னும் பின்னும் கோபத்துடன் உலாவினான்.

சீதா பதில் பேசாது கண்ணீர் உகுத்துக்கொண்டிருந்தாள். சிறிதுநேரம் சிந்தனையிலே கழித்த நாகராஜன் சட்டென்று மனைவியின் பக்கம் திரும்பி, ''அப்படியென்றால் வெறும் கவர்ச்சியைக் காதல் என்று நினைத்துக் கொண்டு என்னை மணந்து கொண்டு விட்டாயே எத்தனைப் பெரிய தவறு செய்துவிட்டாய்!'' என்று கோபத்துடன் கேட்டான்.



''அந்தத் தவறையே தாங்களும் செய்திருக்கிறீர்கள்! பார்த்த அளவிலேயே என்னை விரும்பி மணந்து கொண்டீர்கள். அது கவர்ச்சியின் தூண்டுதலினாலே ஒழியக் காதலினாலல்ல. என் குணம், என் மனப்போக்கு இவற்றைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று உக்கிரமாகக் கேட்டு விட்டுக் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

''அதைப்பற்றி அறியத்தான் ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறாயே இப்பொழுது'' என்று ஏகத்தாளமாகக் கேட்ட நாகராஜன் கதவைப் படீரென்று சாத்திக் கொண்டு அறையை விட்டு வேகமாக வெளியேறினான்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்து தான் நடந்து கொண்ட விதத்திற்கு மன்னிக்கும்படி கணவன் கேட்டுக் கொள்வான் என்று எதிர்பார்த்துக் கொண்டு ஜன்னல் ஓரத்திலே சீதா வெகுநேரம் நின்று கொண்டிருந்தாள். ஆனால் வெளியே சென்ற நாகராஜன் திரும்பி அன்றிரவு அறைக்குள் வரவே இல்லை. கணவனின் பிடிவாதக் குணத்திற்குத் தான் விட்டுக் கொடுப்பதில்லை என்று மனத்திலே கருவிக் கொண்ட சீதா, முடிவில் தேகச் சோர்வும் மனச் சோர்வும் தாங்காமல் படுத்துத் தூங்க ஆரம்பித்தாள்.

மறுநாள் காலை பாகீரதி தடுத்தும் கேளாமல் முதல் நாள் போலவே சீதா சமையற் கட்டில் நாத்தனாருக்கு உதவிகள் செய்து கொண்டிருந்தாள். அக்கா! சீதா இருந்தால் வரச் சொல்லு!'' என்று மாடியிலிருந்த வண்ணம் இரைந்து கூப்பிட்டான் நாகராஜன்.

''நீ இன்னிக்கு ஒண்ணும் வேலை செய்ய வேண்டாம். அவன் வெளியிலே போக அவசரப்படுகிறான். நீ போய் முதல்லே அவனைக் கவனி. போ!'' என பாகீரதி உத்தரவிட்டுச் சீதாவை அனுப்பினாள்.

மாடிப் படிகள் ஒவ்வொன்றையும் தாண்டத் தாண்ட சீதாவின் நெஞ்சு வேகமாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. 'கடந்த இரவு கோபித்துக் கொண்டு கணவன் வெளியேறி விட்டதால் இது சமயம் தணிந்து போவது

தான் நியாயம்' என மனோராஜ்யம் செய்து கொண்டு மாடி ஹாலுக்குள் சென்றாள்.

"உன் சாமான்களையெல்லாம் எடுத்துச் சீக்கிரம் மூட்டைக் கட்டிக் கொள். பூந்திடல் போகும் வண்டி பகல் இரண்டு மணிக்குக் கிளம்புகிறது. அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன்" என்றான் நாகராஜன் அவள் முகத்தைப் பாராமல்.

எதிர் பார்க்காத அந்த வார்த்தைகளைக் கேட்டு கீதா பதைபதைத்துப் போனாள். பூந்திடலுக்கு எதற்காகப் போக வேண்டும்?" என்று அவள் கேட்பதற்குள் துக்கம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விட்டது.

"உன் அபிப்ராயமும் என் கொள்கைகளும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றன. கவர்ச்சியை ஆதாரமாக வைத்துக் கொண்டு குணத்தைப் பற்றி அறியாமல் நாம் இருவரும் கல்யாணம் என்ற தவறைச் செய்து விட்டோம் என்று சொன்னாய் அல்லவா? அந்தத் தவறை நீடித்துச் செய்து கொண்டிருக்க வேண்டாம். நீ இன்று வண்டியில் உன் பிறந்தகத்திற்குப் போகப் போகிறாய்" என்றான் கண்டிப்பாக.

கீதாவுக்கு உலகமே சுற்றுவதைப் போன்ற பிரமை ஏற்பட்டது. கல்யாணம் ஆன ஒரு வாரத்தில் கணவனுடன் அவள் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு பிறந்தகம் வந்து விட்டாள் என்று தெரிந்தால் பூந்திடல் லேடீஸ் கிளப் இரண்டு பட்டுப் போகுமே! செல்லம்மாள் இந்த அவமானத்தை எப்படி ரசிப்பாள்! துரைசாமி நாலுபேர் முகத்தை எப்படித் தைரியமாக நிமிர்ந்து பார்ப்பான்! ஒரே விநாடியில் பலவும் எண்ணிய அவள் துக்கத்துடன், "நான் போகமாட்டேன், ஊரார் என்னைப் பார்த்துச் சிரிக்கவா?" என்று விம்மினாள்.

"உன் கௌரவத்தைக் காத்துக் கொள்ள வேண்டிய சுயநலம் காரணமாக இங்கே வசிக்க நீ விரும்பினால், அதற்கு நான் உடன்பட வேண்டுமா? அபிப்பிராய பேதங்கள் அதிகம் உள்ள நாம் இந்த வீட்டில் க்ஷண நேரங்கூடச் சேர்ந்து வசிக்க முடியாது. நீ கட்டாயம் இன்று ஊருக்குப் போகப் போகிறாய்! நான் திரும்பி வருவதற்குள் தயாராக இருக்க வேண்டும்!" என்று கோபத்துடன் கூறிய அவன் கீழே இறங்கிச் சென்றான்.



அவனுடைய பிடிவாதமான உத்தரவைக் கேட்டு கீதா கதிகலங்கிப் போனாள். தன் கணவனுக்குப் இவ்வளவு கோபம் ஏற்படும் என்று தெரிந்திருந்தால் அவள் எதிர்த்துப் பேசியே இருக்க மாட்டாள் இனி என்ன செய்வது? வெள்ளம் தலைக்கு மேல் போய் விட்டது! செய்யும் வகை தெரியாது அவள் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

"எம்மா கீதா! ராஜா மத்தியானம் ஆத்துக்கு வருவானோ?" என்று கேட்டுக் கொண்டு அப்போது மாடி ஹாலுக்குள் வந்த பாகீரதியம்மாள் அப்படியே ஸ்தம்பித்துப் போனாள், பச்சைக் குழந்தை போல் கீதா விசிப்பதைக் கண்டு அவளது உள்ளம் பதைத்தது "என்னம்மா கீதா ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?" என்று ஒரேயடியாகக் கேள்விகளை அடுக்கிக் கொண்டு பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.

கீதா பதிலளிக்காது விம்மிக் கொண்டிருக்கவே "ராஜா கோவிச்சுண்டானா, என்ன? அப்பாவைப் போல ராஜாவுக்கு முன் கோபம் ஜாஸ்தி, அதை விட்டுத் தள்ளு. நீ மூஞ்சியைத் துடைச்சுண்டு வாம்மா, கீழே போவோம்" என்று அன்புடன் கூறிய பாகீரதி, கலைந்திருந்த கீதாவின் கூந்தலை மெல்லக் கோதினாள்.

பாகீரதி எத்தனை வற்புறுத்தியும் கீதாவிடமிருந்து அழுகையைத் தவிரப் பதில் கிளம்பும் வழியாக இல்லை.

தொழிற்சாலையிலிருந்து திரும்பி வந்த நாகராஜன் சகோதரியைக் காணாது நேரே மாடிக்கு அவளைத் தேடிக் கொண்டு வந்தான். "நீ இங்கே இருக்கிறாயா? ரெண்டு மணி வண்டிக்கு நாங்கள் இருவரும் பூந்திடலுக்

குப் போக வேண்டும்'' என்று அவன் முடிப்பதற்குள் விஷயங்களை ஒருவாறு ஊகித்துக் கெண்ட பாகீரதி, ''உனக்குப் பயித்யம் கியித்யம் பிடிச்சிருக்கா என்ன?'' என்று தம்பியை அதட்டினாள்.

கணவன் தங்களுக்குள் நடந்த சண்டையைப் பற்றி அக்காவிடம் சொல்லிவிடப் போகிறான் என்ற கிலியில் கீதா தன் அழுகையை நிறுத்தினாள்.

''அவளை முதலில் பிறந்தகத்தில் கொண்டு போய் விட்டுப் பின்புதான் மற்றக் காரியங்களை நான் கவனிக்கணும். டிக்கெட் வாங்கி வரக்கூட ஏற்பாடுகள் பண்ணி விட்டேன்'' என்றான் அவன் நிதானமாக.

பாகிரதிக்குத் தூக்கிவாரிப் போட்டது. சண்டை பலமாகி விட்டது என்பதை உணர்ந்தாள். ''பேஷ் ரொம்ப நன்னாருக்குடா ராஜா நன்னாயிருக்கு! இதெல்லாம் என்ன விளையாட்டு, சின்னசண்டையைப் பெரிசாக்கிண்டு! ஆத்துக்குப் பெரியவள்னு கல்லுப் புள்ளையாராட்டம் நான் ஒருத்தி இருக்கச்சியே எனக்குத் தெரியாம காரியங்கள் நடக்கிறதாக்கும்? டிக்கெட் வாங்கறதுக்கு ஏற்பாடு பண்ணி விட்டானாம், சமத்துப்பிள்ளை!''என்று கோபத்துடன் இரைந்தாள் அவள் தன், தம்பியைப் பார்த்து.

''உனக்கு ஒண்ணும் விஷயம் தெரியாது. நீ பேசாமல் இரு அக்கா'' என தம்பி பதிலுக்குக் கத்தியதைக் கேட்ட அவள், ''நீ ரொம்ப தெரிஞ்சவன் தான் போ. பிறந்தாத்தை விட்டு கண்காணாத இடத்தில் வந்திருக்கிற குழந்தையை அனுசரித்து நடத்தாமல் சண்டை போட்டானாம், ரொம்ப அழகாத்தானிருக்கு, உன் காரியம்!'' என்று கடிந்து கொண்ட பாகிரதி கீதாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு ''வாம்மா இப்படி'' என ஹாலை விட்டு அழைத்துச் சென்றாள். ''நல்ல வேளை, அந்த சமையக்காரி ஊருக்குத் தொலைஞ்சிருக்காள். அவள் இருக்கச்சே சண்டை நடந்தா கேட்க வேண்டாம்.



தோட்டக்காரன்வரை பரவிவிடும்'' என்று முணுமுணுத்த பாகிரதி, நீ கீழே போய் மூஞ்சியை அலம்பி நெத்திக்கு இட்டுக் கொண்டு இலையைக் போடு. நான் இவனைச் சாப்பிட வரச்சொல்கிறேன். எப்போதுமே ராஜாவுக்குப் பிடிவாதமும் கோபமும் ரொம்ப ஜாஸ்தி. அவன் ஏதாவது ஆத்திரத்திலே சொன்னால் நீ பேசாமல் இருந்துடு. இரண்டு கைகளையும் தட்டினால்தானே சத்தம்? தெரிஞ்சதா?'' என்று மெல்லிய குரலில் கீதாவுக்கு உபதேசித்தாள்.

ஹாலுக்குள் மறுபடியும் வந்த அக்காளை நாகராஜன் விறைத்துப் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தான்.

''சரி, அது கிடக்கட்டும். நீ கீழே போய் முதல்லே சாப்பிடு'' என்று சகோதரி உத்திரவிட்டாள்.

''எனக்குச் சாப்பாடு வேண்டாம் அக்கா!'' என்று பிடிவாதத்துடன் நாகராஜன் கூறவே, 'நீ பண்றது துளிக்கூட நன்னாவேயில்லை, ராஜா!'' என்று பாகிரதி கோபத்துடன் சொன்னாள்.

நாகராஜன் பதில் பேசாது கோபத்துடன் முகத்தைத் திருப்பிக்கொண்டான். ''ஏண்டா ராஜா! நம்பாத்திலே இதுவரை நடந்திருக்கிற துக்கமெல்லாம் போதாதா? நீ ஒருத்தன் நன்னாயிருக்கிறதைப் பார்த்துட்டுச் செத்துப் போகலாம்னு நான்...'' என்று கூற முடியாது துக்கத்துடன் நிறுத்திய பாகிரதி கண்களில் பொங்கிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

தமக்கையின் வருத்தத்தைக் கண்ட நாகராஜன் உள்ளம் நெகிழ்ந்தது. ''அக்கா நீ வீணாக வருத்தப்படாதே. கோபத்தில் என்னவோ அசட்டு காரியம் செய்து விட்டேன். என் மேல்தான் பிசகு. இனிமேலே இப்படி நடந்துகொள்ள மாட்டேன். உன் ரத்த அழுத்தத்திற்குக் கோபமும் வருத்தமும் ஆகாது. பேசாமலிரு'' என்று இரக்கமாக வேண்டிக்கொண்டான்.

''அந்தப் பெண்ணை இனி நீ ஒரு வார்த்தைக் கூடச் சொல்லக்கூடாது. நாலு மனுஷாளோடு பேசித் தொழில் நடத்தற உனக்கே சரியா நடந்து கொள்ளத் தெரியாம இருக்கச்சே, ஆத்திலே செல்லமா வளர்ந்த அந்தப் பெண்ணுக்கு என்ன தெரியும்? நீதான் சித்தே விட்டுக் கொடுக்கணும். இந்த மாதிரி சண்டையெல்லாம் இனி என் காதுகளில் படக்கூடாது. சரி, கிழே போ. இலையைப் போட்டு விட்டு உனக்காக அவள் காத்துண்டு இருக்கா. சாப்பிட்டதும் முதல்லே போய் அந்த டிக்கெட்டுகளைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு பண்ணு!'' என்று முடித்த பாகீரதி அங்கிருந்து அகன்றாள்.

நாகரகஜன் மௌனமாக சகோதரியின் கட்டளைக்குப் பணிந்தான்' கீதாவின் கைவளையல்கள் செய்த சப்தமும், பாத்திரங்களின் மீது கரண்டி படும்போது ஏற்படும் ஓசையையும் தவிர அன்று சமையற் கட்டில் நிசப்தம் நிலவியிருந்தது.

## 13

பாகீரதியம்மாள் சமாதானம் செய்து வைத்து விட்டாள் என்றாலும் தம்பதிகளின் மனத்திலே வீசிக் கொண்டிருந்த கோபப் புயல் முற்றிலும் அடங்கிவிடவில்லை. அன்போடும் ஆதரவோடும் தன்மனைவியை நடத்தி இன்பமாக வாழ்க்கை நடத்தப்போகிறோம் என மனக் கோட்டை கட்டி மகிழ்ந்து கொண்டிருந்த நாகராஜன் மனதை கீதாவின் துடுக்குச் சொற்கள் மிகவும் புண்படுத்திவிட்டன.

அக்காவின் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து அவளைக் கௌரவிக்க வேண்டியே, பூந்திடல் பிரயாணத்தை அவன் நிறுத்தினான். ஆதலால் அவன் மனத்தில் மனைவிமேல் ஏற்பட்ட கோபம் ஒரேயடியாக அடங்கிப் போகவில்லை. அன்று பகல் போஜனத்திற்குப் பின்பு நேரே தொழிற்சாலைக்குச் சென்றவன், இருட்டி வெகு நேரம் சென்றபின்புதான் வீட்டிற்குத் திரும்பி வந்தான்.



வெளியிலிருந்து வந்த அவன் மனைவியின் முகத்தைப் பார்க்க மனமில்லாதவன்போல் நேரே மாடியறைக்குச் சென்று விட்டான்.

கீதாவின் கோபமும் நாகராஜனுடைய கோபத்திற்கு எள்ளளவும் குறைந்ததாகக் காணப்படவில்லை. சண்டையை ஆரம்பித்த பிசகு என்னவோ தன்னுடையது என்று அவள் உணர்ந்தாலும் ஒரே முட்டாகத் தன்னைக் கணவன் வீட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிட்டது மன்னிக்க முடியாத குற்றம் என்று கருதினாள். வெளிப் பார்வைக்குச் சமாதானம் அடைந்தவள் போல் அவள் தென்பட்டாலும் மனம் மட்டும் தனியாகக் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தது. அன்று முழுவதும் அவளும் கணவன் முகத்தை நிமிர்ந்துகூடப் பார்க்காது கழித்தாள்.

இரவு போஜனத்திற்குப் பின்பு வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு ஒரு வழியாக அவள் மாடியறைப் பக்கம் வந்தாள். படுக்கையறையில் விளக்கு எரிந்து கொண்டிருப்பதைக் கவனித்த அவளுக்கு அறையின் அருகே நெருங்கக் கூட பயமாக இருந்தது. விவரிக்க முடியாத ஒருவித கலக்கத்தினால் நெஞ்சம் படைத்தது. பல வருஷங்கள் பழக்கப்பட்டவன்போல் இரண்டு நாட்களுக்கு முன் தென்பட்ட அதே கணவன் இன்று அவளுக்கு முகமறியாத வேற்று மனிதனாகத் தோன்றினான். அவனை நேருக்கு நேர் எப்படிச் சந்திப்பது என்று மனம் கூசினாள் அவள். அவன் ஏதாவது கேட்டால் வாயைத் திறந்து ஒரு வார்த்தைகூட பதில் சொல்ல முடியாதுபோல் அவளுக்குத் தோன்றியது.

மிகவும் தயங்கிக்கொண்டே அறையின் அருகில் வந்த கீதா, முடிவில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள். அங்கு நாகராஜன் கட்டிலின் மீது சுவரின் பக்கமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டதும் அவள் மனம் மிக்க நிம்மதியை அடைந்தது. கையில் கொண்டு வந்த பால் செம்பை மேஜைமீது வைத்துவிட்டு விளக்கை அணைத்தாள். படுக்கையின் எதிர்ப்புறத்து ஜன்னல்மீது

சாய்ந்து கொண்டு பித்தம் பிடித்தவள்போல் நின்று கொண்டிருந்தாள் அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்த நாகராஜன், தூக்கத்தில் புரண்டு மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டான் எங்கே விழித்துக் கொண்டு தான் எதிரே நிற்பதைக் கவனித்து விடுவானோ என்ற பயத்தில் கீதா மெல்ல அறையை விட்டு மாடியின் வெளிப்புறத்திற்குச் சென்றாள்.

வானக் கடலில் மிதந்து கொண்டிருந்த வளர்பிறையின் மங்கிய நிலவொளியில் மாடிவராந்தாவின் ஓரமாகக் கிடந்த பெஞ்சு ஒன்றின் மீது உட்கார்ந்துகொண்ட கீதாவுக்கு அழுகை தாங்கமுடியாது குமுறிக்கொண்டு வந்தது. தனிமை என்பது அவளுக்குப் புதியதான அனுபவமல்ல. இருந்தபோதிலும் அன்று இருந்த மனநிலையில் அந்தத் தனிமை, மனத்திலே பொங்கி நின்ற அவளது கோபத்தைக் கண்ணீராக வடியச் செய்தது. கணவனின் முரட்டு சுபாவத்தை நினைத்துக் கொண்டு தேற்றுவார் இன்றிக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள் அவள்.

தடால் என்று ஏதோ விழுந்த சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துக் கொண்ட நாகராஜன் பரபரப்பாக விளக்கை ஏற்றிப் பார்த்தான். மேஜை மீதிருந்த பால் செம்பைக் கீழே தள்ளிவிட்ட பூனை தன்னைக் கண்டு ஒரே பாய்ச்சலில் திறந்திருந்த அறையின் கதவு வழியே வெளியே ஓடி மறைந்ததைக் கவனித்தான். அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தான். கீதாவை அங்கே காணவில்லை விடியற்காலை மணி நான்காகின்றது என்பதைக்கடிகாரம் காட்டிக் கொண்டிருந்தது.

அறையின் வெளியே வந்து மாடியின் திறந்த வெளிப் பக்கத்தை நன்றாக ஆராய்ந்து கவனித்தான். வராந்தாவின் ஓரத்தில் கிடந்த பெஞ்சு ஒன்றின்மீது சுருண்டு படுத்திருக்கும் உருவத்தைக் கண்டதும் அவன் மனம் ஒரே கணத்தில் இளகிவிட்டது. அவள்மீது கொண்டிருந்த கோபத்தை எல்லாம் மறந்து கணப்பொழுதில் அவளை அணுகி, ''கீதா! எழுந்திரு!'' என்று தட்டி எழுப்பினான்.



திடீரென தூக்கத்தினின்று விழித்துக் கொண்ட கீதா, தன் கணவன் அருகில் நிற்பதைக் கண்டு பயத்துடன் எழுந்து நின்றாள்.

''தூங்குவதற்குத் தேர்ந்தெடுக்கிற இடத்தைப் பார்! பனியிலே வந்து இங்கே படுத்துக்கொண்டால் உடம்பு என்னத்திற்காகும்?'' என்று அன்புடன் கடிந்து கொண்டான் அவன்.

கணவனின் கனிவு மொழிகள் கீதாவின் கொதிக்கும் உள்ளத்தைச் சாந்தப்படுத்தியது என்றாலும் அவள் பதில் பேசவில்லை அவனுடன் அறைக்குள் பின் தொடர்ந்த நாகராஜன், ''கதவைத் திறந்து நீ வைத்து விட்டுப் போனதன் விளைவைப் பார்!'' என்று கூறிவிட்டுப் படுக்கை மீது சாய்ந்து கொண்டான். மும்முரமாக இருவரும் போட்ட சண்டைக்குப் பின் தானே வலுவில் பேச நேர்ந்ததைக் குறித்து அவன் சங்கோஜமடைந்தாலும் அழுததனால் வாடியிருந்த கீதாவின் முகத்தைக் கண்டதும் மனஸ்தாபத்தை மேலே நீடிக்கச் செய்ய அவன் நெஞ்சம் துணியவில்லை.

தரையில் கிடந்த பால் செம்பை எடுத்து மேஜைமீது வைத்துவிட்டு பழந்துணி ஒன்றினால் நாலா பக்கமும் சிதறி ஓடியிருந்த பால் வெள்ளத்தைத் துடைத்துக் கொண்டிருந்த கீதா அவனை நிமிர்ந்துகூடப் பார்க்காமலிருந்தாள்.

''அறையின் கதவைத் திறந்துபோட்டு வைக்கலாமா? பூனை வந்து பாலை உருட்டி விட்டது போல் ஒரு பூதம் நுழைந்து என்னை உருட்டி விட்டிருந்தால் என் கதி என்ன?'' என்று பரிகாசமாகக் கேட்ட நாகராஜன் மனைவியின் முகத்தை ஆர்வமாகப் பார்த்தான்.

தனக்குள் எழுந்த சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள் கீதா. முதல் நாள் முழுவதும் கோபத்தில் தான் படபடத்துவிட்டு இன்று வந்து கொஞ்சம் கணவனுக்கு சுலபமாக விட்டுக் கொடுத்து விட்டால் பெண்மையின் கௌரவத்திற்கு இழுக்கு என்று எண்ணிய

அவள் அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காது மேஜை மீதிருந்த செம்பைக் கையில் எடுத்துக்கொண்டு மிக மிடுக்காகக் கீழே இறங்கிச் சென்றுவிட்டாள்.

தலை பணிந்தும் தனக்கேற்பட்ட தோல்வியைக் கண்டு நாகராஜன் சிறிது அவமானமடைந்தான். கீதாவின் கர்வமும், மிடுக்கும் அவனுக்குக் கோபத்தையோ வருத்தத்தையோ உண்டாக்கவில்லை. அதற்குப் பதில் அது நியாயமானதுதான் என்று அவன் மனதிற்குப் பட்டது.

என்னதான் அன்பு கனிய வலுவில் வந்து பேசினாலும் முதல் நாள் சம்பவத்தை யாரால் மறக்க முடியும்? கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வீட்டைவிட்டுத் தன்னை வெளியேறச் சொன்ன மனிதனிடம் மனஸ்தாபத்தை மறந்து முகம் பார்த்து சிரித்துப் பேச இன்னொரு மனிதனாலேயே ஆகாது அப்படியிருக்கையில் சம்பவங்களை சீக்கிரம் மறக்கமுடியாத பெண் உள்ளத்திலிருந்து மன்னிப்பை நாகராஜன் எப்படிச் சீக்கிரமாக எதிர்பார்க்க முடியும்? பிணங்கிச் செல்லும் அவள் பின்னால் ஓடித் தன் தோல்வியை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். வேறு வழியில்லை என்பதை எண்ணிப் பார்த்த அவனுக்குத் தன் நிலையைக் குறித்துக் சிரிப்புதான் வந்தது.

## 14

**வே**லைக்காரிக்காக வாயிற் கதவைத் திறக்கப் படுக்கையினின்று எழுந்தபாகீரதியம்மாள், மாடியினின்று கீதா விடியுமுன்னே இறங்கி வருவதைக் கண்டு ஆச்சர்யத்துடன், ''என்னம்மா கீதா! ரொம்ப சீக்கிரமே எழுந்துட்டியே?'' என்று பரபரப்புடன் வினவினாள்.

''இன்றைக்கு உங்களுக்கு முந்தி எழுந்துவிட வேண்டும் என்று மனத்திலே தீர்மானித்துக் கொண்டிருந்தேன். ஆனால் நீங்கள் என்னை முந்திக்கொண்டு விட்டீர்களே?'' என்று கீதா சிரித்தபடியே பதில் அளித்தாள்.



''உன்னால் என்னைப் போல் அவ்வளவு சீக்கிரத்தில் எழுந்திருக்க முடியாது! அதற்கெல்லாம் பழக்கம் வேண்டும்'' என்று பரிகாசமாகச் சொன்ன பாகீரதி வாயிற் பக்கம் சென்றாள். ''நாளைக்குப் பாருங்கள். உங்களுக்கு முந்தி நான் எழுந்திருக்காவிட்டால்?'' என்று விளையாட்டாகப் பதிலளித்த கீதா சமையலறைக்குள் புகுந்தாள்.

காலைச் சமையலுக்காக கீதா சாமான் அறையில் தேவையான சாமான்களை எடுத்துக் கொண்டிருந்தாள் ''இங்கே வாம்மா கீதா!'' என்று நாத்தனார் உரத்த குரலில் தன்னை அழைப்பதைக் கேட்ட அவள் அப்படியே எழுந்து பங்களாவின் முன் ஹாலுக்குள் வந்தாள். அங்கே அவள் கண்ட காட்சி அவள் உள்ளத்தைக் குதூகலத்தில் ஆழ்த்தியது. தரையில் விரித்திருந்த பாயின் மீது மூட்டையிலிருந்து நானாவித வர்ணப் பட்டுப் புடவைகளை எடுத்துப பரப்பிக் கொண்டிருந்தான் ஒருவன்! தனது மகிழ்ச்சியை வெளியில் காட்டாது, ''எதுக்கு அக்கா கூப்பிட்டேள்?'' என்று கேட்டுக் கொண்டு அங்கே வந்து நின்றாள்.

''சிங்கம் பேட்டைப்புடவைகள் சாயம்நன்னாநிக்கும் நம்ப ஆத்துக்கு இவனிடந்தான் வழக்கமாக வாங்கிண்டு இருக்கோம் நீ வருவேன்னுட்டு முதலிலேயே ஆள் அனுப்பி, புது தினுசு புடவைகளா எடுத்துண்டு வரச் சொல்லியிருந்தேன். ஏன் நிக்கறே? உட்கார்ந்துண்டு நிதானமாப் பார்த்து, பிடிச்சதை எடுத்துக்கோ!'' என பாகீரதி உபசரித்தாள்.

நாத்தனாரின் தாராளச் சிந்தையைக் கண்டு வியப்பும் சந்தோஷமும் அடைந்த கீதா பாகீரதியின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு பிடித்த புடவைகளைத் தேர்ந்தெடுப்பதில் முனைந்தாள்.

''எனக்கா இது, புடைவைக் கடையை இங்கேயே வைத்து விட்டாயே?'' என்று கேலியாகக் கேட்டுக் கொண்டு அங்கே வந்த நாகராஜன் மனைவியின் எதிர் பக்கம் வந்து நின்று கொண்டு வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்.

''ஒன்னு பின்னாலே ஒண்ணாக நாள் கிழமையெல்லாம் வரப் போகிறதே! எல்லாத்துக்குமா சேர்த்து வாங்கி வச்சுடலாம்னுட்டுத் தான் வரச் சொன்னேன்'' என்று பதிலளித்த பாகிரதி புடவைகளை ஆராய்ந்து பார்ப்பதில் ஈடுபட்டாள்.

''ஏன் அக்கா! உனக்கு அந்தக் கலர் பிடிச்சிருக்கா என்ன? எனக்கு அது பிடிக்கவில்லை'' என்று மனைவியின் கையில்ருந்த ஒருபுடவையைப் பார்த்துவிட்டுப் புன்னகை செய்தான் நாகராஜன்.

கையிலிருந்த புடவையைத் தயக்கமாக கீதா, கீழே வைப்பதைக் கவனித்த பாகிரதி, ''உனக்குப் பிடிச்சிருந்தா எடுத்துக்கோ. ராஜாவா கட்டிக்கப் போறான்' அவன் பேச்சைக் கவனிக்காதே!'' என்று கூறிவிட்டு மெல்லச் சிரித்தாள்.

''அப்படிச் சொல்லிவிட முடியுமா அம்மா! ஐயாவுக்குப் பிடிச்சாத்தான் பார்த்து வாங்கணும்'' என்று பரிந்து கொண்டு பேசிய புடைவைக்காரன், ''இதைப் பாருங்க சார்!'' என்று ஒரு புடவையை எடுத்துப் பாயின் மீது விரித்துவிட்டு நாகராஜன் முகத்தைப் பார்த்துப் பல்லை இளித்தான். ''எங்கே, தலைப்பைப் பார்க்கலாம்', என்று கீதா உத்தரவிடுவதற்குள் குறுக்கிட்ட பாகிரதி, ''என்னப்பா இது, நிறம் மங்கலாய் இருக்கே??'' என்று அதிருப்தியுடன் கேட்டாள்

''இல்லையம்மா, சித்தே தூரத்திலே வச்சு இதைப் பாருங்கள். எப்படி மினு மினுக்குதுனுட்டு!'' என்று அதைக் கையில் எடுத்துக்கொண்டு புடைவைக்காரன் கொஞ்ச தூரத்தில் போய் நின்று கொண்டு அவர்களுக்குக் காண்பித்தான்.

''இதைக் கட்டிக் கொண்டு அவ்வளவு தூரத்திலே நிற்க வேண்டுமென்றால் இது வேண்டவே வேண்டாம்! அருகில் நெருங்கி வந்தால் மின்னிக் கண்ணைப்பறிக்கும் புடைவை தினுசு உன்னிடமிருந்தால் முதலில் அதை எடு



பார்க்கலாம்'' என்று நாகராஜன் பரிகாசமாகக் கூறியதைக் கேட்ட பாகிரதி தாங்க முடியாது சிரித்தாள். எவ்வளவோ கட்டுப்படுத்தியும் கீதாவின் சிரிப்பு ஓர் அழகிய புன்னகையாக அவளது பவழ உதடுகளில் நெளிந்தோடியது கடைக் கண்ணால் மனைவியின் முகத்தைக் கவனித்துக் கொண்டேயிருந்த நாகராஜன், அதைக் கண்டு பெரிய யுத்தத்தில் வெற்றிகண்ட வீரனைப்போல் மிகுந்த திருப்தியடைந்தான்.

அன்று முழுவதும் நாகராஜனால் தொழிற்சாலையில் வேலையை மிக்க கருத்துடன் கவனிக்க முடியவில்லை. கீதாவின் மனதிற்குச் சந்தோஷம் கொடுக்கக் கூடிய காரியங்கள் இன்னும் ஏதாவது உண்டா என்பதைப் பற்றிச் சிந்திப்பதில் பொழுதைக் கழித்தான்

இரவு அவன் வீட்டிற்கு வந்தபொழுது அப்படியே பிரமித்துப் போய்விட்டான். அழகிற்கு அழகு சேர்த்தது போன்று புதுப் புடைவையொன்றில் காட்சியளித்த மனைவியின் மோகன உருவம் அவனை மிக்க பெருமிதம் கொள்ளச் செய்தது. பரிகாசமாக ஏதாவது சொல்லி அவளைச் சிரிக்கச் செய்து பார்க்க ஆசைப்பட்ட அவன், வாயைத் திறப்பதற்குள் சகோதரி அங்கே வந்துவிட்டாள். நாகராஜன் பொறுமையுடன் ஆவலைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

தானே விழித்துக் கொண்டு படுக்கையினின்று எழுந்து பார்த்தபொழுது நன்றாக விடிந்து விட்டதை உணர்ந்தான் அவன். முதல்நாள் இரவு மனைவியைத் தனியாகச் சந்தித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுவது என்ற திட்டத்துடன் அவள் வருகைக்காகக் காத்திருந்த அவன் அப்படியே தூங்கி விட்டான். கீதா கீழே இறங்கிச் சென்று விட்டாள் என்பதைத் திறந்திருந்த அறைக் கதவு சொல்லியது. ஸிமெண்ட் தரை மீது கிடந்த தலைகாணியும் போர்வையும் அவள் அறையில் தரைமீது படுத்து உறங்கினாள் என்பதைக் காட்டின.

''அடடா! அம்மா கோபம் இன்னும் தணியலை போலிருக்கு?' என்று முணுமுணுத்த அவன் உதட்டைக் கடித்துக்கொண்டு யோசனையில் ஆழ்ந்தான்.

அன்று மாலை வீட்டிற்கு வந்த கணவன் தொழிற்சாலைக்கு உடனே திரும்பிச் செல்லாததைக் கண்டு கீதா ஆச்சர்யம் அடைந்தாள். எனினும் வாய்விட்டு ஒன்றும் கேட்காது மௌனமாகத் தன் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

''அக்கா இங்கே வந்து பாரேன்!'' என்று தம்பி இரைந்து கூப்பிடுவதைக் கேட்ட பாகீரதி விஷயம் புரியாமல் குழப்பத்துடன் வாயிற்பக்கம் விரைந்து சென்றாள். கூடவே ஆவலுடன் பின்தொடர்ந்து சென்ற கீதாவின் திகைப்பு எல்லை மீறிவிட்டது.

கண்ணைக் கவரும் சோபாக்களும், கண்ணாடிபதித்த பீரோக்களுமாக ஒன்றன் பின் ஒன்றாக வண்டியிலிருந்த சாமான்களை ஆட்கள் இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

''இதென்ன ராஜா இதெல்லாம்!'' என்றாள் பாகீரதி வியப்புடன்.

''சாமான்கள் இல்லாமல் வீடு வெறிச்சென்று பார்க்க அவலக்ஷணமாக இருந்ததனால் இவற்றையெல்லாம் வரவழைத்தேன். கூட வந்திருக்கும் கம்பெனி ஆள் இவற்றைப் போட வேண்டிய இடத்தில் போட்டு வீட்டை அலங்கரித்து விடுவான். உங்களுக்கு இஷ்டப்படி வேண்டுமானாலும் இவற்றைப் போட்டுக் கொள்ளலாம்'' என்று கூறிவிட்டு கீதாவைப் பார்த்தான்.

அவள் அவனைக் கவனிக்காதவள் போன்று வேறு பக்கம் பார்த்துக்கொண்டிருந்தாள். வீட்டை அலங்கரித்து நாகரிகப்படுத்தி மனைவியைத் திருப்தி செய்துவிடுவதென்று கங்கணங் கட்டிக்கொண்டவன் போல் நாகராஜன் உற்சாகத்துடன் ஆட்களுடன் மாடிக்கும் கீழுக்குமாக அலைந்து கொண்டிருந்தான்.



வேலையாட்கள் சென்றபின் வீட்டின் முன் ஹாலின் பக்கம் வந்து பார்த்தாள் கீதா, காற்றிலே மெல்ல அசைந்து கொண்டிருந்த நீலத் திரைகள் ஜன்னல்களை அலங்கரித்தன.

மிருதுவான திண்டுகள் தாங்கிய அழகியசோபாக்கள், அவைகளின் பக்கத்தில் சிறுசிறு வட்ட மேஜைகள்; விசித்திர வேலைப் பாட்டோடு அமைந்த பீங்கான்பூந்தொட்டிகள் ஒவ்வொரு மேஜை மேலும் இருந்தன. எல்லாவற்றையும் விட ஹாலின் மற்றொரு கோடியில் இரண்டு நாற்காலிகள் அருகில் சுவர் ஓரமாக சிறு மேஜைமீது வைக்கப்பட்டிருந்த புதிய ரேடியோ கீதாவின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது. பொழுதை எப்படிக் கழிப்பதென்ற கவலை இனி இல்லை என்ற குதூகலத்தில்அவள் அதனருகில் ஓடிச் சென்று ஆராய்ந்து பார்த்தாள். கோபத்தில் என்னவோ தாறுமாறாகப் பேசிவிட்டு அதற்காக அவளுடைய மன்னிப்பை வேண்டி, பாவம், எத்தனை பாடுபடுகிறார் கணவன் என்று நினைத்தவுடன் அவள் மனம் நாகராஜன் பால் இளகி விட்டது.

பீங்கான் பூத்தொட்டியிலிருந்த புஷ்பக் கொத்தை அப்புறப்படுத்திவிட்டு, தோட்டத்து ரோஜா மலர்க் கொத்தை வைத்துச் சரிப்படுத்திக்கொண்டிருந்தாள் கீதா. அது சமயம், ''என்னக்கா! எப்படியிருக்கு எல்லாம்? நன்றாயிருக்கா?'' என்று கேட்ட வண்ணம் தமக்கையைத் தொடர்ந்தாற் போல் அங்கு வந்தான் நாகராஜன்

''புருஷாளுக்குக்கூட இத்தனை நாசுக்கு தெரிஞ்சிருக்கே! சவரணையா பொம்மனாட்டியாட்டமா இருக்க வேண்டிய இடத்திலே சாமான்களைப் போட்டு ஜோடிச்சுட்டான்களே! ஆச்சர்யமாகத்தான் இருக்கு!'' என்று வியந்தாள் பாகீரதியம்மாள் பங்களாவின் ஒவ்வொரு பாகத்தையும் பார்வையிட்ட சந்தோஷ மிகுதியினால்.

''உண்மையைச் சொல்லிப் போனால் புருஷர்களுக்குத் தான் பெண்களைவிட நாகரிகம் ரொம்பத் தெரியும். புருஷர்கள் புதுவித நாகரிகங்களைக் கற்பனை செய்கிறார்கள். பெண்கள் அதை அப்பியாசித்து உலகத்தில்

பரப்புகிறார்கள், அவ்வளவுதான்" என்று கேலியாக மொழிந்த அவன், மனைவியின் பக்கம் திரும்பிப் பார்த்தான்.

குறும்புத்தனமாக அதற்கு ஏதேனும் பதிலளிக்க வேண்டுமென்று துடித்தாள் கீதா. ஆனால் என்னவோ வார்த்தைகள் நெஞ்சிலேயே தங்கிவிட்டன. களைப்புமிக்கவனாக மாடியை அடைந்த நாகராஜன் புது சோபா ஒன்றில் ஆயாசத்தைப் போக்கிக் கொள்பவன் போல் சாய்ந்து கொண்டான். "ராஜா! பஞ்சு, மருந்துகள் ஏதாவது வச்சிருக்கியோ?" என்று கேட்ட வண்ணம் மூச்சுத் தடுமாற வந்து நின்ற அக்காவைக் கண்டதும் திடுக்கிட்டு, "என்னக்கா? எதுக்கு கேட்கிறே?" என்று கலவரத்துடன் வினவினான் அவன்.

"சொன்னா அந்தப் பெண் கேட்டாத்தானே? பூசனிக்காயை கத்தியாலே நறுக்கறேன்னுட்டு விரலை அறுத்துண்டுட்டா?" என்று முடிப்பதற்குள் துள்ளி எழுந்த நாகராஜன் பஞ்சு, துணி, மருந்து, சகிதம் ஒரே மூச்சில் திரும்பினான்.

"ரொம்பக் காயமா? எங்கே பார்க்கலாம்" என்று பதட்டத்துடன் கேட்ட கணவன் ஒரு சிறு காயத்திற்கு செய்த வைத்யமும் அமர்க்களமும் கீதாவிற்கு வெட்கமாயிருந்தது. அன்று இரவு தனிமையில் மனைவியை சந்தித்த அவன், "காயம் ரொம்ப வலிக்கிறதா கீதா?" என்று ஆதரவுடன் வினவினான் கவலைக் குறிகள் நிறைந்த அவனது முகத்தைப் பார்த்த கீதாவிற்கு பச்சாதாபமும் சிரிப்பும் ஒருங்கே வந்தன.

"சின்ன விஷயத்திற்கு எத்தனை அமர்க்களப்படுத்துகிறீர்கள்! அக்கா என்ன நினைச்சுப் பார்!" என்றாள் கொஞ்சலாக கீதா.

"ஒரு சின்னச் சண்டைக்காக மூன்று நாள் பேசாமலிருந்து நீ பண்ணின அமர்க்களத்தை விடவா?" என்று கேட்ட நாகராஜன் அவளது கரத்தை ஆவலுடன் பற்றினான்.



"ஐயோ காயம் வலிக்கிறதே!" என்று கையை விடுவித்துக் கொள்ள முயற்சித்த கீதா சிரித்தாள்.

"எத்தனை பொய்! வலது கையில் காயம், இடது கையைப் பிடித்தால் வலி ஏற்படுகிறதா? இந்தச் சாக்கெல்லாம் இனி பலியாது. இன்று நீ என் கைதி" என்று உல்லாசமாகக் கூறிய நாகராஜன் மனைவியுடன் சேர்ந்து சிரித்தான்.

## 15

'போஸ்ட்' என்று கூறிய தபால்காரன் வீசியெறிந்துவிட்டுப்போன கடிதத்தைக் கையில் எடுத்து செல்லம்மாள் அதன்மீது எழுதியிருந்த விலாசத்தை வாசிக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள். சமையலறையிலிருந்து அவசரமாக வெளிப்பட்ள் கௌரி, "அம்மா கடிதாசு எனக்கு வந்திருக்கு போலிருக்கிறது!" என்று ஆவலுடன் கையை நீட்டினாள்.

"அம்மா! அதை அவளிடம் கொடுக்காதே இப்படிக் கொடு என்னிடம்!" என்று உரத்தகுரலில் கத்திக்கொண்டு துரைசாமி மாடிப்படிகளை வேகமாகக் கடந்து கூடத்திற்கு ஓடி வந்தான்.

"அம்மா! அவரிடம் கொடுக்காதீர்கள். கீதா என் பெயருக்குத்தானே எழுதியிருக்கிறாள்?" என்று சிரித்த கௌரி மாமியாரின் அருகில் வருவதற்குள் துரைசாமி செல்லம்மாள் கையிலிருந்த கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டு மனைவியை வெற்றிக் குறியுடன் பார்த்தான். "அடடா! மிகவும் கனமாக இருக்கிறதே! கீதா என்ன ராமாயணம் எழுதியிருக்கிறாள் அப்படி?" என்று அவன் கடிதத்தைக் கையில் வைத்து எடை போடுவதைக் கண்ட கௌரி, "கீதா எனக்கு எழுதியிருப்பதை நீங்கள் படிக்கக் கூடாது?" என்று கொஞ்சம் கோபத்துடன் கூறினாள்.

"ஏன் படிக்கக்கூடாது? அப்படி என்ன அதில் ரகசியம் இருக்கிறது?" என்று துரைசாமி கேட்டு முடிப்பதற்குள்

''நாத்தனாருக்கும் மதனிக்கும் இடையே எத்தனையோ ரகசியங்கள் இருக்கலாம். அவைகள் எல்லாம் உங்களுக்குத் தெரிய வேண்டுமென்றால் முடியுமா?'' என்று கேட்ட கௌரி அவன் எதிர்பாராத சமயத்தில் கடிதத்தை அவன் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டு வேகமாக மாடியறைக்கு ஓடி, கதவைத் தாளிட்டுக் கொண்டு கடிதத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்.

பிரியமுள்ள கௌரி!

உனக்கு நீண்டதொரு கடிதம் எழுத வேண்டுமென்று சில தினங்களாகவே முயசித்துக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு முக்கிய வேலையினால் அப்படிச்செய்ய முடியாது தடங்கல் ஏற்பட்டுக்கொண்டே வந்தது. இன்று கிடைத்த அவகாசத்தை வீணாக்கக் கூடாதென்று தீர்மானித்து இந்தக் கடிதத்தை எழுதலானேன்.

உன்னையும், அண்ணா அம்மா இவர்களையும் விட்டு இங்கே வந்து ஒருமாதத்திற்கு மேலாகிறது என்று என்னால் நம்பவே முடியவில்லை. ஏனென்றால் நான் இங்கே வந்தது நேற்றுத்தான் போல் எனக்கு பிரமை ஏற்படுகின்றது. மனதிலே சந்தோஷம் நிரம்பியிருந்தால் நாட்கள் வேகமாக ஓடுவதைப் போன்று தோற்றமளிக்கும் என்பது மிகவும் உண்மையே! கௌரி! நான் இங்கே மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். என் கணவர் என்னிடம் அன்பாக இருக்கிறார். என் நாத்தனார் என்னை மிகப் பிரியமாக நடத்துகிறார்.

இங்கு நான் வந்த சில தினங்களில் இப்படி மாறி விடுவேன் என்று நினைக்கவேயில்லை. முதன் முதலில் எனக்கு இந்த ஊர் கொஞ்சங்கூடப் பிடிக்கவேயில்லை. ஆரம்பத்தில் வீட்டு வேலைகளைக் கவனிப்பது எனக்குப் பெரிய தொல்லையாகவே தோன்றியது. ஆனால் சில தினங்களுக்குள் வீட்டு வேலைகளைக் கவனிக்க வேண்டும், வீட்டை நன்றாகத் திறமையுடன் நிர்வகிக்க வேண்டும் என்ற ஆர்வம் தானாகவே எனக்கு ஏற்பட்டு விட்டது. வீட்டின் மீது உள்ள எனது பொறுப்பை நான் உணரும்படி



செய்ததற்கு என் கணவர்தான் காரணம் என்று சொன்னால் அது மிகையாது.

எங்களுடைய வீடு ஓர் அழகிய பங்களா சுற்றிலும் கண்ணைக் கவரும் பெரிய தோட்டம். ஊருக்கு வெளிப்புறத்தில் நிசப்தமான இடத்தில் அமைந்திருக்கும் இந்த பங்களா எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது அண்டை வீட்டுக்காரர்களுடைய தொல்லைகள் ஒன்றுமே இல்லாமல் விச்ராந்தியாக இருக்கலாம். இந்த ஊர் மலைப்பாங்கான பிரதேசத்தைச் சேர்ந்ததாகையால் கொஞ்சங்கூட வெயில் தெரியவேயில்லை. இவ்வருஷம் கோடை விடுமுறைக்கு நீயும் அண்ணாவும் இங்கே வந்துவிடுங்கள். வேறு எந்த ஊருக்கும் போகவேண்டாம் கூப்பிட்ட குரலுக்குப் பதிலளிக்க ஏகப்பட்ட வேலைக்காரர்கள் இருக்கிறார்கள் என்றாலும், ஓய்வில்லாது எனக்கு வேலைகள் இருக்கின்றன என்றால் உனக்கு ஆச்சரியமாகவே இருக்கும். இப்பொழுதெல்லாம் நான் காலை வேளையில் அதிக நேரம் தூங்குவதில்லை. படுக்கையை விட்டுச் சீக்கிரம் எழுந்திருந்து, ஸ்நானம் செய்துவிட்டுப் பூஜையறையில் விளக்கேற்றி படங்களுக்குப் புஷ்பம் போட்டு, இவருடையகாலைஅலுவல்களுக்கு உதவிசெய்ய ஆரம்பிக்கிறேன், இவர் தொழிற்சாலைக்குப் புறப்பட்டுப் போகுமளவும் வேண்டிய சௌகர்யங்கள் செய்து கொடுப்பதிலேயே காலைப்பொழுது கழிந்து விடுகிறது. இவர் வெளியே சென்றபின், உடனே சமையலறைக்குள் சென்று சமையற்காரிக்குக் கூடமாட ஒத்தாசை செய்வதில் கொஞ்சம் பொழுதைக் கழிக்கிறேன். இப்பொழுது எனக்கு நன்றாகச் சமைக்கத் தெரியும் என்பதை அம்மாவுக்குச் சொல், அவள் மிகவும் சந்தோஷப்படுவாள்.

என் கணவர் பகலிலே வீட்டுக்குத் திரும்பி வந்ததும் அவருக்குச் சாப்பாடு பரிமாறி மற்ற வேலைகளைக் கவனித்து அவர் திரும்பத் தொழிற்சாலைக்குப் போகும் வரை கூட இருந்து உபசரிப்பதில் பகல் பொழுதும் ஒரு வழியாகக் கழிந்துவிடுகிறது. அதற்குப் பின் வீணாகப்

35849

பொழுது மீதி ஏது? சாயங்காலம் ஆனதும் முகத்தைக் கழுவிக்கொண்டு தலையை வாரிப் பின்னி என்னை அழகுபடுத்திக் கொள்வதற்குள் என் கணவர் திரும்பி வந்துவிடுகிறார். இப்படியே நாட்கள் கழிந்துவிடுகின்றன.

என் கணவருக்கும், பாவம், ஓய்வு ஒழிவின்றி வேலைகள் இருக்கின்றன. சிறிதுநேரம் கூட அவர் வீணாகப் பொழுதைக் கழிக்கமாட்டார். காலையில் தொழிற்சாலைக்குப் போகுமுன்னும், சாயங்காலம் திரும்பி அங்கிருந்து வந்த பின்பும் இருக்கும் நேரததில்கூட அவர் தமது ஆபீஸ் பேப்பர்களைக் கவனிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருப்பார். தொழிலின் மீது சிந்தனையாக இருக்கும் சமயத்தில் அவருக்கு நான் அருகில் நிற்பது கூடக் கண்களுக்குத் தென்படாது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். அவர் வேலையில் ஈடுபட்டிருக்கும் சமயத்தில் நானும் பேச்சுக் கொடுத்து அவரைத் தொந்தரவு செய்வதில்லை. குறிப்பறிந்து பணிவிடை செய்யும் அன்பான மனைவியாகி விட்டேன் நான்!

கௌரி! இந்த ஆச்சர்யத்தைக் கேள்! வாரம் முழுவதும் தொழிற்சாலை, தொழில் விவகாரங்கள் இவற்றினிடையே ஈடுபட்டு மிக்க ஆழ்ந்த சிந்தனையுடன் இருக்கும் என் கணவர் விடுமுறை தினங்களில் எப்படி இருப்பார் என்று நினைக்கிறாய்? பச்சைக் குழந்தையைப் போல் சிரித்து விளையாடிக் கொண்டு உற்சாகமாகக் காணப்படுவார். வாரம் முழுவதும் கஷ்டப்பட்டு வேலை செய்ய வேண்டும் ஓய்வு தினமென்று கிடைக்கும் விடுமுறைத் தினத்தை உண்மையாக ஓய்விலும் சந்தோஷத்திலும் கழிக்கவேண்டும். அப்படிச்செய்தால்தான் அடுத்த வாரம் மறுபடியும் புது உற்சாகத்துடன் தொழிலில் ஈடுபட முடியும் என்பது இவரது கொள்கை. தொழிலைப் பற்றி எத்தனைக்கு எத்தனை மும்முரமாகச் சிந்தித்துக்கொண்டிருப்பாரோ, அத்தனை வேகத்தில் தொழிலை மறந்து சிறு குழந்தைபோல் விளையாடிச் சிரித்தும் பொழுதைக் கழிக்கும் சாமர்த்தியம் இவருக்கு உண்டு. இந்த குணம் எல்லோருக்கும் ஏற்பட்டு விடும் என்று நான் நினைக்க



வில்லை. என்னைப் பொறுத்தவரை வேலை செய்யும் நேரத்தில் இடை இடையே சந்தோஷமான கர்பனைகளில் ஈடுபட்டு மெய்மறந்து போகின்றேன். சந்தோஷமாகப் பொழுது போக்கும் சமயத்தில் வீட்டு வேலைகளை நினைத்துக் கவலையடைகிறேன்!

வார விடுமுறை தினங்களை நாங்கள் வீட்டிலேயே கழிப்பதில்லை. ஒவ்வொரு விடுமுறைக்கும் ஒவ்வொரு இடமாகச் சுற்றுப்புறத்தில் பார்க்க வேண்டிய இடங்களுக்கு இவர் என்னை அழைத்துச் சென்று வருகிறார். காலையில் பகல் சாப்பாட்டைக் கையில் எடுத்துக்கொண்டு வேலைக்காரன் ஒருவன் துணையுடன் வண்டியில் வெளிக் கிளம்பினால் சூரியன் அஸ்தமிக்கும் பொழுதுதான் வீட்டுக்குத் திரும்புவோம். முதல் முதலாக ஒருநாள் இங்குள்ள பொன்மேடு என்ற குன்றிற்கு இவர் என்னை அழைத்துச் சென்றார். ஜிலுஜிலு வென்று வீசிய குளுமையான தென்றலில் குன்றின் மீது உள்ள ஒரு சுனை அருகில் உட்கார்ந்து கொண்டு நாங்கள் இருவரும், நாத்தனார் அருமையாகக் கலந்து கொடுத்த சித்ரான்னங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் நான் உன்னைப்பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். கௌரி மட்டும் இங்கிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று கற்பனை செய்து கொண்டிருந்தது என் உள்ளம்.

அதற்கு அடுத்த இரண்டு விடுமுறை தினங்களுக்கும் இவர் என்னை இங்குள்ள பொன்னேரி என்ற ஏரிக்கு அழைத்துச் சென்றார். 'கொடைக்கானலில் நாங்கள் படகில் ஏறிச் செல்வோம்' என்று நீ என்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறாயே! அப்பொழுதெல்லாம் படகில் செல்வதைப் பற்றி நான் கற்பனை செய்து 'பார்த்திருக்கிறேன். ஆனால் படகில் செல்வது இத்தனை உற்சாகமூட்டும் விளையாட்டு என்பதை நானே அனுபவத்தில் அறியும் சந்தர்ப்பம் இப்போதுதான் கிடைத்தது.

பொன்னேரி எங்களுடைய பங்களாவிற்கு அரை மைல் தூரத்தில் உள்ள மிக்க பெரியதொரு ஏரி. முதல்

தடவை ஒரு சிறு படகை இழுத்து ஜலத்தில் விட்டு அதில் 'ஏறிக்கொள்' என்று இவர் உத்தரவிட்ட பொழுது எனக்கு மிகவும் பயமாக இருந்தது. நடுங்கிக் கொண்டே நான் இவர் கையைப் பிடித்துக் கொண்டேன் அச்சிறு படகு இவருடைய சொந்தப் படகு என்றும், அதைப் பத்திரமாக வைத்திருக்கும் பொறுப்பு கரையோரத்தில் கொஞ்ச தூரத்தில் தென்பட்ட ஓட்டு வீட்டிலிருந்த செம்படவனைச் சேர்ந்தது என்றும் இவர் சொல்லத் தெரிந்து கொண்டேன், அந்த ஊரில் முதல் முதலாகப் படகில் ஏறிச் செல்ல ஆரம்பித்தது என் கணவர்தானாம். அதற்குப் பின் பலர் பொன்னேரியை உல்லாசப் படகு யாத்திரை ஸ்தலமாக ஆக்கிக்கொண்டு விட்டார்களாம்.

துடுப்பினால் படகைச் செலுத்துவது எப்படி என்று அவர் முதல்நாளே எனக்குப் போதிக்க ஆரம்பித்து விட்டார். முதல் தடவை இருந்த பயம் இப்பொழுது எனக்கில்லை, என் கணவரைப் போன்று அத்தனை வேகத்தில் படகைச் செலுத்த எனக்குத் திறமை வராவிடினும், ஏரித் தண்ணீரைக் கண்டு என்மனம் பயத்தில் கலங்குவதில்லை. நீரைக் கிழித்து கொண்டு மீன்போல் நீந்திச் செல்லும் படகு யாத்திரை எனக்கு எல்லாவற்றையும் விடப்பிடித்திருப்பதை உணர்ந்தோ என்னவோ, கடந்த பௌர்ணமி இரவில் இவர் பொன்னேரிக்கு என்னை அழைத்துச் சென்றார். குளிர்ந்த நிலவொளியிலே, படகில் மிதந்து ஏரி முழுவதும் சுற்றி வந்தோம். விவரிக்க முடியாத இன்பத்தில் என்மனம் அன்று ஆழ்ந்து கிடந்தது இரவு வேளைகளில் நாங்கள் ஏரிக்குச் செல்வது என் நாத்தனாருக்குப் பிடிக்கவில்லை. ''தனியாகத் துணையில்லாமல் அங்கெல்லாம் போவானா?'' என்று நாங்கள் அன்று வீட்டுக்குத் திரும்பி வந்தபொழுது கொஞ்சம் கோபித்து கொண்டார்.

முந்தா நாள் காலை ஒரு சிறு சம்பவம் நடந்தது. ஆபிஸிலிருந்து கொண்டுவந்த இந்தியாவின் படம் ஒன்றையும், உலகப் படத்தையும் சுவரில் மாட்டிவிட்டு



இவர் அழகு பார்த்துக்கொண்டிருக்கையில் நான் ஹாலுக்குள் நுழைந்தேன். ''இதென்ன பூகோள சாஸ்திரம் கற்றுக் கொள்ள ஆரம்பித்து விட்டீர்களா என்ன? இந்தப் படங்களைப் பார்த்தால் எனக்குப் பள்ளிக்கூடத்தில் பூகோளப் பாடம் படித்தது ஞாபகத்திற்கு வருகிறது'' என்று கேலியாகக் கேட்டேன்.

''அசடே! நன்றாக இந்தப் படங்களைப் பார்!'' என்று இவர் என்னை வற்புறுத்தவே அருகில் சென்று உற்று நோக்கினேன். தென்னிந்தியாவில் பொன்மேடு டிம்பர் ஒர்க்ஸின் பிராஞ்சுகள் எங்கெங்கே உள்ளன என்பதைக் குறிக்கும் இந்தியாவின் படம் அது. ''அடடா! நம்மைப் பற்றிய படமா இது?'' என்றேன் ஆச்சரியத்துடன் நான். ''இதைப் பார்'' என்று உலகப் படத்தைச் சுட்டிக்காட்டினார் இவர். அதில் அமெரிக்காவின்மீது விரலால் தொட்டு விட்டு என்னைப் பார்த்தார். மரத் தொழிற்சாலைகள் அமெரிக்காவில் எங்கெங்கே உள்ளன என்பதைக் குறித்திருந்த அப்படத்தை நான் ஊன்றிக் கவனித்தேன்.

''சீதா! என் தொழில் லட்சியங்கள் யாவும் இந்தச் செல்வ பூமியினின்றுதான் எழுகின்றன. இந்த நாட்டைப் போன்று தொழிலில் நம் தேசமும் விருத்தியடைந்து விட்டால்...ஆகா!'' என்று உணர்ச்சியுடன் கூறிய இவர் என் பக்கம் திரும்பி, ''இந்த வருஷக் கடைசியில் ஒருசமயம் அமெரிக்காவிற்குப் போகலாம் என்று இருக்கிறேன். அப்பொழுது உன்னையும் கூட்டிக் கொண்டு போவேன். வருகிறாயா?'' என்று கேட்டார்.

அமெரிக்கா என்ற வார்த்தை என் மனத்தை ஓர் உலுக்கு உலுக்கியது. 'கட்டாயம் வருவேன்; போகும் வழியில் நாம் நிச்சயமாக ஹவாய்த் தீவுக்குச் சென்று பார்த்துவிட்டுப் போக வேண்டும். பசிபிக் மகா சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள இந்த அழகிய தீவுகளைக் காப்டன் குக் என்பவர் கண்டுபிடித்தாராம். பசிபிக் மகா சமுத்திரத்தில் செல்லும் பெரும்பாலான கப்பல்கள்

இங்குள்ள ஹொனலாலு என்ற துறைமுகத்தில் தங்காமல் செல்வதில்லையாம். அமெரிக்கர்கள் விவாகத்திற்குப்பின்பு உல்லாச யாத்திரை ஸ்தலமாகத் தேர்ந்தெடுக்கும் ஹொனலாலு மிக்க அழகியதொரு துறைமுகமாம். பிரசித்தி பெற்ற மியூஸியம் ஒன்று இந்த ஊரில் இருக்கின்றதாம்: நாகரிக வசதியுள்ள ஹோட்டல், அழகிய மங்கைகள் நடனக்காட்சிகள், புஷ்பத் தோட்டங்கள் மிக்க பெரியதொரு கடற்கரை இவைகொண்ட ஹொனலாலு பூலோக ஸ்வர்க்கமாம். நீங்கள் அமெரிக்கா செல்வது நிச்சயமானால் என்னைக்கட்டாயம் ஹாவாய் தீவுகளுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்' என்று மூச்சுவிடாமல் நான் பேசினேன்.

''பரவாயில்லையே! பூகோள சாஸ்திரத்தில் இப்பொழுது பரிட்சை வைத்தாலும்உனக்கு மார்க்கு நிறையக் கிடைக்கும் போலிருக்கிறதே! அமெரிக்காவையும் அதைச் சுற்றியுள்ள தீவுகளைப்பற்றியும் நன்கு வாசித்துத் தெரிந்து கொண்டிருக்கிறாய். அது கிடக்கட்டும் அமெரிக்கா போக வேண்டும். அங்கு போக வேண்டும். இங்கு போக வேண்டும் என்று ஆசைப்படுகிறாயே! கொஞ்ச தூரத்திலிருக்கும் உன் கணவனின் தொழிற்சாலையைப் பார்க்க வேண்டுமென்று என்றாவது நீ ஆசைப்பட்டதுண்டா?'' என்று கேட்டார்.

என்ன முட்டாள்தனம்! வந்து ஒரு மாதமாகியும் ஒரு நாள்கூட நான் பொன்மேடு டிம்பர் ஒர்க்ஸைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று ஆவலடைந்ததில்லை! உண்மையை ஒப்புக்கொள்ள மனமின்றி, 'நீங்களாக அழைத்துப் போவீர்கள் என்று காத்திருந்தேன்' என்று மழுப்பினேன் நான்.

''அப்படியானால் உடனே புறப்படு. வண்டியைத் தயார் பண்ணச் சொல்லிவிட்டு வருகிறேன்'' என்று கிளம்பி விட்டார் இவர்

என்னை என்கணவர் தன்னுடைய தொழிற்சாலைக்கு அழைத்துப் போகப் போகிறார் என்பதைக் கேட்ட என் நாத்தனாருக்கு அவர் செய்கை மனத்திற்குப் பிடிக்கவில்லை. வேலையாட்களும், உத்தியோகம் செய்யும் புருஷர்களும் நிறைந்த இடத்திற்கு பெண்கள் எதற்குப் போகவேண்டும் என்று நினைத்தார் போலும்! ஏதோ தொழில் நடக்கிறது. தம்பி அமோகமாக வாழ்கிறான் என்ற மனநிலையில் திருப்தியடைந்த அவர் ஊரெல்லாம் புகழ்ச்சியாகப் பேசும் 'பொன்மேடு டிம்பர் ஒர்க்'ஸைப் பார்க்க வேண்டுமென்று நினைத்ததில்லை. விரக்தியடைந்திருந்த அவர் உள்ளத்திற்கு எதுவுமே பிடிக்காததில் ஆச்சர்யமுமில்லை. இருந்தும் என் ஆர்வத்தைத் தடுப்பானேன் என்ற எண்ணத்தில் பேசாமல் இருந்துவிட்டார்.



அரை மணி நேரத்திற்குள் எங்கள் வண்டி 'பொன்மேடு டிம்பர் ஒர்க்ஸ்' என்ற பிரம்மாண்டமான கட்டடத்தை அடைந்தது. வண்டியைவிட்டு இறங்கிய என் கணவர் முன் செல்லப்பின் தொடர்ந்து உள்ளே சென்ற நான், ஏக காலத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஆட்கள் அனைவரும் என்னையே விறைத்துப் பார்ப்பதைக் கண்டு சங்கோஜம் அடைந்தேன்.

தொழிற்சாலையின் ஒவ்வொரு பக்கத்தையும், அதை நிர்வகிக்கும் முறையையும் பற்றி விளக்கிக் கொண்டே வந்தார் இவர்.

ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டே வந்த நான் பயங்கரமானதொரு சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திகைப்புடன் நின்று விட்டேன். ''ரொம்பப் பயந்து விட்டாயல்லவா? ஒன்றுமில்லை. நம்ப யானைகள் மரத் துண்டங்களைத் தூக்கி வேலை செய்கையிலேயே அப்படிப் பிளிறுகின்றன'' என்றார் என் கணவர்.

''யானைகள்கூட இங்கே இருக்கின்றனவா?'' என்று வியப்புடன் வினவிய என்னை அந்த இடத்துக்கே அழைத்துச் சென்றார்.

பெரிய மரத்துண்டங்களை அலட்சியமாக அப்புறம் தூக்கிப்போடும்யானைகள் செய்யும் வேலைகளைக் கண்டு மிகவும் வியப்படைந்த நான், 'ஒரு யானையையே கட்டித்

தீனி போடுவது கஷ்டம் என்பார்களே!'' நீங்கள் நான்கு யானைகளை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே!'' என்று வேடிக்கையாகக் கேட்டேன்.

யானைகள் இல்லாமல் அவ்வளவு பெரிய மரத்துண்டுகளை யாரால் தூக்கி வைக்கமுடியும்? வேலைக்குத் தகுந்த கூலி கொடுத்தால்தானே காரியம் நடக்கும்? ஆகவே யானையைக் கட்டித் தீனி போட்டுத்தான் ஆகவேண்டும் என்றார் இவர்.

தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்து விட்டு மறுபடியும் வண்டியில் ஏறிக் கொண்டேன் நான்.

''எங்கள் தொழிற்சாலைஎப்படி?'' என்றார் கணவர் 'உங்கள் தொழிற்சாலையில் இவ்வளவு பேர்கள் வேலைசெய்கிறார்கள் என்று நான் நினைக்கவேயில்லை'' என்றேன் நான் பெருமிதத்துடன்.

''ஆயிரம் தொழிலாளிகள் கொண்ட இந்த பிரம்மாண்டமான தொழிற்சாலையை நிர்மாணித்த பெருமை முழுவதும் என் தமையன் ஒருவனையே சாரும். அவனுடைய கொள்கைகளையே நானும் பின்பற்றி நடத்தினால் அதுவே எனக்குப் போதும்'' என்றார் இவர்.

''கௌரி! ஆயிரக்கணக்கில் வேலை செய்யும் தொழிலாளிகள் சம்பளத்தைப் பற்றிக் கேட்டால் நீ மூர்ச்சையடைந்து விடுவாய். மரத்தூளை அள்ளிக் குவிக்கும் சிறுவேலையாளானாலும் மாதம் நூறு ரூபாய் சம்பளம் என்றால் மற்ற உத்தியோகஸ்தர்களைப் பற்றி என்ன சொல்ல இதைத் தவிர, தொழிலாளிகளுக்கு வருஷத்திற்கு ஒரு முறை போனஸ், வேண்டிய பண உதவியும், ஓய்வும்' விடுமுறை நாட்களும் கொண்ட 'பொனமேடு டிம்பர் ஒர்க்ஸ்' ஓர் இலட்சிய தொழிற்சாலை என்று நான் கூறுவேன்.

அதன் முதலாளியாக விளங்கும் என் கணவரின் தாராள சிந்தனையும், இளகிய மனமும் என்னை அவர் பால் கவரச் செய்கிறது. தொழிற்சாலையின் ஒரு பக்கத்தில் நூற்றுக் கணக்கான ஆட்கள் மரத் துண்டுகளைச் சின்ன பலகைகளாக ரம்பத்தால் அறுத்துக்குவிக்கின்றனர். நெற்றியிலும், மார்பிலும் வியர்வை வழிந்தோட அவர்கள் வேலை செய்வதைக் காண எந்தக் கல் நெஞ்சமும் கரைந்து விடும். 'பாவம், எத்தனை கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள் இவர்கள்?' என்றேன் நான். ''இவர்கள் தேகத்தினின்று வியர்வை வழிந்தோடச் செய்த கடும் உழைப்பின் பலன்தான், கண்ணைக் கவர நமது வீட்டை அலங்கரிக்கும் சோபாக்களும், நாற்காலிகளும். இவர்களின் உழைப்புக்குத் தகுந்த கூலி இல்லாவிடில் நமது சுகம் எங்கே!'' என்றார் இவர். நான் பதில் பேசவில்லை. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற அமரகவியின் வாக்கு என் நினைவுக்கு வந்தது.



''நாட்டை ஆள முடிசூடும் மன்னர்களை, ஒரே நாளில் உற்பத்தி செய்ய முடியும். ஆனால் முடி சூடா மன்னர்களாகிய தொழிலாளர்களை அப்படிச் செய்ய முடியாது. அவர்கள் நசுக்கப்பட்டால் தேசத்தின் செழிப்பும் செல்வமும் நசுங்கிவிடும். நாட்டுக்குப் பெருமை உண்டு பண்ணுவது தொழில். நமது நாடும் பிற தேசங்களைப் போல் பல்வேறு தொழில்களிலும் முன்னேற வேண்டி ஆர்வத்துடன் எல்லோரும் உழைக்க வேண்டும்', என்று என் கணவர் நீண்டதொரு பிரசங்கம் செய்தார்.

அவரது இலட்சியங்கள் மிகவும் உயர்ந்தவை அவரது கொள்கைகள் சில விசித்திரமாக எனக்குப் பட்டாலும் கருணைமிக்க அவரது மனத்திற்காகவும், அன்பு பெருக்கோடும் அவரது பரந்த உள்ளத்திற்காகவும், அவற்றை நான் மதித்து அனுஷ்டிக்க உத்தேசித்திருக்கிறேன். உயர்தர சங்கீதத்தையடைய பூர்வ ஜன்மத்தில் பூஜா பலன் செய்திருக்க வேண்டும் என்பார்களே அதே போல அன்பான கணவனுக்கு மாலையிட கொடுத்து வைத்திருக்க வேண்டும் இந்தப் பணமும் பதவியும் இல்லாவிட்டாலும் எனக்குக்

கவலை இல்லை, என் கணவரைப் போன்ற லட்சியவாதியுடன் வாழ்வதைப் போன்ற மகத்தான பாக்கியம் வேறு கிடையாது. அவரது கொள்கைகளை நானும் பின்பற்ற முயற்சிப்பேன்.

கடிதம் நீண்டு விட்டது. இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன் மற்றவை அடுத்த கடிதத்தில்.

இப்படிக்கு அன்புள்ள,
கீதா.

கடிதத்தைப் படித்து முடித்த கௌரி கீழே இறங்கிச் செல்லம்மாளிடம் வந்தாள். 'என்ன எழுதியிருக்கா கீதா'' என்று ஆவலுடன் வினவினாள் மாமியார்.

மாமியாருக்காக மீண்டும் ஒருமுறை தன்னைப்பற்றி கீதா எழுதிய விஷயங்களை நீக்கிவிட்டுப் மிகுதியைப் படித்தாள் கௌரி. மகளின் சந்தோஷ வாழ்வைக் கேட்ட தாயின் முகம் ஆனந்தத்தால் மலர்ந்தது.

## 16

அன்று காலை கீதாவிற்கு அநேக வேலைகள் காத்துக் கொண்டிருந்தன. தூசி படிந்து போயிருந்த ஹால் மேஜையைத் தட்டித் தாறுமாறாகக் கிடந்த புத்தகங்களை அடுக்கி வைத்தாள். கவனிப்பார் இன்று குவிந்திருந்த சலவைத்துணிகளை அழகாக அந்தந்த இடங்களில் பீரோவில் அடுக்கினாள். வேலைக்காரி பெருக்கிச் சென்ற இடத்தையெல்லாம் மேற்பார்வையிட்டு விட்டு தான் செய்த காரியங்களில் திருப்தியடைந்தவளாகக் கீழே இறங்கி வந்தாள். இரைந்த குரலில் பாகீரதி யாருடனோ பேசிக் கொண்டிருப்பதைக் கேட்ட கீதா ஆவல் மிகுதியினால் பின் கட்டின் பக்கம் சென்றாள்.

பச்சை நிற சீட்டி ரவிக்கை, இடையிலே குடியானப் பெண்கள் பாணியில் உடுத்தியிருந்த வெள்ளைப்புடவை, கழுத்துடன் ஒட்டினாற் போல் இரண்டு சரக் கருகமணி மாலை, கைகளில் சிவப்புக் கண்ணாடி வளையல்கள்



இந்த அலங்காரத்தில் அலையென நெளிந்த கூந்தலை அள்ளிச் செருகிக் கொண்டு தூணின் மீது சாய்ந்தபடி நின்ற யௌவன மங்கை ஒருத்தியைக் கீதா கண்டு, கண் கொட்டாது வியப்புடன் நோக்கினாள்.

மானைப் போன்ற மருண்ட விழிகளால் கீதாவைத் திரும்பிப் பார்த்த அந்தப் பெண், ''இவங்க தான் எஜமானர் பெண் ஜாதிங்களா?'' என்று கேட்டு விட்டுப் புன்னகை செய்தாள்.

''ஆமாம்!'' என்று பதிலளித்த பாகீரதி, கீதா பக்கம் திரும்பி, ''என்னம்மா கீதா! என்ன வேணும்?'' என்று கேட்டாள்.

''ஒன்றும் வேண்டாம், அக்கா! வெறுமனேதான் வந்தேன். இந்தப் பெண் யார்?'' என்று கேட்ட அவள், யௌவனத்தின் சோபை பொங்கக் கவர்ச்சி மிக்கவளாகத் தென்பட்ட அந்தப் பெண்ணைத் திரும்ப ஒரு தரம் பார்த்தாள்.

''பொன்னியா கேட்கிறே?'' என்று கேட்ட பாகீரதி சட்டென்று அங்கிருந்து உள்ளே சென்றாள்.

''அவ என்ன ஜாதிப் பொண்ணு, அக்கா! செதுக்கி வைத்த சிற்பம் போல ரொம்ப அழகா இருக்காளே!'' என்று அதிசயப்பட்டாள், கூடவே உள்ளே சென்ற கீதா.

''புலிக்காடுன்னு பக்கத்திலே ஒரு மலை இருக்கு. அந்த மலையிலே மரம் வெட்டிப் பிழைக்கிற ஜனங்களை 'மறவன்' என்று சொல்லுவா. அந்த ஜாதிப்பெண் இந்தப் பொன்னி'' என்று கூறிய பாகீரதி, மேலே தனது காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

''ஏன் அக்கா பொன்னி இங்கே எதற்காக வந்திருக்கிறாள்? அவள் புருஷன் நம்ம தொழிற்சாலையிலே வேலை செய்கிறானா என்ன? அவளை எப்படி உங்களுக்குத் தெரியும்?'' என்று பல கேள்விகளை அடுக்கடுக்காகக் கேட்டாள் கீதா.

பாகீரதி அவளுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல், ''ராஜா எண்ணெய் தேய்ச்சு ஸ்நானம் பண்ணி யுகமாகிறது. போய் வெந்நீர் சுட்டுடுத்தான்னு பார்த்துட்டுவா'' என்று உத்தரவிட்டாள். பாகீரதி முகத்திலே படர்ந்திருந்த வருத்தக் குறிகளையும், குரலிலே தொனித்த சலிப்பையும் கவனித்த கீதாவிற்கு எல்லாம் பெரும் புதிராகத் தோன்றியது. பொன்னி என்பவள் யார்? அவளைப் பற்றிய கேள்விகளை ஏன் பாகீரதி விரும்பவில்லை?

குழப்பத்துடன் குளிக்கும் அறைக்குள் நுழைந்து கீதா கணவனுக்கு ஸ்நானத்திற்கு வேண்டிய வெந்நீரைப் பாத்திரங்களில் நிரப்பி வைத்து விட்டு எண்ணெய் ஸ்நானத்தைப் பற்றி அவனுக்கு ஞாபகப்படுத்த வேண்டி மாடியறைக்குச் சென்றாள்.

மாடி ஹாலுக்குச் சமீபத்தில் வந்த கீதா அப்படியே செயலற்று நின்று விட்டாள். பீரோவைத் திறந்து நோட்டுக் கத்தை ஒன்றை எடுத்து அந்த மலை நாட்டு மங்கையின் கையில் கொடுத்தான் நாகராஜன். அதை வாங்கிக் கொண்ட அவள் புடைவைத் தலைப்பினால் கண்களை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள்.

''நான் உயிருடன் இருக்கிற வரை நீ கவலைப்பட வேண்டியதில்லை என்று எத்தனையோ தடவைகள் சொல்லியிருக்கிறேனே. ஏன் வீணாக அழுகிறாய்? வருத்தப்படாதே, வீட்டுக்குப் போ'' என்று நாகராஜன் வாசற்படியில் துடிக்கும் ஹிருதயத்துடன் நிற்கும் மனைவியைப் பார்க்காது கூறினான்.

கீதாவிற்கு உலகமே சுற்றுவதைப் போன்றிருந்தது. ''அந்தப்பெண்! பொன்னி! மலை நாட்டு மோகினி! உன் கணவரின் காதலி!'' என்று யாரோ கூறி, கை கொட்டி நகைப்பதைப் போன்ற பிரமை ஏற்பட்டது. நெஞ்சை அமுக்கிய துக்கத்தைத் தாங்க முடியாமல் அவள் அங்கிருந்து திரும்பி பக்கத்திலிருந்த அறை ஒன்றிற்குள் சென்றாள். தம்பியை எப்படி விட்டுக் கொடுக்க



முடியும்? அதனால்தான் பாகீரதி பொன்னியைப் பற்றிப் பேச விரும்பவில்லை!

அறையிலிருந்து நாற்காலி ஒன்றில் வந்து உட்கார்ந்த கீதா நெஞ்சிலே 'குமுறிய துக்கத்தை எத்தனை கட்டுப்படுத்தியும் தாங்க முடியாது கண்ணீர் விட்டுவிம்மி அழுது விட்டாள். பொன்னி என்பவளை நாகராஜன் எங்கே சந்தித்தான்? எப்படி ஆரம்பித்தது அவர் சிநேகிதம்? எத்தனை நாட்களாக இந்தத் தொடர்பு?

அதிக நாட்கள் பழகியவள் போலிருக்கின்றது. இல்லாவிடில் அத்தனை உரிமையுடன் நாகராஜனுடன் தனித்துப் பேச ஒருவர் உத்தரவுமின்றி, தானே மாடி ஹாலுக்குள் சென்று விட்டாளே!'—என்று பலவாறு எண்ணி வருந்திய அவள் உள்ளம் பொறாமையினால், கொதித்தது. கணவன் பெரிய லட்சியவாதி என்றும், உன்னத நோக்கங் கொண்டவன் என்றும் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த அவளுக்கு அவனது துரோக நடத்தை தாங்க முடியாத பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

தனது கொள்கைகளையும் இலட்சியங்களையும் பற்றி அடிக்கொரு தடவை பிரசங்கித்த நாகராஜன் பொன்னிக்கும் தனக்குமுள்ள தொடர்பைப்பற்றி ஏன் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை? மனைவிக்குத் தெரியாமல் இருக்கட்டும் என்ற நினைவிலா? இந்த மாதிரி செய்கைகளை மறைத்து விடுவதுதான் சாத்தியப் படுமா? மனைவிக்குத் தெரியாதவரை இருக்கட்டும். தானாகத் தெரிந்தால் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்ற குருட்டுத் தைரியம் காரணமாக இருக்குமோ?—என்று பலவாறு எண்ணி ஏங்கி வருந்திய கீதா நேரம் போவது தெரியாது உட்கார்ந்திருந்தாள். மாடிப்படிகளில் காலடி ஓசை கேட்டது, கணவன் அங்கே வருகிறான் என்று ஊகித்துக் கொண்ட அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு நிலைக் கண்ணாடியில் ஒரு தடவை பார்த்துக் கொண்டாள். கூந்தலை விரலால் கோதிச் சரிப்படுத்திக்கொண்டு, நெற்றிக் குங்குமத்தைக் கொஞ்சம் திருத்தி அமைத்துக் கொண்டாள்.

"கீதா! கீதா! எங்கே போய்விட்டே?" என்று இரைந்து கூப்பிட்ட கணவன் குரலில் எரிச்சல் தொனிப்பதை அறிந்த கீதாவின் உள்ளம் வேகமாகத் துடித்தது. அவள் வந்து விட்டுப் போனதில் மனிதருக்கு உள்ளூர எரிச்சல் அதை யார்மேல் காட்டுவதென்று புரியவில்லை போலிருக்கிறது!' என்று நினைத்தபடி "இங்கே தான் இருக்கேன், எங்கே தொலைந்து போய்விட்டேன்?" என்றாள் தாழ்வான குரல்ல் ஆத்திரத்துடன்.

அறைக்குள் வந்து நின்ற நாகராஜன் "நீ இங்கே உட்கார்ந்துகொண்டு என்ன பண்ணுகிறாய்! நான் தொண்டை கிழியக் கத்திக் கூப்பிட்டது உனக்குக் காது கேட்கலையா என்ன?" என்றான் கோபத்தினால் சிவந்திருந்த அவனது முகத்தைக்கண்ட கீதாவுக்குதித்தென்றது

"ஏன் இப்படிக் கோவிச்சுக்கிறேள்?" என்று தன் ஆத்திரத்தைக் கஷ்டத்துடன் அடக்கிக் கொண்டு மிகவும் சாந்தமாகக் கேட்டாள்.

"அக்கா திடீர்னு மயக்கம் போட்டுக் கீழே விழுந்து விட்டாள். நல்ல வேளை காயம் படாமல், தப்பினாள். உதவிக்கு உன்னை கூப்பிட்டால் ஆளையே காணும்! போய் முதல்லே அவளைக் கவனி" என்று உத்தரவிட்டான் நாகராஜன்.

"அக்கா விழுந்துட்டாளா? அடடா!" என்று ஆச்சர்யத்துடன் கேட்ட கீதா மின்னலைப் போன்று வேகமாகக் கீழே இறங்கி ஓடி வந்தாள். பின்கட்டு கூடத்தில் ஒரு பெஞ்சியின் மீது படுத்திருந்த பாகீரதிக்குச் சமையற்காரி தங்கம் விசிறிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவள் கையிலிருந்த விசிறியை வாங்கிக் கொண்டு நாத்தனாரின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள் கீதா.

"என்ன அக்கா உங்களுக்கு உடம்புக்கு?" என்று ஆதரவுடன் வினவிய கீதாவைக் கண் திறந்து பார்த்தாள் பாகீரதி "ஒண்ணுமில்லை; படபடன்னு நெஞ்சு அடிச்சுண்டது, தலை சுத்தினாப்பல இருந்தது அவ்வளவுதான்



அதுக்குள்ளே இந்த ராஜா இல்லாத தடபுடல் படுத்தி விட்டான். எனக்கு நெஞ்சு படபடப்பு அடிக்கடி வரதுண்டு பயப்படாதே' என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

'நீங்க சொன்னாலும் கேட்காமல் வேலை செய்கிறீர்கள். அக்கா, உங்களுடைய தேகநிலைக்கு வேலை கவலை இதெல்லாம் ஒத்துக்கொள்ளாது" என்று அன்புடன் சொன்ன கீதா மெல்ல விசிறினாள்.

"வேலை...என்ன பிரமாதமான வேலை செய்கிறேன்? கவலையா? எனக்கு என்ன கவலை இருக்கு? ஒண்ணுமே இல்லையே, வயசாயிடுத்தல்லவா? தள்ளாமை அதிகமாயிடுத்து. அவ்வளவுதான்" என்று பதில் சொல்லி விட்டு பாகீரதி கண்களை மூடிக்கொண்டாள்.

நோயாளிக்குச் சிசுருஷைகள் செய்வதில் பொழுது முழுவதும் கழித்த கீதா தன் மனத்தைத் துன்புறுத்திக் கொண்டிருந்த பொன்னியைப் பற்றிக் கணவனிடம் ஒன்றுமே கேட்க முடியவில்லை.

அன்று இரவு அவள் மாடிப் பக்கம் வந்தபொழுது ஹாலில் கணவன் மும்முரமாக ஏதோ கணக்குகளை ஆராய்ந்து கொண்டிருப்பதைக் கண்டாள் அங்கிருந்த ஆசனம் ஒன்றில் உட்கார்ந்து கொண்ட அவள் மேஜை மீதிருந்த ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டாள் புத்தகத்தைப் பிரித்துப் படிக்கும் பாவனையில் வைத்துக் கொண்டு யோசனை செய்யலானாள்.

கணவனுடன் காலைச் சம்பவத்தைப் பற்றியபேச்சை எப்படித் துவக்குவது? எத்தவிதமாக ஆரம்பிப்பது? பொன்னியைப் பற்றிப் பேசினால் கட்டாயம் நாகராஜன் கோபங் கொள்வான். ஒரு சண்டை ஓய்ந்து முடிந்த கொஞ்ச நாட்களுக்குள் மீண்டும் ஒரு யுத்தமா?—என்று பலவாறு எண்ணிச் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தாள்.

தொழிற்சாலை சம்பந்தமான கணக்குகளை நன்கு ஆராய்ந்த பின் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு நாகராஜன் திரும்பிப் பார்த்தான்.

"நீ வந்து ரொம்ப நாழியாச்சா? நான் கவனிக்கவேயில்லை" என்று அவன் அவள் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

கீதாவிற்குத் தன் கணவனை நிமிர்ந்து பார்க்கக்கூட ஏனோ தைர்யம் வரவில்லை "நான் உங்களை ஒன்று கேட்க வேண்டும் என்று காலையிலிருந்து காத்திருக்கிறேன்" என்று பீடிகையுடன் ஆரம்பித்தாள் கீதா.

அந்த ஒரு வார்த்தை பேசி முடிப்பதற்குள் அவள் உடல் குப்பென்று வியர்த்து விவரிக்க முடியாத ஒரு திகிலினால் நாவறண்டு போயிற்று.

"ஒன்று என்ன? எத்தனை வேண்டுமானாலும் கேள். பதில் சொல்லக் காத்திருக்கிறேன்" என்று சிரித்த நாகராஜன், இன்னும் கொஞ்சம் அருகில் நெருங்கி உட்கார்ந்தான்.

தன் தைர்யமெல்லாம் ஒருங்கே வரவழைத்துக் கொண்ட கீதா, "ஆமாம்! அந்தப் பொன்னி என்பவள் யார்!" என்று துணிவுடன் கேட்டாள்.

நாகராஜன் உடனே பதில் சொல்லவில்லை. இடத்தை விட்டு எழுந்திருந்து எதிரிலிருந்த நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டான். சிறிது நேரம் கழித்து "ஏன் கேட்கிறாய்?" என்றான்.

அவனது குழப்பத்தையும் தயக்கத்தையும் குறிப்பாக கவனித்த கீதாவின் உள்ளம் பொறாமை உணர்ச்சி வசப்பட்டது. "அவள் யாரென்று எனக்குத் தெரியக் கூடாதா?" என்று தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு வினவினாள்.

"தெரிஞ்சவள்! அவ்வளவுதான்!" என்று சுருக்கமாக விடை அளித்தான் நாகராஜன்.



"தெரிஞ்சவள் என்றால் என்ன அர்த்தம்? எப்படித் தெரிஞ்சவள்? எத்தனை நாளாகத் தெரிஞ்சவள்? யாருக்குத் தெரிஞ்சவள்? கொஞ்சம் விவரமாகச் சொன்னால் தேவலை" என்று கேட்ட கீதா, மேலே பேச முடியாது தடுமாறினாள்.

நாகராஜன் சட்டென்று எழுந்திருந்து அவள் அருகில் வந்து நின்றான், "அவளைப் பற்றி விவரமாக நீ தெரிந்து கொள்ள வேண்டியது அநாவசியம். உன் மனநிலை எனக்குப் புரிந்துவிட்டது. அவள் உன் இன்பவாழ்க்கையில் குறுக்கிட மாட்டாள். அவள் பேச்சை விட்டு வேறு ஏதாவது கேட்க வேண்டுமானால் கேள் பதில் சொல்வதற்குச் சித்தமாயிருக்கிறேன்" என்று கடுமையான குரலில் சொன்னான்

"நான் இங்கே வந்து இத்தனை நாட்கள் ஆகியும் எனக்கு நீங்களாகவே அவளைப் பற்றி ஒன்றும் தெரிவிக்கவில்லை. அரை குறையாகத் தெரிந்து கொண்டு தவிக்கும் எனக்கு விவரம் சொல்லத் தாங்கள் மறுப்பது ஏனோ" என்று துக்கத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு விடாப்பிடியாகக் கேட்டாள் கீதா.

"அவள் உன் இன்ப வாழ்க்கையில் குறுக்கிட மாட்டாள் என்று ஒரு தடவை கூறினால் போதாதா? அவளுக்கும் உனக்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை போதும், பொன்னியைப் பற்றிய பேச்சு! இதுடன் நிற்கட்டும்" என்று எரிச்சல் மிகுந்தவனாய்ப் பதிலளித்தான் நாகராஜன்.

"அவளுக்கும் எனக்கும் சம்பந்தமில்லையா? அது எப்படியாகும்? என் கணவருடைய இருதயேஸ்வரி எனக்கு நெருங்கிய பந்துவாயிற்றே." என்று ஏளனமாகக் கேட்ட கீதா "காலையிலே நீங்கள் பணம் கொடுத்ததும் அவள் அழுததும், தங்கள் உயிர் உள்ளவரை அவளைக் காப்பாற்றுவதாக வாக்களித்ததும் எல்லாம் எனக்குத் தெரியும்" என்று முடித்தாள். மடைதிறந்த வெள்ளமென அவள் கண்களினின்று கண்ணீர் பெருகி வழிந்தோடியது.

"தெரிந்து விட்டதல்லவா? பின் எதற்காக இந்தக் கண்ணீரும் கம்பளையும்?" என்று கோபத்துடன் கேட்ட நாகராஜன் மறுபடியும் எதிரே இருந்த ஆசனத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

கடந்துபோன தன் வாழ்க்கையில் பெரிய களங்கம் ஒன்று இருப்பதை வெளியே காட்டிக் கொள்ளாமல், தான் ஒரு லட்சியவாதியென்றும், பரந்த நோக்கம் கொண்டவன் என்றும் பலவாறு நடித்து விட்டுத் தன் உண்மை நிலையை மனைவி அறிந்து கொண்டதும் கொஞ்சங்கூடக் கலங்காமல் அலட்சியமாக இருந்த அவன் மனப்பான்மை கீதாவிற்கு ஆச்சர்யமாக இருந்தது.

பெண்மையின் உரிமையையும் கௌரவத்தையும் அதிகம் போற்றும் கீதாவைப் போன்ற ஒரு பெண், தன் கணவனின் அன்பைக் கேவலம் ஒரு நாடோடிப் பெண்ணுடன் பகிர்ந்து அனுபவிக்கவேண்டும் என்று நாகராஜன் எப்படி எதிர்பார்க்க முடியும்? அப்படி எதிர்பார்த்தால் அதை நெஞ்சழுத்தம் என்பதா? பணத்திமிர் என்பதா?— இதைத் தனக்குள் எண்ணிய கீதாவிற்குக் கோபமும் ஆத்திரமும் தாங்கமுடியவில்லை. கணவனுக்கு என்ன பதில் சொல்வது என்று விளங்காத அவள் முடிவில் வாய்விட்டு விம்மி அழ ஆரம்பித்தாள்.

அதைக்கண்ட நாகராஜன் மனைவியின் அருகில் ஓடி வந்து. "ஏன், கத்திக் கூச்சல் போட்டு அட்டகாசம் செய்கிறாய்? உடம்பு சரிப்படாமல் அக்கா அடுத்த அறையில் படுத்துக் கொண்டிருக்கிறாள்ன்னு ஞாபகம் இருக்கட்டும். நமது சண்டை அவள் காதுகளுக்கு எட்ட வேண்டாம்."

"உங்கள் அக்கா கூட இது விஷயமாக உங்களுக்கு உடந்தை என்பது எனக்குத் தெரியும்!" என்று ஆத்திரத்துடன் பாணம் தொடுத்த கீதா, கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "உங்க அக்காவும்தான் காலையில் உங்களைப் போல் 'தெரிஞ்சவள்' என்று மழுப்பினார்" என்று திணறினாள்.

"அக்காவிடம் இதைப் பத்தி என்ன தாறுமாறாகக் கேட்டே? ஒரு சமயம் நீ மனம் புண்படப் பேசினது தான் காரணமாக அக்காவுக்கு மயக்கம் வந்துவிட்டதோ என்னவோ? அவளுக்கு ரத்த அழுத்த வியாதி, அதிர்ச்சியாகாதுன்னு நான் உன்னிடம் எத்தனை தடவை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எந்த எழவாவது தெரியணும்னா என்கிட்டக் கேட்டுத் தொலையேன். அவளைப் போய் ஏன் துன்பப் படுத்துகிறாய்?" என்று இரைந்த நாகராஜன் மிகுந்த கோபத்துடன் கீதாவை உற்றுப் பார்த்தான்.



கணவனுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தின் உச்சநிலையைக் கண்ட கீதா ஸ்தம்பித்துப் போனாள். "நான் அக்காவை ஒன்றும் கேட்கவில்லை. வீணாக ஏன் ஆத்திரப்படறேள்? உங்கள் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். நான் யார் குறுக்கே சொல்ல..." என்று விம்மலும் திணறலுமாகக் கூறிவிட்டு மறுபடியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"பொன்னியைப் பற்றி அக்காவிடம் இனி ஒரு வார்த்தைக்கூட நீ பேசக்கூடாது. அவளுக்கும் உனக்கும் ஒருவித சம்பந்தமுமில்லை. என் உயிர் உள்ளவரை, அவளை வைத்துப் போஷிக்கக் கடமைப் பட்டவன் நான். பொன்னியைப் பற்றிய சம்பாஷணையை மறுபடியும் நீ எந்தக் காரணங் கொண்டும் ஆரம்பிக்கக் கூடாது. இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு நீ வசிக்க இஷ்டப் பட்டால்..." என்று நாகராஜன் சொல்லி முடிப்பதற்குள், "இங்கே இருக்கலாம், இல்லாவிடில் பூந்ேடலுக்கு உடனே கிளம்பிவிட வேண்டும், அவ்வளவுதானே?" என்று துக்கத்துடன் கேட்டாள், கீதா.

"உன்னை மறுபடியும் வீட்டை விட்டுப் போகச் சொல்ல அத்தனை மடையன் அல்ல நான். இந்த வீடு உன்னுடையதும் அல்லவா? உனக்கும் சரிபாதி உரிமைகள் இங்கே உண்டு. நீ தாராளமாக இங்கே வசிக்கலாம் ஆனால் பெயரளவில் மட்டும் நாம் இருவரும் கணவன்—மனைவியென்று பொய்யாக வாழ்க்கை நடத்த நேரும்" என்று கோபத்துடன் சொன்னான்.

''எனக்கும் இந்த வீட்டில் சில உரிமைகள் உண்டு என்பதை ஒப்புக் கொண்டீர்களே, அதுவரை நான் பாக்கியவதி!'' என ஏளனமாகப் பதிலளித்த கீதா தொடர்ந்தாற் போல், ''நீங்கள் இஷ்டப்படி நடப்பீர்கள், அதை நான் கண்டு கேட்கக் கூடாது. பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்க வேண்டும். இந்த நிபந்தனை உங்களுக்கே நியாயமாகப் பட்டால் சரி சொந்த மனைவி கண்ணீர் வடிக்க இன்னொருத்தியுடன் காதல் நாடகம் நடத்த வேண்டும் என்ற ஆசைதான் உங்கள் வாழ்க்கையின் லட்சியமாயிருந்தால் உங்கள் லட்சியம் வெற்றி பெறட்டும்'!' என்று கோபம், ஆத்திரம், துக்கம் முதலிய உணர்ச்சி வசப்பட்டு விம்மியழுதாள்.

அதற்குப் பதில் பேசாது நாகராஜன் அங்கிருந்து 'விர்' என வெளியேறினான்.

## 17

திடுக்கிட்டு கீதா விழித்துக் கொண்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டாள் கீழ்வானத்தில் உதித்து எழுந்து கொண்டிருந்த இளஞ்சூரியனின் கிரணங்கள் ஜன்னல் வழியாகச் சுரீர் என அவள் முகத்தின் மீது வந்து தாக்கின.

பொழுது விடிந்து அதிக நேரமாயிற்று என்பதை உணர்ந்த அவள் பரபரப்புடன் கீழே இறங்கி வேகமாகப் பின் கட்டிற்குச் சென்றாள். நாத்தனார் பாகீரதிக்கு உடம்பு இன்னும் பூராவும் குணமாகவில்லையாதலால் வீட்டு வேலை பொறுப்பு முழுவதும் அவளுடையதாகவே இருந்தது. அப்படியிருக்கையில் பொழுது விடிந்தது கூடத் தெரியாது தூங்கி விட்டதைக் குறித்து அவள் மனம் மிக்க கலவரத்தையடைந்தது.

காலைச் சமையலுக்குத் தங்கத்திற்குச் சாமான்கள் எடுத்துக் கொடுக்க வேண்டும். வேலைக்காரி செய்த வேலைகளை மேற்பார்வையிட வேண்டும். நடுவில் படுத்துக் கொண்டிருக்கும் நாத்தனாருக்குக்கொஞ்சம்சிசுருஷைகள் செய்தாக வேண்டும் என்று கணக்கிட்ட அவள்



மனம் முதல் நாள் சம்பவத்தை சிறிது மறந்துவிட்டிருந்தது என்றே சொல்ல வேண்டும்.

அவசரமாக ஸ்நானம் செய்துவிட்டு, வேறு உடை உடுத்திக்கொண்டு அவள் சமையற்கட்டின் முன்பக்கத்திற்கு வந்தபொழுது நாகராஜன் நோயாளியாகப் படுத்திருந்த தன் சகோதரி யருகில் உட்கார்ந்துகொண்டு சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டாள்.

அருகில் கீதா வருவதைக் கவனித்த பாகீரதி ''இனி அவளுக்கு நம்பளைத்தவிர வேறு யார் கதி? அதனாலே அவளைக் கடைசி வரையிலும் ரட்சிக்க வேண்டியதுதான் உன் கடமை சாப்பிட சாதத்துக்கும் கட்டிக்கத் துணிக்கும் பஞ்சமில்லாமல் காப்பாத்தி விடு'' என்று கூறிக் கொண்டிருந்தாள்.

நாத்தனார், பொன்னியைப் பற்றித் தன் கணவனிடம் பரிந்து பேசிய சொற்களைக் கேட்ட கீதா திகைத்துப் போனாள். பாகீரதிக்குச் சித்தப்பிரமை ஏற்பட்டுவிட்டதா என்ன? தம்பிக்குப் புத்தி சொல்லி அவனது தவறான நடத்தையை ஒழுங்குப்படுத்த முயல வேண்டிய சகோதரியா இப்படிப் பேசுவது?

பொன்னியை நாகராஜன் கடைசிவரை வைத்துக் காப்பாற்றக் கடமைப்பட்டவனாமே? ஏன்? கல்யாணமாகாது பிரம்மச்சாரியாக உல்லாசமாக நாகராஜன் பொழுதைக் கழித்த காலத்தில் பொன்னியின் யௌவன சோபைக்கு மயங்கி அவளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்ட ஒரு பிசகிற்காக வாழ்நாட்கள் முழுவதும் அவளை வைத்துக்காப்பாற்ற வேண்டுமா? ஐயோ! இந்தப் பாவி எங்கிருந்து எமனாக கீதாவிற்கு வந்து சேர்ந்தாள்! இன்ப நிலவு பொழிந்துகொண்டிருந்த தன் வாழ்க்கையைப் பாழ்படுத்தக் கூடிய பாதகி ஒருத்தி இருக்கிறாள் என்பதை அதுவரை கீதா தெரிந்து கொள்ளாதிருந்தது எத்தனை மூடத்தனம்! நாகராஜன் மிக பரிசுத்தமான நடத்தையுடையவன் என்று அவன் பேச்சில் மயங்கி ஏமாந்தல்லவா போய்விட்டாள்!

விநாடியில் பலவும் சிந்தித்த கீதாவின் மனத்தில் அடங்கிப் போயிருந்த துக்கம் குமுறி எழுந்தது. பொங்கி வந்தக் கண்ணீரைச் சமாளித்துக் கொண்டு பாகீரதி அருகில் வந்தாள், 'சுக்குக் கஷாயம் போடச் சொன்வேளே தயாராகி விட்டது, எடுத்துக் கொண்டு வரட்டுமா!'' என வினவினாள்.

கீதா அருகில் நிற்பதைக் கவனித்த பாகீரதி ஒரு கணம் திடுக்கிட்டாள், அதைச் சட்டெனச் சமாளித்துக் கொண்டு. ''எடுத்துண்டு வாயேன் அம்மா! இதுக்கு என்னைக் கேட்கணுமா!'' என்று புன்னகையுடன் பதிலளித்தாள்.

நாத்தனார் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்களை நொடிப்பொழுதில் கவனித்த கீதாவிற்கு மிக ஆச்சர்யமாக இருந்தது. பாகீரதி வெளிப் பார்வைக்குத் தோன்றுவதைப் போன்று வெகுளி மனுஷியல்ல. மனத்திலே ஒன்றும் வெளியே ஒன்றுமாகப் பேசும் நயவஞ்சகி. இத்தனை நாட்களாக அவளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் போனது எத்தனை அசட்டுத்தனம்!—என்று கீதா தன்னையே நொந்து கொண்டு சமையலறைக்குள் சென்றாள்.

சுக்குக்கஷாயத்தை ஆற்றி வெள்ளிக் கிண்ணத்தில் விட்டு நாத்தனாரிடம் கொடுத்துவிட்டுக் கீதா திரும்பிய பொழுது நாகராஜன் தன் முகத்தையேபார்த்துக்கொண்டு நிற்பதை உணர்ந்தாள். ஏதோ சொல்லத் தவிப்பவன் போல அவனது முகபாவம் ஒரு க்ஷணநேரம் அவளுக்குத் தென்பட்டது, ஆனால் அடுத்த நிமிஷம் அவனது முகபாவம் எப்பொழுதும்போல கம்பீரமானகளையை மேற்கொண்டதை வியப்புடன் கவனித்தாள் அவள்.

''இரண்டு நாள் இந்த கஷாயத்தைச் சாப்பிட்டால் எல்லா வியாதிகளும் பஞ்சாய் பறந்து போயிடும்'' என்று கூறிய பாகீரதி மருந்தை உட்கொண்டு விட்டுக் கிண்ணத்தை அருகில் உள்ள மேஜைமீது வைத்தாள் அதை எடுக்கச் சிறிது குனிந்த கீதாவின் முகத்தை அப்பொழுது தான் பாகீரதி நன்றாகக் கவனிக்க நேர்ந்தது.



இரவெல்லாம் சரியாகத் தூங்காது கண்ணீர் விட்டுக் கழித்ததனால் வாடியிருந்த அவளது முகத்தை உற்றுப் பார்த்த பாகீரதி கவலையுடன், ''என்னம்மா கீதா உடம்புக்கு என்ன? மூஞ்சியெல்லாம் ஒரு மாதிரி இருக்கே!'' என்று விசாரித்தாள்.

நாத்தனார் தன்மீது காட்டும் அபிமானம் கீதாவிற்கு வேடிக்கையாக இருந்தது. அவளுக்குப் பதில் சொல்ல வாயைத் திறக்குமுன் குறுக்கிட்ட நாகராஜன். ''ராத்திரி ரொம்ப நாழி ஏதோ கதைப்புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள். நன்றாகத் தூங்கவில்லை. அதனால் தான் அப்படி தோன்றுகிறது!'' என்று முடித்தான்.

கணவன் சொன்ன பொய்யைக் கேட்டு மனைவி ஸ்தம்பித்துப் போனாள். புருஷனும் மனைவியும் பொன்னியை உத்தேசித்து மனஸ்தாபப்பட்டுக்கொண்ட விஷயம் சகோதரிக்குத் தெரியக் கூடாதென்று நாகராஜன் மறைக்கிறான்! பொன்னிக்கும் நாகராஜனுக்கும் உள்ள உறவை கீதா தெரிந்து கொள்ளக் கூடாதென்று மறைக்கிறாள் பாகீரதி. ஏன் இப்படி இருவரும் பொன்னி விஷயத்தை மறைக்க முற்படவேண்டும்? மர்மம் யாதாக இருக்கும்?—என்று பலவாறு எண்ணிக் குழம்பிய கீதா, பாகீரதியிடம் எதுவும் பேசுமுன் சமையலறையிலிருந்த தங்கத்தின் குரல் கேட்கவே அவளைக் கவனிக்கச் சென்று விட்டாள்.

சமையற்காரிக்கு உதவியாகக் காய்கறிகளை நறுக்கிக் கொண்டிருந்த போது கீதாவின் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தத்தளித்தது.

''என்னம்மா இது! கத்தரிக்கா கூட்டு செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டு புடலங்காயை நறுக்கிண்டு இருக்கேளே!'' எனத் தங்கம் ஆச்சர்யத்துடன் வினவியபொழுதுதான் கீதா தன் நினைவு பெற்று இந்த உலகத்திற்கு வந்தாள்.

''முதலில் அப்படித்தான் சொன்னேன் அவருக்குப் புடலங்காய் கூட்டு என்றால் பிடிக்குமே என்ற ஞாபகம் வரவே அதை நறுக்கினேன்!'' என்று தன் தவறை

உணர்ந்து மறு விநாடியில் சமாளித்துக் கொண்டு கீதா பதிலளித்தாள்.

தங்கம் பதிலுக்குக் களுக்கென்று சிரித்தாள். ''என்ன வோம்மா, நானும் நாலு வருஷமா ஆத்தில் சமையல் வேலை செஞ்சுண்டுதான் வரேன். உங்காத்துக்கார ருக்குப் பிடிச்ச காய்கறி எதுன்னு எனக்கு இன்னிவரை தெரியாது. எதைப் பண்ணிப் போட்டாலும் சிவனேன்னு சாப்பிட்டு விட்டுப் போய்விடுவார். சாப்பாட்டு விஷ யத்திலே ரொம்பப் பிரியமுள்ளவர் உங்க மச்சினர்தான். ஆனால் நமக்கென்ன தெரியும்? ஆத்துக்காரருக்கு எது பிடிக்கும் எது பிடிக்காதுங்கறது பெண்டாட்டிக்குத்தான் தெரிந்திருக்கும்'' என்று மேலே பேசிக் கொண்டு போனாள்.

கைவேலை நிறுத்திவிட்டு கீதா தங்கத்தின் முகத்தை ஆவலுடன் பார்த்தாள். ''நான்கு வருஷங்க ளாகவா இந்தாத்தில் நீங்கள் வேலை செய்து கொண்டி ருக்கேள்?'' என்று பதட்டத்துடன் கேட்ட கீதாவை வியப்புடன் பார்த்தாள் தங்கம். ''ஆமாம். இங்கேயே நான் இருக்கேன். ஏன் கேட்கிறேள்!'' என்று அவள் கேட்டாள்.

கீதாவின் உதடுகள் துடித்தன! நான்கு வருஷங்களாக அந்த வீட்டில் சமையல் வேலை செய்யும் தங்கத்தின் கூரிய கண்களுக்கு நாகராஜன் பொன்னி இவர்களின் தொடர்பு விஷயம் புலப்படாது போய் விடுமா என்ன? கட்டாயம் அவளுக்குச் சங்கதி தெரிந்திருக்கும் அக்காவும் தம்பியும் மறைத்து வைக்கும் பொன்னியைப் பற்றிய விவரத்தைத் தங்கத்திடம் கேட்டால்...? கீதா வாயைத் திறந்தாள் தங்கம் தன்னைப் பரிதாபமாகப் பார்ப் பதைப் போன்று ஒரு பிரமை ஏற்பட்டது அவளுக்கு 'சே' என்ன முட்டாள்தனம்! கணவனைப் பற்றிய அந்தரங்க விஷயத்தை யாருடன் சம்பாஷிப்பது! வீட்டில் வேலை செய்யும் சமையற்காரியிடமா? என்ன அசட்டுக் காரியம்? பொன்னியைப் பற்றிய விவரம் சரியாகத் தெரியாமல் இருந்தாலும் இருக்கட்டும்; அதற்காகச்



சம்பந்தமில்லாதவரிடமெல்லாம் கேட்டுக் கணவனின் கௌரவத்தைக் குறைப்பதா!'' என்று எண்ணமிட்டாள்.

கீதா ஆவலினால் துடித்த மனததைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''ஏன் கேட்கிறேள்?'' என்று தங்கம் மீண்டும் சம்பா ஷணையைத் துவங்க முயற்சித்தபோது, ''ஒன்றுமில்லை! வெறுமனே தான் கேட்டேன்'' என்று அசிரத்தையாகப் பதிலளித்த கீதா மற்ற காரியங்களைக் கவனிக்க ஆரம் பித்தாள்.

கணவன் கூப்பிடும் குரல்கேட்டு மாடி அறைக்குச் சென்றவள், அவன் வெளியே போவதற்குத் தயாராக உடுத்திக்கொண்டு ஹாலில் தன் வரவை எதிர்பார்த்து நிற்பதைக் கண்டாள். முதல்நாள் இரவு அவர்களுக்குள் நடந்த கசப்பான சம்பாஷணை முழுவதும் அவளது நினைவுக்கு வரவே அவளால் அவனது முகத்தை நிமிர்ந்து பார்க்கக்கூட முடியவில்லை. மௌனமாக அங்கே வந்து நின்ற மனைவியைக் கண்ட நாகராஜன், ''ஒன்றுமில்லை நான் தொழிற்சாலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக் கிறேன். சொல்லிவிட்டுப் போகலாமென்றுதான் அழைத் தேன்'' என்றான்.

தினமும் நடக்கும் சம்பவம்தான் அது. எத்தனை வேலைகள் இருந்தபோதிலும் கீதா கணவனை வெளியில் புறப்படுமுன் சென்று வழியனுப்பிவிட்டு வரத் தவற மாட்டாள். அவனுக்கு அதில் இருக்கும் அலாதி திருப்தியை உணர்ந்துதானோ என்னவோ அவனும் மறக்காது வெளியே செல்லுமுன் சொல்லிக் கொள்ளாமல் போவ தில்லை.

''எப்போ திரும்பி வருவீர்கள்?'' என்று வழக்கமாகக் கேட்கும் கேள்வியை கீதா அன்று கேட்கவில்லை. அதற்குப் பதில் ''உம்!'' என்று மெல்ல முனகினாள், தலையைக் குனிந்தபடியே.

''இன்றைக்கு வேலை ஜாஸ்தியாக இருப்பதால் வீட்டிற்குச் சாப்பிட்ட வரமுடியாது போலிருக்கிறது.

அதனால் சாப்பாட்டை ஆபீஸுக்கே அனுப்பிடு" என்று தானே பதிலளித்த நாகராஜன் கீதாவின் அருகில் சென்று அவளது கன்னத்தைச் செல்லமாகத் தட்டிவிட்டு வெளியேறினான். குபீரென்று முகத்தின்மீது யாரோ நெருப்பை வாரி வீசியதைப் போன்றிருந்தது, அவளுக்கு அந்தச் செய்கை.

அன்று பகல் வீட்டு வேலைகள் யாவற்றையும் ஒழுங்காக கவனித்து விட்டுச் சாப்பிட இலையில் உட்கார்ந்த கீதாவிற்குச் சாப்பிடவே பிடிக்கவில்லை. இவ்வளவு அமர்க்களம் ஆனபின்பும் தன் கணவன் விஷயங்கள் ஒன்றுமே நடக்காதது போன்று நடந்துகொள்ள முயற்சிப்பது அவளுக்கு மிக்க ஆச்சர்யத்தைக் கொடுத்தது.

தப்புக் காரியங்கள் எத்தனை செய்தாலும் தன்னால் நிலைமையைச் சமாளித்துக்கொள்ள முடியும் என்பதை மனைவிக்கு அறிவுறுத்தும் நோக்கத்துடன் நாகராஜன் நடந்து கொள்கிறானா? அல்லது. கீதா ஏழை வீட்டுப் பெண்தானே! தான் எது செய்தாலும் எதிர்த்துக் கேட்காது வாயடைத்துக்கிடக்க கடமைப்பட்டவள் என்ற நெஞ்சழுத்தத்தினால் அப்படி நடந்து கொள்கிறானா?

எண்ணி எண்ணி மனம் புண்ணான கீதா வெறுப்புடன் இலையைவிட்டு எழுந்திருந்து நேரே தன் அறைக்குள் சென்று படுத்துக்கொண்டாள். காலைவரை அமுக்கி வைத்திருந்த துக்கம் கண்ணீராக விம்மல்களுடன் வெளிப்பட்டது.

இரண்டு நாட்கள் சென்றன. நேரம் வேகமாக மறைந்தோடிக் கொண்டிருந்த பொழுது கீதாவிற்கு ஒரு யுகமாகக் கழிவதுபோல் தோன்றியது இரண்டு நாளாகப் படுத்திருந்த பாகீரதியின் உடல்நிலை குணமாகி விடவே, அவள் எழுந்திருந்து வீட்டுக் காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்துவிட்டாள். அதனால் கீதாவின் பொறுப்பு சற்றுக் குறைந்து அவள் மனம் குருட்டு யோசனைகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டது.

கீதா எவ்வளவுக்கெவ்வளவு கலங்கி மனம்புண்ணாகிக் கொண்டிருந்தாளோ, அவ்வளவுக்கவ்வளவு நாகராஜன்



பொன்னி விஷயமாக ஏற்பட்ட மனஸ்தாபத்தை மறந்தவனாகக் காணப்பட்டான், அவன் சகஜமாகவே கீதாவிடம் பழகினான். கொதித்துக் கொண்டிருந்த கீதாவின் மனத்திற்கு. அவனது நடத்தை மேலும் ஆத்திரத்தை உண்டாக்கியது. அவனுடன் வாய் விட்டுக் கத்தி, சண்டை போட்டு ரகளை செய்யவேண்டும்போல் கோபம் குமுறிக் கொண்டு வந்தது என்றாலும், தானாக அவன் பொன்னியைப் பற்றிப் பேசட்டுமே என்று கருதிக் கொண்டு காத்திருந்தாள் ஆனால் நாகராஜனோ அப்பேச்சை எடுக்கவில்லை.

அன்று சாயங்காலம் ஹாலின் முன்புறம் திறந்த வெளியில் நின்று கொண்டு தோட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் கீதா தோட்டத்தின் முன்புறத்தில் வரிசையாக வளர்ந்து நின்ற கொன்றை மரங்களில் கொத்துக் கொத்தாக மலர்ந்த சிவந்த புஷ்பங்கள் அந்தி வானத்தின் செம்மையுடன் போட்டியிடுவதைப் போன்று தென்றலுடன் அசைந்து கொண்டிருந்தன இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கீதா கொஞ்ச தூரத்திலிருந்த சிமெண்ட் மேடைப் பக்கம் திரும்பிப் பார்த்தவள் ஸ்தம்பித்துப் போனாள்.

தொழிற்சாலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தவன் போலக் காணப்பட்ட நாகராஜன், ஒரு சிறு புஷ்பக் கொத்தைப் பறித்து அவளுடன் நின்று கொண்டிருந்த மூன்று வயது ஆண் குழந்தையிடம் கொடுப்பது போல் பாசாங்கு செய்து விளையாடிக்கொண்டிருந்தான்"

"இதென்ன விளையாட்டு ராஜா? அவன் அழப் போகிறான். குழந்தையை ரொம்ப ஏமாத்தாதே, போ" என்று கடிந்து கொண்ட பாகீரதியம்மாள் அங்கே வந்து நின்றாள். நாகராஜன் கையிலிருந்த புஷ்பக் கொத்தை ஆசையுடன் வாங்கிக் கொண்ட அச்சிறுவனை வாரி அணைத்துக் கொண்டாள் பொன்னி. பொன்னியின் தோளின்மீது ஒய்யாரமாகச் சாய்ந்துக் கொண்ட அந்தச் சிறுவனின் முகம் கீதாவின் பக்கமாக இருந்தது.

அந்தக் குழந்தையின் முகத்தைக் கவனித்த அவள் ஹிருதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. ஆச்சர்யம்? சிவந்த நிறம், சுருண்ட கூந்தல், அழகிய கண்கள் நாகராஜன் குழந்தை உருவில் பொன்னியின் தோள் மீது சாய்ந்து கொண்டிருப்பதைப் போன்றிருந்தது அச்சிறுவனின் முகஜாடை. அதிர்ச்சியடைந்த கீதா அருகிலிருந்த தூண் ஒன்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

## 18

அதற்குமேல் அங்கு நின்று கொண்டு அந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கச் சகிக்காதவளாக கீதா சட்டெனப் பக்கத்து அறைக்குள் சென்று ஆசனமொன்றில் அப்படியே உட்கார்ந்து விட்டாள். விவரிக்க முடியாத ஒருவித துக்கத்தில் கொதித்த அவளது நெஞ்சம் வெகு நேரமாகியும் படபடத்துக் கொண்டேயிருந்தது.

பிறர் எடுத்துச் சொல்லாமலே கீதாவுக்கு உண்மை பளிச் சென்று விளங்கிவிட்டது. ஒரு குழந்தைக்குத் தந்தையாகி விட்ட தன் கணவன் அந்தப் பெண்ணைக் கை விட முடியாதபடி பந்தத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான் அதனால்தான் அவளை வைத்துப் போஷிக்க வேண்டியது தன் கடமை என்றும், அப்படி இப்படி என்றும் மறைமுகமாகப் பேசுகிறான்.

கீதா புக்ககத்திற்கு வந்து மூன்று மாதங்கள் ஓடி விட்டன, வாழ்க்கையில் ஒரு பேரிடி தனக்காகக் காத்திருக்கிறது என்ற உண்மையை அறியாத பேதை ஆனந்தமாக நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தாள், கணவனின் கடந்த வாழ்க்கையின் ரகசியம் இத்தனை பயங்கரமானதாக இருக்கும் என்று அவள் எதிர்பார்க்கவேயில்லை.

அழகும் ஐச்வரியமும் ஒருங்கே படைத்த தன் கணவனைப் போன்ற லக்ஷிய புருஷன் உலகிலேயே கிடையாது என்ற பெருமிதத்தினால் சிறிது அகந்தையாக இருந்தாள். அந்தக் கர்வத்திற்குத்தான் எத்தனை மகத்தான வீழ்ச்சி!



தன் வாழ்க்கையில் படிந்திருக்கும் இப் பெரிய களங்கத்தை ஏன் நாகராஜன் கீதாவை மணந்து கொண்ட புதிலேயே எடுத்துச் சொல்லவில்லை? மனைவிக்கு உண்மை தானே தெரியட்டும் என்ற நோக்கமாயிருந்தால், உண்மையைத் தெரிந்து கொண்ட கீதா கேட்டும், கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்ல ஏன் மறுக்க வேண்டும்?

தன் குற்றத்தை ஒப்புக் கொள்ளப் புருஷனுக்குத்தான் மனமில்லை என்றாலும் வீட்டில் பெரியவள் என்ற ஸ்தானத்திலிருக்கும் பாகீரதியாவது தம்பியின் கடந்த வாழ்க்கையின் ரகசியத்தை மெள்ள ஜாடையாகக் கூறியிருந்தால் இன்று அவள் மனம் தாங்க முடியாத அதிர்ச்சியினால் தத்தளித்துக் கொண்டிருக்குமா?

தம்பியின் தவறான நடத்தையைப் பற்றிப் பாகீரதிக்கு பேச பிடிக்கவில்லை என்றாலும் ஒப்புக் கொள்ளக் கூடிய விஷயம். ஆனால், பொன்னி—நாகராஜன் தொடர்பு நீடித்திருக்க அவள் செய்யும் பிரயத்தனமும் காரியங்களும் மன்னிக்க முடியாத குற்றமில்லையா?

எத்தனை அக்ரமம்! இப்படிப்பட்ட அவமானமான செய்கை எந்தக் குடும்பத்தில் நடக்கும்.

ஒரு காலத்தில் தவறிப் போய் தம்பி செய்த ஒரு பிசகான செய்கையை வீட்டிற்கு மனைவி என்ற ஒரு பெண் வந்த பின்பும் கூடச் சகோதரி ஆதரிப்பதின் நோக்கம் என்னவாயிருக்கும்? சந்தோஷமாகக் கீதா இல்வாழ்க்கையை நடத்துவதைக் காணச் சகிக்காத தன்மையினால் தான்! சந்தேகமென்ன! பிறர் வாழச் சகியாத அகங்காரக்காரி பாகீரதி! கீதாவின் வாழ்க்கையை விஷமாக்க முனைந்திருக்கும் கொடும் பாதகி! இந்த லக்ஷணத்தில் சகோதரன் மனைவி மீது பாசமாக இருப்பது போல எத்தனை பாசாங்கு! என்ன சாகசம்! அடடா! உலகமே தெரியாத பேதைப் பெண்ணாக கீதா இருந்து விட்டாளே இத்தனை நாளும்?

பொன்னிக்கும் நாகராஜனுக்கும் தொடர்பு ஏற்பட்டு எத்தனைக் காலமாகியிருக்கும்? குழந்தையின் வயதைக்

கணக்கிட்டால் குறைந்தது மூன்று அல்லது நான்கு வருஷங்களாவது இருக்க வேண்டும். பொன்னி இத்தனை நாட்கள் எங்கிருந்தாள்? திடீரென்று இப்பொழுது பங்களாவுக்கு ஏன் அடிக்கடி வருகிறாள்? அவள் காட்டும் உரிமையைப் பார்த்தால் ஒரு சமயம் நாகராஜன் பொன்னியை ரகசியமாக முன்பே ரிஜிஸ்டர் விவாகம் செய்து கொண்டிருப்பானோ என்னவோ! உண்மை அப்படியிருந்தால் கீதாவின் கதி?

தனது நிலைமையை நினைத்த கீதா துக்கம் தாங்க முடியாது அழ ஆரம்பித்தாள். மாடி ஹால் கடிகாரம் டண் டண் என்று ஒலிப்பதைக் கேட்டு அவள் திடுக்கிட்டு எழுந்திருந்தாள். இரவு மணி எட்டாகி விட்டதென்பதை உணர்ந்ததும் விளக்கு ஏற்றப்படாததால் இருட்டாக இருந்த அறையினின்றும் தட்டுத் தடுமாறிக் கொண்டு வெளியே வந்தாள்.

அவசரமாக மாடிப்படிகளைக் கடந்து கீழே ஓடி வந்த அவள் அதேசமயம் சமையலறையிலிருந்து சாதத் தட்டுடன் எதிர்ப் பட்ட பாகீரதி மீது மோதிக் கொண் டாள். பாகீரதியின் கையிலிருந்த தட்டுக் கீழே தவறி விழவே சாதம் நாலா பக்கமும் சிந்திப் போயிற்று.

''ஐயோ! அக்கா!'' என்று தன் செய்கைகாக அச்ச மடைந்த கீதா கூவினாள்.

''என்னக்கா என்ன?'' என்று பதறிக் கொண்டு நாக ராஜன் அங்கு வந்து விட்டான்.

''ஒண்ணுமில்லையப்பா!மாடியிலிருந்து வந்த வேகத் தில் என் மேலே முட்டிக் கொண்டுட்டா. நான் தட்டைக் கீழே தவறிப் போட்டுட்டேன் அவ்வளவுதான், நல்ல வேளை கீழே விழுந்து காயப்படுத்திக் கொள்ளாமல் தப்பிச்சாளே!'' என்று சமாதானம் சொன்ன பாகீரதி மேலே தொடர்ந்தாற்போல், ''மாடிப் படியிலே அப்படி ஓடிவரக்கூடாது, ஒருசமயமில்லாட்டா ஒருசமயம் வழுக்கி



விழுந்தால்'' என்று கீதாவைப்பார்த்து அன்புடன் கடிந்து கொண்டாள். ''எட்டு மணிக்கே தூக்கம் வந்துவிட்டது போலிருக்கு! தூக்கக் கலக்கம்!'' என்று பரிகாசமாகக் கூறிய கணவன் முகத்தைத் திரும்பிக்கூட பார்க்காமல் கீதா தன் காரியங்களைக் கவனிக்கச் சென்றாள். இரவு போஜனத்திற்குப் பின்பு மேஜையருகில் உட்கார்ந்து கொண்டு ஆபீஸ் காகிதங்களைச் சிரத்தையுடன் கவனித் துக் கொண்டிருந்த நாகராஜன் திடீரென்று, ''கீதா! கீதா!'' என்று அங்கிருந்தபடியே மனைவியைக் கூப்பிட் டான்.

வீட்டுக்காரியங்கள் யாவையும் முடித்துவிட்டு அங்கு வந்துகொண்டிருந்த கீதா கணவன் அழைப்பதைக் கேட்ட தும் ஹாலின் பக்கம் சென்றாள். ''கொஞ்சம் ஜில்லுன்னு தீர்த்தம் சாப்பிடக் கொண்டுவா!'' என்று உத்தரவிட்ட நாகராஜன் மறுபடியும் காகிதங்களைக் கவனிப்பதில் ஈடு பட்டான். சிறிது நேரம் கழித்து டக்கென்று பாத்திரம் மேஜைமீது வைக்கப்படும் சத்தம் கேட்டதும், அவன் கையிலிருந்த ஆபீஸ் காகிதங்களை அப்படியே வைத்து விட்டு அருகில் நின்றுகொண்டிருந்த மனைவியின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். மின்சார விளக்கின் ஒளியில் அவ ளது சோர்ந்த முகத்தைக்கண்ட நாகராஜன் மனம் துணுக் குற்றது. ''உனக்கு உடம்புக்கு என்ன? ஜுரம் வந்திருப் பதைப் போலிருக்கிறதே!'' என்று கவலையுடன் வினவிய அவன் இடத்தைவிட்டுச் சரேலென எழுந்திருந்தான்.

கீதாவின் தொண்டையை துக்கம் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டது. ''இல்லை'' என்பதற்கு அறிகுறி யாகத் தலையை ஆட்டினாள்.

''முகத்தைப் பார்த்தால் ஜலதோஷம் பிடித்துக் கொண்டிருப்பதைப் போலிருக்கிறது. சொன்னால் கேட் பதே கிடையாது. அதிகாலையில் பச்சை ஜலத்தில் ஸ்நானம் பண்ணுகிறது. உடம்புக்கு அவ்வளவும் கெடு தல்'' என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டு அருகில்

வந்தான். கீதாவின் அழகிய விழிகளில் கண்ணீர் நிறைந்து வழிந்து கன்னங்களின்மீது முத்து முத்தாக உதிர்ந்து கொண்டிருந்தது.

''ஏன் கீதா? என்ன சமாசாரம்? எதற்கு அழுகிறாய்?'' என்று ஆச்சர்யமும் கவலையும் ஒருங்கே அடைந்தவனாகக் கேட்டான் அவன். ''ஒன்றுமில்லை'' என்று திணறிக் கொண்டு பதிலளித்தாள் கீதா. பிறகு அங்கிருக்கப் பிடிக்காதவள் போன்று வேகமாகப் படுக்கையறைக்குள் விழுந்து அவள் முகத்தைத் தலையணைக்குள் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

பின்னால் வந்த நாகராஜன் கட்டிலின் ஓரத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான். ''ஏன் கீதா! எதற்காக அழறே? காரணமில்லாமல் அழுகை வருமா? இப்படி விக்கி விக்கி அழ உனக்கு என்ன குறை ஏற்பட்டது; எனக்குத் தெரியக் கூடாதா?'' என்று வாத்சல்யம் பொங்க வினவிக் கொண்டு கலைந்திருந்த அவளது கூந்தலை விரலால் சீர்ப்படுத்தினான்.

புதைத்திருந்த முகத்தை தூக்கிக் கணவனை வெறித்துப் பார்த்தாள் கீதா. ''காரணம் இருந்தால்தானே சொல்வதற்கு?'' என்றாள் துக்கத்துடன்.

''முகம் சிவக்க நீ இப்படி அழுவதற்குக் கட்டாயம் காரணம் இருக்கிறது. அதைச் சொல்ல மாட்டேன் என்று மறுப்பது நியாயமில்லை. நீ அழுதுகொண்டிருந்தால் எனக்கு எப்படி வேலை ஓடும் சொல்லு!'' என்று மிகவும் நயமாகக் கேட்டான்.

''கட்டாயம் காரணம் தெரிய வேண்டுமென்றால் நான் கேட்கும் ஒரு கேள்விக்கு மட்டுமாவது பதில் சொல்வீர்களா?'' என்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு ஆத்திரமாகக் கேட்டாள்.

'மனைவியின் கேள்வி எத்தகையது?' என மனதிற்குள் எண்ணி அவன் சஞ்சலம் அடைந்தாலும் ''தாராளமாகக் கேள், பதில் சொல்கிறேன்'' என்றான் பதிலுக்கு.



கீதா எழுந்து உட்கார்ந்து கொண்டாள் தொண்டையைச் சரிப்படுத்திக் கொண்டு, ''நீங்கள் அவளை ரகசியமாக விவாகம் செய்து கொண்டிருக்கிறீர்களா என்ன? இதை மட்டுமாவது சொல்லுங்கள், ஏனெனில் இதனால் என் நிலைமை மிகவும் பாதிக்கப்படும் போலிருக்கிறது'' என்று துக்கத்துடன் குமுறிக் கொண்டு கேட்டாள்.

நாகராஜன் ஒருகணம் திகைத்தே போனான் கீதாவின் கண்ணீரின் ரகசியம் அவனுக்குப்பளிச்சென்று புலனாகி விட்டது. ''இல்லை கீதா நீ ஒருத்திதான் என் மனைவி போதுமா, போதுமா பலவிதமான சந்தேகங்களுக்கு இடம் கொடுத்து நீ மனத்தை வீணாக அலட்டிக் கொள்கிறாய்'' என்றான் அன்பு கனிந்த குரலில்.

கீதா அந்த பதிலைக் கேட்டுச் சமாதானமடையவில்லை. கணவன் கோபங்கொள்ளாது நிதானமாக பதிலளித்ததைக் கண்டு அவளுக்குக் கொஞ்சம் தைரியம் ஏற்பட்டது.

''அப்படியென்றால் நீங்கள் அவளைக் கடைசிவரை வைத்துக் காப்பாற்ற ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும்?'' என்று மேலே கேட்டாள்.

''அவளுக்குப் புகலிடம் வேறு இல்லாததனால் அவளைக் காப்பாற்றும் பொறுப்பு என்னுடையதாக இருக்கிறது. அவளை நிராகரிப்பதை விடப் பாபகரமான செயல் வேறு இல்லை'' என்று மெல்லக் கூறினான்.

அவன் முகத்தில் ததும்பி நின்ற வருத்தக் குறிகளைக் கண்ட கீதாவின் மனம் ஒரு கணம் பச்சாதாபத்தில் ஆழ்ந்தது! 'பாவம் தன் பிசகிற்காகத் தானே பச்சாதாபப்படும் போது அவர் மனத்தை மேலும் புண்படுத்துவது நீதியல்ல' என்று இரங்கியது அவள் உள்ளம்.

''நீங்கள் மிகவும் சங்கடமான நிலைமையில் தற்போது இருக்கிறீர்கள் என்பதை மட்டும் என்னால் ஊகிக்க முடிகின்றது; ஆனால் விவரம் சரியாக விளங்கவில்லை. ஒரு குழந்தைக்குத் தாயான அவளை ஒதுக்கித் தள்ளுதல்

பாபம் என்று நீங்கள் நினைப்பது ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயமென்றாலும் சிறிதாவது என் நிலையைப் பற்றித் தாங்கள் யோசித்துப் பார்க்கவில்லை என்று நினைக்கிறேன். கல்யாணமாகாது பிரம்மச்சாரியாகத் தாங்கள் இருந்த காலத்தில் ஆயிரம் விஷயங்கள் நடந்திருக்கலாம், அவைபற்றித் தர்க்கிக்கவோ அதைக் கேட்கவோ எனக்கு உரிமை இல்லை. ஆனால் மனைவி என்று என்னை ஏற்றுக்கொண்டபின், தங்களிடம் நான் சில உரிமைகளை எதிர்பார்க்கிறேன்'' என்று படபடப்பாகப் பேசிக்கொண்டு போனாள் கீதா.

''உனது உரிமைகளை நான் என்று மறுத்திருக்கிறேன் சொல் பார்க்கலாம்!'' என்று குறுக்கிட்ட நாகராஜன் பொறுமையை இழந்தவனாகி விட்டான்.

''உங்களது வாழ்க்கையின் ரகசியத்தைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டியது என் உரிமை. அதைத் தாங்கள் எனக்கு மறுக்கவில்லையா?'' என்று கீதா கோபத்துடன் கேட்டாள்.

''அது என் வாழ்க்கை ரகசியமாக இருந்தால் கட்டாயம் உன்னிடம் சொல்லியிருப்பேன். அப்படி இல்லாதபோது அந்தப் பெண்ணின் உத்தரவின்றி எப்படி உனக்கு நான் சொல்லமுடியும்?'' என்று கேட்டான் சிறிது கோபத்துடன் அவன்.

''என்னைவிட உங்களுக்கு அவள்தான் உயர்வாகத் தோன்றுகிறாள். இல்லையா?'' என்று கேட்பதற்குள் கீதாவிற்கு மறுபடியும் அழுகை வந்துவிட்டது.

''கீதா என்னத்திற்கு வீண் விவாதம்? இன்னொரு முறை சொல்கிறேன். நீ அவளைப் பற்றிச் சிறிதேனும் கவலைப் படவேண்டாம் அவள் உன் வாழ்க்கையில் குறுக்கிடவே மாட்டாள். இங்கே பார்! கீதா. இது என்ன அசட்டுத் தனம்? என்னத்திற்கு இந்தக் கண்ணீர்'! என்று சமாதானப் படுத்த முயன்றான் நாகராஜன்.



''உங்களது கடந்த வாழ்க்கையின் களங்கத்தை நான் மன்னித்து மறந்துவிடத் தயாராக இருக்கிறேன். ஆனால் நீங்கள் என்ன சமாதானம் சொன்னாலும் இந்த அக்கிரமத்தைப் பார்த்துக் கொண்டு சகித்திருக்க என்னால் முடியாது. உங்கள் அந்தஸ்து என்ன, தொழில் என்ன. இவ்வளவையும் கேவலம் ஒரு வேலைக்காரப் பெண்ணுக்காக நாசப்படுத்திக் கொள்வதை உங்கள் சகோதரி வேண்டுமானால் பார்த்துப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும். மணந்து கொண்ட மனைவியான நான் பேசாமல் இருக்க முடியுமா? முடியாது. நீங்கள் என் பொருட்டு அந்தப் பெண்ணைக் கைவிட்டுத்தான் ஆகவேண்டும். போயும் போயும் உங்கள் அன்பை எனக்குச் சமதையற்ற ஓர் அநாதைப் பெண்ணுடன் நான் பகிர்ந்து கொள்ள வேண்டுமா? இந்த அவமானம் என் உடலையே தகிக்கின்றது'' என்று கோபமாகப் பேசிய கீதா பலமாக விம்மினாள்.

நீ என் வார்த்தைகளை நம்பினால் நம்பு! இல்லாவிடில் எனக்கு அக்கறை இல்லை. நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி நீ போதிக்க வேண்டியது அநாவசியம்'' என்று உரத்த குரலில் மொழிந்த நாகராஜன் கோபம் தாங்காதவனாகி அங்கிருந்து வேகமாக வெளியேறினான்.

## 19

ஓரேயடியாகச் சண்டை போட்டு ரகளைசெய்து தன் கட்சியை ஜயித்து விடலாமென்றாலும் நாகராஜன் விட்டுக் கொடுப்பவனாக தோன்றவில்லை. சாந்தமாகவும் நயமாகவும் பேசி நியாயத்தை எடுத்துச் சொல்லி அவனைத் தன் வழிக்குத் திருப்பலாம் என்றாலும் சாத்தியப்படாத விஷயமாக இருக்கிறது. நயத்திற்கும் பயத்திற்கும் அசைந்து கொடுக்காத அவனது இரும்பு உள்ளத்தை எப்படித் தகர்த்துத் தனது இஷ்டப்படி நடக்கச் செய்வது?

இப்படிப் பலவாறு எண்ணுவதிலும் குழம்புவதிலுமே நாட்கள் பலவற்றை கீதா கழித்து விட்டாள். அன்று இரவு

தம்பதிகளுக்குள் ஏற்பட்ட விவாதத்தினால் நாகராஜன் கொஞ்சமும் பாதிக்கப் படாதவன்போல் தென் பட்டான். கீதாவிடம் அவன் காட்டிய பாசமும், அன்பும் என்றும் போல் சிறிதும் மாறுதலின்றி இருந்தன என்றாலும் கீதாவிற்குத் தன் வாழ்க்கையிலிருந்த உற்சாகமே திடீரென்று மறைந்து விட்டதைப் போன்று இருந்தது.

தனது இன்ப வாழ்க்கையின் நடுவில் ஏற்பட்ட இந்தக் களங்கம் அவளது மனத்திலே ஆழ்ந்து படிந்து கொண்டு ஒருவித ஏக்கமாக மாறிவிட்டது. நிவர்த்தி செய்ய முடியாத அந்த ஏக்கம் சமயம் வந்த பொழுதெல்லாம் ஆத்திரமாகப் பீறிட்டுக் கொண்டு வெளி வந்தது அந்த சந்தர்ப்பங்களில் அவள் தனது மன உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதபடி எரிந்துவிழத் தலைப்பட்டாள்.

வேலைக்காரர்களிடம் சிறிய விஷயத்திற்கெல்லாம் கோபித்துக் கொள்வதையும், சில சமயங்களில் தான் கேட்கும் கேள்விகளுக்கு எரிச்சல் மிகுந்த குரலில் அவள் பதில் அளிப்பதையும் பாகீரதி கவனிக்காமல் இல்லை சில தினங்களாகத் தம்பி மனைவியின் குணம் மாறுபட்டு வருகின்றது. முன்போல் அவள் இல்லை என்பதை பாகீரதி புரிந்து கொண்டாலும் அதை வெளிப்படக் காட்டாது மௌனமாக இருந்தாள்.

தன் மனைவியிடம் ஏற்பட்டிருந்த மன மாறுதல்களை நாகராஜனும் கவனித்துக் கொண்டு வந்தான் தொழிற்சாலையிலிருந்து அவன் திரும்பி வரும் பொழுது புதுப்புது அலங்காரத்தில் மலர்ந்த முகத்துடன் அவனை வரவேற்கும் கீதா அந்தச் சம்பவத்திற்குப் பின் தனது தோற்றத்திலே மிக்க அசிரத்தை உள்ளவளாகக் காணப்பட்டாள். முன்போல் விடுமுறை நாட்களில் குதூகலமாகக் கணவனுடன் வெளியில் செல்லக் கிளம்புவதில்லை. நாகராஜன் மிக்க வருந்தி அழைத்தால்கூட ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லித் தட்டிக் கழித்துக் கொண்டிருந்தாள்.



கீதாவைப் பொறுத்தவரை அவள் மிகவும் கஷ்டப் பட்டுத் தன் மன வருத்தத்தை வெளியில் காட்டாது மறைத்து வைக்க முயற்சித்தாள். ஆனால் அவள் துக்கமும் பொறாமையும் பொன்னி தன் வீட்டுக்குள் மிக்க சுதந்திரத்துடன் நுழைவதைப் பார்க்கும் போதெல்லாம் அடக்க முடியாது பொங்கி எழ ஆரம்பித்தன. கூடிய வரை அந்தப் பெண்ணைச் சந்திக்காமலிருக்க முயன்றாள் கீதா பொன்னி பின்கட்டிற்கு வந்திருந்தால் கீதா முன் கட்டுக்குப் போய்விடுவாள். முன் கட்டில் அவள் தன் நாத்தனாருடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டால் கீதா ஓடோடியும் பின்கட்டிற்குச் சென்று விடுவாள். எத்தனை முயற்சித்தாலும் சில சமயங்களில் பொன்னியை நேருக்கு நேர் சந்திக்கும்படி நேர்ந்துவிடுவதும் உண்டு. அப்பொழுதெல்லாம் கீதாவின் உடல் கோபத்தினால் துடிக்கும். நெஞ்சைத் துக்கம் பலமாக அமுக்கும். தன் கணவன் அந்தப் பெண்ணுடன் பேசுவதைச் சிறிது தூரத்திலிருந்து பார்க்க நேரிட்டால் போதும், அவளது மனம் சுக்கல் சுக்கலாக வெடித்து விடும்போல் அவமானம் கோபம், துக்கம் பலவித உணர்ச்சிகள் வசப்பட்டுப் பதை பதைக்கும்.

பொன்னி பங்களாவிற்கு அடிக்கடி வருவதும் நிற்கவில்லை, அந்த நாள் முழுவதும் கீதாவின்மனம் விவரிக்க முடியாத வேதனையில் தத்தளித்துக் கொண்டிருப்பதும் நிற்கவில்லை.

கணவன் போஜனத்திற்கு ஆபீஸிலிருந்து திரும்பி வருவதற்குள் கவனிக்க வேண்டிய வீட்டுக் காரியங்கள் பல இருப்பதை உணர்ந்த கீதா அன்று பகல் பின்கட்டின் பக்கம் சென்றாள். முற்றத்து வெயிலில் உலர்ந்து கொண்டிருந்த துணிகளையெல்லாம் பொறுக்கி எடுத்துவந்து தாழ்வாரத்தில் குவியலாகப் போட்டு விட்டுச் சாவதானமாக உட்கார்ந்து கொண்டு அவைகளை மடித்து வைத்துக் கொண்டிருந்தாள். கைகள் என்னவோ யந்திரம் போல்

துணிகளை அழகாக மடித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவள் மனம் அது சமயம் கணவனைப் பற்றிய சிந்தனையில் ஈடுபட்டிருந்தது.

'பொன்னி புகலிடமில்லாத அனாதை என்றால் அதை நிவர்த்திக்க வழியில்லை. ஆயுள்காலம் வரை போதுமான அளவு கொஞ்சம் பணத்தைக் கொடுத்து எங்கேயாவது கண் மறைவாகப் போய்ப் பிழைத்துக் கொள்ளும்படி அனுப்பி விடுதல் மிகவும் கஷ்டமான காரியமில்லையே? நாகராஜன் ஏன் அப்படிச் செய்யக் கூடாது.

நாகராஜன் பொன்னி இவர்களின் உறவு, பங்களாவின் வேலைக்காரர்கள், தொழிற்சாலையில் உத்யோகம் செய்கிறவர்கள் முதலியவர்களுக்குத் தெரியாமலா இருக்கும்? அவர்கள் எல்லோரும் எஜமானனின் நடத்தையைப்பற்றி எத்தனை கேவலமாகப் பேசிக் கொண்டிருப்பார்கள்! இத்தனை அவமானத்தையும் சகித்துக் கொள்ள நாகராஜன் முற்பட்டால் அது எதற்காக இருக்கும்? மனிதன் தன் அந்தஸ்து கௌரவம் எல்லாவற்றையும் விடத் தனது மனைவியின் எதிர்ப்பையும் கோபத்தையும் கூடவா லக்ஷ்யம் செய்யாது இருப்பான். ஆனால் அதை என்ன என்று நினைப்பது! சந்தேகமென்ன! நாகராஜனுக்குப் பொன்னி மீது அத்தனை பிரமை! கேவலம் தன் அந்தஸ்திற்கும் கீழ்ப்பட்ட வேறு ஜாதிப் பெண்ணிடம் என்ன அற்புத அழகைக் கண்டு அவன் அப்படியே மயங்கிப் போனான்! அப்படி நினைக்கும் போது கீதாவின் நெஞ்சம் துக்கத்தினால் வெதும்பியது கண்களில் லேசாகப் படிந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு மடித்த துணிகளை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். அது சமயம் அங்கே யாரோ வரும் காலடி ஓசை கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள். அவளது கரங்கள் நடுங்கின, உடல் குப்பென்று வியர்த்தது, நெஞ்சு பக் பக் என அடித்துக் கொண்டது.

தயங்கிக் கொண்டே அங்கு வந்த பொன்னியின் மந்தஹாஸ வதனத்தைக் கண்ட கீதா தன் உள்ளத்தினின்று



பீறிட்டு எழுந்த உணர்ச்சிகளை அடக்க இயலாதவளாகக் கோபக் கனல் வீசும் தன் கண்களால் அவளைக் குரோதமாகப் பார்த்தாள்.

சின்ன எஜமானியுடன் அதுவரை பொன்னி பேசி அறியாள். ஆகவே, அவள் மிகவும் சங்கோஜத்துடன் "ஏன் அம்மா, தனியாகவா இவ்வளவு துணிகளையும் மடிக்கப் போறீங்க? நானும் கொஞ்சம் உங்களுக்கு மடித்துத் தரவா?" என்று கேட்டுவிட்டு, தரையின் மீது கிடந்த துண்டு ஒன்றைக் கையிலெடுக்கப் போனாள்.

கீதாவால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. "சீ! அதைத் தொடாதே, போ! நான் கஷ்டப்படுவதைப் பார்த்து எத்தனை கரிசனம் உனக்கு?" என்று இரைந்து கத்தினாள்.

சின்ன எஜமானியின் கோப மொழிகளைக் கேட்டுத் திக் பிரமைபடைந்து போனாள் பொன்னி. "ஏன் அம்மா இப்படிக் கோவிச்சுக்கிறீங்க?" என்று வினயமாகக் கேட்டாள் முடிவில்.

"கோபித்துக் கொள்ளாமல் உன்னைக் கண்டு எனக்கு ஆனந்தம் ஏற்படுமாக்கும்! போ என்றால் போயேன். உன் தரித்திரம் பிடித்த முகத்தைப் பார்க்க நான் தயாராயில்லை, வேளை இல்லை, சமயமில்லை, உனக்கு இந்த வீட்டில் என்ன வேலை? யாரோ விருந்துக்கு அழைத்தது போல் வெட்கமில்லாமல் வருகிறாயே, சனியன்' என்று மூச்சு விடாது வார்த்தைமாரி பொழிந்த கீதா இடத்தை விட்டு எழுந்து நின்றாள்.

அதுசமயம் "கீதா!' என்று உரத்த குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். பின் கட்டின் வாசற்படியருகில் நின்று கொண்டிருந்த நாகராஜன் முகம் ரத்தம் போல் சிவந்திருந்தது.

"இதெல்லாம் என்ன?" என்று கோபத்துடன் மனைவியைப் பார்த்துக் கேட்டான் அவன்.

கணவனது கோபம் உச்ச நிலையை அடைந்திருக்கிறது என்பதை கீதா உணர்ந்தாள். நிலைமை சமாளிக்க முடியாத அளவுக்கு வந்துவிட்டது. வெள்ளம் தலைக்கு மேல் போன பின்பு சாண் போனால் என்ன முழம் போனால் என்ன என்ற துணிச்சலில். ''இந்த அக்ரமத்தை எந்த குடும்ப ஸ்திரீதான் சகிப்பாளாம்? இவளை வெளியில் போகச் சொல்ல உங்களுக்குத் தைரியம் இல்லை என்றால் எனக்கும் இல்லை என்று நினைக்க வேண்டாம். இந்தச் சனியன் என் வீட்டுக்குள் இனி காலை எடுத்து வைக்கக் கூடாது!'' என்று பதிலுக்கு ஆத்திரத்துடன் உரத்துச் சொன்னாள்

சின்ன எஜமானியின் கோப மொழிகளைக் கேட்ட பொன்னி புடைவைதலைப்பில் முகத்தை மூடிக் கொண்டு பலமாக விம்மியபடி பின் பக்கத்துக் கதவு வழியாகத் தோட்டத்திற்கு ஓடினாள்.

அதைக் கண்ட நாகராஜன் ''ஸ்ஸ்! பொன்னி!'' என்று இரக்கமாகக் கூப்பிட்டான். எஜமான் அழைப்பதைக் கேட்ட அவள் நின்றாள். கண்ணீர் வழிந்த கண்களுடன் மானைப் போன்று மருண்டு அவனை நோக்கினாள்.

அருகில் சென்ற நாகராஜன், ''பொன்னி, நீ வருத்தப் படாதேயம்மா! இனிமேல் இந்த வீட்டிற்கு நீ வர வேண்டாம். உனக்கு எது வேண்டுமானாலும் ஆள் வசம் சொல்லியனுப்பு. நானே நேரில் வந்து கவனித்துக் கொள்கிறேன்'' என்று வருத்தத்துடன் கூறினான்.

பதிலுக்குப் பொன்னி தலையை ஆட்டிவிட்டு மின்னலைப் போல் தோட்டத்திற்குள் ஓடி மறைந்தாள்.

சிறிது நேரம் தம்பதிகள் இருவரும் மௌனமாக இருந்தார்கள். ''நீ அப்படி அவளிடம் நடந்து கொண்டிருக்கக் கூடாது'' என்று வெறுப்புடன் ஆரம்பித்தான் நாகராஜன்.

''பின் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? உங்கள் காதலியைக் கண்டு ஆனந்தத்துடன் வரவேற்க வேண்டுமோ?'' என்று ஏளனமாகக் கேட்ட கீதா கோபத்துடன் வெறித்துப் பார்த்தாள்.



''அவளை, இந்த வீட்டை விட்டு வெளியேறும்படி சொல்ல உனக்கு அதிகாரம் இல்லை'' என்றான் எரிச்சலுடன் அவன்.

''ஏன் இல்லை? இது என் வீடு. இதன் எஜமானி நான்!'' என்று பதிலளித்தாள் சினத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் அவள்.

''உன்னளவு அவள் படித்திருந்தால் ஒரு சமயம் தன் சாமர்த்தியத்தை உபயோகித்துக் கொண்டு இந்த வீட்டு எஜமானியாக ஆகியிருக்கக் கூடும்'' என்றான் கோபத்துடன்.

''இப்பொழுது என்னதான் குடி முழுகிவிட்டது? நாளைக்கே அவளைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு சந்தோஷமாக இந்த வீட்டில் குடித்தனம் நடத்துங்கள் நான் ஒன்றும் குறுக்கே நிற்கவில்லை'' என்று சீறினாள் கீதா.

''நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எனக்கு நீ சொல்லித்தரத் தேவையில்லை'' என்றுஇகழ்ச்சியாக மொழிந்த நாகராஜன் அங்கிருந்து அகன்றான்

''ஏம்மா கீதா! ராஜா சாப்பிடாமல் அதுக்குள்ளே ஏன் ஆபீஸிற்குப் புறப்பட்டுப் போய்விட்டான்?'' என்று கேட்டுக் கொண்டு வந்த பாகீரதி தூணில் சாய்ந்து நின்று கொண்டிருந்த தம்பி மனைவியின் முகத்தைப் பார்த்துத் திடுக்கிட்டுப் போனாள். முகம் சிவக்க அவள் அழுது கொண்டிருந்தாள்.

''ஏம்மா கீதா! ராஜா என்ன சொன்னான்? ஏன் அழறே?'' என்று கவலையுடன் கேட்டாள் பாகீரதி.

கண்களைத் துடைத்துக் கொண்ட கீதா, ''ஒண்ணுமில்லை அக்கா. உங்க தம்பிக்குச் சின்ன விஷயத்திற்கெல்லாம் கோபம் வருகிறது. ஆபீஸ் பேப்பர் எதையோ இங்கே வைத்துவிட்டுக் காணும்னு கோபித்துக் கொண்டார்'' என்று ஒரு பொய்யைச் சொன்னாள்.

''அசட்டுப் பிள்ளை. அதுக்குச் சாப்பிடாமல் போவானேன்! பட்டினியா வேலை செஞ்சா உடம்பு என்னத்துக்காகும்?'' என்று அனுதாபப்பட்டாள் பாகீரதி.

"நீங்க இதுக்கெல்லாம் எதற்காகக் கவலைப்படறேள் கோபம் ஆறினதும் தானே இன்னும் அரைமணியில் திரும்பி வந்துடுவார்" என்று கூறிய கீதா நாத்தனாரைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

## 20

மனைவியுடன் மனஸ்தாபப் பட்டுக்கொண்டு சாப்பிடாது தொழிற்சாலைக்குச் சென்ற நாகராஜன் கோபம் ஒரே ஒரு நாள் தான் இருந்தது. அடுத்த நாளே அவன் அதை மறந்தவனாகக் காணப்பட்டான்

நாத்தனார் பாகீரதி தம்பி மனைவியிடம் காட்டி வந்த கருத்தும் அன்பும் சிறிதேனும் குறைவின்றிப் பழைய படியே தான் இருந்தது, கணவனும் முன் போலவே பிரியமாகத்தான் இருந்தான். மனத்திற்குப் பிடிக்காத பொன்னியின் வரவிற்கு முற்றுப் புள்ளி வைத்தாகி விட்டது.

ஆனால் கீதாவின் மனத்தில் மட்டும் அமைதி என்பதே இல்லாது போயிற்று. அதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. அன்று ஒருநாள் காலை பின் கட்டில் வேலையாக இருந்த பாகீரதியிடம் ஏதோ கேட்கவந்த கீதா நாகராஜன் தன் சகோதரியிடம் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு, தயக்கத்துடன் கதவின் பின் புறம் நின்றுவிட்டாள், அவர்கள் சம்பாஷணையின் நடுவில்பொன்னி என்ற பெயர் உச்சரிக்கப்படுவதைக் கேட்ட அவளால் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை, கதவின் பின்புறம் மறைந்து கொண்டு அவர்கள் பேசுவதைச் கூர்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

"அப்படியானால் குழந்தைக்கு ஆபத்து ஒண்ணுமில்லையே?" என்று வினவினாள் பாகீரதி கவலையுடன்.

"இல்லைக்கா! ஜுரம் கூட நன்றாக இறங்கிவிட்டது என்னைக் கண்டதும் குழந்தை படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டு விளையாட ஆரம்பித்து



விட்டாள். பொன்னிதான் குழந்தைக்கு என்னவோ வந்து விட்டதென்று ஓரேயடியாகப் பயந்துபோய் அழுது விட்டாள் முதல் நாள் இன்று அவளும் சந்தோஷமாகத் தான் இருக்கிறாள்" என்றான் நாகராஜன் சிரித்தபடியே.

"பெற்ற மனசல்லவா, பாவம்! அவள் கவலைப் பட்டது நியாயம்தானே!" என்று கூறிவிட்டுப் பாகீரதி பெருமூச்செறிந்தாள், கீதாவிற்கு அதற்குமேல் அங்கே நின்று கொண்டிருக்க பிடிக்கவில்லை, அவளது நெஞ்சைத் துக்கம் அடைத்துக் கொண்டது. கண்களில் நீர் நிறைந்தது. மெல்ல அவ்விடத்திலிருந்து உட்புறம் சென்றாள்.

தன் பிறந்த வீட்டின் ஏழ்மையான நிலைமை, அண்ணாவின் குணம், மன்னி மனத்தின் போக்கு, தாயாரின் உள்ளம் எல்லாவற்றையும் ஒன்றுகூட ஒளிக்காது தன் கணவனிடம் அவள் சொல்லியிருந்தாள் நாகராஜனுக்கு அவளது பிறந்த வீட்டின் ரகசியங்கள் யாவும் தெரியும். ஆனால், அவனே கீதாவைப் போன்று கள்ளங் கபடமின்றி எல்லாவற்றையும் மனைவியிடம் சொன்னான்? இல்லை! தனது வாழ்க்கையிலிருந்த பெரும் ரகசியத்தை மனைவியிடம் சொல்ல அவனுக்கு மனம் இல்லை, கீதாவின் மீது அவனுக்கு நம்பிக்கை இல்லை, ஏன்? அன்பில்லை...உண்மையான அன்பு இருந்தால் சொல்லாதிருப்பானா?

பொன்னி பங்களாவுக்கு வருவது நின்று விட்டது உண்மைதான், ஆனால் என்ன? அதற்குப் பதில் நாகராஜன் அவளைச் சென்று சந்தித்துவர ஆரம்பித்து விட்டான், 'பொன்மேடு டிம்பர் வொர்க்'ஸின் முதலாளி தனது கௌரவத்தையெல்லாம் புறக்கணித்துவிட்டு ஒரு வேலைக்காரப் பெண்ணின் வீட்டுக்குச் சென்று வருவதென்றால் மிகவும் கேவலமான செய்கை தான் அதைப் பார்த்துக் கொண்டு பொறுமையாக இருக்க வேண்டிய மனைவிக்கு மனத்தில் எப்படி அமைதி ஏற்படும்?

பொன்னி தன் வீட்டுக்குள் வருவதை மட்டுத்தான் கீதாவால் தடுக்க முடிந்தது. தன் கணவன் அவள் வீட்டுக்குச் சென்று வருவதைத் தடுக்க அவளுக்கு வழி தெரியவில்லை. தன் கணவன் பொன்னியின் வீட்டுக்கு எப்பொழுது எந்த நேரத்தில் போய்வருகிறான் என்பதை அவளால் நிச்சயமாக அறிந்து கொள்ள முடியவில்லை. பகல் முழுவதும் தொழிற்சாலையில் வேலை இரவு வேளைகளில் வீட்டை விட்டு நகருவதே இல்லை. ஓய்வு நாட்களில் மனைவியுடன் இல்லாது வெளிக் கிளம்புவதேயில்லையென்றால் அந்தக் கணவன் மீது மனைவி எப்படிக் குற்றங் கண்டு பிடிக்க முடியும்?

தொழிற்சாலைக்குப் போவதாகச் சொல்லிவிட்டு அவள் வீட்டுக்குப் போகக்கூடாதா அவன்? அல்லது தொழிற்சாலையிலிருந்து திரும்பி வரும் பொழுது அவள் வீட்டுக்கும் அப்படியே சிறிது நேரம் போய்விட்டு வந்தால் யார் கண்டது?

"இன்று பொன்னி வீட்டுக்குப் போய் வந்திருப்பார் போலிருக்கிறது. அதனால் தானே பங்களாவிற்கு வர அத்தனை நேரம்? அவளுடைய இன்ப மொழிகள் காதில் ஒலித்துக் கொண்டிருப்பதால்தானோ மனிதர் இன்று உல்லாசமாக இருக்கிறார்! இன்று அவளுடன் சண்டையோ! அதனால்தான் போலிருக்கிறது. முகத்தில் கோபம் பொங்கி வழிகின்றது" என்று பலவிதமாக எண்ணி எண்ணி கீதா சந்தேகத்தில் மனத்தைப் புண்ணாக்கிக் கொண்டாள்.

மனத்திலே சஞ்சலம் அதிகரிக்க அதிகரிக்க அவளுக்குத் தன்னைச் சுற்றிலும் உள்ளவர்கள் மீது நம்பிக்கை குறைந்து வரத் தலைப்பட்டது. பாகீரதி காட்டும் அபிமானம் முழுவதும் வெளிவேஷம் என்று எண்ணித் தனக்குள் கோபம் அடைந்தாள்.

பாகீரதி, நாகராஜன் தங்கம் வேலைக்காரர்கள் இவர்களையும், பங்களா, அதைச் சுற்றிலுமுள்ள தோட்டம்



இவற்றையும் மாறி மாறிப் பார்த்து, அலுத்துப் போன அவளது மனத்திலே ஒருவிதச் சலிப்பும் குடிகொண்டு விட்டது. தனது கஷ்டத்தை மறந்து பேசுவதற்குக் கூட அக்கம் பக்கத்தில் மனிதர்களே இல்லாத பொன்மேட்டு வாழ்க்கை அவளுக்கு அலுப்புத் தட்டத் தொடங்கியது; அசோக வனத்தில் சீதையைச் சிறை வைத்தது போன்று தன்னை நிர்மானுஷ்யமான அந்தப் பங்களாவிற்குள் நாகராஜன் சிறை வைத்துவிட்டான் என்று எண்ணி வாழ்க்கையின்மீது வெறுப்படைந்தாள் கீதா.

அன்று காலை தபாலில் அவளுக்கு ஒரு கடிதம் வந்தது. கடிதத்தின் முடிவில் 'பூந்திடல் புவனேஸ்வரர் கோவிலில் கும்பாபிஷேகம் தடபுடலாக நடக்கப்போகிறது' என்று குறிப்பிட்டிருந்தாள் கௌரி. அதைப் படித்த கீதாவுக்குப் பளிச்சென்று ஒரு யோசனை உதயமாயிற்று. மதனியின் கடிதத்திற்கு உடனே சுருக்கமாக ஒரு பதில் எழுதிப் போட்டாள்.

"அன்புள்ள கௌரி,

எனக்கு உங்களையெல்லாம் பார்க்கவேண்டும் என்ற ஆசை தாங்கவே முடியவில்லை. என் கணவர் சமீபத்தில் நமது ஊருக்கு என்னை அழைத்து வருவார் என்று எனக்குத் தோன்றவில்லை ஆகையினால் நமது ஊர்க் கும்பாபிஷேக உற்சவத்திற்கு என்னை அழைத்துக் கொண்டு போகும்படி அண்ணாவிடம் சொல்லவும், எனக்குச் சதா உன் நினைவுதான். அம்மா கையினால் செய்த சமையலைச் சாப்பிட வேண்டுமென்று ஆசையாயிருக்கின்றது. அண்ணாவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்.

இப்படிக்கு, அன்புள்ள.
கீதா."

மேற்கண்ட கடிதம் போய்ச் சேர்ந்து இரண்டு நாட்கள்கூட ஆகவில்லை. காலையில் மாடியினின்று இறங்கி வந்த நாகராஜன் பங்களா வாயிலில் ஒரு மாட்டு வண்டி வந்து நிற்பதைக் கண்டு ஆச்சர்யத்துடன் ஹாலுக்கு விரைந்தான்.

கையில் சிறு பெட்டியுடன் உள்ளே நுழைந்த துரைசாமியைக் கண்டதும் ஆனந்தத்துடன், ''வாப்பா துரைசாமி! ஒரு கடிதம் போட்டிருந்தால் வண்டியை ஸ்டேஷனுக்கு அனுப்பியிருப்பேனே!'' என்று உற்சாகத்துடன் வரவேற்றான் நாகராஜன்.

''என்னவோ திடீரென்று நினைத்துக் கொண்டு கிளம்பி விட்டேன்'' என்று கூறிய துரைசாமி, கைப் பெட்டியை வேலைக்காரனிடம் கொடுத்துவிட்டு உட்கார்ந்து கொண்டான். அண்ணாவின் குரலைக் கேட்ட கீதா கைவேலையை அப்படியே போட்டுவிட்டுத் தமையனை வரவேற்கச் சந்தோஷத்துடன் முன் ஹாலுக்கு ஓடி வந்தாள்.

துரைசாமி பொன்மேட்டிற்கு வந்த முதல் நாள் முழுவதும் ஊரையும், மாப்பிள்ளையின் தொழிற்சாலையைச் சுற்றிப்பார்ப்பதிலும் விருந்து சாப்பிடுவதிலும் கழிந்தது. அடுத்த நாள் காலையிலேதான் மெதுவாக வந்த விஷயத்தை ஆரம்பித்தான்.

''அக்கா இங்கே கொஞ்சம் வாயேன்'' என்று தம்பி உரத்த குரலில் கூப்பிடுவதைக் கேட்ட பாகீரதி, தம்பியும் துரைசாமியும் பேசிக்கொண்டிருந்த மாடி ஹாலுக்குள் வந்தாள்.

''பூந்திடல் புவனேஸ்வரர் கோவிலில் கும்பாபிஷேகமாம். அதற்குக் கீதாவை அழைத்துக் கொண்டு வரும்படி அவள் அம்மா கேட்டுக் கொண்டிருக்கிறாளாம். கீதாவைப் பிறந்தகத்திற்கு அனுப்பும்படி துரைசாமி கேட்கிறான்'' என்று கூறிவிட்டு நாகராஜன் தனது சகோதரியைப் பார்த்தான்.

பாகீரதிக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

''தீபாவளிக்கு வேறு போயாகணும். இப்போ ஒரு தடவை, அப்போ ஒரு தடவைன்னு போய்வர ஊர் கிட்டக்கவா இருக்கு? கீதா இங்கே வந்து அப்படி ஒண்ணும் நாளாகி விடவில்லையே!'' என்று கூறிமுடிப்பதற்குள் சம்



பாஷணையைக் கேட்டுக்கொண்டு ஆவலுடன் கொஞ்சதூரத்தில் நின்றுகொண்டிருந்த கீதா, ''அதுக்காக இல்லையக்கா! கும்பாபிஷேகத்தைப் பார்க்கணும்னு எனக்கு ஆசையா இருக்கு'' என்று பதட்டமாகச் சொன்னாள்.

திடுக்கிட்டுத் திரும்பிய கணவன் முகத்தைப் பார்க்க மனமில்லாதவள் போல் வேறு பக்கம் திரும்பிக் கொண்ட அவள், ''அம்மாவுக்கும் என்னைப் பார்க்கணும்போல ரொம்ப ஆசையாக இருக்கிறதாம். அதனால் அண்ணாவுடன் என்னை அனுப்புங்கள் சீக்கிரம் திரும்பி வந்துவிடுகிறேன்'' என்று தொடர்ந்தாற்போல் சொல்லிவிட்டாள்

கீதாவின் பிடிவாதம் பாகீரதிக்குப் பிடிக்கவில்லையென்றாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், ''ராஜாவுக்கு ஆட்சேபணையில்லை என்றால் எனக்கும் இல்லை'' என்றாள் புன்னகையுடன். ''கீதாவிற்கு இஷ்டம் என்றால் எனக்கும் ஆட்சேபணை இல்லை'' என்று நாகராஜன் கூறிவிட்டு மனைவியின் முகத்தை மிக்க அதிருப்தியுடன் உற்றுப் பார்த்தான். அதைக் கவனிக்காதவள்போல் அப்புறம் சென்றுவிட்டாள், கீதா.

அன்று இரவு வண்டிக்குப் போவதாக துரைசாமி நிச்சயம் சென்றுவிட்டதனால், கீதா ஊருக்குக் கொண்டு செல்ல வேண்டிய சாமான்களையெல்லாம் துரிதமாக எடுத்துத் தனது பெட்டியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தாள். எதையெல்லாம் எடுத்துப் போவது என்ற குழப்பத்தில் அவள் கையில் எடுத்த பொருட்களையெல்லாம் தாறுமாறாக அறையில் பரப்பிவிட்டாள்.

''விளக்கை ஏற்றிக் கொள்கிறதுதானே! அண்ணாவுடன் ஊருக்குப்போகும் உற்சாகத்தில் இருட்டிவிட்டது கூடத் தெரியவில்லை?'' என்று பரிகாசமாகக் கூறிய நாகராஜன் உள்ளே நுழைந்து மின்சார விளக்கை ஏற்றினான். பளிச்சென்று வீசிய விளக்கொளியில் அறையின் தரைமீது தாறுமாறாகக் கிடந்த பொருள்கள் யாவும் அவன் கண்களுக்குப் புலப்பட்டன.

பதில்பேசாது கீதா குனிந்தபடியே வேண்டிய சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். நாகராஜன் மௌனமாக அவளைப் பார்த்தவாறு நின்றான்.

எல்லாம் எடுத்துக் கொண்ட பின்பு பெட்டியை மூடிவிட்டு மீதியிருந்த வேண்டாத சாமான்களையெல்லாம் வாரி பீரோவுக்குள் திணித்துக் கதவைப் பூட்டினாள். அதன் சாவியைக் கணவனிடம் நீட்டி, ''இதைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்'' என்றாள். ''ஆகட்டும்', என்று தலையை ஆட்டிய அவன். ''ஆமாம், எல்லாவற்றையும் மறக்காமல் எடுத்துக் கொண்டு விட்டாயா நிச்சயமாக?'' என்று கனிவுடன் கேட்டான்.

''எடுத்துக் கொண்டு விட்டேன். ஏன்?'' என்று அவனது கேள்வியைப் புரிந்து கொள்ளாமல் அவனைப் பார்த்து விழித்தாள் கீதா.

''செலவுக்குப் பணம் எடுத்துக் கொள்ளவில்லையே!'' என்று கேலியாகக் கேட்ட அவன் கையிலிருந்த சாவியால் பெட்டியை மறுபடியும் திறந்தான்.

''எங்க அண்ணா தர மாட்டாரா என்ன?'' என்று விட்டுக்கொடுக்காது பேசினாள் அவள்.

''கொடுப்பார், ஆனாலும் நமது பணம் என்று கொஞ்சம் கையில் இருப்பது நல்லது இல்லையா.'' என்று பதில் அளித்த நாகராஜன் தன் சட்டைப் பையிலிருந்த ஒரு கடித உறையைப் பெட்டிக்குள் வைத்துப் பெட்டியை மூடிப் பூட்டினான். ''உறையில் ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக இருக்கிறது. ஊருக்குப்போய் இன்னும் தேவையானால் எழுது, அனுப்புகிறேன்'' என்று கூறிவிட்டு அருகில் வந்தான்.

''ஆமாம், எத்தனை நாள் அங்கு தங்குவதாக உத்தேசம்?'' என்று மெல்லிய குரலில் கேட்டான்.

''அந்த ஊர் அலுத்துப் போகும்வரை இருப்பேன். எத்தனை நாள் என்று எப்படிச் சொல்லமுடியும்?'' என்று வெறுப்புடன் பதில் அளித்தாள் அவள்.



''நீ இல்லாவிட்டால் எனக்கு இந்த வீட்டில் எப்படிப் பொழுது போகப் போகிறதோ, தெரியாது!'' என்று உணர்ச்சியுடன் கூறிய நாகராஜன் மனைவியின் முகத்தை ஆவலுடன் பார்த்தான்.

''நான் இங்கே வருவதற்கு முன் உங்கள் பொழுது போகாமல் அப்படியே உட்கார்ந்து விட்டதா, என்ன? ஏன் இந்த வீண் பேச்சு?'' என்று சுடச் சுடப் பதில் அளித்த கீதா விளக்கைப் படக்கென்று அணைத்துவிட்டு அறையினின்று வெளியே வந்தாள்.

பொங்கி வந்த கண்ணீரைச் சமாளித்துக் கொள்ளும் நிமித்தம் இருட்டில் மாடியின் திறந்த வெளியில் ஒரு கணம் அவள் நின்றாள். பின்னால் தொடர்ந்தாற்போல் வந்த நாகராஜன், ''கீதா உண்மையைச் சொல் உன்னை வந்து அழைத்துப் போகும்படி அண்ணாவுக்குக் கடிதம் எழுதினாய் அல்லவா?'' என்று கேட்டான்.

அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது ''ஏன்? உங்களிடம் அப்படி அண்ணா சொன்னாரா?'' என்று கேட்டாள் பதிலுக்கு.

''நீ எழுதியதனால் தான் உன் அண்ணன் வந்திருக்கிறார் அழைத்துப்போக என்று நானாக ஊகித்துக் கொண்டு விட்டேன். என்னைவிட்டு உனக்கு அங்கே போகவேண்டுமென்ற ஆசை ஏற்பட்டதன் காரணம் என்னவோ?'' என்று கேட்ட நாகராஜன் அவளது கரங்களை அன்புடன் பற்றினான். இருட்டில் அவனது முகபாவம் கீதாவுக்குப் புலப்படவில்லை, என்றாலும் அவனது குரலில் தொனித்த வருத்தம் அவளது மனத்தை என்னவோ செய்தது.

''எனக்கு இங்கே இருக்கப் பிடிக்கவில்லை. அதுதான் காரணம்'' என்று துக்கத்துடன் மெல்லச் சொன்னாள்.

''ஏன் கீதா? உன்னை நான் சந்தோஷமாக வைத்துக் கொண்டிருக்கவில்லையா?'' என்று உணர்ச்சியுடன் கேட்டான் நாகராஜன்.

''என் சந்தோஷம் போய் எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டன! தெரிந்திருந்தும் ஏன் கேட்கிறீர்கள்?'' என்று துக்கம் தாங்கமுடியாது திணறிய கீதா தன் கரங்களை அவனது பிடியினின்று விடுவித்துக் கொண்டு வேகமாக அங்கிருந்து கீழே சென்று விட்டாள்.

புகை வண்டி பொன்மேடு ஸ்டேஷனில் சில நிமிஷங்களே தான் நின்றது. அவசரமாக ஏறி உட்கார்ந்து கொண்ட கீதா திறந்த ஜன்னல் கதவுக்கு வெளியே நின்று கொண்டிருந்த கணவனைப் பார்த்தாள்

''ஜாக்கிரதை உடம்பைக் கவனித்துக் கொள் அடிக்கடி கடிதம் போடு'' என்று வாத்ஸல்யமாகக் கூறிய நாகராஜன் அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

கீதா பதிலுக்குத் தலையை அசைத்தாள். பேசமுடியாது துக்கம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு விட்டது. நாகராஜனின் வருத்தம் ததும்பிய முகம் அவளது மனத்தை இளகச் செய்துவிட்டது. ''சே! நிர்த்தாக்ஷண்யமாக இப்படி ஊருக்குப் போகாவிட்டால்தான் என்ன? வண்டி புறப்படுவதற்குள் இறங்கித் திரும்பப் பங்களாவிற்குப் போய் விட்டால்... என்று அவளது மனத்திலே ஒரு சபல எண்ணம் தோன்றியது. அவளது மனம் முடிவிற்கு வருவதற்குள் வண்டி வேகமாக நகர ஆரம்பித்தது.

''அகத்துக்காரரை விட்டு ஏன் ஊருக்குப் புறப்பட்டோம் என்று மனதுகஷ்டப்படுகிறதோ?'' என்று கேலியாகக் கேட்ட துரைசாமி சாமான்களை எடுத்து ஒழுங்காக வைத்துக் கொண்டிருந்தான்,

''போங்கோ, அண்ணா! உங்களுக்குக் கேலிதான் எப்பவும்!'' என்று மறுத்துக்கூறிய கீதா கண்களில் வழிந்த கண்ணீரை ரகசியமாகத் துடைத்துக் கொண்டாள்.

## 21

அன்று சாயங்காலம் முற்றத்தின்மீது குவிந்து கிடந்த பாத்திரங்களை அவசரமாகத் தேய்த்துக் கொண்டிருந்தாள் அவயம் வீட்டு வேலைக்காரி சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று நின்று விட்டதனால் அவள் செய்ய வேண்டிய வேலைகளும் அவயத்தின் மீது விழுந்து விடவே அவளுக்கு மிகவும் சிரமமாகத் தோன்றியது. இது மாதிரியான சந்தர்ப்பங்களில் கூடமாட இருந்து தாயாருக்கு ஒத்தாசை செய்ய வேண்டுமென்ற கருத்துச் சிறிதும் இன்றி லேடீஸ் கிளப்பிற்குச் சென்றுவிட்ட தனது மகளை நினைத்த அவயத்திற்கு மிகுந்த கோபம் ஏற்பட்டதில் வியப்பில்லை.



''நல்ல பெண் நல்ல பிள்ளை'' எனத் தனது குடும்பத்தைப்பற்றி நினைத்து உள்ளூர வருந்தியவளாய் அவசரமாகப் பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந்தாள் அவள். அது சமயம் ஆபீஸிலிருந்து திரும்பி வந்த சிவராமன் களைப்புத் தாங்க முடியாமல் முற்றத்துக் குறட்டின் மீது வந்து உட்கார்ந்து கொண்டான்.

''விமலா! விமலா!'' என்று அவன் உரத்துக் கூவி அழைப்பதைக் கேட்ட அவயம் வேலையை நிறுத்தி விட்டுக் கைகளை அலம்பிக் கொண்டாள்.

''வீட்டில் இல்லாதவளை ஏன் கூப்பிடுகிறே! சாப்பிடத் தீர்த்தம் தானே வேணும்! கொண்டு வரேன்!'' என்று சமையலறைக்குள் புகுந்தாள் சலிப்புடன்.

''ஏன் அம்மா! இந்தராணி எங்கே போயிருக்கிறாள்?'' என்று கேட்டுக் கொண்டே சிவராமன், தாயார் கொண்டு வந்து கொடுத்த தண்ணீர் பாத்திரத்தைக் கையில் வாங்கிக் கொண்டான்.

''யாரை ராணி என்கிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள் விமலா. காலில் மாட்டியிருந்த செருப்புகளை வேகமாகக் கழற்றி மூலையில் விட்டெறிந்து விட்டுத் தமையன் எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டாள். அவயம் இருந்த மன நிலையில் விமலாவுடன் அவளுக்குப் பேச பிடிக்கவில்லை. முகத்தைக் கடுத்துக் கொண்டு மறுபடியும் முற்றத்துப் பாத்திரங்களைக் கவனிக்க சென்று விட்டாள் அவள்,

தாயார் கோபமாக இருப்பதை விநாடியில் ஊகித்துக் கொண்ட விமலா, ''அம்மா! சங்கதி தெரியுமா'' என்று ஆரம்பித்தாள் பேசுவதற்கு.

''எனக்கு ஒண்ணும் தெரிய வேண்டாம். உன்னோட பேசிக் கொண்டிருக்க எனக்கு நாழியில்லை'' என்று எரிந்து விழுந்த அலயம் தனது வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

அதைக் கண்டு விமலா சளைக்கவில்லை. ''கீதா புக்க கத்திலிருந்து வந்திருக்கிறாள். நேற்றுதான் வந்தாளாம் இன்று அவளைக் 'கிளப்'பில் சந்தித்தேன்'' என்றாள் விடாப்பிடியாக.

''அப்படியா! நிஜமாகவா?'' என்று அலயம் தனது கோபத்தை மறந்து ஆச்சர்யத்துடன் கேட்டாள். மேலே விஷயங்களைக் கேட்கவேணும் என்ற ஆவலில் அவளுக்குக் கை வேலை ஓடவில்லை.

கீதா என்ற பெயரைக் கேட்டதும் மின்சாரத்தினால் தாக்குண்டவனைப்போன்று துள்ளி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான் சிவராமன். அவனும் தங்கையின் முகத்தை ஆவலுடன் திரும்பிப் பார்த்தான்.

''கீதாவும் அவள் மன்னி கௌரியும் வந்திருந்தார்கள் கிளப்பிற்கு. அப்பப்பா! கீதா என்ன அலங்காரம் பண்ணிக் கொண்டிருக்கிறாள் தெரியுமா?'' என்று ஆரம்பித்தாள் விமலா.

''ஆமாம், புக்ககத்திலிருந்து அதுக்குள்ளே இங்கே எதுக்காக வந்தாளாம்?'' என்று கவலை மிக்க அலயம் நடுவில் குறுக்கிட்டுக் கேட்டாள்.

''கும்பாபிஷேகம் பார்க்க வந்ததாக அவள் என்னிடம் சொன்னாள். ஆனால் எனக்கென்னவோ தனது ஆடை ஆபரணங்களையும், செல்வத் திமிரையும் பூந்திடலில் உள்ளவர்களுக்குக்காட்டி விட்டுப் போக வந்திருப்பதாகத்



தான் தோன்றுகிறது. அம்மா! இன்றைக்கு அவள் கழுத்தில் போட்டுக் கொண்டிருந்த வைர ஹாரத்தைப் பார்த்து மயங்கிப் புகழாத பெண்கள் கிளப்பிலேயே கிடையாது. தனக்கு இந்த மகத்தான பாக்கியம் ஏற்பட்டதைக் குறித்து அவளுக்கு ரொம்பக் கர்வம் அம்மா! அவள் முன்னிருந்த கீதாவே இல்லை. அவளைப் பார்த்து நான் திகைத்தே போய் விட்டேன். என்ன தளுக்கு! என்ன மினுக்கு! கிளப்பிலிருந்த அவ்வளவு பேருக்கும் இன்று திடீரென்று கீதா மேல் அபார அன்பு ஏற்பட்டு விட்டது. 'கீதா வந்திருக்காயா அம்மா!' 'கீதா சௌக்கியமா, அம்மா!' என்று அவளைச் சுற்றிக் கொண்டு விசாரித்து அமர்க்களமே பண்ணி விட்டார்கள். இந்த மங்களம் மாமி இருக்காளே, அவளுக்குத்தான் எல்லோரையும் விட கீதாவைப் பற்றி அக்கறை. ''கீதாவை அழைச்சுண்டு சுருக்க ஆத்துக்குப் போய்ச் செல்லம்மாளிடம் சொல்லிச் சுத்திப் போடச் சொல்லு. ஒருத்தர் கண் போல ஒருத்தர் கண் இருக்காது'' என்று ரகசியமாகக் கௌரியிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். அதைக் கேட்ட எனக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. இந்தப் பூந்திடல் பெண்களுக்குக் கீதா முன்பின் தெரியாதவளா? அல்லது, நாம் தான் நகை நட்டுகளைப் பார்த்து அறியாதவர்களா!'' என்று மூச்சு விடாது பேசி முடித்தாள் விமலா.

''உம்! கொடுத்து வைத்தவள் கீதா!'' என்று அலயம் பெருமூச்செறிந்தாள்.

''நகைகள் போட்டுக் கொள்வதும், விதவிதமாக ஆடைகள் அணிந்து கொள்வதும் பிரமாதமான காரியமோ! யார் கண்டது உண்மையை இவ்வளவு ஆடம்பரமும் வெளிப் பகட்டாக இருந்தால்கூட இருக்கலாம். கீதா உண்மையில் சந்தோஷமாக இருக்கிறாள் என்று சொல்லிவிட முடியுமோ? அவள் கணவன் எப்படிப்பட்டவனோ? எத்தனை கடன் இருக்கிறதோ? யார் கண்டா நிச்சயமா இதெல்லாம் பற்றி?'' என்று அலட்சியமாகக் கூறினாள் விமலா.

36849

''இந்தப் பழம் புளிக்கும் என்ற ரீதியில் ஏன் பேசுகிறாய்! கீதா தன் கணவனுடன் சந்தோஷமாகவே இருக்கக்கூடும், இல்லை என்பதை எப்படி நீ நிச்சயமாகச் சொல்ல முடியும்'' என்று கொஞ்சம் கோபத்துடன் கேட்டான் சிவராமன்

தமையனின் வார்த்தைகள் சுருக்கென்று விமலாவின் உள்ளத்தில் பாய்ந்தன அதைத் தாங்க முடியாது அவள். ''கீதா உன்னை மணந்து கொள்ள மறுத்தும் கூட உனக்கு அவள் மீது மதிப்புக் குறையாது இருப்பது ஆச்சர்யம் தான், அண்ணா!'' என்று பதிலுக்கு ஏளனமாகச் சொன்னாள்.

''நாகராஜன் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் கீதாவைக் கல்யாணம் செய்து கொண்டது பற்றி உனக்கு அவன் மீது துவேஷம், கீதாவின் அதிர்ஷ்டத்தைக் குறித்துப் பொறாமை இல்லையா?'' என்று சீற்றத்துடன் சிவராமன் கேட்டான்.

விமலாவுக்கு ஆத்திரமும் அவமானமும் தாங்க முடியவில்லை, ''போறும் அண்ணா! வாயை மூடிக்கொள் புத்தி கலங்கி விட்டவன் போல் தாறுமாறாக உளற வேண்டாம்'' என்று படபடத்தாள்.

''எனக்குப் புத்தி ஒன்றும் கலங்கி விடவில்லை, உனக்குத்தான் கலங்கி இருக்கிறது'' என்று சிவராமன் முணுமுணுத்ததைக் கேட்ட தாயார் பொறுமையை இழந்து, ''போதுமே! நீங்க போட்டுக்கிற சண்டையைக் கேட்கச் சகிக்கலை! இரண்டு பேருமே சித்த வாயை மூடிக் கொண்டுதான் இருங்கள்'' என்று கடிந்து கொண்டாள் சிவராமனுக்கு அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. வெளியே எழுந்து போய் விட்டான்.

தமையனின் வார்த்தைகளினால் ,கோபமடைந்த விமலாவின் மனக்கொந்தளிப்பு அடங்க வெகு நேரமாயிற்று அதுவரை அவள் தாயாரிடம் கூடப் பேசாது பிரமைபிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள். ''ஆமாம் கீதா இப்போ எதுக்காக வந்திருக்காளாம்? ஒரு சமயம்'' என்று முடிக்காமல் நிறுத்தினாள் அவயம், தனது ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல்.



''முதலில் நாங்கள் எல்லோரும் அப்படித்தான் நினைத்தோம். மசக்கைக்காகப் பிறந்தகம் சீராட வந்திருக்கிறாளோன்னு தான் சந்தேகப் பட்டோம். பிறகு, நானே நேரில் கீதாவை விசாரித்தேன். கும்பாபிஷேகத்திற்குச் செல்லம்மாள் அழைத்தாராம், அதற்காக வந்திருக்கிறாளாம். வேறு விசேஷம் இல்லையாம்'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள் விமலா லஜ்ஜையுடன்.

''கும்பாபிஷேகத்திற்காக ஒரு பெண் எங்கேயிருந்து எங்கே வந்திருக்கிறாள்!'' என்று ஆச்சரியப்பட்டாள் விமலாவின் தாயார்,

அவயம் ஒருத்தி மட்டும் அல்ல! பூந்திடலில் உள்ள எல்லாப் பெண்களும் கீதாவின் வரவைக் குறித்து ஆச்சர்யம்தான் அடைந்திருந்தார்கள். ஏன்? எதற்காக வந்திருக்கிறாள்? என்ன காரணம்—என்று அவர்கள் ஆராய்ச்சி செய்வதிலும் கவலைப்படுவதிலும் பொழுதைக் கழித்தார்கள் என்றால் மிகையில்லை.

பிறந்தகத்திற்கு வந்த முதல் இரண்டு நாட்களில் கீதா உண்மையாகவே தனது மனக்கஷ்டத்தை மறந்து விட்டிருந்தாள். 'லேடீஸ் கிளப்' பிற்குச் சென்று பழைய சிநேகிதிகளைச் சந்திப்பதிலும், கும்பாபிஷேக விநோதங்களைப் பார்க்க கோவிலுக்குச் செல்வதிலும், மிகுந்த பொழுதை வீட்டில் மதனியுடன் பேசிக் கழிப்பதிலும் பொன்மேட்டைப் பற்றியே மறந்திருந்தாள் அவள். ஆனால், வெகு சீக்கிரத்திலேயே அவளது மனம் அவளையும் அறியாமல் பொன்மேட்டைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விட்டது. கணவன் மீது கோபம் கொண்டு அவனைப் பிரிந்து தனியே சில நாட்கள் பிறந்தகத்திலிருக்க எண்ணிவந்தாள் கீதா! ஆனால் ஒரே வாரத்திற்குள் அவளது மனம் பிறந்தகத்தில் இருப்புக் கொள்ளாமல் தவிக்க ஆரம்பித்துவிட்டது. நாகராஜன் மீது அவளுக்கு எத்தனை கோபம் இருந்தபோதிலும் அவனது அருகாமையில் இருக்கையில் வாழ்க்கையிலே தோன்றும் ஒருவித நிறைவு உணர்ச்சி, பிறந்தகத்தில் ஏற்படாதிருப்பது

அவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது, மதனி, அண்ணா, தாயார், சிநேகிதிகள் இவர்களில் யாரும் அந்த நிறைவை அவள் மனத்தில் உண்டாக்க முடியவில்லை.

கணவனின் பிரிவு தன்னை விஷம் போல் நாளுக்கு நாள் வாட்டுவதை உணர்ந்த அவளுக்குப் பூந்திடல் வாழ்க்கை ஒரே வாரத்தில் அலுத்துவிட்டது. எப்பொழுது திரும்பிப் போவோம் என்று மனதிற்குள்ளே ஏங்கிய அவள மெதுவாகத் தனது எண்ணத்தைத் தாயாருக்குத் தெரிவித்தாள்.

''நல்லாயிருக்கு, வந்து நாலு நாள் ஆகவில்லை. அதுக்குள்ளே என்ன அவசரம்?'' என்று தடை உத்தரவு போட்டாள் தாயார். ''போகலாம், அவசரப் படாதே'' என்று சொல்லிவிட்டான் தமையன் துரைசாமி.

''அடாடா! என்ன முட்டாள் தனம்! எதற்காக இங்கே வந்தோம்? அவரை வந்து அழைத்துக் கொண்டு போகும்படி எந்த முகத்தை வைத்துக் கொண்டு கடிதம் போடுவது? புறப்பட்டு வரும்போது அவ்வளவு கடினமாக அவரிடம் பேசியிருக்கக் கூடாது'' என்று தனக்குள் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த கீதா ஜாடையாகத் தன்னைக் கொண்டு புக்ககத்தில் விட்டு விடும்படி அண்ணாவைத் தொந்தரவு செய்ய ஆரம்பித்தாள்.

அன்று தபாலில் தனது சகோதரன் பெயருக்கு வந்தக் கடிதத்தைக் கண்ட கீதா திடுக்கிட்டுப் போனாள். ''ஊருக்குப் போகணும்னு, சொல்றதைக் கேட்காமல் அவசரப்படுகிறாயே, உன் அகத்துக்காரர் என்ன எழுதி யிருக்கிறார் பார்'' என்று அன்று பகல் எல்லோரும் கூடத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தான் துரைசாமி.

அன்புள்ள துரைசாமி.

கீதா இன்னும் சில நாட்கள் அங்கே தங்கியிருப்பதை பற்றி எனக்கு ஆவேக்ஷபணை ஒன்றும் இல்லை. பிறந்தகம் என்பது பெண்களுக்கு சுவர்க்கம் என்ற விஷயம் எல்லோருக்கும் தெரிந்தது தானே? ஆகவே, அவள் இஷ்டம் வரை அங்கு தங்கியிருக்கட்டும். இந்தச் சிறுவிஷயத்தையெல்லாம் நான் தவறாக நினைத்துக் கொள்ளமாட்டேன். நீ இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். கீதாவின் உடல் நிலை சில நாட்களாகச் சரியாக இல்லாதிருந்தது. சீதோஷ்ண மாற்றம் அதற்கு மிகவும் நல்லது. ஆகையினால் கொஞ்ச நாட்கள் அங்கேயே அவள் இருந்து நன்றாக உடம்பைக் கவனித்துக்கொண்டு இங்கே வந்தால் போதும், மற்றபடி எல்லோரும் சௌக்கியமென்று நினைக்கிறேன்.



அன்புள்ள
நாகராஜன்''

இதைப் படித்த கீதாவிற்குக் கோபமும் துக்கமும் தாங்கமுடியவில்லை. கீதாவின் பிரிவைப்பற்றி நாகராஜன் சிறிதும் கவலைப்படுபவனாகத் தோன்றவில்லை அதையும் விட அவள் சீக்கிரம் திரும்பிவரத் தேவையில்லை என்று வேறு அவன் குறிப்பிட்டிருக்கிறான். கீதா பொன்மேட்டிற்குச் சீக்கிரம் திரும்பி வருவதை அவன் விரும்பாததன் காரணம் என்ன? சந்தோஷமாகப் பொன்னியுடன் பொழுதைக்கழிப்பதற்கு மனைவியின் இடைஞ்சல் இல்லாதிருக்கும் என்பதற்காக இருக்குமோ? அடாடா! கீதா என்ன காரியம் செய்துவிட்டாள்? கணவனை அந்த விஷப் பெண்ணுடன் தனியே போக விட்டுப் பிறந்தகத்தில் வந்து உட்கார்ந்து கொள்கிறது எத்தனை தவறான செய்கை? பொன்னி இருக்கிறாள் என்ற தைரியத்தில் மனைவியின் பிரிவைப் பற்றி நாகராஜனுக்கு எத்தனை அலட்சியம்!... சே! இருந்தாலும் மனிதர்கள் இவ்வளவு கல்நெஞ்சாக இருப்பார்கள் என்று கீதா நினைக்கவேயில்லை. கணப்பொழுதில் பலவும் மனத்திற்குள்ளே எண்ணி வருந்திய கீதாவிற்குத் துக்கம் தாங்க முடியவில்லை.

''உங்களை யார் அண்ணா அவருக்குக்கடிதம் எழுதிக் கேட்கச் சொன்னது?'' என்று கோபத்துடன் கேட்டாள் கீதா.

''நீ ஊருக்குப்போக வேண்டுமென்று அவசரப்படுவது அம்மாவுக்கு மனக் கஷ்டமாயிருந்தது. அதனால் மாப்பிள்ளைக்கு எழுதிக் கேட்கச் சொன்னாள். மேலும் உன்னைக் கொண்டு போய்ப் புக்ககத்திற்கு விட்டுவர எனக்கு உடனே லீவு கிடைக்காது. அதனால் தான் கடிதம் எழுதிக் கேட்டேன்'' என்று சிரித்தான் துரைசாமி.

''இருக்கவே இருக்கிறது பொன்மேடு! ஏதோ வந்திருக்கிறாய், கொஞ்ச நாள் இருந்து விட்டுப் போனால் போகிறது. இங்கே இருப்பது முள்மேல் இருக்கிறாற்போல் இருக்கிறதா என்ன?'' என்று கேலியாகக் கேட்டாள் கௌரி.

''மாப்பிள்ளையின் குணம் உங்கள் ஒருவருக்கும் தெரியாது, உங்களுக்காக அவர் 'ஆகட்டும்' என்று சம்மதித்து விடுவார். பிறகு என்னிடம் கோபித்துக் கொள்வார்'' என்று கீதா கசிந்து வரப் பிரயத்தனம் செய்த கண்ணீரை அடக்கிக் கொண்டு பதிலளித்தாள்.

''கோபித்துக் கொண்டால் பயந்து விடுவாயாக்கும். சரியான பதில் சொல்லி உன் வழிக்கு அவரைக் கொண்டு வர உனக்கா தெரியாது?'' என்று கௌரி ரகசியமாகப் பரிகாசக் குரலில் காதருகில் வந்து மெல்லக் கூறிய பொழுது கீதாவுக்கு உண்மையாகவே அழுகை வந்து விட்டது. அவளுக்குத் தன் கணவனைத் தன் வழிக்குக் கொண்டு வர தெரிந்திருந்தால் பொன்மேட்டை விட்டுப் பூந்திடலுக்கு இப்போது வந்திருப்பாளா?

நாகராஜனின் கடிதம் வந்த பிறகு ஒவ்வொரு நாளும் ஒரு யுகமாகத்தோன்றியது கீதாவிற்கு கணவனின் பிரிவை காட்டிலும் தன்னைப் பிறந்தகத்திலேயே தங்கியிருக்கும்படி அவன் எழுதிய விஷயம் அவள்மனத்தை மிகவும் துன்புறுத்தியது. பலவிதமான சந்தேகங்கள் அவள் உள்ளத்தில் தோன்றி அதைக் குழப்பிக் கொண்டிருந்தது. கூடியவரை சாமர்த்தியமாக அவள் தனது மனச் சஞ்சலத்தை வெளியில் காட்டாது அடக்கிக்கொண்டு மிகவும் சந்தோஷமாக



இருப்பதாக நடந்தாலும், அவளையும் மீறிஅவளது மனம் சில சமயங்களில் துக்கத்தில் மூழ்கி விடும்; அந்த மாதிரி சமயங்களில் அவள் ரகசியமாக மாடியிலிருந்த தனது அறைக்குள் சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டு ஒரு மூச்சு கண்ணீர் விட்டு மனத்தைத் தேற்றிக் கொள்வது வழக்கமாகி விட்டது.

வெள்ளிக்கிழமை சாயங்காலம், மகளுக்கும் நாட்டுப் பெண்ணுக்கும் தலையை வாரி அழகாய்ப் பின்னிவிட்ட செல்லம்மாள் அவர்கள் இருவரையும் கோயிலுக்குச் சென்று வரும்படி அனுப்பினாள். வீட்டை விட்டுக் கிளம்பினால் போதும் என்று அலுப்படைந்த கீதா, சுவாமி தரிசனத்திற்குப் பின்பு மதனியுடன் கோவில் அருகாமையில் உற்சவத்திற்காக வந்திருந்த கடைகள் பலவற்றையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தாள். புதிதாக வந்திருந்த புடைவைக் கடை ஒன்றில் கூட்டம் அதிகமாயிருப்பதைக் கண்ட கீதா ஆவலுடன் மதனியின் கையைப் பிடித்து, ''வா கௌரி! ஏதாவது புது தினுசுப் புடைவைகள் வந்திருக்கா என்று போய்ப் பார்க்கலாம்'' என அழைத்தாள்

''உங்கண்ணாவைக் கேட்காமல் ஒன்றும் வாங்கக் கூடாது. வேண்டாம், போவோம் வீட்டிற்கு'' என்று கௌரி மறுத்ததைக் காதில் போட்டுக் கொள்ளாமல் கடைக்குள் பிடிவாதமாக நுழைந்தாள் கீதா.

பலவிதத் தினுசுப் புடைவைகளையும் பார்த்துப் பிரமித்துப் போன கௌரி மிகவும் அழகிய வேலைப் பாடமைந்த கருநிறப் பட்டுப் புடைவை ஒன்றைக் கையில் எடுத்துவிட்டுக்கீழே வைக்க மனமில்லாது தயங்குவதைக் கவனித்த கீதா புன்னகையுடன், ''பிடித்திருந்தால் எடுத்துக்கொள், கௌரி. அதே போல நானும் ஜோடியாக ஒன்று வாங்கிக் கொள்கிறேனே!'' என்றாள்.

தனக்கும் அதே மாதிரித் தினுசில் ஒரு புடைவையை எடுத்துக் கொண்டு அலட்சியமாகக் கைப் பையைத் திறந்து பணத்தை எண்ணிக் கொடுத்துவிட்டு, கீதா

மதனியுடன் கடையினின்று வெளிப்பட்டாள். விலை உயர்ந்த ஒரு வஸ்துவைத் தன்னால் வாங்கிப் பரிசாக கௌரிக்கு அளிக்க சக்தி இருப்பதைப் பற்றிக் கீதாவின் உள்ளம் கர்வத்தினால் பூரித்தது.

"என்ன கீதா இது! நான் நினைக்கவேயில்லை. அம்மா என்ன சொல்வாரோ, என்னவோ?" என்று சந்தோஷமும் நன்றியும் தாங்க முடியாத கௌரி வீட்டுக்குத் திரும்பிப் போகும் வழியில் கேட்டாள்.

"அம்மா என்ன சொல்கிறது? என் மதனிக்கு நான் வாங்கிக் கொடுக்க ஆசைப்பட்டால் யார் என்ன சொல்ல இருக்கிறது? ஆமாம், அது கிடக்கட்டும் உனக்குக் கறுப்புக் கலர் தானா பிடித்தது! மசக்கையல்லவா? கறுப்பிலே மோகம் ஏற்பட்டது! காரணமும் இருக்கிறது" என்று பரிகாசமாகக் கேட்டாள் கீதா.

கௌரியின் முகம் நாணத்தினால் குப்பென்று சிவந்தது. "உன்னைப் பரிகாசம் செய்ய எனக்கும் சீக்கிரத்தில் சந்தர்ப்பம் வரும் என்று எதிர்பார்க்கிறேன்" என்று பதிலுக்குக் கேலியாகக் கூறினாள்.

வீட்டை அடைந்த கீதா தான் வாங்கிய புடைவையைச் செல்லம்மாளிடம் காட்டினாள்... செல்லம்மாளுக்குப் பெருமையும் சந்தோஷமும் தாங்க முடியவில்லை. "இன்னிக்கு நல்ல நாளாயிருக்கிறதினாலே உடனே பிரிச்சுக் கட்டிக் கொள்ளுங்கோ" என்று உத்தரவிட்டாள்.

ஜோடியாகப் புதுப் புடைவைகளில் மதனியும் நாத்தனாரும் தாயாரை நமஸ்கரித்து விட்டுக் 'கிளப்'பிற்குக் கிளம்பினார்கள். பல நாட்களாகவே கீதாவிற்கு அப்படிச் செல்ல வேண்டுமென்ற ஆசை. அது நிறைவேறிவிடவே அவள் மனம் கவலையெல்லாம் மறந்து குதூகலத்தில் ஆழ்ந்தது.

கிளப்பிலே சிநேகிதிகள் பலரையும் சந்தித்து உற்சாகமாக சகல விஷயங்களையும் பற்றிப் பேசிவிட்டு வீடு



திரும்புவதற்குள் நன்றாக இருட்டி விட்டது. புது ஆடையைக் களைந்து விட்டு வேறு உடுத்திக் கொள்வதற்கு முன்பு மீண்டும் தனது அலங்காரத்தை ஒரு தடவை கண்ணாடியில் கவனித்துக் கொண்ட வண்ணம் கழுத்தில் அணிந்திருந்த வைர மாலையை கழட்டுவதற்குக் கையை எடுத்தாள். சட்டென்று அவளது மனத்திலே ஒரு சிறு சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது.

பாகீரதி தம்பி மனைவிக்காக செய்யக் கொடுத்திருந்த வைரமாலை அன்றுதான் வந்திருந்தது. 'இதைப்போட்டுக் கொண்டு பார்ம்மா' என்று சொல்லி அவள் கையில் நகைப் பெட்டியைக் கொடுத்தாள் பாகீரதி. கண்ணாடி முன் சென்று அதைக் கழுத்தில் போட்டுக் கொள்ள மாடிக்கு விரைந்து சென்றாள் கீதா. பின்னாலேயே வந்த நாகராஜன் அதைத் தன் கையில் எடுத்துத் தானே அவள் கழுத்தில் ஆசையுடன் பூட்டினான், கீதாவின் கண்கள் ஆனந்தத்தினால் விரிந்தன. தனது மோகன உருவைக் கண்ணாடியில் பார்த்துப் பிரமித்து போய் நின்றாள்.

"பிடித்திருக்கிறதா" என்று கேட்டான் நாகராஜன்,

"நன்றாயிருக்கிறது! உங்களுக்குப் பிடித்திருக்கிறதல்லவா?" என்று ஆனந்தத்துடன் கேட்டாள் பதிலுக்கு.

"இந்த வைரத்திற்கு முன் அந்த வைரம் எந்த மூலைக்கு?" என்ற நாகராஜன் அவள் முகத்தை அன்புடன் பார்த்தான்.

"என்ன சொல்கிறீர்கள்!" என்று புரியாதவள் போல் கீதா கேட்டாள்.

"என் விலையிலா வைரமான கீதாவுக்கு முன்னால் இது எந்த மாத்திரம் என்று சொன்னேன்!" என்று கொஞ்சலாக மொழிந்த அவன் அவளது கரங்களை அன்புடன் பற்றினான். அன்று அவன் கூறிய அன்பு மொழிகள் யாவும் கீதாவுக்கு ஒன்றன் பின் ஒன்றாக ஞாபகத்திற்கு வந்தன.

அத்தனை மொழிகளும் பொய்யாகவா இருக்கும்? எப்படி இருக்க முடியும்?'' என்று எண்ணிய கீதாவிற்குத் துக்கம் தங்க முடியாது பீறிட்டுக் கொண்டு எழுந்தது. படுக்கையின் மீது சாய்ந்து கொண்டு கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்ட அவள் தன்னைக் கட்டுப்படுத்த முடியாதவளாக விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.

அறைக்குள் சந்தடி செய்யாது நுழைந்த கௌரி அப்படியே திகைத்துப் போனாள். கொஞ்ச நேரத்திற்கு முன்பு குதூகலமாக ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த கீதா விம்மியழுததன் ரகசியம் அவளுக்கு விளங்கவில்லை, ''என்ன கீதா! எதுக்காக அழறே! என்ன நடந்தது?'' என்று கவலையுடன் வினவிய கௌரி நாத்தனாரின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

கீதா பதில்அளிக்காது விம்மிக் கொண்டேயிருந்தாள்.

## 22

**கௌ**ரி எழுந்து சென்று கதவைத் தாழிட்டு விட்டு மறுபடியும் கீதாவின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். புடவைத் தலைப்பினால் அவளது கண்ணீரைத் துடைத்து விட்டு மிகவும் அன்புடன், ''கீதா எதுக்கம்மா அழுகிறாய்? விஷயத்தையெல்லாம் சொல்லேன். உன் மனத்தை என்ன கஷ்டப்படுத்துகிறதென்று எனக்குத் தெரியக்கூடாதா?'' என்று மிகவும் குழைவாகக் கேட்டாள்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்த கீதா மதனியின் முகத்தைப் பார்த்தாள். ''கௌரி நீ அண்ணாவிடமோ அம்மாவிடமோ இதைப் பற்றிச் சொல்லக்கூடாது. உன்னைத் தவிர வேறு யாருக்கும் தெரியாத ரகசியமாக வைத்துக் கொள்வதாயிருந்தால் நான் சொல்வேன்'' என்று திணறிக் கொண்டு சொன்னாள்.

''கீதா! அசடு போலப் பேசாதே. எல்லா விஷயத்தையும் நான் அவரிடம் சொல்லி விடுவேனா? கணவன் என்றால்கூடச்சொல்ல முடியாத சில விஷயங்கள் இருக்காதா என்ன? பைத்தியம் போல் எல்லாவற்றையும் நான் சொல்லி விடுவேனா? கவலைப்படாமல் சொல்லு, என் இருதயத்திலேயே அதை ரகசியமாக வைத்துக் கொள்கிறேன்'' என்று தேறுதலுடன் சொன்னாள் கௌரி.



''கௌரி, நீ என்னைவிடக் கெட்டிக்காரி என்பதில் சந்தேகமில்லை. நான் சுத்த அசடு. கணவன் என்றால் அவரிடம் எல்லாம் சொல்லிவிட வேண்டும் என்று எண்ணும் அனுபவமற்ற பேதை'' என்று வருத்தப்பட்டுக் கொண்டாள் அவள்.

''அதனால் என்ன? நீ அப்படி நினைக்கிறாய். நான் வேறு தினுசாக நினைக்கிறேன், இது வெறும் அபிப்பிராய பேதம். அதை விட்டுத் தள்ளு ஏன் அழுதுக்கொண்டிருந்தாய்? அந்தக் காரணத்தை முதலில் சொல்லு'' என்று வற்புறுத்தித் தூண்டினாள் கௌரி.

''நீங்கள் எல்லோரும் என்னைச்சந்தோஷமாக இருப்பதாகத் தானே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் கீதா.

''ஆமாம், அதில் என்ன சந்தேகம்? கீதா மிகவும் அதிர்ஷ்டக்காரி என்று நாங்கள் மிகவும் பெருமைபட்டுக் கொண்டிருக்கிறோம், ஏகப்பட்ட சொத்து, அழகான பங்களா, அன்பு மிகுந்த கணவன்—இன்னும் இதைவிட என்ன வேண்டும் ஒரு பெண்ணுக்கு?'' என்று அடுக்கிக் கொண்டு போனாள் கௌரி.

''நீ கடைசியாகச் சொன்னாயே, அதுதான் இல்லை. எது இருந்தால் என்ன? எனது வாழ்க்கையிலேயே முக்கியமான அது இல்லாவிடில் மனதிற்குச் சந்தோஷம் உண்டா?''என்று கேட்ட கீதா துக்கத்துடன் குமுறினாள்.

கௌரி திடுக்கிட்டு நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள், ''என்ன கீதா! என்ன சொல்கிறாய்? அவர் உன்னிடம் அன்பாக நடந்து கொள்ளவில்லை என்றா சொல்கிறாய்? நீஅடிக்கடி போட்ட கடிதங்களில்அவரைப்

பற்றி மிகவும் புகழ்ந்து எழுதியிருந்தாயே?'' என்று ஆச்சர்யத்துடன் வினவினாள்.

''ஆமாம், அவர் என்னை உண்மையாகவே நேசிக்கிறார் என்று நம்பியிருந்த காலத்தில் அந்தக் கடிதங்களை உனக்கு எழுதினேன் கௌரி! என்ன சொல்வேன், போ! எனக்கே வெட்கமாக இருக்கிறது, அந்த விஷயத்தை உன்னிடம் சொல்ல, படித்தவர் என்றும் பண்படைந்த உள்ளம்கொண்டவர் என்றும் நீங்கள் எல்லோரும்நினைத்திருக்கும் என் கணவர் என்னை மணந்து கொள்வதற்கு முன்பு அங்கிருந்த ஒரு வேலைக்காரப் பெண்ணுடன் சினேகிதமாயிருந்தார் என்றால் நீ நம்பமாட்டாய்ஆனால் அது உண்மை?'' என்று முடித்தாள் துக்கத்துடன்.

எதிர்பாராத இந்தச் சங்கதியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த கௌரி, கீதாவின் கரங்களைப் பற்றிக் கொண்டாள். ''நிஜமாகவா கீதா!'' என்று திகைப்புடன் கேட்டாள்.

''அந்த வெட்கக் கேடான விஷயத்தை விஸ்தரித்துப் பேசக் கூட எனக்கு அருவருப்பாக இருக்கிறது மலை நாட்டு ஜாதியைச் சேர்ந்த அந்தப் பெண்ணுடன் இவருக்கு எப்பொழுது சினேகிதமானதோ, தெரியாது மூன்று வயதில் அவளுக்கு இவரையே உரித்து வைத்தாற் போல் ஒரு குழந்தை இருக்கிறாள். பங்களாவின் சமீபத்தில் எங்கேயோ ஒரு வீட்டில் இருக்கிறாள். அவர் கடந்த வாழ்க்கை எப்படிப்பட்டதாக இருந்தாலும் நான் அதைப் பற்றி அதிக வருத்தப்பட்டிருக்க மாட்டேன், ஆனால் எல்லோர் முன்னிலையிலும் இவர் அவள் வீட்டிற்குப் போவதும், அவள் பங்களாவிற்கு வருவதும் என்னால் சகிக்க முடியவில்லை'' என்று ஆரம்பித்துக்கண்ணீருக்கும் விம்மலுக்கும் இடையே மேலே நடந்த விஷயங்கள் எல்லாவற்றையும் பாக்கியில்லாமல் கூறி முடித்தாள்.

ஒன்றன் பின் ஒன்றாகக் கீதா சொன்ன திடுக்கிடும் விஷயங்களைக் கேட்ட கௌரி அப்படியே அசந்து போய்



உட்கார்ந்து விட்டாள். ''நிஜமாகவா? நாகராஜன் அப்படிப்பட்டவரா?'' என்ற திகைப்பில் அவளுக்குப் பேச நா வரவேயில்லை.

''இப்போது சொல், கௌரி, என் நிலையில் நீ இருந்தால் என்ன செய்திருப்பாய்?'' என்று கேட்டாள் முடிவில் கீதா.

''என்ன செய்திருப்பேனோ, தெரியாது! ஆனால் ஒன்று மட்டும் செய்தேயிருக்கமாட்டேன், அது நிச்சயம்'' என்றாள் கௌரி.

''என்ன செய்திருக்கமாட்டாய்?'' என்று கீதா ஆவலுடன் கேட்டாள்.

''நீ புறப்பட்டு வந்திருப்பது போல் கணவரை அந்தப் பெண்ணுடன் தனியே இருக்க ஒரு சந்தர்ப்பம் கொடுத்து விட்டு வந்திருக்க மாட்டேன் அது நிச்சயம்! என் யோசனையை நீ கேட்பதாயிருந்தால், நாளைக்கே நீ இங்கிருந்து புறப்பட்டு விடவேண்டும். இது மாதிரிச் சந்தர்ப்பங்களில் புருஷர்களைத் தனியே விட்டால் என்ன நேரும், தெரியுமா? திரும்ப அவரது அன்பைப் பூரணமாக அடைய முடியாது போய் விடும். நல்ல பெண் நீ!'' கௌரி கடிந்து கொண்டாள்.

''கௌரி! எனக்குப் பொன்மேட்டுக்குப் போக வேண்டும் என்று அடக்க முடியாத ஆசை இருக்கிறது என்பது உண்மை. ஆனால் அவர் என்னை உடனே புறப்பட்டு வர வேண்டாம் என்று தான் கடிதம் எழுதியிருக்கிறாரே அவருக்கு என் வரவு பிடிக்காதபோது நான் எப்படி அங்கே போக முடியும்?'' என்று கேட்டாள் கீதா.

''உன் வீட்டிற்கு நீ போவதற்கு அவருடைய உத்தரவு கூடத் தேவை இல்லை என்பேன் - 'உங்களைப் பார்க்க வேணும்போல் இருந்தது. இருப்புக் கொள்ளவில்லை. வந்து விட்டேன்' என்று சொன்னால் போகிறது. உன்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளி விடப் போகிற

தில்லை, நீ நாளைக்கே ஊருக்குப் போய் சேர். அண்ணா விடம் ஏதாவது சாக்குச் சொல்லி உடனே கொண்டுவிட நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்றாள் கௌரி நிதானமாக.

'கௌரி! எனக்குச் சமதையில்லாத ஒரு பெண்ணுடன் அவரது அன்பைப் பகிர்ந்து கொண்டு பொறுமையாக இருக்கும்படி என்னை உபதேசிக்கிறாயே இது நியாயமா?' என துக்கத்துடன் கேட்டாள் கீதா.

''அசட்டுத்தனமாகப் பேசாதே. உனக்கு சமதையாக மட்டும் அவள் இருந்து விட்டால் அப்பொழுது பரவா யில்லையா? என்னைக் கேட்டால் கணவனுடைய அன்பை இன்னொரு பெண்ணுடன் பகிர்ந்து கொள்ளக் கௌரவத்தைப் போற்றும் எந்தப் பெண்ணும் முன் வர மாட்டாள். சமதையாயிருந்தால் என்ன? அவள் சமதை யில்லாத வேலைக்காரியாக இருந்தால் தான் என்ன? அதைப் பற்றியா இப்பொழுது யோசனை? இப்பொழுது நீ நடந்து கொள்வது எப்படி என்பதைப் பற்றித்தான் சிந்தனை. உனது கணவரின் சபல குணத்திற்கு நீ கொஞ் சம் இடம் விட்டுக் கொடுத்துத் தான் ஆகவேண்டும். கோபம் கொண்டு சண்டை செய்தரகளை செய்வதைவிட மிகவும் பொறுமையுடன் இருந்தால் நாளாவட்டத்தில் நீ ஜெயித்துவிடுவாய். ஒன்று மட்டும் உறுதியாக மனத்தில் வைத்துக் கொள். என்னதான் இருந்தாலும் நீ தான் அவர் மனைவி; உனக்குத்தான் எல்லா உரிமைகளும் சொந்தம்; உன் முன் அவள் கட்சி ஜெயமடையாது. அவள் எத்தனைதான் நல்லவளாகே இருந்தாலும் சமூகம் மணந்து கொண்ட மனைவியின் பக்கந்தான் பரிந்து பேசும் ஏன் வீண் கவலை? கொஞ்சம் பொறுமையுடன் அவரை உன் பக்கம் கவர்ந்து கொள்ள முயற்சி செய்'' என்று உபதேசித்தாள் கௌரி.

''வாயை மூடிக் கொண்டு இந்த அக்கிரமத்தைக் சகித்துப் பார்த்துக் கொண்டிருக்க எனக்கு உண்மை யிலேயே பொறுமை இல்லையே! என்ன செய்வேன்?'' என்று சலித்துக் கொண்ட கீதா இடத்தை விட்டு எழுந் திருந்தாள்.



அது சமயம் செல்லம்மாள் கூப்பிடுவதைக் கேட்ட இருவரும் கீழே இறங்கிச் சென்றார்கள். ''கீதா! உன் பெயருக்கு தந்தி வந்திருக்கம்மா! சட்டென்று பார்?'' என்று செல்லம்மாள் கூறினாள், ''தந்தி!'' என்றதும் கீதா வின் மனம் ஏனோ துணுக்குற்றது. விரல்கள் நடுங்க நெஞ்சம் பதைக்க. கலங்கிய உள்ளத்துடன் உறையைப் பிரித்தாள்.

''நாகராஜனுக்கு உடம்பு அபாயகரமாக இருக்கிறது. உடனே புறப்பட்டு வரவும்—பாகீரதி.''

தந்தியை வாசித்த கீதா அப்படியே கீழே உட்கார்ந்து விட்டாள் ''என்னடி? என்ன சமாசாரம்?'' என்று பதறிய தாயார் மகள் குலுங்கிக் குலுங்கி அழுவதைக் கண்டு கலங்கி விட்டாள். கீதாவின் கையிலிருந்த தந்தியைப் பிடுங்கிப் படித்த கௌரி, ''மாப்பிள்ளைக்கு ஜுரமாம். உடனே வரும்படி தந்தி வந்திருக்கு. கவலைப்படாதேயுங் கள் அம்மா, வேறு ஒண்ணுமில்லை'' என்று கூறிவிட்டு கீதாவின் பக்கம் குனிந்து, ''அட, என்ன அசட்டுத்தனம்! உடம்பு சரியில்லை என்றால் அதற்கு இப்படியா வருத்தப் படுகிறது? வெள்ளிக் கிழமையும் அதுவுமாக அபசகுனம் போல் அழக் கூடாது. எல்லாம் சரியாகிவிடும், கீதா'' என்று தேற்றினாள்.

அன்றிரவு வீடு திரும்பிய துரைசாமி விஷயத்தை அறிந்ததும் மிக்க கவலை அடைந்தான். அவசரமாக அன்று வண்டிக்கே பொன்மேட்டிற்குக் கீதாவை அழைத் துச் செல்ல ஆயத்தமானான். விஷயத்தையறிந்த மங்கள மும், சேஷகிரியும் கவலை மிக்கவர்களாகக் கீதாவை வழி யனுப்ப ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்கள்.

''அசடே, அழக்கூடாது! அவருக்கு ஒண்ணுமில்லை. நீ போனதும் உடம்பு சரியாகி விடும் போனதும் கடிதம் போடு. எங்களுக்கெல்லாம் கவலையாய் இருக்கும்'' என்று தேறுதல்கள் பல கூறி வழியனுப்பினார்கள்.

பொன் மேட்டிலிருந்து பூந்திடலுக்கு வரும்பொழுது கீதா மனம் வருந்தியவளாகத்தான் வந்தாள். ஊருக்குத் திரும்பிப் போகும் போது மன வருத்தத்துடன் தான் போய்க் கொண்டிருக்கிறாள். ஆனால், இந்த மன வருத்தங்களிடையேயும் எத்தனை வித்தியாசம்!

## 23

பங்களாவுக்குள் நுழைந்த கீதாவை எதிர்ப்பட்ட வேலைக்காரன் கவலையுடன் நிமிர்ந்து பார்த்தான். ''இப்பத்தான் வந்தீங்களா, அம்மா! நல்லவேளை ஐயாவுக்கு நேத்து ராத்திரியே பிடிச்சு உடம்பு கொஞ்சம் தேவலைங்க'' என்றான் அவன். கீதாவின் மனத்திலே அதுவரை குடிகொண்டிருந்த வேதனையின் பாரம் கொஞ்சம் குறைந்தது. பின்னால் வந்த தமையனைக் கூடக் கவனிக்காதவளாகப் பரபரப்புடன் மாடிக்கு ஓடினாள். படுக்கையின் அருகில் உட்கார்ந்திருந்த பாகீரதியம்மாள் காலடிச் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்துவிட்டு, 'வாம்மா கீதா, இப்பத்தான் வந்தியாக்கும்? கூட அண்ணாவும் வந்திருக்கிறாரா?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள். கீதா பதிலுக்குத் தலையை ஆட்டினாளே தவிர, பாகீரதியம்மாளுடைய கேள்விகள் ஒன்றும் அவள் காதுகளில் விழவில்லை. படுக்கை மீது அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்த நாகராஜனின் மெலிந்த தோற்றத்தைக் கண்டு நின்று விட்டாள்

''ஏன் அக்கா! 'உடம்பு அசௌக்கியம்' என்று ஒரு கடிதம் முன்னாடியே போட்டிருக்கக் கூடாதா? தந்தியைக் கண்டு நான் பட்ட வேதனை கொஞ்ச நஞ்சமல்ல!' என்று சிறிய மனத்தாங்கலாகக் கேட்ட கீதா அருகிலிருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து கொண்டாள். ''ஜுரம் தலைவலி மனுஷாளுக்கு வரதில்லையா? இதுக்காக என்ன ஆர்ப்பாட்டம்! 'கீதாவுக்குக் கடிதம் போட்டு அவளைக்



கவலைப்படுத்த வேண்டாம்' என்றான் ராஜா. நான் என்ன செய்யட்டும்'' என்றாள் பாகீரதி.

''இருந்தாலும் இவருக்கு இப்படி யோசனை தோணக் கூடாது. ஆமாம் ஜுரம் எத்தனை நாளாக இருக்கிறது?'' என்று விசாரித்தாள் கீதா.

''என்னவோ தலை வலிக்கிறாப் போல இருக்குன்னு புதன்கிழமை கார்த்தாலே சொன்னான். முதல் நாள் ராத்திரியெல்லாம் கண் விழிச்சி ஏதோ எழுதிண்டு இருந்தான். அதனாலே இருக்கும்னு நினைச்சேன். சுடச் சுடக் காப்பி சாப்பிட்டால் சரியாகி விடும்னு சொன்னேன் சாயங்காலம் ஆபீஸிலிருந்து திரும்பி வந்தவன் எங்கிட்டே கூடச் சொல்லாமல் நேரே படுக்கப் போய் விட்டான். சந்தேகப்பட்டுக் கொண்டு போய்ப் பார்த்தால் ஒரே ஜுரம்!'' என்று விவரித்தாள் பாகீரதி.

''அப்புறம்?'' என்று பெருமூச்செறிந்தாள் கீதா.

''ராத்திரி பூரா அடிச்ச ஜுரம் மறுநாள் கார்த்தாலே கூட விடவில்லை. டவுனிலிருந்து டாக்டர் வந்து பார்த்தார். என்னவோ மருந்தெல்லாம் கொடுத்தார். நேத்திக்கு மத்தியானம் ரொம்ப ஜாஸ்தியாகி, ஜன்னி வேகத்திலே 'கீதா, கீதா'ன்னு பேத்த ஆரம்பிச்சுட்டான் அப்புறம் நான் பயந்து போய் நான் தந்தி அடிச்சேன், ஆனால் நேத்தி ராத்திரியே ஜுரம் விட்டுடுத்து. நன்னா தூங்கினான்'' என்று முடித்தாள் பாகீரதி.

''நான் ஊருக்குப் போயிருந்திருக்கக் கூடாது, அக்கா!'' என்று தன்னையே கடிந்து கொண்ட கீதா கண்களில் ததும்பிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

''அம்மா, வெந்நீர் சுட்டு விட்டது. பாத்திரத்திலே எடுத்துக் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த பொன்னியைக் கண்டு கீதா திடுக்கிட்டு விட்டாள். கீதாவின் வரவை எதிர்பார்க்காமல் பொன்னியும் ஸ்தம்பித்துப் போய் விட்டாள்.

''உம், கொண்டு வந்து மேலே வச்சுட்டுப் போ. சீக்கிரமாக வீட்டுக்குப் போ. குழந்தையைத் தனியாக விட்டுவிட்டு வந்திருக்கிறாய். அவன் பசியால் அழுது கொண்டிருப்பான். இன்னைக்குச் சாயங்காலம் நீ வர வேண்டாம். கீதா அம்மா வந்துட்டதனாலே அவளே எல்லா வேலையும் கவனிச்சுப்பா'' என்றாள் பாகீரதி புன்னகையுடன்.

''சரி அம்மா'' என்று கூறிய பொன்னி கீதாவைப் பார்க்கப் பயந்தவள்போல் தலையைக் குனிந்த வண்ணம் அறையை விட்டு வெளியே சென்றாள்.

''சமயத்துக்குத் தங்கமும் ஒரு மாதம் லீவு எடுத்துண்டு ஊருக்குப் போய்விட்டாள். ரொம்பத் திண்டாடிப்போய் விட்டேன். பொன்னி வந்துகூப்பிட்ட குரலுக்கு ஒத்தாசை செய்யாதிருந்தால் நான் என்ன பாடு பட்டிருப்பேனோ? ராத்திரியெல்லாம் தவிடு வறுத்து அவகொடுக்கக்கொடுக்க நான் ஒத்திண்டே இருந்தேன். அதனால்தான் ஜுரம் கொஞ்சம் இறங்கித்து'' என்று பாகீரதி வர்ணிப்பதைக் கேட்ட கீதாவிற்கு வருத்தம் தாங்க முடியவில்லை.

நாகராஜன் கேட்டுக் கொண்டும் கூட பிடிவாதமாக ஊருக்குப் போனது எத்தனை தப்பான செய்கை! கௌரி சொன்ன வார்த்தைகள் அவ்வளவும் உண்மைதான். மங்கிப்போக முயற்சிக்கும் அன்பிற்குத் தூபம் போடுவது போல் கணவனையும், அவளையும் தனியே விட்டுச் சென்றது பெருந்தவறுதான். அந்தத் தவற்றுக்குச் சரியான தண்டனை போல் தந்தியைக் கண்டு விவரிக்க முடியாத மனக்கலக்கமும் வேதனையும் அடைந்து விட்டாள் கீதா. வீட்டில் இப்போது உள்ள நிலைமை முன்னைவிட மோசமாக ஆகிவிட்டதே வெளியேற்றப்பட்ட பொன்னி, கீதா வீட்டில் இப்போது உள்ள நிலைமைமுன்னை விட மோசமாக ஆகிவிட்டதே. வெளியேற்றப்பட்ட பொன்னி, கீதா இல்லாததனால் தைரியமாக மறுபடியும் பங்களாவுக்குள் நுழைய ஆரம்பிதது விட்டாள். இதற்கென்ன வழி? —என்று பலவாறு தன் மனத்திற்குள்ளேயே எண்ணிக் குழம்பிய கீதாவிற்கு மதனியின் ஒரே ஒரு புத்திமதிதான் மனத்தில் மேலோங்கி வந்தது. கணவனைத் தன் பக்கம்



திரும்பும் வழி பொறுமை ஒன்றுதான்'' என்று நினைத்த அவள் தனது பொறாமை, கோபம், துக்கம் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு, ''நல்ல வேளை அக்கா, அவளாவது இருந்தாளே உதவிக்கு! இல்லாவிட்டால் என்னவெல்லாம் நேர்ந்திருக்குமோ?'' என்று பதிலளித்தாள். தொடர்ந்தாற்போல் அதுசமயம் வெந்நீர் பாத்திரத்துடன் நுழைந்த பொன்னியை நிமிர்ந்து பார்த்து, ''பொன்னி! சாயங்காலம் கூட இந்தப் பக்கம் வந்து விட்டுப் போ. குழந்தையை விட்டுவிட்டு வரவேண்டாம் அவனையும் அழைத்துக் கொண்டு வா'' என்றாள்.

சின்ன எஜமானியின் மொழிகளைக் கேட்ட பொன்னிக்கு ஆச்சர்யம் தாங்கமுடியவில்லை. பாத்திரத்தை மேஜை மீது வைத்து (விட்டுக் சீதா பக்கம் திரும்பிய அவள் என்ன பதிலளிப்பதென்றே தெரியாது பிரமித்து நின்றாள்.

''குழந்தையைக் கட்டாயம் எடுத்துக் கொண்டு வா. எனக்கும் அவனைப் பார்க்க வேண்டும்போல் ஆசையாக இருக்கு'' என்று கீதா மறுபடியும் அழுத்திச் சொன்னாள்.

''கீதாவும் ஆசைப்படுகிறாள். நேத்திக்கி ராஜாகூட எடுத்துக் கொண்டு வரச் சொன்னானே, எடுத்துக் கொண்டு வாயேன்!'' என்று பாகீரதி வற்புறுத்திக் கூறினாள்.

''ஆகட்டும், அம்மா! என்று முடிவில் பதிலளித்த பொன்னியின் முகம் மிகவும் பிரகாசமாக மாறியதைக் கீதா கவனித்தும் பாராதவள் போல் இருந்தாள் பொன்னி அப்புறம் சென்றதும்தான் அவளுக்குத் தன் தமையனைத் தனியே கீழே விட்டு விட்டு வந்ததைப்பற்றி ஞாபகம் வந்தது.

''அக்கா, அண்ணாவைக் கீழே தனியே விட்டு விட்டு நான் பாட்டில் வந்து விட்டேன், என்ன அசட்டுத்தனம்'' என்று கீதா அவசரமாக எழுந்தாள்.

''நீ இங்கேயே இரு. ராஜா எழுந்திருக்கிற நேரமாச்சு. பல் தேய்க்கிறதுக்கு அந்த வெந்நீரை எடுத்துக்

கொடு. நான் போய் உங்கண்ணாவைக் கவனிக்கிறேன்'' என்று பாகிரதி கூறிவிட்டு அவளது பதிலை எதிர்பார்க்காது எழுந்திருந்து கீழே சென்றுவிட்டாள்.

நாத்தனார் சென்ற பின்பு படுக்கை மீது வந்து சுவாதீனமாக உட்கார்ந்து கொண்ட கீதா, தூங்கிக் கொண்டிருந்த கணவனது முகத்தை உற்றுப்பார்த்தாள். ஸ்வர்ணம் போன்ற நிறமுடைய அவன் மேனி இரண்டு நாள் ஜுரத்தில் கறுத்து இளைத்துப் போயிருப்பதைப் பார்த்தாள். ஜுரம் விட்டதன் அறிகுறியாக முத்துக்கள்போல் வியர்வை முகத்திலும் கழுத்திலும் அரும்பி நிற்பதைக் கவனித்த அவள் துண்டு ஒன்றினால் மெதுவாக ஒத்தித் துடைக்க ஆரம்பித்தாள். நாகராஜனின் தூக்கம் கலைந்தது. ''அக்கா'' என்று கூப்பிட்டுக் கொண்டுகண்விழித்த அவன் தன் முகத்தருகே குனிந்து கொண்டிருந்த கீதாவை பார்த்து ''நீயா!'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டான்.

தனது வரவை அவன் எதிர்பார்க்கவில்லை என்பதை உணர்ந்த கீதாவுக்கு மிகவும் வேதனையாக தானிருந்தது. ஆனால் வருத்தத்தை மனத்திலே புதைத்துக் கொண்டு, ''ஆமாம் நான்தான்! என்ன வேணும்?'' என்றுகேட்டாள். பதிலுக்கு மனைவி உதவி செய்ய மெல்ல மெல்ல எழுந்து சென்று, பல் துலக்கி, முகம் கழுவிவிட்டு அவள் தட்டி உதறிப்போட்ட படுக்கைமீது திரும்பவும் வந்து படுத்துக் கொண்ட நாகராஜன் அதுவரை கட்டுப்படுத்தி வைத்திருந்த ஆவலைக் கட்டுப்படுத்த முடியாதவனாக, ''நீ எப்படி வந்தாய்'' என்று கேட்டான்.

''அக்கா தந்தி கொடுத்தார் அண்ணாவைக் கூட அழைத்துக் கொண்டு வந்தேன். அதிருக்கட்டும். ஜுரத்தைப்பற்றிக் கடிதம்கூட எனக்குப் போகக்கூடாதென்று ஏன் சொன்னீர்களாம்'' என்று மனத்தாங்கலுடன் கேட்டு கொண்டு அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''உன்னை வீணே கலவரப்படுத்த வேண்டாம் என்று தான் அக்காவிடம் அப்படிச் சொன்னேன். அக்கா கேட்



காமல் தந்தி அடித்திருக்கிறாள் போலிருக்கிறது ஆனால் கீதா! என்னவோ நீ வந்து விட்டாய் என்று தெரிந்ததும் ஜுரமெல்லாம் போய்விட்டதைப் போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பாடு விட்டது'' என்று புன்னகையுடன் கூறிய நாகராஜன் கீதாவின் கரத்தை எடுத்துத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டான்.

''தந்தியைப் பார்த்து நான் எப்படிப் பயந்து போனேன் தெரியுமா? உங்களுக்கு இத்தனை கோபம் என் மேலிருக்கும் என்று நான் நினைக்கவேயில்லை. உங்களை விட்டு நான் சென்றது பிசகுதான். இனி அது மாதிரி சம்பவம் நடக்காது. புத்தியில்லாமல்...'' என்று கூறிய கீதா முடிக்காமல் சிறு குழந்தையைப் போல் அவன் மீது சாய்ந்துகொண்டு விம்மி அழ ஆரம்பித்தாள்

''சே! அசடே! என்ன நடந்து விட்டது! ஏன் இப்படியெல்லாம் மனத்தை அலட்டிக் கொள்கிறாய்? எனக்கு உன்மேலே கொஞ்சம்கூடக கோபம் கிடையாது. இதோ பார், மாடிப்பக்கம் யாரோ வருகிற சப்தம் கேட்கிறது. சீக்கிரம் முகத்தைத் துடைத்துக்கொள்'' என்று சமாதானப்படுத்தினான்.

துரைசாமியும், பாகிரதியும் வருவதைக் கண்ட கீதா எழுந்திருந்து அறையிலுள்ள பொருள்களை ஒழுங்காக அடுக்குவதில் ஈடுபட்டு விட்டாள். துரைசாமிக்கு நேரிலே நாகராஜனது தேக நிலையைப் பார்த்ததும் மனத்திலிருந்த கவலை சிறிது அகன்றது. நாகராஜனும் துரைசாமியும் பல விஷயங்களைப் பற்றிக் கொஞ்ச நேரம் பேசும்படி. பல விஷயங்களைப் பற்றிக் கொஞ்ச நேரம் பேசும்படி அவர்களைத் தனியே விட்டுவிட்டுக் கீதா வீட்டுக் காரியங்களைக் கவனிக்கக் கீழே இறங்கிச் சென்று விட்டாள்.

எத்தனை வற்புறுத்தியும் கேளாது அன்று சாயங்காலமே துரைசாமி பொன்மேட்டை விட்டுப் புறப்பட்டு விட்டான், அண்ணா ஊருக்கு சீக்கிரத்தில் திரும்பிச் சென்றதைக் குறித்து கீதாவிற்கு ஒரு விதத்தில் வருத்தம் தான் என்றாலும் ஒருவிதத்தில் அவன் ஊருக்குச் சென்

றது நல்லதே என்றும் நினைத்தான். ஏனெனில், கீதா கேட்டுக்கொண்ட வண்ணம், பொன்னி தனது குழந்தையுடன் பங்களாவிற்கு வந்திருந்தாள். துரைசாமி அவளையும், குழந்தையையும் பார்க்க நேர்ந்தால்?... கணவனின் வாழ்க்கை ரகசியத்தைத் தமையன் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்?

பகலெல்லாம் போதிய ஓய்வு எடுத்துக்கொண்டு மனைவியின் சிசுருஷையில் உள்ளம் மகிழ்ந்து போயிருந்த நாகராஜன் சாயங்காலம் மெள்ள எழுந்திருந்து மாடியின் திறந்தவெளியில் போட்டிருந்த நாற்காலி ஒன்றில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். தோட்டத்திலிருந்து வீசிய குளிர்ந்த பூங்காற்று அவனுடைய பலஹீனமான உடலுக்கு மிக இன்பமாக இருந்தது.

"இங்கேயா உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? அங்கேயெல்லாம் தேடிவிட்டு வந்தேன்!" என்று கேட்டுக் கொண்டே வந்த மனைவியின் பக்கம் திரும்பிப் பார்த்த நாகராஜன், குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்த பொன்னியும் அவள் பின்னால் பாகீரதியுமாக அங்கு வந்து கொண்டிருந்ததைக் கண்டான்.

பொன்னியைக் கண்டு கலவரப்படும் கணவனைக் கவனித்த கீதா, "நான் இல்லா சமயம், பாவம் அக்காவுக்குப் பொன்னிதான் ரொம்ப உதவி செய்தாளாம். குழந்தையை வீட்டிலே தனியாக விட்டு விட்டு ஏன் வருகிறாய்? அவனையும் அழைத்துக்கொண்டு வருகிறது தானே? என்று நான் தான் சொன்னேன், அதனால்தான் இன்றைக்கு அவள் குழந்தையையும் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறாள்" என்று ஜாடையாக விளக்கினாள்.

திடீரென மனைவிக்கு அந்தப் பெண்மீது ஏற்பட்ட அபிமானத்தைக் கண்டு நாகராஜனுக்கு மிகவும் வியப்பாக இருந்தது. என்றாலும் அக்கா எதிரில் மனைவியுடன் அதைப் பற்றி ஒன்றும் பேச விருப்பமில்லாதவனாக மௌனமாயிருந்து விட்டான்.

ஆகாய வீதியில் பால்போல் பிரகாசித்துக் கொண்டிருந்த பூர்ண சந்திரனின் தண் கிரணங்கள், ஜன்னல்



வழியாக உள்ளே வீசிக் கொண்டிருந்தன, அருகில் அமர்ந்து ஆழ்ந்த யோசனையுடன் வானத்தையே பார்த்துக் கொண்டிருந்த கீதாவின் முகத்தை ஆராய்ந்து பார்ப்பவன் போல் நாகராஜன் அந்த ஒலியில் கூர்ந்து நோக்கினான். "ஆமாம், கீதா! நீயா அவளை வரச்சொன்னாய்?" என்று திடீரென்று கேட்டான் நாகராஜன்.

"நீங்கள் தூங்கி விட்டீர்கள் என்றல்லவோ நினைத்தேன்? நாளைக்கு அதைப்பற்றிப் பேசிக் கொள்ளலாம். இப்போது தூங்குங்கள்?" என்று அன்புடன் கடிந்து கொண்டாள் அவள்.

"நான் கேட்டதற்குப் பதில் சொன்னால்தான்?" என்று விடாப்பிடியாகக் கேட்டான் அவன்.

"நான்தான் சொன்னேன் என்னுடைய கண்டிப்பால தானே உங்கள் கௌரவத்தை விட்டு அங்குப் போகும்படி நேர்ந்தது என்று அவளை மறுபடியும் இங்கே வர அனுமதித்தேன். மேலும் நான் உங்களைப் பூரணமாக நம்புகிறேன். 'உனக்குத் துரோகம் செய்ய மாட்டேன்' என்று தாங்கள் வாக்களித்திருக்கும் போது எனக்கு ஏன் வீண் மனக் கவலை?" என்று கீதா மிகவும் சாமர்த்தியமாகப் பதிலளித்தாள்.

பொன்னியைப் பற்றி அவளது உள்ளத்திலே மீண்டும் ஏற்பட்டிருந்த உணர்ச்சிப் போராட்டத்தை அறிந்து கொள்ளாத நாகராஜன், "நிஜமாகவா கீதா" என்று கேட்டான் ஆனந்தத்துடன்

"நிஜமாக நான் உங்களை நம்புகிறேன், போதுமா? சரி, தூங்குங்கள்: அதிகம் பேசினால் ஜுரம் திரும்பிக் கொண்டு விடப் போகிறது" என்று எச்சரித்தாள் கீதா.

## 24

**கீ**தா கருத்துடன் செய்த சிசுருஷைகளாலும் மனத்திலே ஏற்பட்ட சாந்தியினாலும் நாகராஜன் சீக்கிரம் குணமடைந்து விட்டான். ஒரு வாரம் ஓய்விற்குப் பின்

மீண்டும் பழையபடி தனது தொழிற்சாலை விவகாரங்களைக் கவனிக்க ஆரம்பித்து விட்டான்.

பூந்திடலுக்குப் போனது ஒரு விதத்தில் கீதாவிற்குப் பலகஷ்டங்களை உண்டாக்கியதென்றாலும் ஒருவிதத்தில் பெரிய ஆறுதலையே அளித்தது என்று சொல்லவேண்டும். தனது மனத்திலே குமுறிக் கொண்டிருந்த துக்கத்தைத் தனது சிநேகிதியும் மதனியுமான கௌரியிடம் ஒளிக்காமல் சொன்னதனால் அவள் மனத்தின பாரம் குறைந்திருந்தது. தனது வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை அவ்வப்போது எழுதியாவது தெரிவித்துத் தகுந்த யோசனைகள் கேட்க கௌரி இருக்கிறாள் என்ற ஒரு நம்பிக்கையில் அவளது உள்ளத்தில் சாந்தி ஏற்பட்டுள்ளது.

இரண்டு விதமான உபாயங்களைக் கையாண்டும் பலிக்காது மனம் சோர்ந்து போயிருந்த கீதாவிற்கு கௌரியின் உபதேசம் புது உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கொடுத்திருந்தது. தனது மனம் பொறாமையினால் எத்தனை கஷ்டப்பட்டாலும் சரி, தனதுஉடல் அவமானத்தினால் குன்றிப் போனாலும் சரி, நாகராஜனிடம் பொன்னி விஷயமாக அபரிமிதமான பொறுமையுடன் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தாள். இந்தப் பொறுமை ஒன்றால் தான் கணவனைத் தன் வழிக்குத் திருப்பக் கூடுமென்றால் அந்த அஸ்திரத்தையும் கடைசியாகப் பிரயோகித்துப் பார்த்து விடுவதென்று உறுதியாக எண்ணிக் கொண்டிருந்தாள். அதனால் கீதாவின் நடவடிக்கை மிகவும் மாறுதல் அடைந்து விட்டது.

பொன்னி முன்போல் பழையபடி அந்தப் பங்களாவிற்குள் தாராளமாக வந்து போய்க் கொண்டிருந்தாள் கீதா அவளைப் பற்றிய பேச்சையே கணவனிடம் ஆரம்பிப்பதில்லை, தப்பித்தவறி நாகராஜனே ஏதாவது சொன்னால் கூட மனதிற்குச் சஞ்சலத்தைக் கொடுக்கும் அந்தச் சம்பாஷணையைச் சாமர்த்தியமாக வேறு திக்கில் திருப்பி விடுவாள்.

வீட்டைக் கவனிப்பதிலும், நாகராஜனது சௌகரியங்களைக் கருத்துடன் கவனிப்பதிலும் அவளது பொழுது



வேகமாகச் சென்று கொண்டிருந்ததனால் மனஸ்தாபத்திற்கும், தர்க்கத்திற்கும் இடமே இல்லாதிருந்தது. தன் பேச்சுக்கு மதிப்புக் கொடுக்காமல் கீதா பிறந்தகம் சென்றது பற்றி நாகராஜனுக்குக் கொஞ்சம் கோபமும் மனவருத்தமும் நேர்ந்தது வாஸ்தவமே. ஆனால் பிறந்தகத்திலிருந்து திரும்பி வந்த மனைவியிடம் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்டு அவன் ஆச்சர்யமும் சந்தோஷமுமே அடைந்தான் என்றே சொல்ல வேண்டும். அவள் சந்தோஷம் நீடித்திருக்க அவன் அவளைப் பல வழியிலும் உற்சாகப்படுத்த முயற்சிகள் யாவும் எடுத்துக் கொண்டான்.

அன்று விடுமுறை நாள் காலை ஸ்நானத்திற்குப் பின்பு பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்த நாகராஜன் நிமிர்ந்துப் பார்த்தான். வெளியே செல்ல சித்தமாக அலங்கரித்துக் கொண்டு கீதா மிக்க ஒயிலாக எதிரில் நிற்பதைக் கண்டான். ''அடாடா! மறந்தே போய்விட்டேனே! இரு, ஒரே நிமிஷத்தில் வந்து விடுகிறேன். ஆமாம், இன்றைக்கு நாம் எங்கே போகிறோம்?'' என்று கேட்ட நாகராஜன் எழுந்திருந்தான்.

''தங்களுக்கு எங்கே போகணும் என்று தோன்றுகிறதோ அங்கே போனால் சரிதான்' என்று பதிலளித்தாள் கீதா புன்னகையுடன்.

''நீலநிற பட்டுப்புடவைக்கு ஏற்ற இடம் நீலநிற ஏரிதான் இல்லையா? பொன்னேரிக்குப் போகலாமா?'' என்று பரிகாசமாகக் கேட்டுவிட்டு மனைவியின் அலங்காரத்தை ஏற இறங்க ஒரு தடவை பார்த்துவிட்டுத் தனது அறைக்குள் சென்றான்.

வெயில் நன்றாக ஏறும் வரை நீரில் படகிலே இங்குமங்கும் ஆனந்தமாக மிதந்து சென்ற அவ்விருவரும் சூரியன் உச்சியை அடைந்து விட்டதனால் வெயில் உஷ்ணமாகத் தகிப்பதைக் கண்டு கரையோரம் மெதுவாகப் படகைச் செலுத்திக் கொண்டு வந்தார்கள். கரையைச் சமீபித்ததும் நாகராஜன் படகைநிறுத்திவிட்டு,

கீதாவிற்கு கைகொடுத்து இறங்க உதவி செய்தான். அது சமயம் "கீதா!" என்று மிகவும் பழக்கமானதொரு குரல் தன்னை உரத்துக் கூப்பிடுவதைக் கண்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த கீதா ஸ்தம்பித்துப் போய் ஒரு கணம் நின்றாள்.

ஏரியின் கரை மீது அவளது சிநேகிதி விமலாவும் அவளது தமையன் சிவராமனும் நின்று கொண்டிருந்தார்கள்!

"என்ன விமலா! நீயா? உன்னை நான் இங்கே சந்திப்பேனென்று கனவில்கூட நினைக்கவில்லையே!" என்றாள் கீதா வியப்புடன்.

"எனக்கும் ஆச்சர்யமாகத்தான் இருந்தது. ஏரியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கையில் ஏதோ நீல புஷ்பம் ஒன்று மிதந்து வருவதைப் போன்று தூரத்திலிருந்து தெரிந்தது அது என்னவாக இருக்குமென்று பார்த்துக் கொண்டேயிருக்கையில், அது என் அருமை சிநேகிதி கீதாவாக இருப்பதைக் கண்டு திகைத்துவிட்டேன்" என்று கேலியாக மொழிந்தாள் விமலா.

சகோதரியின் ஹாஸ்ய மொழிகளைக் கேட்டு விட்டு வாய்விட்டுச் சிரித்தான் சிவராமன். கீதாவிற்குச் சிறிது லஜ்ஜையாக இருந்தது என்றாலும் அதை சமாளித்துக் கொண்டு அது சமயம் அங்கு வந்து சேர்ந்த தனது கணவனை அவர்களுக்குமுறையே அறிமுகப்படுத்தினாள்.

ஏரிக்கரையோரமாக, மரங்களின் நிழலில் நடந்து சென்று கொண்டிருந்த நாகராஜனும் சிவராமனும் ஏதோ மரியாதைக்காகச் சம்பாஷித்துக் கொண்டு சென்றனர். அவர்கள் பின்னால் ஜோடியாகச் சென்ற கீதாவும் விமலாவும் ஒருவரையொருவர் க்ஷேம லாபங்களை விசாரித்துக் கொண்டனர்.

"ஆமாம், இந்த ஊருக்கு நீ எதற்காக வந்தாய்?" என்று கீதா வினவினாள்.

"எதற்கா? இது தான் இனிமேல் என்னுடைய புக்ககம்" என்று கர்வமாக விமலா பதிலளித்தாள்.



"புக்ககமா?" என்று வியப்புடன் கேட்ட கீதா, சிநேகிதியைத் திரும்பப் பார்த்தாள். புதிதாக ஒளிவிட்டுக் கொண்டிருந்த மஞ்சள் நிறக்கயிறு, சிநேகிதியின் கழுத்திலிருப்பதை அப்போதுதான் கீதா கவனித்தாள். "விமலா நீ செய்தது மன்னிக்க முடியாத காரியம் உன் கல்யாணத்தைப் பற்றி எனக்குக்கூட நீ கடிதம் போடவில்லை என்பதைக் குறித்து எனக்கு உன்மேல் கோபம் வருகிறது" என்றாள் மனத்தாங்கலுடன்.

'என் கல்யாணம் திடீரென நிச்சயமாயிற்று. மேலும் என் கல்யாணம் என்ன; உன் விவாகத்தைப் போல் விமரிசையாக நடந்ததா என்ன? என்னவோ ஏழை வீட்டுக் கல்யாணத்தைப் பற்றி உனக்கு எழுதுவானேன் என்றிருந்து விட்டேன்" என்றாள் விமலா குரோதத்துடன்.

'வெடுக்'கென்று பேசும் சுபாவம் இன்னும் விமலாவை விட்டு அகலவில்லை என்று கண்ட கீதா மேலே அதைப்பற்றித் தர்க்கிக்க விரும்பாது, உன் கணவரும் இங்கேதான் இருக்கிறார் போலிருக்கிறது என்று கேட்டாள்.

"விவாகமான இரண்டாவது நாளே அவர் சீமைக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார். உணவு ஆராய்ச்சியில் சர்க்காரால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் சீமையிலிருந்து திரும்பிவர ஒன்றரை வருஷங்களாகும். அதுவரை என்னுடைய சிறிய மாமனார் வீட்டிலிருக்க வேண்டுமென்று அவருடைய உத்தரவு. அதனால் இங்கே வந்து தங்கும்படி நேரிட்டது. உனக்குத் தீக்ஷிதர் தெரு சுப்பிரமணிய அய்யரைத் தெரியுமா? அவர் தான் என் சின்ன மாமனார்" என்றாள் விமலா.

"எனக்கு ஒன்றும் தெரியாது. நான் பங்களாவை விட்டு அந்தப்பக்கம் போனதில்லை" என்றாள் கீதா.

"உனக்கென்னமா, ராணி! வெளியே செல்லாதிருக்கிறாய். என்னைப் போலவா?" என்றாள் விமலா அதிருப்தியுடன்.

''இது மாதிரிதானே பேசக்கூடாது என்கிறது இனிமேல் பார், நான் அடிக்கடி அந்தப்பக்கம் வருவேன். தெரிந்தவர்கள் இருந்தால்தானே அங்கேயெல்லாம் வருவதற்கு? அது கிடக்கட்டும். நீ எங்கள் வீட்டுக்கு வர வேண்டும். சாவகாசமாக உன்னுடன் பல விஷயங்கள் பேச வேண்டியிருக்கிறது'' என்றுகூறிய கீதா, நாகராஜன் சற்று தூரத்தில் வண்டியருகில் தனக்காகக் காத்திருப்பதைக் கண்டு சிநேகிதியிடம் விடை பெற்றுக் கொண்டு கணவனுடன் வண்டியிலேறிக் கொண்டாள்.

வண்டி கண்ணுக்கு மறைந்ததும், ''ஒரு பக்கம் படகில் உல்லாசப் பிரயாணம்; மற்றொரு பக்கம் மாட்டு வண்டி யாத்திரை. நவநாகரிகமும் கர்நாடகமும் கலந்த இந்த விசித்திர தம்பதிகளைப் பார்த்தாயா அண்ணா?'' என்று கேட்ட விமலா கடகடவென்று சிரித்தாள்.

''உம்'' என்று உறுமிய சிவராமன் வெறுப்புடன் முகத்தைச் சுளித்துக் கொண்டு பதில் பேசாது நடக்கலானான்.

வண்டியில் உட்கார்ந்திருந்த கீதா கணவனிடம் ''உங்களுக்கு விமலாவைத் தெரியுமல்லவா'' என்று கேட்டாள். ''ஓ தெரியுமே! நவராத்திரியின் போது சித்தியின் வீட்டில் பார்த்திருக்கிறேனே!'' என்று கேலியாகக் கூறினான். ''அவளுக்குக் கல்யாணமாகி விட்டது. அவள் கணவர் சீமைக்குச் சென்றிருக்கிறாராம், அவர் திரும்பி வருகிறவரைக்கும் அவளுடைய சின்ன மாமனார் வீட்டில் இருக்கிறாளாம். என்னைக்கூடத் தன் வீட்டுக்கு வரச் சொன்னாள்'' என்று ஒரே மூச்சில் விஷயங்களை அளந்தாள் கீதா.

''அப்படியா!'' என்று சகஜமாகக் கேட்டான் நாகராஜன். கணவனின் முகத்தைக் கூர்ந்து கவனித்த கீதா, ''என்னை மணக்கத் தவறியிருந்தால், அவளைத் தானே நீங்கள் கல்யாணம் செய்து கொண்டிருப்பீர்கள்?'' என்று, கேட்டாள்.



''ஒருநாளும் இல்லை, நான் கல்யாணம் செய்து கொண்டிருக்கவே மாட்டேன்' என்றான் நாகராஜன் தீர்மானத்துடன்.

''ஏன் அவளுக்கென்ன அழகில்லையா, குணமில்லையா? என்னைவிடச் சற்று மாநிறம் என்பதனால் அவளைக் குறைத்துப் பேசுகிறீர்கள். பாவம்'' என்று விமலாவுக்காகப் பரிந்து பேசினாள் கீதா

'எனக்கென்னவோ அவள் உயர்ந்த குணம் படைத்தவளாகத் தோன்றவில்லை. அவ்வளவுதான்! உனக்கு உன் சிநேகிதியைப்பற்றி பேசினால் கஷ்டமாக இருக்கும். உனக்கு அவளைப் பற்றி நல்ல அபிப்பிராயம் இருந்தால் சரி'' என்று அந்த சம்பாஷணைக்கு முற்றுப்புள்ளி வைத்தான் நாகராஜன்.

# 25

அன்று பகல் நாகராஜன் தொழிற்சாலைக்குச் சென்ற பின் தனது வீட்டு அலுவல்களை முடித்துக் கொண்டு முன் ஹாலுக்கு வந்தாள் கீதா முதல் நாள் பாதியில் விட்டுப் போயிருந்த கதைப் புத்தகத்தை அலமாரியிலிருந்து கையில் எடுத்துக் கொண்டு சோபாவில் சாய்ந்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள் படபடவென்று பூமியே அதிரும் படியான தொரு சத்தம் திடீரென்று கேட்டது. திடுக்கிட்டு போன கீதாவின் கையிலிருந்த கதைப் புத்தகம் தொப்பன நழுவிக் கீழே விழுந்து விட்டது.

மறு நிமிஷம் வாயிற்கதவு மிகவும் பலமாகத் தட்டப்படுவதைக் கேட்டதும் கீதாவின் குழப்பம் அதிகமாயிற்று ''என்ன சத்தம்? யார் அது?'' என்று தனக்குள்ளே கலவரமடைந்த அவள் வாயிற் கதவைத் திறந்தாள்.

''எத்தனை நாழி தட்டுவது? நீ வீட்டில் இல்லையோ என்னவோ என்று கூட சந்தேகப்பட்டு விட்டேன்!' என்று மெல்ல சிரித்தாள். எதிரில் நின்று கொண்டிருந்த விமலா.

சிநேகிதியைக் கண்டதும் கீதாவிற்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ''வா விமலா உள்ளே வா!'' என்று வரவேற்று விட்டு, ''ஆமாம், எப்படி என் வீட்டைத் தேடிக்கண்டுபிடித்தாய்?' என்று வினவினாள். ''அண்ணாவிடம் சொல்லிவிட்டால் உலகத்தின் எந்த மூலையிலிருந்தாலும் தேடிக்கண்டு பிடித்துவிட மாட்டானா? அவனையும் அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று கூறிவிட்டு ஹாலுக்குள் நுழைந்தாள் விமலா.

''அண்ணாவும் வந்திருக்கிறாரா? அவரையும் உள்ளே கூப்பிடலாமே'' என்று கீதா சொன்னதும், ''அண்ணா காரில் உட்கார்ந்திருக்கிறான். பரவாயில்லை அங்கேயே இருக்கட்டும்'' என்றாள் விமலா ''எங்கள் வீட்டிற்கு வந்தவரை வாசலிலேயே உட்கார வைப்பது நன்றாக இருக்குமா? அவரும் இங்கே வந்து உட்கார்ந்து கொள்ளட்டும்'' என்று கூறிய கீதா வாயிற் பக்கம் சென்றாள். தகர டப்பாவிற்கு நான்கு சக்கரங்களைப் பொருத்தினது போல் காட்சியளித்த அந்த மோட்டாரைக் கண்டதும் கீதாவிற்குச் சிரிப்புதான் வந்தது. சிறிது நேரத்திற்கு முன் தன்னை திகைக்க வைத்த சப்தத்தை அந்தக் கார்தான் எழுப்பி இருக்க வேண்டும் என்று ஊகித்துக்கொண்டு அதன் அருகில் வந்தாள். முன் பக்கத்து ஆசனத்தில் உட்கார்ந்திருந்த சிவராமனைப் பார்த்து, ''உள்ளே வரலாமே! இங்கேயே உட்கார்ந்திருப்பானேன்'' என்று வினயமாக வரவேற்றாள்.

திடுக்கிட்டு சிவராமன் திரும்பிப் பார்த்தான் எண்ணெய் தேய்த்து ஸ்நானம்செய்துவாராது முடிந்துகொண்டிருந்த கூந்தல் நெற்றியிலும் கன்னத்திலும் புரள எங்கு திரும்பினாலும் பசுமைநிறைந்த பங்களா முன்தோட்டத்தின் அழகின் நடுவில் வன தேவதையைப் போன்று கீதா அவனது கண்களுக்குப் பரபரப்பை உண்டாக்கினாள். யுவதியாக வளர்ந்த பின்பு சிவராமனிடம் அவள் ஒரு தடவை கூடப் பேசியதில்லையாதலால் முதல் முதலாகத்



தன்னுடன் அவள் தாராளமாகப்பேசியது அவனுக்கு மிக சங்கோஜத்தையும் குழப்பத்தையும் உண்டாக்கியது.

''ஆகட்டும், அதற்கென்ன?'' என்று அர்த்தமற்ற சொற்களால், தடுமாற்றத்துடன் பதிலளித்து விட்டுக் காரினின்று இறங்கினான்.

அந்தச் சில நிமிஷங்களில் சோபா ஒன்றின்மீது சாய்ந்து கொண்டிருந்த விமலாவின் கண்கள் தன்னைச் சுற்றிலுமுள்ள பொருள்களை ஆராய்ச்சி செய்வதில் ஈடுபட்டிருந்தன. தென்றலுக்கு அசைந்து கொடுத்த ஜன்னல் திரைகளின் பச்சை வர்ணமும் மென்மையான சோபாக்களின் பச்சை நிறமும் அறை முழுவதும் குளுமையை வீசிகொண்டிருப்பதை உணர்ந்தாள். சுவரின் மீது மாட்டியிருந்த பெரிய கடிகாரம் ஹாலுக்கே ஒரு கம்பீரத்தை உண்டு பண்ணியதைப் போலிருந்தது. நடுவிலிருந்த வட்ட மேஜையின் அழகையும், அதன்மீது இருந்த விசித்திரப் பூந்தொட்டியையும் வைத்த கண் வாங்காது அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்

மறுபடியும் ஹாலுக்குள் நுழைந்த கீதா பின்னால் வந்த சிவராமனை உட்காரும்படி உபசரித்து விட்டு விமலாவின் அருகில் வந்தாள் ''உங்களது வீடு இத்தனை அழகாக இருக்குமென்று நான் உண்மையில் எதிர்பார்க்கவேயில்லை' என்று வியப்புடன் விமலா சொன்னதைக் கேட்ட கீதாவிற்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. ''பங்களா முழுவதையும் பார்வையிட்டுப் பிறகு சொல்'' என்று அவளை அழைத்தாள். சிவராமன் அங்கேயே உட்கார்ந்து கொண்டிருப்பதாகக் கூறி அவளுடன் சென்று பார்க்க மறுத்துவிட்டான். சிநேகிதிகள் இருவரும் மட்டும் சென்றார்கள்.

முன்கட்டு முழுவதையும் சிநேகிதிக்குக் காட்டிவிட்டு பின் கட்டின் பக்கம் வந்த கீதா அங்கே பெஞ்சியின்மீது உட்கார்ந்திருந்த பாகீரதிக்கு விமலாவை அறிமுகப் படுத்தி வைத்தாள். பிறகு விமலாவை மாடிப்பக்கம் அழைத்துச் சென்றாள். மாடியின் ஒவ்வொரு பாகத்தையும் சிநேகிதிக்குக் காட்டிவிட்டுக் கடைசியாக ஒரு பெரிய அறைக்குள் அவளை அழைத்துச் சென்றாள்.

'உம்! இதென்ன அறை படுக்கை அறையா, உடுக்கும் அறையா? இதற்கு என்ன பேர் வைத்திருக்கிறாய்?'' என்று பாதி கேலியாகவும் பாதி ஏளனமாகவும் வினவிய விமலாவின் வார்த்தைகளைப் பொருட்படுத்தாது கீதா, ''இதுதான் என்னுடைய பொக்கிஷ அறை அதில்தான் என்னுடைய பொருள்களை எல்லாம் வைத்துக் கொள்கிறேன்!'' என்று பரிகாசமாகச் சொல்லிவிட்டு, அங்கிருந்த பெரிய கண்ணாடி பீரோவைத் திறந்தாள். விமலாவின் கண்கள் வியப்பினால் விரிந்தன. அடுக்காக பீரோவின் தட்டுகளின் மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்த நானாவித வர்ணப் புடைவைகளைப் பார்த்துவிட்டுத் தனது பேசும் சக்தியை ஒரு கணம் இழந்து நின்றாள்.

''என்ன, புடைவைக்கடை ஒன்று வைக்கலாம் போலிருக்கிறதே?'' என்று முடிவில் சொன்னாள் விமலா.

''அப்படித்தான் அவரும் என்னிடம் அடிக்கடிப் பரிகாசம் செய்வார். இந்தப் புடைவைகள் எல்லாம் அவர் பார்த்து வாங்கிக் கொடுத்தவை. நானாக வாங்கிக் கொண்டவை வேறு இருக்கின்றன அவற்றைப் பெட்டியில் வைத்திருக்கிறேன்'' என்று பெருமிதத்துடன் கூறிய கீதா பீரோவைச் சாத்திப்பூட்டி விட்டு மூலையிலிருந்த இரும்புப் பெட்டியைத் திறந்தாள். நகைப் பெட்டிகளை ஒவ்வொன்றாக அவள் எடுத்து திறந்து காட்டும் போதெல்லாம். விமலாவிற்கு அவ்வளவு கனவு போலவே தோன்றியது. ''இதெல்லாம் நிஜமா! கீதாவிற்கு இத்தனை ஐச்வர்யமா? உண்மையா இது?'' எனத் தனக்குள்ளே எண்ணி எண்ணி ஆச்சர்யப்பட்டாள் அவள்.

அறையினின்று வெளிப்பட்ட சிநேகிதி மாடிஹாலின் சுவரில் மேலாக மாட்டியிருந்த புகைப்படம் ஒன்றை பார்த்துக் கொண்டு நிற்பதைக் கவனித்த கீதா அருகில் வேகமாக வந்து, ''சம்பத்தில் நானும் அவரும் எடுத்துக் கொண்ட போட்டோ! எப்படி இருக்கிறது?



நான் கொஞ்சம் அசக்கி விட்டேன். முகம் அவ்வளவு தெளிவாக விழவில்லை என்று நினைக்கிறேன்'' என்று ஆவலுடன் சிநேகிதியைக் கேட்டாள். செல்வத்தின் சுகத்தை அள்ளிக் கீதாவின் மீது வீசிய நாகராஜனது மந்தகாச வதனத்தை விமலா பொறாமையுடன் பார்த்தாள். ''போட்டோ நன்றாகத் தானிருக்கிறது! இதைப் பார்த்ததும் எனக்கு ஒன்று சொல்லவேண்டும் போல் தோன்றுகிறது. ஆனால் நீ தப்பாக நினைத்துக் கொள்வாயோ என்று பயமாக இருப்பதனால்...'' என்று இழுத்து விட்டு விமலா நிறுத்தினாள்.

நீ என்ன சொன்னாலும் எனக்குக் கோபமே ஏற்படாது, போட்டோவைப் பார்த்ததும் உனக்கு அப்படி என்ன தோன்றுகிறது?'' என்று கீதா தூண்டிக் கேட்டாள்

''உனது தோள் மீது கையை அவர் அப்படி வைத்துக் கொண்டு போட்டோவில் இருப்பதைப் பார்த்தால் மிகவும் விசித்திரமாக எனக்குப் படுகிறது'' என்று லஜ்ஜையினால் முகம் சிவந்து போன கீதாவை ஏறிட்டுப் பார்த்துக் கூறினாள் விமலா. ''நான் சொன்னேன் என் சிநேகிதிகள் பார்த்தால் கேலி செய்வார்கள் என்று. ஆனால் அவர் கேட்கவில்லை. வேடிக்கையாக அப்படிக் கையைத் தோள் மீது வைத்துக்கொண்டு விட்டார்! சரி விமலா, அதை மறுபடியும் பார்க்காதே எனக்கு வெட்கமாக இருக்கிறது!'' என்றாள் கீதா சங்கோஜத்துடன்.

''இதிலிருந்து உனது கணவரின் மனப்பான்மை எனக்கு ஓரளவு புரிகின்றது. உனது கணவர் தனது உரிமைகளை மிகவும் பாராட்டுகிறவர் என்று நினைக்கின்றேன். 'இவள் என்னுடையவள்' என்று பறையறிவிப்பது போல் அல்லவா இருக்கிறது அவர், அப்படி உன் தோள்மீது கையை வைத்திருப்பது? மனைவி மீது உரிமை அதிகம் பாராட்டும் கணவர்கள் பொறாமைக்காரர்களாக இருப்பார்கள் என்பது எனது அபிப்பிராயம்! பொறாமைக்காரர்களுக்குத் தொட்டதற்கெல்லாம் சந்தேகம் ஏற்படும் என்பது உனக்குத் தெரிந்த விஷயந்

தானே?''என்று பிரசங்கித்துக் கொண்டிருந்த விமலாவின் குற்றச்சாட்டான வார்த்தைகளைக் கேட்கக் கீதாவிற்குப் பிடிக்கவில்லை' ''என் கணவர் மிகவும் நல்லவர் என்னிடம் பிரியமாக இருக்கிறார். நீ சொல்லும் 'சொல் ஒன்றும் அவருக்குப் பொருந்தாது''என்று கொஞ்சம் கோபத்துடன் பதிலளித்தாள்.

சிநேகிதியின் பிரகாசமான வதனம் இச் சம்பாஷணைக்குப் பின் மாறுபட்டிருப்பதைக் கவனித்த விமலா, 'அப்பா! அப்படி அல்லவா மனைவி இருக்கவேண்டும்? யாரோ ஆசிரியர் எழுதின மனோதத்துவ புஸ்தகத்தைப் படித்துவிட்டு நான் விளையாட்டாகக் கேலிக்குச் சொன்னேன், அது பொறுக்கவில்லையே உனக்கு?'' என்று சமாதானமாகச் சொன்னாள்.

தனது வீட்டிற்கு வந்திருக்கும் விமலாவிடம் முகத்தைக் கடுத்துக் கொள்வது மரியாதைக் குறைவு என்று உணர்ந்த கீதா,''இல்லை நானும் விளையாட்டிற்காகவே அவருக்காகப் பரிந்து'பேசினேன். அது கிடக்கட்டும், நீ எங்கள் தோட்டத்தைப் பார்க்க வேண்டாமா?'' என்று அவளைக் கீழே அழைத்துச் சென்றாள்.

தோட்டத்தைச் சுற்றிப்பார்த்து விட்டு திரும்புகையில், கீதா நீ மிகவும் அதிர்ஷ்டசாலி வாழ்க்கையில் எப்படிப்பட்ட கணவன் வேண்டும், வீடு எப்படி இருக்க வேண்டும். என்று கண்டு கொண்டிருந்த இன்பக்கனவுகளை நீ வாழ்க்கையில் அடைந்திருக்கிறாய்!'' என்று விமலா சொன்னாள்.

சிநேகிதியின் புகழ்ச்சியால் உச்சிக் குளிர்ந்தது. கீதாவுக்கு. ''உனக்கும் இந்த மாதிரியான வாழ்க்கை சீக்கிரத்திலேயே கிட்டிவிடும், பணமும் அந்தஸ்தையும் பெற மனிதனுக்கு எத்தனை நாழியாகும்? அதிர்ஷ்ட தேவதையின் கிருபை இருந்தால் கணப்பொழுதில் எல்லாம் கிடைத்துவிடும், உன் கணவர்மேல்படிப்பிற்காகச் சீமை சென்றிருக்கிறார், திரும்பி வந்ததும் பெரிய உத்தியோ



கத்தில் இருக்கப் போகிறார். உனக்கு என்ன குறைவு அப்பொழுது?'' என்று முகஸ்துதி செய்தாள் பதிலுக்கு.

''உம்! என்னதான் இருந்தாலும் ஒருநாள்கூட என் வாழ்க்கையில் நான் இத்தனை ஐச்வர்யத்தை அடையப் போவதில்லை!'' என்று பெருமூச்சு விட்டாள் விமலா. வானத்தைப் பார்த்துக் கொண்டு மேற்கே இறங்கிக் கொண்டிருந்த சூரியனின் பொன் கதிர்களின் இடையே ஆங்காங்கே வானத்திலே திரண்டு கொண்டிருந்த வெண் முகிலில் அவளுக்கு ஒரு காட்சி தெரிந்தது. மூடு பனி நிறைந்த தெருக்களில் வேகமாக நடந்துகொண்டிருந்த தனது கணவனின் கவலை நிறைந்த முகத்தை அதில் பார்த்தாள் விமலா. ''சீமை வாழ்க்கை எனது பாங்குப் பணத்தை வேகமாகக் கரைத்துக் கொண்டிருக்கின்றது. திரும்பி வந்ததும் நான் இதற்காக ஈடு செய்ய வேண்டியிருக்கும். நாமிருவரும் பல வருஷங்கள் சிக்கனமாக வாழ்க்கை நடத்திச் செலவு செய்த பணத்தைச் சரிகட்ட நேரிடும். இதே கவலைதான் எனக்கு படிப்பு கூட ஓடவில்லை என்றால் பார்த்துக்கொள்'' என்று சமீபத்தில் சீமையிலிருந்து தனது கணவன் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி அவளது ஞாபகத்தில் மிதந்தோடி வந்தது.

''என்ன ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு அசந்து போய் நிற்கிறாய்? கவலைப்படாதே. சீக்கிரம் நாட்கள் ஓடிவிடும். அவர் வந்துவிடுவார்'' என்று சிநேகிதியை உற்சாகப்படுத்திய கீதா அன்புடன் அவளது கரத்தைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

''என்னவெல்லாமோ சொல்லி விட்டேன் நான், உனது வாழ்க்கையைக் கண்டு நான் பொறாமைப்படுவதாக நினைத்துக் கொள்ளாதே. கீதா! நான் விரும்பியது எனக்குக் கிட்டாவிட்டால் என் பிராண சிநேகிதிக்காவது கிட்டியதே என்ற உண்மையில் எனக்கு வெகு ஆனந்தம்'' என்று முடிவில் பதில் அளித்த விமலா முன் ஹாலுக்குள் வந்தாள்.

''அப்பாடா! ஒரு வழியாகத் திரும்பி வந்தாயே உள்ளே சென்றவள் அப்படியே மறைந்து விட்டாயோ! என்று கவலைப்பட்டு விட்டேன் நான்'' எனப் பரிகாச மாகக் கேட்டான் சிவராமன் அவர்களைக் கண்டதும்.

''மன்னிக்க வேணும் பேச்சு சுவாரஸ்யத்தில் பொழுது போவது தெரியாமல் போய்விட்டது'' என்று கூறிவிட்டு வேகமாக உள்ளே திரும்பிச்சென்ற கீதா சிறிது நேரத்தில் தட்டுகளில் டிபன் காப்பி சகிதம் அங்கே வந்தாள். முதலில் கொஞ்சம் பிகு செய்துவிட்டு வற்புறுத்திக் கீதா உபசரித்ததின் பேரில் டிபனை அவசரமாக முடித்துக் கொண்டு அண்ணனும் தங்கையும் கிளம்பினார்கள்.

போய்விட்டு வருகிறேன், கீதா, கட்டாயம் நீ எங்கள் வீட்டிற்கு வரவேண்டும். வராவிட்டால் எனக்கு மிகவும் கோபம் வரும்'' என்று பரிகாசப் பயமுறுத்தலாகக் கூறிய விமலா விடை பெற்றுக் கொண்டாள்.

படபடவென்ற சத்தத்துடன் புழுதியைக் கிளப்பிக் கொண்டு புறப்பட்ட அந்தக் கார் கண்ணிலிருந்து மறையும் வரை நின்று வழிவிட்டு வந்த கீதா அவசரமாகப் பங்களாவின் பின்கட்டிற்குச் சென்றாள். பரபரப்பாக முகத்தை அலம்பிக்கொண்டு இரண்டே தாவலில் மாடிக்கு ஓடினாள், மின்னல் வேகத்தில் கூந்தலை வாரிப் பின்னித் தனது அலங்காரத்தை முடித்துக்கொண்டு அவள் கீழே வருவதற்குள் நாகராஜன் தொழிற்சாலையினின்று திரும்பி வந்து விட்டான.

கணவனுக்குக் காப்பி டிபனை எடுத்துத் தட்டில் வைத்துக் கொண்டு மாடிக்குத் திரும்பவும் வந்த கீதா அவற்றை மேஜைமீது வைத்துவிட்டுக் களைப்புடன் நாகராஜன் சாய்ந்து கொண்டிருந்த சோபாவின் கையின் மேல் வந்து உட்கார்ந்துகொண்டாள்.

''நீங்கள் வருவதற்குள் நான் தயாராக இருக்க வேண்டும் என்றுதான் ஆசைப்பட்டேன் முடியவில்லை.



எனது அலங்காரம் கொஞ்சம் இன்றைக்குத் தாமதமாக நடந்ததற்குக் காரணம் இல்லாமல் இல்லை'' என்று உற்சாகத்துடன் சொன்னாள்.

''காரணம் என்னவோ?'' என்று கேட்டான் நாக ராஜன்.

''என் சிநேகிதி விமலாவும் அவளது சகோதரனும் நமது வீட்டிற்கு வந்திருந்தார்கள் அவர்களை அனுப்பி வைக்க இத்தனை நாழியாயிற்று. விமலாவை அழைத்துக் கொண்டு போய் வீடு முழுவதும் காட்டி அக்காவுக்குக்கூட அறிமுகப்படுத்தினேன்'' என்று குதூகலத்துடன் கூறி னாள்.

''அப்படியா, சந்தோஷம்!'' என்று கூறிவிட்டு நாக ராஜன் கீதாவின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான்.

''எல்லாவற்றையும் பார்த்துவிட்டு என் சிநேகிதி மிகவும் பிரமித்து விட்டாள். என் அதிர்ஷ்டத்தைக் குறித்து என்னை மிகவும் பாராட்டினாள். எனக்கு அவள் அப்படிச் சொன்ன பொழுது உங்களைப்பற்றிய எண்ணந் தான் ஏற்பட்டது. எனக்கு இவ்வளவு செல்வத்தின் சுகத்தைக் கொடுத்து சந்தோஷமாக என் சிநேகிதர்களின் கண் முன்னால் கௌரமாக வைத்திருக்கும் உங்களை நினைத்துப் பெருமிதமடைந்தேன்'' என்று படபடப்பாக உணர்ச்சி வேகத்தில் பேசிய கீதா குனிந்து அவனது காதருகில், எல்லா நாட்களையும் விட உங்கள் மீது எனக்கு இன்று ரொம்ப அன்பு ஏற்படுகிறது'' என்று பச்சைக் குழந்தையைப்போல் கூறிவிட்டு வெட்கத்துடன் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

''உன் சிநேகிதி மெச்சிப் பேசினதும் உனது அன்பு இரட்டிப்பு மடங்காக ஆகிவிட்டதாக்கும்? அப்படியானால் உனது சிநேகிதி தினம் இங்கே வந்து போய்க் கொண்டிருக் கட்டும்;' என்று பரிகாசமாகக் கூறிய நாகராஜன் வாய் விட்டுச் சிரித்தான்.

# 26

விமலாவின் விஜயத்திற்குப் பின் ஒரு வாரம் சென்றது. அன்று பகல் வழக்கம் போல் நாகராஜன் தொழிற்சாலைக்குச் சென்ற பின தனது அலுவல்களை முடித்துக் கொண்டு வாசல் பக்கம் வந்தாள் கீதா. தொலைவிலே எங்கிருந்தோ படபடவென்ற சத்தம் அவளது காதுகளிலே விழுந்தது. 'விமலம் வருகிறாள் போலிருக்கின்றதே!' என்று தனக்குள்ளே முணுமுணுத்த கீதா வாசல் கதவைத் திறந்தாள். 'உஸ்' என்ற பேரிரைச்சலுடன் வந்து நின்ற காரினின்று அவசரமாக இறங்கினாள் விமலா. சிநேகிதியைக் கண்டதும், ''நல்ல பெண் நீ, என்னை ஏமாற்றிவிட்டாயல்லவா? புதன் கிழமை வருவதாகச் சொன்னவள்—அடுத்த புதன் கூட வந்துவிட்டது—வரவே இல்லையே? உடம்புக்கு ஏதாவது கோளாறோ என்று நேராகப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்று மிகவும் மனக்குறையுடன் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தாள்.

''உடம்புக்கு ஒண்ணுமில்லை. நன்றாகத்தான் இருக்கிறேன். புறப்பட்டு வரத்தான் ஒழியவில்லை. கோபித்துக் கொள்ளாதே, விமலா'' என்று சமாதானமாகக் கூறிய கீதா விமலாவின் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''இத்தனை ஆட்கள் வீட்டில் இருக்கும் பொழுது உனக்கு ஒழியவில்லை என்றால் நான் நம்புவேனா? உம்! நாங்கள் ஏழைகள். எங்கள் வீட்டிற்குச் செல்வச் சீமாட்டியான நீ வரத் தகுமோ?'' என்று ஏளனமாகக் கேட்டாள் விமலா.

சிநேகிதியின் மொழிகள் சுருக்கென்று தைத்தது கீதாவுக்கு. அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. நான் சொன்னால் நீ நம்பமாட்டாய் வீட்டை விட்டுக் கிளம்ப எனக்குப் பொழுதேயில்லை. பகல் ஒரு



மணிக்கு அவர் வெளியே சென்றால் ஐந்து மணிக்குத் திரும்பி வந்துவிடுவார். வெயில் வேளையில் எங்கே கிளம்புகிறது என்ற சோம்பலில் நான் வரவில்லை'' என்று கீதா கூறினாள்.

''உனக்காக வர மனமில்லா விட்டாலும் உன்னை அழைத்துக் கொண்டு போகும் உத்தேசத்துடன் நாங்கள் இன்று வந்திருக்கிறோம் என் சின்ன மாமியார் உன்னைப் பார்க்க வேணும் என்று ரொம்ப ஆசைப்படுகிறார் அதனால் எங்களுடன் புறப்படு!'' என்றாள் விமலா.

''அதெப்படி முடியும்? அவர் திரும்பி சீக்கிரம் வந்தாலும் வந்து விடுவார் இன்று. அது சமயம் நான் வீட்டில் இருக்க வேண்டாமா? மேலும் நான் அவரை ஒரு வார்த்தைக் கூடக் கேட்காமல் எப்படிப் புறப்படுகிறது?'' என்று மறுத்துக் கூறினாள் கீதா.

அதைக் கேட்ட விமலா கடகடவென்று சிரித்தாள். ''கீதா! நீயா இப்படிப் பேசுகிறாய்? எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது கேட்பதற்கு! சிநேகிதியின் வீட்டுக்குப் போய் வந்தேன் என்றால் அவர் என்ன சொல்லப் போகிறார்? உத்தரவில்லாமல் வெளிக் கிளம்பினால் என்ன தவறு? உனக்கு அத்தனை சுதந்திரம் கூட உனது கணவர் கொடுக்கவில்லையா என்ன? அத்தைப்பாட்டிகள் போல் பேசாதே! படித்திருந்தும் பெண்களில் சிலர் கல்யாணம் செய்து கொண்டதும் தங்கள துபடிப்பு, பண்பு எல்லாம் மறந்து, சுத்தக் கிராமாந்தர அம்மாமிகளாக மாறி விடுகிறார்கள் என்று நாம் இருவரும் பேசிச் சிரிப்போமே, ஞாபகமிருக்கிறதா? நீயும் அந்த அம்மாமிகளின் கோஷ்டியில் சேர்ந்து விட்டாயா என்ன?'' என்று பரிகாசமாகக் கேட்டாள்.

''அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அவரிடம் முதலிலேயே சொல்லியிருந்தால் வண்டியை இங்கே விட்டுப் போயிருப்பார். அதற்காகச் சொன்னேன்'' என்று மென்று விழுங்கினாள் கீதா. தப்பிக் கொள்ள வகை தெரியாது.

''உங்கள் வண்டி இல்லாவிட்டால் பரவாயில்லை! நாங்கள் உன்னை அழைத்துப் போகக் கார் கொண்டு

வந்திருக்கிறோம். கிளம்பு. கீதா! இன்று உன்னை விடப் போவதில்லை'' என்று விமலா பிடிவாதமாகக் கூறினாள்.

''என் கணவருக்காகக்கூட நான் கவலைப் படவில்லை. என் சிநேகிதி வீட்டிற்குப் போயிருந்தேன் என்றால் அவர் ஒன்றும் சொல்லமாட்டார். என் நாத்தனார் கர்நாடக மனுஷி—என்ன சொல்வாளோ என்று கவலையாக இருக்கிறது' என்று கீதா தட்டிக் கழிக்க முயற்சித்தாள்.

''உன் நாத்தனாரிடம் நானே சொல்லிச் சரிப்படுத்து கிறேன் இதெல்லாம் என்ன நொண்டிச் சாக்கு! கிளம்பு'' என்று உரிமையுடன் அதட்டியவிமலா கீதாவின் கையைப் பிடித்து வேகமாக அவளைப் பின் கட்டிற்கு அழைத்துச் சென்றாள்.

முற்றத்திலே உலர்ந்திருந்த துவரம் பருப்பைப் பெருக்கி வாரிக் குவித்துக் கொண்டிருந்த பாகிரதி, காலடி ஓசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

''மாமி, கீதாவை எங்கள் ஆத்திற்கு அழைத்து போக வந்திருக்கிறேன், கொஞ்சம் நீங்கள் உத்தரவு கொடுத்தால் நல்லது'' என்று கேட்டாள் விமலா மிகவும் துணிச்சலுடன். கீதாவின் கவலை தோய்ந்த முகத்தைக் குறிப்பாகக் கவனித்த பாகீரதி, ''நான் என்ன உத்தரவு கொடுப்பதற்கு? அவளுக்கு இஷ்டம் இருந்தால் அழைத்துப் போயேன். ராஜா வந்தால் எங்கே போயிருக் கிறாள் என்று கேட்டால்...'' என்று கூறி முடிப்பதற்குள் குறுக்கிட்ட விமலா, ''அதற்குள் திரும்பி வந்து விடுவாள். காரில் நாங்களே திருப்பிக் கொண்டு வந்து விட்டுப் போகிறோம் சரிதானே மாமி?'' என்றாள்.

''சீக்கிரம் திரும்பி வந்து விட்டால் எனக்குஒரு ஆக்ஷே பணையும் கிடையாது'' என்று புன்னகை செய்த பாகீரதி, கவலையுடன் தன் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்ற கீதாவின் பக்கம் திரும்பி, போய்விட்டு வாயேன், அம்மா, உன் சிநேகிதி ரொம்ப கேட்டுக் கொள்கிறாளே'' என்று மனமுகமாக உத்தரவு தந்தாள்.



அதைக் கேட்ட கீதா மிகவும் குதூகலத்துடன் மாடி யறைக்கு ஓடினாள். மிக விரைவில் நீல வர்ண ஜார்ஜெட் டில் தன்னை அலங்கரித்துக் கொண்டு, கீழே இறங்கி வந்தாள். பாகீரதியிடம் விடைபெற்றுக் கொண்டு விமலா வுடன் அந்தக் காரில் ஏறிக்கொண்டு கிளம்பினாள்.

சிவராமனின் கைகளில் அகப்பட்டுக்கொண்ட அந்தக் கார், தனது மூச்சைப் பிடித்துக்கொண்டு ஓடுவதுபோல் குண்டு குழிகளை அலட்சியமாகத் தாவிக் கொண்டு ஒரே வேகத்தில் ஓடியது. எதிர்பாராத சமயத்தில் எல்லாம் சிவராமன் காரை வேறு திக்குகளில் வேகமாகத் திருப்பி னான். அந்த ஒவ்வொரு சமயமும் கார் பூமியினின்று ஐந்தடி உயரம் எழும்பிவிட்டு 'ஜில்' என்று நாட்டியக் காரி குதிப்பது போன்று பூமி மீது ஒய்யாரமாகக் குதித் தது. 'இன்று உயிருடன் வீட்டுக்குத் திரும்பமாட்டோம் போலிருக்கிறது' என்று மனத்திலே எண்ணிக்கிலியடைந்த கீதா, கார் குதித்த ஒவ்வொரு தடவையும் நடுக்கத்துடன் விமலாவின் கரத்தைப் பிடித்துக் கொண்டாள்.

''என்ன குழந்தையைப் போல் இவ்வளவு பயப்படு கிறாயே! அண்ணா தினம் போகும் வேகத்தில் இன்று பாதி கூடப் போகவில்லையே!'' என்று சிரித்த விமலா, சிநேகிதியை இரக்கமாகப் பார்த்தாள் ''கீதாவிற்கு வேகமாகக் காரில் பிரயாணம் செய்து பழக்கமில்லை. அதனால்தான் பயப்படுகிறாள். இரண்டு நாள் பழகி விட்டால் பயம் தெளிந்துவிடும்'' என்று சமாதானம் சொன்ன சிவராமன், தனது சகோதரியின் பக்கம் திரும் பிப் பார்த்துக் கொண்டு காரைச் சடக்கென்று திருப்பி னான்.

கரகரவென்று பயங்கரமான சப்தம் எழுந்தது. அவ்வளவுதான். கார் எங்கேயோ மோதிக் கொண்டு விட்டது என்ற பயத்தில் கீதா கண்களை இறுக மூடிக் கொண்டாள். ''இறங்கு, என்ன யோசனை?'' என்று விமலா தோளைக் குலுக்கியதும்தான் கண்களைத் திறந்து பார்த்தாள். குறுகலான தெரு ஒன்றில், ஒரு சிறு ஓட்டு

வீட்டிற்கு முன்னால் கார் நிற்பதைக் கண்ட கீதா மெதுவாக வண்டியிலிருந்து இறங்கினாள்.

''இதுதான் எனது சிறிய மாமனார் வீடு. உங்களது பங்களாவைப் போலிருக்காது என்று முதலிலேயே எச்சரித்து விடுகிறேன்'' என்ற பீடிகையுடன் சிநேகிதியை வீட்டிற்குள் அழைத்துச் சென்றாள் விமலா.

வாயிலில் கார் வந்து நின்ற ஒரு விநாடிக்குள் அந்தத் தெருவில் உள்ள எல்லா வீட்டு வாசலிலும் ஒரு தலை தென்பட்டதைக் கீதா கவனிக்காமல் இல்லை. பொன்மேட்டு உட்புறத்தில் வசிக்கும் கிராம ஜனங்கள் பிறர் விஷயத்தில் தங்கள் தலையை இடுவதற்குத் தயங்காதவர்கள் என்பதற்கு அது ஒன்றே போதுமான சான்றாக அவளுக்குத் தோன்றியது.

''விழுங்கி விடுகிறாப் போல் பார்க்கிறார்கள் என்று தானே நினைக்கிறாய்? எனக்குக்கூட முதல் தடவை மிகவும் கஷ்டமாக இருந்தது. இப்போது பழகிவிட்டது. இவர்கள் இப்படி ஓடி வந்து எட்டிப் பார்ப்பதை நான் சட்டை செய்வதே கிடையாது!'' என்று சிரித்த விமலா, தன் தோழியை உள்ளே அழைத்துச் சென்றாள்.

கூடத்துத் தரைமீது ஒரு பாயை எடுத்துப் போட்டு, ''உட்கார், கீதா! உங்கள் பங்களாவைப் போல் இங்கே சோபாக்களையெல்லாம் எதிர்பார்க்காதே'' என்று கூறி உபசரித்தாள்.

''ஏன் அம்மா. காமிரா ரூமிலே இருக்கிற அந்த நாற்காலியை எடுத்துப் போடறதுதானே!'' என்று கூறிக்கொண்டு உள்ளேயிருந்து வந்தாள் விமலாவின் சிறிய மாமியார் ஜானகி.

''பரவாயில்லை'' என்று புன்னகை செய்த கீதா தரைமீது உட்கார்ந்து கொண்டாள். தனது சிறிய மாமியார், மாமனார் இருவருக்கும் கீதாவை அறிமுகப்படுத்திவிட்டு விமலா வாய் ஓயாது ஊர் விஷயங்களைப் பற்றிச் சளசளவென்று பேச ஆரம்பித்தாள்.



அன்று சாயங்காலம் தொழிற்சாலையிலிருந்து திரும்பி வந்த நாகராஜன் மாடி ஹாலுக்குச் சென்று சோர்வுடன் ஆசனமொன்றில் சாய்ந்து கொண்டான். வழக்கம் போல உபசரிக்க வரும் கீதா வராததைக் கண்டு வியப்பும் கவலையும் அடைந்தவனாக சங்கதி என்ன என்று பார்க்கும் நிமித்தம் கீழே இறங்கி வந்தான். அந்த சமயம் சமையலறையிலிருந்து டிபன் தட்டுடன் வெளிப்பட்ட பாகீரதி, ''அதுக்குள்ளேயே வந்துட்டியா ராஜா? நான் மாடிக்கு எடுத்துண்டு வரலாம்னு கிளம்பினேன். பால்காரன் ஏதோ வேணும்னு கேட்டான். அவனைக் கவனிச்சுட்டு வரத்துக்குள்ளே நாழியாச்சு!'' என்று மெல்லக் கூறினாள்.

''உனக்கேன் சிரமம் அக்கா? கீதா எங்கே?'' என்று விசாரித்தான் நாகராஜன்.

''கீதாவை அவள் சிநேகிதி தன் வீட்டுக்கு அழைச்சிண்டு போயிருக்கான். இன்னும் வரவில்லை. திரும்பி வரும் சமயம்தான். சீக்கிரமாக வந்துடுன்னு சொன்னேன்'' என்று பதிலளித்த பாகீரதி டிபன் தட்டைத் தம்பியின் முன்னால் வைத்தாள்.

''சிநேகிதி வீட்டுக்குப் போயிருக்காளா! என்னிடம் சொல்லவே இல்லையே? எப்படிப் போனாள்? நடந்தா!'' என்று கவலையுடன் வினவினான் நாகராஜன்.

''இல்லை அந்தப் பொண்ணுடைய அண்ணா கார் ஓட்டிக்கொண்டு வந்தான். அதிலே அழைச்சிண்டு போயிருக்கா. சீக்கிரம் திரும்பி வந்துடுவா'' என்று அழுந்திக் கூறிய பாகீரதி ''சாப்பிடு, ஆறிப்போயிடும்'' தம்பியை உபசரித்தாள்.

''எனக்குப் பசிக்கவில்லை, அக்கா'' என்று கூறி விட்டு எழுந்திருந்த நாகராஜன் காபியை ஒரே வாயாகக் குடித்துவிட்டு, ''ஏன் அக்கா! கீதா பொன்மேட்டு அக்கிரஹாரத்திற்கா போயிருக்காள்'' என்று மீண்டும் கேட்டான்.

"ஆமாம். தீக்ஷிதர் தெருவுக்குப் போயிருக்கிறாள்" என்று பதிலளித்த பாகீரதி உள்ளே திரும்பிப் போக முயற்சித்தாள்.

"ஏன் அக்கா, உனக்கு நமது ஊர் விஷயம் தெரியாதா எத்தனை வம்புக்காரர்கள் என்பது தெரிந்ததுதானே? அங்கேயெல்லாம் கீதா எதற்குப் போக வேண்டும்? வீட்டிற்குப் பெரியவள் என்று இருந்தும் நீ அவளை எப்படிப் போகவிட்டாய்?" என்று கொஞ்சம் கோபத்துடன் கேட்டான் நாகராஜன்.

"நான் எப்படி மறுத்துச் சொல்ல முடியும்? அதுவும் அந்தப் பெண் ரொம்ப வந்து கேட்கிற போது தடுக்க முடியவில்லை. கோவிச்சுக்காதேப்பா; இந்த ஒரு தடவை தான். இனிமேல் நான் அவளை எங்கேயும் அனுப்ப மாட்டேன்" என்று மெல்லிய குரலில் பதிலளித்துவிட்டுப் பாகிரதி உள்ளே சென்று விட்டாள்.

சகோதரியிடம் சிறிது மனத்தாங்கல் அடைந்த நாகராஜன் மாடி அறைக்குச் சென்று நாற்காலியில் சாய்ந்து கொண்டான். ஆபீஸ் காகிதங்களைக் கவனிக்கப் புத்தகத்தைத் திறந்தான். காரணமில்லாத ஒருவித கலக்கத்தினால் நிரம்பிய அவனது மனம்வேலையிலே லயிக்கமறுத்து விட்டது. மாடி முன் பக்கத்துத் திறந்த வெளியில் வந்து காற்றோட்டமான இடத்தில் உட்கார்ந்து கொண்டான் சூரியன் அஸ்தமித்து நாலா பக்கமும் இருள் வேகமாகக் கவிந்து கொள்வதைக் கவனித்தான். கீதா இன்னும் திரும்பி வந்த பாடில்லை.

ஹால் கடிகாரம் 'டண் டண்' என்று மணி ஏழடித்தது. அதைக்கேட்டதும் தன்னுணர்வு பெற்ற நாகராஜன் இருப்புக் கொள்ளாது எழுந்திருந்தான். வேகமாகக் கீழே இறங்கிப் பின் கட்டிற்குச் சென்றான். பெஞ்சி மீது உட்கார்ந்திருந்த பாகீரதி தம்பியைக் கண்டதும் எழுந்



திருந்தாள். "என்னப்பா வேணும்?" என்று கனிவுடன் கேட்டாள்.

"மணி ஏழாகப் போகிறது. நன்றாக இருட்டி விட்டது. கீதா ஏன் இன்னும் வரவில்லை, நான் மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு பார்த்துண்டு வரட்டுமா?" என்று கேட்டான் கவலை தாங்கமுடியாத நாகராஜன்.

கீதா ஏன் இன்னும் திரும்பி வரவில்லை என்று மனத்தில் வேதனைப்பட்டுக் கொண்டிருந்த பாகிரதி தனது உணர்ச்சியை வெளிப்படக் காட்டாது, "வந்து விடுவாள் ஏன் கவலைப்படுகிறாய்?" என்றாள், "இன்னும் வரவில்லையன்னா கவலைப்படாமல் என்ன செய்கிறது? சீக்கிரம் வந்துவிடணும் என்றுஒரு வார்த்தை நீ சொல்லியிருக்கக்கூடாதா; உனக்குத்தான் தெரியவில்லையென்றால் அவளுக்குப் புத்தி எங்கே போயிற்றாம்" என்று கோபத்துடன் மொழிந்த நாகராஜன் முன் கட்டின் பக்கம் விரைந்தான்.

விமலா பிடிவாதமாகப் போக விடை தர மறுத்ததினால் அதிக நேரமாகி விட்டதை உணர்ந்த கீதா கடைசியில் பிடிவாதமாக அவர்களிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினாள். "இருட்டி விட்டதே! அவர் வந்திருப்பாரே!" என்று அவள் கவலைப்பட்டதற்குத் தகுந்தாற் போல் சிவராமன் கொண்டு வந்த கார் கிளம்ப மறுத்து இடக்கு செய்ய ஆரம்பித்தது. "ஒரே நிமிஷம். இந்த ஆணியைக் கழட்டி அந்த இடத்தில் போட்டு விட்டால் கார் கிளம்பிடும்" என்று சமாதானம் கூறிய சிவராமன் காரை பழுது பார்க்க ஆரம்பித்தான், ஒருமணி நேரம் ஆகியும் கார்கிளம்ப ஒரேயடியாகமறுத்துவிட்டது.

"போதும் நாழியாயிற்று. என்னுடன் யாராவது வேலையாட்களை அனுப்பிவிடுங்கள். நான் போகிறேன்' என்று கீதா துடித்தாள். "யாரும் கிடையாதே. உன்னுடன் அனுப்ப? என்ன செய்வேன்?" என்று விமலா கையை விரித்தாள்.

"கவலைப்படாதீர்கள், நான் கீதாவைக் கொண்டு அவள் வீட்டில் விட்டு வருகிறேன்" என்று சிவராமன்முன் வந்தான், கீதாவுக்கு வேறுவழியொன்றும் புலப்படாகதனால்சரியென்று ஒத்துக்கொண்டு கிளம்பினாள்-ஊருக்கும் பங்களாவுக்குமுள்ள சில பர்லாங்கு தூரத்தைக் குறுக்கு வழிகளில் அவசரமாக ஓட்டமும்நடையுமாக நடந்த கீதா முடிவில் வீடு சேர்ந்தாள். வழி நெடுக அவளுக்கு இருந்த மனநிலையில் சிவராமனிடம் ஒரு வார்த்தைகூட பேசவே இல்லை அவனும் மௌனமாக கூட நடந்து வந்துகொண்டிருந்தான். நாகராஜன் மனைவியை அழைத்து வர வெளியே புறப்பட வாயிற்கதவைத் திறப்பதற்கும் கீதா அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது.

"அப்பாடா" என்று பெருமூச்சு விட்ட நாகராஜன் தோட்டத்தின் வெளியில் வீசியவிளக்கொளியில் திரும்பிப் போய்க் கொண்டிருந்த மனிதனைக் கண்டு ஸ்தம்பித்துப் போய் நின்றான், "அது யாரது?" என்று சட்டென மனைவியின் பக்கம் திரும்பிக் கேட்டான் அவன்.

"விமலாவின் அண்ணா" என்று சுருக்கமாகப் பதிலளித்த கீதா கணவனது முகத்தைப் பார்க்கக்கூடப் பயந்தவளாக அச்சத்துடன் மாடியறைக்கு வேகமாகச் சென்றாள்.

பின்னால் தொடர்ந்தாற்போல் வந்த நாகராஜன், அவள் பக்கத்து அறைக்குள் நுழைவதைக்கண்டு, "கீதா! இங்கே வா! பிறகு அங்கே போகலாம்" என்று கடுமையான குரலில் கூப்பிட்டான். கீதாவின் நெஞ்சம் துணுக்குற்றது கணவனது உத்தரவுப்படியே அவன் உட்கார்ந்திருந்த ஹாலுக்கு வந்து நின்றாள்.

பளிச்சென்று வீசிய விளக்கொளியில் மனைவியை ஏற இறங்கக் கவனித்தான். நாகராஜன் பூசினாற்போல் உடல் மீது படிந்து துவண்டு நின்ற ஜாக்கெட் புடைவையைக் கண்டதும் அவன் கோபத்துடன் உதட்டைக் கடித்துக்



கொண்டான். "ஆமாம்! ஏன் இத்தனை நாழி?" என்று கேட்டான் கோபத்தை அடக்கிக் கொண்டு.

"கார் ரிப்பேராகி விட்டதனால் நாழியாயிற்று" என்று கூறி முடிப்பதற்குள் கீதாவின் தொண்டையைத் துக்கம் பிடித்துக்கொண்டது.

"கார் ரிப்பேரானால் உடனே புறப்பட்டு விடுகிறது தானே? இருட்டுவதற்கு முன்னாடியே புறப்பட்டிருந்தால் கவலை இல்லையல்லவா?" என்று மறுபடியும் கேட்டான்.

"சீக்கிரம் ரிப்பேர் முடிந்துவிடும் என்று நான் நினைத்தது புத்திப் பிசகான காரியந்தான்" என்று மெல்லப் பதிலளித்த கீதா கண்ணில் பொங்கிய கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"உன் சிநேகிதி வீட்டில்கூட துணைக்கு வர வேறு யாருமில்லையா?" என்று விடாப்பிடியாகக் கேட்டான் நாகராஜன்.

கைதிக் கூண்டில் நிற்கும் குற்றவாளியைப் பார்த்துக் குறுக்குக் கேள்விகள் கேட்கும் வக்கீலைப் போன்று நாகராஜன் அவளுக்கு அது சமயம் தென்பட்டான்.

"வேலையாட்கள் ஒருவரும் இல்லை. சிவராமன் துணைக்கு வருவதாகச் சொன்னார். வேறு வழி இல்லாததனால் சரியென்று வந்தேன். சிவராமன் எனக்கு வேற்றுமனிதரா என்ன? எங்கள் ஊர்க்காரர் தானே? சிறு வயதிலேயிருந்து தெரிந்தவர் தான். கூடப் பிறந்த சகோதரர் போல்தான். அவர் என்னை இங்கே கொண்டு வந்து விடத் துணைக்கு வந்தார். இதை ஏன் வித்யாசமாக நினைத்துக் கொள்ள வேண்டும்?" என்று கோபத்துடன் பதிலுக்குக் கேட்ட கீதா வேகமாகத் தனது அறைக்குள் சென்று விட்டாள்.

வெறுப்புடன் ஆடையைக் களைந்துவிட்டு வேறு உடுத்திக் கொண்டு படுக்கையின் மீது சாய்ந்து கொண்ட கீதா கணவன் மீது ஏற்பட்ட கோபம் தாங்காது துக்கத்

துடன் பொருமிக் கொண்டிருந்தாள். சந்தடி செய்யாது உள்ளே நுழைந்த நாகராஜன் கதவைத் தாழிட்டு விட்டு மனைவியின் பக்கம் திரும்பினான். சோபாவின் மீது கிடந்த நீல நிற ஜார்ஜெட் புடைவை அவனது கண்களில் பட்டது.

''இத்தனை மெல்லிய புடைவையை உடுத்திக் கொண்டு வேற்று மனிதனுடன் நீ தனித்து வந்ததைப் பற்றி இந்த ஊரில் உள்ளவர்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா?'' என்று கடுமையுடன் கேட்ட நாகராஜன், அந்தப் புடைவையை வெறுப்புடன் கையில் எடுத்தான்.

''உங்களுக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டு போங்கள்? பிறத்தியார் தலையில் ஏன் வீண் பழி போட வேண்டும்?'' என்று பதிலுக்கு ஆத்திரத்துடன் கேட்ட கீதா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஆமாம்! எனக்குப் பிடிக்கவில்லை, நீ இந்த ஆடையுடன் அவர்கள் வீட்டுக்குச் சென்றதும், பிறகு அவனுடன் திரும்பி வந்ததும் பிடிக்கவில்லை. ஏன் இந்த கஷ்டம்? இது இருப்பதினால்தானே வீண்மனஸ்தாபம்?'' என்று பல்லைக் கடித்த நாகராஜன் அந்த மெல்லிய புடைவையை இரண்டு துண்டாகப் படக்கென்று கிழித்து அறையின் இரு மூலைகளிலும் வெறுப்புடன் விட்டெறிந்து விட்டுக் கதவைத் திறந்து கொண்டு வேகமாக வெளியே சென்றான்.

கணவனது இந்தச் செய்கையைக் கண்டு கீதா திடுக்கிட்டுப் படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்தாள். நாகராஜன் இத்தனை கோபமடைவதற்குக் காரணம்? பொறாமைதான்! சந்தேகமென்ன?

கீதாவின் கண்களில் பெருகிய நீர் சட்டென்று நின்றது ஆச்சர்யத்தினால் கண்கள் அகல மலர்ந்தன. இருதயம் விவரிக்க முடியாது ஒருவித உணர்ச்சியால் வேகமாக அடித்துக் கொண்டது. கணவனுக்குக் கட்டுப்படுத்த முடியாத பொறாமை ஏற்பட்டால் அதன் அர்த்தம் அவன் மனைவிமீது மட்டற்ற அன்பு வைத்திருக்கிறான் என்பது



தான் என்று யாரோ எழுதியிருந்ததை அவள் படித்திருந்தாள். அப்படியானால் நாகராஜனுக்குக் கீதாவின் மீது அத்தனை அன்பா! முகத்தைத் துடைத்துக் கொண்ட கீதா நாகராஜனது கோபத்தைக் குறித்து மனத்திற்குள் ஓர் விதத்தில் திருப்தியே அடைந்தாள் எனினும், அவள்மனம் முழுவதும் சமாதானமடையவில்லையாதலால் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

அன்று இரவு போஜனத்திற்குப் பின் கீதா மாடியின் திறந்தவெளியில் வந்து உட்கார்ந்துகொண்டு தோட்டத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். ''கீதா இங்கேயா இருக்கிறாய்!'' என்று சாந்தமான குரலில் வினவிய நாகராஜன் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டான். கீதா வேண்டுமென்றே பதிலளிக்காது மௌனமாக இருந்தாள்.

''என்னையும் அறியாது ஏற்பட்ட ஒருவித ஆத்திரத்தில நான் மிகவும் மூர்க்கனாக நடந்து கொண்டேன், ஆசைப்பட்டு நீ வாங்கிய அந்தப் புடைவையை நான் கிழித்தது பிசகு என்று இப்பொழுதுதான் எனக்குத் தோன்றுகிறது. என் செய்கைக்கு நான்வருத்தப்படுகிறேன், கீதா இதோ பார், என்னை?'' என்று மிகவும் இரக்கமாக வேண்டிக் கொண்ட நாகராஜன் அவளது முகவாயை நிமிர்த்தினான்.

பதிலளிக்காது கீதா அவனது கரத்தை உதறித் தள்ளினாள்.

''உன் மீது எனக்குக் கோபமேயில்லை. சிவராமன்மீது ஏற்பட்ட ஒருவிதப்பொறாமை உணர்ச்சியை என்னால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. கீதா என்னை நீ மன்னித்து விடு'' என்று மிகவும் கெஞ்சிக் கேட்டான் நாகராஜன்.

''பொறாமை உணர்ச்சி உங்கள் ஒருவருக்குத்தான் உண்டு என்று நினைக்கிறீர்களா?'' என்று கீதா சட்டென்று கேட்டாள்.

35849

''நீ சொல்வது விளங்கவில்லையே?'' என்று கேட்டான் பதிலுக்கு அவன்.

''உங்களுக்கு விளங்காதுதான். இந்த உணர்ச்சியில் நான் தினம் வதை செய்யப்படுவது உங்களுக்கு எப்படித் தெரியும்? ஒரு பாவமும் செய்யாத என் ம்து ஒரு நிமிஷத்தில் உங்கள் மனம் சந்தேகத்தில் கஷ்டப்பட்டது அப்படியென்றால் தினமும் என கண் முன்னே பொன்னியுடன் கொஞ்சிக் குலாவும் உங்களைப் பார்த்து என் மனம் எத்தலன கஷ்டப்படும் என்று நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா?'' என்று கேட்ட சீதா கோபத்துடன் எழுந்திருந்தாள்.

''என்னைப் பூரணமாக நம்புவதாகச் சொன்னாயே! அப்படியானால் அதெல்லாம் பொய்யா?'' என்று கேட்டான் நாகராஜன் பொறுமையை இழந்து.

''உங்களை நம்புவதாகச் சொன்னாலாவது சண்டைசச்சரவின்றி இருக்கலாம் என்றுதான் பொய் சொன்னேன் பொறுமையாக நீங்கள் செய்வதையெல்லாம் சகித்துக் கொண்டிருந்தாலாவது வழி பிறக்காதா என்று எண்ணினேன், ஆனால் பொறுமையுள்ளவர்களுக்குக் காலமில்லை என்று தெரிந்துவிட்டது'' என்று ஆத்திரத்துடன் பதிலளித்த சீதா பொங்கி எழுந்த விம்மலைப் பல்லைக்கடித்துக் கொண்டு அடக்கிக் கொண்டாள்.

''அப்படியானால் உனது பொறுமை மிகவும் மெச்சப்படவேண்டியதுதான்!'' என்று வெறுப்புடன் பதிலளித்த நாகராஜன் அங்கிருந்து சென்றான்.

## 27

கடைசியாகக் கனவனுக்கும் மனைவிக்கும் ஏற்பட்ட அந்த மனஸ்தாபத்திற்குப் பின் வழக்கத்திற்கு மாறாக நாகராஜன் சீதாவிடம் மிகவும் கோபமுள்ளவனாகக் காணப்பட்டான்.



சகோதரி எதிரில் மட்டும் கணவன் தன்னிடம் சம்பாஷிப்பதையும் தனியாக இருக்கையில் முகத்தைக்கூட நிமிர்ந்து பார்க்காதிருப்பதையும் அவள் கவனிக்கத் தவறவில்லை, அவன் தன்னிடம் மிகவும் கோபமாக இருக்கிறான் என்பதை அவள் எளிதில் புரிந்து கொண்டு விட்டாள்.

நாகராஜன் தன்னிடம் இத்தனை கடுமையாகக் கோபம் கொண்டிருப்பது எதற்காக என்றும் அவளுக்குத் தெரியும். மனைவி அதிக நேரம் சிநேகிதியின் வீட்டில் தங்கியிருப்பதைப் பற்றியோ, அந்நிய மனிதனுடன் தனிவழி நடந்து அகால வேளையில் வந்தது பற்றியோ நாகராஜனுக்குக் கோபம் ஏற்படவில்லை. பொன்னியைப் பற்றி மறுபடியும் சீதா பேச ஆரம்பித்ததும்தான் அவனுக்கு அத்தனை கோபம் ஏற்பட்டது.

முதல் இரண்டு நாட்கள் 'அவளுக்கு கணவன் மீது இருந்த சினத்தில் அவனது கோபம் ஒருபாரமாகவே தென்படவில்லை. ஆனால் நாட்கள் ஒன்று இரண்டு என்று வேகமாகச் சென்று ஒரு வாரத்திற்கு மேலாகியும் நிலைமையில் அபிவிருத்தி ஒன்றுமில்லாதிருப்பதைக் கண்டதும் அவள் மனம் கலங்க ஆரம்பித்தது.

''சே! என்ன தவறான காரியம் செய்து விட்டோம்? கணவனுக்கு அந்தப் பெண்மீது உள்ள பற்றுதலைத் தெரிந்திருந்தும் ஆத்திரத்தில் மனத்திலே அடக்கிவைத்துக் கொள்ள வேண்டிய விஷயத்தை வெளிக்கொட்டி விட்டோமே இத்தனை நாட்கள் பொறுமையாக இருந்து எல்லாவற்றையும் சகித்துக் கொண்டதுதான் மிச்சமாயிற்று—என்று எண்ணி உள்ளம் வாடினாள் அவள். இப்படியே விட்டுவிட்டால் நிலைமை இன்னும் விபரீதமாகிவிடுமோ என்ற ஒரு பயம் ஏற்பட்டு அவளது உள்ளத்தை உலுக்கியது.

பாகீரதியிடம் விஷயத்தை எடுத்துச் சொல்லி உதவியை நாடுவோம் என்றாலோ, சாத்யப்படாத காரியமாக ?இருந்தது. நேரே கணவனிடம் தானே வலியச் சென்று பேசி சமாதானம்; செய்து கொள்வோம்

என்றாலோ, மிகவும் கஷ்டமான செய்கையாகத் தோன்றியது. என்ன செய்வது என்று குடும்பிய அவளுக்கு ஒன்றே ஒன்றுதான் சுலபத்தில் செய்ய முடிந்தது. யாரும் பார்க்காத சமயங்களில் மனம் ஆறும் மட்டும் அழுது தீர்ப்பது என்ற வேலை.

அன்று இரவு போஜனத்திற்குப் பின்பு ஆபிஸ்காகிதங்களைக் கவனிக்கும் நிமித்தம் மாடி ஹாலுக்குள் சென்ற நாகராஜன் பிரோவின் சாவியைக் கீழே வைத்து வந்து விட்டதை உணர்ந்தான். மாடியிலிருந்தபடியே உரத்த குரலில் சகோதரியைக் கூப்பிட்டான்.

''அக்கா, சாவியைக் கீழே வைத்துவிட்டு மறந்து விட்டேன். கொஞ்சம் அதைக் கொண்டு வாயேன்'' என்றான் அங்கிருந்தபடியே.

சமையற்கட்டில் கை வேலையாக இருந்த கீதாவின் காதுகளில் அவன் சொன்னது கணீரென்று கேட்டது. கேட்டும் கேட்காதது போல் அவள் அசட்டையாக இருந்தாள்.

சாப்பிடுமிடத்தில் தரையில் கிடந்த சாவியைத் தேடி எடுத்துக் கொண்டு வந்த பாகீரதி கீதாவிடம் அதைக் கொடுத்தாள், ''சாவி வேணுமாம் ராஜாவுக்கு! கொண்டு போய்க் கொடு'' என்றாள் அவள்.

''நான் கைவேலையாக இருக்கிறேனே, அக்கா! நீங்கள் இப்ப மாடிப்பக்கம் போக வேணுமே அப்படியே சாவியையும் அவர் கிட்ட கொடுத்து விடுங்கள்'' என்று பிடிவாதமாக கீதா மறுத்தாள்.

''நான் இந்த வேலைகளையெல்லாம் பார்த்துக்கிறேன்' நீ கையை அலம்பிட்டுப் போய்ச் சாவியை அவனிடம் கொடுத்துட்டு வா'' என்று பாகீரதி என்றுமில்லாத அதட்டலோடு உத்தரவிட்டாள்,

அதற்குமேல் விவாதிக்கக் கீதாவிற்குப் பிடிக்கவில்லை அவசரமாகக் கைகளைச் சுத்தம் செய்துகொண்டு மாடிப் பக்கம் போகத் திரும்பினாள்.



இரண்டு பேரும் பிடிவாதமாக இருப்பதனால்தான் விளையாட்டுக்காக ஆரம்பிக்கிற சண்டை விபரீதமாகப் போயிடறது புருஷனுக்குத்தான் புத்தியில்லையென்றால் நமக்குக்கூட இல்லாமல் போகணுமா?'' என்று பாகீரதி புதிர் போடுவது போல் பேசியதைக் கேட்ட கீதாவிற்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. நாத்தனாருக்குத் தங்களுடைய மனஸ்தாபம் எப்படியோ தெரிந்து விட்டது என்பதை நினைக்கவே அவளுக்கு விந்தையாக இருந்தது.

''உங்க தம்பிக்கு என் மேல் கோபம், அக்கா. ஒரு வாரமாகிறது, அவர் என்னிடம் நேரடியாகப் பேசி'' என்று கூறிய கீதா அதற்கு மேல் சொல்ல முடியாது துக்கம் தொண்டையை அடைக்க நிறுத்தினாள் கண்களில் பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நாத்தனார் தன்னைக் கூர்ந்து பார்ப்பதை விரும்பாதவள் போல் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

''இந்த ராஜா இப்படி நடந்துப்பான்னு நான் சொப்பனத்திலே கூட நினைக்கவில்லை. எதுக்காகக் கோபமாம்?'' என்று வினவினாள் பாகீரதி.

'எனக்கு ஒண்ணும் புரியலை, அக்கா, அடிக்கடி கோவிச்சுக்கிறார் உங்க தம்பி, மொத்தத்தில் எனக்கு ஒண்ணுமே பிடிக்கவில்லை'' என்று கூறிவிட்டுப் பேச முடியாது புடைவைத் தலைப்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் கீதா.

அவள் கண்ணீர் விட்டு அழுவதைக் காண பாகீரதியம்மாளுக்குச் சகிக்கவேயில்லை. அருகில் நெருங்கி, ''இதோ பார், அம்மா கீதா! அசடாட்டமா அழக்கூடாது. படிச்ச பெண் உனக்கு நான் என்ன சொல்ல முடியும்? ஆனா ஒண்ணே ஒண்ணு சொல்றேன் கேள், அவன் கோவிச்சுண்டு இருந்தா நீயும் பிடிவாதமாக இருக்கக் கூடாது. வலுவிலே போய்ப் பேசி சட்டுனு சமாதானம் செய்து கொள்ளணும் புருஷாளுக்குப் பொறுமை கிடையாது. பொம்மனாட்டிகளும் அப்படியே இருந்தா சாத்தியப்படுமா அம்மா? கண்ணைத் துடைச்சுக்கோ! ஒண்

னுமே நடக்காதது போல நீ பாட்டிலே சகஜமா அவனோட பேசு. எல்லாம் சரியாகிவிடும்'' என்று உபதேசித்தாள்.

''அக்கா! எத்தனை நாழியா நான் காத்துண்டு இருக்கிறது?'' என்று எரிச்சலோடு கூப்பிட்டான் நாகராஜன் மறுபடியும்.

''கீதா சாவியை எடுத்துண்டு வரா!'' என்று பாகிரதி பதிலளித்து விட்டு, தம்பி மனைவியைப் பார்த்து ஒரு புன்னகை செய்துவிட்டு. சமையற்கட்டுக் காரியங்களைக் கவனிக்கச் சென்றாள்.

மனைவி கொடுத்த சாவிக் கொத்தை வாங்கிக் கொண்ட நாகராஜன் பதிலே பேசாது பீரோவைத் திறந்து ஆபீஸ் காகிதக் கட்டுகளை எடுத்தான். மேஜையருகில் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு கட்டையும் மிகவும் கவனத்துடன் படிக்க ஆரம்பித்தான் சற்றுத் தூரத்திலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு புத்தகமொன்றைப் படிக்கும் பாவனையிலிருந்த கீதா கடைக் கண்ணால் தனது கணவனைக் கவனித்துக் கொண்டிருந்தாள். படபடப்பாக ஒவ்வொரு புத்தகத்தையும் புரட்டுவதும் எதையோ தேடுகிறவன் போல இங்கு மங்கும் பார்ப்பதையும் கவனித்த அவளுக்கு அவன் மனம் வேலையிலேயே லயிக்கவில்லை ஏதோ சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறது என்ற விஷயம் எளிதில் புரிந்து விட்டது.

கடந்த ஒரு வாரமாக அவன் அனுசரித்ததைப் போன்று கணவன் தன்னுடன் பேசாவிடில் அவ்விடத்தை விட்டு எழுந்து போக கீதா இன்று இஷ்டப்படவில்லை. தன் பக்கம் அவன் திரும்பினால் ஏதாவது பேச்சுக் கொடுத்து சமாதானம் செய்து கொள்வது என்ற உறுதியில் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமையுடன் அவள் உட்கார்ந்திருந்தாள்.



காகிதத்தைப் புரட்டும் பொழுது ஏற்படும் சலசலப்பு சப்தத்தைத் தவிர அறையில் நிசப்தம் நிலவியிருந்தது. வெகு தூரத்திலிருந்த கோவில் மணி டாண் டாண் என்று ஒலித்ததைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டே போனாள். இரவு மணி பதினொன்றாகி விட்டதென்பதை அது அறிவுறுத்தியது.

நாத்தனார் சொல்படி கீதா சமரஸம் செய்து கொள்ள எதிர் நோக்கி அங்கு வந்து உட்கார்ந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாகியும் நாகராஜன் வேண்டுமென்றே அவள் இருக்கும் பக்கம்கூடத் திரும்பிப் பார்க்காமல் உட்கார்ந்திருந்தான்.

கல் மனம் படைத்தவனாக இடித்தபுளி மாதிரிச் சற்றுத் தூரத்திலிருக்கும் மனைவியை லக்ஷியம் செய்யாத அவன் மீது அவளுக்குக் கோபமும் ஆத்திரமும் வந்தது. இரக்கமற்ற அவனது சுபாவத்தை நினைத்து அழுகையும் கூட வந்தது.

சட்டென்று இடத்தை விட்டு எழுந்திருந்தான் அவன். மேஜை மீது தாறுமாறாகக் கிடந்த காகிதங்களை ஒரே விநாடியில் அடுக்கிக் கட்டி பீரோவினுள் வைத்ததும் பூட்டி விட்டுக் கீதாவின் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காது படுக்கையறைக்குள் சென்று விட்டான்.

நாகராஜன் செய்கை கீதாவின் மனத்தை மிகவும் நோகச் செய்தது. எத்தனைக் கோபமிருந்தால் அவன் அப்படி நடந்து கொள்வான் எனக் கணக்கிட்ட அவள் மனம் வேதனையில் தத்தளித்தது.

அதற்கு மேல் அங்கே உட்கார்ந்து கொண்டு வேதனையில் பொழுதைக் கழிக்க அவளுக்கு விருப்பமில்லை. 'சே! வீண் அசட்டுக் கர்வம் எதற்கு? செய்ததெல்லாம் தப்பு' என்று தனக்குள் தீர்மானித்த அவள் தனது துக்கத்தை அடக்கிக் கொண்டு கணவனைப் பின் தொடர்ந்து அந்த அறைக்குள் சென்றாள்.

அறையில் நிலவியிருந்த அந்தகாரத்தைப் போக்கும் நிமித்தம் விளக்கை ஏற்றினாள் அவள். சுவரின் பக்கம் திரும்பிய வண்ணம் நாகராஜன் கட்டிலின் மீது படுத்திருந்தான், கட்டிலின் ஓரத்தின் மேல் வந்து உட்கார்ந்து கொண்ட அவளுக்கு மூச்சு விடக்கூட பயமாக இருந்தது. எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று அவள் முடிவு செய்வதற்குள் படுக்கையினின்று எழுந்திருந்த நாகராஜன் விளக்கை அணைக்க கையைத் தூக்கினான்.

"நான்தான் ஏற்றினேன், அணைக்க வேண்டாம். எனக்கு உங்களுடன் கொஞ்சம் பேசவேண்டும்" என்று படபடப்பாக கீதா மொழிந்ததைக்கேட்டதும் மறுபடியும் படுக்கை மீது வந்து உட்கார்ந்து கொண்டான் அவன்.

அவன் பதிலையே எதிர்பார்க்காது கீதா பேசினாள்: "ஆமாம்! நான் என்ன பிசகு செய்து விட்டேன்? ஏன் என்னிடம் உங்களுக்கு இத்தனை கோபம்!" என்று துக்கத்துடன் திணறியபடியே கேட்டாள்.

நாகராஜன் பதிலளிக்காது புருவத்தை உயர்த்தி அவளை நிமிர்ந்து பார்த்தான். "ஏதாவது பிசகு செய்திருந்தால் என்னை மன்னிக்கக் கூடாதா? இப்படி நீங்கள் பாராமுகமாக நடந்து கொள்வது என் மனத்தை ரொம்பவும் நோகச் செய்கிறது. நான் அசட்டுப் பெண். எனக்கு அளிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்கள் இன்னொருத்திக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் அதை எத்தனையோ பயன்படுத்திக் கொண்டிருப்பாள், நான் புத்தியில்லாதவளாக இருக்கிறேனே! நீங்களாவது எனக்கு அவ்வப்போது தவறுகளை எடுத்துக் காட்டித் திருத்த முயற்சிக்கக் கூடாதா? நமக்கு எல்லாவித சௌகர்யமும் கடவுள் கிருபையால் இருக்கின்றன. இருந்தும் ஏனோ சந்தோஷமாக வாழக் கொடுத்து வைக்கவில்லை? ஏன் பேசமாட்டேன் என்கிறீர்கள்?" என்று கெஞ்சிக் கேட்ட கீதா அவனது கரங்களைக் கைகளில் எடுத்துக் கொண்டாள்.



"உன் மேல் எனக்குக் கோபம் ஒன்றுமில்லை. என் மனத்திலே ஏற்பட்ட அதிர்ச்சியைச் சமாளிக்கத்தான் இந்த மௌன விரதம் கைக் கொண்டிருக்கிறேன்" என்று வெறுப்பாகப் பதிலளித்த நாகராஜன் தனது கரங்களை அவளது பிடியினின்று எடுத்துக் கொண்டான்.

"உங்கள் மனத்திற்கு நான் எந்த விதத்தில் அதிர்ச்சியைக் கொடுத்தேன் என்பதையாவது சொல்லக் கூடாதா?" என்று பிடிவாதமாகக் கேட்ட கீதா கண்ணீர் உகுத்தாள்.

"உஸ்! இதென்ன தலைவலி! எதற்காக இத்தக் கண்ணீர்? ஒன்று சொல்கிறேன். கீதா! நீ இந்த அழுகின்ற வழக்கத்தைக் கொஞ்சம் விட்டு விடுவாயானால் எனக்கு மிகவும் சௌகரியமாயிருக்கும். சிறு விஷயங்களுக்கெல்லாம் கண்ணீர் விடுகிறவர்களை எனக்குப் பிடிக்காது!" என்று வறட்சியான குரலில் பதிலளித்த நாகராஜன் இடத்தை விட்டு எழுந்திருந்தான்.

"உங்களுக்கு எனது கண்ணீர் சிறு விஷயமாகத் தென்படலாம். ஆனால் எனக்கு அது பெரிய விஷயத்தின் விளைவாகத் தோன்றுகிறது, நீங்கள் இன்றைக்குக்கோபத்தின் காரணத்தைச் சொல்லாமல் போனால் நான் விடப் போகிறதில்லை. இத்தனை நாள் அசட்டையாக இருந்து வீணாகக் காலத்தைப்போக்கி விட்டேன்! உங்களுக்கு என் மீது இரக்கமோ அன்போ இல்லாதிருக்கலாம். என் பேதை மனம் உங்களைப் பார்க்கா விட்டாலோ அல்லது எங்களிடம் பேசாதிருந்தாலோ..." என்று கூறி முடிக்காது விம்மியழ ஆரம்பித்தாள்.

"கீதா! போதும்! அழுவதை நிறுத்து! மேலும் தொடர்ந்தாற்போல் நீ அழுவதாக இருந்தால் நான் இங்கிருந்து போக நேரிடும்" என்று கடுமையான குரலில் பதிலளித்த நாகராஜன் ஜன்னல் அருகில் போய் நின்று கொண்டான்.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு விம்மல்களை அடக்கிக் கொண்ட கீதா அவன் பக்கம் திரும்பி இரக்கமாகப் பார்த்தாள்.

''உனது அசட்டுச் செய்கைகளுக்காகவோ, வீண் பிடிவாதங்களுக்காகவோ உன்மீது நான் கோபங் கொள்ளவில்லை. மனைவி என்றால் எப்படிப்பட்டவளாக இருக்க வேண்டும் என்று நான் எதிர்பார்த்த லக்ஷிய ஸ்தானத்திலிருந்து நீ இறங்கி விட்டாய். அது எனக்குப் பெரிய அதிர்ச்சியாக இருக்கிறது. புரிந்ததா?'' என்றான் நிதானமாக அவன்.

கீதா விஷயம் ஒன்றும் விளங்காதவளாக அவனைப் பார்த்துப் பரக்க விழித்தாள். ''உன்னிடம் நான் ஒரு விஷயத்தையும் மறைத்து வைத்ததில்லை என் அன்பில் கொஞ்சமும் களங்கமே கிடையாது. உனக்குத் தெரிய வேண்டாத விஷயங்களில் தலையிட்டுக் கொண்டு நீ வீண் சந்தேகத்தில் உழலுகிறாய் என்று நான் அறிந்திருந்தும் நான் உன்மீது கோபமே கொள்ளவில்லை. அதற்குப்பதில் உனது அறியாமைக்காக நான் வருந்தினேன். ஆனால் நீ என்னிடம் கடந்த மூன்று மாதங்களாக ஒரு பெரும் பொய்யைச் சொல்லிக் கொண்டு வந்தாய். அதை நினைக்கையிலே என் மனம் மிகவும் கஷ்டப்படுகிறது'' என்று முடித்தான்.

''பொய்யா! என்ன பொய்?'' என்று பிரமிப்புடன் வினவினாள் கீதா. ''ஆமாம் பெரும் பொய்தான். நான் உனக்குத் துரோகம் செய்ய மாட்டேன் என்பதை நீ நம்புவதாக ஒருநாள் சொன்னாயே, ஞாபகமிருக்கிறதா? அது வெறும் பொய் என்பது உன் வாயாலேயே ஒப்புக் கொண்டு விட்டாய். என்னைத் துரோகி என்றோ, காமாதுரன் என்றோ... நீ வாயார வைத்திருந்தால் கூட என் மனம் அதிர்ச்சியடையாது. மூன்று மாதகாலமாக என் மீதிருந்த சந்தேகத்தை உள்ளே அமுக்கி வைத்துக் கொண்டு என்னை நம்புவதாகச் சொல்லி நடத்திய அந்த



நடிப்பை நினைக்கையில் எனக்கு ஏற்படும் அதிர்ச்சியை விவரிக்கவே முடியவில்லை. இப்படிப் பட்டவளை எப்படி நம்புவது என்றுகூட ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. எத்தனை குற்றம் செய்தாலும் நான் பொறுத்துக் கொள்வேன். பொய் சொல்கிறவர்களைக் கட்டோடு நான் வெறுக்கிறேன்'' என்று பல்லைக் கடித்தான் நாகராஜன் கோபத்துடன்.

கீதாவின் நெஞ்சு பயத்தில் காய்ந்து உலர்ந்து போயிற்று. ''தெரியாமல் ஏதோ பேசிவிட்டேன். மன்னிக்க மாட்டீர்களா?'' என்று கெஞ்சும் குரலில் குழைவாகக் கேட்டாள்

நாகராஜனின் முகத்தில்படிந்திருந்த கடுமைக் குறிகள் கொஞ்சம் மறைந்தன. ''கீதா, போதும்! இத்துடன் இந்தப் பேச்சை நிறுத்திக் கொள்வோம் எனக்குத் தூக்கம் வருகிறது'' என்று கூறிவிட்டு விளக்கை அணைத்தான் அவன்

கீதா மன்னிப்பை வேண்டிக் கொண்டபின் நாகராஜனின் நடத்தையிலும் கொஞ்சம் மாறுதல்கள் ஏற்பட்டன ஆனால் அவன் ஒரேயடியாக பழைய நாகராஜனாக மாறவில்லை. ஓய்வு நேரத்தில் சதா வேடிக்கையாகவும் பரிகாசமாகவும் பேசி மனைவியையும் சகோதரியையும் மகிழ்விக்கும் வழக்கத்தை அடியுடன் அவன் கைவிட்டுவிட்டான் விடுமுறை நாட்களை மனைவியுடன் உல்லாசமாக வெளியில் கழிக்க ஆசைப்படும் அவன் அத்தினங்களை வீட்டிலிருந்து ஆபீஸ் விவகாரங்களைக் கவனிப்பதில் கழித்தான்.

கீதாவிடம் அவன் முன் போலவே சகஜமாகத்தான் பழகி வந்தான். ஆனால் அவனது பேச்சுக்கள், நடத்தைகள் யாவும் மாறுபட்டவையாக அவளுக்குத் தென்பட்டன தன் மனத்தைப் புண்படுத்தக் கூடாது என்ற காரணத்திற்காகவும் சகோதரிக்கு அநாவசியமான மனக் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடாது என்ற கொள்கைக்காகவும் அவன் மிகவும் சிரமப்பட்டு பழைய நாகராஜனாக

இருக்க முயற்சித்தான் என்பதை அவள் அவனுடைய ஒவ்வொரு செய்கையிலிருந்தும் உணர்ந்து கொண்டாள்.

நாகராஜன் அன்புமிக்க கணவன்தான், எத்தனைக்கெத்தனை அன்புடன் நடந்து கொள்கிறானோ அதேயளவில் வெறுப்புஏற்படும்காலத்தில் அவனால் வாழ்க்கையின் மீது விரக்தியடைந்தவன் போலும் நடந்து கொள்ளத் தெரியும் என்ற உண்மையை அனுபவத்தில் முதல் முதலாக கீதா புரிந்து கொண்டாள் என்று சொல்ல வேண்டும்.

இத்தனை அன்பான கணவனின் அதிருப்தியை ஒரு சிறு மனஸ்தாபத்தினால் தேடிக் கொண்டு விட்டோமே, இனி அவரது பூரண அன்பை எப்படித்திரும்ப அடையப் போகிறோம் என்ற ஏக்கத்தில் அவள் மனம் ஒடிந்து விட்டது.

ஒரே ஒரு களத்தைத்தவிர அவர்கள் இருவரிடையே நிலவியிருந்த அன்பானது மிகவும் பரிசுத்தமானதாக கீதாவுக்குத் தோன்றியது. அந்தத் தூய அன்பை மேலே தளிர்த்து வளர விடாது தனது அவசர புத்தியினால் அவள் கொன்று விட்டாள்.

எத்தனை அருகாமையில் நாகராஜன் இருந்தாலும் அவனுக்கும் தனக்கும் இடையே ஒரு சுவர் மெல்ல எழும்பிக் கொண்டு போவதை அவள் அறிந்தாள்இரண்டு அன்பு உள்ளங்களைக் குரூரமாகப் பிரித்து வைக்க எழும்பிக் கொண்டிருக்கும் அந்த அறியாமை என்னும் சுவரைத் தகர்த்து அவனது உள்ளத்துடன் ஒன்றுபட அவள் மனம் தவித்தது. ஆனால் அதை எப்படி முடிப்பது என்ற ரகசியம் அவளுக்கு விளங்கவில்லை. கண்ணுக் கெட்டிய தூரம் வரை நீராகப் பரவிக் கிடக்கும் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒரு மனிதனின் உள்ளத்தைப் போன்று கீதாவின் உள்ளம் வாழ்க்கையைச் சரியாக வாழத் தெரியாது துக்கத்தில் மூழ்கிக் கிடந்தது.

அன்றுகாலை நாகராஜன் தொழிற்சாலைக்குச்செல்ல ஆயத்தமாக உடை தரித்துக் கொண்டு கீழே இறங்கி



வந்தான். அவனுடைய சௌகரியங்களைக் கவனித்துக் கூட இருந்து உதவி செய்த கீதாவும் பின்னாலேயே தொடர்ந்தாற்போல் வந்து கொண்டிருந்தாள். அது சமயம் குழந்தையை தோளில் சாத்தியபடி வந்து கொண்டிருந்த பொன்னி நாகராஜனைக் கண்டதும் தயங்கியபடி நின்றாள்.

''என்ன பொன்னி சௌக்கியமா?'' என்று கேட்ட நாகராஜன் மேலே செல்லாது நின்றான். பொன்னியைக் கண்டதும் அவனது முகத்திலே ஏற்பட்ட அலாதியான பிரகாசத்தைக் கீதா கவனிக்கத் தவறவில்லை.

''சௌக்கியந்தான் குழந்தையைப் பார்க்கணும்னு பெரிய அம்மா வரச்சொன்னாங்க'' என்று கூறிவிட்டுப் புன்னகை செய்தாள் அந்த மோகினி.

''டே போக்கிரி! காலை வேளையிலே உனக்குத் தூக்கமாடா?'' என்று கொஞ்சலாக நாகராஜன் அந்தச் சிறுவனை நோக்கிக் கேட்டான். சுருண்ட கூந்தல் அசைய அச்சிறுவன் தாயின் தோளிலிருந்து திரும்பிநாகராஜனைப் பார்த்தான் அகன்ற அழகிய தனது விழிகளைச் சிறு கைகளால் மூடிக்கொண்டு வெட்கியவனைப் போல் தாயின் தோள் மீது தலையைச் சாய்த்துக் கொண்டான்.

அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருக்கக் கீதாவால் முடியவில்லை பாராதவள் போல் விடுவிடுவென்று சமையற் கட்டின் பக்கம் சென்றாள். அங்கிருந்தபடியே சற்று தூரத்தில் நின்று கொண்டிருந்த அவர்களைக் கடைக் கண்ணால் கவனித்தாள்.

நாகராஜன் ஏதோ சொன்னான், அதற்குப் பதிலாக கலகலவென்று பொன்னி சிரித்தாள், அதைக் கண்ட கீதாவின் நெஞ்சில் மீண்டும் பொறாமை உணர்ச்சி ஊறிக் கொண்டு பொங்கி எழுந்தது.

கீதா பொய் சொல்லி மனைவி என்ற லட்சிய ஸ்தானத்திலிருந்து இறங்கி விட்டாள் என்று கூறினானே நாகராஜன்! அவன் மட்டும் அரிச்சந்திரனோ? தனக்கும்

அந்தப் பெண்ணிற்கும் ஒருவித சம்பந்தமுமில்லை என்று கூறுவது எத்தனை பெரிய பொய்! இருவரிடையே ஒருவித தொடர்பும் இல்லாவிட்டால் பொன்னியைக் கண்டதும் அவன் முகம் ஏன் அத்தனை பிரகாசமடைய வேண்டும்? அவளிடம் சம்பாஷிப்பதிலே ஒருவித ஆனந்தத்தை ஏன் அடைய வேண்டும்? எல்லாவற்றையும் விட அவளுடைய குழந்தை மீது அத்தனை பற்றுதல் ஏன்? ஒரு தடவை பார்த்தால்கூட யாரும் சுலபத்தில் சொல்லி விடுவார்கள். தன்னையே உரித்து வைத்தது போன்று ஒரு குழந்தை சான்றாக இருக்கும்பொழுது தனக்கும் அவளுக்கும் ஒரு விதச் சம்பந்தமுமில்லையென்றால் அது எத்தனை பெரிய பொய்!

பலவாறு எண்ணமிட்டுக்கொண்டிருந்த கீதாவின் அருகில் நாகராஜன் வந்தான். "மறந்துபோய் சாயங் காலம் சீக்கிரமாக வீட்டிற்கு வந்துவிடுவேன் என்றேன். இன்றைக்கு வீட்டுக்கு வர எனக்கு ரொம்ப நாழியாகும் அதனால் எனக்காக டிபன் ஒன்றும் செய்ய வேண்டாம்" என்று கூறிவிட்டு அவள் முகத்தைப் பதிலுக்காக நோக்கினான்.

"ஏன் நாழியாகுமாம்?" என்று ஆத்திரத்தில் கேட்க வேண்டும்போல் கீதாவிற்கு இருந்தது. ஆனால் சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை மட்டும் அசைத்தாள் அவள்.

பொன்னியைப் பார்ப்பதற்கு முன் சீக்கிரம் திரும்பி வருவதாகச் சொன்ன கணவன் அவளுடன் சம்பாஷித்த பின்பு ஏன் நேரமாகும் என்று மாற்றிச் சொன்னார்? டிபன்கூட வேண்டாமாமே! ஆசைக்காதலி பிடித்தமான பொருள்களைச் செய்துவைத்துக்கொண்டுகாத்திருப்பாள் போலிருக்கிறது. வீட்டில் சாப்பிடுகிறது என்பதுதான் தினம் இருக்கிறதே! அவளுடைய கையால் சாப்பிடும் பாக்கியம் நித்தியம் கிடைக்கக் கூடாதா என்ன?

பலவிதமான சிந்தனைகளில் மனத்தைச் செலுத்திய கீதாவிற்கு அன்று வீட்டு வேலைகளில் மனம் சரியாகச்



செல்லவில்லை. ஓய்வு நேரத்தில் வாசல் ஹாலுக்கு வந்து உட்கார்ந்த அவளது மனம் எதிலும் செல்ல மறுத்து விட்டது. என்ன வாழ்க்கை இது? எல்லாமிருந்தும் சுக மில்லை, துன்பந்தான் மிச்சம், என்ற அலுப்பு அவளது உள்ளத்தில் நிறைந்திருந்தது. சோபாவில் சாய்ந்தபடியே தலைக்கு மேல் தொங்கிய ஒரு வர்ணவிளக்கு சரத்தைப் பார்த்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்திருந்த அவள் தனது கரத்தை யாரோ மெல்லத் தொடுவதை உணர்ந்து திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்,

"இரவில் காணும் சொப்பனங்கள் போதாதென்று பகல் வேளையிலும் இன்பக் கனவுகள் 'காண' ஆரம்பித்து விட்டாயோ? பேஷ், மனிதர் வருவதுகூடத் தெரியாது ஆழ்ந்த யோசனை என்ன?" என்று கேட்ட விமலா சிரித்துக் கொண்டு பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"உண்மையில் நீ வந்ததே எனக்குத் தெரியாது" என்று கூறிய கீதாவின் முகம் சிநேகிதியைக் கண்டதும் பிரகாசமடைந்தது.

"கீதாவைப் பார்த்து ரொம்ப நாளாயிற்றே என்று என் மனம் அடித்துக் கொண்டது. அண்ணாவுக்கு வேலையிருந்ததனால் அவன் வர முடியவில்லை. காருக்காக நான் காத்திராமல் நடந்து ஓடிவந்தேன்". என்று கூறிய விமலா சோபாவின் மீது சாய்ந்து கொண்டாள் உல்லாசமாக.

"நடந்தா வந்தாய்? அதனால்தான் எனக்குத் தெரியாமல் போயிற்று! காரில் வந்திருந்தால் கட்டாயம் தெரிந்திருக்கும்" என்று பதிலளித்த கீதா சிரித்தாள்

"ஓ! அந்தக் காரைப் பற்றித்தானே உனக்குச் சிரிப்பு வருகிறது. நல்ல வேளை, ஓட்டைக் காரை அண்ணா எப்படியோ விற்று விட்டான் கீதா. ஒன்று சொல்ல மறந்து விட்டேனே. அண்ணா புதிதாகக் கார் ஒன்று வாங்கியிருக்கிறான். பெரிய கார். புது மாடல் ஓடுவதாகவே தெரியவில்லை பறப்பது போலிருக்கிறது" என்று விவரித்தாள் விமலா.

''கார் வாங்கியிருக்கிறாரா உங்க அண்ணா!'' என்று கீதா நம்பாமல் கேட்பதைக் கண்ட விமலா, 'ஏன் எங்க அண்ணாவுக்கு வாங்க முடியாது என்று நினைத்துக் கொண்டாயா? உன் அகத்துக்காரர் வேண்டுமானால் இவ்வளவு பணத்தை வைத்துக் கொண்டு மாட்டு வண்டியில் போவார். ஆனால் எங்களுக்கென்னவோ வாழ்க்கையை நன்றாக வாழ வேண்டும் என்ற ஆசையுண்டு. இந்த ஊரில் உள்ள சில பெரிய மனிதர்கள் சேர்ந்து ஒரு பிஸினஸ் ஆரம்பித்தார்கள். அதற்கு அண்ணா தான் மானேஜிங் டைரக்டர். காரில்லாமல் பிஸினஸிற்குச் சரிபடாது என்று போனவாரம் டவுனுக்குச் சென்று கார் வாங்கிக் கொண்டு வந்து விட்டான். அப்பா! நாலைந்து நாட்களாக நாங்கள் அந்தக் காரில் போகாத இடம் பாக்கியில்லை. பட்டணம் செல்லும் ராஜ பாட்டையிலே முந்தா நாள் ராத்திரி நான் அண்ணா, சின்ன மாமனார் மாமியார் எல்லோரும் இருபது மைல் சவாரி போய் வந்தோம் கீதா! படித்த பெண்கள் நமக்குத் தான் கார், நகை, புடவை இவற்றின் மேல் ஆசையென்று சொல்கிறார்களே என் சின்ன மாமியார் என்ன சொன்னார் தெரியுமா? ஒரு வைர அட்டிகை வாங்கிப் 'போட்டுக் கொண்டு வீட்டோடு உட்கார்ந்திருப்பதைவிட இந்த மாதிரி காரிலே இரண்டு தடவை போய்வந்தால் போதும் ஜன்ம சாபல்யமாகி விடும் என்றாள்' என்று வர்ணித்து விட்டு இடி இடியென்று சிரித்தாள்

''ஆமாம், அண்ணாவின் பிஸினஸ் நன்றாக ஆரம்பித்தவுடன் அம்மா, அப்பா, குழந்தைகள் எல்லோரையும் இங்கேயே அழைத்துக் கொள்வதாக உத்தேசம் கீதா! எனக்குப் பூந்திடலைக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை இயற்கை வனப்பு அதிகம் நிறைந்த பொன்மேட்டிற்கு முன்னால் அது ஒரு பாலைவனம் போல் எனக்குத் தோன்றுகிறது'' என்றாள் விமலா.

''இனிமேல் அடிக்கடி உன்னை அந்தப் புதுக்காரில் பார்க்கலாம் என்று சொல்லு'' என்று கேலியாகக் கேட்டாள் கீதா.



''நீ மனது வைத்தால் இதைப் போல் ஆயிரம் கார்கள் வாங்கும் அந்தஸ்து உனக்கு இருக்கிறது. இருந்தும் ஏனோ நீ உன் அகத்துக்காரரிடம் அப்படிச் செய்யும்படி சொல்லாதிருக்கிறாய்? நான் மட்டும் உன் ஸ்தானத்திலிருந்தால் அந்த மாட்டு வண்டியில் ஏறக் கண்டிப்பாக மறுத்து விடுவேன், பணத்தை வீணாகக் காரில் போடுவானேன் என்று உன் அகத்துக்காரர் சிக்கனம் பண்ணுகிறார் போலிருக்கிறது'' என்றாள் விமலா.

''சிக்கனம்? ஒன்றுமில்லை. என் மைத்துனர் கார் ஒன்று வாங்கி அதில் வேகமாகச் சென்று கொண்டிருந்த பொழுது ஏற்பட்ட விபத்தில் இறந்து விட்டார். அதிலிருந்து வீட்டில் கார் வைத்துக் கொள்ள கூடாது என்பது என் நாத்தனாரின் உத்தரவு'' என்று குறையுடன் பதிலளித்தாள் கீதா

''உன் நாத்தனார் சொன்னபடியெல்லாம் உன் அகத்துக்காரர் கேட்பார் போலிருக்கிறது'' என்றாள் விமலா ஆவலுடன்.

''அப்படியொன்றுமில்லை. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அக்காவின் இஷ்டப்படி அவர் நடக்கிறார்.'' எனக் கீதா பதிலளித்து முடிப்பதற்குள், ''அம்மா'' பெரியம்மா தூங்குகிறாங்களா ''நான் வீட்டிற்குப் போகணும்'' என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்த பொன்னி விமலாவைக் கண்டதும் ஆச்சரியத்துடன் விழித்துக் கொண்டு நின்றாள்.

பொன்னியையும், அவளது இடுப்பில் உட்கார்ந்திருந்த குழந்தையையும் விமலா விழுங்கி விடுபவள் போல் பார்ப்பதைக் கவனித்த கீதாவின் முகம் குப்பென்று அவமானத்தினால் சிவந்தது.

''சரி. நான் அக்காவிடம் சொல்லி விடுகிறேன், நீ போ'' என்று தடுமாறினாள் அவள்.

பொன்னி அவர்களைத் தாண்டிச் சென்று அவள் தலை மறையும் வரை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த விமலா கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தாள். தனக்கேற்பட்ட கலவரத்தில் கீதாவும் பேசாதிருந்தாள்.

''கீதா! இந்தப் பெண் யார்? ரொம்பவும் அழகாக இருக்கிறாளே! என்று ஆரமபித்தாள்.

'தெரிந்தவள்'' என்று பதில் அளித்த கீதா அது சமயம் தனது முகத்தில் ஏற்பட்ட உணர்ச்சிக் குறிகளை மறைத்துக் கொள்ள வேண்டித் தலையை குனிந்து கொண்டாள்.

''நான் ஒன்று கேட்கிறேன் கீதா. நீ கோபித்துக் கொள்ளக்கூடாது'' என்று மெல்ல ஆரம்பித்தாள் விமலா. அவள் என்ன கேட்கப் போகிறாள் என்பதுமுன்னா லேயே கீதாவிற்குப் புரிந்து விட்டது. கணவனது அந்தரங்கம் அம்பலமாகி விட்டதே என்ற அவமானத்தில் அவளது நெஞ்சம் பதைபதைத்தது.

கீதாவின் அருகில் இன்னும் சற்று நெருங்கி உட்கார்ந்த விமலா, ''அந்தப் பெண் வைத்திருக்கும் குழந்தை மிகவும் அழகாக இருக்கிறான், அவனைப் பார்த்தால் எனக்கென்னவோ அது உன் குழந்தையைப் போலவே தோன்றுகிறது. கோபித்துக் கொள்ளாதே கீதா! அந்தக் குழந்தை சாக்ஷாத் நாகராஜனையே உரித்து வைத்துக் கொண்டிருக்கிறதே!'' என்றாள் வியப்புடன்.

கீதா பதில் பேசவில்லை. அவமானத்தினால் அவளது எண் சாண் உடல் ஒரு சாணாகக் குறுகி விட்டது.

''சின்ன மாமனார், மாமியார், ஏன் இந்த ஊரில் தெரிந்தவர்கள் சிலர் எல்லோருமே சொன்னார்கள், நான் நம்பவில்லை, ஆமாம். அவள் பெயர்கூட சொன்னார்கள். பொன்னியோ சின்னியோவாமே?... இருந்தாலும் நான் நாகராஜனிடம் இதை எதிர்பார்க்கவேயில்லை, பணக் கார வீட்டுப் பிள்ளைகளுக்குக் காலா காலத்தில் விவாகம் செய்து வைக்காது போகிறார்களே அந்தப் பெற்றோர் களைத்தான் சொல்ல வேண்டும். இருந்தாலும் கீதா, பகிரங்கமாக அந்தப் பெண் உனது வீட்டிற்கு வந்து பழகுவதை நீ எப்படித்தான் அனுமதிக்கிறாயோ? உன்



நிலையில் நானிருந்தால் இத்தனை நேரம் அந்தப் பொன்னேரியில் விழுந்து உயிரை விட்டிருப்பேன்'' என்று கூறிவிட்டு உடம்பை நாசுக்காக ஒரு தடவை குலுக்கி னாள் விமலா.

''அவரிடம் அதைப் பற்றி எத்தனையோ விவாதித் தாயிற்று, பலிக்கவில்லை. என் தலைவிதியை நான் அனுபவித்துத் தானே ஆக வேண்டும்?'' என்று துக்கத் துடன் கூறிய கீதாவின் கண்கள் பொல, பொலவெனக் கண்ணீர்த் துளிகளை வர்ணித்தன,

''பாவம் கீதா! இத்தனை ஐச்வர்யமிருந்தும் உனக்கு இத்தனை பெரிய கஷ்டத்தைக் கடவுள் கொடுத்திருக்கக் கூடாது. உலகத்தில் சந்தோஷமாக யார்தான் இருக் கிறார்கள்? எல்லோர் வாழ்க்கையிலுமே ஒவ்வொரு குறை இருக்கத்தான் செய்கிறது. என்னைப் பொறுத்த வரை இப்படி ஐஸ்வர்யமும் வேண்டாம். இந்த அவ மான நிலைமையும் வேண்டாம் என்பேன். கஞ்சியோ, கூழோ குடித்துக் கொண்டு நமது கணவன் நம்முடையவன் என்று இருந்தால் அது போதும் எனக்கு'' என்று பெரு மூச்செறிந்தாள்.

''கடந்த ஆறு மாதமாக இந்தத் துக்கத்தைச் சுமந்து சுமந்து என் மனம் பெரும் பாறாங்கல்லாகக் கனத்துப் போய் விட்டது விமலா...எனக்கு வாழ்க்கையே பிடிக்க வில்லை. நயத்தினாலும், பயத்தினாலும் அவரை வேண் டிக் கொண்டேன். பொறுமையாகப் பல்லைக் கடித்துக் கொண்டு இருந்து பார்த்தேன். என்றாலும் அவர் குணம் மாறுபடவில்லை'' என்று சொல்லிய கீதா கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''புருஷர்கள் என்று பிறந்து விட்டால் எதை வேண்டு மானாலும் செய்யலாம் என்ற ஆணவம் சிலருக்கு. இப்படிப்பட்டவர்களிடம் மனைவி பொறுமையாக இருப் பதில் பிரயோஜனமே இல்லை. பளிச்சென்று முகத்தி லடிப்பது போல் கேள்விகள் கேட்டுத் தனது உரிமையை நிலைநாட்டிக் கொண்டால்தான் புருஷன் வழிக்கு

வருவான்...அழுது கொண்டு, நீங்கள்தான் விட்டவழி என்று பழங்காலத்துப் பாட்டியைப் போல் பேத்திக் கொண்டிருந்தால் அதோகதிதான்'' என்று பிரசங்கித்தாள் விமலா.

## 29

தீக்ஷிதர் தெரு சுப்பிரமணிய வீட்டின் சமையலறையையும் அடுத்த வீட்டின் சமையலறையையும் இரண்டாகப் பிரித்து நின்று கொண்டிருந்தது ஒரு சுவர் தனது இருபுறத்திலும் வசிக்கும் ஜனங்கள், தங்கள் தங்கள் அடுத்த வீட்டவரைப் பற்றி என்ன பேசிக் கொள்ளுகிறார்கள் என்பதை அந்த ஒற்றைச்சுவர் கேட்டு அலுத்துப்போனதினாலோ என்னவோ சில சமயங்களில் உற்றுக் கேட்டால் இருபக்கத்திலிருக்கிற வர்களுக்கும் அடுத்த வீட்டில் பேசும் விஷயங்கள் கணீரென்று கேட்கும்படி அந்தச் சுவர் விஷயங்களை அப்பால் போக அனுமதித்தது. சமையலறையில் கை வேலையாக இருந்த ஜானகி வேலையைப் பாதியில் நிறுத்திவிட்டுச் சுவர் ஓரமாக நின்று உற்றுக் கவனித்தாள். கோபத்தினால் பல்லைக் கடித்தாள். பின்பு அப்படியே வேலையை நடுவில் விட்டுவிட்டு வெளியே தாழ்வாரத்திற்கு ஓடிவந்து விச்ராந்தியாகச் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த சுப்பிரமணி அய்யரின் முன் நின்றாள்.

''இதோ பாருங்கள்! நீங்க இன்னிக்குக் கண்டிப்பாக ஒரு வார்த்தை அந்தப் பெண்ணை அதட்டா விட்டால் நான் கொல்லைக் கிணத்துலே விழுந்து உயிரை விட்டு விடப் போறேன் பக்கத்தாத்துக் கோகிலம் என்ன சொல்லிக் கொண்டு இருக்கான்னு உங்களுக்குத் தெரியுமா? உங்க அழகு நாட்டுப் பெண்ணைப் பற்றி ரொம்பக் கேவலமாகச் சொல்லிக்கொண்டு இருக்கா!'' என்று முடிப்பதற்குள் குறுக்கிட்ட சுப்பிரமணிய அய்யர் ''அவா நாட்டுப் பெண்ணைப்பற்றி நீஎன்ன சொல்லிக் கொண்டிருக்கிறாய் என்பதைக் கோகிலம் கேட்டிருந்தால் அவள்தான் முதலிலே போய்க் கொல்லைக் கிணற்றிலே விழுந்து பிராணனை விட்டிருக்க வேண்டும், பாவம்! அவள் செவிடு. சுவரைத் தாண்டி விஷயம் அவளுக்குப் போய்ச் சேருவதில்லை. அதிருக்கட்டும். இது என்ன கையில்?...'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தார்.

குழம்பிற்குத்தாளிக்க வேண்டிய இரும்புக்கரண்டியை வந்த அவசரத்தில் கீழே வைக்க மறந்து, கையுடன் அதை எடுத்துக்கொண்டு வந்த ஜானகிக்கு தனது மறதியைப் பற்றி நினைக்கவும் வெட்கமாகப் போய்விட்டது. ''முதல்லே எனக்குப் பயமாக இருக்கு'' என்று நகைத்தார்.

''ரொம்பப் பயந்த மனுஷர்தான்!'' எனப் பதில் அளித்த அவள் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு. ''இருட்டிவிட்டது கூடத் தெரியாமல் உங்க நாட்டுப் பெண் அவா வீட்டில் போய் உட்கார்ந்திருக்கிறாள். அடுத்தாப்பலே அந்தப் பெண் அன்னிக்குக் கொஞ்சம் நாழியானதும் எத்தனை துடிச்சுட்டா?'' என்று ஆரம்பித்தாள்.

''...உம், ஒண்ணு! மேலே சொல்லு. விமலா மேலே எத்தனை குற்றங்கள் இருக்கு?'' என்று விரல்விட்டு எண்ணத் தயாரானார் சுப்பிரமணிய அய்யர்.

''என்னவோ அந்தப் பொண்ணு கொஞ்சம் இங்கிலீஷிலே ஏதோ 'டஸ்புஸ்'ஙதும் உங்களுக்கு உச்சி குளிர்ந்து போயிடறது, இந்தக் காலத்திலே இங்கிலீஷ் படிக்காத பொண்ணு யார் இருக்கா? அந்தக் கிதாகூட இவளைப் போல படிச்சவள் தானாம். ஆனால் பாருங்கோ, எத்தனை அடக்கம்! வீட்டுச் சமையலை அந்தப் பெண்தான் கவனிக்கணுமாம். இது இருக்கே, உங்க அழகு நாட்டுப் பெண் அடுப்புப் புகை கண்ணுக்கு ஒத்துக்காதுன்னு டாக்டர் சொல்லிவிட்டான்னு சமையலறைப் பக்கம் தலையைக் காட்டாதாம். எந்த டாக்டர் சொன்னான்? அவனுக்குப் பெண்டாட்டி புள்ளை ஒண்ணும் கிடையாதா? அல்லது, தினம் ஹோட்டல் சாப்பாடுதானா அந்த மகாராஜனுக்கு? அடுப்புப் புகை பட்டுக் கண் குருடான பெண்களைப்பத்தி

நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை'' எனப் படபட வென்று பேசிக்கொண்டு போனாள்.

''உம்! அப்புறம்!'' என்றார் சுப்பிரமணிய அய்யர் நிதானமாக

''இந்தத் துரும்பை எடுத்து அந்தப் பக்கம் போடற தில்லை உங்க பிள்ளையோ விமலாவுக்கு வீட்டு வேலை களையெல்லாம் கத்துக் கொடுன்னு ஒவ்வொரு கடுதாசி யிலும் எழுதறான் நான் என்ன செய்யறது? அவனே வந்து சொல்லித் தரட்டும்! பொம்மனாட்டிக்குத் துளியாவது அடக்கம் வேண்டாமோ? மேல் தலைப்பைக் கொஞ்சம் கூட பயமில்லாமல் விசிறிக்கொண்டு சிலுக்கு சிலுக்கென்று சதிர்க்காரியாட்டமா நடையும், பேச்சும், இடி இடிக் கிறாப்பலே சிரிப்பும் வேண்டிக் கிடக்கலை! அடுத்தாத்துக் கோகிலம் அதைப் பத்தித்தான் சொல்லிண்டு சிரிச்சுண்டு இருக்கா எனக்கு மானம் போகிறது கடைசி காலத்திலே இருந்திருந்து எனக்கு இப்படி ஒரு நாட்டுப் பெண் வந்து வாய்க்கணுமா? இவதான இப்படின்னா அவன் இருக் கானே, அவள் அண்ணா, அவன் பெரிய ஆசாமியா இருக்கான். கொஞ்சம்கூட மரியாதை இல்லாமல் சிகரெட்டை ஊதித் தள்ளறான். என் பிள்ளைகூட எனக்குப் பயப்பட்டுண்டு எதிரிலே குடிக்க மாட்டான். இவன் என்னடான்னா'' என்று ஜானகி முடிப்பதற்குள் ''சிகரெட் குடித்தால் என்ன தப்பு? தலை போகிற விஷயமா அது?'' என்று கோபத்துடன் கேட்டார் சுப்பிர மணிய அய்யர்.

''ஒண்ணும் தப்பு இல்லை! உங்க கண்ணுக்கு ஒண் ணும் தப்பே கிடையாது!'' என்றாள் ஆத்திரத்துடன்.

''உஸ்! பேசாமலிரு. அவர்கள் வருகிற சமயம், இந்தக் காலத்துக் குழந்தைகளிடம் தப்புக் கண்டு பிடித்துப் பிரயோஜனமில்லை. நீ விமலா மேலே மாமியார் ஹோதாவில் குற்றம் கண்டு பிடிக்கிறாய். மாமியார் என்றால் உடனே நாட்டுப் பெண்களின் விரோதியாக இருக்க வேண்டுமா, என்ன? நீ விமலாவை



உன் சொந்தப் பெண் போல நினைத்துக் கொண்டால் உன் மனது அவளைப் பற்றி இப்படியெல்லாம் எண் ணாது. விமலா எத்தனை புத்திசாலி? அவள் தமையன் சிவராமன் எத்தனை சாமர்த்தியக்காரன் என்பது எனக் குத் தெரியும். ஏதோ குழந்தைகளை நம்மிடம் இருக்கும் படி பிள்ளை சொல்லியிருக்கிறான். நமது கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவாவது நீ விமலாவிடம் கோபம் கொள்ளக் கூடாது. சிவராமன் உதவி எனக்கு இது சமயம் ரொம்பத் தேவை, அவனை நம்பிக்கொண்டு நான் எத்தனையோ காரியங்கள் செய்ய உத்தேசித்திருக் கிறேன். அதையெல்லாம் கெடுத்து விடுவதுபோல உன் மூஞ்சியைக் காட்டி விடாதே, அந்தப் பையனிடம்!' என்று எச்சரித்தார் அய்யர்.

''இதுகள் எக்கேடு கெட்டுப் போனால் எனக் கென்ன?'' என்று கோபத்துடன் மொழிந்து விட்டு ஜானகி உள்ளே சென்றாள்.

அது சமயம் வீட்டிற்குள் நுழைந்த விமலா ''அப்பா'' என்று அருமையுடன் அழைத்துக் கொண்டு வந்தாள். தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டாள். ''நான் சீக்கிரமே வீடு திரும்பணும் என்று துடித்தேன் சீதா விட மாட்டேனென்று சண்டி பண்ணினாள். எங்கே, அம்மா உள்ளே இருக்கிறாரா? அவருக்கும் விஷயத்தைச் சொல்லா விட்டால் எனக்கும் சொன்னாப் போலவே இருக்காது'' என்று உற்சாகத்துடன் இரைந்து பேசினாள்.

''ஜானகி, இங்கே வா! சமையலுள்ளே சதா என்ன வேலை? உன் நாட்டுப் பெண் ஏதோ புது விஷயம் சொல்லக் கொண்டு வந்திருக்கிறாள்' என்று உரத்த குரலில் கணவர் கூப்பிடுவதைக் கேட்ட ஜானகி முண முணத்துக் கொண்டே வெளியில் வந்தாள்.

''அம்மா! விஷயத்தைக் கேட்டதும் நான் இன்னிக்கி அப்படியே ஸ்தம்பித்து விட்டேன். நீங்கள் சொன்னது ரொம்ப நிஜம். சீதா வாயாலேயே இன்னிக்கு ஒப்புக் கொண்டு விட்டாள். ரொம்ப அழுது விட்டாள். பாவம்

அவளைச் சமாதானப்படுத்திவிட்டு வரத்தான் இத்தனை நாழி!'' என்று சுவாரஸ்யமாகப் பேசினாள்.

வம்பு என்றால் ஜானகிக்கு ஹல்வா சாப்பிடுவதைப் போல. விமலா மீது இருந்த கோபத்தையெல்லாம் மறந்து ஆனந்தத்துடன், ''அப்படியா?'' என்று கேட்டுக் கொண்டு அங்கேயே உட்கார்ந்தாள்.

இதற்குள் வாயிலில் 'கிர்' என்று உறுமல் சப்தம் கேட்டது. ''சிவராமன் வந்துவிட்டான் போலிருக்கிறது!'' என்று சந்தோஷத்துடன் கூவிய அய்யர் தமது இருப்பிடத்தினின்றும் ஒரு தடவை எழுந்து திரும்ப உட்கார்ந்து கொண்டார்.

''என்னைப் பற்றி இவர்களிடம் என்ன அளந்து கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டுக்கொண்டே சிவராமன் குதூகலமாக உள்ளே நுழைந்தான். ''உன்னைப் பற்றியல்ல அண்ணா! நமது ஊர்பெண் சீதாவைப்பற்றிய விஷயம்'' என்று விமலா அவனது சந்தேகத்தைப் போக்கினாள்.

''நமது பிளீடரின் எதிராளி வீட்டு விஷயம் என்று சொல்லேன்!'' என்று கேலியாகக் கூறிய சிவராமன் அங்கிருந்த பெஞ்சியின் மீது உட்கார்ந்து கொண்டு, 'உஸ்' என்று பெருமூச்சு விட்டான், வெளியே சுற்றி வந்த களைப்பினால்.

''கையில் பணமிருக்கிறது என்கிற திமிரினால் அவனுக்கு இந்த ஊராரைப் பற்றியே அலக்ஷியம்! இல்லாவிட்டால் இந்தச் சிறு கிராமத்தில் பிறர் என்ன சொல்வார்கள் என்கிற லஜ்ஜை இல்லாமல் அந்தக் காரியத்தைச் செய்வானா? பணம் இருந்தென்ன, பதவி இருந்தென்ன? மனிதனுக்கு நல்ல நடத்தை என்பது இல்லா விட்டால் சமூகத்தில் வாழவே அருகதையற்றவன் என்பது என் அபிப்பிராயம்'' என்று நாகராஜன்பால் தனக்குள்ள துவேஷத்தை வார்த்தைகள் மூலம் வெளியிட்டார் சுப்பிரமணிய அய்யர்.

விஷயத்தைக் கேட்ட சிவராமன், ''இருந்த போதிலும் இந்த நாகராஜன் இத்தனை அயோக்கியன் என்று நான் நினைக்கவேயில்லை மிகவும் கர்வம் பிடித்தவன் என்று மட்டுந்தான் அவனைப் பற்றி நினைத்தேன். பாவம்! சீதா இவனைக் கல்யாணம் செய்து கொண்டது பற்றி வருத்தப்பட்டுக் கொண்டிருப்பாள்'' என்று இரக்கத்துடன் பதிலளித்தான்.



''பாவம் என்று அவளுக்கு என்ன நாம் வருந்த வேண்டிக் கிடக்கிறது? அவள் கர்வத்திற்கும் இதுதான் தகுந்த வீழ்ச்சி? அப்பப்பா! இந்த வரனைப் பிடித்து விட்டதற்கு அவள் வீட்டவர்கள் செய்த அட்டகாசம் கொஞ்சமா நஞ்சமா? எனக்கு இப்பொழுது அந்தச் செல்லம்மாள் மாமியைப் போய்ப் பார்த்து விட்டு வர வேண்டும் போலிருக்கிறது. மாப்பிள்ளையின் சங்கதி தெரிந்தால் மாமி பிறத்தியார் முகத்தில் எப்படிதான் விழிப்பாரோ, தெரியவில்லை? கண்ணீர் விட்டுஎன்னிடம் சீதா இன்று சாயங்காலம் அழுதபொழுது என் மனம் அவளிடம் கொஞ்சங்கூடத் தளர்ந்து கொடுக்கவில்லை'' என்றாள் ஆத்திரத்துடன் விமலா.

''ஆனாலும் நீ இப்படிக் கடின மனத்துடன் பேசக் கூடாது. நாகராஜன் கயவன் என்பதைக் கல்யாணம் செய்து கொள்ளுமுன் அவள் கண்டாளா?'' என்று பச்சாதாபத்துடன் மொழிந்தான் சிவராமன்.

''பணக்காரக் கணவன் வேண்டும் என்று ஆசைப்பட்டால் அதற்கு உடன் இருக்கும் கஷ்டத்தையும் சுமந்து தானே ஆகவேண்டும், என்ன ஆயிரம் இருந்தாலும் புருஷனின் குணத்தைப்பற்றி இழிவாக வெளியேசொல்லக் கூடாது என்பது என் எண்ணம் நான் பொறுமைசாலி என்று சொல்லிக்கொள்ளவில்லை. நான்மட்டும் சீதாவாக இருந்தால் உயிருக்குயிரான தோழியாக இருந்தால் கூட என் கணவனின் துரோக நடத்தையைப்பற்றி வெளியிட மாட்டேன்! என்ன அப்பா, நான் சொல்லுவது சரி தானே!'' என்றாள் விமலா, முடிவில்.

''மிகவும் சரியான விஷயம். உன்னைப் போன்ற தைரியமும் பொறுமைசாலியுமான பெண்கள்தான் குடும்பத்திற்கு லாயக்கான பெண்கள். ஆயிரம் இருந்

தாலும் புருஷனைப் பற்றிப் பிறரிடம் குறை சொல்வது பெண் குலத்திற்கே இழிவுதான்!'' என்றார் சுப்பிரமணியம்.

ஜானகிக்கு இதைக் கேட்டதும் எரிச்சல் தாங்க முடியவில்லை. ''தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்? அவள் கஷ்டம் உங்களுக்குளென்ன தெரியும்?'' என்று கொஞ்சம் காரமாகவே பதில் சொல்லி விட்டு ஜானகி உள்ளே சென்று விட்டாள்

''அப்பா, சீதாவைப் பற்றிய உண்மையைப் பேசினால் அம்மாவுக்கு இவ்வளவு கோபம் ஏற்படுவானேன்!'' என்று தாழ்ந்த குரலில் வினவினாள் மாட்டுப் பெண் மாமனாரிடம்.

''அவள் கிடக்கிறாள், விஷயந் தெரியாத மக்கு! அவள் அபிப்பிராயங்களை நீ காதில் வாங்கிக் கொள்ளாதே!'' என்று பதில் அளித்த அய்யர், சிவராமன் பக்கம் திரும்பி ''போன விஷயம் என்ன?'' என்று ஆரம்பித்தார்.

'தென் இந்தியா டிம்பர் ஒர்க்ஸ்' என புதிதாக அவர்கள் நாமகரணம் செய்து உள்ள தொழில் விஷயமாக வெளியே சென்றிருந்த சிவராமன் திரும்ப வந்த பொழுது மிகவும் சந்தோஷமாகத் தானிருந்தான். பொன்மேட்டு எல்லையோரத்தில் பொட்டல் நிலமாகக்கிடந்த இடத்தை வாடகைக்குப் பேசி அதைச் சுற்றிலும் கம்பி வேலி அமைத்து 'தென் இந்தியா டிம்பர் ஒர்க்ஸ்' என்று எழுதப்பட்ட பெரும் பலகையை வாசற்புறத்தில் கட்டித் தொங்க விட்டு வந்திருந்தான் அவன். மஞ்சள் வர்ணம் பூசிக் கறுப்பு எழுத்துக்களால் மின்னிய அந்தப் பலகை பிற்காலத்தில் அந்தப் பொட்டல் நிலத்திற்குள் செழித்து ஓங்கிப் புகழ் பெற்று, நாகராஜன் 'பொன்மேட்டு டிம்பர் ஒர்க்'' ஸைப் புறமுதுகு காட்டச் செய்யப் போகிற தங்களது தொழில் மங்களகரமாக விளங்கப் போவதைச் சுட்டிக் காட்டுவதைப் போல் அவனுக்குத் தோன்றியது.

சுப்பிரமணிய அய்யருடன் சேர்ந்து கூட்டுத் தொழிலாக அதை ஆரம்பித்திருக்கும் மற்ற இரு குட்டி



முதலாளிகளையும் தொழில் விஷயமாகக் கண்டு பேசிய திருப்தியில்தான் அன்று சாதித்த விஷயங்களைச் சொல்லி ஆனந்தப்பட ஆவலுடன் வீட்டிற்குவந்திருந்த சிவராமன் சீதாவின் வாழ்க்கை வரலாற்றைக் கேட்டதும் ஏனோ உற்சாகம் குறைந்து காணப்பட்டான்.

அதே சமயம், வாசல் ஹாலில் அன்று சாயங்காலம் வந்த பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்த நாகராஜன் முன் கவலை தோய்ந்த முகத்துடன் பாகீரதி வந்து ''ராஜா, உனக்குச் சங்கதி தெரியுமா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

சீதாவும், ரேடியோவை நிறுத்திவிட்டு இடத்தை விட்டு எழுந்து நின்று கவனித்தாள்.

''தீக்ஷிதர் தெரு சுப்பிரமணிய அய்யரும் மற்ற பேரும் சேர்ந்துண்டு நம்ப மர வியாபாரம்போல ஆரம்பிச்சிருக்காளாமே! எனக்குத் தெரியாது, வேலைக்காரர்கள் எல்லாரும் சொல்கிறார்கள் சிவராமன்தான் அதுக்கு ரொம்ப முயற்சியெல்லாம் பண்றானாம்!'' என்றாள் பாகீரதி வருத்தமாக.

விமலா அன்று தன்னைச் சந்தித்தபொழுது ஏதோ 'பிஸினஸ்' என்று சொன்னது சீதாவின் ஞாபகத்திற்கு வந்தது அவளுக்கு என்னவோ அதைப்பற்றிக் கேட்கவே தோன்றவில்லை. அப்பொழுது நமக்குப்போட்டியாக மர வியாபாரமா?'' என்று அவள் மனம் சங்கதியைக் கேட்டதும் திடுக்கிட்டுவிட்டது.

பத்திரிகையைக் கீழே வைத்த நாகராஜன் கடகட வென்று சிரித்தான், ''உனக்கு ஏன் அக்கா இதைப்பற்றி யெல்லாம் கவலை? தொழில் என்பது எல்லாருக்கும் பொதுவான விஷயம். நான் ஒருத்தன் மட்டும் வியாபாரத்தை நடத்தவேண்டும். மற்றவர்கள் நடத்தக்கூடாது என்று நினைத்தால் ரொம்பத் தவறு அல்லவா? மேலும் நாலுபேர்கள் அதே தொழிலைச் செய்து கொண்டிருக்

கையில் ஒருவன் மட்டும் மிகவும் பிரமாதமாக அதில் புகழ் அடைந்தால் அதைத்தான் தொழிலிலே வெற்றி அடைந்தான் என்று சொல்ல வேண்டும். போட்டியே இல்லாது பிரகாசிக்கும் வியாபாரம் குடத்துக்குள் வைத்திருக்கும் விளக்கைப் போலத்தானே அக்கா!'' என்றான்.

''உன்னுடன் போட்டியிடுகிறவர்கள் எல்லோரும் நல்ல பணக்காரர், துணிச்சல் நிரம்பியவர்கள் என்பதைக் கேட்டதும் எனக்குக் கவலையாக இருக்கிறது'' என்றாள் பாகீரதி தொடர்ந்தாற் போல.

"அதனால் என்ன? இந்தப் பரந்த உலகத்தில் வாழ்க்கையில் முன்னேற எல்லோருக்கும் உரிமை உண்டு. இயற்கையின் நியதிப்படி வலியவன்தான் வாழ முடியும். எவன் கெட்டிக்காரனோ, எவன் சாமர்த்தியசாலியோ அவன் தான் முன்னுக்கு வரக்கூடியவன். எனக்குக் கவலை இல்லை உனக்கு இதைப்பற்றி ஏன் விசாரம்? நீ பேசாமல் இரு!'' என்றான் சாந்தமாக.

நாகராஜனின் முகத்தில் ததும்பி நின்ற அமைதிக் குறிகள் கீதாவுக்கு ஆச்சர்யமாக இருந்தன.

## 30

விமலா கடைசியாக பங்களாவிற்கு வந்து சென்ற சில தினங்களுக்குப்பின் ஒரு நாள் காலை கீதா பங்களாவின் தோட்டத்திலிருந்து பூஜையறைக்குக் கொஞ்சம் புஷ்பங்களைத் தானே சேகரித்துக் கொண்டு வரும் நிமித்தம் காலை ஸ்நானத்திற்குப்பின் குடலையுடன் பங்களாவினின்றும் வெளிப்பட்டாள்.

'தென்னிந்தியா டிம்பர் ஒர்க்ஸ்' என்ற இரும்புத் தகடு பொருத்திய சைக்கிளில் ஏறிவந்த வேலைக்காரப்பையன் ஒருவன் அவளைக்கண்டதும் வண்டியை விட்டு இறங்கி, சட்டைப் பையினின்று ஒரு கடிதத்தை எடுத்து அவள் கையில் கொடுத்தான். தன் பெயர் விலாசமிட்டிருந்த உறையைப் பிரித்து ஆவலுடன் படித்தாள் அவள்.



''அன்புமிக்க கீதா,

இன்று எனது கணவரின் பிறந்த நாள் க்ஷேமமாய் அவர் திரும்பிவர வேண்டும் என்று அவர் பெயருக்கு அர்ச்சனை செய்ய ஏற்பாடுகளைச் செய்து விட்டு என் சின்ன மாமனார் வீட்டிலேயே ஒரு சிறு விருந்துக்கும் ஏற்பாடு செய்து விட்டார், அந்த விருந்திற்கு கட்டாயம் நீயும் உனது கணவரும் வரவேண்டும் என்பது எனது கோரிக்கை தயை செய்து மறுக்காமல் நீங்கள் இருவரும் வந்து எங்களைக் கௌரவப் படுத்த வேண்டும்.

இப்படிக்கு அன்புள்ள
விமலா''

கடிதத்தைப் படித்து முடித்த கீதாவை நோக்கி, ''பதில் வாங்கி வரச் சொன்னாங்க, அம்மா!'' என்றான் சைக்கிள் பையன்.

''ஆகட்டும், வருகிறேன் என்று சொல்லு'' என்று பதிலளித்த கீதா, குழம்பிய மனத்துடன் தோட்டத்திற்குள் நுழைந்தாள். விமலாவின் விருந்துக்குப் போவதா, போகாதிருப்பதா? போனால் நாத்தனாருக்கும் கணவருக்கும் பிடிக்காது போகாவிட்டால் அருமை சிநேகிதி மனத்தாங்கல் அடைவாள். பலவாறு எண்ணிய கீதா முடிவில் அதைக் கணவரிடமே கேட்டு விடுவது என்று தீர்மானித்தாள்.

வீட்டிலிருந்த வேலைத் தொந்தரவுகளில் கீதா இந்தக் கடிதத்தைப் பற்றி மறந்து விட்டாள். ஆபிஸிற்குப் புறப்பட உடை தரித்துக் கொண்டு நாகராஜன் சொல்லிக் கொள்வதற்காக அவள் இருந்த சமையற்கட்டின் பக்கம் வந்த சமயந்தான் அவளுக்கு விமலாவின் கடிதத்தைப் பற்றிய ஞாபகம் வந்தது. ''இதற்கு நான் என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை; இதைப் பாருங்கள்'' என்று கணவனிடம் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தாள், கடிதத்தைப் படித்த நாகராஜனுடைய நெற்றி ஒரு

கணம் யோசனையால் சுருங்கியது. ''என்னால் வரமுடியாது. எனக்கு ஆபீஸ் வேலைகள் இருக்கின்றன. நீ போய் வருவதைப் பற்றி எனக்கு ஆக்ஷேபனை இல்லை ஆபீஸிற்குப் போனதும் நான் உடனே உனக்கு வண்டி அனுப்புகிறேன்'' என்று கூறிய நாகராஜன் அங்கிருந்து வெளியே செல்லத் திரும்பினான்.

''வண்டியா? யாருக்கு வண்டி?'' என்று சம்பாஷணையை அரைகுறையாகக் கேட்டுக் கொண்டு வந்த பாகிரதி சகோதரனைப் பார்த்து விஷயம் புரியாமல் வினவினாள். நாகராஜன் சொன்னதும், போதுமே இவர்கள் உறவு! எனக்குக் கீதா அங்கே போகிறது பிடிக்கவில்லை. நமக்கே எதிரியாகக் கிளம்பியிருக்கும் அவர்களுடன் உறவு என்னத்திற்கு? புத்தியில்லாமல் நன்னா உத்தரவு கொடுத்தாய் நீ! எங்கே அந்த கீதா? கூப்பிடு அவளை இங்கே! என்று பாகிரதி சகோதரனை அதட்டினாள்.

விமலா வீட்டிற்கு எத்தகைய அலங்காரத்துடன் செல்ல வேண்டும் எனக்கற்பனை செய்து கொண்டு மாடிப் படிகளில் ஏறிக்கொண்டிருந்த கீதா உரத்த குரலில் பாகிரதி தன் கணவனிடம் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுத் திகைத்து விட்டாள், தான் சந்தோஷமாக சிநேகிதியின் வீட்டிற்குச் செல்வதைத் தடுக்க ஆசைப்படும் நாத்தனார் மீது அவளுக்குக் கோபம் பொங்கி வந்தது. ''அவருக்கு இல்லாத அக்கறை அக்காவுக்கு வந்து விட்டதாக்கும்!'' என்று முணமுணத்த அவள் மேலே கணவன் என்ன சொல்லப் போகிறான் என்பதைக் கேட்க ஆவலோடு படிகள் மீது நின்று கொண்டு கவனித்துக் கேட்டாள்.

''ஏன் அக்கா, கொஞ்சம்கூட யோசனை இல்லாமல் பேசுகிறாயே! சுப்பிரமணிய அய்யரும், சிலரும் சேர்ந்து கொண்டு எனக்கெதிராக தொழிற்சாலை உண்டாக்கி மர வியாபாரம் செய்ய முயற்சித்தால் அதற்கு விமலாவா பொறுப்பாளி? சிநேகிதம் என்பது தனிவிஷயம்?



தொழில் என்பது தனி விஷயம். விமலா கீதாவின் சிநேகிதி. அவளுக்கும் வியாபாரத்திற்கும் என்ன சம்பந்தம்? கீதாவை வெளியே அழைத்துப் போக எனக்குச் சில நாட்களாக ஓய்வே இல்லை! அவளாவது சிநேகிதி வீட்டிற்குப் போய் வரட்டுமே! அதைத் தடுப்பானேன்!'' என்றான் நாகராஜன்.

''நீ என்னவோ அப்பா விசித்திரமாகப் பேசுகிறாய்! ஒருதடவை பேசுவது போல இன்னொரு தடவை பேசுகிறதில்லை. முதல்நாள அவள் அங்கேயிருந்து நாழிகழிச்சு வந்ததுக்கு உனக்கு எத்தனை கோபம் வந்தது? அக்கிரகாரத்து மனுஷர்கள் உனக்கு வேண்டுமென்றால் நல்லவர்களாகி விடுகிறார்கள். எனக்கென்னவோ அவள் அங்கு போகிறது பிடிக்கவேயில்லை'' என்ற குறையுடன் பேசினாள் சகோதரி.

''நான் வெளியே போய் வருகிறேன். இதைப் பற்றிய வீண் விவாதம் ஏன்?'' என்று கூறிவிட்டு நாகராஜன் சென்றான்.

சம்பாஷணை முழுவதும் நின்று கேட்டுவிட்டு மாடியறைக்குச் சென்ற கீதாவுக்கு நாத்தனார் வார்த்தைகள் அவளது குறுகிய மனப்பான்மையைக் குறிக்கின்றனவா, அல்லது சமையற்காரி உதவிக்கு இல்லாத சமயத்தில் தம்பி மனைவி வீட்டு வேலைகளைத் தன் மீது தள்ளி விட்டு வெளியே கிளம்பி விட்டாள் என்ற பொறாமையைக் குறிக்கின்றனவா என விளங்கவில்லை.

''எதுவாக இருக்கட்டும்! இவள் யார் தடுப்பதற்கு? கணவன் உத்தரவு கிடைத்து விட்டது' என்று தன்னையே சமாதானம் செய்து கொண்டு விமலா வீட்டு விருந்திற்காகத் தன்னை அக்கறையுடன் சிங்காரித்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

நாகராஜன் ஆபீஸிலிருந்து திரும்ப வீட்டுக்கு மாட்டு வண்டியை அனுப்பி விட்டான் என அறிந்ததும் கீதா சமையற்கட்டிற்குச் சென்று நாத்தனாரிடம் போய் வருவதாகச் சொல்லிக் கொண்டாள். 'சீக்கிரம் வந்து விடு''

என்று மட்டும் கூறிய பாகீரதி கீதாவின் பக்கம் கூடத் திரும்பவில்லை. நாத்தனாரின் மனஸ்தாபத்தைக் கீதா சிறிதும் லட்சியம் பண்ணவில்லை.

வீட்டு வாயிலில் வந்து நின்ற வண்டியைக் கண்டதும் விமலா ஓடிவந்து வண்டியினின்றும் இறங்கிய சிநேகிதியை வரவேற்றாள் "உன் கணவர் வரமாட்டார் என்பது எனக்குத் தெரியும். எங்கள் வீட்டுக்கெல்லாம் அவரைப் போன்ற பெரிய மனிதர்கள் வருவார்களா?" என்று குத்தலாகப் பேசிய அவள் பொறாமையும் குரோதமும் பொங்கும் விழிகளால் சிநேகிதியின் அற்புத அலங்காரத்தை விறைத்துப் பார்த்தாள்.

தீக்ஷிதர் தெருவே திரண்டு விட்டதைப் போன்று அங்கே ஜனங்கள் கூடியிருப்பதைக் கண்டு வியப்படைந்தாள் கீதா. "இந்த விருந்து என் கணவருடைய பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கும், 'தென்னிந்தியா டிம்பர் ஒர்க்ஸ்' என்னும் எங்களுடைய தொழிற்சாலை ஆரம்ப தினத்திற்கும் சேர்த்து வைத்த விருந்து. கடிதத்தில் அதை எழுத நான் மறந்து விட்டேன்" என்று விமலா சமாதானம் செய்யும் தோரணையில் சொன்ன பொழுதுதான் கீதாவிற்கு அங்கு வந்திருந்தவர்கள் கூட்டத்தின் தாத்பர்யம் விளங்கியது 'ஏன் இங்கு வந்தோம்?' என்று ஒரு விநாடி அவள் மனம் கஷ்டப்பட்டது. ஆனால், விமலாவின் மந்தஹாஸ வதனத்தைத் திரும்பிப் பார்த்ததும் அவள் மனத்திலிருந்து அது மறுகணம் மறைந்துவிட்டது.

விருந்திற்கு வந்திருக்கும் புருஷர்களை வரவேற்று உபசரிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்த சிவராமன் கண்கள் அடிக்கொரு தடவை விமலாவின் அருகில் பெண்கள் மத்தியில் உட்கார்ந்து கொண்டிருந்த கீதாவை நோக்கிக் கொண்டிருந்தன. கீதா மிகுந்த அழகிதான் என்றாலும் அன்றைய அலங்காரத்தில் தோகை மயிலைப் போன்று மிக்க ஒயிலாக அவனது கண்களுக்குத் தோன்றினாள். புருஷர்களை கவனிப்பதை விட்டு



விட்டுத் திடீரென்று சிவராமன் பெண்கள் உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தான். "ஸ்ரீ நாகராஜன் வரவில்லையா? நீங்கள் மட்டுமாவது வந்து எங்களை கௌரவித்தீர்களே! அதுவரை நாங்கள் பாக்கியசாலிகள்" என்று முகஸ்துதியாகக் கீதாவை நோக்கிச் சொன்னான். அத்தனைப் பெண்கள் அதுவும் கிராமாந்திரப் பெண்கள் நடுவில் அவன் வந்து தன்னிடம் தனி உரிமை பாராட்டி, பேசியது கீதாவிற்குக் கொஞ்சம் அருவருப்பாகவே இருந்த தென்றாலும் அவள் அதை வெளியே காட்டாது, "அவருக்கு வர சௌகரியப்படவில்லை, அதனால் நான் மட்டும் வந்தேன்" என்று தலையைக் குனிந்து கொண்டு பதில் அளித்தாள் அது சமயம் சிவராமன் தன்னிடம் வந்து சகஜமாகப் பேசியதைச் சுட்டிக் காட்டுவது போல் அங்கே இருந்த ஒரு சிறு பெண் பக்கத்திலிருந்த இன்னொரு பெண்ணின் கையைக் கிள்ளி விட்டு ஜாடை செய்து பரிகசிப்பதைக் கீதா கவனித்தாள். அவளுக்கு அந்தச் செய்கை சுருக்கென்று மனத்தில் தைத்தது. "அக்கிரகாரத்து ஜனங்கள் பெரிய வம்புக்காரர்கள் என்று அவள் கணவன் குறிப்பிட்டது எத்தனை உண்மை' என்று அப்போதுதான் அவளுக்கு விளங்கியது. 'இனிமேல் இது மாதிரியான விருந்துகளுக்கு வருவதில்லை. குறுகிய மனப்பான்மை கொண்ட இந்த அஸத்துகளின் உறவு வேண்டாம்" என்று மனத்திலே தீர்மானித்துக் கொண்டாள். கீதா. அவள் மனம் அன்று விருந்தில் ஆனந்தமடைய மறுத்தது.

விருந்து அமர்க்களம் முடிந்து எல்லோரும் சென்றதும் கீதா விடை பெற்றுக் கொண்டு கிளம்பினாள்.

கீதா கட்டியிருந்தபுடைவையின் நிறம் மிகவும் நன்றாயிருந்தது என்றான் சிவராமன், சகோதரியுடன் தனியாகக் கூடத்தில் உட்கார்ந்திருந்தபொழுது.

"என்ன அண்ணா? எப்பொழுதிலிருந்து நீ புடைவைக் கலர்களை வர்ணிக்க ஆரம்பித்திருக்கிறாய்? உனக்கு வர்ண பேதமே ஒன்றும் தெரியாது என்று இத்தனை நாள் நான் நினைத்தேன்" என்று குரோதமாகக் கேட்டாள் சகோதரி.

''சாதாரணமாகச் சொன்னால் உனக்கு ஏனோ விபரீத புத்தி? விமலா. நீ மிக்க பொறாமைக்காரி!'' என்று எரிந்து விழுந்தான் சிவராமன்.

''ஆமாம், நான் பொறாமைக்காரி; நீ பொறுமைசாலி! உன் குணத்தைப் பற்றி என்னிடம் தானே அளக்க வேண்டும்?'' என்று ஆத்திரமாக மொழிந்தாள் விமலா.

## 31

விமலாவின் வீட்டு விருந்தைப் பற்றி நாகராஜன் ஒன்றுமே விசாரிக்கவில்லை. அதுவரை கவலை விட்டதென்று கீதா நிம்மதியாக இருந்தாள் ஆனால் அன்றிரவு விச்ராந்தியாக ஹாலில் வந்து உட்கார்ந்து கொண்ட பாகிரதியம்மாள் விருந்தைப் பற்றிய பேச்சை ஆரம்பித்தாள்.

''சமையல் எப்படி இருந்தது?'' என்று பாகிரதி கேட்டாள்.

வெளிப்புறத் தோட்டத்தைப் பார்த்தவள் போல் யோசனையுடன் ஜன்னல் அருகே நின்று கொண்டிருந்த கீதாவுக்கு நாத்தனார் தன்னிடந்தான் அந்தக் கேள்வியைக் கேட்கிறாள் என்று அறிந்து கொள்ளச் சில வினாடிகள் சென்றன. ''சுமாராக இருந்தது'' என்று சுருக்கமாகப் பதில் அளித்தாள் அவள். ''எத்தனை பேரைச் சாப்பாட்டிற்கு அழைத்திருந்தார்கள்?'' என்று விடாமல் பாகிரதி மேலே கேட்டாள்.

''நிறையத்தான் அழைத்திருந்தார்கள். சுமார் நூறு பேராவது வந்திருப்பார்கள்' தீக்ஷிதர் தெருவே அங்கே வந்து விட்டது என்றே சொல்ல வேணும்'' என் கீதா கூறினாள்.

''ஒரு சின்ன பிறந்தநாள் விருந்துக்கு இத்தனை அமர்க்களமா? வேண்டிக் கிடக்கலை!'' என்று அதிருப்தியுடன் பாகிரதி முகத்தைச் சுளுக்கினாள்.

''பிறந்த நாள் மட்டுமல்ல அக்கா! தென் இந்தியா டிம்பர் ஒர்க்ஸ்'' என்னும் சுப்பிரமண்ய அய்யருடைய தொழிற்சாலை ஆரம்பத்தின் விழாவையும் சேர்த்துக் கொண்டாடினார்கள்.''



''என்ன! சுப்பிரமண்ய அய்யர் ஆரம்பிக்கிற மர வியாபாரத்திற்குக் கொடுத்த விருந்தா? அதற்கா நீ போனாய்? அங்கு வந்திருப்பவர்களுக்கெல்லாம் நீதான் நாகராஜன் பெண்டாட்டின்னு தெரிந்திருக்குமே?'' என ஆச்சர்யம் தாங்காமல் பாகிரதியம்மாள் வினவினாள்.

''எனக்கு முதலில் அந்த விருந்தின் முழு தாத்பரியமும் தெரியாது. விமலா எழுதிய கடிதத்தில் அதைப் பற்றி எழுத மறந்துவிட்டாளாம். போன பிறகு எப்படித் திரும்பி வருகிறது? அதனால்...'' என்று கீதா சொல்லி முடிப்பதற்குள், கையில் பிடித்துக் கொண்டிருந்த பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு, ''ஆமாம், அக்கா! கீதாவுக்கு அந்த விருந்தைப் பற்றிய விஷயமும் முதலில் தெரிய நியாயமே இல்லை. நான்கூட அந்தக் கடிதத்தைப் பார்த்தேன், அதில் அவள் சிநேகிதி தனது கணவன் பிறந்த நாள் விருந்து என்றுதான் குறிப்பிட்டிருந்தாள். நான் இன்று ஆபீஸிற்குப் போனபின்புதான் சங்கதி எனக்குத் தெரிந்தது. 'தென்னிந்தியா டிம்பர் ஒர்க்ஸ்'ஸின் ஆரம்ப விழாவைப் பற்றியும் அதையொட்டி சுப்ரமண்ய அய்யர் கொடுக்கும் விருந்தைப்பற்றியும் ஆபீஸ் மானேஜர் என்னிடம் சொல்லிவிட்டு சிவராமன் அனுப்பியிருந்த அழைப்புக் காகிதத்தையும் கொடுத்தார்'' என்றான் நாகராஜன் நிதானமாக

பாகிரதிக்குத் தம்பி மீது ஏற்பட்ட கோபத்தில் என்ன வெல்லாமோ பேச வேண்டும் என்று தோன்றியது. ஆனால் பதிலுக்கு, ''தேவலையே அண்ணாவும், தங்கையும்! தங்கை தன் சிநேகிதியைச் சாப்பிடக் கூப்பிட்டாள். அண்ணன் உன்னை விருந்துக்கழைத்தான். சாமார்த்தியக் காரர்கள் தான் இரண்டு பேரும்!'' என்றாள்.

இந்த சம்பாஷணை மேலே எங்கே போய் நிற்குமோ என்று கீதாவுக்கு ஒருவித அச்சம் ஏற்படவே ஹால் கடிகாரத்தை ஒரு தடவை பார்த்தாள். ''நாழியாச்சே,

அக்கா! நான்போய் இலை போடட்டுமா?'' என்று கேட்டுவிட்டு நாத்தனாரின் பதிலை எதிர்பார்க்காமல் அங்கிருந்து மெல்ல மறைந்தாள்.

தம்பி மனைவி அங்கிருந்தகன்றதும் பாகீரதிக்கு மேலே பேசாதிருக்க முடியவில்லை. ''ஆமாம், ராஜா! விஷயம் தெரிஞ்சதும் உடனே கீதா அங்கே விருந்துக்குப் போகக்கூடாதுன்னு ஆள்மூலம் சொல்லியனுப்பக் கூடாதா?'' என்று கேட்டாள் ஆத்திரமாக.

''நான் வேண்டுமென்று தான் சொல்லவில்லை. இரண்டு பேர்களையும் விருந்துக்குக்கூப்பிட்டிருந்தார்கள். அவளாவது போகாவிட்டால், நன்றாயிருக்குமா அக்கா?'' என்றான் சாந்தமாக.

''உன்னுடைய மனசிலே என்னதான் நீ நினைத்துக்கொண்டு இருக்கியோ, அது எனக்குத் தெரியாது! எனக்கென்னவோ நம்ப கீதா அந்தப் பொண்ணுடன் சிநேகிதம் கொண்டாடுகிறது கட்டோடு பிடிக்கவில்லை. அந்தப் பெண் முகத்தைப் பார்த்தாலே விஷமம் பொங்கி வழிகிறதுபோல் தோன்றுகிறது இந்த சிநேகிதம் நல்லதுக்கில்லை. அவ்வளவுதான்!'' தீர்மானமாகப் பதிலளித்தாள்.

''விமலா நேற்று இன்றைய சிநேகிதி இல்லையே! ஒரே ஊரில் பிறந்து வளர்ந்து ஒன்றாய்ப் படித்து ஒரே ஊரில் வாழ்க்கைப்பட்ட பல நாள் சிநேகிதிகள். திடீரென்று கீதாவை உன் சிநேகிதியைப் பார்க்காதே. பேசாதே என்றால் அவள் மனம் புண்பட்டுப் போய் விடாதா, அக்கா? இதையெல்லாம் பற்றி நீ அநாவசியமாகக் கவலைப் படாதே'' என்றான் நாகராஜன்.

''கோபுரத்தைத் தாங்குகிறது பொம்மையா! அதில்லை! இரண்டு பேருக்கும் எப்படி நடந்து கொள்கிறதுங்கிறது தெரியாதா ?என்ன? அப்படியிருந்தும் என் மனது அநாவசியமாகக் கிடந்து அடிச்சுக்கிறது!'' என்று பெருமூச்சு விட்டாள் பாகீரதி.



கீதாவுக்கு அன்றிரவு வெகு நேரமாகியும் தூக்கமே வரவில்லை. விமலாவின் வீட்டு விருந்தின் பொருளை அறிந்தும் நாகராஜன் அவள் அங்குப் போனதை ஆட்சேபிக்கவுமில்லை, அதைப்பற்றிக் கேட்கவும் இல்லை. அது அவனுடைய பரந்த மனப்பான்மையை எடுத்துக்காட்டுவதாக நினைப்பதா? அல்லது, தனக்குப் பிடிக்காவிட்டாலும் மனைவியுடன் அடிக்கடி வீண் மனஸ்தாபம் ஏன் என்ற கொள்கைக்காக என்று நினைப்பதா?

விமலாதான் ஆகட்டும், விருந்தின் நோக்கத்தைப் பற்றிக் கடிதத்தில் ஏன் தெரிவிக்கவில்லை? உண்மையாகவே மறந்து விட்டாளா? அல்லது வேணுமென்றே செய்த சூழ்ச்சியா...? இதென்ன வேடிக்கை! எத்தனையோ நாள் பழகியும் மனத்தில் உள்ள எண்ணத்தை அறிய முடியாத கணவன் ஒரு பக்கம்! எத்தனை வருஷங்களோ பழகிய பின்னும் சரியாகப் புரிந்துகொள்ள முடியாத மனம் படைத்த சிநேகிதி ஒரு பக்கம், கீதா மாறி மாறி இதே சிந்தனைகளில் ஈடுபட்டு வெகுநேரம் தூங்காது விழித்திருந்தாள். கடைசியில் யோசித்து யோசித்து அலுப்படைந்த அவளது மனது ஓர் முடிவுக்கு வந்தது.

''விமலாவின் சிநேகிதம் உண்மையானதோ பொய்யானதோ, எப்படியாக வேண்டுமானாலும் இருக்கட்டும், அவளது கணவன் நாகராஜன் உண்மையில் பரந்த நோக்க முடையவனோ அல்லது பொய்யாக நடிப்பவனோ, எப்படியாகிலும் இருக்கட்டும், இனி செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். வீட்டில் நாத்தனாருக்குப் பிடிக்காத விமலாவின் சிநேகிதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டியது. அவ்வளவுதான்''— இந்தத் தீர்மானத்துடன் தூங்க ஆரம்பித்தாள் கீதா.

மேற்கண்ட தீர்மானத்தைக் கீதா கைக்கொண்டு இரண்டு நாட்கள் கூடக் கழியவில்லை, அதற்குள் அதை அவள் கைவிடும்படியானதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டது.

புத்தம் புதியதொரு கம்பீரமான பெரிய காரில் வந்திறங்கிய விமலா உரிமையுடன், ''கீதா! கீதா!'' என்று அழைத்துக்கொண்டு பின்கட்டிற்குச் சென்றாள். அங்குக் கைவேலையாக இருந்த கீதாவைக் கண்டு அதிசயித்து திகைத்து நிற்பவள் போல முகவாயில் கையை வைத்துக் கொண்டு ஸ்தம்பித்து நின்றாள். காலையில் ஸ்நானம் செய்து காய வைத்த கூந்தலை வாரிக் கொள்ளாது அப்படியே முடிந்துகொண்டிருந்த கீதாவின் நெற்றியில் வியர்வை அரும்பியிருந்தது. அதைத் துடைத்துக் கொள்ளக்கூட நேரமில்லாதவள்போல் அவள் அவசர அவசரமாக இட்லிக்கு மாவை அரைத்துக்கொண்டிருந்தாள்.

''என்ன கீதா இது?'' என்று வியப்புடன் வினவிய விமலா அங்கிருந்த பெஞ்சின்மீது உட்கார்ந்து கொண்டு சிநேகிதியை இரக்கத்துடன் பார்த்தாள்.

''நாளைக்குக் காலை டிபனுக்காக இப்போதே வேலை செய்கிறேன்'' என்று கீதா லேசாகச் சிரித்தாள்.

''அதற்கு நீதான் செய்ய வேணுமா?'' உங்க வீட்டு சமையற்காரி எங்கே? அவள் செய்யக்கூடாதா? வீட்டு வேலையென்றால் தராதரம் கிடையாதா?'' என்றாள் விமலா ஆச்சர்யத்துடன்.

''எங்க சமையற்காரம்மா ஊருக்குப் போனவள் 'டைபாய்டு' ஜுரம் வந்து ரொம்ப கஷ்டப்பட்டு விட்டாளாம். இன்னும் மூன்று மாதங்களுக்கு அவளால் வர முடியாது என்று கடிதம் போட்டு விட்டாள். அதனால்'' என்று கீதா மேலே கூறாது நிறுத்தினாள்.

''அதனால் நீ இந்த வீட்டிற்குச் சமையற்காரியாகி விட்டாயாக்கும்? பேஷ்! பேஷ்! என்ன படித்து என்ன? வாழ்க்கையை எப்படிச் சந்தோஷமாக வாழ்கிறதென்று உனக்குக் கொஞ்சம்கூடத் தெரியவில்லையே! இந்த சமையற்காரி இல்லாவிட்டால் இன்னொருத்தியை அமர்த்திக் கொள்ளக் கூடாதா? இந்த மாதிரி மோட்டா வேலை



யெல்லாம் செய்ய நம்மால் ஆகுமா?'' என்று விமலா கவலையுடன் கேட்டாள்.

''தங்கம்மாள் இல்லாவிட்டால் வேறு ஒருத்தரும் சமையலுக்கு வேண்டியதில்லை என்று என் நாத்தனார் பிடிவாதமாகச் சொல்லி விட்டார். அவருடைய பழக்க வழக்கத்திற்கு வேறு யாரும் ஒத்துவர முடியாது'' என்றாள் கீதா குறையுடன்.

''தம்பி கார் வாங்கக் கூடாது; தம்பி மனைவிதான் சமையற்காரி இல்லாவிட்டால் வேலை செய்யணும் அப்பப்பா! வீட்டிற்கே சர்வாதிகாரி போலிருக்கே உன் நாத்தனார்! ஒரே நாளில் அந்தம்மாளுடைய குணம் எனக்கு நன்றாகப் புரிந்து போய்விட்டது கீதா! உண்மையில் எனக்கு உன்னிடம் அடிக்கடி பேச வேண்டும் என்று ஆசை ஏற்படும். ஆனால் உன் நாத்தனாரின் கடுமையான முகம் ஞாபகத்திற்கு வந்ததும் உடனே நான் என் ஆசையை அடக்கிக் கொள்வேன் பாவம். கீதாவுக்கு நம்மால் ஏன் வீண் கஷ்டம் என்றுதான் நான் அடிக்கடி இங்கே வருவதில்லை'' என்று கூறிவிட்டு விமலா தாழ்ந்த குரலில், ''ஆமாம் உன் நாத்தனார் இப்போ எங்கே?'' என்று கேட்டாள்.

''சமையற்கட்டில் இருக்கிறாப் போலிருக்கிறது! ஏன் கேட்கிறாய்?''

''நான் இங்கே வந்ததன் முக்கிய நோக்கம் ஒரு விஷயத்தை உனக்குச் சொல்லத்தான். நான், சின்ன மாமனார், மாமியார் எல்லோரும் நேற்று ராத்திரி எட்டுமணி சுமாருக்கு காரில் பொன்னேரி வழியாக வந்து கொண்டிருந்தோம். ஏரியோரத்தில் ஒரு ஓட்டு வில்லை வீடு இருக்கிறது. தன்னந்தனியான இந்த வீட்டில் யார் வசிக்கிறார்கள் என்று நான் ஆச்சரியப்பட்டுத் திரும்பிப் பார்த்தேன். என் கண்களையே நம்ப முடியவில்லை நாகராஜன் அந்த வீட்டிலிருந்து வெளிப்பட்டு வாயிலில் நிறுத்தியிருந்த மோட்டார் சைக்கிளில் வந்து ஏறி உட்கார்ந்து கொண்டார். பின்னாலேயே வெளியில் வந்த பொன்னி,

அவருக்குப் போக விடை கொடுக்கத் தயங்குகிறவள் போல மிகவும் ஒய்யாரமாகத் திண்ணையருகில் வந்து நின்று கொண்டாள். அந்தக் காட்சி ஒரே விநாடி நடந்ததென்றாலும் எனக்கு அது தமிழ்க் காவியங்களில் வரும் சில காதல் கட்டங்களை நினைவுறுத்தியது. நீ அன்று சொன்னதுகூட ஏதோ சந்தேகத்தில் சொன்ன விஷயம் என்று நினைத்தேன். ஊரார் எல்லோரும் பொய் சொல்வதாக எண்ணினேன். என் கண்ணாலேயே பார்த்ததும் எனக்கு ஏற்பட்ட மன அதிர்ச்சியைச் சொல்லவேமுடியாது கீதா! இது என்ன அசட்டுத்தனம்! என்னத்திற்கு அழுகை. சே! சே! அழுகிறதனால் எல்லாம் இந்தப் புருஷர்களை வழிக்குக் கொண்டு வந்துவிட முடியுமா? கண்ணைத் துடைத்துக் கொள். உன் நாத்தனார் வந்தால் ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறார்!'' என்று மூச்சுவிடாமல் பேசினாள் விமலா.

விஷயத்தைக் கேட்ட கீதாவின் நெஞ்சு பதைபதைத்தது. கைகள் உணர்வற்று வேலை செய்ய மறுத்தன. மௌனமாக அவள் தரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''கீதா! ஏன் வீணாக வருத்தப்படுகிறாய்? விட்டுத் தள்ளு! அவ்வளவுதான். அது கிடக்கட்டும். நாளை பௌர்ணமி, தெரியுமா? நாங்கள் எல்லோரும் நிலவிலே கொஞ்ச நேரம் வேடிக்கையாகக் கார் சவாரி செய்வதாக உத்தேசம் செய்திருக்கிறோம். நீ வருகிறாயா அதற்கு?'' என்று கேட்டாள்.

''கார் சவாரியா! இரவிலா! நான் வர முடியாதே! அவர் ஒப்புக்கொள்ள மாட்டார். நாத்தனார் ஏதாவது சொல்லுவார்'' என்றாள்.

''அவர் என்ன சொல்கிறது! தான் செய்கிறது முழுவதும் தப்பு, மனைவியை அடக்குவதில் குறைச்சலில்லை! நான் ஒன்று செய்கிறேன், நாளை சாயங்காலம் ஒரு கடிதம் எழுதி ஆபீஸ் பையனிடம் கொடுத்தனுப்புகிறேன், அதைப் பார்த்துவிட்டு நீ புறப்பட்டு விடு. முடிந்தால், டிரைவரிடம் கார் கொடுத்தனுப்புகிறேன். பிறகு



திரும்பிப் போகும்போது ஏதாவது உன் நாத்தனாரிடம் சாக்குச் சொல்லிவிட்டால் போச்சு. தலையையா இறக்கிவிடப் போகிறார்கள்? உன் அகத்துக்காரர் அநேகமாக நாளைக்கு நாழி கழித்துத்தான் வீட்டிற்கு வருவார் என்பது என் ஊகம். பௌர்ணமி நிலவை வீணே வீட்டில் கழிக்க அவருக்குப் பைத்தியமா?' என்று கேலியாகச் சிரித்தாள் விமலா. கீதாவின் மனத்தில் வேதனை நிரம்பியது.

## 32

விமலா சொன்ன அவ்வளவும் உண்மை என நிரூபிப்பவன்போல் அன்று ஏனோ நாகராஜன் இரவு அதிக நேரமாகியும் வீடு திரும்பவேயில்லை. சிநேகிதி சொன்ன விஷயங்களை நினைத்து நினைத்து வெந்து உழன்று கொண்டிருந்த கீதாவின் கண்கள் சஞ்சலத்துடன் ஒவ்வொரு விநாடியும் தொழிற்சாலையினின்று திரும்பும் கணவனது வருகையையே கவனித்துக் கொண்டிருந்தன.

''எங்கு சென்றிருப்பார்? இன்றைக்குக்கூட அவள் வீட்டுக்குப் போயிருப்பாரா?'' என்று பலவாறு எண்ணி மனம் புண்ணாகிக் கொண்டிருந்த அவள் முன்கட்டிற்கும் பின்கட்டிற்கும் அடிக்கடி நடந்து களைத்துப் போய், கடைசியில் மாடியறைக்குள் சென்று சோர்வுடன் படுத்துக் கொண்டாள். திடுக்கிட்டு அவள் விழித்துக்கொண்டு பார்க்கையில் அறையில் பிரகாசமாக விளக்கு எரிவதையும் அப்பொழுதுதான் வெளியிலிருந்து வந்தவன்போல் தென்பட்ட நாகராஜன் பீரோவிற்குள் ஆபீஸ் காகிதங்களை அடுக்கி வைத்துக் கொண்டிருப்பதையும் கண்டாள்.

''படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்தாள் கீதா. ''ஆமாம்! நீங்கள் இப்பத்தான் வந்தீங்களா?'' என்று ஆவல் தாங்காது கேட்டாள்.

''ஆமாம்!'' என்று பதிலளித்த நாகராஜன் அவள் பக்கங்கூட திரும்பாது தனது வேலையை 'கவனித்துக் கொண்டிருந்தான். அவனது அசட்டையான பதில் கீதாவின் கோபத்தையும் துக்கத்தையும் மேலே தூண்டி விட்டது.

கணவனுடன் சண்டை போடுவதில் பயன் இல்லை என்று அநுபவத்தில் உணர்ந்திருந்த கீதா, ''எல்லாம் ஆறி அவலாகப் போயிருக்குமே! இந்தக் காரியத்தை அப்புறம் கவனிக்கலாம் கீழே சாப்பிட வருகிறீர்களா?'' என்று மெல்லக் கேட்டுக் கொண்டே எழுந்திருந்தாள்.

''இன்று மானேஜர் வீட்டில் எனக்கு விருந்து நடந்தது நான் சாப்பிட்டுவிட்டு வந்திருக்கிறேன்'' என்று சொல்லி விட்டுப்புன்னகை செய்தான் கணவன். கீதா பதில்சொல்லவில்லை. அவன் பொய் சொல்லுகிறான் என்று மட்டும் அவளுக்குத் தோன்றியது. ஆனால் அதைப் பற்றி அவள் விவாதிக்கவும் இல்லை. கீழே பாகீரதி தன்னை அழைக்கும் குரல் கேட்டு மெளனமாக இறங்கிச் சென்றுவிட்டாள்.

அடுத்தநாள் எப்பொழுது வரும், விமலாவை எப்பொழுது சந்திப்போம், அவன்சொன்னது உண்மையா, அவளிடம் தனது மனக்குறையை எப்பொழுது பேசி ஆறுதலடைவோம் என எண்ணித்துடித்துக் கொண்டிருந்த கீதா மறுநாள் சாயங்காலம் பங்களா வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டதும் ஆவல் தாங்கமுடியாது ஓட்டமும் நடையுமாக வாசலை அடைந்தாள்.

''உன்னை அழைத்துப் போவதற்கு டிரைவரையும் காரையும் அனுப்பினால் எங்கே நீ வராது இருந்துவிடுவாயோ என்று நானும் அண்ணாவும் நேரே வந்திருக்கிறோம்'' என்று உற்சாகமாகக் கூறிக் கொண்டு காரிலிருந்து இறங்கி உள்ளே வந்தாள் விமலா. ''இதுதான் எங்கள் புதிய கார். நன்றாயிருக்கிறதா, கீதா?'' என்று கேட்டாள்.

புதிய பளபளப்புடன் மின்னிக் கொண்டு நின்ற அந்தக் காரை கீதா திரும்பிப் பார்த்தாள். அதைவிட அழகிய கார்கள் பலவற்றை ஏககாலத்தில் வாங்க அந்தஸ்திருந்தும் தன் கணவன் அப்படி ஒன்றும் வாங்காதுமாட்டு வண்டியில் பிரயாணம் செய்வதை நினைத்து அவள்மனம் ஒருகணம் ஏங்கியது அதற்குக் காரண பூதமாக இருந்த நாத்தனாரையும் அவள் மனம் அது சமயம் உள்ளூரச் சபித்தது.



பாகீரதி போக விடை தருவாளோ என்னவோ என்று குழப்பத்துடன் உள்ளே சென்ற கீதா முதலில் மாடி அறைக்குச் சென்றாள். வெகு சீக்கிரத்தில் வெளியே செல்லத் தன்னை அலங்கரித்துக் கொண்டு கீழே இறங்கிப் பின் கட்டிற்கு வந்தாள்.

''அக்கா, நான் கொஞ்சம் விமலாவுடன் அவா வீட்டு வரைக்கும் போய்விட்டு வரட்டுமா?'' என்று மெல்லக் கேட்டாள் கீதா.

பாகீரதியம்மாள் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து அவளைத் திரும்பிப் பார்த்தாள். ''என்னைக் கேட்டால் நான் என்ன சொல்கிறது? அவன் உத்தரவு கொடுத்திருந்தால் சரி'' என்றாள் மிகவும் அசட்டையாக.

''விமலா வீட்டிற்கு நான் போய் வருவதற்கு அவர் உத்தரவு கொடுத்திருக்கிறார். அக்கா உங்களிடம் சொல்லிக் கொண்டு போகவே கேட்டேன்'' என்றாள் துணிவுடன்.

''அப்படியா, சரி! ஆபீஸிலிருந்து அவன் வந்துவிட்டால் நீ எப்ப வருவேன்னு அவனிடம் சொல்றது? திரும்பி வர எவ்வளவு நாழியாகும்?'' எனக் கேட்டாள் பாகீரதி விடாமல்.

''ஆபீஸிலிருந்து அவர் எங்கே சுருக்க வரப்போகிறார்? அவர் வருவதற்குள் நான் திரும்பி வந்துவிடுவேன்'' என்றாள் கீதா அலக்ஷ்யமாக.

''அவன் சீக்கிரம் வரமாட்டான் என்று எப்படி நாம் நிச்சயிக்க முடியும்! அங்கே வேலை முடிஞ்சு பேச்சுன்னா உடனே வந்துடறான் களைச்சுப் போய் அவன் வீட்டுக்கு வரும்போது நீ [illegible] வீட்டுக்குப் போயிருந்தா, அவன் மனசுக்குக் கொஞ்சம் கஷ்டமாகத் தானிருக்கும். அதுக்காகத்தான் கேட்டேன். அப்புறம் தங்கம் கூட ஆத்தில் ஒத்தாசை இல்லாததனால் கொஞ்சம் சீக்கிரமா நீ வந்துவிட்டால் சௌகரியமாயிருக்கும்'' என்று இழுத்தாற் போல் கூறினாள் பாகீரதி.

நாத்தனாரின் வார்த்தைகள் சுருக்கென கீதாவின் மனத்திலே பட்டன. ''ஏன் அக்கா! நானும் கேட்க வேண்டும் என்று தானிருந்தேன். சமையற்காரி தங்கம் வராவிட்டால்நமது வீட்டு வேலை ஒன்றும் நடக்காதா! உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? அவரிடம் சொல்லி வேறு ஒருத்தியை வேலைக்கு ஏற்பாடு பண்ணக் கூடாதா? என்னால் இந்த வீட்டுவேலை செய்ய முடியவில்லை. ரொம்ப அலுப்பா இருக்கு, அக்கா!'' என்று குரோதமாகச் சொன்னாள்.

பாகீரதி தம்பி மனைவியின் முகத்தில் பொங்கி வழிந்த கோபத்தைக் கண்டு அசந்து போய் விட்டாள் ''எனக்குப் பழக்கமாகி விட்டதனால் அலுப்புத் தெரியவில்லை. உன்னால் முடியாவிட்டால் நீ வேலை செய்ய வேண்டாம் அம்மா தங்கத்தைத் தவிர இங்கே வேலை செய்ய வேறு யாரும் லாயக்கில்லை. அது கிடக்கட்டும். நீ போய்விட்டுச் சீக்கிரம் திரும்பி வந்துவிடு'' என்று புன்னகை செய்து விட்டு முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

பாகீரதி மேலே சம்பாஷணையைத் தொடர்ந்திருந்தால் கீதாவுக்கு இருந்த மனநிலையில் ஒரு மூச்சுசண்டை போட வேண்டும் போலிருந்தது. உங்களால்தான் என் கணவர் கார் வாங்காது பிச்சைக்காரன் போல் அந்தஸ்திற்குக் கீழே வசிக்க நேருகிறது. உங்களால்தான் இத்தனை பணமிருந்தும் நான் வேலைக்காரி போல் வீட்டில் தொண்டு செய்துகொண்டிருக்கிறேன், உங்களால்தான் என் வாழ்க்கையே இப்படிப் பாழாகிப்போய்க் கொண்டிருக்கிறது, என்று மனத்திலே அடக்கி வைத்திருக்கும் சொல்லம்புகளை வாரி வீசி ரகளை செய்திருப்பாள் கீதா! ஆனால் பாகீரதியம்மாளின் எல்லையற்ற சாந்தம் அப்படி எழவிருந்த சண்டையின் குறிப்பறிந்து முற்றுப் புள்ளி வைத்துவிட்டது.

மனத்தில் நாத்தனார்பால் ஏற்பட்ட துவேஷத்தை வார்த்தைகளால் தெரிவிக்க முடியாத கீதா தனதுசெய்கையால் காட்டுகிறவள் போல் விடுவிடென்று அங்கிருந்து சென்று சிநேகிதியின் காரில் ஏறிக்கொண்டாள்.



விமலா கூறியபடி திரும்பி தீக்ஷிதர் தெரு பக்கம் கார் செல்லாது சென்னை செல்லும் ராஜபாட்டையின் வழியே திரும்பிச் செல்வதைக் கவனிக்கக் கீதாவிற்குக் கொஞ்ச நேரம் ஆயிற்று. ''என்ன விமலா உன் அண்ணா மறந்து விட்டாரா, என்ன? மாமா, மாமி இவர்களை அழைத்துக் கொள்ளாமல் போகிறாரே!'' என்று அதிசயத்துடன் வினவினாள்.

''ஐயோ! சொல்ல மறந்து விட்டேன், நேற்று முழுவதும் எங்களுடன் வருவதாகச் சொன்ன என் சின்ன மாமியார் இன்று மத்தியானம் திடீரென்று நினைத்துக் கொண்டு வரவில்லை என்று மறுத்து விட்டார். மனைவி வராது மாமனார் எங்கேயும் வெளியே கிளம்ப மாட்டார். இவர்கள் வராவிட்டால் என்ன? இதற்காகக் கீதாவிற்கு வாக்கு கொடுத்ததை நான் ஏன் தவிர்க்க வேண்டும் என்று நான் முக்கியமாக உன்னை உத்தேசித்தே வந்தேன்'' என்றாள் விமலா.

எதிர்பாராத இந்தச் சங்கதியை கேட்டுக் கீதாவின் மனம் திடுக்கிட்டு விட்டது, விமலா வீட்டிலிருந்து பெரியவர்கள் இருவரும் வரப் போவதாக எண்ணித்தான் அவள் சிநேகிதியுடன் வெளியே செல்லச் சம்மதித்திருந்தாள் தாங்கள் மூவர் மட்டும் காரில் நிலாச் சவாரி செய்து வருவது என்றால் அவளுக்கு மிகவும் அசம்பாவிதமாகத் தோன்றியது.

அவர்கள் வராதது நல்லதாயிற்று! எங்கே வந்து விடப் போகிறார்களோ என்றே நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். சுப்ரமண்ய அய்யர் ஒரு பெரிய தொண தொணப்புப் பேர்வழி'' என்று உல்லாசமாகக் கூறிவிட்டு சிவராமன் பின் ஆசனத்தில் தன் சகோதரி அருகில் உட்கார்ந்திருந்த கீதாவைத் திரும்பிப் பார்த்தான்.

கீதாவின் உடல் அவனது உல்லாசப் பார்வை காரணமாக அருவருப்பால் கூசியது. ''சீ! என்னத்திற்கு இவர்

களுடன் வெளியே கிளம்பினோம்? சுத்த பிசகான காரியம்!'' என்று அவள் மனம் ஏதோ பெரிய குற்றஞ் செய்து விட்டதைப் போல் துடித்தது.

தண்மையான நிலவொளியைப் பிளந்து கொண்டு வேகமாக ஓடிய கார் அவளுக்கு ஒருவித சந்தோஷத்தையும் கொடுக்கவில்லை. பாகிரதியம்மாளிடம் எரிச்சலுடன் ஏன் பேசினோம்? பாவம் அவர் எத்தனையோ அன்பான நாத்தனார் ஆயிற்றே? அவரிடம் கோபித்துக் கொண்டது சரியல்ல அக்கா சொன்னபடி அவர் ஆபீஸிலிருந்து இத்தனை நேரம் திரும்பி வந்திருந்தால், என்ன நினைத்துக் கொள்வாரோ! ஆமாம் அவர்தான் சபலபுத்தியில் பொன்னியுடன் சிநேகிதமாக இருக்கிறார் என்றால் அதற்காக மனைவி ஸ்தானத்திலிருக்கும் கீதா வஞ்சம் தீர்த்துக் கொள்வது போல் விமலாவின் சகோதரனுடன் பேசுவதும் பழகுவதும்—சே! என்ன அருவருப்பான செய்கை.

விமலா எத்தனைதான் உண்மையான சிநேகிதியானாலும் அவளை பூரணமாக நம்புவது பிசகு கணவனை எதிர்த்துச் சண்டையிடும்படி உபதேசிக்கிறாளே, அது சரியா? சிவராமன் ஏன் இப்படிப் பார்க்கிறார்? பேச்சுகள் ஏன் இப்படி அசம்பாவிதமாக இருக்கின்றன? நிலவொளியில் காரில் இந்த மூவர் மட்டும் தனியே இரவில் வெளியில் சென்று வந்த விஷயம் கணவனுக்குத் தெரிந்தால்... இவ்வாறு பல எண்ணி வருந்திய கீதா வீட்டிற்கு திரும்பினால் போதும் என்று துடித்தாள்.

''என்ன கீதா!'' ரொம்ப அவசரப் படுகிறாயே! என்று விமலா மனஸ்தாபத்துடன் கேட்டாள்.

''போதும் வீட்டுக்குப் போகக் காரைத் திருப்புங்கள், அவர் வரும்போது நான் வீட்டில் இல்லாவிட்டால்' கோபித்துக் கொள்வார்'' என்றாள் கீதா கலவரத்துடன்.

உன் கணவரைக் கண்டு நீ இப்படி நடுங்கி சாவதுனால்தான் அவர் 'இப்படித் துள்ளித்' திரிகிறார்.



கொஞ்ச நேரம் நிலவொளியில் சிநேகிதியுடன் போய் உலாவிட்டு வந்தால் என்ன தப்பாம்?'' என்றாள் விமலா கோபத்துடன்.

''எனக்கு மட்டும் ஒரு மனைவி இருந்தால் அவளை நான் எப்படி நடத்துவேன் தெரியுமா? அவளுக்கு எல்லா வித சுதந்திரமும் கொடுத்து விடுவேன் என் சிநேகிதர்கள், பந்துக்கள் இவர்களுடன் அவள் சரிசமானமாகப் பழகுவதைக்கண்டு நான் சந்தேகப்படமாட்டேன்'' என்று கூறிய சிவராமன் காரை வீடு செல்லும் பாதைக்குத் திருப்பினான். ''போதும் அண்ணா உன் வாய் வீச்சு! புருஷர்கள் கல்யாணம் செய்து கொள்வதற்குமுன் சொல்வது ஒன்று அதற்குப்பின் நடந்து கொள்ளும்முறை வேறு'' என்றாள் விமலா கேலியாக.

கீதா அந்தச் சம்பாஷணையில் கலந்துகொள்ளவில்லை. மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் ''நீ பாக்கப் போகிறாய்! ஏன் வீண் விவாதம்!'' என்று சிரித்தான் சிவராமன்.

''நான் பார்க்காமல் என்ன? பிஸினெஸ் என்ற முதல் படிமீது கால் வைத்திருக்கிறாய். பிஸினெஸில் பணம் சேர்ந்ததும் உன்னை கையால் பிடிக்க முடியுமா என்ன? நீயும் எல்லாரையும் போல் உனது பணச்செருக்கைக் காட்ட ஆரம்பித்து விடமாட்டாயா? ஏமாந்த பெண் ஒருத்தி உன் பணத்தைக் கண்டு மயங்கி உன்னை மணந்து கொள்ள வருவாள். ஆனால் பாவம் அவள் வீட்டிற்கு வந்ததும் தன் ஸ்தானத்தில் ஏற்கனவே ஒருத்தி இருப்பதைக் கண்டு திகைத்துப் போவாள். போதும் அண்ணா பணமும் வேண்டாம் பெண்களுக்கு மனக்கஷ்டமும் வேண்டாம்!'' என்று பிரசங்கித்தாள் விமலா.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த கீதாவிற்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. நாகராஜனைச் சுட்டிக் காட்டி குத்தலாக அல்லவா விமலா பேசுகிறாள்? ச்சீ?

இவளைச் சிநேகிதி என்று எண்ணி ஏமாந்தல்லவோ போய் விட்டோம்! என அவள் மனம் கலங்கியது.

பங்களாவை அடைந்ததும் நேரே பின் கட்டிற்குப் போன கீதா அப்படியே செயலற்று நின்று விட்டாள். பாகீரதி அம்மாள் பெஞ்சியின் மீது படுத்துக் கொண்டிருந்தாள் அருகில் உட்கார்ந்திருந்த நாகராஜன் கவலையுடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''அக்காவுக்கு உடம்புக்கு என்ன?'' என்று பதறிக் கொண்டு அருகில் ஓடிவந்தாள் கீதா. ''வழக்கமாக வரும் மயக்கந்தான் நான் வெளியிலிருந்து வந்தபொழுது வீட்டிலே ஒரே நிசப்தமாக இருந்தது. என்ன யாரையும் காணோமே என்று ஆச்சர்யப்பட்டுக்கொண்டு வந்தேன். அக்கா மயக்கமாயிருந்தாள் கூப்பிடக் கூப்பிட அரை நாழியாகப் பதிலே இல்லை. கொஞ்சம் குளிர்ந்தஜலத்தை முகத்தில் தெளித்து விசிறிய பிறகுதான் அவளுக்கு நினைவு வந்தது. களைப்பினால் கண்ணை மூடிக் கொண்டிருக்கிறாள், இப்போ ஒண்ணும் ஆபத்தில்லை'' என்று கூறிய நாகராஜன் மனைவியின் பக்கம் திரும்பிப் பார்த்தான். அவளது அலங்கார உடை அவள் சிநேகிதி வீட்டிற்குப் போய் வந்திருந்தாள் என்பதைக் காட்டியது.

''நீ விமலா வீட்டிற்குப் போயிருந்தாயாக்கும்?'' என்று சகஜமாக நாகராஜன் கேட்டான். ஆனாலும் கீதாவிற்கு ஏனோ குற்றவாளியைப் போல் நெஞ்சம் பதைத்தது.

''விமலா வீட்டுக் காரில் நிலாவில் கொஞ்ச தூரம் போய்விட்டு வந்தேன் விமலா வந்து மிகவும் கெஞ்சி யழைத்தாள் தட்ட முடியவில்லை அக்கா வீட்டிலே தனியாக இருக்கிறாரே என்று கவலைப்பட்டு கொண்டு தான் போனேன் அதற்குத் தகுந்தாற்போல்...'' என்று தடுமாறிய கீதா கணவனின் முன் நின்றுகொண்டிருக்க கூசியவள் போல் மாடியறைப் பக்கம் விரைந்தாள்.

அன்று இரவு நாகராஜன் ஆபீஸ் காகிதங்களைப் புரட்டிக் கொண்டே யோசனையில் ஆழ்ந்து போய்



தூங்காது அதிக நேரம் மாடி ஹாலில் உட்கார்ந்திருந்தான். கீதா விமலா வீட்டவர்களுடன் காரில் நிலவொளியில் சென்று வந்தாள் என்ற வார்த்தை ஏனோ அவனுக்கு காரசாரமாகப்பட்டது கீதா அவர்களுடன் பழகுவதைத் தான் ஆட்சேபிக்கவில்லை என்று வெளிப்படையாகக் கூறினாலும் அவனது அந்தராத்மா ஏனோ விமலா வீட்டுச் சிநேகிதத்தை வெறுத்தது. எத்தனை கட்டுப்படுத்தியும் அவன் மனத்தில் அவனை யறியாது ஒரு விதப்பொறாமை உணர்ச்சி சிவராமன் பால் எழுந்து விட்டதை அவன் உணர்ந்தான். கீதா மிகவும் நல்ல பெண்; கள்ளங் கபடமற்றவள். கணவனுக்கு ஒருவித அபகீர்த்தியும் உண்டாக்கமாட்டாள் அப்படிப்பட்ட நம்பிக்கையிருந்தும் நாகராஜனுக்குக் கீதா மீது விவரிக்க முடியாத ஒரு கோபமும் எழுந்தது. தான் வாய்விட்டுச் சொல்லா விட்டால் என்ன? விமலா வீட்டவர்களின் அதிகமான சிநேகிதம் கணவனுக்குப் பிடிக்காது என்று கீதாவுக்கு உணர்ந்து கொள்ளத்தக்க வயதாகவில்லையா? கணவன் மனைவி என்ற இருவரும் ஒருவரை யொருவர் சரியாகப் புரிந்து கொள்ளாத சிக்கலான வாழ்வு! நாகராஜனது மனத்தில் வாழ்க்கைமீது வெறுப்புத்தான் நிரம்பியிருந்தது.

## 33

கீதா செய்தது மிகவும் தவறுதான் நாகராஜன் மிகவும் பரந்த உள்ளம் கொண்டவன். சிறு விஷயங்களை பாராட்ட மாட்டான் என்றாலும் அதற்கும் ஒரு எல்லை இல்லையா? தன் மதிப்பைப் போற்றும் எந்தக் கணவன் தன் மனைவி பிற புருஷனுடன் அதிகம் பழகுவதைச் சகித்துப் பார்த்துக் கொண்டிருப்பான்? என்ன தான் கூட ஒரு சிநேகிதியுடன் வந்தாள் என்றாலும் கல்யாணமான ஒரு பெண் பிரமச்சாரி ஒருவனுடன் நிலவொளியில் அகால வேளையில் காரில் சவாரி செய்து வருவதென்றால், கேட்பதற்கு மிகவும் அசம்பாவிதமான செய்கைதான் அது, நாகராஜனைப் பொறுத்த மனைவி

மீது பூரண நம்பிக்கை இருக்கலாம். பாகீரதியம்மாள் கீதாவைப் பற்றித் தவறாக நினைத்துவிட்டால்? அகஸ்மாத்தாகக் கீதாவைச் சிவராமன் விமலாவுடன் பொன்மேட்டு 'டிம்பர் வொர்க்'ஸில் வேலை செய்யும் யாராவது பார்த்து விட்டால் என்ன நினைப்பார்கள்? நாகராஜனின் மனைவியின் நடத்தையைப் பற்றிச் சந்தேகிக்க அவர்களுக்கு அதிக நேரம் செல்லாது என்று சொல்லத் தேவை இல்லை. புகழ்பெற்ற பொன்மேட்டு 'டிம்பர் வொர்க்'ஸின் முதலாளிக்கு இதைவிட வேறு என்ன அபகீர்த்தி வேண்டும்?

இப்படிப் பலவாறு தனது அசட்டுச் செய்கையை எண்ணி வருத்தமடைந்த கீதா, விமலாவையும் அவர்களது வீட்டையும் பற்றி மறக்க முயற்சித்தாள். நாட்கள் பல சென்றன. விமலாவும் கீதாவைப்பற்றி மறந்து விட்டவள் போல் காணப்பட்டாள். ஒரு மாத காலம் சென்றும் விமலா கீதாவின் பங்களா பக்கமே எட்டிப்பார்க்கவில்லை 'ஒரு சமயம் அவள் பிறந்த வீட்டிற்குப் போயிருக்கிறளோ என்னவோ! எப்படியோ போகட்டும்! நமக்கென்ன?' என்று கீதா தன் மனத்தில் சிநேகிதியைப் பற்றி ஏற்பட்ட ஆவல்களை அடக்கிக் கொண்டாள். நீண்ட விடுமுறையில் ஊருக்குச் சென்றிருந்த சமையற்காரி தங்கமும் திரும்பி வந்துவிடவே கீதாவின் வேலை பொறுப்பு மிகவும் குறைந்து விட்டது, வீட்டு வேலை இல்லாத மீதப் பொழுதை வீணாகச் செலவழிக்காது கீதா கணவனுடைய சிசுருஷைகளில் மிகவும் கருத்தைச் செலுத்தினாள். சதா சர்வ காலமும் அவனது அருகிலேயே இருந்து அவனது மனத்தில் எண்ணியதைக் காரியத்தில் பூர்த்தி செய்தும் நாகராஜனின் முகத்தில் பழைய பிரகாசமும் பூரிப்பும் திரும்பி வரவேயில்லை. வாழ்க்கையில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது என்பது மிகவும் கஷ்டமான காரியம். என்னதான் புருஷன் மனைவி என்றாலும், அத்தனை நெருங்கிப் பழகும் இருவருக்குமே வருஷங்கள் எத்தனை ஆனாலும் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாத விஷயங்கள் பல பாக்கியிருப்பதே அவ்வப்போது



உணருகின்றார்கள். அப்படியிருக்கையில் நாகராஜனைப் பற்றி கீதா அத்தனை குறுகிய காலத்திற்குள் என்னபுரிந்து கொள்ள முடியும்? அவனது நடத்தை மாறுதலுக்குக் காரணம் வேலைத் தொந்தரவினாலா அல்லது வேறு எதனால் இருக்கும்? என்றெல்லாம் முன்போல் கீதா தன் மனத்தை அலட்டிக் கொள்ளவேயில்லை. பூஜையறையில் தினம் கடவுள் படத்திற்குப் புஷ்பங்களைப் போடும் பொழுது அவளது மனம் ஒன்றே ஒன்றைத் தான் வேண்டியது: ''கடவுளே, எது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். பழையபடி நாங்கள் இருவரும் பூரண சந்தோஷமாக இருக்க அருள் புரியும்!'' என்பதுதான் இந்தப் பேதையின் வேண்டுகோளைக் கடவுள் காது கொடுத்துக்கேட்டு அருளினாரா என்பது அவருக்குத்தான் தெரியும்? அன்று காலை தொழிற்சாலைக்குப் புறப்பட்டுச் சென்ற கணவனின் மோட்டார் சைக்கிள் தோட்டத்திலிருந்து மறையும் வரை வாயிலிலே நின்று கொண்டிருந்த கீதா உள்ளே திரும்பிப் போக எத்தனித்தவள்— மிக வேகமாக விமலா வீட்டுக் கார் வருவதைக் கண்டு ஆச்சர்யத்துடன் நின்றுவிட்டாள் விமலாவின் வரவு அவளுக்கு ஒருவித அச்சத்தையே உண்டாக்கியதாகையால், எதற்காக விமலா இவ்வளவு நாட்கள் கழித்து வருகிறாள் என்று அறிய ஆவலுடன் நின்று கொண்டு பார்த்தாள். கார் வந்து வாயில் முன்னால் நின்றது. வண்டிக்குள் ஒருவருமில்லை, ஓட்டிவந்த டிரைவர் வண்டியிலிருந்து அவசரமாக இறங்கி அவளிடம் வந்து ''இதைக் கொடுத்து அம்மா உங்களைக் கூட்டி வரச் சொன்னாங்க'' என்று சொன்னான். அவன் அளித்த கடிதத்தைப் பிரித்துப் படித்தாள் கீதா.

அன்புள்ள கீதா!

உன்னைப் பார்த்துப் பல நாட்கள் ஆகிவிட்டன. நீ என்னை மறந்து விட்டிருந்தாலும் நான் உன்னை மறக்கவில்லை. அண்ணாவுக்கு வேலை அதிகம் இருந்ததனால் தான் நான் அந்தப்பக்கம் அடிக்கடி வர முடியவில்லை.

அதற்காக நீயும் இங்கு வராது ஒரேயடியாக என்னைப் புறக்கணித்து விட்டாயே! இது நியாயமா! உனக்கு இன்று இக்கடிதம் எழுதிய நோக்கம் நமது சிநேகிதத்தைப் பற்றி விஸ்தரிக்க அல்ல! உன்னைப்பற்றியு ஒரு முக்கிய விஷயத்தை உனக்குச் சொல்லத்தான் இக்கடிதம் எழுதினேன். நீ கொஞ்சங்கூடத் தாமதிக்காது காரில் புறப்பட்டு இங்கே நேரே வந்தாயானால் உனக்கு விஷயத்தைச் சொல்வேன். அதைச் சொல்ல வேண்டுமென்று என் மனம் துடிக்கிறது. உடனே வரவும்.

விமலா.

தன்னைப் பற்றிய விஷயம் என்னவாக இருக்கும் என்று கீதாவால் ஊகிக்க முடியவில்லை ஆனால், அவளது சபல புத்தி அதை என்னவென்று அறிய வேண்டுமென்று ஆசைப்பட்டது. ஒருகணத்தில் அவள் மனம் ஒருமுடிவுக்கு வந்தது. பாகீரதியம்மாளிடம் சொல்லிவிட்டு ஒரு நிமிஷத்தில் விமலா வீட்டிற்குப் போய் விஷயத்தைத் தெரிந்து கொண்டு, போன சுவடு தெரியாது வெகு வேகத்தில் திரும்பி வந்து விடுவது என்பது அந்த முடிவின் சாராம்சம்.

அவசரமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். சமையற்கட்டிலிருந்த பாகீரதியம்மாளிடம் ஓடிச் சென்று ''அக்கா! விமலா என்னை அவசரமாகப் பார்க்க வேண்டும் என்று கார் அனுப்பிக் கடிதம் எழுதியிருக்கிறாள் போய் விட்டு ஒரே நிமிஷத்தில் திரும்பி வந்து விடுகிறேன்'' என்று அனுமதி கேட்டாள். சமையற்காரி முன் தம்பி மனைவியுடன் ஒன்றும் தர்க்கிக்க விரும்பாத பாகீரதி, 'உம்' என்று மட்டும் பதில் அளித்தாள். அடுத்த கணம் கீதா புறப்பட்டு விட்டாள்.

சிநேகிதியின் வரவிற்காக வாயிலில்காத்திருந்தவிமலா மிகவும் சந்தோஷத்துடன் கீதாவை வரவேற்றாள் கீதா, நீ வராது எங்கே ஏமாற்றி விடுகிறாயோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்' நல்லவேளை நீ வந்தாய்'' என்று கூறிய விமலா கீதாவை அழைத்துக்



கொண்டு வீட்டின் கொல்லைப் பக்கம் கிணற்றடிக்குச் சென்றாள். தன்னைப் பற்றிய விஷயத்தைக் கேட்க வேண்டும் என்ற ஆவலில் துடித்துக் கொண்டிருந்த கீதா. ''விமலா, சமாசாரம் என்ன? சொல்லேன்?'' என்று வினவினாள்.

''அன்று ஒருநாள் உன் கணவர் பொன்னி வீட்டிற் குள்ளிருந்து வந்ததை நேரில் பார்த்தேன் என்று சொன்னேனே ஞாபகமிருக்கிறதா? ஒருசமயம் நீ, நான் சொன்னதைப் பொய் என நினைத்தாலும் நினைத்திருப்பாய் அல்லவா? அதை உனக்கு நேரில் காட்டவே உன்னை இங்கு இன்று அழைத்து வரச் செய்தேன்'' என்றாள் விமலா.

கீதாவிற்கு விஷயம் முழுவதும் புரியவில்லை. என்றாலும் மனம் 'பக் பக்' என்று அடித்துக் கொண்டது. தனது கணவன் பெயரையும் பொன்னியின் பெயரையும் சேர்த்து யார் உச்சரித்தாலும் கேட்க அவளுக்குத் தாங்கமுடியாத ஒரு வேதனையைக் கொடுத்தது. ''புரியவில்லையே!'' என்றாள் கீதா கலவரத்துடன்.

''இன்று நாங்கள் இங்குள்ள குன்றிற்கு வேடிக்கையாகப் 'பிக்னிக்' போவதாக உத்தேசித்திருக்கிறோம். இன்று கட்டாயம் மாமனார் மாமியார் எல்லோரும் வருகிறார்கள் நீயும் எங்களுடன் இப்படியே புறப்படு வழியில் பொன்னேரி வழியாகக் காரைக் கொண்டு போகச் செய்கிறேன். அங்கே உனது கணவனையோ அல்லது அவரது மோட்டார் சைக்கிளையோ பொன்னி வீட்டு வாசலில் கட்டாயம் பார்க்க முடியும் என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டாள் விமலா.

''நான் வருவது முடியாத காரியம் விமலா ஒரு நிமிஷத்தில் வீடு திரும்புவதாக நாத்தனாரிடம் சொல்லி விட்டு வந்திருக்கிறேன்!'' என்ற கீதாவின் நெஞ்சு துக்கத்தில் தடைப்பட்டது.

''எங்களுடைய ஆபீஸ் பையனிடம் வேண்டுமானால் சொல்லி அனுப்பிவிடலாம்!'' என்று விமலா கூறுவதைக் கேட்ட கீதா, ''வேண்டாம், வேண்டாம், ஐயோ! அவர்

35849

கோபித்துக் கொண்டாலும் கொள்வார். நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்று மறுத்தாள்.

''அப்படியானால் உனக்கு நேரில் நான் சொன்னதை பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டாமா? உனது கணவரின் நடத்தையைப் பற்றி நீ இன்னும் நேரில் நன்றாகப் பார்த்து தெரிந்து கொள்ளவில்லை என்றுதான நான் ஊகிக்கிறேன். கடந்த ஒரு மாதமாக நானும் கவனித்துக்கொண்டு வருகிறேன். ஒருநாள் தவறினாலும் தவறும் நாகராஜன் காலை பத்து மணிக்கு அங்கே வருவது தவறாது'' என்று முடித்துவிட்டு, ''என்ன சொல்கிறாய். எங்களுடன் வருகிறாயா? அல்லது வீட்டுக்குத் திரும்பிப் போகிறாயா?'' என மிரட்டலாகக் கேட்டாள்.

விமலா கூறுவது போல் நாகராஜன் நிஜமாகவே பொன்னி வீட்டிற்குத் தினம் காலை பத்து மணிக்குப் போய் வருகிறாரா? என்பதைத் தானே பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று தடுமாறினாள் கீதா.

''புரிந்தது உன் மனம் எனக்கு. எங்களுடன் சந்தோஷமாகப் பொழுது போக்கப் 'பிக்னிக்' வர உனக்கு மனமில்லை ஆனாலும் உனது கணவரின் நடத்தையை பற்றித் தப்பறியும் நிமித்தம் கொஞ்ச தூரம் எங்களுடன் காரில் வருவதாக ஒப்புக்கொள்கிறாய். சரி. நாழியாயிற்று அவர்கள் எல்லோரும் நமக்காகக் காத்திருக்கிறார்கள்'' என்று விமலா புன்னகை செய்துவிட்டு உள்ளே சென்றாள். கீதாவும் அவளைப் பின்பற்றினாள்.

சுப்பிரமணிய அய்யரும் அவர் மனைவி ஜானகியும் சிறு குழந்தைகள் போல் சந்தோஷத்துடன் வண்டியில ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். கீதாவும் விமலாவும் ஜானகியம்மாளுடன் பின் ஆசனத்தில் உட்கார, சிவராமன் பக்கத்தில் சுப்பிரமணிய அய்யர் சிகிதம் காரை ஓட்ட ஆரம்பித்தான். கீதாவும் தங்களுடன் வருகிறாள் என்ற ஆனந்தத்தில் அவன் காரை ஓட்டிக்கொண்டே மெல்ல ஒரு சினிமாப்பாட்டை முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.



'விர்' ரென்று சென்ற கார் ஏரிக்கரையை அடைந்தது அந்தச் சமயம் தன் கரத்தை விமலா கிள்ளுவதை உணர்ந்த கீதா அவள் சுட்டிக் காட்டிய திக்கை உற்று நோக்கினாள் அந்தக் காட்சி அவள் தலையைக் கிறுகிறுக்க வைத்தது. ஏரிக்கரை ஓரத்திலிருந்து ஓட்டு வீட்டின் முன் வாயிலில் நின்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் கைப்பிடி மீது பொன்னியின் அருமைப் பிள்ளை உட்கார்ந்திருந்தான். அவனுக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்த நாகராஜன் அந்தப் பக்கமாக வந்தபோது மெல்லச் சென்ற காரைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. இந்த அழகிய காட்சியைப் பார்த்து ரசித்துக் கொண்டு நிற்பவன் போல் பொன்னி ஒய்யாரமாகத் தூணைப் பிடித்துக் கொண்டு சாய்ந்த வாக்கில் நின்று கொண்டிருந்தாள்.

தனது தப்புகளைத் திருத்திக் கொண்டு வாழ்க்கையை மிகவும் செவ்வையாக வாழ கீதா எவ்வளவோ முயற்சித்தும் நாகராஜன் மட்டும் தனது பிடிவாதத்தை விட்டுக் கொடுக்காது தொடர்ந்தாற்போல் அந்தப் பெண்ணுடன் காதல் நாடகம் நடத்தி வருவதைக் கீதாவால் பார்த்து சகிக்கவே முடியவில்லை. அவளது நெஞ்சு இரண்டாகப் பிளந்து விடும்போல் குமுறியது.

'பார்த்துக் கொள்! இனியாவது கண் குருடியாக சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டு அசடுபோல் இருக்காதே...கீதா இன்று அவரிடம் இதைப் பற்றி நன்றாகக் கேட்டு ஒன்று அல்லது இரண்டு என்று முடிவு கட்டி விடு'' என மெல்லிய குரலில் ரகசியமாகச் சொன்னாள் விமலா.

''ஆமாம்! அது நாகராஜன் இல்லை! அவரேதான் அடடா! குழந்தையோட விளையாடறா போல இருக்கே! நாகராஜனுக்குக் குழந்தையென்றால் ரொம்பப் பிடிக்கும் போலிருக்கிறது. என்னம்மா கீதா! அப்படித்தானே?'' என்று விளையாட்டைப் போல் கேட்ட சுப்பிரமணிய அய்யர் பின்பக்கம் திரும்பிக் கீதாவைப் பார்த்தார்.

கண்களில் பொங்கிய நீரை கஷ்டப்பட்டுக் கொண்டு சமாளித்த, கீதா "ஆமாம்!" எனப் புன்னகை செய்தாள்.

கார் தங்களது பங்களாவை நோக்கித் திரும்புவதைக் கண்ட கீதா "அடி விமலா என் மனம் ரொம்பக் கஷ்டப் படுகிறதே? எனக்கு வீட்டுக்குப் போக இப்போது இஷ்டம் இல்லை என்ன செய்வேன்?" என்றாள் துக்கத்தில்

"சரி அப்படியானால் நீயும் எங்களுடன் கூட வந்து விடேன், நீ இப்படி மனக்கஷ்டப்படுவாய் என்று தெரிந்து தான் நான் முன்கூட்டியே உங்கள் வீட்டிற்கு எங்கள் ஆபீஸ் பையனைச் சொல்லிவிட்டு வர அனுப்பியிருக் கிறேன் நல்லதாயிற்று!" என்ற விமலா "அண்ணா, வண்டியைப் புலிக்காடு பக்கம் திருப்பு!" என்று உரத்த குரலில் சொன்னாள்.

"ஆபீஸ் பையனிடம் என்ன சொல்லி அனுப்பினாய்?" என ஆச்சர்யத்துடன் வினவினாள் கீதா.

'கீதா எங்களுடன் புலிக்காட்டிற்கு வருவதனால் வீட்டிற்கு வரக் கொஞ்சம் நாழிகையாகும்' கவலைப்பட வேண்டாம். நாங்கள் எல்லாரும் பிக்னிக் செல்கிறோம், என்று சொல்லி வரச்செய்தேன். எப்படி என் யோசனை?' என்று சிரித்தாள் விமலா

கீதா நன்றியுடன் தனது சிநேகிதியைப் பார்த்தாள்.

## 34

புலிக்காட்டின் மீது எழுந்தருளியிருக்கும் பாலபழனி ஆண்டவருக்கு அபிஷேக ஆராதனைகளை முடித்துக் கொண்டு சுப்பிரமணிய அய்யரின் குடும்பத்தவர்கள் குன்றின் இயற்கை வனப்பைக் கவனிக்கக்கிளம்பியபோது சூரியன் உச்சியை அடைந்துவிட்டான்; மென்மையான பச்சை நிறக் கம்பளத்தை விரித்தாற்போலிருந்த பசும்புல் தரைமீது உட்கார்ந்து கொண்டார்கள் அவர்கள் எங்கே திரும்பினாலும் ஒரே பசுமை; வெயிலின் கொடுமை



கொஞ்சம்கூடத் தெரியாது ஜிலுஜிலுவென்று மந்த மாருதம் அருகிலிருந்த சுனையினின்றும் தண்மையை வாரி வீசிக் கொண்டிருந்தது.

"நேரம் போனதே தெரியவில்லையே? இப்போது மணி என்ன தெரியுமா?" என்றாள் விமலா.

கை கெடிகாரத்தை உற்றுப் பார்த்தாள் கீதா. அவளுக்குத் 'திக்'கென்றிருந்தது. ஐந்து நிமிஷத்தில் திரும்பி வருகிறேனென்று கிளம்பிய நான் பகல் பொழுது தொழிற்சாலையிலிருந்து நாகராஜன் வீடு திரும்பும் வேளை வந்துகூட உல்லாச யாத்திரையில் மனமகிழ்ந்து கொண்டிருப்பதை நினைத்து அவளுக்கே பயமாயிருக் கிறது.

முதல் தடவை மன்னித்தாலும் நாகராஜன் இந்தத் தடவை தன்னை மன்னிக்க மாட்டான் என்று எண்ணி னாள் அவள்.

"ஆமாம், நாம் திரும்பும் நேரமாகி விட்டதல்லவா?" என்று கேட்டாள் விமலாவிடம். விமலா பதிலுக்குச் சிரித் தாள். "இன்னும் பார்க்கவேண்டிய இடங்களைப் பார்க்க வில்லை. இங்கே பகல் பொழுது முழுவதும் கழிக்க வேண்டுமென்ற யோசனையுடன், பாவம், என் மாமியார் பலவித சித்திரான்னங்களைச் செய்து கொண்டு வந்திருக் கிறார். ஏன் அவசரப்படுகிறாய்?" பேசாமல் இரு என்றாள்.

"அப்படியானால் வீடு திரும்பச் சாயங்காலம் ஆகு மென்று சொல்லு" என்று கவலையுடன் வினவினாள் கீதா.

"என்ன கீதா! 'வீடு வீடு' என்று ஏன் அடித்துக் கொள் கிறாய்? வீடுதான் தினமும் இருக்கிறதே ஆனால் தினமுமா நாம் இங்கே வரப்போகிறோம்? வீட்டுக் கவலையை ஒழித்துவிட்டு, நிம்மதியாகத்தான் இரேன், கொஞ்ச நேரம்" என்றாள் விமலா.

ஆனால் கீதாவின் மனம் நிம்மதியை அடையவில்லை. "இன்று கட்டாயம் கணவனிடமும், நாத்தனாரிடமும் வீடு திரும்புகையில் எனக்கு வசவு கிடைக்கப்போகிறது" என்று அவள் மனம் திகில்பட்டது. கொஞ்சம்கூட மன

உறுதியற்று சிநேகிதி சொன்ன பேச்செல்லாம் கேட்டு நடக்கும் தனது சஞ்சல சுபாவத்தை நினைத்த அவளுக்குத் தன் மீதே வெறுப்பு ஏற்பட்டது

"சரி! இலையைப் போடலாமே பசிக்கவில்லையோ உங்களுக்கு? வாருங்கள்" என்று கத்திய சுப்பிரமணிய அய்யர் உற்சாகத்துடன் கூடக் கொண்டு வந்திருந்த தூக்குக் கூடையை அவிழ்த்தார்.

ஜானகியம்மாள் பெருமையுடன் எடுத்து இலைகளில் பரிமாறிய உணவைக் கண்டதும் சிவராமனும் மற்றவர்களும் ஆவலுடன் சாப்பிட உட்கார்ந்தார்கள். ஆனால், கீதாவிற்கென்னவோ அவைகள் வேப்பங்காயைப்போல் கசந்தன. தங்களுடன் சம்பாஷணையில் கலந்து கொள்ளாது அவள் மௌனம் சாதித்துக் கொண்டிருப்பதைக் கவனித்த விமலா, "கீதா! நீ இப்படி நடந்து கொள்வாய் என்று நான் நினைக்கவேயில்லை. நாலைந்து பேர்களுடன் ஒரு இடத்திற்கு வந்திருக்கும் பொழுது உன் மனக் கவலைகளையெல்லாம் பற்றி நினைத்துக் கொண்டு முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டிருந்தால், என் மாமனார் உன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்? அல்லது என்னைப் பற்றித்தான் என்ன நினைத்துக் கொள்வார்?" என்று காதைக் கடித்தாள்.

சிநேகிதியின் சொற்படி கீதா மற்றவர்களுடன் போஜனத்தின் போது கலகலப்பாக பேச முயற்சித்தாள். ஆனால், அவளால் முடியவில்லை துக்கத்தில் தத்தளிக்கும் அவள் மனதுக்கு அவர்களுடைய அருகாமையும், சம்பாஷணையும் ஒருவித ஆறுதலையும் அளிக்கவில்லை. அதற்குப் பதில் அந்தக் குன்றும், அந்தச் சுனையும் அதைச் சுற்றியுள்ள இயற்கைத் தோற்றங்களும் அவளுக்குக் கடந்து போன இன்ப நாட்களை நினைவூட்டி மனதிலே துக்க உணர்ச்சியைத் தூண்டி விட்டன.

அன்றொரு நாள் இதே குன்றின், இதே சுனைக் கரைக்கு அவளும் நாகராஜனும் வந்திருந்தார்கள். இருவரும் கரை மீது அமர்ந்து நேரம் போவது தெரியாது கற்பனை செய்த பல இன்பக் கனவுகளைப் பற்றி கீதா



மீண்டும் நினைத்துப் பார்த்தாள். அன்றைய தினத்திற்கும் இன்றைய தினத்திற்கும் அவளது மனம் எத்தனை வேறுபட்டிருந்தது என்று அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது.

போஜனத்திற்குப் பின் சுனை நீரில் கையை அலம்பிக் கொண்ட கீதா அதன் கரைமீது உட்கார்ந்து கொண்டு நீரில் அங்கும் இங்கும் நீந்தியோடிக் கொண்டிருந்த மீன் குஞ்சுகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரத்தில் தூரத்தில் வளர்ந்து நின்ற மர நிழலில் போய் உட்கார்ந்து கொண்ட சுப்பிரமணி அய்யர், மேல் துண்டை விரித்துக் கொண்டு தூங்கப் படுத்து விட்டார். விமலா தயாராகக் கொண்டு வந்திருந்த பல்லாங்குழிப் பலகையை எடுத்துக் கொண்டு ஜானகியம்மாளுடன் சோழி விளையாட ஆரம்பித்தாள். தங்களுடன் அந்த விளையாட்டில் கலந்து கொள்ளும்படி ஜானகி அழைத்ததைக் கேட்ட கீதா இருந்த இடத்தை விட்டு எழுந்திருக்க மனம் இல்லாது மறுத்து விட்டாள்.

"அம்மா! கீதா மிகவும் நாகரிகப் பெண். இந்தக் கர்நாடக விளையாட்டு அவளுக்குப் பிடிக்காதம்மா. வேண்டாம். நாம் இருவர் மட்டும் விளையாடுவோம்" என வெடுக்கென பதில் அளித்த விமலா மாமியாரின் கவனத்தை விளையாட்டின் மீது திருப்பினாள்.

தண்ணீரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பவள் போன்று தென்பட்ட கீதா நீருக்குள் தன் அருகே தெரியும் மற்றொரு நிழலைக் கண்டு கனவினின்று விடுக்கென விழித்துக் கொண்டவள் போல நிமிர்ந்து பார்த்தாள்.

"ஏன் கீதா இந்தத் தனிமை? எங்களுடன் பேசக் கூடாது என்று நினைப்பவள் போல்தனியாகத் தண்ணீரில் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்?" என்று மிகவும் சகஜமாக வினவிய சிவராமன் புன்னகைபூத்த முகத்துடன் அவளுடைய அருகிலே வந்து உட்கார்ந்து கொண்டான்.

அவனது பரிவும், தன்னை அவன் திடீரென்று ஏக வசனத்தில் அழைப்பதும் எல்லாம் கீதாவுக்கு மிக்க கலவரத்தையே உண்டு பண்ணின.

''அப்படி யொன்றுமில்லை! வாருங்கள் போகலாம். நாமும் போய் விமலாவுடன் விளையாட்டில் சேர்ந்து கொள்ளலாம்'' எழுந்திருந்தாள், அங்கிருக்கப் பிடிக்காது.

அவன். ''கீதா! வேண்டாம்! நாம் இங்கேயே சித்த நேரம் உட்கார்ந்து வார்த்தையாடிக் கொண்டிருப்போம். உன்னிடம் சில விஷயங்கள் நான் பேச வேண்டும்'' என்று சிவராமன் கூறியதைக் கேட்டதும் கீதாவின் கலக்கம் அதிகமாயிற்று.

''நாம் இருவரும் தனியே பேசுவதற்கு என்ன அப்படி யிருக்கிறது? விமலா அப்பொழுதே விளையாடச் சேர்த்துக் கொள்ளக் கூப்பிட்டாள். அதனால்...'' என்று தடுமாறிய கீதா அங்கிருந்து போகத் திரும்பினாள்.

''கீதா! சிறிது நான் சொல்வதைக் கேள்! உன்னை இங்கே அதிக நேரம் நிற்க வைக்க மாட்டேன். நான் சொல்லப் போவதை மற்றவர்கள் கேட்க வேண்டாம் என்ற நோக்கத்துடன் தனிமையில் பேச வேண்டும் என்றேன்'' என்று கூறிய சிவராமன், அவளது முகத்தையே உற்று நோக்கினான்.

''நீங்கள் சொல்வதே எனக்கு ஒன்றும் விளங்க வில்லை!'' என்று பதிலளித்தாள் கீதா. அவள் மனத்தில் சிவராமன்மீது மிகுந்த அருவருப்பு ஏற்பட்டது.

''தனிமையில் பேசுவதற்கு என்ன விஷயமாம்?'' என்று கோபமடைந்த கீதா, சீக்கிரம் சொல்லுங்கள்! போக நாழியாகிறது'' என்றாள்.

''ஒன்றுமில்லே கீதா, உன்னைப் பார்க்கும் பொழுதெல்லாம் என் மனம் சில நாட்களாக மிகவும் பச்சாத் தாபத்தில் தவிக்கிறது. உனது வாழ்க்கையின் கஷ்டங் களைக் கேட்கும் பொழுது நான் எவ்வளவு வருத்தமடை கிறேன் தெரியுமா?'' என்றான்.



''என் வாழ்க்கையின் கஷ்டங்களா! என்ன பேசு கிறீர்கள்!'' என்று வியப்புடன் கேட்பவள் போல் கீதா வினவினாள். அவன் எதைப்பற்றி அவளிடம் பேசுகிறான் என்பதை அவள் மனம் ஒரு நொடியில் அறிந்து கொண்டு விட்டது. தன் கணவனைப் பற்றி அவன் இழிவாகப் பேசப்போவதை அவள் கேட்க விரும்பவே இல்லை.

''நீ எத்தனை நல்ல பெண் என்பதை நாகராஜன் எப்படி அறிவான்? ஒரே ஊரில் பிறந்து வளர்ந்த எனக் கல்லவோ உனது குணம், புத்திசாலித்தனம் எல்லாம் தெரியும்? உன்னை நாகராஜன் மிகவும் துன்பப்படுத்து கிறான் என்றும், நீ மிகவும் துக்கமாக வாழ்க்கை நடத்து கிறாய் என்றும் விமலா என்னிடம் கூறினாள். சங்கதியை அறிந்த அன்றிலிருந்து என் மனம் உன் கஷ்டத்திற்காகப் படும் அவஸ்தையை விவரிக்கவே முடியாது'' என்றான் ஒரு பெருமூச்சுடன்.

''நீங்கள் கேள்விப்பட்டது எல்லாம் வெறும் கட்டுக் கதை; ஆதாரம் எதுவும் இல்லாதது நான் சந்தோஷ மாகவே வாழ்க்கை நடத்துகிறேன். என் கணவர் மிகவும் நல்லவர். வீணாக நீங்கள் உங்கள் மனத்தைச் சிரமப் படுத்திக் கொள்கிறீர்கள். அவ்வளவுதான்!'' என்று கூறிவிட்டு, கீதா விமலா இருந்த திக்கை நோக்கிச் செல்ல அடியெடுத்து வைத்தாள்.

''கீதா! நான் சொல்வது முழுவதையும் கேட்டு விட்டுப் பிறகு போகலாம். நீ மிகவும் உத்தம குணம் வாய்ந்த பெண். இல்லாவிடில், நாகராஜன் செய்யும் இந்த அக்கிரமத்தைப் பார்த்துக் கொண்டு பேசாது பொறுமை யுடன் இருக்க முடியாது. உன் கணவனது குற்றத்தையே பிறரிடம் ஒப்புக்கொள்ளக்கூட உன் மென்மையான மனது சம்மதிக்கவில்லை. இந்த உலகத்தில் நல்லவர்களுக்கு இடம் இல்லை என்று வேதாந்தம் பேசினான் சிவராமன்.

அதற்கு என்ன பதில் சொல்வதென்றே கீதாவுக்குப் புரியவில்லை. ''இல்லை! இல்லை! என் கணவரைப் பற்றி நீங்கள் வீணாகத் தப்பபிப்பிராயம் கொண்டு சொல்-

கிறீர்கள். உங்களிடம் இதைப்பற்றி மேலே பேச எனக்கு இஷ்டமில்லை, வாருங்கள்! விமலா இருக்கும் மரத்தடிக்குச் செல்வோம்!'' என்றாள்.

''விமலா! விமலா! என்று என் சகோதரிமீது நீ மிகுந்த பாசம் வைத்திருக்கிறாய். ஆனால் கீதா! அவள் உன் சிநேகிதத்திற்குக் கொஞ்சமும் லாயக்கற்றவள். விமலா உன் இன்ப வாழ்க்கையை கெடுக்க வந்த கருநாகம். அதை நீ இன்னமும் தெரிந்து கொள்ளவில்லை!'' என்றான் சிறிது கோபத்துடன் சிவராமன்.

தமையனது வாயினால் தங்கையைப்பற்றி வந்த தூஷணையைக் கேட்ட கீதா ஒரேயடியாக ஸ்தம்பித்துப் போனாள். ''என்ன சொன்னீர்கள்!'' என்று திக்பிரமையுடன் கேட்டாள்.

# 35

**சி**வராமன் என்ன சொல்லப் போகிறான் என்று கீதாவால் அவ்வப்போது ஊகிக்கவே முடியவில்லை. ஆச்சரியத்துடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

''ஆமாம்! விமலா உனது உண்மையான சிநேகிதியே அல்ல. அவளை நீ முழுவதும் நம்பி ஏமாந்துவிட வேண்டாம். இதைப்பற்றி எச்சரிக்கத்தான் உன்னுடன் தனிமையில் பேச விரும்பினேன். உன் முன்னால் சர்க்கரையைப் போல் இனிக்கப் பேசும் உன் சிநேகிதி, உன் தலை மறைந்ததும் உன்னைப்பற்றி என்ன பேசுகிறாள் தெரியுமா?'' என்று கேட்டான் ஆத்திரத்துடன்.

கீதாவின் கண்கள் ஆச்சரியத்தினால் மலர்ந்தன, ''என்ன சொல்கிறாள் என்னைப்பற்றி?'' என வியப்புடன் வினவினாள் அவள் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல்.

''உன் கணவன் உன்னை மிகவும் துன்பப்படுத்துவது உனக்கு வேண்டிய தண்டனை தான் என்று சொல்லிச் சிரிக்கிறாள். உனது மனக்கஷ்டங்கள் அவளுக்கு வேடிக்கை



யாகப் பேசும் விஷயங்களாக இருக்கின்றன. உனது வீட்டு விஷயங்கள் அவள் சொல்லாமல் எப்படித் தெரிந்திருக்க முடியும்? யோசித்துப் பார்!'' என்றான் சிவராமன். கீதா மௌனமாக அவனது முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள்.

தான் பிராண சிநேகிதி என்று நம்பியிருக்கும் விமலா தன்னைப் பற்றிப் பிறரிடம் தூஷிப்பாள் என்பதை அவளால் நம்ப முடியவில்லை.

''உனக்கு நான் சொல்வதில் நம்பிக்கையேயில்லை என்றுதான் தோன்றுகிறது. நீயும் உன் சிநேகிதியும் ஒவ்வொரு தடவையும் சந்திக்கும் பொழுது பேசிக் கொள்ளும் குடும்ப ரகசியங்கள் எல்லாவற்றையும் விமலா எங்கள் எல்லோரிடமும் கூறியிருக்கிறாள். இனிமேல் அவளை நம்பி உன் மனக்கஷ்டங்கள் ஒன்றையும் சொல்ல வேண்டாம்...கீதா! நீ மிகவும் கள்ளங் கபடமற்றவள். உனது தங்கமான குணத்திற்கு நாகராஜனைவிட உத்தமமான புருஷன் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் அவர் உனது மகிமையே தெரியாது கேவலம் ஒரு வேலைக்காரப் பெண்ணுக்காகத் தனது அந்தஸ்தையே பாழாக்கிக் கொள்கிறார். சில நாட்களாக அவர் அவள் வீடேகதி யென இருக்கிறார் என்று நினைக்கிறேன், ஏனெனில் காலையிலும் மாலையிலும் நான் ஏரிக்கரை வழியாகக் காரில் திரும்பும் பொழுது அவரது மோட்டார் சைக்கிளை பொன்னி வீட்டு வாசலில் பார்க்கிறேன். அதனால் தானோ என்னவோ பொன்மேடு டிம்பர் 'ஷர்க்' கில் தற்போது கொஞ்சம் வேலைமந்தமாக நடக்கிறது'' என்று முடித்தான்.

தன் கணவனின் தொழில் விவகாரங்களை கீதா காதிலே போட்டுக் கொண்டதே கிடையாது; அதனுடைய நுட்பங்களை ஆராய்ந்து தனது மூளையைக் குழப்பிக் கொள்ள ஒரு நாளும் விரும்பியதேயில்லை.

''என்ன சொன்னீர்கள், என் கணவன் தொழிலைப் பற்றி?'' எனக் கவலையுடன் வினவினாள் அவள்.

''நாகராஜன் உங்களிடம் ஒன்றுமே இதுவரை அதை பற்றி சொன்னதில்லையா? பொன்மேடு டிம்பர் வொர்க்ஸ் மிகவும் கடனில் ஆழ்ந்து கொண்டிருக்கிறது என்று வெளியில் பலர் சொல்லிக் கொள்கிறார்களே!'' என்றான்.

கீதாவிற்கு ஏற்பட்ட திகைப்பை விவரிக்கவே முடியாது. ''கடனா? எங்களுக்கா? அப்படி இருப்பதாக அவர் ஒன்றும் சொல்லவேயில்லையே!'' என்றாள்.

''தொழில் ரகசியங்களை மனைவிக்குக்கூடத் தெரிவிக்கக்கூடாது என்பது அவருடைய அபிப்பிராயம் போலிருக்கிறது. உனக்கு அதைப் பற்றித் தெரிய நியாயமில்லை. எனக்கு எப்படித் தெரிந்தது என்றால், நாங்களும் தற்போது அதே பிஸினெஸில் இருப்பதனால் எங்கள் வட்டாரத்தில் இதுமாதிரி பேச்சு ஒன்று உலாவி வருகிறது அடடா! என்ன அசட்டுக் காரியம் செய்தேன் தொழில் ரகசியங்களை வெளியிட்டு விட்டேனே!'' என்று கையை உதறினான் சிவராமன்.

''யாரிடம் சொல்லி விட்டீர்கள்! அதில் சம்பந்தப்பட்டவர்களிடம் தானே தெரிவித்து விட்டீர்கள். பரவாயில்லை!'' எனப் பதில் அளித்த கீதாவின் நெஞ்சு துக்கத்தில் அடைத்துக் கொண்டது. 'தங்கள் பொன்மேடு டிம்பர் வொர்க்ஸ் பெரிய கடனில் மூழ்கியிருக்கும் விவரத்தைத் தனக்குக் கணவன் தெரிவிக்கவில்லையே என அவள் மனம் வருத்தத்தில் ஆழ்ந்தது நாகராஜன் இவ்வளவு அசடனாய் போவாரா? மிகவும் கஷ்டப்பட்டு முன்னுக்குக் கொண்டு வந்த பிரபல தொழிலைக் கேவலம் ஒரு பெண் நிமித்தம்கவனிக்காமல்-அதுவும் போட்டியாக இன்னொரு தொழிற்சாலை ஆரம்பிக்கையில்-அசட்டையாக இருப்பது நியாயமா? பொன்மேடு டிம்பர் வொர்க்ஸ் சீக்கிரத்தில் நஷ்டத்தில் மூழ்கி நாசமடைந்து போனால் கீதாவின் கதி? கடன் தொல்லையினால் தங்கள் தொழிற்சாலை விற்கப்பட்டு, தானும் நாகராஜனும்மிகவும்ஏழ்மை தசையை அடைந்துவிட்டது போன்றுகீதா மனக்கண்ணில்



ஒரு தோற்றம் ஏற்பட்டது. செல்வத்தின் சுகத்தை அனுபவித்த அவளது மனம் ஏழ்மையை நினைக்கக்கூட அஞ்சியது! அந்த நினைப்பிலேயே அவளது கண்களில் லேசாக நீர் படர்ந்துவிட்டது.

''கீதா நீ வீணாக வருந்தாதே! நாகராஜன் மிகவும் கெட்டிக்காரர். எப்படியாவது சமாளித்துக் கொண்டு விடுவார். ஆனால் ஒன்று, விமலாவைப்போல் நான் உனது கஷ்டங்களைக் கண்டு சந்தோஷப்படும் மனம் படைத்தவனல்ல. உனக்குத் தாங்கமுடியாத துன்பங்கள் ஏதேனும் நேர்ந்தால் என்னிடம் தாராளமாக எத்தகைய உதவியும் நீ எதிர்பார்க்கலாம். என்னை நம்பு'' என்று கூறினான் சிவராமன்.

கீதா அவனது வார்த்தைகளைக் கேட்டு நன்றிப் பெருக்கால் ஒருகணம் மெய்மறந்து நின்றாள். 'ஆச்சர்யம், ஒரே தாய் வயிற்றில் பிறந்த இருவரிடையே எத்தனை மனவேற்றுமை! சிவராமனைப் போன்ற உத்தம மனிதன் உலகில் இருக்கிறானே? பாவம், அவனைத் தெரிந்து கொள்ளாது தவறாக நினைத்தோமே!' என அவள் மனம் இரக்கப்பட்டது.

''மிகவும் வந்தனம். நீங்கள் மிகவும் உதார குணம் படைத்தவர். இவ்வளவு நாட்களும் உங்களை நான் தவறாக நினைத்தேனே!'' என்று மனத்தில் நினைத்ததை உடனே பேசிவிட்டாள் கீதா.

'அதனால் பரவாயில்லை. நீ என்னைப் பற்றி என்ன நினைத்தாலும் எனக்குச் சம்மதம், ஏனெனில் உன்மேல் எனக்கு மட்டற்ற மதிப்பு உண்டு'' என்று புன்னகை செய்த சிவராமன் பேச்சைச் சட்டென்று நிறுத்திக் கொண்டான்.

''என்ன அண்ணா! நீங்கள் இருவரும் இத்தனை நாழி என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்!'' என்று கேட்டுக் கொண்டு அருகில் வந்த விமலா சந்தோஷத்துடன் கீதாவின் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

''இயற்கையின் அழகைப் பற்றியும் அதை வருணித்திருக்கும் கவிகளின் மனப்பண்பைப் பற்றியும் கீதாவும்

நானும் தர்க்கித்துக் கொண்டிருந்தோம். ஏன் விமலா! கீதா சொல்கிறாள், அந்தச் சுனையில் பூத்திருக்கும் மலர்கள் இரண்டும் அல்லி புஷ்பங்கள் என்று; நான் சொல்கிறேன் தாமரைகள் என்று. நீ என்ன சொல்கிறாய்!'' எனக் கேட்டான் சிவராமன்.

''அண்ணா! என்னைப் போய்க் கேட்டால் எனக்கு என்ன தெரியும்? கீதா கூறுவதுதான் சரியாக இருக்கும்'' என்று குரோதமாகப் பதில் அளித்தாள் சகோதரி.

சிவராமன் அங்கிருந்த சுனைக்குள் இறங்கி கைக் கெட்டிய தூரத்தில் இருந்த இரு தாமரை மலர்களைப் பறித்தான் விமலாவிற்கு ஒன்று; கீதாவிற்கு ஒன்று என அவைகளை முறையே அவர்கள் கையில் கொடுத்துவிட்டு ''தாமரைதான் சந்தேகமில்லை!'' என மெல்லச் சிரித்தான். அதற்குமேல் அம்மூவரும் மரத்தடியில் தங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்த சுப்பிரமணியத்தை நோக்கிச் சென்றார்கள்.

இருட்டிய பின்பு வீடு திரும்பிய நாகராஜன் மாடியறைக்குள் சென்று ஆபீஸ் உடைகளை களைந்துவிட்டு வேறு உடுத்திக் கொண்டு கீழே இறங்கி வந்தான். பின் கட்டின் முற்றத்து ஓரத்தில் கிடந்த பெஞ்சின் மீது படுத்திருந்த பாகிரதி அவனைக் கண்டதும் எழுந்திருந்தாள்.

''எனக்கு ஒன்றும் வேண்டாம், அக்கா! கீதாவை ஒரு டம்ளர் குளிர்ந்த ஜலம் எடுத்துக் கொண்டு வரச் சொல், அவ்வளவுதான்'' என்று கூறிய நாகராஜன் போகத் திரும்பினான்.

''கீதா எங்கே இருக்கிறாள் எடுத்துண்டு வர? நான் தான் எடுத்துக் கொடுக்கணும்'' என்று முணகிய பாகிரதி எழுந்து நின்றாள்.

''கீதா இல்லையா?'' என ஆச்சர்யத்துடன் வினவிய நாகராஜன் மனம் விவரிக்க முடியாத ஒரு விதக் கலவரத்தை அடைந்தது. ''ஆமாம், ராஜா! கீதா, விமலா



வுடன் எங்கேயோ 'பிக்னிக்' காமே அதற்குப் போயிருக்கிறாள். இன்னும் வரவில்லை'' என்றாள் பாகிரதி.

இருட்டில் அவளது முகம் சரியாகத் தெரியாவிடினும் குரலில் தொனித்த வெறுப்பை நாகராஜன் கவனித்தான். ''உம். எப்பொழுது போனாள்?'' என்று கேட்டான் மனத்திலே பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு.

''கார்த்தாலே நீ அந்தப் பக்கம் ஆபீஸுக்குப் புறப்பட்டுப் போனதும் விமலா வீட்டுக் கார் வந்தது. ஒரு நிமிஷத்திலே வருகிறேன் என்று போனவள், ஆள் மூலம் 'பிக்னிக்' போவதாகச் சொல்லியனுப்பினாள். இருட்டிக் கூடப் போய் விட்டது...'' என்று மெல்ல முடித்தாள் பாகிரதி,

அதற்கு மேல் கேட்டுக் கொண்டிருக்க நாகராஜனுக்குப் பொறுக்கவில்லை. ''சரி அக்கா! அவள் வந்ததும் நேரே மாடிக்கு வரச் சொல்'' என்று கோபத்தை அடக்கிக் கொண்டு கூறியவன், வேகமாகத் தனது அறைக்குச் சென்றான்.

நாகராஜன் மனத்தில் எழுந்த உணர்ச்சிப் போராட்டத்தில் அவனுக்குத் தான் என்ன செய்கிறோம் என்றே புரியவில்லை ஆபீஸ் காகிதங்களை மேஜைமேலிருந்து எடுத்து பீரோவுக்குள் திணித்து கதவை ஆத்திரத்துடன் மூடிப் பூட்டினான். அறைக்குள் முன்னும் பின்னும் கூண்டிலடைக்கப்பட்ட சிங்கம் போல் கோபத்துடன் உலாவினான். அவனது மனக்கண்ணின் முன் சிவராமனின் முகம் அடிக்கடி தோன்றி மறைந்து கொண்டிருந்தது. அந்த மனிதனுடைய முகத்தை அவன் மறக்கமுயற்சித்தும் கூட ஏனோ முடியவில்லை! கீதா புரிந்தோ புரியாமலோ தவறான ஒரு காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறாள். நாகராஜன் அதைப் பார்த்துக் கொண்டு வாளா இருந்தால் அது எங்கே போய் முடியப் போகிறதோ தெரியாது. பின்னால் அவமானப்படுவதைவிட முதலிலேயே தடுத்து விட்டால்...பலவித கற்பனைகளைச் செய்து சலித்துப்

போன நாகராஜன் கீதாவின் வருகையை ஒவ்வொரு வினாடியும் எதிர்பார்த்துக் கொண்டே இருந்தான்.

புலிக்காட்டிலிருந்து விமலாவின் குடும்பத்தார்கள் கீழே இறங்கி வந்து வண்டி ஏறிக்கொள்வதற்குள் அதிகமாக இருட்டிவிட்டது. அதற்குமேல் அங்கிருந்து புறப்பட்டுக் கார் கீதாவின் வாசல் பங்களாவை அடைவதற்குள் அதிகமாக இருட்டி, இரவு மணி ஒன்பதுக்கும் மேலாகி விட்டது.

கணவனது மோட்டார் சைக்கிளை வாயில் முன்புறத்திலே பார்த்த கீதாவின் ஸப்த நாடிகளும் பயத்தினால் ஒடுங்கி விட்டன. அவன் வீட்டுக்கு வருவதற்குள் தான் திரும்பி விடவேண்டுமென்றுதான் அவள் முயந்சித்தாள். ஆனால் விமலா லேசில் புலிக்காட்டிலிருந்து கிளம்ப ஒப்புக்கொள்ளவில்லை. குற்றவாளியைப்போன்று திக் திக் என அடித்துக் கொள்ளும் நெஞ்சுடன் முன் ஹாலைக் கடந்து மாடிப்பக்கம் விரைந்தாள். அது சமயம் மாடியினின்று இறங்கி வந்து கொண்டிருந்த நாகராஜனைக் கண்டதும் அவள் கால்கள் பயத்தினால் தடுமாறின. மனைவியின் முகத்தை நேருக்கு நேர் பார்த்த நாகராஜனுக்குப் பேசும் சக்தி ஒரேயடியாக மங்கிவிட்டதைப் போன்றிருந்தது. மனைவியிடம் என்னவெல்லாமோ கேட்க வேண்டும். சொல்லவேண்டும் என கோபத்தில் பொங்கிக் கொண்டிருந்த அவனது சினம் அவளைக் கண்டதும் வெகு உச்ச நிலையை அடைந்து விடவே வார்த்தைகள் ஒன்றும் அவனது வாயினின்று எழவில்லை.

அதிகம் சிவந்திருந்த அவனது முகத்தை நிமிர்ந்து பார்க்க அஞ்சிய கீதா மாடிப் படிகள் மீது ஏற மனமில்லாது தலையைக் குனிந்துகொண்டு நின்று விட்டாள். மயானத்தில் நிலவிய நிசப்தத்தைப் போன்று ஒருவினாடி மிகவும் பயங்கரமாகத் தென்பட்ட அந்த மௌனத்தைக் கலைப்பவள் போல பாகீரதியம்மாளின் அலறல் குரல் ஏககாலத்தில் இருவரையும் நடுங்க வைத்தது.



''ராஜா! இங்கே வாயேன்!'' என உச்சஸ்தாயியில் இரைந்து கத்திய பாகீரதி அம்மாள் பேயால் அறையப்பட்டவள் போல் பெருமூச்சு விட்டுக் கொண்டு அங்கே ஓடி வந்தாள்.

திடுக்கிட்ட நாகராஜன், ''என்ன அக்கா! என்ன சமாசாரம்! என்ன? ஏன் இப்படி இருக்கிறாய்?'' என கலக்கத்துடன் கேட்டான்

''நமது தொழிற்சாலையில் நெருப்புப் பிடித்துக் கொண்டு விட்டதாம்! மேனேஜர் கையோடு கூட்டி வரச் சொன்னாராம்!'' என்றாள்.

''நெருப்பா?'' என்று கூவிய நாகராஜன் வேறு ஒரு வார்த்தை கூட பேசாது மின்னலைப் போல் அவ்விடத்தினின்று வெளியே ஓடினான். அடுத்த கணம் படபடவென்று அவனது மோட்டார் சைக்கிள் கிளம்பிச் செல்லும் சத்தம் கேட்டது.

கீதாவின் உடலினின்று உயிர் போய் விட்டதைப் போன்று ஓர் உணர்ச்சி ஏற்படவே அவள் மாடிப்படியில் சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

## 36

திடீரென்று கேட்ட அதிர்ச்சியான சமாசாரத்தினாலோ என்னவோ பாகீரதிக்கு வழக்கமாக வரும் மயக்கம், வந்துவிடும்போல் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. 'தம்பி என்னவிதமான செய்தி கொண்டு வரப் போகிறானோ! அவன் வரும் சமயத்தில் தான் மயக்கமாகப் படுத்திருக்கலாகாதே' என்ற கவலை மிகுந்திருந்தது. அதைத் தவிர்க்க எண்ணி மெள்ள மெள்ளத் தள்ளாடிக் கொண்டு வாயிற்படி ஓரத்திலிருந்த பெரிய தூண் மீது சாய்ந்து கொண்டு தம்பி வரும் வழி நோக்கிக் கவலையுடன் காத்திருந்தாள் அவள். தோட்டத்திலிருந்து வீசிய குளிர்ந்த காற்று அவளது வேகச் சோர்வுக்கு ஆறுதலாக இருந்தது.

கண்களை மூடிக்கொண்டு நாகராஜன் வரவுக்காகக்
காத்திருந்த அவளது மனம் இல்லாத தெய்வங்களை
எல்லாம் அது சமயம் வேண்டிக் கொண்டிருந்தது.
மாடிப் படியின் மீது சோர்வே உருவாக உட்கார்ந்
திருந்த கீதாவிடம் வந்து நின்றாள் சமையல்காரத் தங்கம்
நெருப்பு என்ற வார்த்தையை பாகீரதி உரத்து
உச்சரித்ததைத் தங்கத்தின் கூரிய செவிகள் கேட்டன.
அதைப் பற்றிய பல விஷயங்களையும் அறிந்து கொள்ள
வேண்டும் என்ற ஆவலில் துடித்த அவள், சமையல்
அறையில் இருக்க இருப்புக் கொள்ளாது முன் கட்டிற்கு
வந்தாள்.
''உங்கள் நாத்தனார் எங்கே, காணோம்? வாசலில்
போய் உட்கார்ந்திருக்கிறாப் போல் இருக்கிறது. 'நெருப்
பாமே' நெருப்பு எங்கே பிடிச்சுக் கொண்டு விட்டதாம்?''
எனக் கேட்டாள் கீதாவிடம்.
''எனக்கு மட்டும் என்ன தெரியும்? என்னை வந்து
கேட்டால்?'' என அசிரத்தையுடன் பதில் அளித்த கீதா,
தங்கத்தின் முகத்தைக் கூடத் திரும்பிப் பார்க்கவில்லை.
''உங்க அகத்துக்காரர் போயிருக்கிறாரே! எப்போ
திரும்பி வருவார்?'' எனத் தங்கம் விடாமல் கேட்டாள்..
''எனக்கு மட்டும் எப்படித் தெரியும்? சும்மா கேட்டு
ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்?'' என்று சிடுசிடுத்த
கீதா இடத்தை விட்டு எழுந்திருந்து மாடிப் பக்கம்
சென்றாள்.
''எங்கே நெருப்புப் பிடிச்சு எக்கேடு கெட்டால் எனக்
கென்ன? மனுஷன் எத்தனை நாழிக்கு வருவான்னு
சொல்லித் தொலைச்சால் எல்லாத்தையும் எடுத்து மூடி
வச்சிட்டு நான் ஒரு தூக்கமாவது போடலாம். இந்த
வீட்டிலே ஒரு விஷயமும் சரியாச் சொல்வது கிடையாது.
அவர் அவர் சுகதுக்கந்தான் அவர் அவர்களுக்குப் பெரிசு!''
என்று தங்கம் மு முணுத்துக் கொண்டு சமைய
லறைக்குள் சென்றாள்.
அவள் சொன்ன வார்த்தைகள் கீதாவின் காதுகளில்
அரை குறையாக விழுந்தன. அவ்வார்த்தைகளின் உண்



மையை கீதா ஆராய்ந்த வண்ணம் வெளியில் சென்று வந்த
அலங்கார உடைகளைக் கழட்டி விட்டு வேறு உடுத்திக்
கொண்டாள். தங்கத்தின் மேல் கோபப்படுவதில்
நியாயமே இல்லை. ஒரு வீட்டில் ஆயிரம் விஷயங்கள்
நடக்கக் கூடும். அதில் சுகம் இருக்கலாம்; துன்பங்கள்
நிறைந்திருக்கலாம், தங்களுடைய சுக துக்கங்களை அருகி
லிருக்கும் எல்லோரும் அதே அளவில் பகிர்ந்து கொண்டு
அனுபவிக்க வேண்டுமென்று எப்படி எதிர்பார்க்க முடியும்
வேலைக்காரர்கள் கூலிக்கு உழைப்பவர்கள். அவர்
களுடைய வேலையில் தவறுகள் கண்டு பிடிக்கலாமே
ஒழிய, எஜமானின் துக்கத்தை அவர்களும் பகிர்ந்து
அனுபவிக்கவில்லை என்று தவறு கண்டுபிடிக்க முடியுமா?
நாகராஜன் தொழிற்சாலை இருந்தால் என்ன? அது
நெருப்புப் பிடித்துத் தரைமட்டமானால் தான் என்ன?
தங்கத்திற்கு இந்த வீடு இல்லாவிடில் இன்னொரு வீடு!
தங்கத்தை மட்டும் குறை கூறுவானேன்? அந்தத்
தொழிற்சாலையில் வேலை செய்யும் எல்லா வேலைக்
காரர்களையும் எடுத்துக் கொண்டால், உண்மையாக
நாகராஜன் கஷ்டத்திற்காக உருகுகிறவர்கள் எத்தனை
பேர் இருப்பார்கள்? ஒரு சிலரேதான் எஜமானுக்கு
நஷ்டம் ஏற்பட்டு விட்டதே என்று ஏங்கி வேலைக்காரர்
கள் எஜமானுடன் கூடத் துக்கப்படப் போவதில்லை.
'இந்த மடம் இல்லாவிடில் சந்தை மடம்!' என வேறு
தொழிற்சாலைகளைப் பார்த்துக் கொண்டு கிளம்பிவிட
மாட்டார்களா! யாரையும் குறை சொல்வதற்கில்லை.
'அது உலகப் போக்கு' என்று பெருமூச்செறிந்த கீதா,
கீழே இறங்கி வந்தாள். சமையற்கட்டில் விளக்கெரிந்து
கொண்டிருந்தது. முகவாயில் கையை வைத்துக் கொண்டு
சிந்தனையில் ஆழ்ந்தவள் போல் தங்கம் உட்கார்ந்திருந்
ததைக் கண்ட கீதா, ''தூக்கம் வருகிறதென்றால் போய்த்
தூங்குகிறதுதானே? ஏன் இப்படி உட்கார்ந்திருக்க
வேண்டும்?'' என்று கேட்டாள்.
அரைத் தூக்கத்திலிருந்த தங்கம் விழித்துக் கொண்டு
எழுந்திருந்தாள். ''இதெல்லாம் இப்படியே கிடக்கிறதே!

அவர் எப்போ வருவாரோ! உங்க நாத்தனார் என்ன சொல்வாரோ!'' என்று அலுத்துக் கொண்டாள்.

''உங்களுக்குச் சிரமமாக இருந்தால் போய்த் தூங்குங்கள். மற்றவர்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவர் வந்தால் நான் இல்லையா, பார்த்துக் கொள்கிறேன்'' என்று சிறிது கடுமையாகவே கீதா கூறினாள் அதைக் கேட்ட தங்கம் கவலை விட்டதென்று சமையல்அறையினின்று மெல்லப் பின்கட்டிற்குச் சென்று மறைந்தாள். கதவைப் பூட்டிக் கொண்டு வாயிற் பக்கம் வந்தாள் கீதா, தன் அருகிலே வந்து நின்ற கீதாவை ஏறெடுத்தும் பார்க்க வேண்டாதவள் போல் பாகீரதியம்மாள் கண்களை நன்றாக இன்னும் இறுக மூடிக் கொண்டாள். நாத்தனார் தன்னிடம்பேச இஷ்டப்படவில்லை என்பதை கீதா புரிந்து கொண்டாள். அவளுக்கு அதற்கு மேல் அங்கு நின்று கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. திரும்ப உள்ளே வந்து அங்கிருந்த சோபா ஒன்றின் மீது சாய்ந்து கொண்டாள். கீதா செய்தது பிசகுதான்? நாத்தனாரின் உத்தரவு இன்றி, கணவனின் உத்தரவும் இன்றி விமலா வீட்டவர்களுடன் உல்லாசமாகப் புலிக்காடு சென்று வந்தது பெரிய பிசகுதான். அதற்காகப் பாகீரதி கோபித்துக் கொள்ள வேண்டியது நியாயந்தான். ஆனால் அதற்குச் சமயமில்லையா? எதிர்பாராத ஒருவித கஷ்டம் குடும்பத்திற்கு நேர்ந்திருக்கும் சமயத்திலா பாகீரதி தனது கோபத்தைக் காட்டுவது நாகராஜனின் கஷ்டம் பாகீரதி ஒருத்தியைத் தான் பாதிக்குமா? கீதாவிற்கு அதில் சம்பந்தமில்லையா? பாகீரதியின் வெறுப்பினால் புண்பட்ட கீதா கண்களை மூடிக் கொண்டாள். மூடிய இனிமையினின்று கண்ணீர்த் துளிகள் முத்துக்களைப் போல் உருண்டு கன்னங்களின் மீது ஓடின.

''கம்பீரமாக எழுந்து நின்ற பொன்மேடு டிம்பர் வொர்க்ஸ் இருந்த இடத்தில் ஒரு பெரும் சாம்பல் குவியல்தான் மீதமாக நின்றது. சிவந்த தனது நாக்குகளால் ஆகாயத்தைத் தொட ஆசைப்பட்டவன் போல்



'கொதித்தெழுந்த அக்னிபகவான் பொன்மேடு டிம்பர் வொர்க்ஸை ஒரேயடியாகப் பஸ்மீகரம் செய்துட்டான். அந்தக் காட்சியைக் கண்ட நாகராஜன் மனமிடிந்து செயலற்றுப் போய் நின்று விட்டான். சங்கதியை அறிந்த பாகீரதியம்மாள் இரத்த அழுத்தம் மேலோங்க அதிர்ச்சி தாங்காது மரணமடைந்து விட்டாள்...பிறகு...' ஐயோ என்ன கற்பனை! என்ன முட்டாள் யோசனைகள்! என கீதா வரம்பின்றித் தாறுமாறாகச் சிந்தனையில் ஈடுபட்டிருந்த தனது மனக் கற்பனைகளைக் கலைத்தாள்.

கன்னத்தின் மீது படர்ந்திருந்த கண்ணீர்த் தாரையைத் துடைத்துக்கொண்டு எழுந்திருந்துஜன்னல் அருகில் போய் நின்றுகொண்டு அதன்வழியே தோட்டத்து வாயிற் புறத்தைப் பார்த்தாள் ஹாலினின்று வீசிய விளக்கு வெளிச்சம் தோட்டத்தின் மீது கொஞ்ச தூரம் வரை தெரிந்தது அதற்கு அப்பால் கண்களுக்கு ஒன்றுமே புலப்படாத காரிருள். பிற்காலத்து வாழ்க்கையைப் போன்று ஒன்றும் புலப்படாத காரிருளை வெறித்துப் பார்த்துக் கொண்டே நின்றாள் கீதா. வெகு நேரம் புலிக்காட்டின் மீது சுனையருகில் சிவராமனுடன் அன்று பகல் பொழுது பேசிக்கொண்டிருந்த ஒரு விஷயம் அவள் நினைவுக்கு மறுபடியும் வந்தது, ''பொன்மேடு டிம்பர் வொர்க்ஸ் கடனில் மூழ்கியிருக்கிறது'' என்ற விஷயந்தான் அது.

நாகராஜன் மிகவும் நல்லவன். கடன் பட்டார் நெஞ்சம் மிகவும் கலக்கப்படும் என்ற விஷயம் யாரும் அறிந்ததே. கடன் தொல்லைகள் பொறுக்க முடியாது பொன்மேடு டிம்பர் வொர்க்ஸின் மேல் தானே நெருப்பை வைத்து விட்டானோ என்னவோ! ஏனெனில் தொழிற்சாலை நெருப்பு முதலிய விபத்துகளுக்காக இன்ஷ்யூர் செய்யப்பட்டிருக்கிறது என்ற ஒரு ரகசியம் மட்டும் கீதாவிற்குத் தெரியும். உண்மை அப்படியிருந்தால்...கீதாவால் மேலே யோசிக்கவே முடியவில்லை காரணமில்லாத

ஒரு விதமான பயத்தில் அவள் நெஞ்சம் வேகமாகப் பதைத்தது.

படபடவென்று வெகு தூரத்திலே ஒலித்த மோட்டார் சைக்கிளின் ஓசையைக் கேட்ட கீதா ஆவலுடன் அடிப்பும் தாங்காது கடிகாரத்தைத் திரும்பிப் பார்த்தாள். இரவு மணி இரண்டரையாகியிருப்பதை அது அறிவுறுத்தியது. ஹாலினின்று வெளிப்பட்டு வாசல் வராந்தாவிற்கு அவள் வருவதற்குள் நாகராஜன் மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கி விட்டான்.

அவனது வரவையே ஆவலுடன் எதிர்பார்த்துத் தவங்கிடந்த பாகீரதி பரபரப்பாக எழுந்திருந்தாள். ''என்ன ராஜா! என்ன ஆச்சு?'' என்று கவலை தாங்க முடியாது விசாரித்தாள்.

ஹாலுக்குள் வந்து உட்கார்ந்த நாகராஜன் ''வெளியூர்களுக்கு அனுப்பச் சேகரித்து வைத்திருக்கும் மர டிப்போவிலே நெருப்பு பிடித்துக் கொண்டுவிட்டது அக்கா!'' என்றான் நிதானமாக.

''ரொம்ப எரிஞ்சு போச்சோ? எப்படி நெருப்புப் பிடிச்சுதாம்?'' என்று கேள்விகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கினாள் தமக்கை.

''எப்படி பிடிச்சதோ தெரியாது ராத்திரி காவல் பார்க்கிற காவற்காரன் நெருப்பு பிடிச்சது கூடத் தெரியாமல் தூங்கியிருக்கிறான். நான் அங்கே போகிறதற்குள் போலீஸ் கிலிஸ் எல்லாம் வந்து ஒரே தடபுடல் நம்ப தொழிற்சாலை நெருப்பணைக்கிற படை ரொம்ப கஷ்டப்பட்டுக் கூட சீக்கிரத்திலே முடியலை நல்ல வேளை! நெருப்பு தொழிற்சாலை கட்டடத்திற்குப் பரவவில்லை. டிப்போவோடு நின்றுவிட்டது!'' என்றான்.

''நமக்கு இதனால் ரொம்ப நஷ்டம் ஏற்படுமா அப்பா?'' என்று விசாரித்தாள் பாகீரதி.



''பொருளைப் பற்றினவரை நஷ்டமில்லை. ஏனென்றால் நமது தொழிற்சாலையை நெருப்பு முதலிய விபத்துகளுக்காக இன்ஷ்யூர் பண்ணியிருக்கிறேன். ஆனால், தொழில் சம்பந்தப்பட்டவரை ஏக நஷ்டம் ஏற்படப் போகிறது. பல ஊர்களுக்கு அனுப்ப வேண்டிய அவ்வளவு மரத்துண்டுகளும் கரியாகி விட்டதனால் குறித்த தேதியில் எல்லாம் போய்ச் சேராது. தொழில் விவகாரத்தில் ஏக நஷ்டம். அதை நினைக்கும் போது...'' என்று முடிப்பதற்குள், ''ஏன் ராஜா! ரொம்ப நஷ்டம் ஏற்படும் என்கிறாயோ?'' எனக் கவலைப்பட்டாள் பாகீரதி.

''சில லக்ஷங்கள் வரை நஷ்டம் ஏற்படலாம், அக்கா! உனக்கு இதெல்லாம் பற்றி என்ன கவலை? லாபம் வந்த பொழுது அனுபவித்தோம். நஷ்டம் வந்த பொழுதும் அனுபவிக்க வேண்டியதுதானே? எனக்குப் பணம் போனால்கூட அக்கறை இல்லை. என்னிடம் மிகவும் விசுவாசமாக உழைத்து வந்த கிழ வாட்ச்மேன் பாவம், நெருப்பில் அகப்பட்டுக் கொண்டான்...'' என்று கூறி நிறுத்தினான்.

''செத்துப் போய்விட்டானா... ஐயோ!'' என்று கலவரத்துடன் கூவினாள் பாகீரதி.

''இன்னும் சாகவில்லை. ஆனால், பிழைக்க மாட்டான். நெருப்புப் பிடித்தது தெரியாமல் உள்ளே கிடங்குப் பக்கத்தில் தூங்கிப் போயிருக்கிறான். உள்ளே அகப்பட்டுக் கொண்டு வெளியில் வரமுடியாது தவித்ததைப் பார்த்து என்னால் சகிக்க முடியவில்லை. அவன் நமது குடும்பத்திற்கு எவ்வளவு நன்றியுடன் உழைத்திருக்கிறான் என்று நினைத்தபோது என் மனம் உருகிவிட்டது. அந்தப் பச்சாதாபத்தில் என்ன செய்கிறோம் என்பது தெரியாது நெருப்பின் மத்தியில் நான் நுழைந்து, அவனுக்கு உதவி செய்ய ஓடினேன். அதற்குள் என்னை மற்றவர்கள் தடுத்து விட்டார்கள். இல்லாவிடில் இன்றைக்கு நான் உயிருடன் வந்திருக்க மாட்டேன். இதோ பார், அக்கா'' என கைகளிரண்டையும் நீட்டினான் நாகராஜன்.

அதைக் கண்ட பாகீரதி ஆவென்று அலறினாள். அவன் அணிந்திருந்த கதர் சட்டையின் கைகளில் நுனிப் பாகம் நெருப்புப்பட்டு எரிந்து போயிருந்தது முன் கையின் இரண்டொரு இடத்தில் நெருப்புச் சுட்டதனால் சிவந்து தெரிந்தது.

"என் மேல் நெருப்புக் காயம் பட்டதுதான் மிச்சம். கிழவனைப் படுகாயமாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். அவன் பிழைப்பது அபூர்வமாம், அக்கா கொஞ்சம் தேங்காய் எண்ணெய் இருந்தால் கொண்டு வந்து போடு. எரிச்சல் தாங்கவில்லையே!" என்று அரற்றினான் நாகராஜன்.

தம்பியின் கை மீது பட்டிருந்த சிவந்த புண் மீது எண்ணெயை மெல்லத் தடவிய பாகீரதியின் கண்களில் நீர் பொங்கி வழிந்தது. "ராஜா நீ இப்படி பண்ணுவியா? உனக்கு ஏதாவது நேர்ந்திருந்தால் எங்கள் கதி! அவன் ஒருவன் போன துக்கம் போதாதா...? இந்தப் பொன்மேடு டிம்பர் வொர்க்ஸ் முழுதுமே எரிஞ்சு சாம்பலானாலும் போட்டும் ராஜா, உனக்கு ஒண்ணுமில்லாமல் க்ஷேமமாயிருந்தால் போதும். ஏண்டாப்பா ராஜா, கையை ரொம்ப எரியறதோ?" என்று கூறிய பாகீரதி துக்கம் சகியாது குலுங்கக் குலுங்க அழுதாள்.

அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே நின்ற கீதாவின் கண்களிலும் நீர் பொங்கி வழிந்தது. "அக்கா! என்னத்துக்கு அழுகிறாய்? அழுதால் உன் உடம்புக்கு மிகவும் கெடுதல். பேசாமலிரு!" என்று கூறிய நாகராஜன் அங்கிருந்து எழுந்து மாடிக்குச் சென்றான்.

வெளியிலிருந்து வந்ததிலிருந்து தன் முகத்தைக்கூடப் பார்க்காது கணவன் தனது கஷ்ட நஷ்டங்களைச் சகோதரியிடமே சம்பாஷித்துக் கொண்டிருந்ததைக் கவனித்த கீதாவிற்கு மிகவும் வருத்தமாக இருந்தது. ஒரு சிறு தவறு செய்ததனால் அல்லவா இப்பொழுது அவள் சுவாதீனமாக முன் சென்று கணவனுக்கு ஆறுதல் மொழி எதுவும் சொல்ல முடியாது குற்றவாளி போல் தவித்துக் கொண்டு நிற்க வேண்டியிருக்கிறது? கீதாவின் மீது இன்னுமா நாகராஜனுக்குக் கோபம் இருக்கும். அதுவும், இந்தமாதிரி கஷ்டமான சந்தர்ப்பத்திலா? தானே வலுவில் போய் ஏதாவது இரண்டு ஆறுதல்மொழி கூற வேண்டியதுதான் கடமை என்று நினைத்த கீதா தயங்கிக் கொண்டே மாடியறைக்குச்சென்றாள். கணவன் படுக்கையறைக்குள் நுழைவதைக் கண்டாள். தானும் அங்குச் செல்ல வேண்டி அந்தப் பக்கம் அவள் திரும்புவதற்குள் கிளிக் என்று சத்தம் கேட்டது.



அந்த சமயத்தில் அவளுடன் பேச விரும்பவில்லை என்பதை அறிவிப்பவன்போல் நாகராஜன் படுக்கையறைக் கதவை வழக்கமில்லாத வழக்கமாகத் தாளிட்டுக் கொண்டு கட்டிலின்மேல் சென்று படுத்துக்கொண்டான். தாளிட்ட கதவுமுன் நின்ற கீதாவின் நெஞ்சம் துக்கத்தில் குமுறியது. கண்களில் நீர் தாரை தாரையாக வழிந்தது.

## 37

பொன்மேடு டிம்பர் வொர்க்ஸில் தீ விபத்து ஏற்பட்டு இரண்டு தினங்கள் சென்றன. இரண்டு தினங்களும் இரண்டு யுகங்கள்போல் நாகராஜன் குடும்பத்தினருக்குத் தென்பட்டன.

நெருப்பு முதலிய விபத்துகள், வரப்போகின்ற பெருந்தீமைக்கு அறிகுறியென்றது. பாகீரதியம்மாவின் எண்ணம் அப்படி அவள் நினைத்துக் கலங்குவதற்கு ஒரு காரணமும் இருந்தது இரண்டு வருஷங்களுக்கு முன்பு, ஒரு சமயம் அடுப்பில் கை வேலையாக இருந்த பாகீரதி அஜாக்கிரதை காரணமாகப் புடைவைத் தலைப்பில் நெருப்புப் பற்றிக் கொள்ளும் வரை கவனிக்காமல் இருந்து விட்டாள். நெருப்பைச் சமயத்தில் அணைத்து விட்டதனால் காயம் ஒன்றும் ஏற்படாது தப்பினாலும் கூட, அதுசமயம் அவள் தாயார் சொன்ன ஒரு வார்த்தை அவளது மனதை உறுத்திக் கொண்டேயிருந்தது.

"மேலே நெருப்புப் பிடித்துக் கொண்டால் நல்லதிற்கு அடையாளமில்லை என்பார்கள். என்ன கஷ்டம் வரப்போகிறதோ?" என்று கிழவி முணமுணத்துக்கொண்டிருந்தாள்.

அந்தச் சிறு சம்பவத்திற்கு மூன்றாவது நாள் அவள் சகோதரன் சங்கரன் மோட்டார் விபத்தில் மரணமடைந்து விட்டான். பொன்மேட்டுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்து எந்த விதமான தீமைக்கு அடிகோலிக் கொண்டிருக்கிறதோ என்று பாகீரதி அம்மாளின் மனம் விவரிக்க முடியாத திகிலில் தவித்துக்கொண்டிருந்தது. ஒரு சமயம் அது நாகராஜனுக்கு வர இருக்கும் பெரிய ஆபத்தைக் குறிக்கின்றதோ! இவ்வாறு பலவிதமாக எண்ணிக் கவலையடைந்த பாகீரதிக்கு நாட்கள் யுகமாகத் தென்பட்டதில் வியப்பில்லை.

கைகளின் மேல் ஏற்பட்டிருந்த தீப்புண்களின் வலி ஒரு புறம்; போலீஸ்காரர்களின் குறுக்கு விசாரணைத் தொல்லைகள் ஒரு புறம்; இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியாரின் கேள்வி விசாரணைகள் ஒரு பக்கம்—என நாலா பக்கமும் பலவிதமாக நெருக்கப்பட்ட நாகராஜன் பொறுமை இழந்தவனாகக் காணப்பட்டான். ஒரு சிறு விஷயத்தைகூடச் சகிக்க முடியாதவனாக எதற்கும் எரிந்து விழும் நிலையில் இருந்தான். காலம் மிக மிக மெதுவாக நகர்வதைப் போன்று அவனுக்குத் தோன்றியது.

கணவனது கைகள் மீதிருந்த காயம் எப்படி இருக்கிறது? அதனால் ஏற்பட்ட நஷ்டம் தொழிலை எவ்வளவு தூரம் பாதிக்கின்றது?—என்று பலவும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கீதா ஆவலில் துடித்தாள். ஆனால் துயரமே வடிவாகத் தென்பட்ட பாகீரதியிடம் அதைப்பற்றிச் சம்பாஷிக்கவே அவளுக்குத் தைரியம் இல்லை. அன்றிரவு நாகராஜன் அவள்பால் காட்டிய வெறுப்பிற்குப் பின்பு அவளுக்கு அவனது முகத்தை



நிமிர்ந்து பார்க்கக் கூட பயமாக இருந்தது. அந்த நிலையில் அவனிடம் அதைப்பற்றி எப்படிப் பேசுவது? ஏன் ஒவ்வொரு நாளும் இவ்வளவு மெதுவாகச் செல்கின்றது? கொஞ்சம் வேகமாக மறைந்து வாழ்க்கையில் புது மாறுதல்களை உண்டாக்கக் கூடாதா? என அவள் எண்ணினாள்.

அன்று காலை அவள் பெயருக்கு இரண்டு கடிதங்கள் வந்திருந்தன. அவைகளில் ஒன்றை எடுத்துப் பிரித்தாள்.

"அன்புள்ள கீதா!

இது சமயம் உனக்கு என் அனுதாபத்தை எப்படி எடுத்துக் கூறுவதென்றே எனக்கு விளங்கவில்லை. உங்களுக்கு ஏற்பட்ட எதிர்பாராத இந்த விபத்தைக் கேட்டு உன்னை நேரில் பார்த்து ஆறுதல் கூற வேண்டுமென்று மனம் துடிக்கிறேன் ஆனால் இது சமயம் அங்கே நான் வருவது உசிதமல்ல என்று அண்ணா அபிப்பிராயப் படுவதனால் நான் வரவில்லை. மற்றவை நேரில்.

இப்படிக்கு,
விமலா.

கடிதத்தைப் படித்து முடித்த கீதா அதை வெறுப்புடன் மேஜைமீது போட்டாள். விமலாவின் அனுதாபம் எல்லாம் வெறும் பொய் என்றுதான் அவளுக்குத் தோன்றியது. அடுத்த கடிதத்தை எடுத்துப் பிரித்தாள்:

"அன்புள்ள கீதா,

போன செவ்வாய்க்கிழமைதான் நான் என் பிறந்தகத்திற்கு வந்தேன். உனது அண்ணா அனுப்ப பணமில்லாது தான் அனுப்பினார், அதனாலேயோ அல்லது நான் புறப்பட்டு வந்த வேளை சரியாக இல்லையோ, கீதா! எனக்கு நேற்று பத்திரிகையைப் பார்த்ததிலிருந்து மனம் நிம்மதியே இல்லாது போயிற்று. நெருப்பு விபத்து எப்படி ஏற்பட்டது? அதனால் ஏற்பட்ட சேதம் எப்படி என்று எனக்கு உடனே விவரமாக ஒரு கடிதம் எழுதிப் போடு. பூந்திட்டில் உன்

அண்ணாவும் அம்மாவும் பத்திரிகையைப் படித்துவிட்டு மிகவும் கவலையில் மூழ்கிப் போயிருப்பார்கள். அவர்களுக்கும் விவரமாகக் கடிதம் போடு. நான் மட்டும் இந்த நிலையில் இல்லாதிருந்தால் இத்தனை நேரம் உனக்கு நேரில் ஆறுதல்கள் சொல்லப்பறந்தோடி வந்திருப்பேனே! ஆனால் இது சமயம் நான் இங்கிருந்து சொல்லக்கூடிய ஆறுதல் மொழி ஒன்றே ஒன்றுதான். எது வந்தாலும் மனத்தைத் தளரவிடாதே. தைரியமாக இரு. கவலையில் மூழ்கியிருக்கும் உன் கணவருக்கு நீ இது சமயம் ஆறுதல் மொழி சொல்லி உற்சாகப் படுத்த வேண்டும். உடனே பதில் போடு.

இப்படிக்கு,
கௌரி

மன்னியின் கடிதத்தை மீண்டும் ஒருமுறை படித்தாள். அதில் எழுதப்பட்டிருந்த ஒவ்வொரு வார்த்தைகளும் கௌரியின் தூய்மையான அன்பைத் தெளிவாக எடுத்துக் கூறுவன போல் ஒதாவிற்குத் தென்பட்டது.

விமலாவிற்கும் கௌரிக்கும் எத்தனை வித்தியாசம். பல மைல்களுக்கப்பால் இருந்தும் கௌரி சீதாவை உண்மையிலேயே நேரில் கண்டு பேசத் துடித்துக் கொண்டு எழுதியிருக்கிறாள். மிகவும் அருகில் இருக்கும் விமலாவோ நேரில் பார்த்துச் சொல்வானேன்! கடிதத்தில் அனுதாபம் தெரிவித்தால் போதாதா?' என்று எண்ணி எழுதியிருக்கிறாள்! எத்தனை அலக்ஷியம் அவளுக்கு! அவளை நம்பியல்லவா வாழ்க்கையின் இன்பத்தில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டேன்?— என வருந்தினாள் சீதா.

தனக்கே தீ விபத்து விவரம் ஒன்றுமே சரியாகத் தெரியாத பொழுது கௌரிக்கு அதைப்பற்றி என்ன பதில் எழுதுவது? 'நஷ்டம் ஒன்றும் அதிகமில்லை' கவலைப்படாதே உன் உடம்பைக் கவனித்துக் கொள்' என்று எழுதுவோம் என எண்ணிக்கொண்டு பின்கட்டிற்குப் போகத்திரும்பிய



சீதா அங்கே தன் கணவன் சகோதரியிடம் உரத்த குரலில் கொஞ்சம் கோபமாகப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டுப் பயத்துடன் நின்று விட்டாள்.

''உனக்கு இதெல்லாம் பற்றி என்ன விசாரம், அக்கா?'' என்று கோபத்துடன் அதட்டினான் நாகராஜன்.

''நீ சரியாகச் சொல்ல மாட்டேன்னாக்க எனக்குக் கவலையாக இருக்காதா? மானேஜரைக் கூப்பிட்டுண்டு வரச்சொல்லி, நானே கேட்டேன். அதிலே என்ன தப்பு!'' என்று கேட்டாள் பாகீரதி விடாப் பிடியாக.

''தப்பு என்னவா? மானேஜர் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்?'' என்று இரைந்தான் அவன்.

''அவர் என்ன நினைத்துக் கொள்றது? வீட்டிலே இருக்கிறவாளுக்கு விஷயம் சரியாகத் தெரியவில்லை? கேட்கிறான்னு நினைச்சுப்பார். இது நிஜமா என்ன, டிப்போவிலே இருந்த சரக்கு இரண்டரை லக்ஷம் பெறுமாம். ஆனால் இன்ஷ்யூரன்ஸ் பண்ணியிருக்கிறது ஒரு லக்ஷத்துக்குத்தானாமே! அப்படியானால் நமக்கு அதிக நஷ்டமில்லையோ'' என வினவினாள்.

''உனக்கு இதெல்லாம் பற்றி என்ன புரியப்போகிறது. இன்ஷியூர் விஷயம் எல்லாம் பற்றி உனக்கென்னத்திற்கு! நீ இப்படி வேண்டாத விஷயங்களுக்காகக் கவலைப் படுவதாக இருந்தால் நான் இந்த வீட்டிற்கே வரப்போவதில்லை. இந்தச் சனியன் கேஸ் ஒருவழியாக முடியும்வரை சிவனே என்று ஆபீஸிலேயே இருந்து விடலாம் போலிருக்கிறது. வீட்டுக்கு வந்தால் பெருந்தொல்லை!'' என்று கோபமாக இரைந்தான் நாகராஜன்.

''என்னமோ ராஜா, அசட்டுத்தனம். எனக்கும் தெரிஞ்சால் என்ன என்று கேட்டு விட்டேன். இனிமேல் நான் இதைப் பத்தியெல்லாம் விசாரிக்க மாட்டேன் நீ அதுக்காக கோவிச்சுண்டு வீட்டுக்குவராம ஆபீஸிலேயே தங்கி விடாதே. அங்கே யெல்லாம் ரொம்ப கொசு-

உபத்திரவமாம். எத்தனை வேலை இருந்தாலும் சித்தநாழி தூங்கறதிற்காகவாவது ஆத்துக்கு வந்துடப்பா'' என்றாள் தணிந்த குரலில்.

''சரி அக்கா! நான் போயிட்டு வரேன். இன்றைக்கு வீட்டுக்கு வர எத்தனை நாழியாகுமோ! ஆபீஸிலே நாலா பக்கமும் ஒரே விசாரணை. எனக்குப் பல தொல்லைகளில் என்ன பேசுகிறோம் என்றே புரிகிறதில்லை'' என்று பதிலளித்த நாகராஜன் வெளியே சென்று விட்டான்.

என்னதான் கஷ்டம் ஏற்பட்டாலும் நாகராஜன் பாகிரதியிடம் தனது கோபத்தை இதுவரை காட்டியதே இல்லை. கீதாவிற்கும் அவனுக்கும் மனஸ்தாபங்கள் ஏற்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில்கூட அவன் பொறுமையை இழந்து சகோதரியிடம் கடினமாகப் பேசியதில்லை. அப்படிப்பட்ட நாகராஜன் இன்று பாகிரதியிடம் எரிந்து விழக் காரணம்! தொழிற்சாலையின் தீ விபத்து விவரத்தைப் பாகீரதி ஏன் தெரிந்து கொள்ளக்கூடாதாம்! தீ விபத்து இன்ஷூரன்ஸ் ரகஸியம் என்ன வாயிருக்கும். இப்படியெல்லாம் பல எண்ணிய கீதாவின் மனம் சஞ்சலத்தில் தவித்தது.

நாகராஜன் கோபப்படுவதற்குக் காரணம் இல்லாமலிருக்காது. இன்ஷூரன்ஸ் விஷயமாக ஆபீஸில் ஏதோ தகராறு நடக்கிறாப் போலிருக்கிறது. அதை வீட்டில் உள்ளவர்கள் அறியக் கூடாது என்பதுதான் அவன் நோக்கமாயிருக்க வேண்டும், அப்படியானால் தீ விபத்துத் தானாக ஏற்பட்டதில்லையா?

நாகராஜனின் தொழில் மிகவும் மந்தமாகிக் கொண்டிருப்பதாகவும், தொழிற்சாலை கடனில் மூழ்கிப் போயிருப்பதாகவும், சிவராமன் கூறியது வாஸ்தவமானால்... இந்த நெருப்பு விபத்து ஒரு சூழ்ச்சியாக இருக்கலாம் அல்லவா? இன்ஷூரன்ஸ் கம்பெனியார்கள் ஆராய்ந்து பாராது பணத்தை அள்ளிக் கொடுத்து விடுவார்களா! அப்படி ஆராயும் போது தீ விபத்து தானாக ஏற்பட



வில்லை, வேண்டுமென்றே உண்டாக்கப்பட்டது என்று புரிந்து விட்டால்! ஐயோ, நாகராஜன் மீது பெரிய குற்றச்சாட்டைத் தொடர்ந்துவிட மாட்டார்களா? நாகராஜன் ஏன் உண்மையைச் சகோதரியிடமிருந்து கூட மறைக்க வேண்டும்? கடவுளே, கீதாவின் கணவன் அப்படிப்பட்ட கயவனா?

தீ விபத்து நாகராஜனால் உண்டாக்கப்பட்டது, இன்ஷூரன்ஸ் கம்பெனியை ஏமாற்றச் சூழ்ச்சி என்று வெளியாகி விட்டால் அதனால் அவனுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்கள் என்னவாயிருக்கும்? இந்தக் குற்றத்திற்கு என்ன தண்டனை ஏற்படலாம்? இது விஷயமாகச் சட்ட ஞானம் கொண்ட யாரிடமாவது விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என அமைதியின்றி மனம் தவித்தது.

மேலும் இரண்டு நாட்கள் சென்றன. வீட்டிலே நிலவியிருந்த பயங்கரமானதொரு நிசப்தம் கீதாவிற்கு மிகுந்த அச்சத்தைக் கொடுத்தது. எது வந்தாலும் வரட்டுமென்று கண்ணை மூடிக் கொண்டு பேசாமல் இருந்தால் அதன் முடிவுதான் என்ன? தனக்குள்ளே எண்ணிக் கவலை மிக அடைந்த அவள், கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தாள்.

''எனக்கு ஏதாவது கஷ்டங்கள் நேர்ந்தால் என்னை நம்பு, நான் உதவி செய்யத் தயாராக இருப்பேன்'' என்று அன்று சிவராமன் கூறிய உறுதிமொழிகள் அவள் ஞாபகத்திற்கு வந்தன. ஏன் சிவராமன் கொஞ்ச காலம் சட்டப் பரீக்ஷைக்குப் படித்தவன் தானே? அவன் தகப்பனார் கூட ஒரு வக்கீல் தான். கொஞ்சம் சட்டஞானம் அவனுக்கு இருக்கக்கூடும். தெரியாவிட்டாலும் யாராவது தேர்ந்த வக்கீலிடம் யோசனை கேட்டுச் சொல்ல மாட்டானா? இன்ஷூரன்ஸ் விஷயமாக ஏற்பட்ட சந்தேகத்தைச் சிவராமனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டால் என்ன? கீதாவிற்கு இந்தச் சிறு உதவியைக் கட்டாயம் அவன் செய்தே தீருவான். ஒருவித தீர்மானத்திற்கு வந்த கீதா துணிவுடன் சிவராமனுக்கு ஒரு கடிதம் எழுதினாள்.

"உங்களிடம் சில விஷயங்களை ரகஸியமாகப் பேச வேண்டியிருக்கிறது தங்களை வீட்டில் தனியாகச் சந்திக்க சந்தர்ப்பம் ஏற்படுமா? விஷயம் மிகவும் முக்கியமானதாகையால் உடனே சொல்லியனுப்பவும்.

உண்மையுள்ள கீதா."

சுருக்கமாக இப்படி ஒரு கடிதம் எழுதித் தோட்டக்காரனைக் கூப்பிட்டு அவன் கையில் கொடுத்து அனுப்பினாள். கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்த தோட்டக்காரன் கொண்டு வந்த பதில் காகிதத்தை ஆவலுடன் வாங்கிப் பிரித்துப் படித்தாள் கீதா

"என்னைத் தனியாகச் சந்தித்துப் பேச வேண்டிய விஷயங்கள் என்னவோ? சற்று என்னால் ஊகிக்கக்கூட முடியவில்லை. இருந்தாலும், உனக்கு ஏதோ ஒருவித ஆபத்து நேர்ந்திருக்கிறது. என் உதவியை நீ இது சமயம் நாடுகிறாய் என்றுமட்டும் எனக்குப்புலனாகின்றது. இன்று சாயங்காலம் என் தங்கையின் மாமனாரும் மாமியாரும் அவசரமாக டவுனுக்குப் புறப்பட்டுச் செல்கிறார்கள். அவர்கள் திரும்பி அடுத்த நாள்தான் வருவார்கள். சாயங்காலம் நான்கு மணிக்கு மேல் எங்கள் வீட்டில் என்னைச் சந்திக்கலாம். என் சகோதரி மட்டுமேதான் இருப்பாள். அவள் நமது சம்பாஷணையில் கலந்து கொள்ளாதவாறு நான் கவனித்துக் கொள்கிறேன்.

சிவராமன்."

## 38

அன்று சாயங்காலம் நான்குமணி சுமாருக்கு கீதா பாகிரதி அம்மாளிடம் விமலா வீடு வரைக்கும் போய் வருவதாகச் சொல்லிக் கொண்டு அவள் பதிலுக்குக் கூடக் காத்திராமல் வேகமாகத் தீக்ஷிதர் தெருவை நோக்கி நடந்தாள். பரபரப்பாகத் தான் தெருவிலே நடந்து செல்லும் போது தன்னை அந்தத் தெரு ஜனங்களில் அநேகர் மிகவும் ஆவலுடன் வேடிக்கை பார்ப்பதைக் கீதா கவனித்தாள். ஆனால், அதை அவள் லக்ஷியம் செய்யவில்லை. நாகராஜனின் தொழில் விவரங்கள்தான் அவளுக்குத் தற்பொழுது பெரிய பிரச்சனையாக இருந்தன. அதைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவலில் பிறர் என்ன சொல்லுவார்கள் என்று ஆராய்ந்து கொண்டிருக்க அவளுக்குப் பொழுதில்லை.



திடுதிப்பென்று உள்ளே நுழைந்த கீதாவைக் கண்டு ஒருகணம் பிரமித்துப் போனாள் விமலா. மாமியார் மாமனார் இருவரும் ஊரில் இல்லாததனால் மிகவும் சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டு இருந்த விமலா மேஜை விரிப்பொன்றுக்குப் பூ வேலை செய்து கொண்டு அப்பொழுது கூடத்துத் தரையில் உட்கார்ந்திருந்தாள் கனவில்கூட அவள் கீதாவின் வரவை எதிர்பார்க்கவில்லையாதலால் அவளுக்கு மிகவும் ஆச்சர்யமாக இருந்தது.

"என்ன கீதா! ஏது இப்படித் திடீரென்று எங்கள் வீட்டிற்கு விஜயம்? வா. உட்கார்!" என்று வரவேற்றாள் விமலா.

சிவராமன் விமலாவைப்பற்றிக் குறை கூறிய தினத்தினத்திலிருந்து கீதாவிற்குச் சிநேகிதி மீது நம்பிக்கைக் குறைவு ஏற்பட்டு விட்டதனால் அவளிடம் அதிகமாக முன்போல் மனம்விட்டுப் பேச அவளால் முடியவில்லை! "ஒரு காரியமாகத்தான் வந்தேன்! எங்கே உன் அண்ணா. அவரிடம்..." என்று தடுமாறினாள் கீதா மிகுந்த குழப்பத்துடன்.

'அண்ணாவிடம் ஒரு காரியமாக வந்திருக்கிறாயா? ஓகோ! அதைப் பற்றி எனக்குச் சொல்லக்கூடாதாக்கும்!' என்று விஷமமாகக் கேட்ட விமலா சிநேகிதியின் முகத்தைச் சந்தேகம் ததும்பும் கண்களுடன் நோக்கினாள்

"உன் அண்ணாவும் தற்போது மர வியாபாரத்திலே ஈடுபட்டிருப்பதனால் அதைப் பற்றிய சில விவரங்கள் தெரிந்து கொண்டு போக வந்தேன்" என்று கீதா கூறி விட்டுச் சுற்று முற்றும் பார்த்தாள்.

"அப்படியா? சரிதான்! உட்காரேன்! அண்ணா தூங்கிக் கொண்டிருக்கிறான். சமாசாரம் முக்கியமென்றால் எழுப்புகிறேன் பாவம் அவனுக்கு இரண்டுநாளாக உடம்பு சரியில்லை, வேலைத் தொந்தரவினால் இரவு வேளைகளில் கூடத் தூக்கமில்லை, அதனால்தான் இப்பொழுது தூங்குகிறவனை எழுப்ப வேண்டுமே என தயங்குகிறேன். உனக்கு வீட்டிற்குப் போக அவசரமில்லையே!" என்று இழுத்தாற்போல் கூறிய விமலா, மேஜை விரிப்பைக் கையில் எடுத்துக் கொண்டு மேலே தைக்க ஆரம்பித்தாள்.

"மணி ஐந்தடிக்கப் போகிறதே. நேரமாயிற்றே. சொன்னபடி வரக்காணோமே என்று நினைத்துக் கவலையடைந்தேன். நல்ல வேளை வந்து விட்டாய்" என்று மலர்ந்த முகத்துடன் வரவேற்ற சிவராமன் பின்பக்கத்திலிருந்து அருகே வந்து நின்றான். அவனைக் கண்ட விமலாவின் முகத்தில் அசட்டுக்களை பரவியது, அண்ணா நீ தூங்கிக் கொண்டிருப்பதாக நான் நினைத்தேன் அப்படியானால் கீதாவை நீ இப்பொழுது இங்கே சந்திப்பதாக முன்பாகவே ஏற்பாடாகியிருக்கிறது போலதோன்றுகிறது. எனக்கேன் இதைப்பற்றி நீ ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை?" என்று கொஞ்சம் கோபமாகவே கேட்ட விமலா இடத்தை விட்டு எழுந்திருந்தாள்.

"உனக்கு அதில் சம்பந்தமில்லாததனால் கூறவில்லை' என்றுசிவராமன் ஆத்திரமாகப் பதிலளித்தான்.

"அப்படியானால்நீங்கள் இருவரும் பேசும் விஷயத்தை நான் கேட்டுக்கொண்டு இங்கே இருப்பது கூடச்சரியல்ல நான் எப்பொழுது உங்கள் சம்பாஷணையில் கலந்து கொள்ளலாம் என்று தோன்றுகிறதோ அப்பொழுது என்னைக் கூப்பிடுங்கள். வருகிறேன்!" என்று காரமாகப் பதிலளித்த விமலா எழுந்து பின் பக்கம் சென்றாள்.

தான் வந்த விஷயமாகத் தமையனும் தங்கையும் மனஸ்தாபப்பட்டுக் கொள்வதைக் கவனித்த கீதாவிற்கு ஏன் இங்கே வந்தோம் என்று வெறுப்பு ஏற்பட்டது. "சீ!



விமலா இத்தனை அற்ப குணம் படைத்தவளா!" என்று விமலாவை மனத்திற்குள்ளேயே நொந்து கொண்டாள்.

சகோதரியின் குத்தல் மொழிகளில் சிவராமனும் பாதிக்கப்பட்டவனாகத் தென்பட்டான்.

"உங்களை இந்த மாதிரி அசம்பாவிதமான நிலைக்கு உட்படுத்துவேன் என்று நான் நினைக்கவில்லை. என்னால் நீங்கள் அனாவசியமாக விமலாவின் மனத்தாங்கலை ஏற்க வேண்டியிருக்கிறது!" என்று கீதா ஆரம்பித்தாள்.

"விமலாவின் மனஸ்தாபத்தைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம்!" என்றான் சிவராமன்.

"நீங்கள் எனக்கு உதவி செய்ய முன் வந்ததைக் குறித்து நான் மிகவும் நன்றி சொல்லுகிறேன். தங்களிடம் முக்கியமாகப் பேச வந்த விஷயம் என் கணவரது தொழிற்சாலை தீ விபத்தைப்பற்றியதாகும்" என்று ஆரம்பித்த கீதா மெல்லத் தான் அதைப்பற்றி என்ன நினைக்கிறாள் என்பதையும், நாகராஜனுக்கு ஏற்படும் தீங்குகள் எப்படிப்பட்டவை என்பதையும் அறிய வந்திருக்கும் தனது நோக்கத்தை விளக்கிக் கூறினாள்.

சங்கதி முழுவதையும் கேட்ட சிவராமன் முகம் பிரகாசமடைந்தது. "அப்படியா கீதா! நாகராஜனே இந்தத் தீ விபத்தை வேண்டுமென்று உண்டாக்கினாரா? நான் நினைக்கவேயில்லையே" என்று ஆச்சரியப்பட்டான்.

அதைக் கேட்ட கீதா மிகவும் கலவரமடைந்தாள். "இல்லை, இல்லை! அவர் செய்தார் என்று நான் சொல்லவில்லையே! ஒருசமயம் அப்படியிருக்கலாமோ என்றுதான் சந்தேகப்படுகிறேன். என் மனத்திலே அப்படிச் சந்தேகப்படுவதற்கு மூலகாரணம், நீங்கள் அன்று என் கணவர் கடன் விஷயமாகச் சொன்ன சமாசாரமே. என் கணவர் மேல் ஒரு பிசகும் இல்லாமலிருக்கலாம், கேவலம், எனது சஞ்சலபுத்தி அவரை வீணாகச் சந்தேகப்படுகிறதோ

என்னவோ? எது எப்படியிருந்தாலும் நான் நினைத்தபடி இருந்தால் எங்களுக்கு எவ்விதக் கஷ்டங்கள் நேரும் என்பதை மட்டும் தயவுசெய்து தாங்கள் நன்றாகச் சட்டப்படி பார்த்து எனக்குச் சொல்ல வேண்டும்'' என்று முடித்தான்.

சிவராமன் யோசனையுடன் புருவத்தை உயர்த்திக் கூரை மோட்டைக் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு ''தீ விபத்து வேண்டுமென்றே செய்யப்பட்டதானால் பெருங்குற்றமாயிற்றே! அதைப்பற்றிய விவரங்களைப் பின்னால் விசாரித்துக் கூறுகிறேன். இவ்வளவு தானா? இன்னும் சமாசாரம் உண்டா?'' என வினவினான்.

''இதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றுதான் வந்தேன்! வேறு ஒன்றுமில்லை. நான் போய் வருகிறேன் விமலாவிடம் சொல்லுங்கள். அவள் முட்டாள்தனமாக என் மீதுகூட அனாவசியமாகக் கோபங் கொண்டிருக்கிறாள்'' என்று பெருமூச்செறிந்தாள் கீதா.

''கீதா! விமலாவைப்பற்றியோ அல்லது இந்த உலகத்தவர்களைப் பற்றியோ எனக்கு அக்கறையே இல்லை உனக்காக நான் எதையும் செய்யத் தயார்!'' என்று கூறிய சிவராமன் அவள் முகத்தை உற்றுப் பார்த்தான்.

தன்னை விழுங்கி விடுபவன்போல் பார்க்கும் அவனது பார்வையையும் அவனது வார்த்தைகளில் தொனித்த தனி அர்த்தத்தையும் கண்டு கீதா மிகவும் கலவரமடைந்து விட்டாள்.

''உங்கள் உதவிக்கு வந்தனம்'' என்று அவசரமாக கூறிவிட்டு வெளியே போக எத்தனித்த அவளது முன்னால் சிவராமன் வந்து நின்று கொண்டான்.

''கீதா! நான் சொல்வதை கேட்பாயா சற்று!'' என்று கேட்டான் அவன்.

''என்ன சொல்லுகிறீர்கள்? ஒன்றும் விளங்கவில்லையே!'' என்று கேட்ட கீதாவின் கலவரம் உச்ச நிலையை அடைந்தது.



''நாகராஜனை மணந்து கொண்டதில் நீ துக்கத்தைத் தான் கண்டாய். கொஞ்சமாவது உன் மனம் அந்த விவாகத்தினால் சந்தோஷமடைந்ததா? நாகராஜன் வெறும் ஸ்திரீ லோலன் மட்டுமல்ல, பெரும் மோசக்காரன் என்று இந்த விபத்து நிரூபிக்கப் போகின்றது. குற்றம் ருஜுவானால் ஒரு சமயம் அவன் சிறை செல்ல நேரிட்டாலும் நேரிடலாம். இப்படிப்பட்ட கணவனுடன் ஏன் இந்தப் பொய்யான வாழ்க்கை!'' என்றான்.

சிவராமன் வாயினின்று வந்த வார்த்தைகளைக் கேட்ட கீதா பெரிய வெடி குண்டொன்றால் அதிர்ச்சி அடைந்தவள் போல் ஸ்தம்பித்துப் போனாள். கடையில் சிவராமனும் விமலாவைப் போன்ற குணம் படைத்தவன் போலிருக்கிறது என்ற உண்மை பளிச்சென்று அவள் மூளையில் உதயமாகியது. மிகவும், உதவி செய்பவன் போல் கருணை காட்டிப் பேசியதெல்லாம் நடிப்பன்றி வேறென்னவாக இருக்கும்? அயோக்யன்! மனத்திலே என்ன கெட்ட எண்ணத்தை வைத்துக்கொண்டு இந்த விதமான நாடகம் ஆடுகிறானோ, என எண்ணிக் கோபமும் வெறுப்பும் ஒருங்கே அடைந்தாள் கீதா.

''நீங்கள் பேசுவது ரொம்ப விசித்திரமாயிருக்கிறது, எனக்கு உதவி செய்வதாக வாக்களித்தீர்களே, இப்படிப் பேசுவதுதான் உதவியாகுமா?'' என்று கோபமாகக் கேட்டாள் கீதா.

''உனக்கு உதவி செய்யத்தான் முன் வந்திருக்கிறேன். உனக்குத்தான் என் நோக்கம் புரியவில்லை. அல்லது புரிந்துதான் வேண்டுமென்றே புரியாதது போல் நடந்து கொள்கிறாயோ, தெரியவில்லை!... இதோ பார், கீதா! நாம் ஒரே ஊரில் பிறந்து வளர்ந்தவர்கள். ஒருவரையொருவர் நன்றாக அறிவோம். வாழ்க்கையில் கல்யாணம் என்பது சாகும் வரை அனுபவிக்க வேண்டிய ஒரு பந்தம் என்று நினைக்கிற காலம் மலையேறிவிட்டது. சில சமயம் மிகுந்த புத்திசாலிகளே விவாக விஷயத்தில்

தவறுகள் செய்து விடுவது உண்டு. அந்தத் தவறை ஏன் நீடித்துச் செய்யவேண்டும்?'' என்று சிவராமன் படபடப்பாகப் பேசினான். பேச்சற்றுப் போன கீதா அவன் முகத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அதனால் நான் சொல்வது என்னவென்றால், தற்போது இந்த விவாகச் சட்டம் பெண்களுக்கு அதிக உரிமை வழங்கி இருப்பதனால் விவாகரத்து எடுத்துக் கொண்டுவிடு. அதற்குப் பின் நான் உன்னை மணந்து கொண்டு சந்தோஷமாக வைத்துக் கொள்கிறேன். நான் மிகவும் பரந்த நோக்க முடையவன். அதனால்...'' என்று முடிப்பதற்குள் கீதா ''அட பாவி! என்ன கேடு காலம்!'' என்று ஆத்திரத்துடன் கூறினாள். அவள் முகம் அவமானத்தினால் சிவந்துவிட்டது. இருதயம் படபடவென்று துடித்தது.

''உண்மையைச் சொன்னால் நீ ஏன் கோபப்பட வேண்டும்? நாகராஜன் மீது உனக்கு அன்பில்லை'' என்று கூறினான் சிவராமன். அவனது கண்கள் இரண்டும் குரோதக் கனலைக் கக்கின.

''சீ! என்ன பொய்! உன்னை ஒரு மனிதன் என மதித்துப் பேச வந்தேனே. என் மேல் பிசகு! நீங்கள் இருவரும், அப்பப்பா. பஞ்சமா பாதகர்கள்!'' என்று கீதா கோபத்துடன் கூறிவிட்டு அதற்கு மேல் பேசமுடியாது வெளியே செல்ல வேகமாக வாசல் பக்கம் திரும்பினாள்.

ஒரே எட்டில் ஓடி இப்படிப் போவதை நான் அனுமதிக்க மாட்டேன் என் கேள்விக்குத் தகுந்த பதிலைச் சொல்லிவிட்டுப் போ!'' என்றான்.

கீதாவின் கால்கள் பயத்தில் நடுங்கின நா வரண்டு போய் அவளுக்குப் பேசவே வரவில்லை, ''நீங்கள் நடந்து கொள்வது கொஞ்சம்கூட நன்றாகவேயில்லை உங்களுக்கு பதில் கூற வேண்டியது அனாவசியம். எட்டி நில்லும். மரியாதை தெரியாத மனிதர்!'' என்று அதட்டினாள் உரத்த குரலில்.



''நாகராஜன் மீது உனக்கு உண்மையான அன்பிருந்தால் என்னிடமோ விமலாவிடமோ கேவலமாக அவனைப் பற்றிப் பேசுவாயா? கணவனிடம் காதல் இல்லை; இருந்த போதிலும் அதைப் பிறரிடம் ஒப்புக்கொள்ளத் தைரியம் கிடையாது. ஏன் இந்தப் பொய் வாழ்க்கை? அதை விட்டு வெளியே வர உனது கோழை உள்ளம் பயப்படுகிறது. நல்ல பெண் நீ! உன்னைப் போய் மணந்து கொண்டானே நாகராஜன். அந்த மடையனுக்காக நான் பச்சாதாபப்படுகிறேன்!'' என்று ஏளனமாகப் பேசிய சிவராமன் வாசற்படியினின்று நகர்ந்தான்.

வேற்று மனிதன் ஒருவன் தன்னை துச்சமாகப் பேசும் படி நான் அவனிடம் தாராளமாகப் பழகியது எத்தனை ஆபத்தில் கொண்டு விட்டது என்று எண்ணமிட்டுக் கொண்டே அங்கிருந்து ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் கீதா.

வீட்டின் பின்பக்கத்திலிருந்து வந்த விமலா, ''என்ன அண்ணா, ஏதாவது சண்டையா என்ன? கீதாவின் குரல் உச்சஸ்தாயில் கேட்டதே!'' என்று வினவிய வண்ணம் அவன் முகத்தைப் பார்த்தாள். பேயறைந்து விட்டதைப் போன்று பயங்கரமாகத் தென்பட்டது சிவராமனின் முகம்.

ஆகாயத்தில் சூழ்ந்து நின்ற மேகக் கூட்டங்கள் திடீரென்று ஒன்று சேர ஆரம்பித்தன. ஆகாயம் இருண்டு வருவதைக் கவனித்த கீதா குறுக்கு வழியில் புகுந்து வேகமாக வீட்டிற்கு வரப் பிரயத்தனம் செய்தாள். அதற்குள் பளிச்சென்ற மின்னலுடன் பயங்கரமாக இடித்துக் கொண்டு சோவென மழைகொட்ட ஆரம்பித்துவிட்டது. மழையில் நனைய இஷ்டப்படாத கீதா இன்னும் வேகமாக ஓடினாள்.

## 39

வானமே இடிந்து மழைத் துளிகளாக வழிவதைப் போன்று சோவென்ற கோஷத்துடன் பொழிந்து கொண்

டிருந்த அப்பெரும் மழையில் மேலே நடந்து செல்ல முயற்சிப்பது முட்டாள் தனம் என்று உணர்ந்த கீதா, ஏரிக்கரையோரம் இருந்த பெரிய ஆலமரத்தடியில் நின்று விட்டாள். மழையில் நனைந்து போன புடைவையைக் கையில் பிழிந்து கொண்டு தன்னைச் சுற்றிலும் ஒரு தடவை பார்த்தாள். வேகமாகக் கீழே வந்து வீழ்கின்ற மழைத்துளிகள், அதை ஆசையுடன் வாங்கிக் கொள்வதற்கு கை நீட்டுவது போன்ற சிறு சிறு அலைகள் கொந்தளித்துக் கொண்டிருந்த பொன்னேரி எங்கே திரும்பினாலும் ஒரே ஜலமயமாகத் தென்பட்டது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனித சஞ்சாரத்தையே காணோம்! வானத்திலே கவிழ்ந்து நின்றன கருமேகத்தின் கூட்டங்கள். அஸ்தமித்து இன்னும் நேரம் ஆகாவிடினும் பயங்கரமானதொரு இருள் எங்கும் கவிந்து கொண்டிருந்ததை அவள் கவனித்தாள் சில்லென்று வீசிய ஊதல் காற்று ஈரமான ஆடைமீது பட்டதும் அவளது உடலைக் குலுக்கியது. 'சே! என்ன கஷ்ட காலம்! இந்த மழை இப்பொழுதுதான் பொழிய ஆரம்பிக்க வேண்டுமா? இரண்டு நாளுக்கு முன்பு பெய்திருந்தால்...' என்று வருணபகவானைச் சபித்த கீதா, கிளைகளின் வழியாக மேலே வர்ஷித்த மழையைக் கண்டு பயந்து மரத்தின் வேருடன் சென்று ஒட்டியபடி நின்றாள்.

ஆமாம்! இரண்டு நாளைக்கு முன்பு செய்திருந்தால் பொன்மேடு டிம்பர் ஒர்க்ஸில் தீ விபத்து நேர்ந்திருக்காது அல்லவா? தீ விபத்து நேர்ந்திராவிடில் கீதா சிவராமனிடம் இத்தகைய அவமானமான சொற்களைக் கேட்கும்படியான ஒருசந்தர்ப்பம் வாய்த்திருக்காதல்லவா? இப்மாதிரி அவளது சிந்தனை ஓடியது.

இவ்வளவு படித்திருந்தும் உலக அனுபவம் என்பது இல்லாத குறையினால் தானே சிவராமனை நல்லவன் என்று நம்பினாள். "அப்பப்பா! என்ன சூழ்ச்சி! என்ன கெட்ட மனம் அவனுக்கு! கீதாவின் நன் மதிப்பைப் பெற



சொந்த சகோதரியைக் கூடத் தூச்சமாகப் பேசினானே துரோகி! அவனது பகட்டு மொழிகளின் உட்கருத்தை அறியாத பேதை அவனை உத்தமன் என்று எண்ணி உதவியை நாடிச் சென்றேனே! ஊம் அவனைச் சொல்வதில் பயன் என்ன? இன்னது செய்தால் இன்னது நடக்கும் என்று ஒரு பெண்ணிற்குத் தெரியாவிட்டால் அனாவசியமாகத் தங்களுக்கு நெருங்கிய உறவு, அல்லது வேற்றுப் புருஷர்களிடம் பேசுவது தவறு என்று பெரியவர்கள் எதற்கு வைத்திருக்கிறார்கள்? இதுமாதிரி அசம்பாவிதமான சந்தர்ப்பங்களுக்கு இளம்பெண்கள் ஆளாகாதிருக்கும் நிமித்தம் தானே? அதை அநாகரிகமென்றும், புருஷர்களுடன் சமத்துவமாகப் பேசுவது நாகரிகம் என்று நினைக்கிறோமே அசட்டுப் பெண்கள்! அவர்களுக்கு இதுமாதிரி தண்டனை வேண்டியதுதான். நான் மட்டும் நாத்தனார் பேச்சைக் கேட்டிருந்தால்...விமலா சிவராமன் இவர்கள் சிநேகிதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தால்..." என்று நினைத்த கீதாவின் கண்களில்ருந்து கண்ணீர் பொங்கி வழிந்தது.

சிவராமன் கூறிய மொழிகள் யாவும் மறுபடியும் கணீரென்று காதருகில் ஒலிப்பதைப் போன்று அவளுக்குத் தோன்றவே விவரிக்க முடியாத ஒரு அருவருப்பு அவளது உடலைக் குலுக்கியது.

கொஞ்சம் மழை நின்றதுபோல் தென்படவே கீதா மரத்தினடியை விட்டு இரண்டடி கூடச் செல்லவில்லை. அதற்குள் பளிச்சென்று கண்ணைப் பறிக்கும் ஒரு மின்னல் தோன்றி மறைந்தது. காது செவிடாகும்படியான தொரு இடி. அதைத் தொடர்ந்தாற்போல் பெரும் ஓசையுடன் இடித்தது மீண்டும் வானம் கோஷமிட்டுக்கொண்டு மழையைக் கொட்ட ஆரம்பித்தது.

"இதென்ன சோதனை பகவானே" என்று சலித்துக் கொண்ட கீதா மறுபடியும் ஓடிவந்து ஆலமரத்தடியில் நின்று கொண்டாள். படர்ந்து நின்ற ஆலமரத்தின் அடர்ந்த கிளைகளையும் ஊடுருவிக் கொண்டு வேகமாக

விழ்ந்த மழைத்துளிகள் கீதாவைச் சொட்ட சொட்ட நனைத்துக் கொண்டிருந்தன.

''அம்மா! நீங்களா! நீங்க எங்கே இந்த மழையில் அகப்பட்டுகிட்டீங்க!'' என்று ஆச்சர்யத்துடன் வினவிய குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் கீதா. கையில் பிடித்திருந்த தாழங்குடையை ஓரமாகத் தரையில் வைத்துவிட்டு, இடையில் சுமந்திருந்த கூடையைக் கீழே இறக்கி வைத்த பொன்னி நனைந்து போன தனது ஆடையைப் பிழிந்து சரிப்படுத்திக் கொண்டு நின்றாள்.

பதிலே பேசாது தன்னைப் பார்த்து விழிக்கும் சின்ன எஜமானியைப் புன்னகை ததும்பும் முகத்துடன் பார்த்த பொன்னி ''கடையிலிருந்து சாமான்கள் வாங்கி வரப் போனேன், மழை வரும்னு தெரிஞ்சு குடை எடுத்துப் போயிருந்தேன். இல்லாட்டி தொப்பலாயிருக்கவேணுமே! அப்படி இருந்தும் எப்படி நனைஞ்சு போயிட்டேன்!'' என்று தனது வருகைக்கு காரணத்தை முன்னாலேயே விளக்கிவிட்டு ''ஏன் அம்மா இங்கே நிக்கணும்? வாங்க என் வீட்டுக்கு! வீடு ரொம்ப தூரம் இல்லே, அதோ தெரியுது பாருங்க அதான்'' என்று அழைத்தாள். அவள் அவள் சுட்டிகாட்டியதிக்கே அப்பொழுது கீதாபார்த்தாள் சில கஜ தூரத்தில் தென்பட்ட ஓட்டுவீட்டை அதுவரை அவள் கவனிக்கவேயில்லை அதுதான் பொன்னியின் வீடு! ஏரிக்கரை மீதிருந்த பொன்னியின் வீடு! நாகராஜன் தினமும் வந்து தனது காதலியைச் சந்திக்கும் கேளிக்கிரகம்! அதைப் பார்த்ததும் பல சம்பவங்கள் ஒருங்கே கீதாவின் நினைவுக்கு வரவே ''இல்லை நீ போ! மழை நின்றதும் நான் இப்படியே போய்விடுகிறேன்'' எனப் பிடிவாதமாகப் பதிலளித்தாள்.

கூடையை எடுத்து இடுப்பில்வைத்தவண்ணம் 'மழை இப்ப நிற்கும் என்றா நினைக்கிறீங்க! மானம் இடிக்கிற சமயத்திலே பச்சை மரத்தடியிலே நிக்கப்படாதுன்னு உங்களுக்குத் தெரியாதா அம்மா? இதோ தானே வீடு



இருக்கிறது? உள்ளே வராட்டிக் கூட வாசலிலேயாவது வந்து நில்லுங்களேன். ஈரப் புடைவையோட வீட்டுக்குப் போனாக்கா பெரியம்மா என்ன சொல்வாங்க?'' என்றாள் பொன்னி.

''எனக்கு இடியைப் பற்றிய பயம் இல்லை. நீ கவலைப்பட வேண்டாம். போ! மழை சிறிது நேரத்தில் நின்றுவிடப் போகிறது'' என்றாள் கீதா வறட்சியான குரலில்

''அதோ பாருங்க மேகத்தை. நல்ல காத்து அடிச்சு கலைச்சால் ஒழிய மழை நிக்காது வீணா பிடிவாதம் செய்யாதீங்க'' என்று வற்புறுத்தினாள் பொன்னி.

பொன்னியின் வார்த்தைகளை நிரூபிப்பது போன்று மழை மேலும் வேகமாக விடாது பொழிந்து கொண்டேயிருந்தது. கவிந்து கொண்டிருந்த இருளும் இன்னும் அதிகமாகிக் கொண்டுதான் போயிற்று ஒரு சமயம் இரவு வரை விடாது மழை பெய்தால் ஆலமரத்தடியிலேயே கீதா நின்று கொண்டிருக்க வேண்டியல்லவா நேரும்...! ஒரு தவறு செய்தது போதாதென்று மேலே இன்னொரு தவறு ஏன் செய்ய வேண்டும்? கீதாவிற்குப் பிடித்தமில்லையென்றாலும் அரைமனதாக ஒப்புக் கொண்டாள்.

தனக்குக் குடை வேண்டாம் என்று பொன்னி கீதாவிடமே தாழங்குடையைக் கொடுத்துவிட்டுத் தலையில் புடைவைத் தலைப்பால் முக்காடிட்டுக் கொண்டு, கூடையுடன் ஒரே ஓட்டமாக வீட்டை நோக்கி ஓடினாள். பின்னால் சென்ற கீதா வீட்டை அடைவதற்குள் பொன்னி, வீட்டுக்குச் சென்று கூடையை வைத்து விட்டுச் சின்ன எஜமானியை வரவேற்க வாசல் பக்கம் வந்தாள்.

''சாரல் அடிக்குதே அம்மா! உடம்புக்கு ஆகாது. ஏன் வாசலிலே நிற்க வேணும்? உள்ளே வாங்களேன்'' என்று அழைத்தாள்.

தயங்கிக் கொண்டு உள்ளே சென்ற கீதா கூடத்தில் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலின் மீது உட்கார்ந்திருந்த மீசைக்கார மனிதன் ஒருவனைக் கண்டு ப்ரமித்துப்போய் நின்று விட்டாள்.

''என் அண்ணார் இவர்; ஊரிலிருந்து வந்திருக்கிறார்'' என்று அவனை கீதாவிற்கு அறிமுகப்படுத்திய பொன்னி, பக்கத்திலிருந்த தொட்டிலிலிருந்து விழித்துக் கொண்டு எட்டிப்பார்த்த தனது மகனை எடுத்து மார் போடணைத்துக் கொண்டாள்.

''என்ன அது? ஒரே ஈரமாயிருக்கிற நீ புள்ளையைத் தூக்கறே?'' அவனை இப்படிக் கொண்டா!'' என்று உரிமையுடன் அதட்டிய மீசைக்காரன் பொன்னியிட மிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டு பின்பக்கமிருந்த அறைக்குள் சென்று விட்டான்.

''அண்ணாருக்கு அவன் மேலே ரொம்ப ஆசையம்மா. ஏன், என் மேலேகூட அவருக்கு எப்பவும் ரொம்பப்பிரியந் தான்'' என்று கூறிய பொன்னி, ''ஏன் அம்மா. உங்க புடைவை ஈரமாயிருக்குதே! இப்படி உட்காருங்க கொஞ்ச நேரத்லே காஞ்சு போயிடும்'' என்று நாற்காலி ஒன்றை எடுத்துக் கூடத்தின் நடுவில் போட்டாள்.

''இருட்டிப் போனாப்பலல்லவா இருக்கு! கொஞ்சம் விளக்கைப் பொருத்தறேன்'' என்று மேலும் கூறியபடி, பொன்னி லாந்தர் விளக்கொன்றை ஏற்றி உயரத் தொங்கிக் கொண்டிருந்த கம்பியில் மாட்டினாள் விளக்கி னின்று எழுந்த மங்கிய ஒளியில் அப்போதுதான் கீதா அந்தக் கூடத்தை நன்கு கவனித்தாள்.

மூலையில் தூசி படிந்த ஒரு மேஜை. அதன் மீது குழந்தைகள் விளையாடும் சில விளையாட்டுக் கருவிகள். இன்னொரு மூலையில் ஒரு சிறிய நாற்காலி! கண்களை நாலா புறமும் சுழட்டிக் கூடத்தை ஆராய்ந்து பார்த்த கீதா இடதுபுறம், சுவரில் மாட்டப்பட்டிருந்த பெரிய போட்டோவைக் கண்டு ஸ்தம்பித்துப் போய்விட்டாள்.

மலரும் ரீதியிலிருந்த பெரும் மல்லிகை மாலையொன் றால் அலங்கரிக்கப் பட்டிருந்த அந்தப் போட்டோவி லிருந்த நாகராஜன் கண்கொட்டாது அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்! இருப்புக்



கொள்ளாது எழுந்தாள் கீதா. அருகில் நெருங்கிச் சென்று அதை உற்றுக் கவனித்த அவளது மனம்வேக மாக அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. அதே சுருண்ட கூந்தல்! கூரிய கண்கள்! ஆனால், சாந்தமும் கம்பீரமும் ததும்பும் நாகராஜன் முகம் அல்ல அது! தூரப்பார்வை யால் தன் கணவனைப் போல உருவில் தோற்றம் அளித்த அந்த மனிதனை ஆச்சர்யத்தினால் கண்கள் தெறித்து விழும்படி கீதா பார்த்தாள்.

''ஆமாம்! பொன்னி! இது யார்?'' என்று அவள் கேட்பதற்குள் இருதயம் படபடப்பில் நின்றுவிடும் போல் தோன்றியது!

அருகில் வந்து நின்ற பொன்னியின் முகம் சோகத் தினால் வாடியிருந்தது. ''உங்களுக்கு அவர் சொல்ல வில்லையா, அம்மா?'' என்று தடைப்பட்ட குரலில் கேட்டாள்.

''இந்தப் போட்டோவை இதுவரை நான் பார்த்தது கூடக் கிடையாது!'' என வியப்புடன் கீதா பதில் அளித்தாள்.

''உங்கள் வீட்டுக்காரர் உங்களுக்கு இதைப் பத்திச் சொல்லலேன்னா எனக்கு ரொம்ப ஆச்சரியமாயிருக் கிறது. இவர்தான் அவர். என் கண்ணினுடைய அப்பா! உங்க வீட்டுக்காரரின் அண்ணா! இந்த உலகத் துலே என்னைத் தனியாத் தவிக்க விட்டுவிட்டுத் தான் மட்டும் நிம்மதியாப் போய்ச் சேர்ந்துட்டாரு...'' பொன் னியின் வார்த்தைகள் நின்றன. கரங்களால் முகத்தைப் புதைத்துக் கொண்டு சிறு குழந்தையைப் போலத் தேம்பி தேம்பி அழுதாள் பொன்னி!

## 40

கீதா பெருமூச்செறிந்தாள். பச்சாதாபம் என்ற உணர்ச்சியானது எதிர்பாராத சமயத்தில் மனத்தைத் தாக்குமாகில் அது துக்கத்தைக் காட்டிலும் வேதனையை உண்டுபண்ணக் கூடும், களங்கமற்ற தனது கணவனைச்

சந்தேகித்து ஏற்கெனவே துன்பத்தில் மனம் நொந்து போயிருக்கும் ஒரு பேதைப் பெண் மீது வீணாக வன்மம் கொண்டது எத்தனை தவறான செய்கை என்று எண்ணிய கீதாவின் மனம் இரக்கத்தினால் துன்பமடைந்தது.

பச்சிளங் குழந்தையைப் போல் தேம்பி அழும் பொன்னியின் துக்கத்தைக் காணச் சகியாது அவள் அருகில் கீதா, "பொன்னி! எதற்காக இப்படி அழுகிறாய்? இப்படி வருத்தப்படுவதால் என்ன பிரயோசனம்? இதோ பார் என்னை! கண்களைத் துடைத்துக் கொள்!" என்று சமாதானம் கூறிக்கொண்டு அவளது தோளைப் பிடித்துக் குலுக்கினாள்.

யஜமானியின் கரம் தன்மேல் படுவதற்குத் தான் அருகதையற்றவள் என்று எண்ணியவள் போல் பொன்னி துள்ளி எழுந்து நின்றாள்.

"அழுது லாபமில்லைதான், மனசு கேட்பதில்லை" என்று கூறியவண்ணம் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

மறைமுகமாகத் தனக்கும் நேரிடையாக அந்தப் பெண்ணிற்கும் தாங்கொணாத துக்கத்தைக் கொடுத்த அந்த மனிதனின் முகத்தை இன்னொரு தடவை பார்க்க வேண்டுமென்று ஆவல் எழவே கீதா மறுபடியும் அந்தப் படத்தின் அருகில் சென்று அதை உற்றுக் கவனித்தாள்.

"வெளிச்சம் போதவில்லை, அம்மா! இப்போ பாருங்க நல்லாத் தெரியும்" என்று கூறிய பொன்னி லாந்தர் விளக்கைக் கையில் தூக்கிப் படத்தருகில் பிடித்துக் கொண்டு நின்றாள் "அசப்பில் பார்ப்பதற்கு ஒன்றாகத் தென்படுகிறதே ஒழிய, இவருக்கும் என் வீட்டுக்காரருக்கும் முகஜாடையில் எத்தனையோ வித்தியாசம் இருக்கிறதே" என்று ஆராய்ந்து பார்த்த பின்பு வியப்புடன் கீதா முணுமுணுத்தாள்.



"நீங்கள் இதுவரை உங்கள் கொழுந்தருடைய போட்டோ படமே பார்த்ததில்லீங்களா?" என்று வினவினாள் பொன்னி.

"இல்லை! பெரியவருடைய போட்டோவை ஒண்ணும் வீட்டில் கிடையாது என்றுதான் இத்தனை நாள் எண்ணியிருந்தேன்" என்று பதிலளித்த கீதா மறுபடியும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

"போட்டோப் படங்கள் வேண்டியது இருக்கிறதுங்க அவர் இறந்த உடனே பெரியம்மா எல்லாத்தையும் எடுத்துப் பெட்டிலே போட்டு மூடி வச்சுட்டாங்க. இந்த ஒரு படத்தை அவங்க கிட்டே இருந்து வாங்கறதுக்குள்ளே நான் பட்ட கஷ்டம் ஈச்வரனுக்குத் தான் தெரியும்" என்று நிதானமாகக் கூறிய பொன்னி ஒரு சோகப் புன்னகை செய்தாள்.

"அதனால் தானோ என்னவோ வீட்டிலே பெரியவருடைய சாமான்கள் ஒண்ணும் என் கண்ணிலே படடதில்லை, பெரிய தொழிற்சாலை எஜமானராக வாழ்ந்து இறந்து போயிருக்கும் அவருக்கென்று ஒரு பொருள்கூடச் சொந்தமில்லாமல் இருந்திருக்குமா என்று நான் யோசித்ததே கிடையாது. அவருடைய சட்டைகளையோ வேறு எந்த விதமான சாமான்களையோ நான் இதுவரை கண்ணால் கண்டதேயில்லை இவைகள் எல்லாம் எங்கே தான் சென்று மறைந்து கொண்டிருக்கின்றனவோ அதுவும் தெரியாது" என்றாள் கீதா ஆச்சரியத்துடன்.

"பின்கட்டிலே கிழக்கேப் பக்கம் பெரிய அறை ஒண்ணு பூட்டிக் கிடக்கிறதே பார்த்திருக்கீங்களா? அந்த அறையிலேதான் அவருடையசாமான்கள் ஜாடாவும் பூட்டி வச்சிருக்கிறது அதன் சாவியைப் பெரியம்மா வச்சிருக்காங்க அவங்க உத்தரவு இல்லாம சின்னவர்கூட அந்த அறையைத் திறக்கக் கூடாதுங்க!" என்றாள் பொன்னி

''அந்த அறையிலே ஏதோ பழைய சாமான்கள் போட்டு வைத்திருக்கிறார்கள் போலிருக்கிறது என்று தான் நினைத்தேனே ஒழிய இப்படியிருக்குமோ என்று கூட நான் ஊகித்ததில்லை'' என்று கூறிய கீதா பொன்னியின் முகத்தை ஆச்சர்யத்துடன் பார்த்தாள்.

''அம்மா! ஒன்று கேட்கிறேன் கோவிச்சுக்காதீங்க'' என்ற பீடிகையுடன் பொன்னி ஆரம்பித்தாள். என்ன கேட்கப் போகிறாள் என்று அவளது முகத்தையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் கீதா.

''உண்மையாகவே உங்கள் புருஷர் இன்னும் உங்களுக்கு இவரைப் பத்தி சொன்னதில்லையா?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்ட பொன்னி அந்தப் படத்தைச் சுட்டிக் காட்டினாள்.

'இல்லை' என்பதற்கு அடையாளமாக கீதா தலையை அசைத்தாள். ''நான் சந்தேகப்பட்டது சரியாகத்தான் இருக்குது. என்ன இருந்தாலும் பெண் ஜாதிக்குப் புருஷன் நிஜத்தைச் சொல்லாமல் இருப்பாங்களா என்று முதல்லே நினைச்சேன். அப்புறம் உங்களோட பழகினதிலே உங்களுக்கு உண்மை தெரியாது. அதனாலே நீங்க என் மேலே கொஞ்சம் சந்தேகமாக இருக்கிறீங்களனு என் மனசிலே பட்டு விட்டிச்சு. சின்ன யஜமான் இப்படி அரிச்சந்திரராக இருப்பாருன்னு யார்தான் நினைக்க முடியும்?'' என்று வியந்த பொன்னி மேலே தொடர்ந்தாற் போல், ''சின்னவரும் பெரிய அம்மாவும் ஏன் இந்த அம்மாகிட்ட உண்மையைச் சொல்ல மாட்டேங்கறாங்கன்னு எனக்கு அவங்க மீதே கோபங்கூட வரும். பெண் ஜாதிக்குத் தெரியக்கூடாதுன்னு ஒரு விஷயத்தைப் புருஷன் மறைச்சு வைக்கறது ரொம்ப தப்பு இல்லீங்களா! அது போலவே தம்பி பெண்ஜாதிக்குச் சொல்லக் கூடாதுன்னு அண்ணன் காரியத்தில் ரகசியம் பண்ணறது வீட்டுக்கு பெரியவங்களாக இருக்கிறவங்களுக்கு நல்லா இருக்கா! இப்படியெல்லாம் அடிக்கடி நான் நினைச்சுப்



பார்க்கறது உண்டு. இவங்கல்லாம் சொல்லாட்டிப் போறாங்க. நானாவது போய் விஷயத்தைச் சொல்லிடலாம்னு ஒரேயொரு சமயம் நினைச்சிருக்கிறேன். ஆனால் அம்மா! என்னன்னு வந்து பேச்சை ஆரம்பிக்கிறது. அதைக் கேட்க உங்களுக்குப் பிடிக்குமா? மாட்டேன் போன்னு என்னை கோவிச்சுக்கிட்டால் என்ன செய்யறதுன்னு பயந்து கொண்டு இதுவரை பேசத் துணிஞ்சதில்லை. யார் பண்ணிய புண்ணியமோ இன்னிக்கு நீங்க இந்தப் பச்கம் வந்தீங்க. எனக்கு எல்லாம் சொல்லணும் போல இருக்கு. இன்னிக்கு மட்டும் மழை பெய்யாதிருந்தால் என் கதை உங்களுக்கு தெரியாத கதையாகத் தான் போயிடும். இல்லீங்களா?'' என்று கேட்டு நிறுத்தினாள்.

''நீ சொல்கிறது விளங்கவில்லையே!' என்று கீதா இடைமறித்ததற்கு, ''நாளை இரவு வண்டிக்கு நான் என் பிறந்த ஊருக்கு போகிறேன். அம்மா, எல்லாரிடமும் உத்தரவு வாங்கிக்கொண்டு விட்டேன். ஊருக்குக் கூட்டிப் போக என் அண்ணார் வந்திருக்கிறார். உங்களிடம் உத்தரவு வாங்குவதற்குக் காலையில் பங்களாவுக்கு வரணும் என்றிருந்தேன். அந்த சிரமங்களை சாமி எனக்கு வைக்காம ஒரு மழையைக் கொட்டி அம்மாவை இந்த ஏழையின் வீட்டுக்கே அனுப்பிச்சுட்டார்.'' என்று சிரித்தாள் பொன்னி.

''உன் ஊருக்குப் போனதும் எப்போ நீ திரும்பி வருவாய் பொன்னி! இரண்டு மூன்று மாதங்களில் வந்து விடுவாய் அல்லவா?'' என்று கேட்டாள் கீதா!

''திரும்பி வருவதா! இந்த ஊரில் என்னம்மா இருக்கு திரும்பி வர? என் சொந்த ஜனங்களுடன் கூடப் போய்ச் சேர்ந்து கொள்ளப் போகிறேன். ஆறு வருஷங்களுக்கு அப்புறம் எங்க ஊரு பக்கம் போறேனுங்க. இனி சாவறமுட்டும் அந்த ஊருதான் என்னுடையது'' என்று உணர்ச்சி ததும்பும் குரலில் முடித்த பொன்னி, யஜமானியின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவளது விழிக்கடையில்

துளிர்த்த கண்ணீரே அவளது குமுறும் மனதிற்குச் சான்றாக இருந்தது. "பொன்னி! இது ஒன்றும் எனக்குத் தெரியவே தெரியாதே!" என்று பச்சாதாபமும் வியப்பும் கலந்த குரலில் கூறினாள் கீதா.

"ஆமாம்மா! என் கதையே ஒரு புதுமையான கதை தானுங்க வெளியே மப்பு. இன்னும் மப்பு விட்ட பாடில்லை. கொஞ்சம் என் கதையைத்தான் கேளுங்க. பொழுதாவது போகட்டும்" என்று மெல்லச் சிரித்த பொன்னி யஜமானியின் முகத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

"பொன்னி, உன் கதையைக் கேட்க எனக்கு ஆவலாத் தான் இருக்கிறது தயவு செய்து சொல்லேன்" என்று கீதா நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள்.

தொண்டையைக்கனைத்துக்கொண்டு சுற்றும்முற்றும் ஒரு தடவை பார்த்து விட்டு மெல்லிய குரலில் பொன்னி சொல்ல ஆரம்பித்தாள்.

## 41

புலிக்காட்டிற்குச்சிலமைல்கள் தூரத்தில் உள்ளே தோகையான குன்றைத் தெரியாதவர்கள் பொன்மேட்டி லேயே இல்லையென்று சொல்லலாம். பசுமை நிறைந்த சந்தனக்காடுகள் நிரம்பப் பெற்ற 'தோகையான் குன்றின்' பூர்வீகக் குடிகளுக்கு மறவர்கள் என்று பெயர் குன்றின் மேலுள்ள காட்டு மரங்களை வெட்டிப் பிழைப்பதுதான் அவர்களின் தொழில் என்றாலும் அவர்களில் சிலர் குன்றின் அடிவாரத்திருந்த நிலத்தைப் பயிரிட்டும் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். தோகையான் குன்று மறவர்களில் அநேகர் விறகுவெட்டுவதையே தொழிலாகக் கொண்டு ஜீவித்து வந்தனர். சூரியன் உதிக்குமுன் அடி வாரத்திலிருக்கும் குடிசைகளின்று அவர்சள் கிளம்பி மலைக்குச் சென்றால், அந்திப் பொழுதுதான் திரும்பி வருவார்கள் ஆனால், உழைப்பாளிகளான அந்த மறவரில் பத்து வயதுச் சிறு பையன்கூட நாள் முழுவதும் விறகு வெட்டி ஐந்து அல்லது பத்து ரூபாய் சம்பாதித்து விடுவான்.



தோகையான் குன்று மறவர் ஜாதிக்கே மிகப் பெருமையைக் கொடுக்கக் கூடியவனாகக் கருதப்பட்டவன் தான் பொன்னியின் தந்தை வீரபாகு சின்ன வயதிலேயே சாமர்த்தியமாகப் பலவித தொழில் செய்து பணம் சம்பாதித்து விட்டதனால் வீரபாகுவுக்கு மற்ற மறவர்களைப்போல் அன்றாடம் விறகு வெட்டிக் கூலி வேலை செய்து கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. நாற்பதாவது வயது அடைவதற்குள் பத்து ஏகரா நஞ்சை பூமிக்கு எஜமானனாயிருந்தான். அத்துடன் தோகையான் குன்றின் மீதிருந்த சந்தனக் காடுகள் சிலவற்றைக் குத்தகைக்கு எடுத்து ஆட்கள் பலரை வைத்து மரங்களை வெட்டி அதைப் பலமர வியாபாரிகளுக்கு நல்ல லாபத்துக்கு விற்றுக் கொண்டிருந்தான்.

வீரபாகுவிற்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருந்தனர். ஆனால், பொன்னிக்கும் அவளது அண்ணன் மார்களுக்கு இடையே வயதில் அதிகம் வித்தியாசம் இருந்தது. வீரபாகுவின் முதல் மனைவி இரண்டு பிள்ளைகளைப் பெற்ற பின் நோய்வாய்ப்பட்டுச் சிறு வயதிலேயே மரணமடைந்து விட்டாள். அதற்குப்பின் பல வருஷங்கள்வீரபாகு மணம் செய்துகொள்ளாமலேயே காலத்தைப் போக்கி விட்டான்.

பணமும் பொருளும் சேர்ந்ததும் நாற்பதாவது வயதில் வீரபாகுவின் மனம் மறு விவாகத்தைப்பற்றி எண்ணியது. அந்த வயதில் பதினெட்டு வயதுப்பெண் ஒருத்தியை மணந்து கொண்டான். பொன்னி பிறந்த மறு வருஷமே அவள் தாய் மண்ணுலகை நீத்தாள் இரண்டு மனைவிகளும் இறந்தபின் வீரபாகுவுக்கு மூன்றாவது விவாகம் செய்துக்கொள்ளத் தைரியமில்லை. தனக்கு எங்கேயாவது 'மனைவி—கொல்லி' என்ற பெயர் நிலைத்துவிடப் போகிறது என்ற கவலையில் விவாகம் என்ற எண்ணத்தையே கைவிட்ட வீரபாகு தனது ஆசை முழுவதையும் பொன்னியின் மீது வர்ஷித்து அவளைக் கண்ணின் கருமணியைப் போன்று வளர்த்து வந்தான்.

35849

மறவர் ஜாதியிலேயே செல்வந்தரான வீரபாகுவின் மகள் கஷ்டம் என்பதே தெரியாது வளர்க்கப்பட்டாள். துள்ளி ஓடும் மானைப்போல் கள்ளம் கபடின்றி வளர்ந்து வரும் தங்களது தங்கைமீது அண்ணன்மார்கள் இருவரும் உயிரையே வைத்திருந்தனர், மற்ற பெண்களைப்போல் பொன்னி ஆண் பிள்ளைகளுடன் மலைக்குச் சென்று விறகுக் கட்டுகளைச் சுமந்து வரும் வேலையோ அல்லது வீட்டிலிருந்து சமைத்துப் போட்டு வயல் வெளிகளுக்குச் சென்று களை பிடுங்கும் வேலையோ ஒன்றும் செய்து அறியாள். பாட்டி அருமையாகச் சமைத்துப் போட்ட சோற்றைத் தின்றுவிட்டுச் சொகுசாக உடுத்திக்கொண்டு வயல்வெளிகள் முழுவதும் வனமோகினி போல் கேட்பாரின்றி சுற்றி வருவாள் இயற்கை அன்னையின் மடியிலேயே வளர்ந்ததனாலோ என்னவோ அவளுக்கு மலையோ அதில் அடர்ந்திருந்த காடுகளோ, அல்லது அதில் வசித்து வந்த துஷ்ட மிருகங்களோ ஒரு நாளும பயத்தை உண்டு பண்ணியதில்லை.

பசித்தபொழுது சாப்பிடுவது நினைத்த பொழுது காடுகளைச் சுற்றி வேடிக்கை பார்த்து வருவது என்று இருந்த அவளது வாழ்க்கையில்சிலமாறுதல்கள் தோன்றும் காலமும் ஏற்பட்டது.

''வயது வந்த பொண்ணு நீ பாட்டிலே துணை இல்லாம காட்டுப்பக்கமெல்லாம் போகலாமா? இனிமேல் எங்கேயும் எங்கிட்டச் சொல்லாம போகக்கூடாது. அப்படி ஏதாச்சும் பாக்கணுன்னு ஆசைப்பட்டா அண்ணாச்சியை அழைச்சுட்டுப் போறது வீரபாகு மக கேட்பாரில்லாம் திரிஞ்சிட்டிருக்கான்னு நம்பவங்க சொன்னா கேட்க நல்லாயிருக்குமா?'' என்று ஒருநாள் வீரபாகு தனது மகளிடம் ஆரம்பித்தான்.

சிறு குழந்தையிலிருந்து தான் பதினெட்டு வயது மங்கையாக வளர்ந்துவிட்ட உண்மை அன்றுதான் பொன்னிக்குப் புலனாகியது.



''என்னப்பா ஒரேயடியா வீட்டிலேயே குந்தியிருக்கச் சொல்றே! காட்டுப் பக்கம் நான் தனியாவா போறேன்? பக்கத்து ஊட்டுப் பச்சைகூட வருகிறதே'' என்றாள். துக்கத்தினால் தடைப்பட்ட குரலில் இயற்கையையே கண்டுகளித்து, அதன் நறுமணத்தையே சுவாசித்து வளர்ந்து பழக்கப்பட்ட பொன்னிக்குத் தனது சுதந்திரம் பங்கப் படுவதைக் கண்டு சகிக்க முடியவில்லை.

''கொஞ்சம் பொறு குட்டி, மச்சான் காளிசாமிக்கும் உனக்கும் தைக்கு அப்புறம் கல்யாணம் பேசியிருக்கு அதுக்கப்பாலே உன் இஷ்டப்படி நீ இருக்கலாம். அது வரை பெரியவங்க பேச்சுக்குக் கொஞ்சம் காது கொடுத்து நட!'' என்று சிரித்தான் பெரிய அண்ணன்.

மச்சான் காளிசாமியைப் பற்றிப் பொன்னி அதுவரை ஒன்றும் எண்ணியதேயில்லை முறுக்கு மீசையும் தளுக்கு நடையும் கொண்ட காளிசாமி மட்டும் பொன்னியைக் கண்ட பொழுதெல்லாம் தனது முப்பத்திரண்டு பற்களையும் காட்டிப் புன்னகை செய்வது உண்டு. காளிசாமி பொன்னி மீது கண் வைத்திருந்தான் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் பொன்னியைப் பொறுத்த வரை காளிசாமியும் மற்ற மறவர் குலத்து ஆண் பிள்ளைகளும் ஒன்றாகத்தான் தோன்றினார்கள். காளிசாமியானால் என்ன, அது கந்தசாமியானால் என்ன, தை மாதத்துக்கு மேல் அவள் யாராவது ஒருவனை மணந்து கொள்ளத்தான் வேண்டும்! கல்யாணம்! அதைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. அவளது வாழ்க்கையில் அது ஒருவித மாறுதலையும் செய்யப் போவதில்லை முன் போல் சந்தோஷமாகத்தான் இருப்போம் என்று எண்ணியிருந்தாள்.

தகப்பன் போட்ட உத்தரவுக்குப்பின் பொன்னி துணை இன்றி எங்கும் போவதையே விட்டு வீட்டிலேயே தங்க ஆரம்பித்தாள் அந்தச் சமயம் அவளது பாட்டி மாரடைப்பினால் இறந்து விடவே, வீட்டுப் பொறுப்பு முழுவதும் அவள் தலையிலே விழுந்தது. கஷ்டமே அறியாத பொன்னிக்கு வீட்டை நிர்வகிக்க

முதலில் மிகவும் சிரமமாக இருந்தது. ஆனால் சில மாதங்களில் எல்லோரும் பிரமிக்கும் அளவில் வீட்டை நிர்வகித்துத் திறமையுடன் நடத்தி வந்தாள் அவள்.

வீட்டின் ராணியாகப் பொன்னி இருந்த அந்தக் காலத்தில்தான் ஒருநாள் அது நடந்தது. அன்று பூர்ண சந்திரன் தனது தண் கிரணங்களை வாரி வீசிக்கொண்டு ஆகாய வீதியில் பவனி வந்து கொண்டிருந்தான். வேலையெல்லாம் முடித்து விட்டு பொன்னி தன் தோழி பச்சையுடன் ஊர்க்கதைகள் பேசிக் கொண்டு நிலவு பொழியும் முற்றத்தில் உட்கார்ந்திருந்தாள். அண்ணன்மார் அப்பா இவர்களின் குரல் தொலை தூரத்திலே கேட்டதும் ஆவலுடன் எழுந்து அவர்களை வரவேற்க ஓடி வாயிற் கதவைத் திறந்தாள். தந்தை தமையன்கள் இவர்களுடன் உள்ளே நுழைந்த வேற்று மனிதனைக் கூடத்து விளக்கொளியில் நன்கு கவனித்தாள் பொன்னி.

அதே சமயம் அவனும் அவளை விழுங்கி விடுபவன் போல் அதிசயத்துடன் பார்த்துக் கொண்டு நின்றான். பொன்னியின் கண்கள் ஆச்சர்யத்தினால் மலர்ந்தன. இருதயம் வேகமாகத் துடித்தது. இத்தனை அழகான சுந்தர புருஷனைப் பொன்னி அதுவரை பார்த்ததேயில்லை. அவன் பக்கத்தில் நின்ற அண்ணன் இருவரும் தீவட்டிக் கள்ளர்களைப் போல் பயங்கரமாகப் பொன்னிக்குத் தென்பட்டனர்.

"இவருயாருன்னு ஆச்சரியமாயிருக்காம்மா, பொன்னி இவருதான் நம்ப பொன்மேட்டிலே மர வியாபாரம் ஆரம்பிச்சிருக்கிறவர். நம்பகிட்ட சந்தனக் கட்டை வாங்க வந்திருக்கிறார் இருட்டிடுச்சு. நாளைக் காலை ஆகட்டுமின்னா பிடிவாதமாக இப்பவே ஆகணுன்னார்' நான் தான் முடியாது. காலையிலே தான் பணம் எடுத்துக்குவேன்னு சொல்லி நம்ப வீட்டிலேயே ராத்திரி தங்கிச் சாப்பிடலாம்னு அழைச்சு வந்தேன்" என்றான் வீரபாகு.



"பொன்மேடு டிம்பர் வொர்க்'ஸின் முதலாளி. ஆம் என்பதுபோல் தலையை அசைத்துவிட்டுப் பொன்னியைப் பார்த்துப் புன்முறுவலித்தான். அதைக்கண்டு ஏனோ அவளது கன்னங்கள் சிவந்தன!

"இவன்தான் என் மகள் பொன்னி கடவுள் கொடுத்தது எனக்கு ஒருபொண்ணு. இரண்டு புள்ளைகள் ஆனால் பாவம் எல்லாம் தாயில்லா குழந்தைகளாக வளர்ந்தாங்க இரண்டு வாட்டி நான் கல்யாணம் செய்துகிட்டும், ரெண்டு தடவையும் கொடுத்து வைக்கலீங்க." என்று கூறிய வீரபாகுவின் குரல் கம்மியது!

"என்னத்துக்குவருத்தப்படுகிறீங்க! இந்தப் பொண்ணு இருக்குதங்களைக் கடைசி காலத்தில் வைத்து போஷிப்பதற்கு!" என்று கூறிய சங்கரன் மெல்லச் சிரித்தான்.

"பொண்ணு நம்பளோடேயே இருக்க முடியுங்களா? ஆச்சு, தைமாசத்துக்கப்பாலே கல்யாணம் ஆயிடும். அப்புறம்"...என்று பெருமூச்சு விட்டான் வீரபாகு.

"கலியாணமா? இந்தப் பொண்ணுக்கு அதுக்குள்ளாகவா?" என்று கேட்ட சங்கரன் திடுக்கிட்டவன் போல் தென்பட்டான்.

"என்ன அப்படி கேக்கறீங்க! வயசு ஆகலீங்களா! உண்மையைச் சொல்லப் போனால் இரண்டு வருஷத்துக்கு முந்தியே கட்டிக் கொடுத்திருக்கணும். நான் மனசு கேட்காம ஒத்திப் போட்டுட்டேன்!" என்றான் வீரபாகு.

"ஆமாம், ஆமாம் நீங்க சொல்றது வாஸ்தவந்தான்" என்று முணுமுணுத்த சங்கரன் மறுபடியும் பொன்னி பக்கம் திரும்பினான், தன்னைப் பற்றிய சம்பாஷணையைக் கேட்க விரும்பாத பொன்னி அங்கிருந்து உட்புறம் சென்றாள்.

"ஆமாங்க, உங்களுக்கு எத்தனை குழந்தைகள் இருக்குதுங்க?" என்று மெல்லக் கேட்ட வீரபாகு விருந்தாளியை அங்கிருந்த நாற்காலியில் உட்காரும்படி உபசரித்தான்.

''எனக்கா? எனக்கு இன்னும் கல்யாணமே ஆக வில்லையே!'' என்று கூறிய சங்கரன் உரத்த குரலில் சிரித்தான் பொன்னியின் காதுகளில் அவனது வார்த்தைகள் நன்கு கேட்டன.

பிறகு பல மணி நேரம் வீரபாகுவுக்கும் சங்கரனுக்கும் தொழில் விவகாரம் பற்றிய பேச்சு நடந்தது. அதன் விவரம் ஒன்றும் பொன்னிக்குப் புரியாவிட்டாலும் மிகுந்த தொகைக்குப் பொன்மேடு டிம்பர் வொர்க்ஸின் முதலாளி தன் தந்தையிடம் சந்தனக் கட்டைகள் வாங்க பேரம் செய்கிறார் என்று மட்டும் புரிந்து கொண்டாள்.

இரவு போஜனத்திற்கு முன்பு வீரபாகு பொன்னியிடம் வந்து இரகசியமாக வந்திருக்கிற அய்யாவை நமது புதுவீட்டிலே படுக்கச் சொல்லியிருக்கிறேன், அவரு நம்ப ஊட்டிலே சாப்பிட மாட்டாரு, அதனாலே காய்ச்சின பசும்பாலும் பழங்களும் கொண்டு போய் வச்சுட்டு வா. இப்ப அவரு எங்கேயோ வெளியிலே போயிருக்காரு'' என்றான்.

புது வீடு என்று சொல்லப்பட்ட ஓட்டு வீடு அவர்களது வீட்டுக்குச் சில கஜ தூரத்தில் இருந்தது. அதைக் கட்டியதிலிருந்து உபயோகிக்கப்படாததனால் ஒரே தூசிமயமாக இருந்தது, அதன் அறைகள் எல்லாம் வந்திருக்கும் மனிதர் படுப்பதற்குத் தேர்ந்து எடுத்த அறையைத் திறந்து நன்றாகப் பெருக்கிக் கட்டிலைத் தூசி போகத் தட்டி சுத்தமாக்கி விட்டு வெளி வந்த பொன்னி தங்கள் வீட்டிற்கு வந்தாள். தகப்பன் கட்டளைப்படியே பாலும் கொஞ்சம் பழங்களும் எடுத்துக் கொண்டு அந்த அறையில் வைத்து வரப் புது வீட்டுக்குள் நுழைந்தாள். அறைக்குள் நுழைந்த அவள் அப்படியே திகைத்துப் போனாள் எங்கேயே வெளியே போயிருப்பதாகச் சொல்லப்பட்ட 'பொன்மேடு டிம்பர் வொர்க்'ஸின் முதலாளி கட்டிலின் மீது ஒய்யாரமாகப் படுத்துக் கொண்டு சிகரெட் ஒன்றைப் பிடித்துக் கொண்டிருந்தார்.



காலடிச் சப்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்த சங்கரனின் முகம் பிரகாசமடைந்தது.

''உள்ளே வாயேன், அம்மா! ஏன் அங்கேயே நிக்கிறே?'' என்றான் அவன் புன்னகையுடன்.

தயங்கிக் கொண்டே உள்ளே நுழைந்த பொன்னி, தான் கொண்டுவந்த பொருள்களை அங்கிருந்த பெஞ்சு ஒன்றின் மீது வைத்துவிட்டுப் போகத் திரும்பினாள்.

''உஸ்! இங்கே வா! இது என்ன, இதெல்லாம்?'' என்று கேட்டுக்கொண்டு எழுந்து நின்ற சங்கரன் பொன்னியின் முகத்தை ஆர்வமாகப் பார்த்தான்.

''அப்பா கொடுக்கச் சொன்னது, இதுகளையெல்லாம்!'' எனத் தடுமாறிய பொன்னி, சிவந்த தனது முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

''நான் என்ன குண்டோதரன் என்று நினைத்துக் கொண்டாரா? ஒரு செம்பு பால், நாலு டஜன் மலைப் பழம்! இந்தா இதையெல்லாம் எடுத்துக்கொண்டு போ!'' என்று சிரித்த சங்கரன், இரண்டு பழங்களை மட்டும் எடுத்துக் கொண்டு தட்டை எடுத்து அவள் பக்கம் நீட்டினான்.

குழப்பத்துடன் அதை வாங்கிக்கொண்ட பொன்னியின் முகத்தை நிமிர்ந்து பார்த்த சங்கரன், ''உனக்குப் பொருத்தமான பெயர்தான்.'' என்று கூறி மெல்லச் சிரித்தான்.

பொன்னியின் நெஞ்சம் திக் திக்கெனப் பதைத்தது. ஆனாலும் அதைக்கேட்டு அவள் மனம், ஒருவித ஆனந்தத்தையும் அதே சமயம் அநுபவித்தது, அறையை விட்டு விரைவில் வெளியே ஓடிச் சென்றாள்.

'பொன்மேடு டிம்பர் வொர்க்ஸ்' முதலாளி அடுத்த நாள் காலையிலேயே புறப்பட்டுச் சென்று விட்டார். ஆனால் பொன்னியின் மனத்திலே அவரது மோகன உருவம் தானாகவே வந்து பதிந்து கொண்டது என்று சொல்

லத் தேவையில்லை சங்கரனைப் பார்த்த கண்களைக் கொண்டு அவளால் காளிசாமியைப் பார்க்கப் பிடிக்க வில்லை. அவர் எங்கே? காளிசாமி எங்கே கொலையாளி போலல்லவோ தோன்றுகிறான்?—பொன்னி மனத்திற் குள்ளே தீர்மானித்தாள் காளிசாமியை அவள் மணந்து கொள்ளப் போவதில்லை.

'இரண்டு வாரங்கள் சென்றன. அதே போன்று ஒரு நாள் இரவு பொன்னி வழக்கம்போல் தந்தையின் வரவிற் காகக் காத்திருந்தவள் கதவை யாரோ தட்டுவது கேட்டுத் திறந்தாள். தகப்பன் தமையன் இவர்களுடன் அந்த மனிதரும் வந்திருந்தார்.

''மறுபடி கொஞ்சம் மர வியாபாரம் செய்ய வந்திருக் கிறார்'' என்று சந்தோஷத்துடன் கூறினார் வீரபாகு இந்தத் தடவை பொன்னியின் மனம் மிக மிக ஆனந்தத் தில் ஆழ்ந்தது சங்கரனைக் கண்டு.

''இதோ பார்! அப்பொழுது போல் செய்யாதே எனக்கு ஒன்றும் சாப்பிட வேண்டாம்!'' என்று பொன் மேடு டிம்பர் வொர்க்ஸ் முதலாளி, பொன்னியைப் பார்த் துக் கூறிவிட்டு, புது வீட்டிற்குள் போய்ச் சிரம பரிகாரம் செய்துகொள்ளச் சென்றார்.

''இருந்தாலும் அப்பா நீங்க பட்டினியா படுக்கக் கூடாதுன்னு இதுகளை அனுப்பினார்'' எனக் கூறிக் கொண்டு பொன்னி தைரியமாக அறைக்குள் நுழைந்து பழத்தட்டை பெஞ்சுமீது வைத்துவிட்டுச் சங்கரனைத் திரும்பிப் பார்த்தாள்.

''என்ன இவர் அடிக்கடி இங்கே நம்ப அப்பாகிட்ட வியாபாரம் செய்ய வருகிறாரே என்று ஆச்சரியப்படு கிறாயா, பொன்னி?'' என உல்லாசமாகக் கேட்டான் சங்கரன்.

''ஆமாம்!'' என தலையசைத்த பொன்னி வரிசைப் பற்கள் தெரிய மெல்லச் சிரித்தாள்.



''இந்தத் தடவை நான் உண்மையில் மர வியாபாரம் செய்ய வரவில்லை. வேறு ஒன்றை வாங்கிக் கொண்டு போகலாம் என்று வந்தேன்'' எனக் குறும்புத்தனமாகக் கூறிய சங்கரன் புன்னகை செய்தான்.

பொன்னி விளங்காது விழித்தாள்.

''வீரபாகுவின் செல்லப் பெண்ணை விலைக்கு வாங்க லாமென்று பார்க்கிறேன். சந்தனக்கட்டைகளுக்கு மேலே ரொம்ப விலை மிகுந்த பொருள் அல்லவா அவள்!'' என்றான் சங்கரன் பரிகாசமாக.

பொன்னிக்கு அதைக்கேட்டதும் கோபம் ஏற்பட்டது. ''நான் என்ன சாமானா விலைகொடுத்து வாங்க?'' என்று சினத்துடன் புருவத்தை நெரித்த அவள், ''நீங்க இப்படிப் பேசுவீங்கன்னா நான் இங்கே வந்திருக்க மாட்டேனே'' என்று கூறிக் கொண்டு போகத் திரும்பினாள்.

''உஸ்! பொன்னி இதோ பார், உனக்கு என்மேல் நிஜமாகவே கோபமா? இப்படிக் கோபித்துக் கொண் டால்...'' என்று தணிவாகக் கேட்டான் சங்கரன்.

''இல்லை! கோபம் இல்லை!'' என்று கூறிய பொன்னி அவனை நிமிர்ந்து பார்த்தாள். சங்கரனது கண்களில் நிறைந்திருந்த அன்புக் கனலைக் கண்டு அவள் மனம் குதூகலத்தில் துள்ளியது. ஆனால், பாவம் பொன்னி! அந்த அன்புக் கனல் அவளை எங்கே கொண்டு சேர்க்கப் போகிறது என்பதை மட்டும் அவள் அப்பொழுது அறிந் திருந்தாள்!

## 42

பொன்மேடு டிம்பர் வொர்க்'ஸின் முதலாளியின் மனம் அந்த மலை நாட்டு மோகினியிடம் பறி போயிற்று. மர வியாபார விஷயமாக வருவதாகக் கூறிக் கொண்டு தோகையான் குன்றிற்கு அடிக்கடி விஜயம் செய்ய ஆரம் பித்தான் அவன். அந்தஸ்தும் அழகும் நிறைந்த

சங்கரனின் மனம் தன் பால் லயித்துப் போனதைக்குறித்து பொன்னி மிகவும் புளகாங்கிதமடைந்தாள் தன்னிலும் பாக்கியசாலி யாருமில்லை என்று எண்ணி அவள் மனம் கர்வத்தில் துள்ளியது.

இந்த நாடகம் ஆரம்பித்து நாலைந்து மாதங்கள் சென்றன. ஆனால் அவர்கள் இருவருக்கு மட்டும் காலம் மிகவும் வேகமாகச் சென்றது போல் தோன்றியது. தை மாத முடிவில் வீரபாகு ஒருநாள் திடுக்கிடும் சங்கதி யொன்றைப் பொன்னியிடம் சொன்னான். காளிசாமிக் கும் அவளுக்கும் விவாகததேதியைக் குறிப்பிட்டுவிட்டார் கள் என்பதே அந்தச்சங்கதி. அதைக் கேட்டதும் பொன்னி யின் மனம் கலங்கித் தவிக்க ஆரம்பித்தது, தன் பிரேமை முழுவதையும் பொன்மேட்டு டிம்பர் வொர்க்ஸின் முதலாளி மீது வைத்திருக்கும் பொழுது அவள் எப்படிக் காளிசாமியைக் கணவனாக ஏற்றுக் கொள்ள முடியும்?

அடுத்த தடவை சங்கரன் மர வியாபார விஷயமாக அங்கே வந்த பொழுது அவனுக்கும் விஷயம் அறிவிக்கப் பட்டது. 'நிஜமா பொன்னி'' என்று அவளைத் தனிமை யில் சந்தித்த பொழுது கேட்டான்

''ஆமாம்'' எனப்பதிலளித்த பொன்னியின் கண்களில் நீர் பெருகியது, ''ஏன் வீணாக வருத்தப்படுகிறாய்? இந்த விவாகத்திலிருந்து தப்பும் மார்க்கம் ஒன்று இருக்கிறது.. ஆனால் உனக்குத் துணிச்சலும், என்மீது பரிபூரணமான நம்பிக்கையும், அன்பும் வேண்டும் இல்லாவிடில் முடியாது'' என்றான். பொன்னி ஒன்றும் பதில் பேச வில்லை உயிருக்கு மேலாகத் தன்னைக் காதலிக்கும் அந்த மனிதன் கூறுவதைக் கேட்டு முடிவு செய்யலாம் என அவள் சங்கரன் முகத்தையே ஆவலுடன் எதிர்பார்த்து நின்றாள்.

''என்னுடன் புறப்பட்டு வந்துவிடு. அரண்மனை போன்ற என் பங்களாவில் உன்னை ராணி போல் சந்தோஷமாக நடத்துகிறேன்'' என்று பணிவாகக் கூறினான்.



பொன்னிக்கு அந்தச் செய்கை மிகக் கேவலமாகத் தோன்றியது, என்னதான் காதல் என்றாலும் ரகசிய மாக வீட்டை விட்டு அந்நிய புருஷருடன் செல்வது எத் தனை அவமானமான செய்கை! ஆனாலும் அதற்குப் பயந்து நின்றால் வாழ்க்கையிலே காதலித்த அந்த மனிதனை மறந்து வேறு ஒருவனுடன் மனைவியெனச் சாகு மட்டும் வாழநேரிடுமே! காளிசாமியை மணந்து கொள்ள வேண்டும் என நினைக்கையிலேயே அவள் உடல் பயத்தால் கூசியது. பொன்னி யோசித்தாள் யோசித்தாள்.

தோகையான் குன்றே, வரப்போகும் அந்த விவா கத்தை எதிர்பார்த்துக் கொண்டு கேளிக்கையில் ஆழ்ந்து போயிருந்தது. ஆனால், விவாகத்தில் முதல் நாள் இரவு மணப்பெண் காணாமல் போய்விட்டாள்! அதற்குப் பின் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை விவரிக்க வேண்டாம். பொன் னியை அழைத்துக் கொண்டு ரகசியமாக ஓடிப்போன வாலிபன் எவனாக இருந்தாலும் அவனை அடியுடன் ஒழித்து நிர்மூலமாக்கி விடுவதென்று மறவர் குலமே, கோபக்கனலில் கொதித்து எழுந்து நின்றது.

புதிதாக கட்டப்பட்டிருந்த பொன்மேடு பங்களாவில் சங்கரனின் குடும்பத்தவர்கள் குடி வரவில்லை. தன்னந் தனியாக இருந்த அந்தப் பெரிய கட்டிடத்தில் குடியிருப் பதற்கு பாகிரதியம்மாளுக்குப் பிடிக்கவில்லை, ஊருக்குள் இருந்த சிறு வீட்டிலேயே இருக்க அவள் தீர்மானித்து விட்டதனால் சங்கரன் புதிய பங்களாவை ஆபீஸ் வேலைகளுக்குப்பின் சிரமபரிகாரம் செய்து கொள்ளும் இடமாக மாற்றிக் கொண்டான்

அந்தப் புதிய பங்களாவில் பின்கட்டு அறை ஒன்றில் வெளி உலகத்தையே எட்டிப் பார்க்காது சிறை வாசம் செய்வதுபோல் பொன்னி காலங் கடத்தினாள். வெளியே தலைகாட்டினால் எங்கே மறவர்கள் கண்ணில் பட்டு விடுவோமோ என்ற பயம் அவளுக்கு. பொன்னியுடன் தான் வாழ்க்கை நடத்துவது வீட்டிலுள்ள சகோதரி

சகோதரன் தாயார் முதல்ய ஒருவருக்கும் தெரியக் கூடாது என்பது சங்கரனின் எண்ணம். ஆகவே, இரண்டு பேர்கள் மனத்திலும் நிம்மதி என்பது இல்லாது சஞ்சலத்தில் தவித்தார்கள்.

சதா சர்வகாலமும் உயிருக்குப் பயந்தும், சமூகத்திற்குப் பயந்தும் வாழ்க்கை நடத்த நேரிட்டால் அந்த வாழ்க்கையைவிட மரணமே சுகமானது என்பதைப் பொன்னி அனுபவ பூரணமாகக் கண்டாள். நாட்கள் செல்லச் செல்ல சங்கரனின் காதல் வேகமும் தன்பால் குறைந்து கொண்டு வருவதை அவள் கவனித்தாள். சில சமயங்களில் அவன் அவளிடம் கொஞ்சம் கோபமாகக்கூட நடந்து கொள்ள ஆரம்பித்தான். முதலில் அவன் அது அவளது தொழில் அலுப்பால் ஏற்பட்ட விளைவு என அசட்டையாக இருந்து பொறுமையுடன் அவன் கூறும் கடும் மொழிகளைச் சகித்துக் கொண்டிருந்தாள். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல சங்கரனின் குணமும் மிக மாறுதலை அடைந்தது. காரணமில்லாத விஷயத்திற்கெல்லாம் பொன்னியிடம் எரிந்து விழத் தலைப்பட்டான் நாட்கணக்கில் அவளைப் பாராமலேயே இருப்பான். அவனுக்குத் தன் மீதிருந்த காதல் மறைந்து வெறுப்பு வந்து விட்டது என்பதை உணர்ந்த பொன்னியின் மனத்தில் ஏற்பட்ட வேதனையையும் துக்கத்தையும் விவரிக்க முடியாது.

"ஏன் இப்படி அநாவசியமா கோபிச்சுக்கிறீங்க?" எனஒருநாள் தைரியமாகக் கேட்டுவிட்டாள் பொன்னி.

"உன் அப்பன் உன் அண்ணன் எவனாவது என் கழுத்தை அறுத்து விடுவான்களோ என்று உயிருக்குப் பயந்து வாழ்ந்து எனக்கு அலுத்துவிட்டது, பொன்னி. போதாதற்கு என் வீட்டவர்களிடம் வேறு பொல்லாப்பு, என் தாயாரின் மனஸ்தாபம், சகோதரியின் கோபம், சகோதரனின் இகழ்ச்சி— இத்தனையையும் சகித்துக் கொள்ள எனக்குப் பொறுமை இல்லை, அதனால்..." என்று நிறுத்தினான்.



"அதனால்...?" என்று கேட்ட பொன்னி திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

"அதனால் நீயும் நானும் பிரிந்து விடுவதுதான் சரி என்பது என் எண்ணம் நீ உன் ஊருக்குப் புறப்பட்டுப் போய்விடு. இந்த வாழ்க்கை எனக்கு மிகவும் கசப்பாயிருக்கிறது" என்றான் அவன்.

"நான் எப்படிப் போகமுடியும்? உங்களையே நம்பி எல்லாவற்றையும் புறக்கணித்து விட்டேனே! நீங்கள் இப்படிப் பேசறது நியாயமா?" என அரற்றிய பொன்னி விம்மியழ ஆரம்பித்தாள்.

"இதோ பார்! நீ அட்டகாசம் செய்வதிலே பிரயோஜனம் இல்லை ஊருக்குப் போகஇஷ்டமில்லாவிடில் வேறு எங்கேயாவது போய்த் தொலை. வேண்டிய பணம் கொடுக்கிறேன். ஏனெனில், நீ இங்கிருப்பது என் வாழ்க்கைக்கே இடைஞ்சல். நான் கல்யாணம் செய்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். வரப்போகும் என் மனைவிக்கு ஒருவித மனக்கஷ்டமும் உன்னால் நேரக் கூடாது" என்றான்.

"உண்மையாகவா!" என துக்கத்தின் நடுவில் ஆச்சர்யத்துடன் கேட்டாள் பொன்னி. அவளுக்குத் தலை சுற்றுவதைப் போன்ற பிரமை ஏற்பட்டது.

"பின் என்ன எண்ணிக் கொண்டாய்? உன்னை மணந்துகொள்வேன் என்று நினைத்தாயாக்கும்? கெட்டிக்காரிதான்!" என்று ஏளனமாகவும் குரோதமாகவும் கேட்ட சங்கரன் பயங்கரமாகச் சிரித்தான்.

பொன்னிக்கு ஆத்திரம், கோபம், அவமானம் முதலிய எல்லாவித உணர்ச்சிகளும் ஏககாலத்தில் வந்து தாக்கின. எத்தனையோ பதில் சொல்லவேண்டும் என அவளது உள்ளம் கோபத்தில் குமுறியது. ஆனால் பேச நா எழவில்லை.

"சரிதானே? எங்கேயாவது போய்விட ஒப்புக்கொள்கிறாயா?" என இரக்கமற்றுக் கேட்டான் சங்கரன்.

"நான் போக மாட்டேன். இங்கே விட்டு அசையவே மாட்டேன். நீங்க என்ன வேணாலும் செஞ்சுக்குங்க' என்று பொன்னி பிடிவாதமாகக் கூறிவிட்டுக் கண்ணீர் வடித்தாள். சங்கரன் கோபந்தாங்காதவனாக வெளியே சென்றான். பல நாட்கள் சென்றன. அவன் மறுபடியும் அவளைக் காண வரவேயில்லை.

கொஞ்ச நாட்களுக்குப் பின் அறையின் கதவை யாரோ இடிப்பதைக் கேட்ட பொன்னி கொஞ்சம் பயத்துடனே திறந்தாள். வந்திருந்த ஸ்திரீயை அவள் முன்பின் பார்த்ததில்லாவிடினும் அவள்தான் சங்கரனின் சகோதரி பாகீரதி என்பதை உணர்ந்து கொண்டாள்.

"ஆமாம்! இப்படி பிடிவாதம் பண்றதிலே என்ன லாபம்! உன்னாலே ஒரு குடும்பம் குட்டிச்சுவராகணுமா? புருஷனுக்குப் பத்தியில்லாமல் ஒரு காரியம் செய்தால் பெண் ஜென்மம் எடுத்த உனக்கு எங்கே போச்சு புத்தி சனியனே, ஏன் இப்படி சண்டித்தனம் பண்ணுகிறாய் நாளைக்குப் பெண் பார்க்க நாங்கள் புறப்படணும். சொன்னதைக்கேள், பணத்தை வாங்கிக்கொண்டு ஒழிஞ்சு போ!" என்று இரைந்து கத்தினாள் பாகீரதி.

அவளது கோபத்தையும் ஆத்திரத்தையும் கண்டு பொன்னி பயந்துவிட்டாள். "அம்மா நான் எங்கேயம்மா போவேன்?" என துக்கத்துடன் கேட்டாள் அவள்.

பாகீரதியம்மாள் பதிலுக்குக் கோபத்தில் கூறிய மொழிகளை நினைத்துப் பார்க்கவும் பொன்னிக்கு அவமானமாக இருந்தது. இருவருக்கும் பெரிய வாக்குவாதம் நடந்தது. "நீ என் தம்பி மேலே உண்மையான அன்பு வச்சிருந்தால், அவன் சந்தோஷத்தைக் கெடுக்க மாட்டாய். அவ்வளவுதான் நான் சொல்வேன்" என்று கடைசியில் முடித்த பாகீரதி காகிதத்தில் சுற்றியிருந்த நோட்டுக்கத்தை ஒன்றை எடுத்து அறைக்குள் விசிறிந்து விட்டு வெளியேறினாள்.

பொன்னி சோர்ந்து உணர்ச்சிகள் எல்லாம் மங்கி அறிவு மட்டும் சிந்திக்கும் நிலைக்கு வந்தபின் பாகீரதியின்



வார்த்தைகளைப் பற்றி யோசித்துப் பார்த்தாள். அந்த வார்த்தைகளில் தான் எத்தனை உண்மை நிரம்பியிருந்தது? தூய்மையான அன்பு ஒருவர் உள்ளத்தில் இருந்தால் அந்த அன்புக் கனல் எந்தவிதத் தியாகத்தையும் சகித்துக் கொள்ளாதா? பொன்னி உண்மையாகவே சங்கரன் மீது மட்டற்ற அன்பு வைத்திருந்தாள். இல்லாவிடில் அந்தஸ்து செல்வம் சுகம் எல்லாவற்றையும் திரஸ்கரித்து விட்டுக்கேவலமான வாழ்க்கை நடத்த ஒப்புக் கொள்வாளா? ஆனால் சங்கரனோ அவள் மீது அன்பு கொள்ளவில்லை. யௌவன சோபையுடன் பொங்கி நின்ற அவளது அழகுக்கு மயங்கினான். மயக்கத்திலிருந்து விழித்துக் கொண்டதும் அவனுக்குப் பொன்னி ஒரு பாரமாகத் தென்பட்டாள். இதில் ஆச்சர்யப்படவோ வருத்தப்படவோ என்ன இருக்கிறது? பொன்னியைப் போல் நிலை கெட்டுத் தடுமாறும் ஒவ்வொரு பெண்ணும் கடைசியில் வாழ்க்கையின் இறுதியில் ஒன்றை உணருகிறார்கள் மனிதன் கெட்டவன் என்றோ, கயவன் என்றோ பெண் குறை கூறிப் பயனில்லை வாழ்க்கைப் பாதையில் தோன்றும் படுகுழிகளுக்குள் விழும் பொழுது பெண் புருஷனையும்தான் கூட விழச் செய்கிறாள். ஆகவே தப்பு இருவருடையதுதான் என்பது அவர்கள் அறியும் உண்மை.

பொன்னி தீர்மானம் செய்தாள் தன்னை வெறுக்கும் சங்கரனுக்குப் பாரமாக அங்கே வசிப்பது மிகத்தவறு என அவளுக்குத் தோன்றியது. ஆகவே ஒருநாள் இரவு ஒருவருக்கும் சொல்லாமல் கிளம்பித் தோகையான் குன்றிற்குச் சென்றாள், திரும்ப மகளைக் கண்ட வீரபாகு ஆத்திரப்பட்டான். வசைமாரி பொழிந்தான். அண்ணன்மார்கள் அவளை வெறுத்து ஒதுக்கினார்கள். மற்ற உறவுக்காரர்கள் அவளைக் கண்டு பேசவும் அஞ்சினார்கள். ஆனால் ஒரே ஒரு மனிதன் மட்டும் பொன்னியைக் கண்டு வெறுக்கவோ அல்லது பயப்படவோ இல்லை. அவன்தான் காளிசாமி கல்யாண மாப்பிள்ளையாக இருந்த தன்னை பந்துக்கள் முன்னிலையில் அவமானப்படுத்திவிட்டு வெளியேறிய பொன்னியைக் கண்டு அவன் கோபப்படுவதற்குப் பதில் மந்தகாசவதனத்துடன் வரவேற்றான். "பொன்னி!

என்னிடம் ஒரு வார்த்தை சொல்லி யிருக்கப்படாதா? கல்யாண சமயத்திலே கலாட்டா நடந்திருக்காம செஞ்சிருக்கலாமல்லவா?'' என வினவினான் அவன் அவளிடம்.

''எனக்கு நீ சொல்வது விளங்கவில்லையே மச்சான்?' என்று கேட்டான் பொன்னி ''உனக்கு என்னைக் கட்டிக்கப் புடிக்கலைன்னு ஒரு வார்த்தைச் சொல்லியிருந்தா நான் கல்யாணத்துக்குச் சம்மதிச்சிருக்க மாட்டேனே! ஏன் பொன்னி! பிடிக்காத பெண்ணை வருத்திக் கட்டிக்கிறதிலே யாருக்கு சுகம்; அப்படி நான் மனசு கஷ்டம் தெரியாத காட்டுமிராண்டிப் பயலா! நீ என்னை தவறா நினைச்சுக்கிட்டே!'' என்று தழதழத்த குரலில் கூறினான்,

அதைக் கேட்ட பொன்னியின் மனம் இரக்கத்தில் உருகியது ''கருக்கு மீசையும் முரட்டுத் தோற்றமும் கொண்ட காளிசாமியின் மனம் இவ்வளவு மென்மையானதா? தெரியாமல் போயிற்றே! உம்...'' என பெருமூச்செறிந்தாள் அவள் மீண்டும் வீரபாகு குடும்பத்தில் அவள் ஒதுக்கப்பட்டவள் போல் வாழ்ந்து கொண்டிருக்கையில் ஒரு நாள் விஷயம் அவள் காதுகளுக்கு எட்டியது. தங்கள் குலத்திற்கே அவமானத்தைத் தேடிக் கொடுத்த சங்கரன் மீது வீரபாகு பழி தீர்த்துக் கொள்ள செய்திருக்கும் ஒரு சதியின் விவரம் அவளுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது.

ஏரிக்கரை யோரமாகக் குறித்த தேதியன்று இரவு பத்து மணிக்கு சங்கரன் புதிதாக வாங்கிய காரில் வந்து கொண்டிருக்கும் சமயம் பரதேசி ஒருவன் கார் செல்லும் பாதையின் குறுக்கேவிழுந்து கிடக்கவேண்டும் அப்போது 'மடையன்! கார் வருகிறது கண் தெரியவில்லை' என்று காரைச் சங்கரன் நிறுத்துவான். நாலா பக்கத்திலும் ஒளிந்திருக்கும் ஆட்கள் சூழ்ந்து கொண்டு தலையைத் திருகி ஏரிக்கரை மீதிலே புதைத்துவிட வேண்டியது என்பதுதான் அந்தச் சூழ்ச்சி.



தந்தையின் சூழ்ச்சியைப் புரிந்து கொண்ட பொன்னிக்குத் தூக்கமே வரவில்லை. சங்கரன் கொலை செய்யப்படப் போகிறான் என்று நினைத்ததுமே அவள் உடல் பயத்தில் கிடுகிடுத்தது. குறித்த நாளும் வந்து விட்டது. அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை. அன்று பகல் ஆண் பிள்ளைகள் எல்லோரும் வீட்டை விட்டுவெளியேறினதும் ஓட்டமும் நடையுமாகப் பொன்மேட்டை நோக்கிப் பல குறுக்குப் பாதைகளில் புகுந்து ஓடி வந்தாள் சங்கரன் கொல்லப்படுமுன் அவனைக் காப்பாற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் அவள் மனம் பதறியது. கால்கள் தடுமாறின.

இரவு மணி பத்தடித்தது. பங்களாவிற்குச் சிறிது தூரத்தில் தெரிந்த மரத்தின் இருட்டில் ஒதுங்கி நின்று கொண்டிருந்த பொன்னியின் உடல் பயத்தில் வியர்த்தது. நாவரண்டு போயிற்று காத்திருந்தாள்! மணி பதினொன்றும் ஆயிற்று. அவரைக் காணோம். ஒரு சமயம் அவன் வருவதற்கு முன்பே சங்கரன் புறப்பட்டுப் போய் விட்டானோ? அப்படியானால் இத்தனை நேரம் கொலை செய்யப்பட்டு...கண்களைக் கண்ணீர் மறைக்க பொன்னி இருளில் நின்று கொண்டு யோசனையில் ஆழ்ந்து போயிருந்த சமயம் பங்களாவின் வெளிவாயிலினின்று பிரம்மாண்டமானதொரு கார் தன் பக்கம் ஊர்ந்து வருவதைக் கண்டாள் அவ்வளவுதான் பாதையின் நடுவே ஓடி வந்து வழியை மறித்துக் கொண்டு நின்றாள். கார் சட்டென்று நின்றது. ''உங்களைக் கொல்ல அப்பா ஆட்களோட ஏரிக்கரையிலே காத்திருக்கிறார், அங்கே போகாதீங்க! போகாதீங்க!'' என கூச்சலிட்டுக் கத்தினாள் பொன்னி.

''என்ன? நீ சொல்லுவது ஒன்றும் புரியலையே? என்னைக் கொல்லவா?'' என வினவிய புருஷனின் குரல் கொஞ்சம் வேறுபட்டிருப்பதைக் கவனித்த பொன்னி காரினுள் பிரகாசித்த விளக்கொளியில் அந்தப் புருஷனை உற்றுப் பார்த்தாள். பார்வைக்கு ஒரே சாயலாக இருந்-

தாலும் அந்தப் புருஷன் சங்கரன் அல்ல. எத்தனையோ வயது சிறியவன் அவன். "என்ன ஆச்சர்யம், சங்கரனைப் போலவேயல்லவா இருக்கிறார் இவரும்!" என்று பிரமித்த பொன்னி மௌனமாக நின்றாள்.

"நீ சொல்வதைச் சரியாகச் சொல்லம்மா!" அண்ணா ஆபீஸில் இருக்கிறார். கார் எடுத்து வரச் சொன்னார். போய் அழைத்துவரப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றுகூறிய நாகராஜன், அந்தப் பெண் யார் என்பதைப் புரிந்து கொண்டவன் போல் பேசினான்.

திணறிக் கொண்டே பொன்னி தந்தையின் சூழ்ச்சியைக் கூறி முடித்தாள் அதைக்கேட்ட நாகராஜன் மிகவும் திகைத்துப் போனான். "கார் வரவில்லையே என்று பொறுமையிழந்து அண்ணா ஆபீஸிலிருந்து கிளம்பி வந்துவிடப் போகிறார். நான் வேறு வழியாகப் போய் எச்சரிக்கிறேன்." என்று கூறிவிட்டு, காரில் பொன்னியை ஏற்றிக் கொண்டு மீண்டும் பங்களாவிற்குச் சென்றான். அவளை அங்கே இருக்கும்படி கூறிவிட்டுத் தனது மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினான்"

"நல்ல வேளை நான், சொல்லாட்டி அவங்க உங்களை அவர்தான்னு நினைச்சுக் கொன்னுவிட்டிருப்பாங்க, ஒரு பாவமும் அறியாதே நீங்க வீணா உசிரைவிட்டிருக்கணும்" என்று தடுமாறிய பொன்னியைப் பார்த்து நன்றியுடன் புன்னகை செய்தான் நாகராஜன், "கவலைப் படாதேயம்மா!" நான் அண்ணாவிடம் சொல்கிறேன்" என்று தெளிவாகக் கூறினான்.

வீரபாகுவின் சூழ்ச்சி வெற்றி பெறாது போய்விட்டது மறுபடியும் அவன் சூழ்ச்சி செய்வதற்குள் அவனது ஆட்களில் இருவர் ஒரு கொலைக் கேஸ் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டனர். வேறு என்ன செய்யலாம் என்று கிழவன் யோசனை செய்து முடிவுக்கு வருவதற்குள் ஒரு நாள் ஜுரமென்று படுத்தவன் திரும்ப எழுந்திருக்காமல்



போய் விட்டான். தந்தையின் மரணத்திற்குப் பின் பிள்ளைகள் இருவரும் சண்டையிட்டுக் கொண்டு சொத்தைப் பகிர்ந்து கொண்டு பிரிந்து விடவே. வஞ்சம் தீர்க்கும் எண்ணமும் மெல்ல அவர்களிடமிருந்து மறைந்து விட்டது.

தன் உயிரைக் காப்பாற்றியதற்காகச் சங்கரன் அவளிடம் நன்றி காட்டவில்லை. அதற்குப் பதில் அவளை அங்கிருந்து வெளியேறும்படி கட்டளையிட்டான்.

இந்தத்தடவை பொன்னி வெளியே போக மறுத்தாள் குழந்தை பிறக்கும் வரையில்தான் எங்கும் போக இயலாது என்று காரணம் கூறினாள்.

பூரண கர்ப்பிணியான அவளை உடனே வெளியே செல்லவேண்டும் என துன்பப்படுத்தினான் சங்கரன் அந்தக் கொடுமையைச் சகியாத நாகராஜன் இரக்கத்துடன் அவளுக்காகப்பரிந்து தமையனிடம் வாதாடினான் "பொன்னியை நிராகரிப்பது தவறு" என உபதேசித்தான் தம்பி. அண்ணாவுக்கு அவ்வளவுதான், சங்கரனுக்குக் கோபம் தாங்கமுடியவில்லை! "உனக்கு அவள் மேல் கரிசனம் இருந்தால் அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்" என்று ஏளனமாகச் சொன்னான் தமையன். அதைக் கேட்டு நாகராஜனின் மனமும் பொன்னியின் மனமும் மிகவும் புண்ணாயின.

ஒரு நாள் சங்கரன் பங்களாவிற்கு வந்த பொழுது மிகவும் கோபமாகக் காணப்பட்டான். உடனே தம்பியை கூட்டி வரும்படி கட்டளையிட்டான். ஆட்களிடம் என்ன நடக்கப்போகிறதோ என்று பயந்து கொண்டு அறைக்குள் மறைந்து கிடந்தாள் பொன்னி. தம்பியுடன் அந்த அறைக்குள் நுழைந்த சங்கரன். "பொன்னி! என் கல்யாணத்திற்கு தேதி வைத்து விட்டேன். குழந்தை பிறக்கும் வரை நீ இங்கே இருக்க இயலாது. உன்னைப் பற்றிய விஷயம் ஒன்றும் எனக்கு வரப்போகும் மனைவிக்குத் தெரியக்கூடாது. நீ இங்கிருந்தால் அதுஎப்படி தெரியா

மல் போகும்? அதனால் நீ இருக்கவே கூடாது எங்கே
யாவது புறப்பட்டுப்போ, மறுபடி வந்து கழுத்தை அறுக்
காதே!'' என்று இரைந்து கத்திவிட்டுத் தம்பியின் பக்கம்
திரும்பி, ''பொன்னியைக் கொண்டு கண் காணாத
ஊரில் விட்டுவரவேண்டியது உன் பொறுப்பு. வேண்
டிய பணம் கொடுத்துவிடு. நன் உயிருள்ளவரை
இங்கே அவள் திரும்பி வரக்கூடாது நீயும் ஆகட்டும் எக்
காரணம் கொண்டும் இந்த விஷயத்தைப் பற்றி வாய்
திறக்கக் கூடாது. உனக்கும் ஒரு பெண்டாட்டி வந்தால்
அவளிடம் கூடச் சொல்லக்கூடாது தெரியாத்தனமாக
மதி மயங்கி இந்தத் தவறைச் செய்ததற்குப் போதும்
எனக்குத் தண்டனை! இந்த ரகசியம் என் தலையோடு
போகட்டும். ஒருவரும் வீண்பேச்சுப் பேசி என்னைக்
கேவலப்படுத்த வேண்டாம்!'' என்று கத்தினான். அந்த
மாதிரி கோபப்பட்டதன் காரணம் என்ன என்று பொன்
னிக்கு இதுவரை தெரியாது.

''இல்லை, அண்ணா சத்தியமாகப் பொன்னி விஷயம்
என் வரை ரகஸ்யமாக இருக்கும். கவலைப்படாதீர்கள்''
என்று சாந்தமாகப் பதிலளித்தான் தம்பி.

நாகராஜன் வேண்டுகோளைத் திரஸ்கரிக்கமுடியாமல்
பொன்னி அவன் அளித்த பணத்தை எடுத்துக்கொண்டு
வடக்கேயிருந்த கிராமம் ஒன்றிற்குச் சென்றாள். சில
மாதங்களில் அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.
செம்படக்கிழவன் ஒருவன் வீட்டில் வேலை செய்து
கொண்டு அவள் கௌரவமாகக் காலத்தைப் போக்கிக்
கொண்டிருந்தாள.

ஒருநாள் வேலையை முடித்துவிட்டு வாயில் திண்
ணையில் உட்கார்ந்திருக்கையில் குடிசையை நோக்கி
நாகராஜனும் பாகிரதியும் வருவதைக்கண்டு பிரமித்துப்
போனாள். திண்ணை மீது தவழ்ந்து கொண்டிருந்த
குழந்தையைக் கண்ட பாகிரதியம்மாள். ''சங்கரா!
சங்கரா!'' என அரற்றியவண்ணம் அழ ஆரம்பித்தாள்.

பொன்னிக்கு விஷயம் புரியவில்லை. விவாகத்திற்கு
நாள் பார்த்துக் கொண்டிருக்கையில் மோட்டார்விபத்தில்



சங்கரன் துர்மரணம் அடைந்து விட்டானென்றும்
பாகிரதி துக்கந்தாளாது பித்துப் பிடித்தவள் போல்,
பிதற்றிக் கொண்டு, பொன்னியைப் பார்க்கவேண்டும்''
என்று பிடிவாதம் செய்ததனால் நாகராஜன் அழைத்து
வந்தான் என்றும் பொன்னி தெரிந்து கொண்டாள். பல
விஷயங்களையும் பேசி அழுது தீர்த்த பின்பு, பாகிரதி
பொன்னியைத் தங்களுடன் வந்து வசிக்கும்படி வற்
புறுத்தி வேண்டினாள். ''சங்கரனையே உரித்து வைத்தி
ருந்த அந்தச் சிறுவனின் முகத்தைப் பார்த்தாவது துக்கத்
தைச் சகித்துக் கொள்ளலாம்'' என்ற யோசனை
அவளுக்கு.

நாகராஜனும் மிகவும் வேண்டிக் கொண்ட பின்
பொன்னி அவர்களுடன் போகச் சம்மதித்தாள். ஆனால்
மீண்டும் அந்தப் பங்களாவிற்குள் வாழ அவள் விரும்ப
வில்லை. அதனால் ஏரிக்கரை மீது சிறு ஓட்டு வீட்டைக்
கட்டிக் கொடுத்து அதிலே அவளைக் குடியிருக்கச் செய்
தான் நாகராஜன். பாகிரதியம்மாள் துவேஷத்தை மறந்து
பொன்னியிடம் மிகவும் அன்பு காட்டினாள். நாகராஜன்
சகோதரனைக் காட்டிலும் பொன்னியிடம் அன்பாக
நடந்துகொண்டு அவளுக்கு ஒரு குறையுமின்றி வைத்திருந்
தான்.

தமையன் கேட்டுக் கொண்டபடியே சகோதரியும்
தம்பியிடம் ஒரு வரம் கேட்டுக் கொண்டிருந்தாள். இறந்து
போன சகோதரன் மீது வைத்திருந்த பாசம் பாகிரதியின்
மூளையை மழுங்கச் செய்துவிட்டிருந்தது. பொன்னியின்
ரகசியத்தை நாகராஜன் தனக்கு வரப்போகும் மனைவி
யிடம் கூறி அண்ணாவைப்பற்றி அவள் தாழ்வாக
எண்ணும்படி விடக் கூடாது என்பதுதான் பாகிரதியின்
கோரிக்கை. ஆனால் அது மிகவும் தவறு என்பது
பொன்னியின் அபிப்பிராயம். இறந்துபோனவரைப்
பற்றி நிந்தனை செய்யக்கூடாது. ஆனால், குடும்பத்தில்
மிக முக்கியமான பெண்ணிற்குக் குடும்பத்தின் ரகஸியம்
கூறப்படாது மூடி வைப்பது மிகவும் தவறல்லவா?
அதனால் வீணாக சந்தேகம் நேருவதற்கு இடம் இருக்
கிறதே?

இத்தனை அழகான மனைவி நாகராஜனுக்கு வாய்த்திருக்கிறாளே! அவள் மோகனப் பார்வை ஒன்றிற்கே மனிதன் எதையும் கொடுத்துவிட சித்தமாயிருக்க மாட்டானா? நாகராஜன் அண்ணாவின் ரகஸியத்தை மனைவியிடம் கூறாமல் மறைக்க மாட்டார் என்று பொன்னி முதலில் நினைத்தாள். ஆனால், பழக்கத்தில் அவளுக்கு கீதா தன்னை சந்தேகிக்கிறாள் எனப் புரிந்து வீணாக ஒரு பெண் தன் பொருட்டுக் கண் கலங்குவதைக் காண அவள் சகிக்கவில்லை ஒருநாள் உண்மையைக் கூறி விடுவது என்று தீர்மானித்தாள் அந்த ஒருநாள் இன்றுதான் வந்தது. பொன்னி சொல்லி விட்டாள், நாகராஜனும் பாகீரதியும் மறைத்த ரகசியத்தைத் தானே சொல்லி விட்டாள்.

கதையை முடித்த பொன்னி எஜமானியின் முகத்தைத் திரும்பிப் பார்தாள். ''உங்க புருஷன்தான் பத்து நாளா தினம் இங்கே வந்து என் அண்ணாருக்கும் எனக்கும் நடுவிலே சமாதானம் பேசி ராசி பண்ணி வச்சார். காலையிலே ஆபீஸுக்குப் போகுமுன்னே மோட்டார் சைக்கிளிலே தினம் வந்துவிடுவார். அண்ணாவும் அவர் சொன்ன நிபந்தனைப்படியே என்னை அழைச்சுக்கிட்டு ஊருக்குப் போறதாக ஒப்புக் கொண்டார். கண்ணன் பெரியவனானதும் அவனைப் படிக்க வைப்பதாகச் சொல்லியிருக்கிறார் சின்ன எஜமான்?'' என்று புன்னகை செய்தாள் பொன்னி.

திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த நாவல் ஒன்றை மூச்சுவிடாது படித்துக் கீழே வைக்கும்போது ஏற்படும் ஓர் உணர்ச்சிதான கீதாவின் உள்ளத்தில் நிரம்பியிருந்தது

இரவு மணி எட்டாகி விட்டது என அருகில் ஒலித்த கோவில்மணி அறிவித்தது வீட்டிற்குப் போகவேண்டுமே என்று நினைத்த கீதா எழுந்திருந்தாள் ''நானும் அண்ணனும்கூட துணைக்கு வரோம் அம்மா, இருங்க?'' என்று கூறிய பொன்னி, லாந்தர் விளக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.



பெய்து கொண்டிருந்த மழை நின்று விட்டதனால் வானத்திலே கவிந்து நின்ற கருமேகங்கள் மறைந்து விட்டன பரந்த ஆகாயத்தில் ஒளிவிட்டு மின்னிய விண் மீன் கூட்டங்களை நிமிர்ந்து பார்த்தாள் கீதா. சோவெனப் பொழிந்த மழைக்குப் பின் பூமியிலும் வானத்திலும் எத்தனை அமைதி ஏற்பட்டிருந்ததோ அதைக் காட்டிலும் பன் மடங்கானதொரு அமைதி கீதாவின் மனத்திலே ஏற்பட்டிருந்ததை அறிந்து கொண்டது போல் நட்சத்திரங்கள் கண் சிமிட்டின.

## 43

கீதா பங்களாவை அடைந்த பொழுது தன் வரவிற்காக கவலையுடன் பாகீரதி வாயிலிலே உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்டாள். ஒவ்வொரு தடவையும் தான் விமலா வீட்டிற்குச் சென்று விட்டுத் திரும்பும் பொழுது ஒவ்வொரு தப்பைச் செய்து பாகீரதியின் அதிருப்திக்கு ஆளாகி வருவதை எண்ணிப் பார்த்த கீதாவிற்கு நாத்தனாரின் முகத்தைப் பார்க்கக்கூட அச்சமாக இருந்தது.

''ஏரிக்கரையிலே அம்மா மழையிலே நனைஞ்சுக்கிட்டு வந்து கொண்டிருந்தாங்க. உடம்புக்காகாதுன்னு நான் தான் தடுத்து என் வீட்டிலே இத்தனை நேரம் உட்கார வச்சிருந்தேன். இருட்டிப் போச்சுதேன்னு ரெண்டு பேருமா துணைக்குக்கூட வந்தோம்'' என்று பொன்னி. கீதா வெகு நேரம் கழித்து வீடு திரும்பிய தன் காரணத்தை விவரிப்பது போல் கூறிவிட்டுப் புன்னகை செய்தாள்.

''நல்ல வேளை! நீயாவது துணைக்கு வந்தியே! தேடி அழைச்சுண்டு வர ஆள்கூட இல்லையே, என்ன பண்ணறதுன்னு கவலைப்பட்டுப் போய்விட்டேன். சரி, பொன்னி ஊதக் காத்திலே அதிக நாழி நிற்காதே, சீக்கிரம் வீட்டுக்குப் போ!'' என்று வந்தவர்களை விடை கொடுத்து அனுப்பிவிட்டு உள்ளே சென்றாள் பாகீரதி.

பின்கட்டின் கூடத்தை அடைந்த அவள் அங்கிருந்த பெஞ்சு ஒன்றின்மீது சிரமபரிகாரம் செய்து கொள்ளும் நிமித்தம் படுத்துக் கொண்டாள். கண்களை இறுக மூடிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்த பாகீரதியை 'அக்கா' என்ற கனிவான குரல் திடுக்கிட்டு விழித்துக் கொள்ளச் செய்தது. எதிரே தூணைப் பிடித்துக்கொண்டு நின்ற கீதாவைக் கண்ட பாகீரதி எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

"என்னம்மா கீதா? என்ன வேணும்?" என்று மனதிலே கீதா மீது எழுந்த அதிருப்தியை அடக்கிக் கொண்டு கேட்டாள் அவள்.

"இன்னிக்குச் சீக்கிரமாக வந்துவிடணும்னு நான் புறப்பட்டு ஓடி வந்தேன், எதிர்பாராத சமயம் மழை கொட்டி புடவையெல்லாம் நனைஞ்சு தெப்பமாப் போய் விட்டேன். அக்கா. அதனாலேதான் இத்தனை நாழி" இழுத்தாப்போல் கூறிய கீதா பாகீரதியைப் பார்த்து அசட்டுப் புன்னகை செய்தாள்.

"அதைப்பற்றி இப்ப என்ன யோசனை!" உன்னைக் காணோமென்னு கொஞ்சம் கவலைப்பட்டேன், அவ்வளவுதான்" என்று பதில் அளித்த பாகீரதி மறுபடியும் கண்களை மூடிக் கொண்டாள்.

"அக்கா" என்று குழைவு நிறைந்த கீதாவின் குரல் அவளை மறுபடியும் கண் திறந்து பார்க்கச் செய்தது. "என்னம்மா கீதா?" என்று பாகீரதி கேட்டாள்.

"உங்களுக்கு என் மேல் கோபமில்லையே?" என்று சிறு குழந்தையைப் போன்று ஒரு கேள்வியைக் கேட்டு விட்டுத் தூணின் மறைவில் முகத்தை திருப்பிக் கொண் டாள் கீதா வெட்கத்துடன்.

பாகீரதி மெல்லச் சிரித்தாள் பதிலுக்கு. "என்னம்மா! எனக்குக் கோபமா? ஏன் அப்படிக் கேட்கிறே? உன் மேலே எனக்கு என்ன கோபம்?" என்று கேட்டாள் நிதானமாக பாகீரதி.



"நான் செய்யிறதெல்லாம் தப்புன்னு எனக்குத் தெரியும். உங்கள் பேச்சைச் சட்டை செய்யாமல் நேரங்கெட்டு வீட்டுக்குப் போகிறதும், நாழி கழிச்சு வருகிறதும் தப்புத் தான். ஆனால் அக்கா நான் வேணுமென்று இவைகளைச் செய்யவில்லை. ஒவ்வொரு தடவையும் சந்தர்ப்பம் அப்படி நேர்ந்து விடுகிறது அன்னிக்கு 'பிக்னிக்' போய் விட்டு வந்ததிலிருந்து உங்களுக்கு என்மேல் கொஞ்சம் கோபந்தான். தொடர்ந்தாப் போல நெருப்பு பிடிச்சுக் கொண்டது வேறே மனசிற்கு கவலை ஏற்பட்டது. நீங்களும் என் மேலே கோவிச்சுக் கொண்டு பேசாமல் இருந்தால், நான் என்ன பண்ணுவேன் அக்கா! எனக்கு ரொம்ப மனசு கஷ்டமா இருக்கு" என்று விடுவிடுவென்று பேசிய கீதாவின் குரல் துக்கத்தினால் தடைப்பட்டது. பாகீரதியின் மனம் வினாடிப் பொழுதில் இளகி விட்டது. "சே! அசடே! இதென்ன இது யார் சொன்னா, எனக்கு உன் மேலே கோபம்னு?" என விரிவாகக் கூறிய அவள் கீதாவின் அருகில் எழுந்து சென்று கண்களில் வழிந்த அவளது கண்ணீரைத் தன் புடவைத் தலைப்பால் துடைத்து விட்டு கன்னத்தை அன்புடன் வருடினாள். சற்றுப் பொறுத்து, "தங்கம் தூங்கப் போய் விட்டான். ராஜா வருவதற்கு இன்னிக்குக்கொஞ்சம் நாழியானாலும் ஆகும், நான் சித்த கண் அசருகிறேன். மாடிக்குப் போய் அவன் வந்ததும் கவனிச்சுச் சாதம் போடு" எனக் குறிப் பாகக் கூறிவிட்டு பாகீரதி மாடிப் பக்கம் சென்று விட்டாள்.

அன்று நாகராஜன் வீடு திரும்பிய பொழுது இரவு அதிக நேரம் ஆகிவிட்டது. தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்த அவன் அவசரமாகப் போஜனத்தை முடித்துக் கொண்டு கையை அலம்பிக் கொண்டான். மாடிக்குச் செல்லத் திரும்பிய அவன் எதையோ நினைத் துக் கொண்டவன் போல் சமையற்கட்டின் பக்கம் நோக்கி "அக்கா!" என்று கூப்பிட்டான்.

பாகீரதியம்மாளுக்குப் பதில் அங்கிருந்து வெளிப்பட்ட கீதாவை அப்பொழுதுதான் அவன் கவனித்தான். எழிலே உருக்கொண்டவள் போல் ஒயிலாக நடந்து வந்து வாசற்படியருகில் தயங்கியவாறு நின்ற கீதாவின் முகம் மிகவும் பிரகாசமாகத் தென்பட்டதைக் கண்ட அவனுக்கு வியப்பாகத்தான் இருந்தது. விளக்கொளியில் நாகராஜனது முகத்தை நன்கு கவனித்த கீதாவின் மனம் துணுக்குற்றது. சில நாட்களாகத் தூங்காது கண் விழித்து அதிக வேலை செய்ததினால் களை பொருந்திய அவனது முகம் வாடிப் போயிருந்தது. கண்கள் சிவந்திருந்தன. சுருண்ட அழகிய கிராப்பு கலைந்து, தாறுமாறாக நெற்றி மீது விழுந்திருந்தது. தன் தோற்றத்தில்கூட அசட்டையாக இருக்கும்படி அவன் மனத்தை ஆழ்த்திய அந்த வருத்தத்தைத் தானும் பங்கிட்டுக் கொண்டு அவனை உற்சாகப்படுத்துவதற்குப் பதில் மனைவியின் கடமையினின்று சற்று ஒதுங்கிச் சென்ற தன்னைப் பற்றி நினைத்துப் பார்த்த கீதா மிக்க வெட்கமடைந்தாள்

"என்ன வேணும்? அக்கா மாடியிலே தூங்குகிறார்" என்று மெல்லக் கேட்டாள்

"ஒண்ணும் வேண்டாம்" என்று கூறிவிட்டு மேலே போகத் திரும்பினான்.

"அக்காளை எழுப்பச் சொன்னால் போய் எழுப்புகிறேன்" என்று தொடர்ந்தாற் போல் கேட்டாள் கீதா.

"அவசியமில்லை! வெறுமனே தான் கூப்பிட்டேன்" என்று பதிலளித்த நாகராஜன் மாடிப் பக்கம் சென்று விட்டான்.

கணவரது கோபத்திற்குப் பயந்து அவன் முன்னிலையில்கூட வரத் துணியாது காலங் கழித்த கீதா, அன்று தான் முதல் முதலாக அவன் முன்னால் தைரியமாக வந்தாள். சில நாட்களாக அனுஷ்டித்த மௌன விரதத்திற்குப் பின் கணவனுடன் அவள் நிகழ்த்திய அந்தச் சிறு



சம்பாஷணை அவளது நெஞ்சைச் சில நிமிஷங்கள் வரை படபடக்கச் செய்தது.

மாடி ஹாலை அடைந்த நாகராஜன் மேஜையருகில் வந்து உட்கார்ந்து கொண்டான். ஆபீஸ் காகிதங்களை எடுத்துத் தன் முன் வைத்துக் கொண்ட அவன் மனம் வேலையில் ஈடுபடுவதை விட்டுத் தன்னைச் சுற்றியுள்ள பொருள்களை ஆராய்வதில் முனைந்தது. அவனைச் சுற்றியுள்ள எல்லாம் அன்று மிக்க மாறுதலையடைந்துள்ளனபோல் அவனுக்குத்தென்பட்டன. ஆமாம், சந்தேகமேயில்லை! மாடி ஹால் காலையில் அவன் விட்டுச் சென்றதைப் போலவே இல்லை. பல புதிய மாறுதல்கள் அதில் காணப்பட்டன. தாறுமாறாக அன்று காலை மேஜை மீது அவன் குவித்துச் சென்றிருந்த புத்தகங்கள் அலமாரியில் ஒழுங்காக இருக்க வேண்டிய இடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பல நாட்களாகத் தூசி பட்டு அழுக்காகத் தென்பட்ட ஜன்னல் திரைகளுக்குப் பதில் புத்தம் புதுத் திரைகள் காணப்பட்டன. பளிச் சென்று எரிந்து கொண்டிருந்த விளக்கொளியில் அந்த ஹாலே மிகவும் அழகாகவும் பரிசுத்தமாகவும் மாறியிருப்பதைக் கவனித்தான். அந்த மாறுதல்கள் அவன் மனத்திலே கொஞ்சம் உற்சாகத்தை உண்டாக்கியது.

ஜில்லென்று ஜன்னல் வழியாக வீசிய மிகக் குளிர்ந்த காற்றைப் பொறுக்க முடியாது இடத்தை விட்டு எழுந்திருந்தான் அவன். "ஜன்னல் கதவைச் சாத்திவிடுகிறேன். ரொம்ப குளிர்ந்த காற்று வீசுகிறதே!" என்று அவன் நினைத்ததை அறிந்தவள் போல் கூறிக்கொண்டு நுழைந்த கீதா ஜன்னல் கதவைச் சாத்தினாள். ஆபீஸ் காகிதங்களைக் கவனிப்பவன் போல் நாகராஜன் தலையைக் குனிந்து கொண்டான். "ஊதல்காத்து வீசும் பொழுது மின்சார விசிறி என்னத்திற்கு? அதையும் நிறுத்தி விடட்டுமா?" என்று பேச்சைத் தொடர்ந்தாள், அவள்.

"உம்!" என்று முனகிய நாகராஜன் வேலையைக் கவனிப்பவன் போல் பாவனை செய்தான்.

கீதா அதைக் கண்டு மனம் சோரவில்லை. 'இன்றைக்கு மழை பெய்த வேகத்தைப் பார்த்தால், நிற்காது போல் தோன்றியது இல்லையா?'' என்று சம்பந்தமேயில்லாத ஒருசம்பாஷணையை ஆரம்பித்தாள்.

''ஆமாம்!'' என்று பதிலளித்த நாகராஜன் எழுந்திருந்து பீரோவைத் திறந்தான், அதற்குள் எதையோ தேடுகிறவன் போல் கதவின் பின்னால் முகத்தை மறைத்துக் கொண்டு நேரத்தைக் கடத்திக் கொண்டிருந்தான். கீதாவிற்கு மேலே என்ன பேசுகிறது என்று யோசனை தோன்றவில்லை. சிறிது நேரம் மௌனமாகவே நின்றான். பீரோவில் இருந்த ,காகிதக் கட்டொன்றை எடுத்து மேஜை மீது வைத்துக் கொண்ட அவன், மறுபடியும் தலையைக் குனிந்து கொண்டு அவைகளை உன்னிப்பாகக் கவனிப்பவன் போல் தென்பட்டான்.

''இன்று பொன்னியை அவள் வீட்டில் சந்தித்தேன். தன் வீட்டுக்கு வரும்படி என்னை அவள் நிர்ப்பந்தப்படுத்தினாள். கூடத்தில் மாட்டியிருந்த போட்டோவைக்கண்டு பிரமித்தே போய்விட்டேன். உங்கள் அண்ணாருக்கும் உங்களுக்கும் சாயலில் ஒற்றுமை அதிகம் என்பது இன்று தான் எனக்குத் தெரிந்தது'' என்று அவள் முடிக்கு முன், மின்சாரத்தினால் தாக்குண்டவன் போல் தலை நிமிர்ந்து பார்த்தான் நாகராஜன், ''என்ன சொன்னே?'' என்று கவலையுடன் கேட்டான் அவன் மனைவியிடம்.

கீதா தைரியமாகக் கணவன் அருகில் வந்து மேஜை மீது சாய்ந்தவாறு நின்று கொண்டாள். ''நான் கேட்பதற்கு முன்னாடியே பொன்னி தானாகவே எனக்கு எல்லாவற்றையும் சொல்லி விட்டாள். அவள் கதையைக் கேட்ட என் மனம் மிகவும் கஷ்டப்பட்டது பாவம்' அவளைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் வீணாக அவளிடம் விரோதம் பாராட்டினோமேயென்று பச்சாதாபப்பட்டேன். நாளைக்கு அவள் ஊருக்குப் போகிறாளாம். காலையில் இங்கே அவளை வரச்சொல்லியிருக்கிறேன். அந்தக் குழந்தையைப் பார்க்கும்பொழுது



என் மனம் மிகவும் வேதனைப்படுகிறது. பொன்னி மட்டும் உங்கள் அண்ணா சட்டப்படி மணந்த மனைவியாக இருந்தால்...?''என்று பெருமூச்சு விட்டாள் கீதா.

பதில் பேசாது அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த நாகராஜன் யோசனையுடன் கரங்களால் தனது நெற்றியைப் பிடித்துக் கொண்டு கண்களைமூடிக்கொண்டான்.

''இதனால் உங்கள் சகோதரனைப்பற்றி நான் கேவலமாக எண்ணுபவள் என்று நீங்கள் மனத்தை அலட்டிக் கொள்ள வேண்டாம். அவரது விருப்பு வெறுப்புகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு எனக்கு ஒருவித உரிமையும் கிடையாது. தமையனுக்குக் கொடுத்த வாக்கை காப்பாற்றுவதற்கோ, அல்லது தமையனின் வாழ்வின் களங்கம் மனைவிக்குத் தெரியக்கூடாது என்ற ஒரு கொள்கைக்காகவோ நீங்கள் பொன்னியைப்பற்றி விவரம் சொல்லாதிருந்தால்கூட தான் ஒன்று செய்திருக்கலாம் இத்தனை நல்ல குணம் படைத்த நம் கணவர் நமக்குத் துரோகம் பண்ணமாட்டார்'' என்று உங்களை ஒரேயடியாக நம்பியிருக்கலாம். அதைவிட்டு, சபல புத்தியினால் இல்லாததெல்லாம் எண்ணி வீணாக நமது ஆனந்த வாழ்க்கையை அறியாமையினால் பாழ்படுத்தினேன். என்னைப்போன்ற அசட்டுப் பெண் ஒருத்திகூட உலகத்தில் இருக்க மாட்டாள். இல்லையா?'' என்று மூச்சு விடாமல் பேசிய கீதா மெல்ல நகர்ந்து வந்து கணவன் உட்கார்ந்திருந்த சோபாவின் கைமீது உட்கார்ந்து கொண்டாள்.

நாகராஜன் பதிலே பேசாது சிலைபோல் உட்கார்ந்திருந்தான். மென்மையாக ஒய்யாரமாக அவன் தோள் மீது சாய்ந்து கொண்ட கீதா கலைந்து கிடந்த அவனது கிராப்புத் தலையை விரலால் கோதிச் சரிப்படுத்திக் கொண்டே பேசலுற்றாள்.

''பொன்னி உங்களைப் பற்றிக் கூறிய சில விவரங்களைக்கேட்ட பொழுது எனக்கு ஏற்பட்ட ஆனந்தத்தை விவரிக்கவே முடியாது. 'பொன்மேடு டிம்பர் வொர்க்'ஸே

நெருப்பில் தேசமடைந்து மண்ணாகிவிட்டாலும் எனக்கு அக்கறை இல்லை, இந்த பங்களா, இந்த சுகவாழ்க்கை எல்லாம் நாசமாகிவிட்டாலும் பரவாயில்லை. செல்வமெல்லாம் போய் ஒரு குடிசையில் வசிக்கும்படி நமக்குக் கஷ்டம் ஏற்பட்டாலும் நான் இனி கலங்கமாட்டேன். ஏன் தெரியுமா? பணம், பங்களா இந்தப்போலி சுகம் எல்லாவற்றிற்கும் மேலான விலை மதிப்பற்ற நற்குணவானான ஒரு கணவன் எனக்குக் கிடைத்திருக்கிறாரே! அது போதாதா?'' என்று உணர்ச்சியுடன் முடித்தாள் கீதா. அன்புப் பெருக்கில் பதிலே பேசமுடியாது திகைத்துப்போன நாகராஜன் கீதாவின் கரத்தை தன் கையில் எடுத்துக் கொண்டான்.

''ஆமாம்! எங்கே கையைக் காட்டுங்கள். நெருப்புப் புண் எப்படியிருக்கிறது பார்க்கலாம்'' என்று கீதா கேட்டாள். இடத்தை விட்டு எழுந்து சென்று பக்கத்து அறை அலமாரியினின்று மருந்து பாட்டிலை எடுத்து வந்தாள் பஞ்சினால் மருந்தை தொட்டுத் தன் கையினாலேயே அவைகளுக்கு மருந்தைப் போட்டாள்.

''இந்தப் புண் சின்னதாக இருந்தாலும் ஏன் சீக்கிரம் ஆறவில்லை தெரியுமா?'' என்று கேட்ட கீதா நாகராஜனை உல்லாசமாகப் பார்த்தாள்.

''உன் கையால் மருந்து போடாததினால்தான் என்று நான் சொல்லவேண்டுமாக்கும்! தற்பெருமைக்காரி நீ!'' என்று கொஞ்சலாக மொழிந்த நாகராஜன் அவளைப் பார்த்து வரிசைப்பற்கள் தெரிய சிரித்தான்.

பாகீரதியம்மாள் தூக்கத்தினின்று விழித்துக்கொண்டாள் இரவு அதிக நேரமாகிவிட்டதென்பதை உணர்ந்து அவள் ஜன்னல் வழியாகப் பார்த்தாள். மாடிமுன் ஹாலில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. தொலைவிலிருந்து வந்த பேச்சுக்குரல் அவள் காதுகளுக்குக் கேட்டதென்றாலும் ஒன்றும் சரியாகப் புரியவில்லை. ''இரவு இவ்வளவு நேரமாகியும் என்ன பேச்சு! இந்த கீதா அசட்டுப்பெண். அவனுடன் சண்டை போட்டு



கொண்டு இருக்கிறாளோ!'' என்ற கவலை பாகீரதியம்மாளைப் படுக்கையினின்று எழச்செய்தது. கணவன் மனைவி மனஸ்தாபமாக இருந்தால் முதலில் போய் அதை நிறுத்திவிட்டு மறுவேலை என்று எண்ணியவளாக எழுந்து ஹால் பக்கம் வந்தாள்.

இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு கலீர் என்று கீதாவின் சிரிப்பு பங்களா முழுவதும் ஒலித்தது. அதன் எதிரொலி போன்று தொடர்ந்தாற் போல நாகராஜனின் சிரிப்பு ஒலியும் பாகீரதியம்மாளின் காதுகளில் வந்து விழுந்தது. ஹாலுக்குள் செல்ல நினைத்த பாகீரதி வந்த சுவடு தெரியாது, தன் அறைப் பக்கம் மெல்லத் திரும்பிச் சென்றாள். அந்த விசித்திர தம்பதிகள் சௌஜன்யமாய் இருப்பதைத் தான் விகல்பமாக எடுத்துக் கொண்டதை நினைத்து அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

## 44

பாகீரதியம்மாள் அன்று இரவு தூங்குவதற்கு முன் ஒரு சங்கல்பம் செய்து கொண்டாள். தங்கள் குடும்பத்தைச் சூழ்ந்து நிற்கும் கஷ்டங்கள் விலகி வீட்டில் சந்தோஷம் நிலவ பால பழனியாண்டவன் அருள் புரிய வேண்டி, அத்தெய்வத்திற்குப் பால் அபிஷேகம் செய்து வைப்பது என்பதுதான் அந்த சங்கல்பம். அதை உடனேயே தாமதமின்றிச் செய்து முடித்து விடுவதென்று மனத்திலே தீர்மானித்துக் கொண்டிருந்தாள். ஆதலின் மறுநாள் காலை விடிந்ததும் விடியாததுமாகத் தன் விருப்பத்தைத் தம்பியிடம் சொல்லி அனுமதி பெற அவனைத் தேடிக் கொண்டு மாடிப்பக்கம் சென்றாள்.

அன்று காலை நாகராஜன் மிகவும் சந்தோஷமுள்ளவனாகக் காணப்பட்டான். சில நாட்களாக அவனது வதனத்தின் மீது குடி கொண்டிருந்த கவலைத் திரைகள் யாவும் திடீரென்று மறைந்து விட்டதனால், அவனது முகம் மிகவும் பிரகாசமாகக் காணப்பட்டது. பாகீரதியம்மாள் மாடி ஹாலுக்குள் நுழைந்த பொழுது நாகராஜன் சோபாவின் மீது சாய்ந்து கொண்டு அனு

காலை பத்திரிகையைக் கையில் பிரித்து வைத்துக் கொண்டிருந்தான். அது சமயம் அவன் பத்திரிகை படிக்கவில்லை. சற்று தூரத்தில் இருந்த பீரோவின் கதவைப் பிடித்துக் கொண்டு ஒய்யாரமாக நின்று கொண்டிருந்த மனைவியுடன் சுவாரசியமானதொரு சம்பாஷணையில் ஈடுபட்டிருக்கிறான் என்பதை லேசாகச் சிவந்திருந்த கீதாவின் முகம் கூறியது.

''ராஜா!'' என்று பாகீரதியம்மாள் அழைத்த வண்ணம் அங்கே வந்து நின்றாள். சகோதரியின் பரபரப்பைக் கவனித்த தம்பி. ''என்னக்கா! என்ன விஷயம்?'' என்று ஆவலுடன் வினவினான்.

''நீ இன்னிக்குச் சாயங்காலம் ஆபீஸிலிருந்து சீக்கிரமாக வந்துவிடு, ஏனென்றால் நானும் தங்கமும் புலிக்காடு கோவிலுக்குப் போய்விட்டு வரப்போகிறோம். வெகு நாளான வேண்டுதலை உடனே செய்து முடிக்கணும்னு தோணித்து அதனாலே...'' என்று இழுத்தாள்

''சரி, அக்கா! உன் இஷ்டப்படியே செய்யேன். எனக்கு ஒரு ஆக்ஷேபணையுமில்லை'' என்றான் தம்பி.

''நான் சொல்ல வந்த விஷயம் வேறே. நாங்க புலிக்காட்டிலிருந்து திரும்பி வரத்துக்குள்ளே இருட்டிவிடும், வண்டிக்காரனும் எங்களோடேயே வந்துடறதினாலே கீதா ஆத்தில் தனியாக இருக்கப் பயப்படுவா, அதனாலே சீக்கிரமா ஆபீஸிலிருந்து வந்துவிடு!'' என்று கூறிவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் கீழே இறங்கிச் சென்றுவிட்டாள்.

சகோதரி சென்றபின் நாகராஜன் மனைவியின் பக்கம் திரும்பி ''என்ன கீதா! நீ சொல்லு நான் ஆபீஸிற்குப் போகட்டுமா, வேண்டாமா? உனக்குத் துணை இருக்க அக்கா கட்டளையிட்டிருக்காளே!'' என்று கேலியாகக் கேட்டான்.

'அக்கா, பாவம்! நான் சின்னக்குழந்தை, பூச்சாண்டி பிடித்துக் கொண்டு விடுவான்னு பயப்படுகிறார். எனக்கு வீட்டில் தனியாயிருக்கப் பயமில்லை. தோட்டக்காரனை



வாசலில் வந்து உட்கார்ந்து கொள்ளச் சொன்னால் போதும். நீங்கள் உங்கள் வேலையைக் கவனியுங்கள், எனக்காக அவசரப்பட்டுக் கொண்டு ஓடி வரவேண்டாம். நான் ஒன்றும் அப்படித் தனியாக வீட்டில் இருக்கப் போவதில்லை. பொன்னி வருகிறதாகச் சொல்லியிருக்கிறாள். இன்று அவள் ஊருக்குப் போவதனால் கொஞ்ச நேரம் அவளிடம் பேசிக் கொண்டிருப்பேன் அதற்குள் பகலாகி விடும். பிறகு நீங்கள் சாப்பிட வருவீர்கள், அதற்குப்பின் நீங்கள் ஆபீஸிற்குப் போவீர்கள். எனக்கும் வேலைகள் கவனிக்க இருக்கும். நீங்கள் திரும்பி வருவதற்கும் அக்கா வருவதற்கும் சரியாக இருக்கும்'' என்று கூறி விட்டுச் சிரித்தாள்.

''இருந்தாலும், கீதா! நான் இன்று ஆபீஸிலிருந்து சீக்கிரமாகச் சாயங்காலம் வந்துவிட முயற்சிக்கிறேன். தனியாக இத்தனை பெரிய வீட்டிலிருக்கும் உனக்குக் கொஞ்சம் அச்சமாகத்தான் இருக்கும். தைரியசாலி போல எனக்காகப் பேசுகிறாய் நீ சுத்தப் பயந்தாங்கொள்ளி என்பது எனக்குத் தெரியாதா?'' என்று பரிகாசமாக மொழிந்த நாகராஜன் கீழே இறங்கிச் சென்றான் வாசல் ஹாலில் தனக்காகக் காத்து நின்ற தந்திச் சேவகனைக் கண்டு அவசரமாகக் கையெழுத்திட்டு அதை வாங்கிப் பிரித்தான். பின்னாலேயே அவனைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த கீதா கவலையுடன் அவன் முகத்தைப் பார்த்தான் ''தந்தி என்றதும் ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? உங்கண்ணாவுக்குப் பிள்ளை பிறந்திருக்கிறதாம். தாயும் குழந்தையும் சௌக்கியமென்று துரைசாமி தந்தியடித்திருக்கிறான்'' என்று கூறி புன்னகை செய்தான் நாகராஜன்.

கௌரிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கும் சந்தோஷ சமாசாரத்தை பாகீரதியிடம் கூறவேண்டுமென்ற ஆவலில் கீதா மிகவும் வேகமாகச் சமையற்கட்டை நோக்கி ஓடினாள்.

"அக்கா! அண்ணாவுக்குப் பிள்ளை பிறந்திருக்கிறது தந்தியடிச்சிருக்கிறார்" என்று சந்தோஷத்துடன் கூறிய தம்பியின் மனைவி பக்கம் திரும்பிய பாகீரதி, "சந்தோஷம் ஆனா ஸிமெண்ட் தரை வழுக்கும். நீ இப்படி ஓடி வரக் கூடாது கீழே விழுந்தாக்கத் தாங்குகிற உடம்பா!" என்று அன்புடன் கடிந்து கொண்டாள்.

அடுப்பிலே கை வேலையாக இருந்த தங்கம் வேலையை நிறுத்திவிட்டு ஆச்சர்யத்துடன் கீதாவின் பக்கம் திரும்பினாள். "அடடா! எனக்கு இந்த சமாசாரமே தெரியாதே! அப்படிச் சொல்லுங்க. ஏன் இந்தப் பொண்ணு இப்படி பலஹீனமாக தோன்றாள்னு நான் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன்" என தனது வியப்பைத் தெரிவித்துவிட்டு, கீதாவை உற்று நோக்கினாள். கீதா அங்கிருக்கப் பிடிக்காது மின்னலைப் போல் வெளியே சென்று மறைந்து விட்டாள்.

நாகராஜன் தொழிற்சாலைக்குப் புறப்பட்டுச் சென்றதும் பாகீரதியம்மாளும் தங்கத்துடன் புலிக்காட்டிற்கு வீட்டு வண்டியில் புறப்பட்டு விட்டாள். அந்தச் சமயம் சொல்லிக் கொள்வதற்கு வந்த பொன்னிடம் கீதா பொழுது போவது தெரியாமல் உச்சிப் பொழுது வரை சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தாள். பொன்னி விடைபெற்றுக் கொண்டு போகுமுன் அவளுடைய குழந்தைக்கென்று தான் இஷ்டப்பட்டு வாங்கிய ஒரு பட்டுத் துண்டை பரிசாகக் கொடுத்த கீதா பொன்னி பிறந்த வீடு பிடிக்காமல் திரும்பி எப்பொழுது வந்தாலும் அவளை சந்தோஷமாக வைத்துக் காப்பாற்றும் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொள்வதாக மிகவும் மனம் கசியும் வண்ணம் சொன்னாள் வீட்டிற்குப் போவதற்காக எழுந்த பொன்னி, அந்த பங்களா முழுவதையும் சஞ்சலம் ததும்பி நின்ற தனது கண்களால் ஒருமுறை பார்த்துவிட்டு, "எங்கள் ஜாதியில் ஒரு பழமொழி இருக்கிறது. அதாவது, எந்தப் பொருள் மீது ஆசைப்



பட்டாலும் எடுத்துக்கொள் ஆனால் அதுக்குத் தகுந்த விலையையும் கொடுத்துவிடு' என்பதுதான். வாழ்க்கையில் நான் ஆசைப்பட்டதை அடைந்தேன். ஆனால் அம்மா! அதுக்குத் தகுந்த கூலியையும் கொடுத்தேன். நானும் கொடுத்தேன், அவரும் கொடுத்தார். எங்க ஜாதி முன்னால் சதா தலைகுனிஞ்சு அவமானத்துடன் நிக்கணுங்கற தண்டனை எனக்கு கூலியாச்சு. சின்னஞ்சிறு வயசிலே தன் உசிரைப் பலி கொடுத்துக் கொண்டார் அவர்!" என்று பெருமூச்செறிந்த வண்ணம் கூறினாள்.

பொன்னி சென்று வெகுநேரம் வரை அந்த வார்த்தைகள் மட்டும் கீதாவின் காதுகளிலே ஒலித்துக்கொண்டேயிருந்தன. வாழ்க்கையில் வேண்டியதை எடுத்துக்கொள். ஆனால் அதற்கு விலை கொடுத்து விடு!" என்ன பயங்கரமான உண்மை என்று உள்ளம் நடுங்கினாள் கீதா.

பகல் பொழுது தொழிற்சாலைக்கு நாகராஜன் திரும்பச் செல்லும் போது சாயங்காலம் இருட்டுவதற்கு முன் ஆபீஸிலிருந்து தான் திரும்பி வந்து விடுவதாக நாகராஜன் கூறிச் சென்றிருந்தான். ஆகையினால் அவன் வருவதற்கு முன் வேலைகளை முடித்து விட்டு விச்ராந்தியாக இருக்க வேண்டும் என்பது அவள் எண்ணம்.

பின்கட்டுக் கதவுகளை எல்லாம் சாத்திப் பூட்டி மாடியறைக்குச் சென்ற கீதா நிதானமாக அன்று தன்னை அலங்கரித்துக் கொண்டாள். மரகதப் பச்சைப் புடவைக்கும் கறுப்புப் பட்டு ரவிக்கைக்கும் ஏற்றதாக இருக்க எண்ணிப் பல நாட்களாகக் கவனிக்காதிருந்த வைர மாலையைப் பீரோவினின்று எடுத்துக் கழுத்தில் பூட்டிக் கொண்டாள். மாடிக் கதவுகளையும் பூட்டிவிட்டு முன் ஹாலுக்கு வந்தவள் அங்கே தோட்டக்காரன் தயாராகக் கொண்டு வந்து வைத்திருந்த தோட்டத்து மல்லிகைப் பூச்சரத்தை ஆசையுடன் எடுத்துத்தலையில் சூடிக்கொண்டாள். கணவனது வருகையை எதிர்பார்த்துக் கொண்டு அங்கிருந்த சோபாவில் கொஞ்ச நாழிகை உட்கார்ந்திருந்த கீதாவிற்கு இருப்புக் கொள்ளவில்லை. சீக்கிரமாக

வருவதாகச் சொன்ன கணவன் திரும்பி வரவில்லையே என்ற யோசனையில் ஹாலின் விளக்கை ஏற்றிவிட்டு வாசல் பக்கம் வந்து சிறிதுநேரம் அவனை எதிர்பார்த்துக் கொண்டு நின்றாள்.

வெளி முழுவதும் நன்றாக இருட்டிவிட்டதை உணர்ந்த கீதாவிற்கு திடீரென்று ஒருவித அச்சம் ஏற்பட்டது. தோட்டக்காரனைக்கூட வீட்டுச்சாமான்கள் வாங்கிவர சாயங்காலமே கடைக்கு அனுப்பி விட்டாள். பங்களா முழுவதும் நிலவிய நிசப்தம் அவள் மனத்தை என்னவோ செய்தது. வாயிலில் அதிக நேரம் இருட்டைப் பார்த்துக் கொண்டு நிற்க பயந்த கீதா ஹாலுக்குள் நுழைந்து கதவை மூடிக்கொண்டு உட்கார்ந்தாள் தன்னந் தனியாக இருக்கும் அந்தச்சமயம் அவளுக்கு நிமிஷம் யுகமாகப் போவது போல் தோன்றியது.

படபடவென்று வாசற் கதவு இடிபடும் ஓசைக்கேட்டதும் சோபாவினின்று துள்ளி எழுந்தாள். ''ஆமாம். சீக்கிரம் வருகிற ஆசாமியைப் பாரு!'' என்று கொஞ்சலாக கோபித்துக் கொண்டவள் கதவை ஆவலுடன் நாகராஜனுக்காகத் திறந்தாள்.

கீதாவின் வாய் பயத்தினால் காய்ந்து போய்விட்டது திறந்த கதவு மூலம் உள்ளே நுழைந்த சிவராமன் அவள் எதிரே வந்து நின்றான்.

## 45

சிவராமனின் எதிர்பாராத வரவு கீதாவை மிகவும் திகைப்படையச் செய்து விட்டதனால் சில நிமிஷங்கள் அவள் பேசும் சக்தியை இழந்தவளாக ஸ்தம்பித்துப்போய் நின்றாள்.

''நீ எதிர்பாராத சமயம் நான் இங்கு வந்தது உனக்கு மிகவும் கலவரத்தைக் கொடுக்கின்றது அல்லவா?'' என்று கேட்டுவிட்டுச் சிவராமன் சிரித்தான்.

குரூரம் ததும்பி நின்ற அவனது முகத்தை நன்கு உற்று நோக்கக்கூட கீதாவிற்கு அச்சமாக இருந்தது.



யாரும் துணை இன்றித் தனியே வீட்டில் இருக்கையில் அகால வேளையில் அங்கு அவன் வந்ததின் நோக்கம் யாதாக இருக்கலாம் என்று அவளது குழப்பத்தில் சிந்திக்கவே முடியவில்லை. சிவராமனுக்குப் பின்னால் திறந்த கதவு வழியே வாயில் தோட்டத்தைக் கலவரத் துடன் அவளது கண்கள் பார்த்துக் கொண்டிருந்தன. இந்தச் சமயம் நாகராஜன் வந்து விட்டால்! அந்தக் காட்சியை நினைத்துக் கலங்கிய கீதா தனது தைரிய மெல்லாவற்றையும் ஒருங்கே வரவழைத்துக் கொண்டு சிவராமனைக் கோபம் கக்கும் கண்களால் உற்றுப் பார்த்தாள். ''உங்களிடம் பேசிக் கொண்டிருக்க எனக்குப் பொழுதில்லை. போகலாம் வெளியே!'' என்றாள் கடுமையாக!

''அப்படிச் சொல்லிவிட்டால் முடிந்து விடுமா கீதா?'' என வஞ்சகமாகச் சிரித்தான் சிவராமன் அது சமயம் அவனைத் தாறுமாறாகக் கோபித்துக் கொண்டு அவனது விரோத மனப்பான்மையைத் தூண்டிவிட்டால் தனக்குத் தான் அபாயம் என நொடிப் பொழுதில் ஊகித்து முடிவுக்கு வந்த கீதா, ''நீங்கள் அகால வேளையில் இங்கே வந்து வீண் தொந்தரவு கொடுப்பதின் முக்கிய நோக்கம் என்னவோ!'' என நிதானமாகக் கேட்டான்.

''முக்கிய நோக்கத்தைத்தான் நேற்றே உன்னிடம் கூறிவிட்டேனே அதைத் திரும்பவும் ஒருமுறை எடுத்துச் சொல்ல வேண்டுமா?'' என்று கேட்டான் பதிலுக்கு.

நினைத்தாலும் தேகத்தை அவமானத்தினால் கூசச் செய்த முதல் நாள் சம்பாஷணை அவள் கவனத்திற்கு வந்தது. பயத்தினால் அவள் நெஞ்சு படபடவென்று துடித்தது. ''உங்களுக்கு ஒரு சகோதரி இருக்கிறாளே! அவளிடம் ஒரு புருஷன் சென்று உங்களைப் போல கன்னாபின்னா வெனப் பேசினால் உங்கள்மனது எப்படிக் கஷ்டப்படும்? அதை நினைத்துப் பாருங்கள் தயவு செய்து வீணாக விவாதம் செய்யாது இவ்விடத்தை விட்டுப் போங்கள்'' என்று கேட்டாள் தாழ்ந்த குரலில் கெஞ்சாத குறையாக அந்த நய வஞ்சகனிடம் பேசும்படி

ஒரு சந்தர்ப்பம் நேர இடங் கொடுத்த தனது முட்டாள் தனத்தைக் குறித்து சீதாவுக்குக் கோபமும் அழுகையும் சேர்ந்து நெஞ்சைப் பிடித்துக் கொண்டது.

''என் சகோதரியும் என்னைப் போல் அந்த மனிதன் மனதில் ஆசைக்கனலைத் தூண்டி விட்டிருந்தாளானால் அவன் சொல்லும் மொழிகளைக் கேட்டுக் கொள்ளத் தான் வேண்டும்'' என்று கூறி சிவராமன் அவளை ஆத்திரத்துடன் பார்த்தான்.

''உங்களுக்குப் புத்தி பேதலித்துப் போய்விட்டது. இல்லாவிட்டால், அழையாத வீட்டில் நுழைந்து உளறிக் கொண்டு நிற்கமாட்டீர்கள். 'போங்கள்' என்று ஒரு தடவை சொன்னால் வெளியே போய்விட வேண்டும் என்ற மரியாதை கூட மனத்திலே அற்றுப் போய்விட்டதா, என்ன? வாயை மூடிக்கொண்டு வெளியே நடவுங்கள் சீக்கிரம்!'' என்று தைரியமாகக் கோபத்துடன் இரைந்தாள்.

''இரைந்து கத்தினால் பயந்து விடுகிறவன் சிவராமன் இல்லை. என் ஆசைக்குத் தூபம் போட்டு விட்டுச் சரியாக பதில் சொல்லாமல் நேற்று ஓடிவந்து விட்டால் அத்துடன் விஷயம் முடிந்து விட்டதா? சமூகத்திற்கும் பிறருக்கும் பயப்படுகிறவள் ஏன் என் மனத்திலே காதலைக் கிளறி விட்டாய்?'' என்று கோபத்துடன் கேட்டான் அவன்.

''என்ன பொய்!'' என்று பல்லைக் கடித்தாள் சீதா.

''பொய்! நீ சொல்வதா, நான் சொல்வதா! அன்றொரு நாள் எங்களுடன் நிலா சவாரிக்கு வந்த பொழுது அடிக்கொரு தடவை என்னை நீ அன்பு ததும்பும் கண்களால் பார்த்தது பொய்யா? 'பிக்னிக்'கின் பொழுது சுனை அருகில் நின்று கொண்டு நான் பறித்துக் கொடுத்த தாமரை மலரை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டு கருணையுடன் என்னைத் திரும்பிப் பார்த்தாயே, அந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம்?



ஒவ்வொரு வார்த்தையிலும் அன்பைத் தூவி என் மனத்திலே அடங்கிக் கிடந்த பலதான் ஆசையைத் தூண்டி விட்டு இல்லையென்று சாதித்தால் யார் நம்புவார்கள்?'' என்று பொங்கி எழுந்த சினத்தில் படபடப்பாகப் பேசினான் சிவராமன்.

''இதென்ன விபரீதம்! இல்லாததையெல்லாம் கதை கட்டிக்கொண்டு வீணாக எனக்குத் தொந்தரவு கொடுக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு வந்திருக்கிறாய் என்று சொல்லு! இப்படிப்பட்ட கயவன் நீ என்று தெரிந்திருந்தால்...'' என கோபத்தில் தடுமாறிய சீதா முடிப்பதற்குள் இடைமறித்த சிவராமன், ''என்னுடன் பழகியே இருக்க மாட்டாய் அல்லவா? கெட்டிக்காரிதான்! உன் கவலைகளுக்குச் செவி சாய்க்கவும், உன்னுடன் அனுதாபப்படவும் ஓர் ஆத்மா வேண்டியிருந்தால், அதற்காக ஆசைகாட்டும் வகையில் பேசினால் அப்படியே ஏமாந்து போகிறவன் நான் இல்லை நீ உன் கணவன்மீது அன்பும் பக்தியும் கொண்டவளானால் எந்தத் துணிச்சலில் பிற புருஷனிடம் வந்து உதவி கேட்டாய்? அதன் தண்டனையை அனுபவித்துத்தான் ஆகவேண்டும். நெருப்புடன் விளையாடினால் சுடத்தான் செய்யும்! பயந்தால் முடியுமா!'' என்று வெறுப்புடன் வார்த்தை அம்புகளை வாரி வீசினான்.

''என் வீட்டிற்குள்ளே நுழைந்து கொண்டு என்னை மிரட்டினால் பயந்து விடுவேன் என்று நினைக்கிறாயா? வெளியே போகிறாயா இல்லையா!'' என்று உரக்கக் கத்திய சீதா விழிகள் தெறித்து விடும்படி கோபக்கனல் கக்கும் கண்களால் அவனை வெறித்துப் பார்த்தாள்.

''என் மனத்தை அனாவசியமாகப் புண்படுத்திய உன்னை தண்டிக்கப்போகிறேன், சமூகம், தாய், தெய்வம் இதையெல்லாம் பற்றி போதிக்கிறவன் நான் அல்ல— என் ஆசை, என் முயற்சி இதுதான் எனக்கு முக்கியம் உனக்கு இஷ்டம் இருக்கிறதோ இல்லையோ. அக்கறை இல்லை. இத்தனை பெரிய செல்வத்தை விட்டு வர உனக்கு மனம் இல்லாவிட்டாலும் நான் உன்னை விடப் போவதில்லை உன்னை என்னுடன் அழைத்துக்கொண்டு

கண்காணாத தேசத்திற்குச் செல்லவே வந்திருக்கிறேன், உனக்காக நான் எத்தனை தியாகம் செய்திருக்கிறேன் தெரியுமா? 'தென்னிந்தியா தொழிற்சாலை'யிலிருந்து இருபதினாயிரம் ரூபாயைக் கைச் செலவிற்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன். வீணாக ஏன் நேரத்தைப் போக்கு கிறாய்? புறப்படு! என் கார் பங்களாவுக்கு எதிரே மறைவான இடத்தில் தயாராக நின்றுகொண்டிருக்கிறது'' என்று சீறினான் சிவராமன்.

''கேடு காலம் சமீபித்து விட்டதனால்தான் நீ இப்படி உளறுகிறாய் மரியாதையாய்ப் போகிறாயா இல்லையா பாவி!'' என்று ஆத்திரம் அவமானம் என்ற உணர்ச்சிகள் தாங்க முடியாது குமுறினாள் கீதா.

''உனக்கு உதவிக்குத் தற்சமயம் யாரும் அருகில் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டுதான் வந்திருக் கிறேன். கடைக்குப் போயிருக்கும் உன் வேலைக்காரன் சீக்கிரம் திரும்பாதிருக்க வழி பண்ணியிருக்கிறேன். நீ கத்திக் கூச்சலிட்டாலும் உபயோகம் இல்லை'' என்று உறுமிய சிவராமன் அவள் அருகில் நெருங்கினான்.

''ஐயோ!'' என்று கிரீச்சிட்ட கீதா ஒரு அடி பின் தள்ளி மேஜை ஒன்றின் பின்னால் போய் நின்று கொண் டாள். தனக்கு என்ன நேரப்போகிறதோ என்று அறியா மல் அவள் உடல் பதறியது. கால்கள் நடுங்கின கண்களில் நீர் கசிந்தது. உள்ளே தப்பி ஓடிவிடலாம் என்று திரும்பிப் பார்த்தாள். மேஜைக்குப் பின்னால் சுவர், இடது புறம் ஜன்னல், வலது பக்கத்தில் இரண்டு கெஜ தூரத்தில் சிவராமன் நின்று கொண்டிருந்தான். எக்கச்சக்கமான தனது நிலையை நினைத்துக் கலவரமடைந்து அவள் திகிலுடன் திரும்பினாள்.

''ஏன இந்த ஜாலமெல்லாம்? உம்!'' என்று அகங்காரத் துடன் கேட்ட சிவராமன் கீதாவின் வெகு அருகில் நெருங்கிக் கையை நீட்டினான் ''அம்மா!'' என்று பங்களா முழுவதும் பரிதாபமாக எதிரொலி செய்யும் வண்ணம் அலறிக்கொண்டு கீதா பின்னால் இன்னும்



சிறிது நகர்ந்து சென்றாள். தன் அருகில் நெருங்கி வந்து கொண்டிருந்த சிவராமன் திடீரென்று எதிர் பக்கத்து சுவரின் மீது போய் மோதிக் கொண்டு விழுந்ததைக் கண்டு திகைப்புடன் திரும்பிய அவளது நெஞ்சு பயத்தி னால் உலர்ந்து போயிற்று.

''அயோக்கிய நாயே!'' என்று கர்ஜித்த நாகராஜ னின் சிவந்த முகத்தைக் கண்ட கீதாவின் சப்த நாடியும் ஒடுங்கிப் போயிற்று. கால்கள் தடுமாறின. உயிர் உடலினின்று போய் விட்டதைப் போன்று தள்ளாடி தான் கீழே விழுந்துவிடா வண்ணம் சுவரை ஆதாரமாகப் பிடித்துக் கொண்டு நின்றாள் கீதா.

நாகராஜன் மறுமுறை ஆத்திரத்துடன் தன்னை அணுகு முன் வேகமாக விழுந்த இடத்தினின்று எழுந்து நின்ற சிவராமன் கீதாவின் பக்கம் ஆக்ரோஷத்துடன் நோக்கி, ''உன் கணவன் வந்துவிட்டான் என்று பயப் படாதே! சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறுவதை விட, அவனிடம் சொல்லிக் கொண்டே நாம் போகலாம்'' என்று ஏளனமாகக் கூறினான்.

''ஐயோ! என்ன பொய்!'' என்று அரற்றிய கீதாவின் கண்களில் கண்ணீர் பொல பொலவென உதிர்ந்தது.

''அயோக்கியப் பதரே! என்ன சொன்னாய்?'' என்று ஆத்திரத்துடன் தன்னை நோக்கிப் பாய்ந்த நாகராஜன் மீது பக்கத்து மேஜைமேல் இருந்த பூந்தொட்டியைத் தூக்கி வீசிய சிவராமன், ''தைரியமிருந்தால் அவன் ஒப்புக் கொள்ளட்டும், இந்தக் கடிதத்தை எழுதி என்னை வரவழைக்கவில்லையென்று!'' எனத் தயாராகக் கையில் கசக்கி வைத்திருந்த முதல் நாள் கீதா எழுதிக் கேட்டி ருந்த கடிதத்தையும் அதே சமயம் கீழே எறிந்தான்.

நாகராஜனின் தலைக்கு மேல் பறந்த அந்தப் பீங்கான் தொட்டி ஜன்னல் கதவுமீது பட்டு படால் என உடைந்து நாலாபக்கமும் சிதறியது.

"என் வீட்டிலே புகுந்துகொண்டு என்னை எதிர்க்கிறாயா, பேஷ்! பேஷ்!" எனக் கர்ஜித்த நாகராஜன், ஒரே எட்டில் சிவராமன் மீது பாய்ந்து விட்டான். மறு நிமிஷம் அங்கிருந்த மேஜை நாற்காலிகள் யாவும் இடம் விட்டுப் பெயர்ந்தன. சிவராமனின் கழுத்தைத் தனது கரங்களால் நெருக்கிய நாகராஜன் முகம் பயங்கரமாக மாறியிருந்ததைக் கவனித்த கீதாவிற்கு கிரீச்சென வாய் விட்டு கத்த வேண்டும் போலிருந்தது ஆனால், பயத்தில் நாக்கு புரளக்கூட மறுத்துவிட்டது. சிவராமனும் தனது முழு பலத்துடன் எதிரியைத் தாக்கிக் கொண்டிருந்தான். இரண்டு வேட்டை மிருகங்கள் ஒன்றையொன்று எதிர்த்துப் போரிடுகையில் அவைகளுக்கு ஏற்படும் ஒரு கொலை வெறி இரண்டு பெயர்களுடைய முகத்திலும் குடி கொண்டிருப்பதைக் கண்டான் கீதா. அவனுடைய அசட்டு நடத்தையின் விளைவு ஒரு கொலையா! இடத்தை விட்டு இம்மிகூட அசையக் சக்தியின்றி கிலி பிடித்தவளாக அசந்து போய் நின்று விட்டாள்.

நாகராஜனின் இரும்புப் பிடியினின்று தன்னை விடுவித்துக் கொள்ள முயற்சித்த சிவராமன் கையை ஓங்கி எதிரியின் முகத்தில் குத்தப் போனான். ஆனால், அடுத்த கணம் தூக்கி எறியப்பட்ட மூட்டையைப் போன்று சுருண்டு பின்னோக்கி வாயிலில் போய் விழுந்தான். தடுமாறிக் கொண்டு எழுந்து நின்ற அவன் ஆத்திரத்தில் துச்சமாக கீதாவைப்பற்றி இன்னும் ஏதோ பேச வாயை திறந்தான்.

"ஏன் நின்று கொண்டிருக்கிறாய்? மீதி உதைகளைப் போலீஸ் கொடுக்க காத்துக் கொண்டிருக்கிறார்கள். அயோக்கியப் பதரே! 'பொன்மேடு டிம்பர் வொர்க்'ஸில் நெருப்பு வைத்துச் சூழ்ச்சி செய்ததின் பேரில் உன்னைக் கைது செய்ய வாரண்ட் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது உனக்குத் தெரியுமா?' என்று சினத்துடன் சீறிக்கொண்டு வெளியே வந்தான் நாகராஜன்.



"போலீஸ்" என்ற வார்த்தை சிவராமனின் உடலை ஒரு குலுக்குக் குலுக்கியது அவ்வளவுதான்! சிறிதுமுன் குடிகொண்டிருந்த தைரியம் எல்லாம் பஞ்சாகப் பறந்து விடவே மின்னலைப்போல் அங்கிருந்து இருட்டில் ஓடி மறைந்தான். வெளியே மறைவில் நின்று கொண்டிருந்த காரில் ஏறி உட்கார்ந்த அவனது கோழை உள்ளம் பதைத்தது. 'பொன்மேடு டிம்பர் வொர்க்'ஸில் தீ வைக்கத் தூண்டிய குற்றம் 'தென் இந்திய டிம்பர் வொர்க்ஸி'லிருந்து பணம் கையாடிய குற்றம் ஆகஇரண்டு பெருங்குற்றங்களுக்காகப் போலீஸ்காரர்கள் தன் பின்னால் துரத்திக் கொண்டு ஓடிவருவதைப் போன்ற பிரமை அடைந்த அவன் சென்னையை நோக்கி வண்டியை வாயு வேகத்தில் செலுத்தினான். அவனது கரங்கள் பயத்தில் நடுங்கின. விடியற்காலை சென்னை; இரவு, பம்பாய்; அதற்கு அடுத்த நாள்? சுதந்திர இந்தியாவின் எல்லையை விட்டு வெளியேறிவிடுவதைத் தவிர வேறு வழி? மனத்திலே ஓங்கி'நின்ற முரட்டுத் தைரியம் மறைந்து கோழைத் தனம் குடியேறியதும் சிவராமனின் உள்ளம் தான் செய்த பிசகிற்காக ஒருகணம் வருந்தத்தான் செய்தது

## 46

ஹாலுக்குள் நாகராஜன் திரும்ப நுழையும் காலடிச் சத்தம் கேட்டதும் அவனது முகத்தை ஏறெடுத்துப் பார்க்கத் தைரியமின்றிகீதா தலையைக் குனிந்துகொண்டு நின்றாள். "கணவன் என்ன கேட்கப் போகிறானோ? என்ன பதில் சொல்வது" என்ற அச்சத்தில் கலங்கிய கீதாவின் நெஞ்சம் இன்னும் சில நிமிஷங்களில் இரண்டாக வெடித்து விடும்போல் வேகமாக அடித்துக் கொண்டது. மரண தண்டனையை எதிர்பார்த்துக் கூண்டின் மீது நிற்கும் கைதியைப்போல் கணவன் கேட்கப் போகும் அந்தக் கேள்வியினின்று தப்ப வழி தெரியாது மௌனமாக நின்றாள் அவள்.

மரணத்தின் பயங்கரத்தை நிகர்த்த ஒரு நிசப்தம் ஹாலுக்குள் நிலவியது ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம் என்று சில நிமிஷங்கள் சென்றன. கீதாவினால் அந்த பயங்கர நிசப்தத்தைத் தாள முடியவில்லை. மெல்லத் தலையை நிமிர்த்திக் கணவன் இருந்த பக்கம் பார்த்தாள். எதிர்ப்புறத்து ஜன்னல் அருகே நின்று கொண்டிருந்த நாகராஜன் தன் கைகளின் மீது வழிந்தோடிய இரத்தக் கறையைக் கைக்குட்டையால் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டு நின்று கொண்டிருந்தான் முதல் நாள் இரவு கீதாவின் மலர்க்கரங்களால் மருந்து போடப்பட்ட நெருப்புக் காயத்திலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

சிவராமனுடன் செய்த யுத்தத்தின் பயனாக மறுபடியும் பச்சை ரணமாக மாறிய நெருப்புக் காயத்தை சுத்தமாகத் துடைத்துக் கொண்ட நாகராஜன் மனைவியின் பக்கம் திரும்பினான். அன்பும் ஆதரவும் கருணையும் சாந்தமும் பொங்கி நிற்கும் அவனது முகம் சலனமற்று கற்சிலையைப் போன்றிருந்ததை அவள் கவனித்தாள். அவன்பால் தனது இதயமும் கல்லினும் கடினமாகி விட்டது என்பதை உணர்த்துவது போலிருந்தது அவனது முகபாவம். இந்தப் பிசகைக் கணவன் மன்னிக்க மாட்டான் என்று உணர்ந்த கீதாவின் மனத்திலே அதுவரை ஊசலாடிக் கொண்டிருந்த ஒரு கடைசி நம்பிக்கையும் பொடியாகிச் சிதறி ஓடிவிட்டது. கணவன் தன்னைச் சந்தேகிக்கிறான் என்ற எண்ணம் தாங்கொணாத துயரத்தில் அவளை ஆழ்த்திவிடவே வழக்கமாக சிறிது துன்பத்தைக்கூட தாளாது பொங்கி எழும் அவளது கண்ணீர் திடீரென்று வரட்சியடைந்துவிட்டது.

மனைவியின் முகத்தை மறு தடவை, பார்க்க விரும்பாதவன்போல் தென்பட்ட நாகராஜன் தாறுமாறாகக் கிடந்த மேஜை நாற்காலிகளை இழுத்து அந்தந்த இடத்தில் போட்டு விட்டு மாடிப்பக்கம் சென்றான். மாசுபடிந்த தனது ஆடையைக் களைந்து வேறு உடுத்திக்கொண்டு அவன் கீழே இறங்கி வந்த



பொழுது கீதா அங்கே நின்று கொண்டிருக்க இஷ்டப்படாதவள் போல் பூட்டியிருந்த பின்கட்டுக் கதவுகள் யாவையும் திறந்துவிட்டு சமையலறையின் முன்பக்கத்தில் கிடந்த பெஞ்சியின் மீது சோர்ந்து போய் செய்வது ஒன்றும் அறியாது உட்கார்ந்து கொண்டாள்.

''என்னம்மா கீதா! இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறாயே! ரொம்ப நாழியாயிடுத்து அபிஷேகம் முடிய'' என்று உற்சாகத்துடன் கூறிக் கொண்டு வந்த பாகீரதியின் குரல் கீதாவின் உணர்வைத் தட்டி எழுப்பியது.

''வந்து விட்டேளா? நாழியாச்சே, காணோமென்று கவலைப் பட்டேன்!'' என்று கடமைக்காக பதிலளித்த கீதா நாத்தனார் கொண்டு வந்த தட்டுகளை வாங்கிக் கொண்டு சமையலறைக்குள் சென்றாள். அவளுக்கிருந்த மனநிலையில் யாரையும் பார்க்கவும் பேசவும் அவளுக்குப் பிடிக்கவேயில்லை.

குன்றிற்குச் சென்று வந்த களைப்புத் தாங்காது பெஞ்சியின் மீது சிரமபரிகாரம் செய்து கொள்ள உட்கார்ந்திருந்த பாகீரதி ''கீதா!'' எனக் கூப்பிட்டாள்.

''ஏன் அக்கா!'' என்று ஹீனமான குரலில் கேட்டுக் கொண்டு பின்னால் வந்து நின்ற தம்பி மனைவியின் முகத்தைப் பாராது, ''ஆமாம்! புத்தம் புது பீங்கான் தொட்டி அது எப்படி உடைஞ்சதோ தெரியலை.பீங்கான் தூளை வாரிக் கொண்டிருந்தான் தோட்டக்காரன். கேட்டேன் எப்படி உடைஞ்சதுன்னு. தான்தள்ளி உடைச்சுட்டதாக ராஜா சொன்னான், அது போனதுமே ஹாலுக்கே பாதி லக்ஷணம் போய் விட்டாப் போல் இருக்கு. எனக்கென்னவோ அதை ராஜா உடைச்சிருக்க மாட்டான். வேணுமென்னுதான் சொல்கிறானென்று தோணித்து, நிஜத்தைச் சொல்லு, கீதா நீதானே உடைச்சே? பெண்டாட்டியை விட்டுக் கொடுக்கக் கூடாதுன்னு ராஜா பொய்கூட சொல்ல ஆரம்பிச்சுட்டான்!'' என்று பரிகாசமாகக் கேட்ட பாகீரதி மெல்ல சிரித்துக் கொண்டு கீதாவைப் பார்த்தாள்.

அவளது ஹாஸ்யத்தை ரஸிக்க முடியாவிட்டாலும் கீதா மிகவும் சிரமப்பட்டு முகத்திலே பதிலுக்கு ஒரு புன்னகையை வரவழைத்துக் கொண்டாள்.

''சரி போகட்டும்! பிரசாதத்தை நீ கொஞ்சம் எடுத்துக் கொண்டு அவனுக்கும் துளி கொண்டு கொடு. எனக்கு ரொம்ப சிரமமா இருக்கிறதாலே நான் மாடிக்குப் போகிறேன். நீ சீக்கிரம் காரியத்தையெல்லாம் முடிச்சுண்டு வா'' எனக் கூறிய பாகீரதி மாடிக்கு எழுந்து சென்றாள்.

இரவு வெகுநேரம் ஆகியும் நாகராஜன் சாப்பிடக் கீழே வராது போகவே வேறு வழியின்றி கீதாவும் பட்டினியுடன் சமையலறைக்கதவைச் சாத்திக்கொண்டு மாடிக்குச் சென்றாள். படுக்கையறையின் பக்கமாகக் கூட செல்ல மனம் கூசிய அவள் அதன் பக்கத்திலிருந்த அறைக்குள் நுழைந்து மனத்திலே ஏற்பட்டிருந்த சோர்வு தேகத்தையும் தாக்கவே தாளாது ஜில்லென்று இருந்த சிமெண்ட் தரை மீது களைப்புடன் படுத்துக் கொண்டாள்.

எத்தனையோ மனஸ்தாபம், கண்ணீர், கடுமொழிகள் இவைகளுக்குப் பின் உண்மையை அறிந்து பச்சாதாபமடைந்த கீதா முதல் நாள் இரவு கணவனுடன் சமாதானம் செய்து கொண்ட பொழுது துன்பமும் இருக்கப் போவதில்லை, கணவன் மனைவி இவர்களிருவரின் அன்பின் நடுவில் எத்தகைய சஞ்சலமும் தலை காட்டப் போவதில்லை. ஆனந்தமாக வாழ வேண்டும் என எண்ணினாள்—ஒரே நாளில் அவளது ஆனந்த வாழ்க்கை அஸ்தமித்துப் போய் விடும் என்று அவள் கனவில்கூட நினைக்கவில்லை!

நாகராஜனும் இன்னும் தூங்கவில்லை என அறிவிப்பது போல அடுத்த அறையில் அவன் இருமும் சத்தம் கேட்டது. முதல் நாள் இரவு அவன் கூறிய இன்ப



மொழிகள் ஒவ்வொன்றும் அவளது காதுகளில் மறுபடியும் ஒலித்தது இனி இந்த ஜன்மத்தில் கீதா அத்தகைய அன்பு மொழிகளைக் கணவனிடமிருந்து கேட்கவும் போகிறாளா! இல்லை மனைவிமேல் ஏற்பட்ட சந்தேகத்தில் வேதனை தாங்காது தூக்கமின்றித் தத்தளிக்கும் நாகராஜன் கீதாவை இனி விஷம் என வெறுப்பான் என்பதில் சந்தேகமென்ன? அதுவரை வற்றிப் போயிருந்த கண்ணீர், மடை திறந்தாற்போல் கீதாவின் கண்களிலிருந்து பெருகி ஓட ஆரம்பித்தது பாவி! சிவராமன்! அவன் செய்த தீமைகளுக்காகக் கடவுள் தண்டிக்காமலா இருப்பார்!

சிவராமனைச் சொல்லிக் குற்றமென்ன? கேட்பவர்கள் நகைப்பார்கள். படித்துப் பட்டம் பெற்ற ஒரு பெண் பச்சைக் குழந்தையல்லவே என்பார்கள். கலாசாலை மாடிப்படிகள் ஏறி பட்டம் வாங்கி விட்டால் போதுமா? உலக ஞானமும் பொது அறிவும் ஒருவருக்குத் தானாக ஏற்பட வேண்டுமே அல்லாமல் கலாசாலைப் படிப்பினா சொல்லிக் கொடுக்கிறார்கள்?

வாழ்க்கையில் கீதாவுக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் எவ்வளவு? அழகு படிப்பு அந்தஸ்து, செல்வம், அன்பு மிக்க கணவன் இத்தனையும் ஒருங்கே அடைந்தும் வாழ்க்கையைச் சரியாக வாழத் தெரியாதிருந்தால் அந்தப் பெண் உயிருடன் வாழவே தகுதியற்றவள் என்பதில் ஆட்சேபணை உண்டா? ஓடமுடியாத நொண்டிப்பந்தயக் குதிரையைச் சுட்டு விடுவதுபோல் வகையாக வாழத் தெரியாத மனிதர்களைச் சுட்டுக் கொன்று விட வேண்டும் வாழ்க்கையைச் சரியாக வாழத் தெரியாதவர்கள் பூமிக்கு பாரம், பிறருக்குத் தொல்லை. சமூகத்திற்குச் சுமை—இப்படிப் பலவாறு சிந்தித்த கீதாவிற்கு தனது முட்டாள்தனத்திற்காகத் தன்மீது துவேஷம் எழுந்தது.

ஏதோ ஒரு தீர்மானத்திற்கு வந்தவள் போல அறையை விட்டு மெல்ல வெளியே வந்தாள். சந்தடியின்றி கோடியிலிருந்த தனது அறைக்குள் சென்று ஓசை செய்

யாது விளக்கை ஏற்றினாள். உடுத்தியிருந்த விலையுயர்ந்த புடவைக்கு பதில சாதாரணப் பழைய புடவை ஒன்றை அவசரமாக உடுத்திக் கொண்டாள். நாகராஜனின் கண்களுக்குத் தென்பட்ட அந்த வைர மாலையை வெறுப்புடன் கழட்டி பீரோவிற்குள் வைத்துப் பூட்டினாள். மேஜையருகில் உட்கார்ந்து கொண்டு விறுவிறுவென ஒரு கடிதம் எழுதினாள்.

எத்தனையோ எழுத வேண்டும் என்று மனம் குமுறுகின்றது. ஆனால் வார்த்தைகள் வர மறுக்கின்றன இந்தக் கடிதத்தைத் தாங்கள் படிக்கும்முன் இன்ப நினைவுகள் நிறைந்த பொன்னேரியில் எனது சடலம் மிதந்து கொண்டிருக்கும் களங்கமற்ற என்மீது தங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டபின் நான் எப்படி ஜீவித்திருக்க முடியும்?

தற்கொலை செய்து கொள்கிறவர் கோழைகள் என்று தானே எல்லோரும் சொல்வார்கள். இல்லை! எனது உயிரை ஏரிக்கு பலிகொடுத்துக் கொள்ள எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது. வாழ்க்கை என்னும் இன்ப மொழிகளைத் துறந்து செல்ல மனம் வரவில்லை. சாவதற்கு எனக்குத் துளிகூட ஆசை இல்லை. இருந்தும் தங்கள் முகத்தில் நாளைக் காலை எப்படி விழிக்கிறது என்ற அவமானத்தினால் ஏரியை நாடுகிறேன் நான்.

தங்களுக்கு மனத்தாலும் நான் ஒருவித துரோகமும் செய்யவில்லை. இதுபற்றித் தாங்கள் என்னைப் பூரணமாக நம்பி மன்னிக்கக் கோருகிறேன். இல்லாவிடில் என் ஆத்மா சாந்தியடையாது.

தங்கள் அன்புள்ள,
கீதா''

விடியற்காலை மணி நான்கடித்ததைக் கேட்ட கீதா பரபரப்புடன் எழுந்திருந்தாள். இனியும் தாமதித்தால் காரியம் வீணாகி விடும் என்று எண்ணிய அவள்



மிகவும் மெல்ல நடந்து அறைக்கு முன் வந்தாள். சத்தம் செய்யாது கதவைத் திறந்து, எழுதிய கடிதத்தை படுக்கைக்கு அருகிலிருந்த மேஜை மீது நன்றாகத் தெரியும்படி வைத்து விட்டுத் திரும்பிப் பார்த்தாள், மெல்ல சுவாசம் விட்டுக் கொண்டு நாகராஜன் தூங்கிக் கொண்டிருந்தான் ஆனால் கீதாவின் மனத்திலே நிம்மதி உண்டாகப் பொன்னேரியல்லவா ஏற்றுக் கொண்டிருக்கிறது!

அறையின் கதவு முன்னால் மனமின்றி சிறிது நேரம் நின்றாள், விடியற்காலமானதினால் எங்கும் அமைதி நிலவியிருந்தது. குப்பென்று ஊதக்காற்று ஜன்னல் வழியாக கீதாவின் முகத்தில் வீசியது. உடலைச் சிலிர்க்க வைக்கும் குளிர் வெளியில் நீலச் சிறு அலைகளுடன் கொந்தளிக்கும் பொன்னேரியின் சில்லென்ற தண்ணீர் உடலில் பட்டு விட்டதைப் போன்ற கீதா பயத்தில் உடலைக் குலுக்கினாள். செல்வம், சுகம், அன்பான கணவன் இத்தனையும் விட்டு அவளுக்குப் போக மனமில்லாது தயங்கியவாறு தன்னைச் சுற்றிலும் பார்த்துக் கொண்டாள். ஆனால், வேறு வழியென்ன? நாகராஜனின் பரந்த உள்ளத்தில் அவள் மீது சந்தேகம் ஏற்பட்ட பின்பு கீதா எதற்காக வாழவேண்டும்!

பூனையைப் போன்று கீதா பின் பக்கத்து மாடிப் படியை நோக்கி நடந்தாள், இஷ்டமில்லாதிருக்கையில் வலியத் தன்னைச் சாவு இழுக்கின்ற வேகத்தில் துக்கமடைந்த அவள் கண்களில் நீர் தாரை தாரையாக வழிந்தது.

''வாழ்க்கையில் வேண்டியதை எடுத்துக் கொள். ஆனால் அதற்கு விலையும் கொடுத்து விடு'' என்று பொன்னி கூறிய அந்தப் பழமொழி அவள் கவனத்திற்கு வந்தது எத்தனை கசப்பான உண்மை! மாடிப்படியில் கால் வைத்த கீதா வேகமாகக் கீழே இறங்கினாள். முதல் படி இரண்டாவது படி என அவள் கால்கள் கணக்கிட்டது. இதென்ன இது! மூன்றாவதுப் படியைக்

காணோம்! தூக்கம், பசியினால் வந்த சோர்வு, பல ஹீனம் எல்லாம் சேர்ந்து கொள்ளவே கீதா ஆகாயத்தில் பறப்பதைப் போல் உணர்ந்தாள்.

"தடால்" என்ற சத்தம் கேட்டு ஏககாலத்தில் பாகீரதியும் நாகராஜனும் விழித்துக் கொண்டார்கள். அறையை விட்டு வேகமாக ஓடிவந்த பாகீரதி மாடிப் படியின் விளக்கை ஏற்றிப்பார்த்தாள். படியின் கீழே தரை மீது சுருண்டு கிடந்த கீதாவைக் கண்ட பாகீரதி "ராஜா! வாயேன் இங்கே" என அலறினாள் தமக்கையின் கூக்குரலைக் கேட்டு ஓடிவந்த நாகராஜனும் அந்தக் காட்சியைக் கண்டான், கீழே உணர்வற்ற பதுமையாகக் கிடந்த கீதாவின் தலையிலிருந்து இரத்தம் குபுகுபுவென்று பாய்ந்து தரை மீது பரவி ஓடிக் கொண்டிருந்தது.

சொன்னால் கேட்டால் தானே! இந்தப் பெண்ணை யார் சீக்கிரம் எழுந்து, காரியம் செய்யச் சொன்னது! மாடியிலிருந்து விழுந்து விட்டாளே! ஐயோ, ராஜா ரத்தத்தைப் பாரேன் பச்சை உடம்புக்கு இது தாங்குமா! இவளுக்குத் தான் உடம்பு சரியில்லை. சீக்கிரம் பிறந்தகத்துக்கு அனுப்பணும்னு நினைச்சிண்டு இருந்தேன் அதுக்குள்ளே இந்தப் பெண்..." என்று திணறிய பாகீரதி முடிப்பதற்குள் குழந்தையை வாரித் தூக்குவது போல் உணர்வற்றுக் கிடந்த கீதாவைத் தன் கரங்களால் வாரி எடுத்த நாகராஜன அவளை அப்படியே மாடியறைக்கு எடுத்துச் சென்றான்.

சுரீர் என்று தாக்கும் உணர்ச்சி, தண்ணீர் மூக்கில் புகுந்து கொண்டு மூளைவரை எட்டி விடுவதனால்தான். கீதா மூச்சுவிட முடியாது தவித்தாள். பொன்னேரியின் குளிர் அவளுக்குத் தாங்க முடியவில்லை. ஏன் இன்னும் உயிர் போக மாட்டேன் என்கிறது? இதென்ன பேச்சுக் குரல்? மிக்க குழப்பத்துடன் கண்களை விழித்துப் பார்த்த கீதா தான் இறந்து விடவில்லை. உயிருடன் வீட்டில் கட்டிலில் மீது படுத்திருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டாள்.



"என்னம்மா கீதா! இதோ பாரேன்!" என்று நாக ராஜன், பாகீரதி, இருவரும் தன் முகத்தை ஆவலுடன் பார்ப்பதை உணர்ந்த கீதா மறுபடியும் கண்களைத் திறந்தாள்.

"எங்கள் வயிற்றில் பாலை வார்த்தாயே, கீதா! எட்டு நாளும் எட்டு யுகமாக இருந்தது. தலையில் நல்ல அடி! ஸ்மரணை வரச் சில நாள் ஆகும்னார் டாக்டர். புண்ணியவான் அவர்தான் உன்னைக் காப்பாற்றினார். என்னம்மா உடம்பைப் பண்ணுகிறது?" என்று அன்புடன் வினவிய பாகீரதி கண்களில் பொங்கிய நீரைத் துடைத்துக் கொண்டு கீதாவின் கலைந்த கூந்தலைச் சரிப்படுத்தினாள். தற்கொலை செய்து கொள்ளு முன்னேதான் தலையில் பட்ட காயத்தினால் ஸ்மரணை தப்பி சில நாட்களாக உணர்வற்றுக் கிடந்தாள் என்ற விவரம் புரிந்துகொண்ட கீதா சிறிது தூரத்தில் தன் முகத்தையே பார்த்துக் கொண்டு கவலை பிடிந்தவனாக நின்ற நாகராஜனைப் பார்க்கவும் வெட்கித் தன் கண்களை மூடிக்கொண்டாள்.

கொஞ்ச நேரம் சென்றது. கட்டிலின் தன் அருகாமையில் வந்து உட்கார்ந்து கொண்டது நாகராஜன்தான் என்பதைப் பார்க்காமலே உணர்ந்து கொண்டாள் கீதா. அவளது மெல்லிய கரங்களை அன்புடன் பற்றியது அவனது கரங்கள். "கீதா!" என்று தன்னை மிக்க குழைவுடன் அழைக்கும் அந்த அன்புக்குரல் அவளைக் கண் திறந்து பார்க்கச் செய்தது.

"உடம்பு என்னம்மா செய்கிறது?" என்று கேட்டான் அவன் கனிவுடன்.

"ஒன்றுமில்லை" என்று தலையசைத்த கீதா அவனைப் பார்க்கக் கூசியவள் போல் கண்களை மூடிக் கொண்டாள்.

"இப்படி நீ செய்யலாமா கீதா! எந்தத் துணிச்சலில் நீ தற்கொலை செய்து கொள்ள எண்ணினாய், அசடே" என்று கேட்ட நாகராஜன் அன்புடன் அவளது நெற்றியை வருடினான்.

கண்களைத் திறந்து ஆச்சர்யத்துடன் பார்த்த கீதா "அப்படியானால் உங்களுக்கு என் மீது கோபம் ஒன்றும் இல்லையா? பூரணமாக என்னை மன்னித்து விட்டீர்களா?" எனத் தடுமாற்றத்துடன் கேட்டாள்

"மன்னிப்பா! நீயல்லவா என்னை மன்னிக்க வேண்டும்? வாழ்க்கையின் இன்ப துன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் மனைவிக்குத் தெரியக்கூடாது என்று ஒரு ரகஸியத்தை மறைத்து வைத்த என்னைவிட முட்டாள் ஒருவன் இருக்கிறானா? அக்காவே சொல்லட்டும் என்று நான் சும்மா இருந்தேன். நான் சொல்லியிருப்பேன் என்று அவள் அந்தப் பேச்சை எடுக்காதிருந்தாள்; எங்களுடைய முட்டாள் தனத்தின் விளைவால் கிடைத்தற்கரிய பொக்கிஷம் போன்ற உன்னையே இழந்துவிட இருந்தேன். மனைவி புருஷன் என்ற இருவரும் வெளிப்பார்வைக்கு வேறுபட்டவர்கள். ஆனால் மனம் ஒன்றுபட்டவர்கள் இல்லையா? அவர்கள் நடுவில் எப்படி ஒரு ரகஸியம்இருக்க முடியும்! வாழ்க்கையின் உண்மை லட்சியத்தை இப்பொழுதுதான் உணர்ந்தேன். அப்பப்பா! இந்த எட்டு நாளும் நான் பட்ட மனவேதனை! உனக்கு ஏதாவது தீங்கு நேர்ந்திருந்தால் என் மனசாக்ஷியை ஒருநாளும் மன்னிக்கவே முடியாது' என்று மனவெழுச்சியுடன் கூறிய அந்த லக்ஷியவாதி, மனைவியின் முகத்தை மிகவும் இரக்கமாக நோக்கினான்.

பதில் பேசாது மௌனமாக கீதா அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஆமாம், கீதா! உனக்கு இப்படியா புத்தி போயிற்று? அன்று இருந்த மனநிலையில் எந்த புருஷனுக்குத்தான் உடனே பேச வரும்? கோப வெறியில் ஏதாவது சொல்லி உன் மனத்தைப் புண்படுத்தி விடுவேனோ என்று பயந்து தானே அந்த மௌனத்தை மேற்கொண்டேன்? உனது தூய அன்பை எனக்கு எடுத்துச்சொல்ல வேண்டுமா? உன் மேல் போய் சந்தேகப்படும் அவ்வளவு மடையனா நான்? நீசுத்த



அசடு! ஆமாம். என்ன தைரியம் உனக்கு! என் பிள்ளையை உன்னுடன் கொன்றுவிடத் துணிந்தாயே?" என படபடப்பாக பேசிவிட்டு நாகராஜன் புன்னகை செய்தான்.

சந்தோஷம் மிகுந்த கீதா சக்தியற்று அவனது கரங்களை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். "கீதா!" என்று அன்புடன் கூப்பிட்டான் நாகராஜன். "உனக்குப் பிறக்கப் போகும் குழந்தைக்கும் இனி ஒரு வித ஆபத்துமில்லை என்று டாக்டர் சொல்லி விட்டார். உன்னை இந்தச் சமயம் கவலைகள் நிறைந்த இந்த சூழ்நிலையில் வைத்திருக்க எனக்கு இஷ்டமில்லை உடம்பு கொஞ்சம் தேவலையானதும் நாம் இருவரும் கொஞ்சநாள் எங்கேயாவது வெளியூருக்குச் சென்று வருவோம். உனக்கு மட்டும் உடல் நிலை இப்படி இல்லாதிருந்தால் இத்தனை நாழி நாமிருவரும் அமெரிக்காவுக்கு ஆகாயக் கப்பலில் பறந்து கொண்டிருப்போம். திரும்பும் வழியில் நீ கேட்டுக் கொண்டபடி உன்னை ஹானலூலுவிற்கு அழைத்துச் சென்றிருப்பேன் ஆனால், நமது அமெரிக்கப் பிரயாணம் இந்த வருஷம் ஒரு சிறு போக்கிரிப் பையனால் நின்று விட்டது" எனப் பரிகாசமாக பேசிய நாகராஜன் அவளது கன்னத்தைச் செல்லமாகத் தட்டினான்.

"என்ன பேச்சு இது நடக்காததை யெல்லாம் சொல்லிக் கொண்டு! இன்னும் எத்தனையோ மாதங்கள் இருக்கும் போதே! 'பிறக்கப் போகிறது பிள்ளை' என்று யார் குருட்டு ஜோஸியம் சொன்னார்கள் உங்களுக்கு?" என்று சிரித்த கீதா வெட்கத்துடன் கண்களை மூடிக் கொண்டாள். வாழ்க்கையின் இன்பம் மீண்டும் அவனது நரம்புகளில் பாய்ந்து ஓட ஆரம்பித்ததும் அவனுக்கு உலகமே இன்ப மயமானதாகத் தென்பட்டது. அவனது மனக்கண் முன் சுருண்ட கூந்தல் கண்களை மறைக்கக் கன்னங்குழிய பொக்கை வாயைத் திறந்து சிரித்துக் கொண்டிருந்த ஒரு சிறு குழந்தையின் சுந்தர வதனம் வந்து நின்றது.

(முற்றும்)